# தென்னகப் பண்பு

PUBLIC LIBR
3 JUL 1981

க. த. திருநாவுக்கரசு
M. A. (தமிழ்) M. A. (வரலாறு)
M. LITT. DIP. IN LINGS

ஆசிரியர் :

பன்மொழிப் புலவர்,

கா. அப்பாத்துரை, எம்.ஏ. (தமிழ்), எம்.ஏ.. (ஆங்கிலம்)
விசாரத் (இந்தி).

மலர் நிலையம்
133. பிராட்வே...சென்னை-1

முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1961
உரிமை ஆசிரியருக்கே.

விலை: ரூ. 8-00
நூலகப் பதிப்பு: ரூ10-00

மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ், சென்னை-2

CONNEMARA PUBLIC LIBRARY
3 JUL 1991
MADRAS

# முகப்புரை

தென்னாடு, தென்மொழி, தென்னகப் பண்பு என்ற மும்மைத் தொகுதி நூல்களில் மூன்றாவதாக வருவது தென்னகப் பண்பு என்ற இவ்வேடு. நாட்டு வரலாறு, மொழி வரலாறு ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று பின்னணி வண்ணங்கள். இரண்டுக்கும் பின்னணி வண்ணங்களாய், இரண்டையும் பின்னணி வண்ணங் களாகக் கொண்டது பண்பு.

இவ்வேடு பண்பாடும் சோலை, பண்பின்பீடு, மொழி வாழ்வு, இலக்கிய மரபு, வள்ளுவர் பண்பு என்ற பெரும் பிரிவுகளின்கீழ் ஐந்து மாலைகளாகவும்; மாலை ஒவ்வொன்றிலும் மலர்கள் போன்ற பல சிறு பிரிவுகளாகவும் ஆற்றொழுக்காக அமைக்கப்பட்டுளது. தமிழ், தமிழினங்களின் தேசீய, தேசீயங் கடந்த சிறப்புக்களை முதல் மாலையும்; தென்னகப்பண்பு உலகளாவப் பரவியுள்ள வகையை இரண்டாம் மாலை யும்; உலக மொழிகளுடன் தமிழுக்குள்ள மனித இனத் தொடர்பை மூன்றும் மாலையும்; உலக இலக்கியங் களில் தமிழிலக்கியத்தின் தூண்டுதலாற்றலை நான்காம் மாலையும்; இவை யனைத்தையும் 'ஓருலக வண்ணக மாக' இழைத்த தென்னகப் பண்பின் சிகரமான வள்ளுவப் பண்பை இறுதி மாலையும் பல பகுதிகளாகக் கட்டுரைக்கின்றன.

மையத்திலிருந்து விரிந்து விரிந்து செல்லும் ஒளிதிகழ்த் தாமரை யிதழ்களையும், அதிலிருந்து அலை யலையாகப் பரவிச்செல்லும் மணத்தையும் பயனையும் போல, தென்னக மொழி இலக்கிய மரபுகளும் பண்பு களும் உலகளாவிப் பரவும் வகைகளையும்; அதே சமயம் மையம் தாமரைத் தண்டுபோல என்றும் புதிதாகப் பழமை மரபில் நின்று நிலவிக் குறையா நிறைவளம் பொங்கும் தன்மையையும் இவ்வேடு புதிய தமிழகத் துக்கும் உலகுக்கும் உயிர்ச் சித்திரங்களாகத் தீட்டிக் காட்டுகிறது.

ஏட்டின் அருமைக்கேற்ற உருவந்தந்து பல தடங் கல்களுக்கிடையில் சலியா உழைப்பு மேற்கொண்டு அச்சியற்றி வெளியிட்டுள்ள மலர்நிலையத்தாருக்கு என் நன்றி உரியது.

மொழியன்னையின் திருவடிக்குச் சூட்டப்பட்ட இச்சிறு மலர்ப்பணியைத் தென்னகம் நன்காதரித்து என்னை ஊக்கவேண்டுமென்று வேண்டுகிறேன்.

கா. அப்பாத்துரை

# மாலை 1

## பண்பாடும் சோலை

CONNEMARA PUBLIC LIBRARY
31 JUL 1991


| | | |
|---|---|---|
| 1. | காப்பு வளம் | 9 |
| 2. | உலக நாகரிகத் தொட்டில் | 11 |
| 3. | கன்னி மாநிலம்-ஐந்தமிழகம் | 13 |
| 4. | மலைவளம், ஆற்றுவளம் | 15 |
| 5. | நாட்டுவளம் | 18 |
| 6. | கடல் வாழ்வின் மரபு | 20 |
| 7. | கடல் கடந்த மரபு | 23 |
| 8. | தமிழர் பொன்னூர்ந்த புகழ்க்கொடி | 27 |
| 9. | கடலாட்சி, பேரரசாட்சி | 29 |
| 10. | வீழ்வான் வண்ணம் | 32 |
| 11. | வாடையும் கோடையும் | 35 |
| 12. | மாண்ட செல்வங்கள் | 37 |
| 13. | மண்ணில் கிடக்கும் மாணிக்கங்கள் | 41 |
| 14. | தமிழ் இலக்கியவரலாறு: திராவிடப் பேரூழி இலக்கியம் | 42 |
| 15. | பக்தி ஊழி, வீரகாவிய ஊழி இலக்கியம் | 47 |
| 16. | செயற்கைக் காப்பிய ஊழி | 49 |
| 17. | புராண ஊழி | 50 |
| 18. | தமிழகத் தற்கால ஊழி | 51 |
| 19. | தமிழ் சூழ் தென்மொழி வாழ்வு | 53 |
| 20. | கன்னட இலக்கியம் | 55 |
| 21. | தெலுங்கிலக்கியம் | 57 |
| 22. | தமிழும் மலையாளமும் | 58 |
| 23. | மலையாள இலக்கியம்: இருபெருங் கவிஞர்கள் | 60 |
| 24. | மலையாள இராமாயணத்தின் மாண்பு | 62 |
| 25. | தற்கால மலையாள இலக்கியம் | 63 |
| 26. | தென்னக மொழிகளின் தனிப்பண்பு | 65 |
| 27. | தென்னகச் சமய, இயல், கலை வாழ்வுகள் | 67 |
| 28. | தென்னகத் தெய்விகப் பண்பு | 72 |
| 29. | தெய்விகப் பண்பின் மறைதிறவு | 77 |
| 30. | தமிழர் பழமையின் பீடு | 79 |
| 31. | தமிழ் பிறந்த மாமலை | 81 |
| 32. | வெப்பிற் பிறந்த வெண்ணிலவு | 83 |
| 33. | தண்டமிழ்ப்பாலை | 83 |
| 34. | தமிழர் நற்பண்பும் அற்பண்பும் | 85 |
| 35. | மனித உலகின் உயிர்ப்பண்பு | 89 |
| 36. | தென்றலின் பாங்கு, தெம்பாங்கு | 90 |
| 37. | மறுமலர்ச்சிப் பண் | 93 |

# மாலை II

## பண்பின் பீடு

| | | |
|---|---|---|
| 1. | முச்சொல் மரபு | 94 |
| 2. | முக்காலக் கூறு | 96 |
| 3. | உடல், உடை, உயிர் | 98 |
| 4. | இனமும் குடும்பமும் | 101 |
| 5. | உயிர்ப் பண்பு | 106 |
| 6. | இன ஒட்டின் படிப்பினை | 110 |
| 7. | பொங்குமாவளம் | 113 |
| 8. | இனமாளிகை | 117 |
| 9. | இனம் ஓர் உயிராறு | 120 |
| 10. | பேரினம் என்னும் ஏரிப்பரப்பு | 122 |
| 11. | பண்ணை, கொடி வாழ்வு உருவகம் | 126 |
| 12. | கண்ணொளிச் சித்தர் வாதம் | 130 |
| 13. | ஐந்து நிறங்கள் | 132 |
| 14. | வரலாற்றின் இரு கண்கள் | 136 |
| 15. | பேரினத்தின் உயிர் மண்டலம் | 138 |
| 16. | ஆரியர் தோற்ற வளர்ச்சி வரலாறு | 139 |
| 17. | உயிர்ப் பண்பின் மையம் | 141 |
| 18. | நாகரிகமும் வரலாறும் | 142 |
| 19. | மறுமலர்ச்சி மீட்ட உயிர் மரபுகள் | 144 |
| 20. | நாகரிகம்: சொல்விளக்கம் | 148 |
| 21. | நாகரிகம் வளர்த்த நகரம் எது? | 151 |
| 22. | நகரும் நகுதலும் | 152 |
| 23. | உலகளாவிய உயிர்ச் சொற்படிவங்கள் | 155 |
| 24. | மேலையுலக நாகரிக நகர்வாழ்வு | 159 |
| 25. | தமிழர், தமிழினம்-சொற்றொடர்களின் மாறுபட்ட பழமரபு | 162 |
| 26. | நாகர் வாழ்வும் தமிழர் வாழ்வும் | 164 |
| 27. | பண்பாடு: சொல்விளக்கம் | 167 |
| 28. | பண்பாடு: கருத்து வளர்ச்சி | 169 |
| 29. | வேறு எம்மொழியும் காணப்பொன் மொழியின் சொல்: பண்பு | 173 |
| 30. | பண்பு: வளமார்ந்த இன உயிர்ச்சொல் | 177 |
| 31. | வள்ளுவர் பண்பு | 180 |
| 32. | இனமலர்ச்சி | 183 |
| 33. | இயற்கையை வெல்லும் முயற்சிகள் | 184 |
| 34. | முப்பழ மரபு | 187 |
| 35. | வடதிசை பேணும் தென்றல் மரபின் தடம் | 192 |
| 36. | பண்பார்ந்த பைம்பொழில் வண்ணம் | 195 |

## மாலை III

LIBRARY 3 JUL 1991

## மொழி வாழ்வு


1. முக்கோண அச்சு 198
2. இருமுக ஆற்றல் 200
3. தமிழர் இன ஒப்புரவுப் பண்பு 203
4. உலகில் பலமொழிகள் ஏன்? 206
5. ஓருலகப் பண்பு 209
6. ஓருலகப் பண்பின் சீரழிவு 214
7. பேரின அடிப்படை மொழியின் கூறுகள் 218
8. பேரின மொழிவாழ்வில் ஆரிய இனத் தலையீடு 221
9. ஒன்று பல ஆகும், பல ஒன்றுதல் அரிது 225
10. சொற்கலப்பு: ஆதிக்கவாதம் 230
11. மேலைமொழிகளும் கலப்பு வாதமும் 233
12. சொல்லின் இனவளம் 237
13. இரு நிகழ்ச்சிகள் 240
14. தனித்தமிழ் அடிப்படைமொழி இயக்கம் 243
15. உலகின் மும்மண்டலங்கள் 245
16. தமிழின் பன்முக, பன்மடிச் சிறப்பு 252
17. உயிர்ப்பண்பார்ந்த உயர்தனிச் சொல் மொழி 253
18. கன்னித் தாய்மை 256
19. உயர் தேசீய மொழி 259
20. உலகளாவிய மரபு 262
21. மனிதப் பேரின உலக முதன்மொழி 264
22. இன முதன்மொழி திராவிடமா, தமிழா? 267
23. மூலதிராவிடம் தமிழே 271
24. இனப்பண்பு நிறைவே திராவிடம்! 275
25. உலகளாவிய தமிழ்ப் பண்பு 278
26. முப்பால் முழக்கம் 285


## மாலை IV

## இலக்கிய மரபு


1. இலக்கியத்தின் இலக்கு 290
2. முத்தமிழ் மரபு 291
3. முத்தமிழ் மரபின் அருஞ்சிறப்பு 294
4. முச்சங்க வாழ்வு 297
5. முச்சங்க வாழ்வுக்குரிய வரலாற்று விளக்க ஒளி 300
6. திட்ட வாழ்க்கை மரபு 305
7. நான்காவது சங்கந்தரும் படிப்பினை 310

8. சங்க அமைப்பு 313
9. நம்கால மரபும் சங்கவாழ்வும் 317
10. சங்கம் ஒரு தேசீயத் திட்டம் 321
11. இலக்கியம், இலக்கணம்: சொல்மரபு 326
12. புலனெறி வழக்கமரபு 333
13. தொல்காப்பிய மொழி நூல் மரபு 336
14. யாப்பணிநூல்: சமஸ்கிருதமளாவிய வளர்ச்சி 338
15. சமஸ்கிருத வளர்ச்சியின் மூலமரபு: தொல்காப்பியம் 340
16. தமிழ், தமிழின மொழிகளின் மாறுத்தன்மை 345
17. செந்தமிழ் நிலம்! தொல்காப்பிய, சங்க காலங்கள் 348
18. செந்தமிழின் கால இட வேறுபாடுகள் 351
19. முத்திற இலக்கியப் பின்னணி 358
20. ஐந்திணை மாடம் 363
21. அகத்துறைப் பண்பு 365
22. காதல் உணர்வின் பீடு 369
23. பொருளதிகார வளர்ச்சி 373
24. சங்ககால, பிற்காலக் கலைப்பண்பு 378
25. தமிழ் இலக்கியச் சிறப்பு 380

## மாலை V

## வள்ளுவர் பண்பு

1. இருபுகழ் மரபுகள் 385
2. தமிழகப் புகழ் மரபு 387
3. உலகப் புகழ் மரபு 391
4. இயற்கைப் பண்பு வேறுபாடு 394
5. சேற்றில் எழுந்த செந்தாமரை 399
6. முப்பால் வகுப்பும் தமிழகமும் 404
7. முப்பால் வகுப்பும் வள்ளுவரும் 407
8. முப்பால் ஏட்டின் முறைவைப்பு அழகு 411
9. துறவற இயல் 418
10. அறிவுலக அரசியல் வளம் 428
11. வள்ளுவர் வகுத்த அரசியல் 434
12. ஊழும் பண்பும் 445
13. ஊழும் உலக சமயங்களும் 450
14. ஆதி பகவன் யார்? 458
15. வள்ளுவர் கண்ட பெண்மை 466
16. வள்ளுவர் கண்ட உலகம் 475
17. புத்தருவி 480

PUBLIC LIB
3 JUL 1991

# தென்னகப் பண்பு

## மாலை—I

## பண்பாடும் சோலை

### 1. காப்புவளம்

பண் பாடு !
தென்னு தெனுவெனப் பண்பாடு! (பண்)

தமிழ்ப்பண் பாடெனும் சோலையிலே
தென்னகப் பண்பில் குளித்தாடு !
தீந்தமிழ் இசையுடன் பண்பாடு ! (பண்)

வீங்கிய வேனில்
விரிதமிழ்ச் சாயல்
தாங்கிய மயிலெனப்
பண் பாடு ! (பண்)

தேங்கமழ் சாரல்
பாங்கர்வெண் ணிலவில்
தூங்குதேன் இழிந்தெனப்
பண்பாடு ! (பண்)

மாந்தளிர் பெய்து
மாலுற ஏங்கும்
பூங்குயிலாமெனப்
பண் பாடு ! (பண்)

*தென்னகத்தின் பண்பாடு ஒரு சோலை. அதில் தமிழ் மலையாகிய பொதிகையிலிருந்து தமிழ்ப் பண்பாகிய தென்றல் வீசுகிறது. கரும்பு வில்லேந்திக் கன்னித் தமிழ் மீதே மலர்க்கணை எய்தவாறு மதவேள் அங்கே உலவு கிருன்.*

வேய் குழலாக, மென்மலர்த் தும்பிகளின் வரிசை யாழாக, மலையருவி முழவாகக் கொண்டு இயற்கை அங்கே தென்னகத்தின் பாங்காகிய தெம்பாங்கு இசைக்கிறாள். தேமாங் குயில் அதனோடிழைய இனிய தென் தமிழ்ப்பண் பாடுகிறது.

தமிழ்ச் சாயல் தழுவிய தோகை மாமயில் அப்பண்ணின் பண்பில் குழைந்து ஒயிலாக ஒய்யார நடமிடுகிறது. அப்பண்பில் இழைந்து நடை பயில்கின்றது.

பண்பாடு என்னும் சோலையிலே **பண்பாட, பண்பு ஆடுகின்றது.**

புலவர், கலைஞர், கவிஞர் தரும் காட்சி இது!

முற்றிலும் கற்பனை சார்ந்த காட்சியல்ல, கற்பனை தோய்ந்த மெய்க்காட்சியே இது. அதே சமயம் இதனை முழுவதும் இயற்கைக் காட்சி என்றும் கூறிவிட முடியாது. இயற்கையும் காலமும் இரண்டின் கன்னிச் செல்வமான இனமும், இன வாழ்வின் எண்ணற்ற தலை முறைகளும் சேர்ந்து உருவாக்கிய, உருவாக்கிவரும், உருவாக்க இருக்கிற காட்சிதான் இது!

இயற்கையில் சோலைகள் மட்டுமல்ல, பாலைகளும் உண்டு. அவற்றில் சூறைக் காற்றுச் சுழன்றாடும். முள்ளடர்ந்த காடுகள் உண்டு. அவற்றில் கரு நாகங்கள் தவழ்ந்து நெளிந்து படமெடுத்துச் சீறும். ஆழ்கடல் உண்டு—அதில் சுறாமீன்கள், திமிங்கிலங்கள் திரியும். சதுப்புநிலப் பரப்புக்கள் உண்டு—அவற்றில் முதலைகள் நடமாடும். கொடும்பாறைகள் உண்டு—அவற்றின்மீது கழுகுகள், வல்லூறுகள் வட்டமிட்டுத் தாவும்.

இவை அருகில் நாடவிடாத சேம அரண் வாய்ந்த கோட்டம் செந்தமிழ்ப் பண் பாடும் இப் பூந்தோட்டம்!

வட திசையில் வாடை உண்டு, பனி உண்டு. குட திசையில் கோடை உண்டு, இடி உண்டு. இவற்றுக்கு முற்றிலும் ஒதுங்கிய வாய்ப்பகம் எம் தென்னகக் காப்பகம்! அதே சமயம் குண திசையில் எழு ஞாயிற்றின் செவ்விளங் கதிரொளி பரவ, கொண்டல்கள் அவ்வொளி பட்டுப் பல்வண்ணங்களில் குலவும். அவை குன்று முட்டிக் குமுறிக் கருமுகில்களாகத் திரண்டெழுந்தபோதும், மழை நீரமுதமாகவே பொழிந்து வாழ்வில் பொங்கல் வளங் கொழிக்கும். தென்றிசையிலோ தென்றல் மெல்லிசை பயின்று மன்றல் மணம் பரப்பி மகிழ்வூட்டும். இவற்றுக்கு முற்றிலும் வாயில் திறந்து வைத்து எழிலார்ந்த இன்ப வாழ்வுக்கு வழி வகுக்கும் வான்கலை வீடு எம் தென்னாடு!

திசைகள் தரும் இக்காப்பும் வளமும், வாய்ப்பும் வலிமையும் தென்னகத்தின் வாழ்வுக்கு ஏற்ற ஏயப்புணைகளாகத் திகழ்வன. திசையறிந்து, அவற்றின் விசையாண்டு இசை பெருக்கிய இனம் தென்னவர் இனம்.

## 2. உலக நாகரிகத் தொட்டில்

இயற்கையின் அழிவிடையே ஆக்கங்கண்ட அருஞ் சூழல், ஆக்க அலைகளை அகல் உலகெங்கும் இழையோட விட்ட அரும் பண்பகம், தென்னகம்! அது பாலைகளைச் சோலைகளாக்கியது மட்டுமன்று. சூழ்ந்து நிலவிய பாலை வனங்களை யெல்லாம் மெல்லச் சோலை வனங்களாக்கி மன் பதைக்கு இனமலர்ச்சி யூட்டியுள்ளது.

கரையறுத்து ஊடிப்பரவும் ஆற்றோட்டத்துக்கு அது கரையிணைத்து வாழ்வுடன் கூடவைத்தது. காறாற்று வெள்ளத்தை அது அணைகட்டித் தேக்கிக் கால்வழி ஓடச் செய்து காடுமேடுகளைக் கழனிகளாக்கிற்று.

கொடும் பாறைகளை அது கோட்டைகளாக்கிற்று. அவற்றின் கருவகழ்ந்து அது செம்பொன்னும் கரும்பொன்

னும், வங்கமும் தங்கமும் கண்டெடுத்தது. முதலைகள் நடமாடும் சதுப்பு நிலத்தை அது கரும்புத் தோட்டமாக்கிற்று. சுறுமீன்கள் வாழும் கடலில் மூழ்கி அது முத்தெடுத்தது. அதில் சீறிவரும் அலைகிழியப் படகோட்டி மீன் பிடித்தது. நாவாய் ஓட்டி நாற்றிசையும் வாணிகமும் கலையும், வாழ்வும் திருவும் பரப்பிற்று.

இசையறிந்து, இசையின் பண்புணர்ந்து, அவற்றின் வசைநீக்கி இசை பெருக்கி வாழ்வில் நசையூக்கிய இனம் தமிழினம். வாடையில் அது வலிமை தேர்ந்தது. கோடையில் வள ஆதாரம் கண்டது. கொண்டலில் அது வளம் பெருக்கித் தென்றலில் வலிமை வளர்த்தது.

கடல் கடக்கக் கலங் கண்டதுடன் அமையவில்லை, தமிழர். காலங்கடக்க மொழிகண்டனர், கலைகண்டனர். இடங்கடக்க, சூழல் கடக்க எண் கண்டனர், இயல் கண்டனர்.

'இயற்கையளித்த புறக்கண்கள் இரண்டுண்டு. அவற்றினும் விழுமியன மொழிசார்ந்த இனக்கண்களாகிய எண்ணும் எழுத்தும்—இயலும் கலையும்!' இது கண்டவர் தமிழர்! கண்டு அவ்வினக் கண்கள் கொண்டு மனித இனம் எழில் வாழ்வு காண வழிவகுத்தவர்கள் அவர்களே!

இயற்கையின் சிரிப்புக்கு இனிப்பும் இசையும் ஊட்டியவர், அதன் கோரதாண்டவங்களையும் எழில்நடமாக்க வல்ல கலைவழி, பண்புவழி கண்டவர், தமிழர்! இயற்கையின் மூலப்பாழ் வெளியாயிருந்த நிலவுலகத்திலே எழுந்த முதல் தண்ணறுந் தண்டலை, தமிழகம்! மனித இனத்தையும் மனித இனப்பண்பாகிய நாகரிகத்தையும் தென்றலாகப்பரப்பி அது தன்சூழலிலே பாலைகளிடையே சோலைகள் எழுப்பிற்று. இம்முறைமையால் அது மனித இனத்தின் மூலத்தாயகமாகமட்டும் நிலவி அமைந்துவிடவில்லை. உலக

நாகரிகத்தின் பிறப்பகம், தொட்டில், வளர்ப்புப் பண்ணையாகவும் அது நின்று நிலவியுள்ளது, நிலவுகின்றது.

இயற்கையிடையே ஓர் இயற்கையாக, ஊழிடையே ஓர் ஆகூழாக, நிலவுலகிடையே ஒரு நிலாவுலகாகத் தென்னகம் விளங்கியுள்ளது. ஆனால் அதை அவ்வாறு ஆக்கப் பெரிதும் உழைத்த இனம் தமிழர், தமிழினம்; ஆக்க உதவிய பண்பு தமிழ்மொழி, தமிழ்ப் பண்பு!

நிலவுலகிலே நிலவுபரப்பி வரும் பண்பு இதுவே!

புயலின் கருவில் தென்றல் பிறக்கும் என்று கூறுவதுண்டு. அவ்வாறு புயலார்ந்த இயற்கையின் கருவில் தோன்றிய மயலார்ந்த தென்றலாக நிலவுவது தென்னகம்.

## 3. கன்னிமாநிலம் —ஐந்தமிழகம்

வடதிசையிலுள்ள ஆசிய ஐரோப்பியப் பெருவெளிகள் உயிர் வாடைபடாப் பனி பாழ்வெளிகளாக நிலவிய காலம் உண்டு. இமய நெடுந்தொடர் அன்று மலைத் தொடராகவோ, நிலமாகவோகூட நிலவவில்லை. தொல் பழங்கால உலக நடுமா கடலின் அடிநிலப் பகுதியாகவே அது கிடந்தது. அக்காலத்தின் சின்னங்களாக மீன்களின் எலும்புகளையும், சோழிசிப்பிகள் சங்குகள் ஆகியவற்றின் தடங்களையும் அப்பனி மலையின் உச்சியிலேயே இன்றும் இயல்நூலார் காண்கின்றனர்.

அத்தொடரிலிருந்து ஓடும் சிந்து, கங்கை, பிரமபுத்திரா ஆறுகளும் அன்றில்லை—ஆயிரம், பதினாயிரக்கணக்கான ஆண்டுகளின் பின்னர் அந்த ஆறுகளின் வண்டல் மலிவால் கடல் தூர்க்கப்பட்டு உருவானதே சிந்து கங்கைப் பெருவெளி. அதுவும் அன்று கிடையாது. பத்துநூறாயிரக் கணக்கான ஆண்டுகளின் பின்பே அவ்வாறுகளும், ஆற்று வெளிகளும் உருப்பெற்றெழுந்தன.

இத்தகைய இயலுலகின் புத்திளமைப் பருவத்திலே, இற்றைக்குக் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, இயற்கையின் உயிர்த்துடிப்புக்குரிய கன்னிமாநிலமாக விளங்கியது தென்னகம்.

தென்னகத்தின் பண்பில் தோய்ந்த மொழி தமிழ் தமிழ்சார்ந்த தமிழினமொழிகள். இயற்கையோடொத்த வாழ்வுடைய சாவா மூவா மொழிகள் அவை.

தென்னகத்தின் பண்பிலும், பண்பார்ந்த அதன் மொழிகளிலும் தோய்ந்து திளைத்து, அது காரணமாக என்றும் இளமை மாறாது தழைக்கும் உயிர்வளமுடைய இனம் தமிழினம், திராவிடம்!

என்றுமுள மொழி தென்தமிழ். அது இம்மாநிலத்தில் வாழ்வும் ஆக்கமும் அளிக்கும் இன்னமுத உயிரூற்றாக ஆடிப்பாடி ஓடுவது. அதன் கையேந்தல்களாக, 'கற்கண்டிலே' 'கல்' நீக்கிக் கல்லின்கடுமை அகற்றப்பட்ட 'கண்'டொத்த கன்னடமும், தெளிதேன் எனத்திகழும் களி தெலுங்கும், கனிச்சாறு வென்ற கவின் மலையாளமும், செறிந்த தேம்பாகின் துளிபோன்ற தீந்துளுவும் அந்த அமுத உயிரூற்றின் உணர்வுக்கசிவுகளாக ஓசிந்தாடுவன.

ஐந்துமொழியும் ஐவகை நறுமணமுடைய ஐந்தருவின் பொற்பூந் துகள்வண்ணங்களாக, ஐவகை இனிமையுடைய பால், தேன், முக்கனிச் சாறுகளின் இன்னறுங் கலவைகளாக அமைந்து அருமகிழ்வூட்டுவன. தத்தம் பெயர்களாலேயே தம் இன ஒருமையையும் ஒன்றுபட்ட தனித்தன்மைகளையும் ஒருங்கே காட்டுவன அவை. அம்முறையிலேயே, தமிழ் இனிமையையும், கன்னடம் கன்னல் அதாவது கற்கண்டையும், தெலுங்கு அல்லது தெனுகு தேனையும், மலையாளம் மலையம் அல்லது தென்றலையும், துளு தேன் துளியையும் நினைவூட்டுகின்றன. அத்துடன் ஐந்துமே கூட்டாக இனிமை என்ற பொருள் தரும் 'தென்'

என்ற சொல்லையே தம் பொதுப் பெயரின் பகுதியாகமேற் கொண்டுள்ளன—அதையே தம் மொழியின் பெயராகமட்டு மன்றித் தம் இனம், நாடு ஆகியவற்றின் பெயராகவும், தாம் நிலவும் திசை குறிக்கும் சொல்லாகவும் கொண்டுள்ளன.

தேனின் பண்பையே மொழிப்பண்பாக வளர்த்த திசை தென்திசை, தென்றலுக்குரிய திசை.

வேற்றுமைதரும் ஒற்றுமையல்ல, ஒற்றுமை ஊட்டும் வேற்றுமை குறித்த மொழிகள் இவை. பொது ஒருமை யிலேயே பல்வகை வளங்கள் குறித்த பெயர்கள் இப் பெயர்கள். பெயர்களில் கண்ட இப் பொதுமை வளத்தை மொழிப் பண்பிலும், இனப்பண்பிலும், நாட்டுப் பண்பு களிலும் ஏராளமாகக் காணலாம்.

இயற்கையுடன் பிறந்து, இயற்கையுடன் இடையறாது வாழ்ந்து வளர்ந்த இயல் மொழிகள், இறவா இயல் புடைய வாழ்மொழிகள், இத் தென்மொழிகள்! அவற்றின் இனிமை நாவுக்கும் புலன்களுக்கும் இனிமை தருவதுமட்டு மல்ல. உளத்துக்கும் இனிமை அளிப்பது; அறிவுக்கும், உணர்வுக்கும், அவை கடந்த வாழ்வுக்கும் இன்பம் பயக்கும் அமுத இனிமை அது. ஏனெனில் இம்மொழிகள் யாவும் இயற்கையின் வளமே தம்வளமாகப் பெற்று, இயற்கை யளாவி வளர்வன. இயற்கையின் சாவா அமுத இனிமை யையே அவை தம் பண்பாகப் பெற்றுள்ளன.

இயலார்ந்த வாழ்வுடன் மயலார்ந்த கலையும் வாய்க் கப்பெற்ற இம்மொழிக் குழாத்துக்குரிய தெய்வீகத் தாயகம், தென்னவர் வாழ்வகமாகிய இத்தொன்மை சான்ற மாநிலமேயாகும்.

## 4. மலைவளம், ஆற்றுவளம்

தென்னகத்தின்—திராவிடத்தின்—குடுமி குடமலை. குழல் முடித்து நீளப் பின்னிவிடப்பட்ட திராவிட

நங்கையின் பின்னல் சடையாக அதுவடபால் நீண்டு தொங்கிக் கிடக்கிறது. இதுவே கன்னிமாநிலத்துடன் பிறந்த கன்னிமாமலை, இமயமலைக்கும் மற்றெல்லா மலைகளுக்கும் அன்னை மூதன்னை! தமிழ்த்தெய்வம் வீற்றிருக்கும் தலமாகத் தமிழர் போற்றிய தமிழ்த் தெய்வ மாமலை, பண்டைத் தமிழர் வடமலை, பொதியில் மலை இதுவே.

தமிழர் ஊர்க்குடியாட்சியின் மையம் ஊர் நடுவே அமைந்திருந்த ஊர் அம்பலம் அல்லது ஊர்ப்பொதியில். பாண்டி நாட்டுக்கு இது போலத் தென்மதுரை அல்லது அலைவாய், கொற்கை அல்லது மதுரையும்; சோழநாட்டுக்கு உறையூர் அல்லது பூம்புகார், தில்லை அல்லது பழையாறை, தஞ்சை அல்லது நாகையும்; சேரநாட்டுக்கு நறவு அல்லது வஞ்சி, தொண்டி அல்லது கருவூரும் நாட்டுக் குடியாட்சி மையங்கள் அல்லது நாட்டுப் பொதியில்களாக நிலவின. ஆனால் தமிழர் முதற்பொதியில், தேசீயப் பொதியில்· இனக்கூடலகம் பொதியில் மாமலையாகிய வடமலையே· தமிழ்ச்சங்கம் முதலில் இங்கே அமைக்கப்பட்டதனாலேயே அம்மரபில் வந்த பாண்டியர் சங்கம் பாண்டி நாட்டுச் சங்கமாகக் கருதப்படாமல், தமிழக முழுமைக்கே, தென்னகத்துக்கே, தமிழுலகுக்கே உரிய தேசீய இனப் பொதுச் சங்கமாக மதிக்கப்பட்டது.

மதுரை வெண் பொன் அம்பலம், அல்லது வெள்ளியம்பலமென்றும், தில்லை பசும்பொன் அம்பலமென்றும், திருநெல்வேலி செம்பொன் அம்பலமென்றும் தமிழ்மரபு கூறுகிறது. இதில் கரந்துள்ள மறைமெய்ம்மை இனிமேல் ஆராய்தற்குரியது. ஒருவேளை மூலஅம்பலம் ஐம்பொன் அம்பலமாக இருந்திருக்கக் கூடும். எப்படியும் அம்பலமாகிய பொதியில் மாமலையிலேயே இவை எல்லாவற்றின் மரபுக்கூறுகளையும் முழுமையாகக் காண்கிறோம். தமிழ் முனிவராகிய அகத்தியர் காண, அவர் அமைத்த சங்கம் அல்லது பொதி

யிலில் தலைமை வகித்து, தமிழ்த் தெய்வமாகிய கன்னித் தாய் அம்மையப்பர் வடிவில் ஆடிய இடம் இது. இத் தெய்வமே ஆணுருவில் தில்லையில் அம்பலத்தாடியாகவும், மதுரையில் மீனாட்சியம்மனாகவும், கன்னியாகுமரியில் கன்னிப்பகவதியாகவும் காட்சியளிக்கக் காண்கிறோம். தமிழக வடஎல்லையில்—தென்னகத்தின் மையப்பகுதி யாகிய வேங்கடத்தில்—நின்ற திருக்கோலமான திருமா லாகக் காட்சி தரும் தெய்வமும் இதுவே!

தமிழின் தலைமையிடமாகிய இவ்வடமலையே தமிழ்த் தென்றலின் தாயகம், பிறப்பகம். தென்றலான், இளவே னிலானாகிய மதவேள் மீனக்கொடி உயர்த்திய இடமும் இதுவே. வேனிலின் வெப்பமும் நிலவின் தட்பமும் ஒருங்கே கொண்ட சந்தனம் இயற்கை தரும் வளமாக விளங்கு வதும் இங்கேதான். அத்துடன் மற்றத் தென்னக ஆறுகளி லெல்லாம் பாலும் தேனும், வெண்ணெயும் நெய்யும் திரண் டோடுவதாகப் புனைந்துரைத்த தமிழ்க்கவிஞர் இம் மலையில் பிறந்தோடுந் தண்பொருநை ஒன்றிலேயே தமிழ் அலை தவழ்ந்து உருண்டோடுவதாக விதந்துரைத்துள் ளனர்.

தென்னக வாழ்வில் குடமலையின் இன்றியமையாச் சிறப்பை இப்பழந்தமிழ் மரபு குறித்துக் காட்டுகிறது. ஆனால் அது வெறும் புராண மரபு அன்று. அது அம் மலையின் இயற்கைவளஞ் சூட்டிய புனைந்துரையேயாகும்.

இக்குடமலையில் கொண்டல் குடங்கவிழ்க்க, அதன் வானமுதம் பெரிதும் சிறிதுமான உயிராறுகளாகச் சிதறித் தென்னவர் ஊனிலும் உயிரிலும், உளத்திலும் உள்ளுயிர் நாடி நரம்புகளிலும் ஓடி ஊடாடுகின்றது.

பாலாறும் தேனாறும், வெண்ணெய்தவழ் பெண்ணை யாறும்; பொன்குலவிப்பூவிரியக்காவிரிக்கும் பொன்னியும்; செம்பொனார்தரு தண்புனல்,தண் பொருநையும், பொய்கை

சூழ் வைகையும் துவரை (துங்கபத்திரை)யும்; கருணை (கிருஷ்ணை)யும், கோதையார்வரி (கோதாவரி)யும் ஒரு பாலாக—பழையாறும் பம்பையாறும், தன் ஆன்பொருநையும் பொன்னுனியும் மற்றொரு பாலாக இக்குடமலையிலிருந்து பரவிச்சென்று தென்னகமெங்கும் வளங் கொழிக்கின்றன.

## 5. நாட்டு வளம்

மலையும் மலைசார்ந்த காடும், மலையிலிருந்து வழிந்தோடும் ஆறுகளும், ஆறுகள் சூழ்ந்த நாடும் தென்னகத்தின் வாழ்க்கை வளத்தில் தத்தமக்குரிய பங்கை வழங்க முந்துகின்றன. ஆனால் பண்டைநாளிலிருந்தே இவற்றின் அடிநிலமாகிய மண்ணும், சூழ்பரப்பாகிய கடல்களும், கடல் கடந்த உலகும் அவற்றுடன் போட்டியிட்டு வளம் பெருக்கிப் பொங்கல் வாழ்வின் மங்காப்புகழ் வளர்த்துள்ளன.

தொல் பழங்காலத்திலிருந்தே—பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னிருந்தே— மலை தரும் அகிலும், சந்தணமும் தேக்கும் தந்தமும்; மேல்கரை தரும் மிளகும் மணச்சுவைப்பொருள்களும், கொங்குக் கன்னடத்தின் தங்கத் தனித்திருவும்; காவிரி நெல்லும் வெற்றிலையும், தென்ஞர்க்காட்டு மாவட்டத்தின் கரும்பும்; தென்கடல் முத்தும் சங்கும், மேல்கடற் பவளமும், ஈழந்தரும் மணியும், ஆந்திரம் தரும் வயிரமும்; தொண்டை நன்ஞட்டின் ஆடையணிமணியும் அகல் உலகுக்குத் தென்னகம் வழங்கிய தனிப்பெருஞ் செல்வங்களாயிருந்தன. கடல் கடந்த உலக வாணிகத்தின் பயனுய், அவற்றுக் கீடாக உலகின் செல்வ முழுதும், பொன் வடிவிலேயே, தொன்றுதொட்டுக் கி. பி. 18-ஆம் நூற்ருண்டுவரை இடையருது தென்னகத்தில் வந்து குவிந்துகொண்டே யிருந்தன.

இன்று மலைப் பகுதியிலிருந்து புத்துலக மரப்பால் தரும் உறைபால் தொய்வகமும் (rubber), கருந்தேறல் கொட்டையும் (coffee) செந்தேறல் தளிரும் (tea); மலை வாரப் பகுதிகளிலிருந்து பருத்தியும், எண்ணெய் விதைகளும்; மேல்கரையிலிருந்து தென்னை வாழை தரும் பல் வளங்களும்; அணு இயக்கத்துக்கு மூலப் பொருளாகிய கருமணலும் (monosite) நுண் மணலும் (thorium); தென் மாவட்டங்களிலிருந்து பனை தரும் பல் வளங்களும்; சேலம் கன்னடம் தரும் இரும்பும்; சேலத்தின் சிறுவங் கமும் (aluminium); ஆந்திரத்தின் அப்பிரகமும் வெள் ளீயமும்; நெய்வேலி நிலக்கரியும்; நெல்லூரின் நெல்லும்; காவிரிக்கரையின் நெய்யூறலும் (petrolum); எங்கும் பரவலாக உள்ள ஆற்றுநீர் வளமும், நீர் மின்வளமும்; கடலின் மீனும் உப்பும் தென்னகத்து வாழ்வின் வாய்ப்பு வளத்துக்குரிய செல்வ வைப்புக்களாகத் திகழ்கின்றன.

தென்னகத்தின் முப்புறத்திலும், கடல் கடந்த தென்னகப் பகுதிகளான தீவங்கள், தீவக்குறைகள் ஆகியவற்றைச் சூழ்ந்தும், அலைபாய்கின்றன கடல்கள்! அவற்றுள் தென்னகக் கடற்கரை மட்டுமே ஆயிரத்துக்கு மேற்பட்ட கற்கள் நீளமுடையது. இது நேரடியாகத் தரும் செல்வ வளமே பெரிதானாலும், அதனிலும் மாபெரிது—தொழில் வாயிலாகவும் வாணிக வாயிலாகவும் அது பெருக்கும் பொங்கல் மாவளம்! அதில் மீன் பிடிக்கும் படகுகள் தோணிகளையும்; தோணிகள் கலங்களையும், கலங்கள் நாவாய்களையும் மரபு வளங்களாக ஈன்று, உலகுக்கே செல்வமும் நாகரிகமும் கலையும் வழங்கியுள்ளன. இவற்றில் தென்னகத்தின் பங்கு வரலாற்றில் பெரிது—வருங்கால வாழ்விலும் இது மீட்டும் பெரிதாதல் சாலும், இன்னும் மாபெரிதாதலும் கூடாததன்று!

## 6. கடல் வாழ்வின் மரபு

கடற்கரை ஊர்களைத் தமிழர் பாக்கம் என்றும், துறைமுக நகரங்களைப் பட்டினம் என்றும் அழைத்தனர். பட்டினம் என்ற பழம்பண்பார்ந்த இத்தனித் தமிழ்ச் சொல்லைத் தம் பெயரில் கொண்டியங்கும் துறைமுகங்கள் பலவற்றையும் இன்னும் தென்னகக் கரையெங்கும்—தமிழும் தமிழின மொழிகளும் வழங்கும் நிலத்தில் மட்டு மன்றி அதற்கப்பாலும்—தென்னகம் கடந்தும் கூட—ஏராளமாகக் காண்கிறோம். தென்னகம் முழுதளாவி, அது கடந்தும் பரவிய தொல்பழங்காலத் திராவிடப் பெரு வாழ்வின் சின்னங்கள் இவை.

தொல்பழங்காலத்திலிருந்தே உலக வாணிகக்களங்க ளாக எண்ணற்ற பலதுறைமுகப்பட்டினங்கள் தென்னகக் கரையெங்கும் நிரம்பியிருந்தன. ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னிருந்து தென்கரை உவரியும், மூவாயிர ஆண்டுகட்கு முன்னிருந்து தென்கரைக் கொற்கையும், காயலும், மேல் கரை முசிறியும், சேரன் தொண்டியும், கீழ்கரை மரக் காணம், மல்லை, பொதுசா, காவிரிப்பூம்பட்டினம், நாகப் பட்டினம், சோழன் தொண்டி ஆகியவையும் இத்தகைய உலக வாணிகக் களங்களாய் நிலவின. இன்றும் விசாகப் பட்டினம், மசூலிப்பட்டினம், காக்கிநடா. சென்னைப் பட்டினம், கூடலூர் அல்லது கடலூர், புதுச்சேரி, தரங் கம்பாடி, நாகப்பட்டினம், தூத்துக்குடி, குளச்சல், ஆலப் புழை, கொச்சி, கள்ளிக்கோட்டை, மங்களூர், கோவா முதலிய பல துறைமுகப்பட்டினங்கள் கடல் வாணிக வாய்ப்புடையவையாய் நின்று நிலவுகின்றன.

கடல் வளமோ, கடல் கடந்த உலகின் வாணிக வளமோ தென்னகத்துக்குப் புறம்பான வளங்களல்ல—புற வளங்களல்ல, அகவளங்களே. ஏனெனில் தென்னக மக்களில் ஒரு பெரும் பகுதியினரே உலகெங்கும் திரை

கடலோடிய திரையர். இன்றும் கீழையுலகக் கரைகளிலும் மேலையுலகில் செம்பாதியிலும் கடல் வாணர் ஒரே இனத்தின் கிளையினர் என்பதை அவர்கள் பொது மரபுகள் உணர்த்தவல்லன

தொல்பழங்கால நாகரிக உலகெங்கும் பரவி, நாடு நகரமமைத்துக் கலை பேணிக் கடலாட்சி செய்த இனங்கள் பல உண்டு. வடமேற்கு ஐரோப்பாவிலுள்ள ஐபீரியர், ஸ்பெயினிலுள்ள பாஸ்குகள், இத்தாலி நாட்டு எட்ரஸ்கானர், வடக்காபிரிக்க, கிழக்காசிய, தென் ஐரோப்பியக் கரைகளில் பரவிய கார்தேஜியர், பினீசியர், கிரீசிலும் கிரீட் தீவிலும் ஆரியர் வருமுன் வாழ்ந்து ஈஜியக் கடலுக்கே அப்பெயர் அளித்த ஈஜியர், எகிப்தியப் பழங்குடி மக்கள், எரிதிரையன் கடலுக்கு (செங்கடலுக்கு) அப்பெயர் அளித்த எரிதிரையர், சுமேரியர், ஏலமியர், சிந்துவெளி மக்கள் ஆகியவர்கள் ஒரே பெரும்பேரினத்தவர்களே. அவர்களனைவரும் திரையரின் மிகப் பழங்கிளையினங்களே என்று கருத இடமுண்டு. இக்கிளையினத்தார்களுடன் தொடர்புகொண்டு திரைகடலோடித் திரையர் தேடிக் குவித்த திருவே தென்னகத்தைத் திருவிடம் அல்லது திருஅவாவும் இடமாகிய திராவிடம் ஆக்கியுள்ளது.

தமிழருடன் தொடர்புடைய இப்பேரினக் கிளைகள் இன்று பல ஆராய்ச்சியாளர்களுக்குத் தனித்தனியான தொலையுறவுடைய இனங்களாகத் தோன்றுகின்றன. இது இயல்பே. ஏனெனில் இத்தோற்றத்துக்குக் காரணம் பெரிதும் இன்றைய நிலவுலகின் கடல்நில அமைதியும் நிலக்கிடப்புமேயாகும். தொல்பழங்காலங்களில் அலை பாய்ந்த நடுமாகடலின் பரப்பை எண்ணிப் பார்த்தால், இவ்வினங்களனைத்தும் இத்தொல்பழங்கால மாகடலைச் சுற்றிலும் சென்று வாழ்ந்து அம்மாகடலைத் தம் உயிர்க்

களமாகக்கொண்டு நிலவியனவே என்பது தெளிவாக விளங்கும். ஏனெனில் அன்றைய நடுமாகடல் இன்றைய நடு நிலக்கடலுடன் (Mediterranean Sea), தற்போதைய சகாரப் பாலைவனம், அராபியப் பாலைவனம், அரபிக் கடலின் வடபகுதி, செங்கடல், பாரசிகவளைகுடா, வட திசைச் சிந்துகங்கைப்பெருவெளி, இமயமலை, வங்கக்குடா வின் வடபகுதி ஆகிய அனைத்தையும் உட்கொண்டது ஆகும்.

பேரினத்தின் பெயரும் இம்மாகடலின் பெயரும் ஒருங்கே 'திரையர்', 'திரை' என்று வழங்கப் பெற்றிருந் தன. பல்லாயிர ஆண்டுகள் கழித்தும் பிறமொழி வழக்கு களால் சொல் மரபும் பொருள் மரபும் பல படி மாறிய பின்னும், நடு நிலக்கடலின் பெயரிலும் இவ்வினக் கிளை களின் பெயரிலும் (மெடித்தெரேனியன், துருயிதர், எத்ரஸ் கானர், எரித்ரயன் கடல், திராவிடம்) திரை என்ற இச் சொல்லின் வேர் மூலம் இலைமறைகாயாய் விளங்குவது காணலாம். நடுநிலக் கடலின் பெயரில் வரும் 'தெரா' இலத்தீன் மொழியில் நிலம் என்ற பொருளுடையது. திராவிடம் என்ற பெயரிலும் 'தரை' என்ற தமிழ்ச் சொல் லிலும் 'தரா' என்ற சமஸ்கிருதச் சொல்லிலும் அது இதே பொருள்தான் குறிக்கிறது. அத்துடன் மாகடலின் பெய ராகச் சமஸ்கிருதத்தில் வழங்கும் சமுத்ரம் என்ற சொல் லில்கூட 'திரை' என்ற சொல்லே இடம் பெற்றிருத்தல் கூர்ந்து கவனிக்கத்தக்கது. செங்கடலின் பெயராகிய எரிதிரையன் கடற் பெயரில் பின்னாட்களில் எறிதிரை என்பதன் பொருள் சிவப்பு என்று கொள்ளப்பட்டாலும் அதிலும் 'திரை' என்ற பகுதி அமைந்துள்ளது தெளிவு.

இன்று பன்மொழிகளில் பயின்று மயங்கும் இச்சொற் களில் 'ர' கரம் மாறுதிருக்க, 'த'கரம் மட்டும் ஒலிதிரி வுற்றுத் தமிழ் தவிர வேறெம்மொழிகளிலும் பொருள்

மரபில் ஒருமை காட்டாததாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதைச் சுட்டிக்காட்டித் திருத்தந்தை ஹீராஸ் 'திராவிடம்' என்ற சொல்லின் பழமை, அவ் வினத்தின் பழமை, அவ்வினத்தொல்பழந் திராவிட மொழியாம் தமிழின் பழமை ஆகியவற்றை வலியுறுத்தியுள்ளார்.

## 7. கடல் கடந்த மரபு

வரலாற்றுக்கும் பழம் பொருளராய்ச்சிக்கும் எட்டாத தொல் பழம் பெருவாழ்வுக் காலங்களில் திரையர் சீரார்ந்த செல்வ உலகின் திருவார்ந்தமையத் தெப்பக்குளம் போலக் கிடந்தது பழய நடுமாகடல். அதன் குறுகிய எச்சமிச்சங்களே இன்றைய நடுநிலக்கடல், செங்கடல், பாரசிகக் குடாக்கடல், அரபிக்கடல், வங்கக்கடல் ஆகியவையும் அணிமைக்காலம் வரை வற்றி வற்றி நிலவியிருந்த இராசபுதனத்து உப்பேரியும் பிறபல ஏரிகளும் உள் நிலக்கடல்களும் ஆகும்.

தவிர, நடுமாகடல் நிலவுலகில் நிலவியகாலத்தில் இன்று தமிழகத்துககுத் தெற்கிலுள்ள குமரிமாகடல் (Indian Ocean) பெரிதும் கடல்கொண்ட தமிழகப் பகுதியாக, நிலமாகவே கிடந்தது. அதில் ஓடிய குமரியாறு, பஃறுளியாறு போன்ற பேராறுகளும் அவற்றின் துணையாறுகளும், கிளையாறுகளுமே இன்று மாகடல்கள், கடல்கள், விரிகுடாக்கள், குடாக்கடல்கள், கடலிடுக்குகளாகியுள்ளன. அத்துடன் மேற்கே தென் ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், தெற்கே இலங்கை, கிழக்கே மலாயா, சுமாத்ரா, ஜாவா முதலிய தீவுகள், நியூகினித் தீவு, ஆஸ்திரேலியா, வடமேற்கு அமெரிக்கா ஆகியவை அன்று தென்னகத்துடன் தொடர்புபட்ட ஒரே மாநிலமாகக் காட்சியளித்தன. எனவே, தென்னகஞ் சூழ்ந்த மாகடலும் சரி, அக்கடல் கடந்த உலகும் சரி—பழந்தமிழகப் பகுதிகளேயாகும்.

தென்மாகடல் முன்பு தென்னகப் பகுதியாயிருந்த கடல், தென்னகப் பேராறுகளின் விரிவு. கடல் கடந்த உலகும் இடைக்காலத்தில் தமிழகத்தின் உயிர்ப்பகுதியிலிருந்து கடல்களால் பிரிக்கப்பட்ட பழய மூலத் தென்னகப் பகுதிகள்—இப்பால் தென்னகத் தாயகத்திலிருந்து துண்டு படுத்தப்பட்ட அப்பால் தென்னகத் தாயகப் பகுதிகளே அவை.

ஈழம் அல்லது இலங்கை தென்னகத் தலைநிலத்தி லிருந்து கடலால் பிரிக்கப்பட்டது முதற் சங்ககாலத்துக்கு நெடுநாள் பின்னரேயாகும், கடைச்சங்கத்துக்குக் கூட அது பிற்பட்டதாகலாம். ஆனால் அது இராமாயண காலத்துக்கு மிக மிக முற்பட்டது. ஈழம் முற்றிலும் தீவாகி, கடைசி நில இணைப்பின் நினைவு மறக்கப்படாத காலத்திய மக்கள் மரபுகளிலிருந்து பிற்காலத்தில் திரிபுற்றும் சிதைவுற்றும் திரண்டும் உருவாகிய ஓட்டுக் கதைதான் இராமாயணம். தென்கிழக்காசியாவில் 'இராமாயணம்' என்ற பெயருடனும், மேலையுலகில் இலியத், ஓடிசி போன்ற உருவிலும் அக்கதை பழய திரையர் உலகெங்கும் பல படியில் பரவியுள்ளதன் காரணம் இதுவே. அத்துடன் பிரிவுறாத தென்னக முழுவதையும் இலங்கையையே தலைமை யிடமாகக்கொண்டு ஒரே பேரரசாக ஆண்ட ஒரு தொல் பழங்காலத் தென்னவன் (இராவணன்) புகழ்க் கதையுடன் அவன் மரபினர் (விபீடணன்) உட்கலகத்தால் அவ்வாட்சி வீழ்ச்சியுற்ற கதையும் இணைக்கப்பட்டு ஒரே கதையாக, ஆனால் தென்னவன் புகழ் திரிக்கும் இகழ்க் கதையாகவே அது இன்று ஆக்கப்பட்டுள்ளது.

இது மட்டுமன்று. தென்னகத்தின் வட எல்லையாக இருந்த தொல் பழங்கால நடுமாகடலே பின்னாட்களில் இமயமலையாகவும், சிந்து கங்கை வெளிகளாகவும் திரி

புற்றது. தென்னகத்தின் வட கடற்கரையாகப் பயின்றே அது படிப்படியாக விரிவுற்று ஒரு மாநிலமாயிற்று. கடலாயிருந்தபோது தமிழர் அது கடந்து வடக்கிலும் தம் குடியிருப்புக்களும் அரசுகளும் கலையும் நாகரிகமும் வளர்த்திருந்தனர். காசுமீரம், திபெத், நேபாளம், பூட்டானம், அசாம், வங்கம் ஆகிய பகுதிகளில் இன்னும் இவற்றின் தடங்களைக் காணலாம். இங்ஙனம் பழைய நடுமாகடலான தமிழர் வடகடல் தம் கடலாயிருந்தது கருதியே, பண்டைத் தமிழரசர் அது தூர்ந்தெழுந்த சிந்து கங்கைச் சமவெளியையும் அதன் வட எல்லையாகக் கிளர்ந்தெழுந்த இமய நெடுந்தொடரையும் கடந்து இமய நெற்றியில் ஒருவர் மாறி ஒருவர் தம் தமிழ்க் கொடியை நாட்ட விரைந்தனர் ஆதல் வேண்டும்.

நிலந்தரு திருவிற் பாண்டியன் காலத்தில் தொடங்கி, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், கரிகாலசோழன், சேரன் செங்குட்டுவன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் காலம் வரை இந்த இமய மரபு தமிழர் கருத்தில் தொடர்பறுது நின்றதுடன், இராசேந்திரசோழன் காலத்தில் புது மலர்ச்சியுமடைந்தது. ஆயினும் தமிழகத்தின் இந்த 'இமயத் தமிழ்க் கொடி விழா' ஊழிச்சங்ககாலத்திலேயே பழங் கதையாகியிருந்தது.

இதுபோலவே, ஈழமும், கடாரமும் பிற தீவங்களும் தம் பழந்தமிழகப் பகுதிகள் என்ற எண்ணமே தென்னகப் பேரரசரை ஊக்கி, அவற்றின்மீது தம் வாணிக, குடியேற்ற ஆட்சி பரப்பும்படி தூண்டியிருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இன்றளவும் தென்னக வணிகர் தென்கிழக்காசியா வெங்கும், தொழிலாளர் தென்கிழக்கில் பிஜித் தீவு வரையும் தென்மேற்கிலும், மேற்கிலும், தென் ஆப்பிரிக்கா, நடு அமெரிக்காவிலுள்ள கயானா வரையும் தம் தொல் பழங்காலத் தமிழகப் பகுதி

களிலேயே பரவிச் சென்றுள்ளனர். ஆளச்சென்ற இடத்தில் இன்று தென்னவர் மாளச்சென்றுள்ளன ராயினும் அவர் மரபு தொடர்ந்தே வந்துள்ளது.

இன்று தமிழர் கூலிகளாய்ச் சென்று நலிவதற்குரிய இடங்களெல்லாம் முன்பு தமிழர் முன்னோர் வணிக வேந்தர்களாகவும், வேந்தர்களாகவும், தமிழகப் பேரரசர் ஆட்சிக்குரிய படை மன்னர்களாகவும், பணி மன்னர்க ளாகவும் சென்று பரவிய இடங்களே. அதுமட்டுமன்று. இன்று அயலார் தூண்டுதலின் பேரில் அயலாருடன் சேர்ந்து தமிழரை அயலாராகக் கருதி எதிர்க்கத் துணியும் ஈழத்துச் சிங்களவர், மலயா நாட்டு மலாய் மக்கள், சீனர், சப்பானியர், ஆபிரிக்கப் பழங் குடியினர், ஆபிரிக்க வெள்ளையர்கூடப் பண்டு தமிழருடனும் பிற திராவிட இனத்தவருடனும் பழம் பேருறவு கொண்டவர்களே— ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழருடன் தமிழ ராகக்கூடியும் ஊடியும், பூசலிட்டும் பொருந்தியும் உற வாடியவர்களே—தமிழருடன் குருதிக் கலப்பு மட்டு மன்றிக் குருதித் தொடர்பும், மொழிக்கலப்பு மட்டுமன்றி மொழித் தொடர்பும் உடையவர்களே. தமிழ்ச் சொற்கள் அவர்கள் மொழிகளிலும், அவர்கள் சொற்கள் தமிழ், தமிழின மொழிகளிலும் பண்டிருந்தே தொடர்பு கொண்டும் இரண்டறக் கலப்புற்றும் இருந்தன.

இம் மொழிகளில் சில—சிறப்பாகச் சிந்து கங்கை வெளித் தாய்மொழிகள் —இன்று ஆரிய மொழிக ளுடன் ஆரிய மொழிகளாகக் கருதப்பட்டு, அம்மொழி யினரும் தமிழினத்தவரை அயலாராகக் கருதத் தொடங்கி யுள்ளனர்.

தென்னகப் பண்பு இவ்வாறு தென்னக வரலாற்றி லும், தென்னக வரலாறு தென்னக நில இயல் வரலாற்றி லும் ஊன்றி நின்று வளர்ந்துள்ளன என்று காணலாம்.

## 8. தமிழர் பொன்றூர்ந்த புகழ்க்கொடி

வரலாற்றில் தென்னகம் நிறுவிய புகழ்க்கொடி பெரிது, மாபெரிது!

உலகின் முகடாகிய இமயச்சிமையத்தில் வில்புலிகயல் ஆகிய முத்தமிழ்க் கொடிகளைப் பொறித்தவர் சேரசோழ பாண்டியர்களாகிய தமிழ் மூவேந்தர்களே. கங்கம், கலிங்கம், வங்கம் ஆகிய வடதிசை நாடுகளை வென்ற நிலப் பேரரசர் அவர்களிடையே பலர் உண்டு. இது மட்டுமன்றி, கப்பற்படையுடன் கடல் கடந்து ஈழம் (இலங்கை), கடாரம், (மலாயா), இலக்கத் தீவங்கள், மாலத் தீவங்கள், அந்தமான் நிக்கோபார்த் தீவங்கள்; சுமத்ரா, ஜாவா, சயாம், கம்போடியா முதலிய தென்கிழக் காசியாப் பரப்புக்கள் முழுவதையும் தம் கொடிக் கீழ்க் கொண்டுவந்த கடற் பேரரசரும் பலர் அவர்களிடையே உண்டு.

இரண்டாயிர ஆண்டுளுக்கு முன்பே சேரன் சிலம் பிசைக்க, வடக்கே ஆரிய மன்னர் தலைமீது சிலை ஏற்றிய மொழி தமிழ்மொழி. கிறிஸ்துவுக்கு மூவாயிர நாலாயிர ஆண்டு முற்பட்டே-இற்றைக்கு ஐயாயிர ஏழாயிர ஆண்டு களுக்கு முன்பே—எகிப்தியருடனும் சீனருடனும், பினீசிய ருடனும் சால்டியருடனும, சுமேரியருடனும், சிந்துவெளி மக்களுடனும், உரோமருடனும், யவனருடனும் வாணிக உறவும் அரசியல் தொடர்பும் கொண்டு, அவற்றின் மூலம் செல்வவளமும் தொழில் வளமும் கலைவளமும் பெருக்கிய மரபினர் தென்னவர்.

தமிழகமெங்கும் ஆங்காங்கே கண்டெடுக்கப்படும் புதையல்களில் இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன் மேலை உலகாண்ட உரோமகப் பேரரசர்களின் தலைகளையுடைய நாணயங்கள் பெரும்பாலாகக் காணப்படுகின்றன. அத் துடன் உரோமகப் பேரரசு அழிந்து ஆயிரக் கணக்கான

ஆண்டுகள் வரை இந்நாணயங்கள் தமிழக நாணயங்க ளுடன் நாணயங்களாகச் செலாவணியில் இருந்தன என்று கல்வெட்டுக்களாலே அறிகிறோம். தமிழகத்தின் உரோம வாணிகத்தின் அளவையும் வகையையும் இவை மதிப் பிட்டுக் காட்டுகின்றன. ஏனெனில் உலகெங்கு மிருந்து வளந் திரட்டிய உரோமகப் பேரரசர் செல்வத்தில் பெரும் பகுதியும் தமிழகத்திலேயே வந்து குவிந்து கிடந்தன. வாணிகம் பெரிதும் ஏற்றுமதிகளாகவே இருந்தது என்பதை இது காட்டுகிறது. தமிழகப் பண்டங்களுக்கு எதிராகப் பண்டங்களைவிடப் பேரளவில் நாணய வரவே மிகுதியாயிருந்தது.

தமிழ்ப் பேரரசரைப் போலவே இமயம் வரை ஆட்சி பரப்பிய தென்னகப் பேரரசர்கள் மற்றும் பலர் உண்டு. கி. மு. 2-ஆம் நூற்றுண்டில் கலிங்கப் பேரரசன் காரவே லன் வடதிசைப் புகழ்ப் பேரரசனுகிய அசோகன் மரபின ரை அடக்கி இமயம் வரை ஆண்டான். தெற்கிலும் ஆட்சி பரப்ப முயன்று தமிழ் மூவேந்தர்களுடன் அவன் கடும் போர்கள் ஆற்றினுலும், இதில் அவன் சிறிதும் வெற்றி பெறவில்லை. நேர்மாருக அவன் ஆட்சியே ஆந்திரர் கைப் பட்டுக் கவிழ்ந்தது. பேரரசு நிலை அடைந்த ஆந்திரர்கள் சிலப்பதிகார காலத்தில் சேரன் செங்குட்டுவன் நண்பரா யிருந்ததன் காரணம் இதுவே. செங்குட்டுவன் முன்னோர், களாகிய தமிழரசர் உதவியாலேயே அவர்கள் இமயம்வரை தம்ஆட்சி பரப்பியவராய்ப்பெரும் புகழ் நாட்டினர்.மூவரசர் ஆட்சிக் காலத்துடன் ஆந்திரப் பேரரசின் ஆட்சி சரிந்து விட்டது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. மூவரசர் ஆட்சியில் மூவரசர் குடிகளுடன் பெருந் தொகையினராக ஆந்திரரும் கலிங்கரும் தென்கிழக்காசியாவில் குடியேறிய தனுலேயே, அவர்கள் இன்றளவும் 'கிலிங்குகள்' என்று பர்மிய மொழியிலும் பிற தென்கிழக்காசிய மொழிகளிலும்

குறிக்கப்படுகின்றனர். சங்ககால முடிவாகிய கி. பி. மூன்றும் நூற்றாண்டுவரை நான்கு நூற்றாண்டுகளாக ஆந்திரப் பேரரசர் மேல் கடல் கீழ் கடலளாவிய தென்னகத்தின் வடவெல்லையையும், வடதிசைக் கங்கைப் பரப்பு, மேல் பர்மா, கீழ் பர்மா ஆகியவற்றையும் வென்று அம்முத்திசைப் பரப்பிலும் தம் பேரரசாட்சி பரப்பினர். வங்கக்குடாக் கடலின் முத்திசைக் கடற்கரையும் ஆண்டவர் என்ற முறையில் அவர்கள் தங்களை முக்கடலரசர் (த்ரிசமுத்ராதிபதி) என்ற விருதுப் பெயரால் குறித்துக்கொண்டனர். அத்துடன் ஆழ் கடல் செல்லும் இரட்டைப் பாய் மரங்கள் கொண்ட கப்பலையே அவர்கள் தம் கடலாட்சியின் சின்னமயாகத் தங்கள் நாணயங்களில் வீறுடன் பொறித்திருந்தனர்.

## 9. கடலாட்சி, பேரரசாட்சி

தமிழகத்தின் மேல்கரையின் கடலாட்சியை இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்னிருந்தே சேரநாட்டினர் அதாவது பண்டைக் கேரள மக்களும், கடம்பர் அதாவது பண்டைக் கன்னட நாட்டு மக்களும் பங்கிட்டு வந்தனர். முதலில் சிறு சிறு கடலரசராக இருந்தஇவர்கள் பெரிதும் கடற்கொள்ளையையே தொழிலாகக் கொள்ளத் தலைப்பட்டனர். கி. மு. 1-ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 2-ஆம் நூற்றாண்டு வரை தமிழரசர் யவன உரோமப் பேரரசுகளுடன் அரசியல் வாணிக ஒப்பந்தமும், கலைநாகரிகத் தொடர்பும் கொண்டிருந்தனர். ஆகவே இக்கொள்ளையைத் தடுத்துநிறுத்தி மேல் கடலில் அமைதி நிலைநாட்டும் பொறுப்பு அவர்களுக்குப் பெரிதாயிருந்தது. இதில் சேரப்பேரரசர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளையும் கடற் பெரும் போர்களையும் சங்ககாலப் பதிற்றுப்பத்து விரித்துரைக்கின்றது. சேரர் கடம்பரை முறியடித்ததுடன் நாட்டுக்கு ஓட்டித் தாமே கடற்பெரும் பேரரசாக

விளங்கினர். கடம்பருக்கு உதவியாக வந்த யவனரும் அவர்கள் கதியே அடைந்தனர்.

உள்நாட்டுக்குத் துரத்தப்பட்ட கடம்பர் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஹாங்கல், வனவாசி ஆகிய இடங்களிலிருந்து அரசராகவும் பேரரசர்களாகவும், ஆந்திரர், பல்லவர், சாளுக்கியர், இராட்டிரகூடர், சோழர் போன்ற தென்னகப் பேரரசர்களுக்கு உட்பட்ட சிற்றரசராகவும் நீடித்து வாழ்ந்தனர். அவர்களுடன் துரத்தப்பட்ட யவனர்கள் இன்றும் கூர்ச்சர நாட்டிலும், மராத்தி, கன்னட நாடுகளிலும் மக்களுடன் மக்களாக, ஆனால் தனிப் பழக்கவழக்கங்களும் மரபுகளும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர் என்று அறிகிறோம்.

சேரர் பேரரசாட்சி வீழ்ந்தபின் சேரமக்களும் கடம்பரும் மீண்டும் சிறு கடலரசராகி, மீண்டும் கடற்கொள்ளைகளிலும் கடற்போர்களிலும் ஈடுபட்டு 19-ஆம் நூற்றாண்டு வரை நீடித்தனர். அராபிய வணிகருக்கும் இஸ்லாமியப் புண்ணிய யாத்திரிகருக்கும், மேலையுலகிலிருந்து வந்த போர்ச்சுகீசிய, டச்சு, பிரஞ்சு, ஆங்கில வணிகருக்குப் பெருந்தொல்லைகள் தந்து, 19-ஆம் நூற்றாண்டில் முதற்பாதியிலேயே அவர்கள் முற்றிலும் அடக்கப்பட்டு வரலாற்றில் மரபிழந்து மறைந்தனர். பிரிட்டிஷ் ஆட்சி அருமுயற்சியுடனேயே அவர்களை ஒடுக்கமுடிந்தது. அவர்கள் கடற்படை மூலதளங்களில் ஒன்றின் தடம் இன்றும் பம்பாய் நகரில் 'மலபார்க் குன்று' என்ற ஒரு பகுதியின் பெயரில் நிலவுகிறது.

தேவாரகாலத்தில், அதாவது கி.பி,7-ஆம் நூற்றாண்டில், வடதிசையில் ஹர்ஷவர்த்தனன் பேரரசனாக விளங்கினான். ஆனால், அவனைப் போர்க்களத்தில் எதிர்த்து முறியடித்தவன் தென்னகச் சாளுக்கியப் பேரரசனாகிய இரண்டாம் புலிகேசி. அதே சமயம் இப்புலிகேசியை வென்று அவன்

தலைநகரையே தரைமட்டமாக்கியவர்கள் தமிழகப்பல்லவப் பேரரசர்கள். பல்லவருடனும் சாளுக்கியருடனும் சரிசமமாக இந்நூற்றாண்டுகளில் போட்டியிட்டுத் தென்னகத்தின் தென்திசையாண்ட பேரரசர் பாண்டியர்கள். இக்காலங்களில் தென்னகப் புகழ்க்கொடியை உலகளாவ உயர்த்திய தென் பேரரசுகள் இந்த மூன்றுமே.

சங்ககாலத்துக்கு நெடுநாள் முற்பட்டு, முதற் சங்க காலம் என்று தமிழ் மரபு குறிக்கும் தொல்பழம் பெரு வாழ்வுக் காலங்களிலேயே, தொல்காப்பியம் அரங்கேறக் கண்ட பாண்டியன் மாகீர்த்தி, வடிம்பலம்பநின்ற பாண்டியன், நெடியோன் என்ற பல பெயர்களையுடைய நிலந்தருதிருவிற் பாண்டியன் புதிய சிந்து கங்கைவெளியை வென்று இமயம் வரை ஆட்சி பரப்பி யிருந்தான். அத்துடன் அமையாமல் அவன் கடல் கடந்து கடாரத்திலும் ஆட்சி நிறுவினான். அவன் கிளைமரபினர், ஆயிர மூவாயிரக் கணக்கான ஆண்டுகளின் பின்னும் சோழப் பெரும் பேரரசர் காலத்தில் கடாரத்தில் ஆண்டுவந்தனர். ஆனால், அந் நாட்கள் இலங்கை, தீவாய் மாறாத நாட்கள் ஆகும். அதன்பின் சங்க காலத்திலே கரிகாலன், பிரிந்து விட்ட ஈழத்தீவை வென்றாண்ட முதல் தென்னகப் பேரரசனாக விளங்கினான். ஆயினும் சங்ககாலத்துக்குப் பிற்பட்ட வரலாற்றுக் காலங்களில் ஈழத்தின் மீது முதன் முதல் படை யெடுத்து, தென்னகக் கடல் வாழ்வை மீண்டும் தொடங்கி வைத்த பெருமை இடைக்காலப் பாண்டியப் பேரரசர்க்கு உரியது. அவர்கள் ஈழத்தின்மீது பல தடவை ஆட்சி செய்தனர். ஈழத்துடன் பல நிலப்போர்களும் கடற்போர்களும் ஆற்றினர்.

சாளுக்கியர், பல்லவர், பாண்டியர் ஆகிய முப்பேரரசுகளையும் விழுங்கி ஆசியப் பேரரசாக விளங்கியது சோழப் பெரும் பேரரசு. அது தென்னக முழுதும் ஆண்டதுடன்

நில்லாது, கலிங்கமும் கங்கமும் வங்கமும் அடிப்படுத்து இமயம்வரை மீண்டும் தென்னக ஆட்சி பரப்பிற்று. அதே சமயம் அது பாண்டியர் கடல் வெற்றிகள் தாண்டி ஈழம் மட்டுமன்றிக் கடாரம், மாலத்தீவம், இலங்கைத்தீவம், அந்தமான், நிக்கோபார்த் தீவங்கள் ஆகியவற்றையும் கைக்கொண்டது. ஆசியாவின் முதன்மைக் கடற்பேரரசா யிற்று. இதுபோன்ற ஒரு பேரரசையோ, கடற் பேரரசையோ ஆசியா முன்னால் இரண்டாயிர ஆண்டு களாகக்கண்டதில்லை. பின்னும் **இன்றுவரை** காணவில்லை.

## 10. வீழ்வான் வண்ணம்

ஐயாயிர ஆண்டுகளாக இவ்வாறு நாகரிக உலகின் நடுநாயகப் பேரரசுமையமாகவும், உலகக் கடலரசாகவும், உலகக் கடல்வாணிக மையமாகவும், உலகின் பொன் அணி மணிக் களஞ்சியமாகவும் தென்னகம் விளங்கி வந்தது. இந்நிலை சோழப் பெரும் பேரரசை அடுத்து வந்த பாண் டியப் பேரரசர் ஆட்சியிலேயே உச்சநிலை அடைந்ததென்ன லாம். வெளிநாட்டார் குறிப்புகளே—வெனிசிய உலகு நாடோ மார்க்கோபோலோ, இஸ்லாமிய வரலாற்றாசிரியர் 'வசஃவ்' ஆகியோர் ஆதாரங்களே—இதை மெய்ப்பிக் கின்றன. உலகின் தங்கத்திலும் அணிமணிகளிலும் முக் காற்பங்கு தமிழகத்திலும், பாதிப்பங்கு பாண்டிய மன்ன னிடத்திலுமே அன்றுவந்து குவிந்து கிடந்தன. இந்நிலை 18-ஆம் நூற்றாண்டுவரை முற்றிலும் மாறவில்லை. 19-ஆம் நூற் றாண்டில் பிரிட்டிஷ் ஆட்சியிலேயே அது பழங்கதையாகத் தொடங்கிற்று. ஏனெனில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் விசயநகரப் பேரரசரும் மதுரை நாயக அரசரும், மைசூர்ப் பேரரசரும் தென்னக வாழ்வுக்கு மீண்டும் மீண்டும் ஓரளவு மறுமலர்ச்சி உண்டுபண்ணி யிருந் தார்கள்.

அத்துடன் பாண்டியப் பேரரசர் காலத்திலும் விசய நகர மதுரை நாயக அரசர் காலத்திலும் தமிழகம் முன் போல அடிக்கடி ஈழத்தைப் படையெடுத்து வென்று திறை கொள்ளும் அளவுக்குக் கடல் வலுவும் அரசியல் வலுவும் உடையதாகவே இருந்தது.

18-ஆம் நூற்றூண்டு வரை உலகில் தென்னகம் அடைந்திருந்த இந்தப் புகழ் உச்சநிலை ஆசியப் பகுதிகள் எவையும் என்றும் சென்றணுகாதது என்பது குறிப்பிடத் தக்கது. அத்துடன் சிந்து கங்கைப் பேரரசர் எவரும் தமிழகம் வென்றதில்லை. அதே சமயம் தமிழகக் கொடி பலகால் இமயத்தில் பறந்ததுண்டு. தவிர, சிந்து கங்கை மக்கள் என்றும் கனவிலும் அறியாத கடல் கடந்த நாடு களிலெல்லாம் தமிழர் வாணிகமும் குடியேற்றங்களும் ஆட்சியும் கடற்படை வீறும் சென்றெட்டி யிருந்தன. தமிழர்,கலையும் ஆட்சியும் இந்துமாகட லளாவி யிருந்தது. 18-ஆம் நூற்றூண்டின் மூற்பகுதியில் மதுரைநாயகர் ஆட்சி சரியத் தொடங்கிய பின்னரே இந்நிலையில் மாற்றம் ஏற்படலாயிற்று.

மதுரை நாயகருக்குப் பின் தென்னக அரசியல் சீர்குலைந்தது. அகில உலக வாணிக வளத்துக்கும் தொழில் வளத்துக்கும் உரிய அமைதி நிலை, அரசியல் ஆதரவுநிலை சரிவுற்றது. பாராண்டு பண்பின் முகடெய்தியிருந்த தமிழ் மொழிமட்டுமே எஞ்சிற்று. அதுவும் பேச்சு வழக்கில் மட்டுமே நிலவும் அடிமை மொழிகளிடையே ஓர் அடிமை மொழியாய் உரிமை கெட்டேவந்தது. கோயில்களிலிருந்து அது துரத்தப்பட்டது; மண விழாக்களிலிருந்தும் குடும்பச் சூழல்களிலிருந்தும் கூட அது மடக்கப்பட்டது. பண்படாத பல புத்தம் புது மொழிகள் மெல்லமெல்ல அது ஏறி யிருந்த தவிசில் தவழ்ந்து புதுப் பெருமை வளர்க்கத் தொடங்கின.

தமிழ் மொழி தட்டுக்கெடத் தொடங்கிய அன்றே அதனருகே தவிசு வீற்றிருந்த தென்னக மொழிகளும், அவற்றுடன் ஊடாடிய உலகத் தாய்மொழிகளும் யாவும் சீரிழந்தன. தாய்மொழிகள் என்றுலே அடிமை மொழிகள் (தேச பாஷைகள், Native Tongues, Vernaculars) என்ற வழக்குக் கீழ் திசை, மேல் திசைகளில் பரவிற்று.

குடியாட்சி மரபுகள் 18-ஆம் நூற்றுண்டு முதல் தட்டுக் கெட்டன. கீழை யுலகிலிருந்து மேற்கே சென்ற நாகரிகம், மேல் திசையிலழிந்து வந்த நிலப்பண்ணை யாட்சி முறையை மெல்ல ஆசியா வெங்கும் சிந்து கங்கை சமவெளி யெங்கும் பரப்பி, தென்னகத்தையும் தமிழகத்தையும் ஆட்கொள்ளத் தொடங்கிற்று. தமிழ் நாகரிகம் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வளர்த்த பட்டின ஆட்சிகள், வாணிகக் குழாங்கள், தொழில் கூட்டுக் கழகங்கள் எளிதில் பண்பட வெளியுலகின் சாதிக் கும்பலாட்சிகளு டன் சாதிக் கும்பல் ஆட்சிகள் ஆயின.

சங்கம் வைத்துத் தேசீய முறையில், நாடு கடந்த இனப் பெருங் கூட்டு முறையில் வகுக்கப்பட்டிருந்த தமிழர் உயர்தளக் கல்வி முறைகள் தட்டுக்கெட்டு மெல்ல மறக்கப்பட்டன. நூற்றுக்கு நூறு உருப்படியான கல்வி யறிவும், தேசமெங்கும் குறைவற்ற புலமையும் நிறைந்த சங்க வாழ்வு கதை மரபில்கூட மறக்கப்பட்டு, உலகக் கனவில்கூட மறக்கப்பட்டு, தமிழ்க் கல்வி சிறு திண் ணைப் பள்ளிக்கூட அளவில் குறுகிற்று. திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இல்லாவிட்டால் பிரிட்டிஷ் ஆட்சியில் மற்ற மொழிகளைப்போலத் தமிழும் தென்னக மொழி களும் மரபற்றே போயிருக்கும்.

பெருமை குலைத்த ஆட்சிகளிடையே இடம்பெற்ற வெள்ளையர் ஆட்சிக் காலத்திலும் வடவர் ஆட்சிக் காலத்தி லும் தமிழ் முற்றிலும் அழியாதிருப்பதற்கும், பிற தென்

னக மொழிகள் ஒரு சிறிது தலைதூக்கி யிருப்பதற்கும் உரிய காரணம் ஒன்றே ஒன்றுதான். ஆட்சியும் பொருளியலும் தவிர மற்ற உரிமைகள் தென்னக மக்களிடம் வெள்ளையராட்சியில் வளர்ந்தன. போர் சாராத வெளியுலகத் தொடர்பு விரிவுற்றது. தமிழகம் முன்பு வளர்த்து அகல் உலகில் பரவவிட் டிருந்த நாகரிக ஒளி மீண்டும் தென்னகத்தில் வந்து உலவிற்று. தமிழ், தமிழர், தமிழினம் உலகை யறிந்தபின் தன்னை யறிய நாடவும் வழி ஏற்பட்டுள்ளது. உலகமும் மெல்லத் தமிழ், தமிழர், தமிழினம் பற்றி அறிய வழி திறக்கத் தொடங்கியுள்ளது.

இயற்கைப் புயலின் தொடக்கத்தில் மலர்ந்த தமிழ்த் தென்றல் அடிமை யாட்சிகளின் வறுமை, கல்வியின்மை' உரிமைக் கேடு ஆகிய காலப் புயல்களிடையே மீண்டும் மறுமலர்ச்சியாகவும் புதுமலர்ச்சியாகவும் வீசத் தொடங்கியுள்ளது.

இம் மறுமலர்ச்சி புது மலர்ச்சிகளின் விதையைத் தமிழ் இலக்கியம், தமிழ்க் கலை, தமிழ்ப் பண்பு ஆகியவற்றிலும், இவற்றுக்கு நிலமும் உரமுமாய் அமைந்துள்ள தமிழ் மொழியிலுமே காண்டல் வேண்டும். அடிமைக் காலங்களில் தமிழக வாழ்விலிருந்து பிரிக்கப்பட்டு, சில வகைகளில் தமிழர் பேணியது பேணாமல் போனாலும், வேறு பல வகைகளில் தமிழர் பேணாது விட்டவற்றைப் பேணும் வாய்ப்புப் பெற்ற பிற தென்னக மொழிகள் வாழ்வும் கலையும், சிலபல இடங்களில் தென்னகங் கடந்த துணையினங்களின் வாழ்வும் கலையும் கூட இவை காண உதவுவன ஆகும்.

## 11. வாடையும் கோடையும்

சென்ற ஆயிர ஆண்டுகளாக வடதிசை வாடைப் பண்பும், சென்ற இருநூறு ஆண்டுகளாக அவ் வடதிசை

வாடைப்பண்புடன் அதனை ஓரளவு வளர்க்க உதவிய மேல்திசைக் கோடைப்பண்பும் வீசித் தென்னகத்தென்றல் பண்பு தளர்ந்து மறுகும்படி செய்துள்ளன. இவற்றால் தென்னகத்தின் வரலாற்றுப் புகழ் மட்டுமன்றி, வரலாற்று மரபே புறக்கணிப்புக்கும் அலைக்கழிப்புக்கும் ஆளாகிக் கைநெகிழவிடப்பட்டுள்ளன. ஆயினும் அயல் பண்புகள் இரண்டிலும் வடதிசை வாடைப்பண்பே தென்றலுக்கு முற்றிலும் முரண்பட்டதாய், அண்டையி லிருப்பினும், நீடித்துக் கூடி வாழினும் உண்மைத் தொலைவு மிக்க அயற்பண்பாய், பகைப்பண்பாய் நிலவி வந்துள்ளது, நிலவி வருகிறது. தென்றலின் உயர்தளப் பண்பாட்டை ஏற்கும் வகையிலோ, வளர்த்துத் தானும் வளரும் வகையிலோ, கோடைப்பண்புக்கு ஓரளவு கிட்டியுள்ள வாய்ப்பு அதற்குக் கிட்டவில்லை.

வாடைப்பண்பு தாமரைக்குளத்துத் தவளைகள் போன்றது. மேலையுலகம் வந்து அறிந்து கூறும் வரை அது கீழையுலகையே அறியாததாய் நிலவியுள்ளது. அறிந்தபோதும் தன் செக்குமாட்டுப் போக்கில் தன்னைச் சுற்றிச் செல்வதன்றி உலகை முன்னேற்றுவிக்கவோ, தான் முன்னேறவோ மாட்டாததாய் இவ்வடதிசைப்பண்பு நிலையாக மறுகி நின்றது.

உலகம் ஒன்று; மனித இனம் ஒரே குடும்பம்; அதன் முதல்வர் ஒரே மாபெருந் தந்தையாகிய கடவுள்—இது தமிழர் கோட்பாடு, தமிழ்ப் பண்பு. இவ் ஓருலகப் பண்பில் பிறவாமல், அதனுடன் வளராமல், அதைக் கெடுத்தன்றி வாழ வழி காணாப்பண்பாய் வாடைப்பண்பு உலகில் இன்னும் உலவுகிறது.

தென்னக வரலாற்றுப் புகழும் வரலாற்று மரபும் மறைந்த இடையிருட்காலத்திலே, இதே அடிமைப்புயல் தென்னக இலக்கியத்தையும் கலையையும், மொழியையும்

பண்பையும் கூடப் பேரளவில் பாதிக்காமல் விட்டு வைக்கவில்லை. அதன் ஆட்சியில் காலத்தின் கோலமும் கறையானும் செல்லும், கடும்புயல்களும் கடற்கோள்களும் ஒருபுறம்; ஆடிப்பெருக்கும் அயற்பண்பாட்சியின் எதிர்ப்பும், சூழ்ச்சியும் நயவஞ்சகமும், வீடணச்செல்வர் புறக்கணிப்பும், வீடணப்பண்பில் வளர எண்ணிய அறிஞர்களின் கங்காணித்தனங்களும், இவற்றின் விளைவாக எழுந்து வளர்ந்த கருத்துக் குழப்பங்களும் மற்ருருபுறமாக, தென்னக இலக்கிய, கலைச் செல்வங்களைத் தங்குதடையின்றிச் சூறையாடியுள்ளன. இன்னும் கூடச் சூறையாடியே வருகின்றன. இச்சூறையாட்டில் அயற் பண்பாடுகளுக்கு முற்பட்ட தென்னகத் தனிப்புகழுக்குரிய தாய்மொழி, தாய் இனப் பண்புடைய முற்கால ஏடுகளே பெரிதும் அழிவுக்கு ஆளாயின. ஆனால், இடைக்காலப் பிற்கால ஏடுகளிலுங் கூட இதே வகையில் நல்லனவே அழிந்தன, அல்லனவே எஞ்சின என்று கூறுதல் தவருகாது.

இவ்வுண்மைகளைத் தமிழல்லாத பிற தென்மொழிகளின் நிலை நன்கு வலியுறுத்திக் காட்டும்.

## 12. மாண்ட செல்வங்கள்

தமிழில் நமக்குக் கிடைத்துள்ள இலக்கியத் தொகுதியில், (1) புத்த காலத்துக்கு முற்பட்ட இலக்கியம், (2) புத்த கால இலக்கியம், (3) சமண கால இலக்கியம், (4) சைவ கால இலக்கியம், (5) வைணவ கால இலக்கியம், (6) ஆரியப் பண்பாட்டிலக்கியம், (7) பிரிட்டிஷ் வடதிசை ஆட்சிக்கால இலக்கியம் என ஏழு அடுக்குகள் கிட்டத்தட்ட ஒன்றன்பின் ஒன்ருக அமைந்திருப்பது காண்கிருேம். வரலாற்று முறையில் அடுக்குகளின்

வரிசை முறை கீழ்திசை எங்கும் இதுவே என்பதும் எளிதில் புலப்படும்.

சிந்து கங்கை வெளியிலுள்ள தாய் மொழிகளில் பல—சிறப்பாக மேல்பாரிச, நடுப்பகுதி மொழிகளில்—ஏழாவது அடுக்கில், அதாவது இன்று கூட, ஒழுங்கான இலக்கிய வாழ்வு தொடங்கவில்லை. ஒரு சிலவற்றில் ஏழாவது அடுக்குடன் அவ்வாழ்வு தொடங்குகின்றது. உருது, இந்தி வங்காளி, மராத்தி, குஜராத்தி ஆகிய ஐந்து மொழிகளில் மட்டுமே வைணவ காலத்திலிருந்து, அதுவும் 18-ஆம் நூற்றுண்டிலிருந்து மூன்றடுக்கான இலக்கியம் உள்ளது. தாய் மொழியல்லாத சமஸ்கிருதம் ஒன்றில் மட்டுமே மூன்றுக்கும் முற்பட்ட சைவகால இலக்கியமும், ஒரு சிறிதளவு புத்த கால இலக்கியமும் உண்டு. ஆனுல் இதுவும் கி. பி. மூன்ரும் நூற்ருண்டுக்கு முற்படவில்லை; அதற்குப் பிற்பட்டதே.

தென்னகத் திராவிட மொழிகளில் தமிழ், கன்னடம் நீங்கலான மற்ற இரண்டுமே மூன்றடுக்குகளின் நிறை வளம் பெற்றுள்ளன. ஏனெனில் அவற்றின் ஐந்தாம் அடுக்காகிய வைணவ கால இலக்கியம் கி. பி. 12-ஆம் நூற்ருண்டிலேயே தொடங்குகிறது. கன்னட இலக் கியமோ இறுதி ஐந்தடுக்குகளே உடையது. அதன் வைணவ கால இலக்கியம் கி. பி. 16-ஆம் நூற்ருண்டிலும், சைவகால இலக்கியம் கி. பி. 12-ஆம் நூற்ருண்டிலும், சமணகால இலக்கியம் கி. பி. 9-ஆம் நூற்ருண்டிலும் தொடங்கு கிறது.

சிந்து கங்கை வெளியிலும் சரி, தென்னகத் திலும் சரி முந்திய அடுக்குகளில் சிலவேனும் அழிந்து பட்டுள்ளன என்பதில் இன்று தாய் மொழிகளின் இலக்கிய வரலாற்ருசிரியர்களிடையே ஐயப்பாடு எதுவும் கிடையாது. ஏனெனில் வடதிசை வங்கமொழியிலும்

தென்திசைத் தெலுங்கு மலையாள மொழியிலும் புத்த கால, சைவகால அடுக்குகளைச் சார்ந்த சில ஏடுகள் புதையுண்டு கிடந்து தப்பி வெளிக் கொணரப்பட்டுள்ளன. கன்னடத்திலோ மூன்றும் அடுக்காகிய சமணகாலத் தொகுதியிலேயே கி. பி. நான்காம் நூற்றுண்டுக்குரிய ஏடுகள் நிலவியிருந்து அழிந்துவிட்டன என்பதைத் தமிழ்ப் புத்த சமண உரையாசிரியர் குறிப்புக்களே நிலை நாட்டுகின்றன.

தென்னக மொழிகளிலோ தென் ஆசிய மொழிகளிலோ எங்கும் காணமுடியாத முறையிலும் அளவிலும் தமிழில் புத்தகாலத்துக்கு முற்பட்ட இலக்கியம், புத்தகால இலக்கியம் ஆகியவை உட்பட்ட ஏழு அடுக்குகளையும் நாம் வளமாகப் பெற்றிருக்கிறேம். இது தமிழகத்தாருக்குப்பெருமை தருவதுமட்டுமல்ல. கீழ்திசைக் கலை, இலக்கிய, நாகரிக வரலாறு காண விரும்புபவர்க்கும் உலகக் கலை, இலக்கிய, நாகரிக வரலாறு காணவிரும்புபவர்க்கும் விலைமதிக்க முடியாத ஒருபெருங்கருவூலமாகும். ஆயினும் இவற்றிலும் முற்பட்டன. சீரியனவற்றை இழந்துவிட்டோம், இழந்து வருகிறேம் என்பதில் ஒரு சிறிதளவும் ஐயமில்லை. மேலே காட்டிய பிறமொழிநிலைகள், கிடைத்த ஏடுகளின் சிதைந்த அரைகுறை நிலைகள், சிதைவு ஆகியவையே இதற்குப் போதிய சான்றுகள் ஆகும்.

தவிர, உரையாசிரியர்கள் மேற்கோள்கள், குறிப்புக்களிலிருந்துமட்டும் தெரியவரும் பெயர்தெரிந்த இறந்துபட்ட ஏடுகள் ஆயிரத்துக்குக் குறையாதவை என்று பெயர் விவரப்பட்டியலுடனே அறிஞர் சீனி வெங்கடசாமியவர்கள் 'செந்தமிழ்ச்செல்வி' எனும் திங்களிதழ்வாயிலாகத் தெரிவித்துள்ளனர். இவையும் அவர் கண்ட அளவில், பெயர் குறிப்பிட்ட நிலையில் தெரிந்த ஏடுகளின் எண்ணிக்கைமட்டுமே. பெயர் குறிப்பிடப்படாமலும் அவர்

காணமலும், தெரியாமலும் தடமற்றுப் போனவை இன்னும் மிகபலவாயிருத்தல் வேண்டும். மற்றும் சிலப்பதிகார உரைக் குறிப்புகள், கல்வெட்டுகளின் குறிப்புக்கள், பிறமொழிகளிலுள்ள இடைக்கால, பிற்காலப் புத்தசமண இலக்கியங்களின் குறிப்புக்கள், தமிழிலேயே யுள்ள சீபுராணம் முதலிய பிற்காலச் சமண ஏடுகளில்வரும் மிகப் பழமைவாய்ந்த தமிழ் இராமாயண பாரத மேற்கோள்கள் ஆகியவற்றைநோக்கினுல் அழிவின் பார அளவும், அழிவின் திசையும் பண்பும் தெளிவாகத் தெரியவரும். தமிழைப் பொறுத்த வரையில் நம் கையில் கிட்டியுள்ளவை அளவிலும் தரத்திலும் கைம்மண்ணளவு, நம் கைக்கு வந்தெட்டாமல் இழக்கப்பெற்றவையே மண்ணுலகளவு என்று கூறலாம்.

கிட்டத்தட்ட அழிந்துபட்ட அல்லது அழிந்துபட் இருந்த நிலையில், தமிழர் முற்றிலும் மறந்து மரபிழந்து விட்ட நிலையில் எங்கோ சில இன ஆர்வலரால் மீட்கப்பட்டவையே இன்று நமக்குக் கிட்டிய சங்க இலக்கியமும் சிலம்புமேகலைகளும் என்று கூறும்போது, நம் இடைக்காலத் தமிழர் அடிமை மடமை, மிடிமையிருளின் ஆழம் ஓரளவு புலனுகும். தம்மையும் தம் மரபையும் இனத்தையும் இனத்தின் பெருமையையும் மறந்து இவ்வளவு காலம் வாழ்ந்த வேறு மனித இனம் உலகில் எதுவுமில்லை!

அழிந்தனவற்றில் வருங்காலத்தில் இன்னும் சில பல மீட்கப்படக்கூடுமானுலும் அழிந்தனவற்றில் பெரும்பாலன அழிந்தனவாக ஒழிந்தவை என்றே நாம் அஞ்சத் தகும். மீட்கத்தக்கனவற்றை மீட்கக்கூடத் தமிழனுக்கு ஓர் உரிமைத் தேசிய ஆட்சியும் வாழ்வும் வந்தாகவேண்டும். அத்தகைய அவலநிலை இன்றும் ஆட்சியிலிருந்து வருகிறது.

*அணிமையில் தென்றல் வார இதழில் வெளிவந்த அழிந்துபட்ட ஏடுகளின் பட்டியல் இங்கே தரப்படுகிறது. இடைக்கால, பிற்கால, அணிமையில் பல ஏடுகள்கூட அழிந்து வருகின்றன என்று இது எச்சரிக்கிறது.

## 13. மண்ணில் கிடக்கும் மாணிக்கங்கள்

இங்கிலையிலும் தமிழில் பேரளவிலும், மற்றத் தென்னக மொழிகளில் ஓரளவும் நாம் குப்பையிடையே குண்டுமணிகளாக, வண்டல்களிடையே வண்ணக்கண்ணாடித் துண்டுகளாகப் பல நல்லேடுகள் கைவரப் பெற்றிருக்கிறோம் என்பது உறுதி. இனமலர்ச்சி யவாவுபவர்கு நற்பேருக இதனிலும் வியப்புடைய செய்தி ஒன்று உண்டு. இக்குண்டுமணிகளிடையே குண்டுமணிகளாக மதிக்கப் பட்டுப் பல பவள, மாணிக்கப் பாளங்களே நம்மைவந் தெட்டியுள்ளன. அதுபோலவே வண்ணக் கண்ணாடித்

* தென்றல் (1958 ஜூலை 12உ இதழ் 1 மலர் 5) இதழில் (5-8-ஆம் பக்கத்தில்) அறிஞர் என். சிவம் பி. எஸ். சி. அவர்கள் ஆரியரால் அழிக்கப்பட்ட தமிழ் நூல்களின் சுருக்கமான அகரவரிசைப் பட்டியலாகத் தருவதுவருமாறு:

அடிநூல், அணியியல், அவிநயம், அபினந்த மாலை, ஆசிரியமாலை, ஆசிரியமுறி, ஆனந்தவியல், இளந்திரையம், இந்திரகாளியம், ஐந்திரம், ஓவியநூல், கடகண்டு, கணக்கியல். கலியாணகாதை, களவுநூல், கவிமயக்கிறை, கலைக் கோட்டுத்தண்டு, காலகேசி, காக்கைபாடினியம், குண்டலகேசி, குணநூல், கோள்நூல், சங்கயாப்பு, சயந்தம், சச்சபுட வெண்பா, சாதவாகனம், சிந்தம், சிற்பநூல், சிறுகாக்கைபாடினியம், சிறுகுரீஇயுரை, சுத்தானந்தப் பிரகாசம், செயன்முறை, செயிற்றியம், தந்திரவாக்கியம், தும்பிப்பாட்டு, தகடூர்யாத்திரை, தாளசமுத்திரம், தாளவகையோத்து, தேசிகமாலை, நாககுமார காவியம், நீலகேசி, பஞ்சபாரதீயம், பரதம், பஞ்சமரபு, பதிறுபடலம்,

துண்டுகளிடையே வண்ணக்கண்ணுடித் துண்டுகளாகக் கருதப்பட்டுச் சில முத்துமணி வயிரப் பதக்கங்களே நம்மிடம் கிட்டியுள்ளன. இவ்வாருக, இடையிருட்காலத்தின் தரமறிந்த அறிஞர்களேயும் அவர்கள் பரிசுகளேயும் விட, அக்காலத்தின் தரமறியா மக்களுக்கும் அவர்கள் திரட்டிய குப்பைகூளங்களுக்குமே நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர்களாகிருேம். இயற்கை, காலத்தின் கோலத்தினூடாகத் தன்தனிச் சீலத்தை இங்கே சிறிது காட்டியுள்ளது என்னலாம்.

## 14. தமிழ் இலக்கிய வரலாறு : திராவிடப் பேரூழி இலக்கியம்

காலமும் இடமும் வென்று, நாடு இனம் கடந்து உலக முழுமைக்கும் முக்காலத்துக்கும் உரிய தென்னவரின் அழியாக் கன்னிச் செல்வம் உலகப் பொதுமறையாகிய

---

பரதசேனுபதீயம், பரிநூல், பல்காப்பியம், பல்காயம், பன்மணிமாலே, பன்னிருபடலம், பாவைப்பாட்டு, பாட்டியன்மரபு, பாட்டுமடை,பெருந்தேவனூர் இயற்றிய பாரதம், புணர்ப்பார்வை, 'புதையல்நூல்,' புராணசாகரம், பெரிய பட்டம், பெருவல்லம், போக்கியம், மணிசாரம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், மந்திர நூல், மயேச்சுரர் யாப்பு, மார்க்கண்டேயர் யாப்பு, முறுவல், முத்தொள்ளாயிரம், மூபெட்டுச் செய்யுள், மூவடிமுப்பது, மோதிரப் பாட்டு, யசோதர காவியம், வச்சத் தொள்ளாயிரம், வஞ்சிப்பாட்டு, வளேயாபதி, வாய்ப்பியம், விளக்கத்தாரி கூத்து, பாண்டியன் தமிழ்ப் பாரதம், திருச்சிராப்பள்ளியந்தாதி, சீர் இராசராசவிசயம், நாடகநூல், வீரநுணுக்க விசயம், குலோத்துங்க சோழர் சரிதை, அட்டாதச புராணம், அருங்லே, விசாகன் தமிழ்ப்பாரதம், பெருவஞ்சி, அந்திகிரி திருமால் சிந்து, காங்கேயன் பிள்ளேக்கவி, வீரமாலே, திருவதிகைக் கலம்பகம், திருவல்லே யந்தாதி. (இப்பட்டியலில் மட்டும் 101 பெயர்கள் உள்ளன).

முப்பால். அதுவே கீழையுலகின் எழுஞாயிறாகத் திராவிடர் வரலாற்றின் விடியற்போதில் வானவெளி யெங்கும் பாலொளி பரப்பி யுள்ளது. இதனோடொத்த அரும் பெருமை யுடையது தொல்காப்பியம்—அஃது ஓர் இலக்கண நூலாயினும், நம் கைவராது மாண்ட ஒரு பெரும் பேரிலக்கிய இலக்கணப் பரப்புக்கும், கிட்டத்தட்ட மறைந்து அல்லது மரபு கெட்டு மறுகிவிட்ட ஒரு பழம் பெரு நாகரிகத்துக்கும் உரிய சீரிய சான்றாய் விளங்குகிறது. முத்தமிழ்க் காப்பியமாம் சிலம்பும் இவ்விரண்டுக்கும் ஒரு சிறிதும் குறையாத பழந்தமிழர் கலைவாழ்வின் மங்கா ஓவியமாகத் திகழ்கின்றது. தமிழ் முத்தமிழ்ப் பண்பாயிருந்த காலத்திற்கு இஃது ஓர் அழியாச் சான்று ஆகும்.

தனிப்பெருங் கலையேடுகளான இம்மூன்றும் தரும் காட்சிகளை நமக்கு நிறைகாட்சியாக்கிக் காட்டும் ஒரு முழு உலக நிழற்படம் சங்க இலக்கியம். முப்பால் நூல் அதன் ஒரு பகுதியாகவும், தொல்காப்பியம் அதன் மூல முதலாகவும், சிலம்பு அதே காலத்துக்குரிய ஓர் ஏடாகவுமே நம்மிடம் வந்துள்ளன. அத்துடன் சங்க இலக்கிய ஏடுகள் துண்டு துணுக்குத் திரட்டாகவே கிட்டியுள்ளன. வாயினும், அந்நிலையிலும் அது தனி நூல்களாகவோ, ஓர் ஊழி இலக்கியப் பகுதிகளாகவோ மட்டும் நமக்கு இன்று காட்சியளிக்கவில்லை. அஃது ஒரு முழு உலக இலக்கியமாக, ஒருநிறை ஊழியின் ஒளி நிழலோவியமாக, ஓரிரு நூற்றாண்டின் அல்லது ஒரு சில தலைமுறைகளின் முழுவரலாறாக, முழு நீள நிழற்படமாக நம்முன் திகழ்கின்றது. அது தமிழகத்துக்கு ஒரு புதையலாகவல்ல, உலகத்துக்கே ஒரு புதையலாகத்தான் நம் கைவந் தெட்டியுள்ளது.

பெரிதும் இவ்வூழியிலேயே பாடப்பட்ட அல்லது தொகுக்கப்பட்ட 2381-க்கு மேற்பட்ட பாடல்கள் இவ்

விலக்கியத் தொகுதியில் இடம் பெறுகின்றன. பாடிய புலவர்கள் 473-க்கு மேற்பட்டவர்கள். அவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் நகரங்களுக்கும், பல்வேறு தொழில் வகுப்புகளுக்கும் உரியவர்கள். அவர்களில் ஆண் பெண் இருபாலாரும் உண்டு. பெண்பாலாரே 31-க்கு மேற்பட்டவர்கள்;இவர்களும் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும், வகுப்புகளுக்கும் உரியவர்கள். இரண்டாயிர ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தில் இன்று போல் எழுத்துவாசனை நூற்றுக்குப் பத்துப்பதினைந்து பேரளவிலும், கல்வியறிவு இன்னும் குறைவாகவும் இருந்ததில்லை என்பதை இங்ஙிலை காட்டுகிறது. அத்துடன் இன்றே போல் கல்வியறிவும் புலமையும் ஓரிருமாவட்டங்கள், நகரங்களிலோ; ஒரு சில இன்பவாய்ப்புடைய உழையாத வகுப்புகளிலோ அடங்கிக்கிடக்கவில்லை என்றும் காண்கிறோம். அன்று கிட்டத்தட்ட நூற்றுக்குநூறாக ஆண் பெண் இருபாலரும் எழுத்தறி வுடையவர்களாலும், எல்லாப் பகுதிகளும் எல்லா நகரங்களும், ஊர்களும், எல்லா வகைத் தொழில் வகுப்புகளும் புலமையில் சரிசம பங்கு கொண்டு முன்னேறியவர்களாக இருந்தனர் என்பதும் தெளிவு. இங்ஙிலை இன்றைய தமிழகத்தில் மட்டுமல்ல, முன்னணி முற்போக்குடையவை என்று கருதப்படும் எந்த மேலைநாட்டிலும் ஒரு சிறிதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது

இதுமட்டுமன்று, நமக்குக் கிட்டியுள்ள அளவிலே சிதைந்த திரட்டு வடிவிலேகூட, சங்க இலக்கியம் தமிழருக்கு விலைமதிக்க வொண்ணுத புதையல் ஆகும். தமிழிலோ, உலகின் வேறு எம்மொழியிலோ இது போன்ற மக்கள் வாழ்க்கைக் கண்ணுடியை, காலத்தின் நிழலோவியத்தை, பண்பாடு, கருத்து ஆகியவற்றின் நிறை மெய்ப் படிவத்தை நாம் எங்கும் காணமுடியாது. தென்னகத்தின்,

மனித இனத்தின் பழம் பண்பாடுகளை அறியவிரும்பு பவர்க்கோ, அது ஈடிணையற்ற மனித இன வரலாற்றுச் சுரங்கம் ஆகும்.

சங்க இலக்கியம் துண்டுத் துணுக்குகளின் திரட்டே யானாலும் அதனுள் நாம் பத்துப்பாட்டு என்னும் நான் மாடக்கூடலைக் காணலாம். அதன் உள்ளுறுப்புக்களாகத் திருமுருகாற்றுப்படை போன்ற தெய்வீக காவியத்தையும், பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பா ணாற்றுப்படை போன்ற வீரகாதைகளையும்; நெடுநல் வாடை, மதுரைக் காஞ்சி, மலைபடுகடாம் போன்ற வீறு மிக்க பெருங்காப்பியங்களையும்; பட்டினப்பாலை, குறிஞ் சிப்பாட்டு, முல்லைப்பாட்டுப் போன்ற கவிதை ஓவியங் களையும் பெற்றிருக்கிறோம். இவற்றுக்கு ஒரு சிறிதும் குறையாத வகையில் எட்டுத்தொகை என்ற ஒரு பெரிய மதிலக நகரம் அருகே காட்சி யளிக்கிறது. அதில் அக நானூறு, புறநானூறு போன்ற எல்லைக் கோபுரங்களும், நற்றிணை என்ற வாயில் மண்டமும், பரிபாடல் என்ற ஓவியக்கூடமும்; கலித்தொகை, குறுந்தொகை என்ற பெரிய சிறிய ஆயிரக்கால் மண்டபங்களும்; பதிற்றுப் பத்துப் போன்ற வீர காவியச் சாலைகளும், ஐங்குறுநூறு என்ற சித்திரச் சோலையும் கண்காணக்காட்சிகளாக இயல்வன ஆகும். இவையன்றி முப்பால் என்னும் பேரொளிக்கதிரவன் மாடத்துடன் இணைக்கப்பட்ட நிலா மாடமாக நாலடியையும், விண்மீன் காட்சிசாலைகளாக முதுமொழிக் காஞ்சி, நான்மணிக்கடிகை, ஏலாதி, திரிகடுகம், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, பழமொழி நானூறு ஆகிய பிறவற்றையும் நாம் பதினெண்கீழ்க் கணக்கு என்னும் தொகுதியாகப் பெறுகிறோம். முழுப்பாலான முப்பாலுடன்

வரிசைப்படுத்தப்பட்ட சிறுபால் ஏடுகளாக அவை திகழ்கின்றன.

சங்ககாலப்பண்பு நிறைந்து பெரும்பாலும் சங்ககாலத்திலேயே பாடப்பட்டதாக முத்தொள்ளாயிர மென்னும் ஒப்புயர்வற்ற முத்துமணி மாலையும் சிதைவுற்ற ஒரு சிறு துண்டாக நமக்குக் கிடைத்துள்ளது. முழு நூல் 2700 வெண்பாக்கள் அடங்கியதா யிருந்திருத்தல்வேண்டுமென்று சிலரும், 900 வெண்பாக்களே அடங்கியதாயிருந்திருக்க முடியுமென்று சிலரும் வாதாடுகின்றனர். ஆனால் நமக்குக் கிடைத்திருப்பது நூற்றுக்குச் சற்று மேற்பட்ட மணியுருக்களே—மாலை முழுவதும் அல்ல. மாலை எவ்வளவு பெரிதோ, எவ்வளவு சிறிதோ—இன்றிருக்கும் நிலையில் நாம் அறிய வழி இல்லை.

சிலம்போடொத்த இணைகாப்பியம் மணிமேகலை. இது துறவுக்கு மனித உணர்வூட்டி, அதை வள்ளுவத் துறவு நிலைக்கு—தெய்வத் துறவு நிலைக்கு உயர்த்திக்காட்டுகிறது. இவ்விரண்டுடன் அணியலங்காரக் களஞ்சியமாம் சிந்தாமணியையும், பெயரளவிலன்றி முழு உருவில் நமக்கு வந்து எட்டாத குண்டலகேசி, வளையாபதி ஆகியவற்றையும் சேர்த்துத் தமிழர் தம் ஐம்பெருங்காப்பியக் கோட்டையாக வகுத்துள்ளனர். அத்துடன் சிதைவுற்றுத் துண்டு துணுக்காகவே நமக்குக் கிடைத்துள்ள பெருங்கதை என்ற பெருங் காப்பியத்துடன், சூளாமணி, யசோதர காவியம், நீலகேசி ஆகியவற்றையும், பெயரளவிலேயே நமக்கு வந்தொட்டியுள்ள நாககுமார காவியத்தையும் இணைத்து அவற்றுக்கிணையான ஐஞ்சிறு காப்பியச் சிற்றரண்களாகவும் அமைத்துள்ளனர்.

மூவரசர் ஊழி என்று குறிக்கத்தக்க தமிழர் உயர் பெருவாழ்வுக் காலத் திராவிட இலக்கியம் இதுவே.

தமிழ் மொழிக்கு இவை தனிச் சிறப்பளிப்பவை. ஆயினும் பண்பாட்டு முறையில் தமிழுக்கு மட்டுமேயன்றித் தென்னக மொழிகளுக்கெல்லாம் பொதுவான மூல இலக் கியம், திராவிட இலக்கியம் என்று இக்கால இலக்கியத் தைக் குறிப்பிடலாம். ஏனெனில் மற்றத் திராவிட மொழிகளிலும் காப்பியங்கள், இலக்கியப் பகுதிகள் உண்டானாலும், திராவிட மொழியின் சார்பான திராவிடக் காப்பியமோ, திராவிட இலக்கியமோ, இத்தொகுதிக்கு வெளியே தமிழிலும் மிகுதி இல்லை. பிற. மொழிகளிலும் மிகுதி கிடையாது.

## 15. பக்தி ஊழி, வீரகாவிய ஊழி இலக்கியம்

தமிழகத்தின் பக்தி ஊழி கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் தொடங்கி 18, 19-ஆம் நூற்றாண்டுவரை இயங்கிற்று. அதன் முதல் அலை தமிழக அலை. தமிழகத்தில் 12-ம் நூற் றாண்டுவரை வளர்ந்து தளர்வுற்ற பின் அது புது வேகத் துடன் தென்னகமெங்கும், வடதிசைச்சிந்து கங்கை வெளி யிலும் 19-ஆம் நூற்றாண்டுவரை கிளர்ந்தெழுந்து வீசிற்று. இப் பேரியக்கத்தின் முதலலையின் முதல் வீச்சுக்குரிய தமி ழிலக்கிய ஏடு திருவாசகம். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்றும், 'மனங்கரைத்து மலங் கெடுக்கும்' வாசகம் என்றும் புகழப்பெற்றுள்ள பாமாலை இது. இதைப் பாடிய மாணிக்கவாசகரின் மற்றோர் அரும் படைப்புத் திருக்கோவையார். இது பக்தியுடன் காதலை இணைத்த ஓர் அழகிய இலக்கியப் பூங்கா. பண்பால் பக்தி யூழிக்குரியதாயினும் காலத்தால் திராவிட இலக்கிய ஊழிக்கேயுரிய இவ்வேடு தமிழின் முதற் கோவையாகக் கருதத்தக்கது. அத்துடன் தமிழின் துறைக்காப்பியங்க ளிடையே இது காலத்தாலும் பண்பாலும் முதன்மை யுடையது.

திருநாவுக்கரசு, ... பண்பு
M.A. (தமிழ்) M.A. (...)
M. Litt.



உயர் பெருவா[illegible]டுத்த பெருவாழ்வுக்காலச் செல்வங்களில் தேவார திருவிசைப்பாக்கள், பட்டினத்தார் பாடல்கள், திருவாய்மொழி உள்ளிட்ட திருநாலாயிரம் ஆகிய பக்திப் பாசுரங்கள் பேரிடம் வகிக்கின்றன. இவை முந்திய ஊழிசார்ந்த மணிமேகலையின் புத்தர் புகழ்ப் பாசுரங்கள், திருவாசகம் ஆகியவற்றின் மரபில் வந்தவை. கீழையுலகில் கிறிஸ்தவ, இஸ்லாமிய, புத்த சமண, சமயஞ் சாராத பக்திப் பெருவாழ்வுக்குரிய மூலபக்தி ஏடுகள் இவையே. அத்துடன் உலகின் பக்தி யிலக்கியத்தில் இவையே அளவாலும் பண்பாலும் ஈடும் எடுப்பும் அற்றவை.

இக்காலத்தின் இறுதிப் பகுதிக்குரிய சிறந்த பக்தி காவியம் சேக்கிழாரின் பெரிய புராணமென்னும் திருத்தொண்டர் புராணமே. 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவன்' என்று கவிதை யுலகம் போற்றும் புலவர் சேக்கிழார். கதைகளின் பண்பு இடைக் காலச் சாயல்படிந்ததாயினும், அறிவுலகப் பெருங்கவிஞரான இவ்வாசிரியர் பாவியல் பண்பிலும் காவியப் பண்பிலும் பழந்தமிழ் மரபு கெடாமல் பாடியுள்ளார். மற்றும் தமிழ்ப் புராணம் என்னும் சிறப்பிலும் பண்பிலும் பிற்காலத் திருவிளையாடற் புராணங்களுக்கு இது முற்பட்டதாக விளங்குகிறது.

பக்தி ஊழியின் இறுதிக்காலத்தில் சங்ககால இலக்கியத்துடன் வைத்தெண்ணத்தக்க பண்பும் பெருமையும், அவற்றிலும் அரிதாகிய வீறும் எழுச்சியும் உடைய வீர வரலாற்றுக் காவியங்கள் சில எழுந்தன. பக்தியூழியிலேயே சோககாப்பிய உருவில் நந்திக்கலம்பகம் முதல் வரலாற்றேடாகத் திகழ்கிறது. ஆனால், கலிங்கத்துப்பரணி, மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் ஆகியவை வீரகாவிய ஊழிக்குரியவை என்று தனியாக

வகுக்கப்படத்தக்கவை. இவை வடிவில் துறைக்காப்பி யங்களாக அமைந்தாலும் பண்பில் வீரகாவியங்களே யாகும்.

## 16. செயற்கைக் காப்பிய ஊழி

பண்பூழி, பக்தி ஊழி, வீரகாவிய ஊழி ஆகியவை கடந்தபின் மேல்வாளெளி வண்ணமாகச் செயற்கைக் காவியங்கள் எழுந்தன. இவை காவிய இலக்கண வரம்பு கடந்த அளவும் வடிவும் உடையவை; இலக்கணமில்லாக் கற்பனை செறிந்தவை. ஆனால், இவற்றுள்ளும் கம்பன் கதை வில்லோசை ஒத்த ஒரு சொல்லோசைச் செல்வம். வில்லிபுத்தூரார் கதையோ ஓவிய வடிவான ஓர் உயிர்ச் சித்திரம். இவ்விருவரும் செயற்கைக் காவிய, புராண ஊழியைச் சார்ந்தவர்கள், அதைத் தொடங்கி வைத்த வர்கள், வளர்த்தவர்கள். ஆனால் முந்திய ஊழிகளின் புகழொளிச் சாயல் அவர்கள்மீது படர்ந்து அவர்களைத் தனிப்படுத்தியுள்ளது. பிந்திய ஊழியின் குறைபாட்டை அவர்களிடமிருந்து இது மறைக்கிறது. கவிதையாற்றலில் குறைந்தவர்கள் கையில் புகழொளிச் சாயல் மறைந்தது. குறைபாடே எஞ்சிற்று. கவிஞர் தொடங்கி வைத்த மரபு பின்னாட்களில் கவிராயர் மரபாக மின்னி மினுங்கிற்று.

செயற்கைக் காவிய ஊழி கவிராயர் ஊழியாகுமுன் வாழ்ந்த மற்றொரு சிறந்த கவிஞர் 'நளவெண்பா' இயற்றிய புகழேந்தி. 'வெண்பாவில் புகழேந்தி' எனச் சிறப்பிக்கப்படுபவர் இவர். இப்பெயர் இன்றளவும் நிலைத் துள்ளது. என்றும் நிலைக்கத்தக்கதே. ஆயினும் கம்பர், வில்லிபுத்தூரார்போலவே இவரும் செயற்கை ஊழிக்குத் தப்பியவர் அல்லர். முற்கால முத்தொள்ளாயிரத்துடனே, நாலடியாருடனே, பிற்கால அவ்வையாருடனே கூட ஒப்பிட்டுப் பார்த்தால் அவர் வெண்பாவின் செயற்கைச் செவ்வி புலனாகாமல் போகாது.

பள்ளிப் பாடல்களான ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலக நீதி, மூதுரை, நல்வழி ஆகியவை இயற்றிய பிற்கால அவ்வையார் இக்காலத்தை ஒட்டி வாழ்ந்தவரே. காலத்தாலே பிற்பட்டவராயினும் தமிழுக்கு இவர் அளித்த சிறப்புச் சிறிதல்ல. உலகுக்கு வள்ளுவர் அளித்ததைத் தமிழகச் சிறுவர் உலகுக்குச் சிறு மணிகளாகத் தந்த பெருமை இவருக்கே உரியது. இவர் வெண்பாக்களும் நாலடி, முத்தொள்ளாயிரம் ஆகியவற்றுடன் வைத்தெண்ணத்தக்க பெருமை சான்றன.

## 17. புராண ஊழி

புராண ஊழியில் மதுரைத் திருவிளையாடற் புராணங்களைத் தலைமையாகக் கொண்ட தலபுராணங்கள், சமயச்சார்பான பல துறைக் காப்பியங்கள் பெருகின. ஆனால் இதே காலத்திலேயே 16-ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டை ஆண்ட சிற்றரசர்களான வரதுங்கராம பாண்டியன், அதிவீரராம பாண்டியன் ஆகியோர் தலபுராணங்களிலும் செயற்கைக் காவியங்களிலும் ஒரு புதுமலர்ச்சி யூட்டினர். அதிவீரராமனது நைடதம் கம்பன் கற்பனையும் கடந்த செயற்கைத் தன்மையுடையதாயினும், சிந்தாமணி யொத்த விழுமிய இனிமையுடையது. நைடதம் 'புலவர்க் கௌடதம்' என்ற பிற்காலப் பழமொழி இதனை வலியுறுத்தும். அவ்வையார் பள்ளிப்பாட வரிசையில் இவர் பாடிய வெற்றிவேற்கை அவ்வையார் பாடல்தானோ' என்னும்படி அருஞ்சிறப்பு வாய்ந்தது. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில், இப்பாண்டியர் மரபே தொடர்ந்து குமரகுருபரர், சிவப்பிரகாசர் ஆகியோர் துறைக்காப்பியங்களிலும், தேவார திருவாசக மரபில் நின்று அருட்பாக்கள் பாடிய, தாயுமானவரும். இராமலிங்க வள்ளலாரும் தமிழிலக்கத்தின் மரபு தொடர்ந்துள்ளனர். 18-ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய

417116


அருட்கவிஞரான உமறுப் புலவரின் சீருப்புராணமும், மேலையுலகக் கலைஞர் வீரமா முனிவர் என்ற மாண திரு. பெஸ்கியின் தேம்பாவணியும், 19-ஆம் நூற்றாண்டில் கிருட்டிண பிள்ளையின் இரட்சணிய யாத்திரிகமும், கம்பன் மரபில் வந்த புதுச் செயற்கைக் காப்பியங்களாகும்.

இவ்வூழியிலேயே திருமூலர் திருமந்திரத்தைப் பின் பற்றிய முற்போக்குக் கருத்துக்களடங்கிய சிவவாக்கியர் பாடல் போன்ற சித்தர் பாடல்களும், சமய அறிவு விளக்கம் நாடிய சைவ சித்தாந்த ஏடுகளும் பழய இலக்கிய இலக்கணங்களுக்குரிய புத்துரை விளக்கங்களும், வீர சோழியம், நன்னூல், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கம், தொன்னூல் போன்ற புத்திலக்கணங்களும் தோன்றின.

894.811
APP

## 18. தமிழகத் தற்கால ஊழி

இன்று மேலை நாகரிகம் உரைநடை இலக்கியத்துக்குப் புத்தூக்கம் ஊட்டி, நாடகம், புனைகதை, சிறுகதை, கட்டுரை போன்ற புதிய இலக்கியத்துறைகளை ஆக்கியுள்ளன. 19-ஆம் நூற்றாண்டிலேயே ஆங்கில நாடகக்கவிஞன் ஷேக்ஸ்பியரைப் பின்பற்றிப் பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணீயம் என்ற அருமையான நாடகம் படைத்தளித்துள்ளனர். முத்தமிழ்க்கடுத்த நான்காம் தமிழாக இயல் நூல்துறைக்குரிய அறிவேடுகளையும், ஐந்தாம் தமிழாகக் கல்வித்துறைக்குரிய பயிற்சிப்பாட ஏடுகளையும் இவ்வூழி தொடங்கிவைத்துள்ளது. எல்லாத் துறைகளிலும் செயல் தேர்வாராய்ச்சிகள் ஊக்கப்பட்டுள்ளன.

கவிதைத் துறையில் சித்தர்களின் மக்கட் பாடல் முறை பின்பற்றியும், மக்கள்வாழ்க்கையையே கருப்பொருளாகக் கொண்டும் பாரதி, பாரதிதாசன் ஆகியோர் புதிய புரட்சி இலக்கியம் யாத்துள்ளனர். அப்புரட்சியின் புற

...EMAR... PUBLIC LIBR...

எல்லை நின்று நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் சமுதாயக் கவிதையும், புத்தேரி தேசிகவிநாயகனார் கலைப்பண்பு ததும்பும் பாடல்களும் ஆக்கியுள்ளனர். உரை நடைத் தந்தை எனப்படும் வேதநாயகம்பிள்ளை 19-ஆம் நூற்றாண்டிலும், அவரைப் பின்பற்றிச் செல்வகேசவராய முதலியார் நமச்சிவாய முதலியார், மணி திருநாவுக்கரசு முதலியார் ஆகியோர் உரைநடை வளம்பெறச் செய்துள்ளனர். ஆசிரியர் மறைமலையடிகளும் திரு. வி. கலியாணசுந்தரனாரும், மறுமலர்ச்சி ஊழிக்கு வழிகாட்டிய ஊழிமுதல்வர் ரா. பி. சேதுப்பிள்ளையும், கலைமுனைவர் மு. வரதராசனாரும், முனைவர் இராசமாணிக்கனாரும், இவர்களின் மரபில் எண்ணற்ற எழுத்தாளரும் பேச்சாளரும் தமிழை மீண்டும் உயிர்மொழியாக்கிப் பல துறைகளிலும் பயில விட்டுள்ளனர்.

புதிய உரைநடை, புதிய கவிதை, புதிய கருத்துகளுடன் அறிஞர் சி. என். அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன் போன்ற எண்ணற்ற புத்துயிர்க்கலைஞர்களும் அவர் மரபினர்களும் நாடக திரைப்பட உலகில் புரட்சிகரமான கலைவளர்ச்சி கண்டுவருகின்றனர், சிவஞான கிராமணியார், சஞ்சீவி போன்றவர்களின் வரலாற்று முனைப்புத் தமிழக எழுத்துலகுக்குப் புதிய ஓட்டம் தந்துள்ளது. பத்திரிகைகள் கல்வியறிவையும் கற்றறிந்தவர்களுக்கும் அறியாதவர்களுக்கும் பொது உலக அறிவையும் கலையுணர்வையும் இன எழுச்சியையும் தூண்டிவருகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் காலில் மறுமலர்ச்சி உயிர்மலர்ச்சியாக எழுந்தது, மூன்றாம் காலின் தொடக்கத்தில் புதுமலர்ச்சியின் முதல் அலையாக வீசிவருகின்றது. பத்திரிகைகள் தமிழகத்தில் இவற்றில் கொண்டுள்ள பங்கை அவற்றின் எல்லையற்றவளர்ச்சியே காட்டு

கின்றன. தமிழுலகில் நாளிதழ்கள் பதின்மூன்றுக்கு மேற்பட்டவை. வாசகர் தொகையில் நாளிதழ்களும் வார இதழ்களும் ஆசிய மொழிகளிலேயே முதலிடம் பெற்றுள்ளன; உலக மொழிகளிலும் அவை முன்னணியிடம் பெற்று வருகின்றன.

புனைகதைகள், சிறுகதைகள், ஓரங்க நாடகங்கள், கட்டுரைகள் பத்திரிகை உலகில் பரவிவருகின்றன. வருங்காலத் தமிழ் இலக்கியத்தில் அவை இன்னும் பெரும் பேரிடம் பெறத்தக்கவை.

தமிழகத்தில் மாணவ இளைஞர் நங்கையர் ஆகியோரின் தமிழ்ப் பற்றார்வமும் இன எழுச்சி யார்வமும் மறுமலர்ச்சிப் பருவத்தின் அடக்கவொண்ணாக் கிளர்ச்சியாகப் பீறிட்டெழுந்து, புது மலர்ச்சியாக நாற்றிசையும் பரவிப் புத்தாக்கத்தையும் புதுப்படைப்பையும் தூண்டி வருகின்றன. இன முதல்வர், இன அறிஞர், இனக்கலைஞர் ஆகியோர் இவற்றைப் புத்துலகவள நோக்கிச்செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவர். வரலாற்றறிவு இலக்கிய உணர்வு, கலையார்வம், இனப்பண்பாட்டின் விளக்க அறிவு ஆகியவை இவ்வகையில் இன்றியமையாது வேண்டப்படுவன ஆகும்.

## 19. தமிழ்சூழ் தென்மொழி வாழ்வு

தமிழடுத்த தமிழ்இன மொழிகளின் தமிழ், தொடங்கிய இடத்திலேயே தொடங்கி யிருத்தல் வேண்டும். இதுவே இயல்பு என்பதை எவரும் ஏற்பர். ஆனால் அவற்றின் பிறப்பும் இளமையும் ஒன்று, தமிழுடன் இணைந்து ஒன்றுபட்டுத் தனி வடிவில்லாமல் போயிருக்க வேண்டும்; அல்லது பழந்தமிழிலக்கிய மறைவுடன் அவையும் மறைந்து போயினவாதல் வேண்டும். பிந்திய காரணம் ஓரளவு மெய்யானது. என்பதை மேலே

கண்டோம். ஆனால் அது தமிழுக்கும் ஏனைய மொழிகளுக்கும் பேரளவு பொதுவான காரணம் மட்டுமே. அது வேறுபாட்டை முழுவதும் விளக்கப்பயன்படமாட்டாது. ஆகவே மற்றத் தென்னக மொழிகள்—ஒரு வேளை வடதிசைத் தாய்மொழி உள்பட—நெடுங்காலம் தமிழுடன் தமிழாய், ஒரே திராவிட மொழியாய் நீடித்த காலம் இயங்கியிருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. சங்ககால வரலாறு இதைப் பேரளவில் மெய்ப்பிக்கிறது. ஏனெனில் இன்று நான்கு மொழிகள் பேசப்படும் இடங்களிலும் அன்று தமிழ் பரவியிருந்தது.

முப்பால், தொல்காப்பியம், சங்ககாலம், தேவார காலம் எனத் தமிழ்வாழ்வு பொதுத்தமிழின வாழ்வாக, அதாவது திராவிட வாழ்வாக ஆயிரத்துக்கு மேற்பட்ட அல்லது ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஒழுகிய பின்பே தமிழிலிருந்து பிரிந்து ஏனைத்தமிழின மொழிகள் தங்கள் தனி வாழ்வு தொடங்குகின்றன. ஆனால் அவற்றின் தனி வாழ்வுகள் வளம்பெருக்கும் தனி வாழ்வுகளேயன்றி ஒற்றுமை கெடுக்கும் தனிவாழ்வுகளல்ல. ஏனெனில் தனி வாழ்வு அவற்றின் நிலையான வாழ்வல்ல—அது திராவிட இனத்தின் இடையிருட்கால அடிமை வாழ்வின் ஒரு கூறேயாகும்.

இவ்வெல்லாத் தென்னக மொழிகளின் இலக்கிய வாழ்வுகளும் தென்னகங் கடந்த இலக்கிய வாழ்வைவிடப் பழமை மிக்கவை, வளமிக்கவை. அத்துடன் தமிழ்மொழியடுத்த தென்மொழி வாழ்வுகளில் தமிழின் ஆற்றலால் பழமையும் வளமும் பெருக்க முற்றிருப்பது போலவே, வடதிசை மொழிகளில் தென்னகமடுத்த மொழிகளிலேயே அவை தழைக்கக் காண்கிறோம். ஏனெனில் தென்மொழி இலக்கிய வாழ்வின் பெரும்பகுதியும் வடதிசை

இலக்கிய வாழ்வு முற்றிலும் தமிழகப் பக்தி இயக்கத்தின் விளைவுகளேயாகும்.

தமிழ்,கன்னடம்நீங்கலான தென்னக,வடதிசைமொழிகள் எல்லாவற்றிலும் முதல் இலக்கியமும் முழு இலக்கியத்தின் மிகப் பெரும் பகுதியும் இராமாயண, பாரத, பாகவதங்கள் சார்ந்தனவாகவும் வைணவ சமயஞ் சார்ந்தனவாகவுமே உள்ளன. ஏனெனில் தமிழகப் பக்தி இயக்கத்தின் சைவ வைணவக் கூறுகளில், வைணவக் கூற்றின் அலையே 12-ஆம் நூற்றாண்டிலிருந்து இமயம்வரைவீசிற்று. அந்த நூற்றாண்டிலிருந்துதான் தமிழ்,கன்னடம் நீங்கலான தென்திசை, வடதிசைத் தாய்மொழிகள் யாவும் இலக்கிய வாழ்வு பெறுகின்றன. ஆனால் அதன் சைவ அலை கன்னட மொழி ஒன்றில் மட்டுமே இடம் பெறுகிறது. தமிழ்ப் பக்தியியக்கத்தின் இரண்டு அலைக் கூறுகளுடன் புத்த சமண இலக்கியப் பகுதிகளுள் ஒரு சிறிதும் உடையது சமஸ்கிருத மொழி. இதனால் தமிழுக்கடுத்தபடி வளமிக்க மொழியாய் அது இயங்குகிறது.

## 20. கன்னட இலக்கியம்

கன்னட மொழியின் இலக்கிய வாழ்வைச் சமணகாலம் (9-12-ஆம் நூற்றாண்டு), வீர சைவ காலம் (12-16-ஆம் நூற்றாண்டு),வைணவ காலம்(16-19-ஆம் நூற்றாண்டுகள்) ஆரிய இந்து மத காலம் (19-ஆம் நூற்றாண்டு) தற்காலம் (19-20-ஆம் நூற்றாண்டுகள்) எனப் பிரித்துக் காணலாம். முதற்காலத்து மொழி பெரிதும் தமிழை ஒத்து இயல்வது, தமிழின் சிறப்பு றகர கழரங்களை உடையது. இம்மொழியையும் மொழிப் பருவத்தையும் கன்னட அறிஞர் ஹளகன்னடம் (பழைய கன்னடம்) என்பர். அடுத்த வீர சைவ காலத்துடன் மொழி ஹொச கன்னடம் (புதுச் கன்னடம்) ஆய்விடுகிறது.

கன்னட இலக்கியத்தின் பழமை சான்ற தலைசிறந்த விஞர்கள் சமண காலத்துக்குரிய பம்பன், பன்னன், இரன்னன் என்ற மும்மணிகளே. இவர்கட்கு இணையாகக் கருதப்படுபவர் நாகச்சந்திரர். தவிர, இப்பழங் காலத்திலேயே சாவுண்டராயர் இயற்றிய சாவுண்டராய புராணம் கன்னடத்தின் பழஞ் சிறப்பு வாய்ந்த உரை நடைக் காவியமாய் இயங்குகிறது.

பாடல் வடிவில் சடாச்சர தேவரின் 'இராசசேகர விலாச'மும், உரையிடையிட்ட பாட்டு அல்லது 'சம்பூ' வடிவில் தேவகவியின் 'குசுமாவதி'யும் புனைகதை இலக்கியமாக இக்காலத்தே எழுந்தன.

பிற்காலக் கன்னடத்துக்குரிய சிறந்த காவியம் இலட்சுமீசனின் ஜைமினி பாரதமே. தவிர, கன்னட இலக்கியத்துக்குத் தனிச் சிறப்புத் தருபவை இக்கால வைணவ பக்தர்களின் பக்திக் கீர்த்தனங்களே. புரந்தர தாஸர் கீர்த்தனங்களும் சிதானந்தர் கீர்த்தனங்களும் இத்துறையில் பேர்போனவை. பழங் காலத்திலிருந்து நாடக மரபில் வந்த இயக்கானம் கன்னட வாழ்வுக்கு ஒளி தருவது. அது இன்று புதுமலர்ச்சி யடைந்து வருகிறது.

பண்டைத் தமிழ் இலக்கியச் செல்வங்களையும், தற்கால வங்க, மராட்டிய, ஆந்திர மறுமலர்ச்சிக் கலை ஏடுகளையும் மொழி பெயர்ப்பதில் கன்னட மொழி பெரு வெற்றி கண்டுள்ளது. ஏனெனில் அவை புத்திலக்கிய ஒளிகளாகவே திகழ்ந்துள்ளன. இவையன்றி மறுமலர்ச்சி புத்தாக்கத்திலும் ஒரு சிறிதும் பின்னடையவில்லை.

தமிழகம் மேற்கொண்டு வரும் புதுமலர்ச்சியில் கன்னடம் கண்டு வரும் பங்கு சிறிதன்று, பெரிது.

தமிழில் சிவவாக்கியரின் பாணியில் முற்போக்குக் கருத்துக்களை எழுச்சிமிக்க எளியமக்கள் நடையில் தந்

துள்ள கன்னடக் கவிஞர் சர்வஞ்ஞர் ஆவர். தெலுங்கில் வேமன யோகி இதே பெருமை சான்றவர் ஆவர்.

## 21. தெலுங்கிலக்கியம்

தெலுங்கிலக்கியத்தில் பழங்கால மும்மணிகள் பாரதத்தைத் தாய்மொழிப் படுத்திய நன்னயர், திக்கணர், எறபிரகதர் ஆகியவர்கள். இவர்களுடன் சரிசமமான மதிப்புடையவர்கள் நைடதம் இயற்றிய சீநாதரும், பக்தி காவியமாகிய பாகவதம் இயற்றிய போதனரும் ஆவர்.

விசயநகரப் பேரரசர் காலமே தெலுங்கிலக்கியத்தின் பொற்காலம் ஆகும். இக்காலப் புலவர் பெயர்களும் காவியங்களும் தொகையில் பல, தரத்திலும் மிக உயர்ந்தவை. விண்மீன்களாக விளங்கிய இவர்களிடையே முனைப்பான ஓர் ஒண்சுடர் மணியாக அமைபவர் அலசானி பெத்தண்ணு என்ற கவிஞர். அவர் இயற்றிய காவியங்கள் மிகப்பல. அணியலங்காரக்கோவைகளாக அவை திகழ்கின்றன.

விசயநகர காலத்திலே காவியங்கள் யாப்பிலும் நடையிலும் சமஸ்கிருதமுறை என்று அழைக்கப்படும் பிற்காலச் செயற்கை முறை தழுவின. தண்டிகாலச் சமஸ்கிருத இலக்கியத்தையும், கம்பர் காலத் தமிழ் இலக்கியத்தையும் இவை பின்பற்றியவை. இம் முறையைத் தெலுங்கிலக்கிய வாணர் 'மார்க்கீ' முறை என்பர். இதற்கு எதிரான முறை நாட்டு மக்களின் பழமையான தாய்மொழி, தாய் இனம் சார்ந்த மரபு ஆகும். இது 'தேசீ' முறை எனப்படுகிறது. இதனைத் தென்மொழிகளில் பொதுவாகத் திராவிடமுறை என்னலாம்—மலையாள மொழியில் இது தொடக்கத்தில் 'தமிழ் முறை' என்றும் இப்போது 'திராவிட முறை'என்றுமே குறிக்கப்படுகின்றன.

'தேசீ' முறை பின்பற்றிய தெலுங்கின் தலை சிறந்த கவிஞர்கள் தென் தெலுங்க நாட்டை ஆண்ட சோட (சோழ) மரபுச் சிற்றரசஞன நன்னச் சோடன் என்ப வரும், படைத் தலைவராக வாழ்ந்த கோனபுத்த ராஜு என் பவரும், வேமன யோகியாருமே ஆவர். நன்னச் சோடனின் நடை கிட்டத்தட்டத் தமிழாகவே உள்ளது. கோனபுத்த ராஜுவின் இராமாயணமும், வேமன யோகியாரின் பாடல் களும் ஆந்திரப் பொது மக்களிடையே வேறெந்தக் கலை யேடுகளையும்விட மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளன.

தற்காலத்தெலுங்கு இலக்கியமறுமலர்ச்சியின் தந்தை எனக் கருதப்படுபவர் வீரேசலிங்கம் பந்துலு என்பவர். இலக்கிய அரங்கத்தின் பழைய, புதிய துறைகள் எல்லா வற்றிலுமே தலைமை தாங்கியவர் அவர். அத்துடன் மொழி, இலக்கியம், சமுதாயச் சீர்திருத்தம் ஆகிய எல்லா வாழ்க் கைக் கூறுகளிலும் ஆந்திரத்தை முற்போக்கு நோக்கி அவர் ஊக்கிவந்தார். அவரை முன்னணியாகக் கொண்ட ஆந்திரத்தின் மறுமலர்ச்சி வேகம் நாலுகால் பாய்ச்சலில் தாவி யோடுகிறது.

புனைகதை, சிறுகதை, கட்டுரை ஆகிய எல்லாப் புதுத் துறைகளையும் தெலுங்கு மொழி திறம்படக் கையாளு கிறது.

## 22. தமிழும் மலையாளமும்

தென்னக மொழிகளில் மைய அடிப்படைத் தள மாகிய தமிழிலிருந்து தெலுங்கு கன்னட மொழிகள் முதலில் இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன் ஒரு வட பெருங் கிளையாகப் பிரிவுற்றது. 'வடுகு' என்று அழைக்கப்பட்ட இவ் வட பெருங்கிளையே கி. பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து தெலுங்கு கன்னடம் என்ற இருகிளைகளாகப் பிரிவுற்றது. கன்னடத்திலிருந்து துளு, குடகு, 'படகம், குறவம்

பிரியத் தொடங்கி உள்ளன, இதுபோலவே தென் கிளை தொடக்கத்தில் எஞ்சிய ஒரே கிளையாகத் தமிழ் என்ற மூலத் தாய் மொழியின் பெயரிலேயே 9-ஆம் நூற்றாண்டு வரை நிலவிற்று. அந் நூற்றாண்டுக்குப் பின்னரே மலையாள மொழி தமிழிலிருந்து பிரிந்து தனி மொழியாகத் தொடங்கிற்று.

இதற்கேற்பத் தமிழின் மிகப் பழம் பேரிலக்கியப் படைப்புக்களான பதிற்றுப்பத்தும் சிலப்பதிகாரமும், சங்க இலக்கியங்களில் மற்றும் பலவும் பக்தி ஊழிக் காலத்தில் சேரமான்பெருமாள் நாயனார், குலசேகராழ்வார் ஆகியோர் பாசுரங்களும் பிறவும் இன்று மலையாள மொழி பேசப்படும் கேரளப் பகுதிக்கு உரியனவாகவே அமைந்துள்ளன. அத்துடன் தொடக்கக் கால மலையாள இலக்கியமும், 18-ஆம் நூற்றாண்டு வரையுள்ள உரை நடை இலக்கியம், கல்வெட்டுக்கள், அரசியல் எழுத்துமூலங்கள் கூட—கிட்டத்தட்டத் தமிழுருவிலேயே காட்சியளிக்கின்றன. தவிர, பழங்கால மலையாள மொழியின் இலக்கியப் படைப்பாளர் தாம் எழுதிய மொழியை மலையாளம் என்றே குறிக்கவில்லை, 'தமிழ்' என்றே குறித்தனர்.

மலையாள நாட்டில் மொழிப் பெயர் தமிழ், மலையந் தமிழ், மலையாமை (மலையாண்மை), மலையாளம் எனப் படிப்படியாகவே தனிப் பெயருடையதாக மாறுகிறது. சமஸ்கிருதம் கலவாத தமிழைத் தமிழர் தனித் தமிழ் என்றழைப்பது போல, அத்தகைய தெலுங்கைத் தெலுங்கர் அச்சதெனுகு (நல்ல தெலுங்கு) என்றும், அத்தகைய மலையாளத்தை மலையாளிகள் பச்ச மலையாளம் (பச்சை மலையாளம்) என்றும் கூறுகின்றனர். கன்னடத்தில் தூய கன்னடத்துக்குத் தனிப்பெயர் இல்லை—ஆனல் சமஸ்கிருதம் கலந்த கன்னடம் சக்கடம் எனப்படுகிறது.

தமிழுருவாகத் தோற்றமளிக்கும் மலையாள இலக்கியப் பகுதியில் இராம சரிதமும் கண்ணச்ச காவியங்களும் முக்கியமானவை. அதே சமயம் அந்நாளைய இலக்கிய நடையுள்ள இயல் தமிழை விட்டு மக்கள் வழக்கு மொழி நடையிலேயே செறுஃசேரி நம்பூதிரி பாடல்கள் இயற்றினார். அவரது கண்ணன் பாட்டு (கிருஷ்ண காதா) கவிதை உணர்ச்சிகளை வண்ண இசை ஓவியங்களாக்கி மக்கள் உள்ளத்தைத் தம் வயப்படுத்துவனவாய் உள்ளன.

## 23. மலையாள இலக்கியம்: இரு பெருங் கவிஞர்கள்

மலையாளத்தின் தலைசிறந்த மாகவிஞர்கள் குஞ்சன் நம்பியார், துஞ்சத்து எழுத் தச்சன் ஆகியோர் ஆவர்.

குஞ்சன் நம்பியார் மக்கள் பேச்சு மொழியையே வீறு மிக்க காவியநடை ஆக்கியவர். அதில் நகைச்சுவையும் வசைச்சுவையும் கலந்து அதற்கு விருவிருப்பு ஊட்டியவர். அத்துடன் கேரளத்தின் சமய, சமுதாய, அரசியல் வாழ்வுகளின் மீதும் சாதி வேறுபாடுகள், மூட நம்பிக்கைகள், குருட்டுப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் மீதும் எல்லாக் கோணங்களிலிருந்தும் பகுத்தறிவொளி பாய்ச்சி அவற்றின் குற்றங் குறைகளை எடுத்துக் காட்டிய முற்போக்கான சீர்திருத்தக் கவிஞர் அவர். அவர் வசைக்கு, கவிதை நையாண்டிக்குத் தேவர்களும் மூவர்களும், முனிவர்களும் மன்னர்களும், பெருமக்களும் பணிமக்களும் எவரும் விலக்கல்லர். அவரையொத்த சமுதாய மக்கட் கவிஞனை மலையாள மொழியில் மட்டுமல்ல, எம்மொழியிலுமே காணல் அரிது. மலையாள நாட்டின் பண்டைக்கால 'விட்டியர்' என அவரைக் குறிப்பிடலாம்.

துஞ்சத்து எழுத் தச்சன் மலையாள மொழிக்குத் தந்தை என்று பலரால் போற்றப்படுபவர். மலையாள

மொழியையே ஆக்கியவர் என்று சிலர் இதைத் தவருகப் புரிந்துகொள்வதுமுண்டு. ஆனல் மலையாள மொழிக்கும் இலக்கியத்திற்கும் மட்டுமின்றி, மக்கள் வாழ்வுக்கும் ஒரு புதிய பாதை வகுத்துக் கொடுத்தவர் அவர் என்பதில் ஐயமில்லை. அகத்தியரை ஆரிய முனிவராக்க முனைந்த ஆரிய மரபு இங்கும் வேலைசெய்ய முயன்றுள்ளது. ஆனல் காலமும் சூழலும் விரைந்து ஆரிய மரபை உண்டுபண்ண முடியாத நிலையைக் கேரளத்தில் தோற்றுவித்துள்ளன. சமஸ்கிருதச் சொற்களை அப்படியே தாய்மொழியில் எழுத உதவும் முறையில் அம்மொழியின் சிறப்பெழுத்துக்களைக் கிரந்த வடிவிலிருந்து எடுத்துத் தற்காலம் உள்ள நெடுங் கணக்கில் சேர்த்தவர் எழுத்தச்சனே என்று கருதப்படு கிறது. அத்துடன் தென்னக அரசியல் சரிவுடன் சரிந்து விட்ட பழைய கல்விமுறையினிடமாகத் திண்ணைப் பள்ளி அமைப்பை உருவாக்கிப் பரப்பிய தென்னகக் கல்விச் சீர் திருத்தவாணரும் அவரே யென்று கேரளப் பேரறிஞர் கருதுகின்றனர். எழுத் தச்சன் என்ற பெயர் இன்னும் மலையாளத்தில் எழுத்தை ஆக்கியவர் (எழுத்து+அச்சன் அதாவது தந்தை) என்ற பொருளும் 'எழுத் தறிவித்த இறைவ'ளுகிய தொடக்கப்பள்ளி ஆசான் என்ற பொருளும் தருவதாகும்.

இலக்கியத் துறையில் எழுத் தச்சன் காலத்தில் கணணஃச்சப்பணிக்கர், செறுஃச்சேரி, குஞ்சன் நம்பியார் ஆகியவர் மரபில் வந்த மக்கட் கவிஞர் ஒருபுறம் தாய் மொழி நடையில் பாடி மக்களிடையே நடமாடினர். மற் ருெருபுறம் உயர்குடி மக்கள் என்று கருதப்பட்டோ ரிடையே சமஸ்கிருதப் பண்டிதர் முழுச் சமஸ்கிருதத் திலோ அல்லது சிறிது தாய்மொழி கலந்த சமஸ்கிருதத் திலோ எழுதி உயர் மதிப்புப் பெற்றிருந்தனர். முன்னது பெரு வழக்காளுலும் மதிப்பிழந்து வந்தது. பின்னது மதிப்

புக் குறைந்து மறுகினும் மக்களால் விரும்பப்பட்டு வந்தது. இரு வேறுபட்ட இந் நிலையினைக் காலத்திற்கேற்ற முறைவகுத்து மாற்றியமைத்தவர் எழுத் தச்சனேயாவர். பேச்சு மொழியாய் மட்டுமே மதிக்கப்பட்டுவந்த மலையாளத்தைச் சமஸ்கிருதத்துடன் போட்டியிட்டு வெல்லத்தக்க காவிய மொழியாக்கி மக்கள் மன்றத்திலே அவர் ஊடாட விட்டார். இதற்காக அவர் தாய்மொழி கலந்த சமஸ்கிருதத்தினிடமாக, சமஸ்கிருதம் கலந்த தாய்மொழியைத் திறம்படக் கையாண்டார். அதே சமயம் யாப்பு முறையில், தெலுங்கர் 'மார்க்கி' என்றழைத்த ஆரிய விருத்த முறையைக்கொண்டு, மக்களிடையே வழங்கிய பழைய திராவிட மக்கள் பாடல் மெட்டுகளாகிய கிளிப் பாட்டு, வஞ்சிப் பாட்டு ஆகியவற்றினிடையே அவ்வீறு நடையைப் பயிலவிட்டு, பண்டிதருக்கும் பாமரருக்கும் ஒருங்கே கிளர்ச்சி யூட்டும் புகழ்க் கவிதை நடை உண்டு பண்ணினார்.

## 24. மலையாள இராமாயணத்தின் மாண்பு

எழுத்தச்சன் காவியங்களில் தலைசிறந்தவை அவரது அத்தியாத்ம இராமாயணமும், பாகவதமுமே யாகும். ஆனால் பண்டித பாமரர் இருசாராருக்கும் ஒருங்கே கனியமுதமாய் விளங்குவது முன்னதேயாகும்!

எழுத்துருவில் முழுமையும் நமக்கு வந்து கிடைத்துள்ள அளவில் கீழ்த்திசைத் தாய்மொழி இராமாயணங்களில் காலத்தால் முந்தியது தென்னகத்தின் முதல் இராமாயணமான கம்பராமாயணமே. அம்முறையில் கடைசியானது தென்னகத்துக்கு வெளியே சிந்து கங்கை சமவெளிக்குரிய துளசிதாசர் இராமாயணம் ஆகும். எனவே எழுத்தச்சன் இராமாயணம் கீழ்த்திசையில் துளசி இராமாயணம் ஒன்றுக்கு மட்டுமே முற்பட்டது. தென்னக இராமாயணங்களுள் கடைசியானதும் அதுவே.

இவற்றுள் கம்பராமாயணம் சமஸ்கிருத வால்மீகி இராமாயணத்தைப்போல இராமனை முற்றிலும் மனிதனுகக் காட்டாவிட்டாலும், தெய்வீக ஆற்றலைப் பின்னணியாகக் கொண்ட மனிதனுகவே காட்டிற்று. கம்பருக்குப் பின் வந்த சமஸ்கிருத அத்யாத்ம ராமாயணமும் துளசி ராமாயணமும் கதைத் தலைவனை முற்றிலும் தெய்வமாக்கிக் காப்பியப் பண்பையே கெடுத்து விட்டன. ஆனல் எழுத்தச்சன் இராமாயணம் துளசி இராமாயணத்தைப் போலப் பெயரளவில் அத்யாத்மராமாயணத்தின் மொழிபெயர்ப்பானுலும், கீழ்த்திசையில் மற்ற எல்லா இராமாயணங்களையும் தாண்டி முழுநிறை காவியப் பண்பை எட்டிற்று. ஏனெனில் அது வள்ளுவ மரபில் நின்று தெய்வீகப் பண்பை மனிதப் பண்பின் நிறைவாக்கிக் காட்டி, காவியப் பண்பு, பக்திப்பண்பு, ஆகிய இரண்டிலும் ஒப்புயர்வற்ற சிறப்புடைய சிறந்த பக்திகாவியமாய், தெய்வ காப்பியமாய் விளங்குகிறது.

இதற்கேற்ப, கம்பராமாயணம் உரைவிளக்கமோ, கதை நடிப்பாளரோ இல்லாத நிலையில், புலவர் மட்டுமே சுவை யுணர்ந்து நுகரத்தக்க இலக்கிய காவியமாகவும், துளசி இராமாயணம் பொது மக்கள் ஆரவாரமாக வரவேற்கும் பஜனைப் பாடல் தொகுதியாகவுமே பெரிதும் விளங்குகின்றன. எழுத் தச்சன் இராமாயணமோ புலவர்க்குச் சிறந்த காவியமாகவும் அதே சமயம் பொது மக்களுக்குக் கிளர்ச்சிதரும் பக்தி வெள்ளப்பெருக்காகவும், இருதிற நிறையுடைய பக்தி காவியமாய் அமைந்துள்ளது.

## 25. தற்கால மலையாள இலக்கியம்

மலையாள மொழியின் அணிமைக்காலப் பெருங் கவிஞர்கள் குமாரனுசான், வள்ளத்தோல் நாராயண மேனேன், உள்ளூர்ப் பரமேசுவர ஐயர் ஆகியவர்கள்.

ஏழை மக்கள், தாழ்த்தப்பட்டவர்களின் காலநிலையையும், கைம்பெண்டிரின் துயரையும் மனித உணர்ச்சி வேகத்துடன் தீட்டி, மலையாள மக்கள் உள்ளத்தை மட்டுமன்றி உலக மக்கள் உள்ளத்தையே ஈர்த்துக்கொண்டவர் குமாரனுசான். புத்தர் பெருமான் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் புத்த தத்துவங்களையும் இதுபோலக் கலை நயம்பட அவர் ஓவியமாக்கியுள்ளார். மலையாள நாட்டின் பாரதிதாசனுக, தென்னகப் புரட்சிக் கவிஞர்களுள் இடம்பெறத்தக்க சீரிய பண்பாளர் இவர்.

உள்ளூர்ப் பரமேசுவர ஐயர் பழம்பண்பாடுகளுக்குப் புத்துயிர் தந்தவர். கவிதையில் மட்டுமன்றி ஆராய்ச்சியிலும் ஈடுபாடுடையவர். திராவிட மொழிகளிடையே மலையாள மொழியின் தனிச்சிறப்புக்களை எடுத்து வலியுறுத்திக் காட்டி, தென்னக அறிவுலகிலேயே மதிப்புப் பெற்றவர்.

இவ்விருவருக்கும் இணையானவர் வள்ளத்தோள் நாராயண மேனேன். பழமை புதுமைகளை இணைத்துத் தேசீய கவிஞராக இவர் விளங்கியதுடன், அரசியல் உரிமைக் கவிஞராகவும் இருந்தவர். பழமையில் பழமைத் திரை கிழித்துப் புதுமைக் கருத்தோட விடுபவர் இவர். தவிர, தமிழுக்கும் மலையாளத்துக்கும் பொதுவான பழைய கேரள நாடக முறையைப் புதுப்பித்துப் புத்துயிர் கொடுத்து, அதைக் 'கதைகளி' என்ற பெயருடன் உலகறியச் செய்தவரும் இவரே.

புத்துலக மொழிகளும் பொருமைப்படத்தக்க நிலையில் மலையாளத்துக்கு ஓர் அரிய ஆராய்ச்சி முறை இலக்கணம் அமைத்துத் தந்தவர் கேரள வர்மா. அவர் அரசர் குடிப் பிறந்தவர். இலக்கிய அரசராகவும் விளங்கினர். கேரள பாணினி என்று பெருமையுடன் அழைக்கப்படும் இச் சீரிய பெரியார், புதிய மலையாள மொழி யறிவுக்கும்

மறுமலர்ச்சிக்கும் தந்தையாய், மலையாள நாட்டின் 'வீரேச லிங்கம் பந்துலு'வாய் விளங்கியவர் ஆவர். மலையாள நாட்டில் மறுமலர்ச்சி இயக்கத்தை எல்லாத் துறைகளிலும் ஊக்கியவர் அவரே.

புனைகதை, நாடகம், சிறுகதை முதலிய துறைகளிலும் பத்திரிகைத் துறையிலும் மலையாளம் தென்னகத்தில் முன்னணியிடமே பெற்றுள்ளது. மறுமலர்ச்சியில் அது நிலம் பாவாது வானளாவிச் சுடர் வாணமாக ஒளி வீசுகிறது என்னலாம்.

## 26 தென்னக மொழிகளின் தனிப்பண்பு

தற்காலத் தென்னகத்தின் மறுமலர்ச்சியில், மேலை மொழிகளின் தூண்டுதல் பொதுவாக ஐந்து மொழி களிலும் காணப்படுகிறது. ஆயினும் இது மேலலை எழுப்பி ஆழ்துயில் அமைதி ஒழிக்கும் புறத் தூண்டுதல் மட்டுமே ஆகும். சிறப்பாக இது புனைகதை, சிறுகதை, கட்டுரை, ஆராய்ச்சி ஆகிய புதுத்துறை, புதிய வடிவங்களை உருவாக்குவதிலேயே பெரிதும் பயன்படுகிறது. ஆனால், இம் மறுமலர்ச்சியின் அகத்தூண்டுதலைப் பொதுவாக மக்கள் வாழ்வில் முற்றிலும் மரபறுது ஊடாடும் திராவிடப் பண்பாட்டிலும், தமிழகத்தில் சிறப்பாக அதன் கண் கூடான இலக்கியச் சின்னமாகக் கிட்டியுள்ள சங்க இலக்கிய வளத்திலுமே காணத்தகும்.

கீழ்த்திசையில், ஆசியாவிலேயே, தென்னக மொழி களின் பழமையும், உயிர் வளமும் குறிப்பிடத்தக்கவை. பழமையில் அணிமை ஆசிய மொழிகள் எவற்றையும் விட, சிறப்பாகச் சிந்து கங்கை வெளியின் மொழிகளைவிட, அவை நூற்றுண்டல்ல, ஆயிர ஆண்டுக் கணக்கில் முற்பட்டவை. உண்மையில் அவற்றுக்கு ஈடான பழமையுடைய ஆசிய மொழிகள் கீழ்க்கோடியிலுள்ள

சீனசப்பான் மொழிகளும், கீழ்த்திசையில் புலவர் வழக்கில் மட்டும் இயங்கிவந்துள்ள சமஸ்கிருதமுமேயாகும்.

தென்னக மொழிகளில் தமிழ் பழமையில் சமஸ்கிருதத்தைவிட நெடிது முந்தியது. ஏனெனில் ஒருமுழு உலக இலக்கியமாக இலங்கும் சங்க இலக்கிய வாழ்வு முற்றுப் பெற்றதன் பின்னரே சமஸ்கிருத இலக்கிய வாழ்வு தொடங்குகிறது. சங்க இலக்கியத்தின் பழமை எல்லையும் சங்க காலத்துக்கு முற்பட்ட இலக்கியத்தின் கால எல்லையும், கணித்து வரையறுக்கப்படுமானால், தமிழ் இலக்கியப் பழமை சமஸ்கிருதத்தை மட்டுமல்ல, சீன, சப்பானிய, இலத்தீன், கிரேக்க மொழிகளுக்கும் மிக முற்பட்டது என்பது தெளிவுபடுவது உறுதி. ஏனெனில் தமிழின நாகரிகம் அறிவற்றினும் மிகப் பழமையுடையது—அவற்றுக்கே தூண்டுதல் தந்த தொல் பழங்கால நாகரிகங்களுடன் தொடர்புடையது, அவற்றுக்கே தலையூற்றாக நிலவியது.

மேலும் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழிலக்கியம், அதே காலத்துக்குரிய கிரேக்க இலக்கியம் சென்றெட்டாத கலைப்பண்பொளியையும், அறிவுப் பண்பின் செறிவையும், நாகரிக முதிர்ச்சியின் தெளிவையும் கொண்டதாய் இலங்கியுள்ளது.

இவ்வாறு உலகின் பழமைமிக்க மொழிகளில் பழமை மிக்க முதன் மொழியாகவும், மாண்ட உயர் தனிச் செம்மொழிகளில் மாளாத ஒரே உயர் தனிச் செம்மொழியாகவும், வாழும் உயிர் மொழிகளிடையே உலகிலேயே மிகமிக நீடித்த வாழ்வும் தளரா உயிர்த்துடிப்புமுடைய வாழ் மொழியாகவும் தமிழ் திகழ்கின்றது; அதுவே தென்னக மொழிகளுக்கும் தென்னகத்தை அடுத்துள்ள தென் ஆசியமொழிகளுக்கும் சமஸ்கிருதத்துக்கும் உயிர்த் தூண்டுதல் அளித்த

மொழி, தன்சுவட்டைப் பல்வேறு வகையில் பல்வேறு மொழிகளின் மீதும் பொறித்துள்ள மொழி. மற்றும் நாம் மேலே குறிப்பிட்டபடி, உலகளாவிய ஒரு பழம் பேரினத்துக்கே அது உயிர்மையமாக இயங்கியது ஆகும். தமிழகத் தொடர்பற்று அவ் வினங்கள் வாடி வதங்கி வீழ்ந்த பின்னும், அந்த அழிபாட்டிலிருந்து புதிய உயிர்க் கிளைகள் பரப்பி மனித நாகரிகச் செடியின் வேர் முதலாகத் தமிழ் இன்னும் உயிர்ப்புடன் உலவுகிறது.

மாண்ட பழங்கால வாழ்வுகளுக்கும் வாழும் இன்றைய இனங்களுக்கும் இடையே தமிழினம் இயற்கையின் காலங் கடந்தியங்கும் ஓர் உயிர்ப்பாலமாய் அமைந்துள்ளது. இதுபோலவே அது இன்றைய வாழும் இனங்களுக்கும் வருங்கால வாழ்வுகளுக்கும் இடையே தொடர்பும், இடையறு வளர்ச்சியும் ஊக்கி இணைக்கும் உயிர்ப் பாலமாக நின்றியங்கும் என்று நாம் திண்ணமாகக் கூறலாம்,

தென்னக மொழிகளின் இலக்கியத்துக்குரிய தனிச் சிறப்பு அவற்றின் இனப்பண்பு, தேசீயப் பண்பே. இதை மொழி, இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றில் மட்டுமன்றி மற்றக் கலைகளிலும் இயல்களிலும்கூடத் தெள்ளத் தெளியக் காணலாம். இனத் தளர்ச்சியும் அயலினப் பண் பாட்டுக் குழப்பமும் ஏற்பட்டு, அதன் பயனாகத் தென்னக மொழியும் வாழ்வும் செஞ்சீர்மை யிழந்து பிரிவுறுவதற்கு முற்பட்டே, இப்பண்புகள் மூலத்தாய் மொழியிலும் வாழ்விலும் செறிந்து, பரவி உயிர்க் கிளை யினங்களிலும் பொங்கி வடிந்து தம் தடம்பதித்துள்ளன.

## 27. தென்னகச் சமய, இயல், கலை வாழ்வுகள்

உலகச் சமய வாழ்வுகளிளெல்லாம் தமிழகச் சமய வாழ்வின் சுவடுகளைக் காணலாம். தமிழகச் சமய அலைகளின் பதிவுகளாகவே அவை கால இடச் சூழலுக்கிசையத்

தனி வளர்ச்சி தளர்ச்சி பெற்றுள்ளன. ஆனால் தமிழகம் தனக்கென ஒரு சமயம், வாழ்க்கைமுறை வகுத்துக்கொண்டுள்ளது. அதன் தனிச்சிறப்பு யாதெனில், பிறபல இனங்களைப் போல அதன் வாழ்க்கை சமயம் சார்ந்து அமைக்கப்படவில்லை. நேர்மாருக, இங்கே வாழ்க்கை சார்ந்தே சமயம் அமையப் பெறுகிறது. இதன் பயனுகத் தென் திசைக்கும் வடதிசைக்கும் உரிய ஒரே பொதுக் கூருன சமயவாழ்வின் துறைகளில் கூட, தென் திசை வடதிசைக்கு ஒரு பொதுக் கூறளித்துவிட்டு, தனக்கென ஒரு தனி வகுப்பு முறை அமைத்துக் கொண்டுள்ளது.

சிவ நெறியில் இது வட நாட்டில் பரவி வேதாந்தமென்று அழைக்கப்படும் மாயாவாதத்துக் கெதிராகச் சைவ சித்தாந்தமாகவும், வைணவ நெறியில் இது போலவே வடதிசையின் வடகலைக் கெதிரான தென்கலையாகவும் திகழ்கின்றது. வடகலை என்பதுகூடத் தமிழகத்தின் வடதிசையிலேயே பிறந்து வடபுலத்தில் ஓரளவு தென்கலையுடன் இணைந்தே பரவியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. வடதிசையிலேயே பிறந்த புத்த சமண நெறிகளில்கூட, தென்னகம் திபெத்துக்கும் சீனத்துக்கும் சப்பானுக்கும் தனித்தனி வகைகளாக, வடதிசை முழுமைக்குமே பெருங்கலவி நெறி (மஹாயானம்) என்ற ஒரு வடகலை வகுத்தளித்து, தென் கிழக்காசியாவில் ஈழம், பர்மா முதலிய பகுதிகளுடன் தானும்தென் கலையாகிய சிறுகலத்தில் (ஹீனயானம்) நின்றுள்ளது. சமணர் சார்பில், வடதிசைக்கு ஒரு வடகலை வெள்ளாடை நெறி (சுவேதாம்பரம்) வகுத்தளித்துவிட்டு, தான் தென்கலை வெற்றுடை நெறியில் (திகம்பரம்) அமைந்துள்ளது.

இந்த எல்லாச் சமய நெறிகளிலுமே பொதுவாக, வடதிசையின் பல தெய்வ வணக்கம், சடங்காசாரமுறை ஆகியவற்றுக் கெதிராகத் தென் திசை ஒருகடவுட் கோட்

பாட்டையும் மனித இனத் தொண்டையுமே சமய ஒழுக்க மாக மேற்கொண்டுள்ளது. ஒழுக்க முறையில் வடதிசை யின் வருண ஆசிரம உயர்வு தாழ்வு முறைக்கும் சாதி ஆசார முறைமைகளுக்கும் மாறாகத் தென்னகம் சமுதாயச் சரிசம ஒழுக்கம், அறிவு அன்பு இன்ப நெறிகளையே வாழ்க்கை ஒழுங்காகப் பின்பற்ற விழைந்துள்ளது.

வடதிசை இவ் இயலுலக வாழ்வின் குறிக்கோளைச் சாவுக்குப் பின்னும் இயற்கைக்குப் புறம்பாகவும் உள்ள ஒரு கற்பனை மேலுலகில் காண விழைந்தது. தென்னகமோ அவ்வேற்றுலகை வெறுத்தொதுக்கி, இவ்வுலக வாழ் வையே வானுலக வாழ்வாக்கக் கனுக் கண்டது, திட்டங்க ளிட்டது. இத்திட்டமே வள்ளுவர் வகுத்த முப்பால் நெறி.

இயல் நூல், கலைத்துறைகளிலும் இந்தத் தெற்கு வடக்குப் பொதுமையையும் அதனை யூடறுத்த வேறு பாட்டையும் காணலாம்.

வான நூலில் வடதிசைக்கு ஒரு பிறைநெறி அளித்துத் தென் திசை கதிரவன் நெறி வளர்த்துக் கொண்டது. இந் நெறியின் இயல் நூலுணர்வளித்த அறிவமைதி கண்டு மேலையறிஞர் வியப்பார்வம் தெரிவிக்கின்றனர்.

மருத்துவ நூலில் தமிழகம் வடதிசைக்கு ஓர் ஆயுர் வேத நெறி வகுத்தளித்துத் தான் சித்தநெறி பின்பற்றிப் பேணிற்று. நாடி நுட்ப முறையை உலகுக் களித்த நெறி இது என்பதை இன்று யாவரும் அறிவர். கீழ்த்திசை யில் உடல் நூலறிவு முழுவதற்கும் இயல் நூலறிவுமுழுவ தற்கும் பெரிதும் அடிப்படையாய் உதவிய நெறி, உலகின் இயல் நூல் துறைகளுக் கெல்லாம் அன்னை யாகிய இயல் நூல் முதுநெறி இதுவே. தமிழக மறுமலர்ச்சிகூட இத் திறையில் இன்னும் மலர்ச்சி தூண்டவில்லை. மறுமலர்சசி அந்த அளவுக்கு இன்னும் உயிர் மலர்ச்சி, புது மலர்ச்சியாக வில்லை என்னலாம். அத்துடன் துறைச் சொற்களில்

புதையுண்ட தமிழ்ச் சித்த மருத்துவ இலக்கியம் பெரிதும் வெளியிடப்படாமலும் வெளியிடப்பட்ட அளவிலும் வெளியாருக்குப் புரியாத நிலையிலுமே இருந்து வருகிறது.

மேலே அறிஞர் கவனத்துக்கு இது கொண்டுவரப் பட்டால், திராவிட வான நூலில் அவர்கள் காணும் சிறப்பை இன்னும் நுட்ப் பிரிவாக இதில் காண்பர் என்பது திண்ணம். நோய்க்குணம், நோய் உறுதி நாடியறுதி, தனிக்குணம், பூண்டுவகை, மலைவளம், கடைச் சரக்கு, நஞ்சு வகைகள், உப்பு வகைகள், முப்பு முறை, வைப்பு முறை, புட முறை, சேர்மானம், ஆயுள் அறுதி, கற்பம், சித்து ஆகிய இம்மருத்துவத் துறையின் கிளைகளுக்குரிய பெயர்களே அதன் பரப்பையும் உயர்வையும் காட்டவல்லன. நோய் நீக்க நிலைகடந்து நோய்த் தடுப்புமுறை, உடல் நலமுறை, ஊட்டமுறை ஆகிய தற்கால உயர்குறிக்கோள் நெறிகளிலும், இவைதாண்டி ஆக்கநலமுறை,பிணி மூப்புச் சாக்காட்டு ஒழிப்புநிலை போன்ற நம் காலமும் கடந்த குறிக்கோள்களிலும் சித்த மருத்துவ அறிஞர் முன்னேறி யிருந்தனர் என்பதைக் கடைசி வகைகளின் பெயர்கள்—கற்பம்,சித்து ஆகியவை காட்டும். உச்சப்படி சித்து. அதில் வல்லவர்களான சித்தர்களால் ஆக்கப்பட்டதனாலேயே தமிழக மருத்துவம் சித்த மருத்துவம் எனப் பட்டது. மருத்துவ உலகில் தத்துவ அறிஞரும் தமிழகத்தில் சித்தர் என்றே அழைக்கப்பட்டதும் இங்கே குறிப்பிடத் தக்கது.

மற்றத் துறைகளில் தென்னகத்தின் தனி முழு நெறி களின் கிளைகளாகவும் கிளை விரிவுகளாகவுமே வடதிசை, கீழ்த்திசை, மேல்திசை முறைகள் வளர்ந்தது போல, யூனானி, ஆயுர்வேதம், தடை நெறி (AlloPathy) ஊக்கநெறி (Homeopathy) முதலிய முறைகள் சித்தர் நெறியின் கற்பம், ஆயுளறுதி, நாடிமுறை ஆகியவற்றின் விரிவு களாகவே வளர்ந்துள்ளன என்பது காணத்தக்கது.

கலைத்துறையில் சிற்றன்ன வாசல், மாமல்லபுரம், எல்லோராக் குகைகள், அசந்தாக் குகைகள் ஆகியவற்றில் காணப்படும் திராவிட முறை ஓவியங்களும் சிற்பங்களும்• தஞ்சைக்கோயில், திருமலைநாய்க்கன் மகால் ஆகியவற்றுள் கட்டுமானங்களும், ஓரளவு அவற்றின் வடதிசை விரிபாடாகிய இரசபுத்திர, முகலாய சிற்பங்களும் தென்னகத்தின் பழமை வாய்ந்த சமயஞ் சாராக் கலைவளத்தின் எஞ்சிய சின்னங்களாக விளங்குகின்றன. எல்லா உணர்ச்சிகளையும் மெய்ப்பாடுகளையும் ஒப்பக் காட்டுதல், எடுப்பு, கிளர்ச்சி, நிமிர்ந்த உருவும் தோற்றமும் ஆகிய சமயஞ்சாராச் சமுதாய வாழ்க்கைப் பின்னணி, சமயத் துறையிலும் புரோகிதச் சார்பாக அல்லது காட்சி கடந்த உலகச் சார்பாகவன்றி மக்கட்சார்பான பின்னணி, மனித உணர்ச்சி நயங்கள்—இவையே தென்னகக் கலையின் தனிச் சிறப்புககள்.

தென்னக வாழ்வின் தனிப் பண்புகளும் இவையே என்று கூறத் தேவையில்லை.

வடதிசை யவன—காந்தாரக் கலையும் வங்கக்கலையும் மனிதவாழ்வின் பொதுநிலை இயல்புகளும் பொதுமக்கள் உணர்ச்சிகளும் விலக்கிய கற்பனை செயற்கைத் தனிநிலையுணர்வே பேணின. இவற்றுக் கெதிரான தென்னகப் பண்பை முனையாக வளர்த்து, மேலைக் கலையுலகின் திசையில், மேலையுலகம் போற்றும் வகையில் அதை வளர்த்தவர் அணிமைக்காலத் தென்னகக் கலைமன்னன் இரவிவர்மா, வடதிசை தென்திசை நேர் முரண்பாட்டை அவர் கலை நன்கு எடுத்துக் காட்டுகிறது. ஏனெனில் மனித உணர்வு தீண்டாத தெய்வ உருவை வடதிசை கற்பனை செய்ய, அவர் அத் தெய்வீக உலகையும் தேவர்களையுமே இவ்வுலக வண்ணமாகத் தீட்டிக் காட்டிவிட்டார். இடைக்காலச்

சிலைகளில் காணப்படும் உயிர்க்களையற்ற உருவுக்குப் பதிலாக, அவர் பொதுமக்கள் உள்ளங்களிலும் கலைஞர் உள்ளங்களிலுமே, தம் உயிரோவிய உருக்களைப் பதியச் செய்து புராண உலகின் மீதே புது வெற்றி கண்டார்.

புராண பக்தர்களின் இல்லங்களையும் பக்திமிக்க அரசர் கோமக்கள் மாடமாளிகை கூட கோபுரங்களையும் இன்று அணி செய்யும் தெய்வ வடிவங்கள் இரவிவர்மா படைத்த இவ்வுலக வடிவங்களே!

## 28. தென்னகத் தெய்விகப் பண்பு

இயற்கையின் சூழலில் கிடைத்தற்கரிய அரும்பெறல் வாய்ப்புக்களை யுடையது தென்னகம். ஆனால் அவற்றைப் பயன்படுத்தித் தென்னகம் வளர்த்துள்ள பண்பு அவற்றைக் கிட்டத்தட்டத் தெய்விகப் பேருக்கி, தெய்விக அரும்பண்பாகவே திகழவைத்துள்ளது.

தென்னகத்தின் தெய்விகப் பண்பு என்று நாம் கூறும்போது, நாம் புராண அடிப்படையான போலிச் சமயவாணரின் தெய்விகப் பண்பு எதையும் குறிக்கவில்லை. ஏனெனில் சமயவாணரின் தெய்விகப் பண்பு இயற்கைக்கும் வாழ்க்கைக்கும் புறம்பானது. அவர்கள் கூறும் தெய்விக ஆற்றலும் செயல்களும் இயற்கைமீறிய தெய்விக ஆற்றல், இயற்கைக்கு முரண்பட்ட தெய்விகச் செயல்கள் ஆகும். தென்னகம் வளர்த்த பண்பு என்றே கூறத்தக்கதாயினும் அது இயற்கை யாண்ட கடவுளின் தெய்வப் பண்பு ஆகும்.

'யாம் தெய்விகப் பிறவிகள்; ஆண்டவனின் உரிமைப் புதல்வர்கள் நாங்களே!' என்று செருக்குடன் தம்பட்டமடித்துக்கொண்ட இனங்கள் உலகில் உண்டு. யூத இனம் இதற்கு ஒரு சான்று.

'ஆளப் பிறந்தவர்கள் நாங்கள். தெய்வம்—ஒன்றல்ல, எத்தனை எத்தனையோ தெய்வங்கள் — எங்கள் கைப்பிடிக்குள் உண்டு. மற்ற இனங்கள் எங்களுக்குத் தொண்டு செய்வதற்காகவே படைக்கப்பட்டன. படைக்கும் கடவுள்கூட எங்களைத் தலையிலும் மற்ற இனங்களைக் காலிலும் பிற உறுப்புக்களிலும் தான் படைத்தார். இதனால் தெய்வ நியதிப்படி, ஆண்டவர் கட்டளைப்படி, உரிமை எங்களுக்கே. எங்கள் கடமை பற்றிப் பேசாமல், தங்கள் உரிமை கோர எண்ணாமல், கடமை செய்து கிடக்க வேண்டியவர்களே மற்றவர்கள். ஆதி மனுநீதி, ஆண்டவன் சாத்திரங்கள் இடும் கண்டிப்பான கட்டளைகள் இவை. இவற்றை மீறினால் இவ்வுலகில் தண்டனை, அவ்வுலகில் பாவத்துக்குரிய நரக வேதனை!'— இவ்வாறு தான்தோன்றிச் சட்டதிட்டம் வகுத்து மனித இனத்தின்மீது அவற்றைச் சுமத்தப் பார்க்கும் இனங்கள் கூட இல்லாமலில்லை. கீழ்த்திசை வாழ்வில் இடையிருட் கால முழுதும், பேரளவில் இன்றும், ஆதிக்கம் செலுத்தி வரும் கீழை ஆரிய இனம் இத்தகையதே.

தமிழினம் இவ்வினங்களைப் போலச் செருக்கியதுமில்லை, தருக்கியதுமில்லை—தம்பட்டமடித்துக் கொள்வதும் கிடையாது. பிற இனங்களின்மீது தன் தனி நலங்களை, குழு நலங்களைச் சுமத்தி அடிமைப் படுத்தவோ, தன் இன எல்லையிலேயே உயர்வு தாழ்வு கற்பிக்கவோ அது என்றும் எண்ணியது கிடையாது.

எனவே தமிழன் தெய்விகப் பண்பு இயற்கை சார்ந்தது. வாழ்க்கையோடிணைந்தது மட்டுமன்று. அது வன்பு அடிப்படையானதன்று, அன்பு அடிப்படையானது. கடவுளை மனித இனத்தின், உயிரினத்தின் தந்தையாக, தாயாகக் கொண்ட தெய்விகப் பண்பு அது. அது தன்னல, தன்னுணவ அடிப்படையானதன்று. பரந்த பொதுநல

உணர்வின் அடிப்படையானது. அனைத்துலகும் உயிரினமும் அணைத்துக்கொள்ளும் எல்லையற்ற பாசம், அதாவது அருள் அடிப்படையானது அது.

'தென்னாடுடைய சிவன்' என்று ஆண்டவனைத் தம்முடனும் தென்னகத்துடனும் தொடர்பு படுத்திக்கொள்ளும் சிவநெறியாளர் தமிழகத்தில் உண்டு. தென் தமிழில் தனிப்பற்றும் ஆர்வமும் கொண்ட ஒரு தென் தமிழ்த் தெய்வமாகத் திருமாலை வணங்கும் திருமால் நெறியாளரும் உண்டு. ஆனால், தென்னகத் தெய்விகப் பண்பு என்பது இத்தகையவர்கள் கூறும் தெய்விகத் தமிழ்த் தொடர்புகள் கூட அல்ல. ஏனெனில் இவர்கள் போற்றும் தெய்விகப் பண்பு ஒரு தீங்கற்ற பண்பு, ஓர் ஆர்வ நம்பிக்கை— அவ்வளவே. அது அவர்கள் தெய்வப் பற்றுக்கும் தமிழ்ப் பற்றுக்கும் நல்ல சான்று ஆகலாம். ஏனெனில் அவர்கள் தெய்வப் பற்றுடன் ,அவர்கள் தமிழ்ப் பற்றும், தமிழ்ப் பற்றுடன் தெய்வப் பற்றும் போட்டியிட்டே இந்தச் சமரசக் குறிக்கோள், கேடற்ற இயல்பான குறிக்கோள் கண்டுள்ளது.

தென்னகத்தின் தெய்விகப் பண்பு இவற்றுள் எதுவுமன்று. அது இயற்கையின் மலர்ச்சி. இனத்தின் இன்கனிவு. காலமும் இடமும் தாய் தந்தையாகக் கொண்டு, உலகளாவி முக்காலம் பரவி வளர்ந்துவரும் மாளாத, தளர்வுறாத, இளநலம் வாய்க்கப் பெற்ற தெய்விகக் குழவி அது.

தென்னகத்தின் இத்தெய்விகப் பண்பை—அதன் அருவாய்ப்பான சாவா வாழ்வு, மாறாக் கன்னி யிளமை, தளராப் பொங்கல் வளம் ஆகியவற்றின் மறைதிறவை—நாம் இயற்கையின் சூழலில், வரலாற்றின் மலர்ச்சியில், இரண்டின் விளைவான இனப் பண்பில் காணலாம்.

உலகப் படத்தில் தென்னகம் நடுநாயமாக அமைந்துள்ளது. உலகின் நிலநெறிகள், கடல் நெறிகள், வான்

நெறிகள் யாவற்றுக்கும் அது நடுநாயகமாக இடம்பெற்றுள்ளது. வரலாற்றில், தொல் பழங்கால நில அமைப்பில் இம் மைய வாய்ப்பு இன்னும் பெரிதாயிருந்தது. வருங்கால வாய்ப்பு வளத்திலும் இதுபோல அதன் நடுநாயகப் பண்பு பெரிதும் செயற்படுவதொன்றே என்பதில் ஐயமில்லை.

தென்னகத்தின் தெய்விகப் பண்பில் இது ஒரு முதற் கூறு, இயற்கைக் கூறு.

நிலவுலகின் வட தென் கோடிகள் கடுங் குளிர் மண்டிலங்கள். இன்றும் என்றும் உயிரினப் பிறப்புக்கோ, உயிரின வளர்ச்சிக்கோ, உயிரின வாழ்வுக்கோ இடம் தராத பனிப்பாழ் வெளிகளாக இயங்குபவை அவை. அவற்றை அடுத்த மித மண்டலங்களோ உயிர் வாழ்வுக்கு இடம் தருபவை மட்டுமே. செயற்கை வாய்ப்புக்களில்லாத விடத்து அவை இயல்பாக அங்கே பிறப்பவையுமல்ல, பல்வகைப் பெருக்க வாய்ப்பு உடையவையும் அல்ல. எனவே உயிரின வளஞ் செறிந்த பகுதிகளாகவோ, புத்துயிர்ப் பெருக்க மலர்ச்சிக்குரிய பகுதிகளாகவோ இவை அமையவில்லை. இவை இரண்டும் கடந்த நிலவுலகின் நடுவளையப் பகுதியாகிய வெப்ப மண்டலமே நிலவுலக வாழ்வில் உயிர் தோன்றுவதற்குரிய இயற்கை வாய்ப்புக்களுடையதாய் இருந்தது. உலகில் இன்றளவும் கூட மக்கள் நெருக்க மிக்க பகுதிகள் இந் நடுமண்டலத்திலேயே உள்ளன.

தென்னகம் இவ் வெப்ப மண்டலத்திலும் நடு மையமாக அமைந்திருக்கிறது.

உயிர்கள் தம் பிறப்பிடம் கடந்து வாழ முடியும். நாகரிகமும் இதுபோலத் தாயகம் கடந்து பரவமுடியும். ஆனால், பிறப்பிடத்திலேயே, தாயகத்திலேயே இரண்டும்

இயல்பாக வளர முடியும், பெருக்க மடைய முடியும், நீடித்து நிலவ முடியும். அங்கேயே இன்னல்களை எதிர்த்து நின்று அவை கடந்து வலிமை பெற இயலும். அவை எங்கு வாழ்ந்தாலும் அதுவே அவற்றின் வாழ்க்கையின் மூல தளம், உயிர் மரபின் துணைஆயிருக்க முடியும். அவை எங்கு வளம் பெற்றாலும், அவற்றின் வளர்ப்புப் பண்ணை, இடையறா மரபுத் தொடர்புக்குரிய உயிர் ஊற்று மூலத் தாயகத்திலேயே அமைய வழியுண்டு. தென்னகத்துக்கு இவ்வாய்ப்புப் பெரிது. ஆனால், அது இயல்பான வாய்ப்பு மட்டுமே. தென்னக மொழி வாழ்வு, தென்னக இனவாழ்வு படைத்துள்ள இனப் பண்பு ஆகியவை இதனை இன்னும் உயரிய பொங்கல் வளம் ஆக்கியுள்ளது.

சேயகங்களில் பரவிய வாழ்வுகளுடன் என்றும் தொடர்பறாது தமிழகம் அவற்றின் வாழ்வு தாழ்வுகளில் பங்கு கொண்டுள்ளது. தன் அனுபவங்களை அவற்றுக்கு அளித்து, அவற்றின் அனுபவங்களைத் தன் அனுபவங்க ளாக்கியுள்ளது. இதன் பயனாகவே தமிழகம் சேயக வாழ்வு தளராமல் பேணும் ஆற்றலும், சூழ்வில் புது வாழ்வு படரவிடும் புத்தாற்றலும் உடையதாய் இயங்கி யுள்ளது, இயங்குகிறது, என்றும் இயங்கவல்லதாயுள்ளது.

இயற்கை யளாவியது தமிழகம். அதன் மூலப் பண்பின் தலையூற்று என்றும் மனித இனமளாவி அதன் துணைப்பண்பு வளத்தில் குளித்து, அப்புதிய துணையூற்றுக் களின் வலிமையால் என்றும் தளரா இளநலமும் வளர்ச்சி யாற்றலும் பெற்றுக் கால இடம் கடக்கும் திறம் வளர்க் கிறது. நாள்தோறும், ஊழிதோறும் அது புத்துயிர் வளம் வழங்கித் தானும் வளம் பெற்று என்றும் எல்லையற்ற நிறை நீள்வளம் நோக்கி வளர்ந்துகொண்டே யிருக்கிறது.

உலகளாவிய இத் தென்னகப் பண்பு இயல்பாக அமைந்து வளர்ந்த ஒன்றுதான்—ஆனால், அது திடுமென

ஒரு நொடியில், ஓர் ஆண்டில், நூற்றாண்டில், ஒரு சில நூற்றாண்டுகளிலோ, ஆயிர ஆண்டுகளிலோ கூட ஏற்பட்ட தன்று. அது முயற்சி யில்லாமல் உண்டுறங்கி வாழும் ஓர் இனத்தில் வளர்ந்ததுமன்று. அது இயற்கை யின்—நிலவுலகின்—எல்லையற நீண்ட பரப்பில், எல்லையற நீண்ட வரலாற்றில், உயிரினங்களும் மனித இனமும் ஒருங்கே இணைந்து தம் வாழ்வு தாழ்வுகளின் பயனைப் பெற்ற அனுபவ முதிர்ச்சியின் செறிவேயாகும்.

## 29. தெய்விகப் பண்பின் மறைதிறவு

பழமையில் பழமை, புதுமையில் புதுமை—உலக ளாவிய நிலை, தனித்தன்மை—இயல்பான, இயற்கையோ டொட்டிய வாழ்வு, அதேசமயம் இடைவிடாது தொடர்ந்த முயற்சி மரபு ஆகிய இத்தகைய இருமைகளின் இணை விலேயே தென்னகத்தின் தெய்விகப் பண்பு, மாறா இளமை நிலை அடங்கியுள்ளது. இயற்கையில் அரும் பெறல் வாய்ப்பான இப்பண்பு எவ்வாறு தென்னகத் துக்கு மட்டும் வந்து வாய்த்தது என்று எவரும் இந் நாளில் கேட்காமல் இருக்க முடியாது—இந்நாளைய தமிழர், தமிழார்வம், தமிழின மலர்ச்சி அவாவுபவர் கேட்டே யாகவேண்டும், கேட்டு விடை கண்டே தீரவேண்டும்!

இயற்கையில் உயிர் வாழ்வே இத்தகைய அருவாய்ப் புக்களின் அருந்தொடர்புதான் என்பதைப் பலர் கவனித் திருக்கமாட்டார்கள். சாவிடையே பிறந்து வாழ்வது உயிர், ஒவ்வொரு கணமும் சாவு கடந்துதான் அது வாழ் கிறது. பிறந்த அன்றே சாவுக்கு அது அச்சாரம் கொடுத்துவிடுகிறது. ஆனால் சாவு கடந்து வாழும் உயிர் (உய்+இர்=உய்த்து இருப்பது) அவ் வுயிர் வாய்ப்பைக் கணந்தோறும் நாள்தோறும் பெருக்குகிறது. சாவின் வாய்ப்பைக் கணந்தோறும் நாள்தோறும் அது குறைத்துக் கொண்டே வருகிறது.

புழுப் பூச்சிகளுக்கு உள்ள சாவிடர் விலங்குகளுக்கு இல்லை. விலங்குகளுக்கு உள்ள அளவு காட்டுமிராண்டி மனிதனுக்கு இல்லை; காட்டுமிராண்டி மனிதனுக்குள்ள அளவு நாகரிக மனிதனுக்கு இல்லை.

வாழ்வு என்பது ஒரு போராட்டம்தான்; சாவெதிர்த்த ஓயாப்போராட்டம். ஆனால், அப்போராட்டத்தில் வெற்றி கண்ட அளவே வாழ்வு, உயிர் மலர்ச்சி, இன்ப வாழ்வு. இன மலர்ச்சி, நாகரிகம்!

பிறப்பு, சாவு; சாவு, பிறப்பு—அழிவுப் போராட்டம், உயிர் மீட்சி—வளர்ச்சி தளர்ச்சி யலைகள், தளர்ச்சி தாண்டும் ஊக்க வளர்ச்சி யலைகள் ஆகிய இவற்றின் நீடித்த தொடர்ந்த அனுபவத்தாலேயே உயிர் மரபு இயற்கையில் பொன்றாது நிலவுகின்றது, வாழ்கின்றது, வளர்கின்றது. தாழ்ந்த படியிலிருந்து உயர்ந்த படிக்கு உயர்கின்றது. இதை இயல் நூலார், உயிர் நூலார், உயிர் மலர்ச்சி நூலார் காட்டுகின்றனர். ஆனால் ஒவ் வொரு வளர்ச்சிப் படியும், ஒவ்வொரு வளர்ச்சிப் படி யின் ஒவ்வொரு கணமும் வளர்ச்சியின் அனுபவத்தைச் சேமித்து வைக்கிறது. அதுவே நாகரிகத்தின் வித்து. பண்பாட்டின் விதை, பண்பு. அதன் பல்வேறு உருவங் களே கலை, இயல், மொழி, அறிவு, உணர்வு ஆகிய அனைத்தும் என்பதை இயல் நூல் காட்டுவதில்லை.

எரிமலைகளிடையே வாழ்கின்றனர் சப்பானியர்! எரி மலை பேரழிவு செய்கிறது, ஓய்வு ஒழிவின்றி, உறுதியாக அழிவுகொண்டு வந்துவிடுகிறது. ஆனால், இதற்காக, இது கண்டு சப்பானியர் தம் தாயகத்தை விட்டு ஓடிவிடுவ தில்லை. ஏனெனில் அழிவலை ஓய்வுற்றபின் அந்த அழிவே ஆக்கவிதையும் உரமும் தருவதை அவர்கள் நீடித்த அனுப வத்தால் அறிவர். அழிவின் அனுபவத்துடன் அவ்வுரமும் பெற்றுச் சப்பானியர் 'அழிவின் மலர்ச்சி'யால் தம்

நாட்டை—மொழியை—நிலையை — கலையை — வாழ்வை—புகழை உலகும் வியக்கும் முறையில் மேலோங்க நடத்திச் சென்றுதான் வருகின்றனர்.

இன்றையச் சப்பானியர் வாழ்வு பண்டைய தமிழர்—இன்றைய தென்னவர், வருங்காலத் திராவிடர் வாழ்வின் ஒரு சிறு திவலை மட்டுமே—சிறு சின்னம், சிறு நிழல் மட்டுமே!

எரிமலைகள் மட்டுமல்ல—கடல் கோள்கள், சூரு வளிகள், புயல்கள், பஞ்சங்கள், போட்டிகள், பொருமைப் பூசல்கள்—இயற்கையின் எல்லா வகைப்பட்ட இன்னல் களுக்கும், வாழ்வின் எல்லா வகை இடர்களுக்கும் ஆளாகி அவதியுற்ற இனம் தமிழினம்! இன்றும் அகப்புயல்கள், சூருவளிகளாக அடிமைப் பண்பாட்சி, அயலாட்சி, அழிவுக் குழப்பம், தன்மறதி, மடிமை, இனமறதி ஆகிய பல இடர்களில் தமிழகம் குளித்தெழுந்து வருகிறது, வருங் காலத்திலும் பல மறு பிறப்புக்கள், பிறப்புத் துன் பங்களுக்கு அது ஆளாக நேரிடாதென்று எவரும் கூற முடியாது. ஆனல், தமிழகம் என்றும் சப்பானிய இனத் தைப் போல அழிவில் அழிவேற்று, அழிவின் அழிவுப் படிகள் கண்டு அழிவில் ஆக்கம் தேடியுள்ளது. அதுவே அழியா ஆக்கமாக, காலங் கடந்த வாழ்வாக வளர்ந்து வருகிறது, வளரும் ஆற்றல் வளர்த்து வருகிறது.

## 30. தமிழர் பழமையின் பீடு

நிலவுலகின் கன்னி நிலமாகப் பிறந்தது தமிழகம்—நிலவுலகின் இளமைப் பருவத்துக்குரிய கோடி நூருயிரக் கோடிக்கணக்கான ஆண்டுகளில் அதில் ஏற்பட்டுள்ள புயல்கள், சூருவளிகள், நிலநடுக்கங்கள், மலைச் சரிவுகள், பனிச் சறுக்கல்கள், இடிமின்னல்கள், நீடித்த இடை விடாப் பெருமழைகள், ஊழி வெள்ளங்கள், ஆற்றுப்

போக்கின் பிறழ்ச்சிகள், கடல் நிலப் பிறழ்ச்சிகள், கடற் கொந்தளிப்புக்கள், கொடு வெப்புக்கள், வரட்சிகள், எரிமலை வெடிப்புக்கள், நிலவெடிப்புக்கள் ஆகிய எண் ணற்ற இயற்கையின் கடுஞ் சீற்றங்களுக்குத் தென்னகம் ஆளாகியுள்ளது.

தென்னகத்தில் பிறந்த முதல் உயிரினங்கள் இவ்வனு பவங்களையே உயிராற்றலாகக் கொண்டு, இன்று நிலவுல கெங்கணும் வெவ்வேறு சூழலுக்கேற்ப, அதனைப் பயன் படுத்தி வாழ்கின்றன. தென்னகத்தில் பிறந்த மனித நாக ரிகமும், மனித நாகரிகத்தின் ஒவ்வோர் ஊழி அலையும் அதை அவ்வவ் வூழியில் உலகெங்கும் கொண்டு சென்று, அவ்வந் நிலத்துக்கேற்ற புது வடிவில் ஈடுபடுத்துகிறது. ஆனால், இயற்கையின் ஒரு சிறு பதிப்பாக, நிலவுலகின் ஒரு சிறு படிவமாக இயங்கும் தென்னகத்தில் வாழும் மனித இனம் மற்றெல்லா இனங்களுடனும் வாழ்ந்து, அவற்றின் அனுபவங்களில் பங்கு கொண்டு, அதன் பின்னும் அவை விட்ட இடத்திலிருந்து அந்த அனுபவத்தைத் தொடர்ந்து பெற்று நீட்டிக்கிறது. மனித இனத்தின் வாழ்வு தாழ்வுக ளிடையே தானும் வாழ்ந்து தாழ்ந்து, அவ்வப்போது அம் மனித இன வாழ்வைத் தூண்டித் தானும் அதில் பங்கு கொண்டு வருகிறது.

தமிழகத்தின் பெரும் பகுதியைக் கடல் மீண்டும் மீண்டும் ஆயிரக்கணக்கான ஆண்டுகட் கொருமுறை முன் னேறி அழித்துள்ளது. இக் கடல் கோள்களில் மனித ரறியப் பேரழிவு செய்த இரண்டின் நினைவையும், அவற் றுக்கு முன்னும் பின்னும் தொடர்ந்து நிலவிய வாழ்க்கை நிலைகளின் நினைவையும் தமிழ் மரபும், தமிழிலக்கிய மரபும் பேணித் தந்துள்ளன. இக்கடல் கோள்களுக்குப் பின் பிறந்து வாழும் இனங்கள் இன்று அந்நிகழ்ச்சிகளைப் பழங் கதைகளாகக் கருதுகின்றன—இது இயல்பே. ஆனால்,

தமிழகத்தின் இன்றைய தாழ்வுக்கும், அதன் நீடித்த வாழ்வுக்கும் ஒருங்கே மூலகாரணங்களாய் இவையே அமைகின்றன.

ஒவ்வொரு கடல்கோளும் ஒரு பேரழிவுப் புயல்—அந்நாளைய உலகமக்கள் உள்ளத்திலும் அது ஒரு பெரிய வாழ்வு மாள்வுப் பிரச்சினையாய் இயங்கி, இறுதியில் அதுவே ஒரு புதுவாழ்வுத் திட்டத்துக்கு வழிவகுத்தது.

இத்தகைய புதுவாழ்வுத் திட்டங்களின் தொகுதியே தமிழர் பழமையாக, உண்மைப் பழமையாக, தமிழர் பழம் பண்பாக இன்றும் நிலவுகின்றது. எல்லையற்ற காலப் பழமையின் திரட்டுப் பாலாக விளங்கும் இத்தமிழகப் பண்பு தமிழக வாழ்விலும் அது கடந்து தென்னக வாழ்விலும் மனித இன வாழ்விலும், உயிரின வாழ்விலும், இயற்கையிலும் ஆழ்ந்து சென்று வேர் பாய்ச்சியுள்ளது. உலக நாகரிகத்துக்கு உறுதியும் சரிசம நிலையும், மனித இன வாழ்வுக்கு அழியாப் புத்துரமும் ஆக்கமும் அளிப்பது அதுவே.

## 31. தமிழ் பிறந்த மாமலை

கடல்கோள்களை மறவாது நினைந்து கூறும் இலக்கிய மரபுகூட எரிமலை, நிலநடுக்கம், நிலவரட்சி பற்றி எதுவும் கூறவில்லை. ஆயினும் தமிழ் பிறந்த மலையாக, தென்றல் வாழ் மலையாகத் தமிழர் போற்றிய பொதியில் மாமலை ஒரு தூங்கும் எரிமலையே என்று மண்ணூலார் நமக்குக் கூறுகின்றனர். நிலவுலகத்தின் பிள்ளைப் பருவத்தில் அவ் எரிமலை கக்கிய அனற்பாறையே அல்லது அதன் பகுதியே இன்றைய நம் தமிழகம், தென்னகம்—அதுவே தென்னகஞ் சூழ்ந்த கடலுளாழ்ந்த பகுதிகள் — அதுவே இலங்கை, மலாயா, தென் கடல் தீவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய கடல் கடந்த தமிழகம்!

கணத்துக்குக் கணம் ஓயாது அனல் உமிழும் உக்கிர எரிமலைகள் உண்டு. ஆண்டுக்கு ஒரு முறை, நூற்றாண்டு களுக்கு ஒருமுறை கொதித்தெழும் தீமலைகளும் உண்டு. ஆனால், பொதியில் மாமலையோ வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத் தொல் பழங்கால வாழ்வு முழுதுமே—ஐயாயிரம் பத்தாயிரம் ஆண்டுகளாகத் தூங்குகிறது!

தமிழக வாழ்வின், தமிழ் மொழியின் ஒரு சின்னமாக இயங்குகிறது இத்தமிழ் மாமலை—பதினாயிரக்கணக்கான ஆண்டுகள் அதன் ஒரு தூங்கும் பருவமாய், அதன் எல்லை யற்ற பெருவாழ்வில் ஓர் இரவாய் இயல்கிறது!

தமிழாலும் அளக்க முடியாத நீடித்த வாழ்வுடைய இம்மலையைத் தமிழர் தமிழ் பிறந்த மாமலை, தமிழ்த் தெய்வமாமலை, தமிழ் மகளையே ஈன்ற மாமலை என்று பராவியதில் வியப்பில்லை

தமிழக ஆறுகள் உயிராறுகள், ஆனால், அவற்றில் தண்பொருநை, பொன்னி முதலிய சில நீங்கலாக மற்றவை இன்று பெரிதும் வரட்சியடைந்துள்ளன. காடழிப்பு, வானமாரி ஏரிகள் அழிவு, திட்டமற்ற அணைகள் முதலிய அரசியற் பிழைபாடுகள், காலப் பிழைபாடுகள் இந்நிலைக்கு ஓரளவு வழி செய்துள்ளன என்பதில் ஐயமில்லை. ஆனால், இவை மட்டும் மூலகாரணங்கள் ஆகமாட்டா. முன்பு கலங்கள் ஓடிய துறைகளை யுடைய ஆறுகள் இன்று ஊற்றகழ்ந்து நீர் காண வேண்டும் நிலையில் உள்ளன. தமிழக ஆறுகளின் இவ் இடைக்கால வரட்சிக்கு நில வரட்சியும், நிலவரட்சிக்கு இத்தமிழக எரிமலையின் ஆழ் நில மாறுபாடும் காரணம் எனலாம்.

கடல் கோள்களுக்கு மூலகாரணமும் இதே எரிமலை அகப்புரட்சிதான்.

## 32. வெப்பிற் பிறந்த வெண்ணிலவு

நிலவுலகில் இத்தகைய அடி நிலப் புரட்சி பெருமாறு தல் உண்டு பண்ணுவது அரிதன்று. ஆசிய நடு மேட்டு நிலம் சென்ற சில நூற்றாண்டுகளாகக் குறும்பாலை யாகவே கிடக்கின்றது. ஆனால், அதற்கு முன் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அது சோலைவனமாகவே இயங்கி யுள்ளது என்று அறிகிறோம். இயற்கையின் இத்தகைய வரட்சியைக் கூடத் தமிழினப் பண்பு பரவாமல் தடுத்து இனவளத்தின் திரட்சியாக மாற்றியிருந்தது. ஆனால், இடையிருட் காலத்தில் இவ் வரட்சி மரபு தங்கு தடை யற்று இயங்கவிடப் பட்டதனாலேயே இன்று ஆறுகளின் வாழ்வில் அவை செயற்படத் தொடங்கியுள்ளன என்ன லாம். மரபுப்பிழையும் ஆட்சிப் பிழையும் இயற்கைப் பிழையை வலியுறுத்தி வளரச் செய்ய உதவி வருகின்றன.

தமிழ் வெற்பின் வெப்பிடையே தவழ்ந்த வெண் ணிலவு தமிழ், தமிழர் வாழ்வு!

## 33. தண்டமிழ்ப்பாலை

கடல் கொண்ட தமிழகத்தின் நிலக் கிடக்கையைத் தமிழ் இலக்கண நூலாரின் திணைவகுப்பு அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது. ஆசிரியர் மறைமலையடிகளார் இதனை விளக்கிக் காட்டியுள்ளார். பாலை நடு நிலமாய் ஏனைத் திணை நிலங்களால் சூழப்பட்ட ஒரு தீவாய் இலங் கிற்று. குறிஞ்சி அல்லது மலைநிலம், முல்லை அல்லது காட்டு நிலம், மருதம் அல்லது ஆற்று நிலம், நெய்தல் அல்லது கடற்கரை நிலம் ஆகிய மற்ற நான்கு திணைகளும் பாலை சூழ்ந்த வளையமாகக் கிடந்ததனால் நானிலம் எனப் பட்டன. பாலை பிரிவுக்குரிய திணையாகக் கருதப்பட்ட தன் காரணம் இதுவே.

தமிழர் வெளிநாட்டு வாணிகம் அல்லது பேரரசர் கீழ் வெளி நாட்டுப் போர் அல்லது வெளிநாட்டுப் பணி நாடிக் கடல் கடந்து பிரிந்தனர். அது போல உள்நாட்டு வாணி கமோ, உயர்தரக் கல்வியோ, அரசர் கீழ் உள்நாட்டுப் போரோ, உள்நாட்டு அரசியற் பணியோ நாடிப் பாலை கடந்து சென்று பிரிவுற்றனர். இவ்வாறு பாலையும் பாலை சூழ் வெளியும் பாலையின் பிரிவும் தொல் பழங்காலத் தமிழர் வாழ்வின்நடுவே இடம் பெற்றிருந்தது காணலாம்.

இன்று நாம் தமிழகம் என்றும் தென்னகம் என்றும் வழங்கும் பரப்பு முழுவதும் பண்டைத் தென்னகத்தின் வடகோடி மட்டுமே. பண்டைத் தமிழகத்தின் நடுப் பகுதியிலிருந்த பாலை முழுவதும் கடலுள் ஆழ்ந்து விட்டது. அதன் ஒரு வடகோடிக் கோணமே தற்போது நெல்லை மாவட்டத்தில் செந்தில் நகரடுத்த குதிரை முடித் தேரியாகும். பண்டு பாலை சூழ்ந்திருந்த நானிலத்தில் இன்றைய தென்னகத்தின் வடபெரும் பகுதியும் இலங் கையின் தென் பெரும் பகுதியும் முல்லைத் திணைக் குரிய காடுகளே, இராமாயணத்தில் தண்டகக் காடு எனக் குறிக்கப்பட்டது இதுவே. மூவரசர் பொதுவாகவும், சோழன் கரிகாலன், சேரன் ஆடுகோட்பாட்டுச் சேர லாதன் ஆகியவர்கள் பேரளவிலும் காடு வெட்டித் திருத் திய பகுதிகளே இன்று தொண்டை நாடாகவும் மற்ற ஆந்திர கன்னடப் பகுதிகளாகவும் இலங்குகின்றன. தற் போதைய சேரநாடு, பாண்டி நாடு கூட முன்பு காடா யிருந்தவையே என்பதை ஆர்க்காடு, தில்லைவனம், மறைக் காடு, கடம்பவனம் (மதுரை) முதலிய பெயர்களும் பிற மரபுகளும் காட்டும். மதுரையில் கடலுளாழ்ந்த தமிழகத் திலிருந்து வந்து தென் தமிழர் குடியேறு முன் ஆண்ட கடம்பரே சங்க காலத்தில் வடமலையாளக் கரையிலும், பின்னுட்களில் கன்னட நாட்டிலும் பரவியவர்கள் ஆவர்.

அது போல ஆந்திரர் முன்னாட்களில் தமிழக வட கோடியில் திரையர் குடியில் ஒருவராக ஆண்டு, பின்னாட்களில் வடக்கே பரவியவர்களே. பல்லவர்க்கும் ஆந்திரர்க்கும் கடம்பருக்கும் உள்ள தொடர்பு இதுவே.

இலங்கையும் வடநாடும் வென்ற கரிகாலன் பலநாட்டு மக்களையும் திரட்டிக் காவிரிக்குக் கரை வகுத்தே, காட்டாறாக இருந்த அதனை நாட்டாறாக, நாட்டுக்கு வளந் தரும் ஆறாக மாற்றியிருந்தான். அவனும் அவன் மரபில் பலரும் பெருமாவளவன், திருமாவளவன் என்று அழைக்கப்பட்டதன் காரணம் இதுவே. இன்று தொண்டை நாட்டில் வாழும் தமிழரில் பெரும்பாலாரின் முன்னோர்கள் கரிகாலனால் தென் இலங்கையிலிருந்தும் தென் தமிழகத்திலிருந்தும் துளுவ, கன்னட, ஆந்திர நாடுகளிலிருந்தும் கொண்டு வந்து குடியேற்றப்பட்டவர்களே! இந்நாட்டுப் பெயர்கள் பல சமுதாய வகுப்புக்களின் பெயர்களில் தடம் பொறிக்கப் பெற்றுள்ளன.

## 34. தமிழர் நற்பண்பும் அற்பண்பும்

தமிழர் மிகப் பழய இனத்தவராதலால், சில பல நல்ல பண்புகளையும் இயல்பாக வளர்த்துள்ளனர். அல்ல பண்புகள் சிலவும் வளர்ந்திருத்தல் இயல்பே. ஆனால், பல பண்புகள் நல்லனவா, தீயனவா என்று எளிதில் வகுக்க முடியாத நிலையில் உள்ளவை. ஏனெனில் பண்புகள் நல்லனவாதலும் தீயனவாதலும் ஓரளவு சூழலைப் பொறுத்தவை, பார்க்கின்றவர் கோணத்தையும் பொறுத்தவை.

மேலும், பல நல்ல பண்புகள் தீமையின் நீண்ட அநுபவத்தால் ஏற்பட்டவை. நல்லன அல்லாத பண்புகளும் பல இதுபோல நன்மையின் நீண்ட அநுபவத்தால் ஏற்பட்டவையே. தமிழின வளர்ச்சியில் கருத்துக்கொண்டவர் இந்த வேறுபாடறிந்து சூழல் மாற்றித் தீயன நல்லன

ஆக்கவோ, சூழலுக்கிசைய அவற்றை அவ்வாறு மாற்றவோ செய்வதற்குரியவர் ஆவர்.

அல்லனவாய பண்புகளில் தமிழினத்துக்குப் பெருந் தீங்கு விளைவித்துள்ளவை நல்லனவாக அடிமை இடையிருட்காலத்தில் வளர்ந்த பண்புகளே. தமிழின மறுமலர்ச்சி ஆர்வலர் தமிழருக்கு மாறான பண்புகளை வளர்த்துள்ள ஆரிய இனத்தின் பெயரால் இவற்றின் தொகுதியை 'ஆரியம்' என்று குறிப்பதுண்டு. இவ்வழக்கு மரபு சங்க கால முதலே ஏற்பட்ட ஒன்று.

தன்னலப் போட்டி பொறாமைகள் நெடுங்காலமாக இன்றளவும் தமிழகத்தை அலைக்கழித்து வருபவை. முற்காலப் போர்கள், போராட்டங்கள், இக்கால அடிமைத்தனம், தமிழின நலம் கெடுத்துத் தற்காலிகமாகத் தன்னலம், குழுநலம் பெருக்கிக் கொள்ளும் வீடணத்தன்மை ஆகியவற்றுக்கு அடிகோலிய கேடுகள் இவையே. இவையே உலகெங்கும் உயர்வு தாழ்வு, ஆண்டான் அடிமை முறை குடிமயக்கம், உயர் குடிவாணர் இன்ப வாழ்வுக்காகப் பிறகுடி கெடுக்கும் பெண்ணடிமை முறை, பெண்வாணிக முறை ஆகியவற்றுக்கு வழி வகுத்தவையும் ஆகும். ஆயினும், இப்பண்பு கேடுகளுக்குரிய வேர்மூலங்கள் மிகத் தொல்பழங்காலத் தமிழரிடம் நிலவிய வணங்காமுடிக் குடியாட்சிப் பண்புகள்தான் என்பதை இன்று பலர் எளிதில் நம்ப முடியாது.

சரிசமத்துவம், கூட்டுழைப்பிடையே முயற்சியில் விட்டுக் கொடுக்காத போட்டி, எவரும் மேலுரிமை பெறாமல் தடுக்கும் ஆர்வம் ஆகிய பண்புகள் குடியாட்சி மரபுக்கு இயல்பானவை. குடியாட்சி மரபு கெடாதிருந்த காலம் வரை நற்பண்புகளாக நிலவிய இவையே, முடியாட்சியிலும் பேரரசாட்சியிலும் அயலாட்சியிலும் அயற் பண்பாட்சியிலும் படிப்படியாகக் கேடு வரவழைத்துக்

கெட்ட பண்புகளாயின. பலசமயம் 'நல்ல பண்புகளின்' உருவெடுத்து 'ஆரிய'மாகி அவை பேரழிவுகள் செய்து வந்துள்ளன.

சமரசம் என்ற பெயரால் திரு. வி. கலியாணசுந்தரனர் போன்ற நம் காலப் பெரியாராலும், 'கடமைப் பாடு' என்ற பெயரால் ஆயிர ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெரியாரான திருநாவுக்கரசராலும் பாராட்டப்பட்ட பண்பின் அடிப் படை இன்றைய தமிழரிடம் பெரிதும் இயல்பாகக் காணப் படும் பொறுதி (tolerance) என்ற குணமே. ஆனல், இது முற்றிலும் இதே உருவில் பழந்தமிழர் பண்பல்ல என்பது உறுதி, சங்க இலக்கியம் பொதுவாகவும், புறநானூறு சிறப்பாகவும் இதைக் காட்டும். எனினும் இது முற்றிலும் புத்தம்புதுப் பண்புமல்ல. சிலப்பதிகாரத்திலேயே இதன் வேர் முதலை வேருெரு வடிவில் காணலாம். சிலப்பதி காரத்தில் சிறப்பாகவும் சங்க இலக்கியத்தில் பொது வாகவும் காணப்படும் பரந்த சமரசப்பண்பு இதுவே. தற்காலப் பொறுதிக்கும் அதற்கும் உள்ள வேறுபாடு ஒன்றே ஒன்றுதான்—வலிமைக் குறைவால் ஏற்பட்ட அடிமைச் சமரசமாகப் பிற்காலப் பொறுதி அமைகிறது. அடிமை நிலையில் அயலார் ஆட்சியில் பிழைத்து வாழ உதவும் ஈனமதி இது. நேர்மாருக வலிமைமீது கட்டமைக் கப்பட்ட அறிவுச் சமரசம் முற்காலத்தது.

பொற்காலத்தில் தங்கமாக நிலவிய அதே பண்பு, கற்காலத்தில் வங்கமாகியுள்ளது.

தமிழர் பண்டைக் கடலாட்சி இன்று கடல் கடந்த தமிழர் அவலவாழ்வு ஆகியுள்ளது. ஆட்சி கடல் மரபாக இயங்கியபோது, இனத்தின் கடல்மரபு விட்டுச் சென்ற நாட்டுக்கும் புகுந்த நாட்டுக்கும் வளமாயிருந்தது. ஆட்சி கடல் மரபும் இழந்து இனம் ஆட்சியுரிமை யிழந்து மக்கள் அம்மரபு மறந்துவிட்ட இந்த நாட்களில்கூட இந்தக் கடல்

மரபு அழிந்து விடவில்லை. தங்கம் வங்கமாகி, ஆட்சிமரபு அடிமை மரபாகி யுள்ளது. விட்டுச் சென்றவனுக்கு வாழ்வில் தூண்டிலாய், விட்டுச் சென்ற நாட்டுக்கு அவமதிப்பாய், பலசமயம் புகுந்த நாட்டில் கூடச் சுரண்டு பவர்கள் நலனுக்கு உதவுவதாய்த் தமிழனை அந்நாட்டு மக்களிடமிருந்து பிரித்து மோத விடுவதாய் இப்பழம் பெருமரபு இன்று மாறுபட அமைந்துள்ளது.

திருக்குறளில் வீரத்தின் மறு பெயராக வழங்கிய தமிழ்ச்சொல் மறம். சங்ககாலத்திலேயே அது அறத்துக்கு மாறுபட்ட சொல்லாய் வழங்கத் தலைப்பட்டுவிட்டது. இன்றோ தமிழரில் ஒரு வகுப்பினரை ஒரு சாதியாராக்கிக் குறிப்பதற்கும், அறிவற்ற முரட்டுத்தனத்துக்கும் உரிய பெயராகி விட்டது! அயலாட்சியும் அயலாட்சிப் பண்பும் பண்டை மறவர் மரபினரை இத்திசைக்கேதள்ளி அழித்து வருகிறது.

நீடித்த காலப்போக்கின் தளர்ச்சியும், பல நாகரிகங்களுடன் தற்பண்பு மறந்த நிலையில் கூடியதனுல் ஏற்படும் பண்புக் குழப்பமும் இங்கெல்லாம் செயலாற்றி யுள்ளன, செயலாற்றுகின்றன என்று காணலாம்.

சாவைப் புல்லென மதித்தல்; தனி மனிதர் வாழ்வைப் பொருட்படுத்தாமை; இனத்துக்காகவும் இனப்பெருமை காப்பதற்காகவுமே வாழ்வது, மாள்வது; அஞ்சாமை; மான உணர்வு, புகழ் ஆர்வம் ஆகியவை தமிழகம் அரும்பாடு பட்டு வளர்த்த பண்புகள்—வெற்றிகரமாகத் தலைமுறை தலைமுறையாகத் தமிழன் வளர்த்தவை இவை.

இன்று மதத்துறையில் உலகெங்குமே பொதுவாக, தமிழகத்தில் தமிழரிடையே சிறப்பாக, தனித்தமிழராகிய 'தாழ்த்தப்பட்ட' மக்களிடையே முனைப்பாகக் காணப் படும் 'அவ்வுலகமனப்பான்மை' 'வாழ்வில் வெறுப்பு,'

'அரசனுண்டாலென்ன, ஆண்டி ஆண்டா லென்ன,' என்ற அரசியல் வெறுப்புவேதாந்தம், ஊழ், இருவினைக் கோட்பாடு, மேலுலக நம்பிக்கை, 'குடும்ப வாழ்வில் அக்கறையற்ற தன்மை' ஆகிய பண்புகள் தமிழர் பண்டை வீரத்தின் அடிமைக் காலத் திரிபுகளே யாகும்.

ஆட்டுக்குப் புல்லறுக்கப் பயன்படும் அரிவாளே அதன் கழுத்தறுக்கவும் பயன் படுவதுபோல, உரிமைக் கால நற்பண்புகளே அடிமைக்கால அல்பண்புகளாக மாறி விடுகின்றன, தன்னலம், பொய்மை, சூழ்ச்சி, அடிமைத் தனம், இனம் விற்றுப்பிழைத்தல், பெண்டிரடிமை ஆகியவற்றை மேலீடாகத் தமிழரும் உலகமும் இன்று தீய பண்புகள் என்று கூறினாலும் சிறிது பெயர் மாற்றி அறிவு, திறமை, பணிவு, கடமை, பெருந்தன்மை, ஆண்மை என்று பசப்பி அதனால் தற்காலிகத் தனிநலம், குழுநலம் பேணி 'மனித இனம்' கெடுக்கத் தயங்குவதில்லை.

தமிழ்ப்பண்பு, மனித இனப்பண்பு ஆகியவற்றின் அடிப்படையாக, வள்ளுவர் வழி நின்று உலகில் சமயம், அரசியற் சட்டம், ஒழுக்கம், கல்வி ஆகியவை புதிதாக அமைக்கப்பட்டாலன்றி, உலகம் தமிழர் தொடங்கிவைத்த நாகரிகப் பாதையில் விரைந்து முன்னேற முடியாது. என்றும் முன்னேறியே செல்லும் என்று உறுதியாக நம்பவும் இயலாது.

## 35. மனித உலகின் உயிர்ப் பண்பு

உலகில் எல்லா நாடுகளிலும், காலங்களிலும் எல்லாச் சமயவகைகளிலும் சில அடிப்படைப் பொதுப்பண்புகள் நிலவுவது காண்கிறோம். அவை யாவராலும் ஒப்பப் பாராட்டப் படுவதும் காண்கிறோம். ஆயினும், நாட்டுக்கு நாடு, காலத்துக்குக் காலம், சமயத்துக்குச் சமயம், கட்

சிக்குக் கட்சி, தனிமனிதருக்குத் தனி மனிதர் எத்தனையோ வேறுபாடுகளும் உள்ளன. தென்னகத்துக் குள்ளேயே, தமிழகத்திலேயே, இது போன்று எல்லாரும் ஏற்கும் ஒற்றுமைக் கூறுகளும், வேறுபாடுகளும் உண்டு. இரு பரப்புக்களிலும் —உலகிலும், தென்னகத்திலும்—ஒற்றுமையும் இயல்பானவை, வேறுபாடுகளும் இயல்பானவை என்று எப்படியோ எளிதில் நம்பப்பட்டு வருகிறது. உலகப் பொதுமறையாய் விளங்கும் முப்பால் ஏட்டின் வியக்கத்தக்க பொதுமை இப்பிழை பாட்டைச் சுட்டிக் காட்டுவது ஆகும்.

உலகிலும் சரி, தென்னகத்திலும் சரி—ஒற்றுமைக் கூறுகள் தமிழ்ப்பண்பின் உயிர் மரபில், வள்ளுவர் மூல அறிவு மரபில் வந்தவை. வேற்றுமைகள், கால இடச் சூழல் காரணமாக அத் தமிழ்ப்பண்பில், அறிவு மரபில் ஏற்பட்ட தளர்ச்சிகளின் சின்னங்கள் ஆகும்.

முப்பால் ஏடு தரும் ஒளி இவ்வுயிர்மரபை—உலகப் பண்பு, தமிழகப் பண்பு ஆகிய இரண்டின் தூய தலையூற்றைக் குறித்துக் காட்டுவது ஆகும்.

வேறுபாடு இயற்கையின், இனத்தின் புயல்மரபு. பண்படா இனங்களில் அதுவே வாடையாகச் செயலாற்றும்! ஒற்றுமை அவற்றின் தென்றல் மரபு. தமிழகம் புயலில் உருவாக்கிய ஆக்கமரபு அதுவே.

புயலில் ஆக்கப்பட்ட தென்றல், ஆக்கத்தின் அழிவு ஏற்பட்டால், மீண்டும் புயல் ஆதல் இயல்பே.

## 36. தென்றலின் பாங்கு, தெம்பாங்கு

தென்றல் இனிது. ஆனால், புயலில் அலைப்புண்டவனுக்குத்தான் அதன் முழு இனிமை தெரிய வரும். ஓய்வு இனிது. ஆனால், உழைத்தவனுக்கன்றி அதன்

இன்பம் கைவராது. அமைதி இனிது. ஆனால், போராட்டங்களின் பின்தான் இது எளிதில் புலனாகும். பிறப்பு மகிழ்வுடன் வரவேற்கத் தக்கது. ஆனால், இறப்பின் கசப்பான அனுபவமுடையவனே அவ்வரவேற்பில் ஆர்வம் காணமுடியும்.

தமிழன் தென்றலைக் கற்பனை செய்து, அதன் வடிவாகத் தமிழைக் கண்டான். ஆனால், அவன் புயல்கள்—எண்ணற்ற பல புயல்கள்—கண்டவன். அழியாத ஆக்கப் பண்பாக அவன் தமிழை வளர்த்தான். ஆனால், வாழ்வில் அழிவுகள், அழிபாடுகள் — எண்ணிலடங்காப் பல அழிவுகள், அழிபாடுகள்—கண்டவன் அவன். தென்றலின் இனிமையை இதனால்தான் அவனால் நுகரமுடிந்தது புயலின் அழிவிலிருந்தே தென்றலின் இனிமை கண்ட அவன், புயலழிவை வெல்லும் இனிமையையும் தென்றலிலிருந்தே ஆக்கத் திட்டமிட்டான். அவன் கண்ட புத்தினிமை,சாவை வென்ற அமுத இனிமை அதுவே. அவ்வமுத இனிமைப் பண்பில் அவன் தமிழ் வளர்த்தான், தமிழ்ப்பண்பு பேணிப் போற்றினான். அதன் மூலமாகவே அவன் வாடையை வெல்ல எண்ணினான். வாடையையே தென்றலின் வலிமையாக்க முற்பட்டான். கோடையில் மழையின் கொடையைக் கண்டுணர முனைந்தான்.

தமிழ் இயற்கையளாவிய எளிமை, இனிமை உடைய மொழி, ஆனால் இதுஇயற்கை யெளிமையன்று, இயல்பான இனிமையன்று. இயற்கையின் இயல்பான எளிமையும்இனிமையும் அருவாய்ப்புக்கள்; எப்போதும் நிகழ்வன அல்ல; செயற்கையாக, முயற்சியின் விளைவாக உண்டுபண்ணப் படும் கலை எளிமை, கலை இனிமை அவை. அவ் எளிமையினுள்ளே தமிழ்க்கலைஞன் சிற்றுளியின் கடு உழைப்பு, சிக்கல் அகற்றும் அறிவுத்திறம், அழகுத்திறம், நுணுகிக் கண்டு தொகுக்கும் கற்பனையாற்றல் ஆகியவை மறைந்து

நிழலாடுகின்றன. அதன் இனிமையினுள்ளே கலைஞன் தாண்டிய பல இடர்கள், இடுக்கண்கள், இன்னல்களின் சாயல்கள் கரந்துள்ளன. அவன் கண்டு விலக்கிய கார்ப்புக் கசப்புக்களின் எழில் தடங்கள் அவ்வினிமையின் பின்னணியில் உள்ளன.

தமிழ் முன்னோர் தேடிவைத்த கருந்தனம் தமிழின் எளிமை, இனிமை. சாவு கடந்து தமிழன் கண்ட அப் பண்புகள் தமிழினம் சாவு கடந்து வாழ உதவுவன. ஆனால், தமிழன் அவற்றைத்தனக்காக, தன் மரபினராகிய தமிழருக்காக மட்டும் கூடத் தேடிப் பெறவில்லை. மனித இனத்துக்காக, உலகுக்காக—மன்பதை உயிர்களுக்காகத் தேடிப் பெற்ற மூலதனச் செல்வம் அவை. அவற்றை மேற்கொண்டு தன் வாழ்வு கடந்து உலகுக்காக, மன்பதைக்காகத் தமிழன் வாழக்கடவன்! பாடுபட்டுப் பண்பாட்சி பரப்பக்கடவன்!

பாலையில் சோலை கண்டு, பாலைகளைச் சோலைகளாக்க வழி வகுத்த பண்பகம்தான் தென்னகம்! ஆனால், இன்று அது வெம்பாலையாகியுள்ளது. மாறா இளமை நலம் உள்ள இனம்தான் தமிழினம்! ஆனால், இன்று அதன் இளமை அணியிழந்து, பொலிவிழந்து, நகையிழந்து புழுதியாடிக் கிடக்கிறது. சாவா மூவா மொழிதான், மொழிகள்தான் தமிழ் மொழி, தமிழின மொழிகள். ஆயினும், அவை அடிமைப்பட்டு, பிரிவுற்று, உரிமை யிழந்து—வாழும் உரிமை, சாகும் உரிமை இரண்டுமே அற்ற நிலையில், பல சமயம் உரிமையவாக்கூடக் கெட்ட நிலையில், அடிமை நிலையையே அணைத்து மகிழும் கொத்தடிமை நிலையில் கிடக்கின்றன. ஆயினும், இந்நிலையிலும் பண்பு உள்ளூரத் துயில்கின்றது—பண்ணின் கனவொலி கேளா ஒலியாய் நாடி நரம்புகளில் உள்ளூர அதிர்ந்துகொண்டிருக்கிறது—குருதியோட்டத்துடன் ஓட்டமாக அது உடலின் அணு

அணுத்தோறும் உள்ளலை பாய்ந்த வண்ணமேதான் இருக்கிறது.

## 37. மறுமலர்ச்சிப் பண்

மறுமலர்ச்சி யார்வம் துயிலிடையே அப்பண்ணைத் தடவட்டும், பண்ணை எழுப்பட்டும். மீட்டும் தென்னக மாக, புத்துலக வாழ்வு தூண்டும் தென்றலகமாக, உலக வாழ்வின் தென்னுகோலாக அது துயில் எழுவது உறுதி!

தமிழகப் பண்பாடு தமிழன் கண்டுணர்ந்த இனிமைப் பண்—இடங்கடந்து காலங்கடந்து முப்பால்போல இயங் கும் பண்—தனிமனிதன் வாழ்வின் பிறப்பிறப்புக் கடந்து, பிறவா இறவா இனவாழ்வு வளர்க்கும் பண்!

தென்னு தெனுவெனத் தமிழன் பாடும் தெய்விகப் பண், தெம்பாங்குப் பண் இதுவே.

அத் தெய்விகப் பண் பாடும் வீடு, அப் பண்பாடு உடைய நாடு தென்னுடு!

தென்னுடு நாடும் பண்ணைத் தென்னவராகிய நாம் தேடுவோம்! தேடி அதன் பீடு வாழ்வில் கூடுவோம்!

தென்னவர் பெயர் கூறித் 'தென்னு தெனு'வெனப் பண் பாடி, தென்னவர் இன நலமென்னும் கால ஊர்தி ஏறி, அதன் மூலம் இறவா இன்பத்தில் திளைத்து நீடு நிலவுவோம்.

தென்னு தெனுவெனத் தெம்பாங்கு பாடி, தென் மொழித் தென்றல் வீசும் தென்னகச் சோலையில் உலாவி, தென்தமிழ்ப் பண்பாகிய தண்ணுறும் பொய்கையில் குளித்து, உலகில் நீடின்பம் நிலவ வகை தேடுவோம்!

எழுக தமிழினம்! கிளர்க தமிழ்ப் பண்! ஏழிசை எழுப்பி உலகில் எழிலிசை பரப்புக, தென்னகம்!!

# மாலை—II

# பண்பின் பீடு

## 1. முச்சொல் மரபு

**பண்புடையார்ப் பட்டுஉண்டு உலகம்; அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்!**

**வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும், பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று.**

*நாகரிகம், பண்பாடு, பண்பு!*

*பொருள் தொடர்பற்ற சொற்களல்ல இவை, அதே சமயம் முற்றிலும் ஒரே பொருள் சுட்டுபவையு மல்ல.*

*மூன்று சொற்களும் தழுவும் பொதுப்பொருள் உண்டு —மூன்றுமே இனவாழ்வின் வளர்ச்சி சார்ந்தவை. இன வாழ்வின் உயர்வு, முன்னேற்ற வாய்ப்பு வளம் ஆகிய வற்றை மதிப்பிட்டுக் காட்டுபவை. ஆயினும், வழக்கு மரபிலும் பொருள் மரபின் நுண்ணயங்களிலும் அவற்றிடையே வேறுபாடுகள் பல உண்டு.*

*நாகரிகம் என்ற சொல்லை நாம் பெரும்பாலும் நாடு. உலகம் ஆகியவற்றினுடன் இணைத்து, நாட்டு நாகரிகம், தென்னக நாகரிகம், உலக நாகரிகம் என்று கூறுகிறோம், திசைகளுடன் சேர்த்து மேலை நாகரிகம், கீழை நாகரிகம், தென் திசை நாகரிகம் என்று வழங்குவதுமுண்டு. ஆனால் பண்பாடு என்னும் சொல்லை இனத்துடனே, இன மக்களுடனே சேர்த்துத்தான் பயன்படுத்துகிறோம். பண்பு என்ற சொல்லையோ இனம், குடும்பம், தனி மனிதர் ஆகிய எல்லாத் திறங்களிலும் பயன்படுத்துகிறோம்.*

ஓரோ விடத்து இவ்வழக்குச் சிறிது மாறுபடுவதும் உண்டு.

நாகரிகம் என்ற சொல்லைக் காலத்துடன் சேர்த்து இக்கால நாகரிகம், அக்கால நாகரிகம், சங்ககால நாகரிகம் என்று வழங்குவதும் மரபே. காலம் குறிக்காமலே முக் காலத் தொகையாக நாடு, நாட்டு மக்களுடன் இணைத்து, பிரஞ்சு நாகரிகம், தமிழர் நாகரிகம் என்று கூறுவது முண்டு. சில சமயங்களில் இனங்களையும் தனி மனிதரையும் கூட நாகரிகமற்ற இனம், நாகரிக இனம், நாகரிக மற்றவர், நாகரிக மனிதர் என்று பேசுகிறோம்.

**பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர்,நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்**

முப்பால் முதல்வர் இங்கே தனி மனிதரிடம் காணப்படும் இனப்பண்பை 'நயத்தக்க நாகரிகம்' என்று சிறப்பித் துள்ளார்.

பண்பாடு என்னும் சொல்லின் வினைவடிவம், 'பண்படுதல்' என்பது. பண்பு என்ற சொல்லைப் போலவே இதுவும் இனம், குடும்பம், தனி மனிதர் ஆகிய சொற் களுடன் இயங்குவதுண்டு. இனப் பண்பு, குடும்பப் பண்பு, தனி மனிதர் பண்பு என்பதுபோல, பண்பட்ட இனம், பண்பட்ட குடும்பம், பண்பட்ட மனிதர் என்ற வழக்காறு களும் காணலாம். தவிர, இரு சொற்களுமே மொழி, கலை, வாழ்க்கை, சமுதாயம் போன்ற இனப் பொதுத்திறங் களுடனும்; சொல், மரபு போன்ற அவற்றின் கூறு களுடனும்; பேச்சு, நடை போன்ற தனி மனிதர் செயல் திறங்களுடனும்; உள்ளம், அறிவு போன்ற தனி மனிதர் அகவாழ்வுத் திறங்களுடனும் இயங்குவது உண்டு.

பண்பாடு, பண்பு ஆகிய இரு சொற்களுமே வாழ்வுக் குரிய நீடித்த தாயகத்துடனும் இணைவதுண்டு. தென்னகப்

பண்பு, தென்னகப் பண்பாடு என்ற தொடர்கள் இத் தகைய மரபு வழக்காறுகளே யாகும்.

## 2. முக்காலக் கூறு

நாகரிகம், பண்பாடு, பண்பு ஆகிய சொற்களின் நுண்ணிய வேறுபாடுகளை அவற்றின் வழக்காறுகள் ஓரளவு சுட்டிக்காட்டுகின்றன.

நாகரிகம் **நிகழ்காலம்** தழுவிய சொல். நேரடியாக நிகழ்காலம் சாராத போதும், அது நிகழ்கால நோக்கே உடையது. ஏனெனில் அது இனம் **வளர்ந்துவிட்ட** வளர்ச்சி சார்ந்தது. அத்துடன் அது பெரும்பாலும் அவ்வளர்ச்சி யையோ, அதன் பயனையோகூட நேரடியாகக் குறிப்ப தன்று. அது அவ்வளர்ச்சியின் தோற்றம், பொலிவு, **புறச்சின்னம்** மட்டுமே—வளர்ச்சியின் பயனாக இன வாழ்வு அடைந்துள்ள உயர்வெல்லையின் தடம் அல்லது புறப் படிவமே அது.

பண்பாடு **இறந்தகாலம்** தழுவியது. காலத் தொடர்ச்சி குறிப்பது. இன வாழ்வின் இடையறாத படிப்படியான வளர்ச்சி, பண்பின் **நீடித்த பயிற்சி அல்லது பயிர்ப்பு** அதுவே.

பண்பு எதிர்காலம் தழுவியது. அதே சமயம் அதுவே **முக்காலம் அளாவிய**தாகவும் இயல்கிறது. இறந்த காலப் பண்பாட்டின் பயனாய், நிகழ்காலத்தில் உயிர்த் துடிப்புடன் நிலவி, வருங்காலத்துக்குரிய கரு உயிர் மூலமாய் அது அமைகிறது.

நிகழ்காலம் தொடர்ச்சியற்றது. ஒரு கணப்போதில் தோன்றி மறைவது. ஒரு குறிப்பிட்ட காலத்துடன் அல்லது ஊழியுடனேயே, நாகரிகம் என்ற சொல் வழங்குவதன் காரணம் இது. காலங் குறிக்காமலே நாடு, உலகம், திசைகளெனும் இடப்பரப்புக்களுடன் வழங்கு

வதும் அதன் நிகழ்கால நோக்கே தவிர வேறன்று. நிகழ் கால நோக்கு புறநோக்கு. தனி மனிதனிடத்தில் காணப்படும் இனப் பண்பாட்டின் தடத்தை வள்ளுவர் 'நயத்தக்க நாகரிகம்' என்றது இதனாலேயேயாகும்.

இன வாழ்வாகிய ஆற்றுக்கு நாடு, உலகம் ஆகியவை இரு கரையும், கரை சார்ந்த நிலமும் போன்றவை. இவை இயங்காதவை. பண்பாடு ஆற்று நீரோட்டம். அது இயங்குவது, இயக்குவது. ஏற்றத்தாழ்வுடையது. கரை மீதும் நிலமீதும் அவற்றை ஊடறுத்துச் செல்லும் பண்பாடாகிய இன வெள்ளத்தின் தடங்கள், ஏற்றத் தாழ்வு வரைகளே நாகரிகம் ஆகும்.

இன வாழ்வு என்னும் வயல் அல்லது தோட்டத்தில். பண்பாடே வளரும் பயிர் அல்லது மரஞ்செடி கொடிகள். நாகரிகம், பண்பு ஆகிய இரண்டுமே அதன் விளைவுகள் ஆகும். ஆனால், நாகரிகம் பண்பாட்டின் புறவிளைவு, பயிரின் விளைவான வைக்கோல், தானியம்; மரஞ்செடி கொடிகளின் விளைவான தழைகுழை உரம், கட்டை, பணி மரம், காய்கனி போன்றது அது. இவை பயிர், மரஞ்செடி கொடிகளின் இன வாழ்வின் ஒரு தலைமுறை விளைவாய், இன வாழ்விலிருந்து அத் தலைமுறையிலேயே அகன்று விடுகின்றன. ஆனால் பண்பு பண்பாட்டின் அகவிளைவு. அது விதை போன்றது. பண்பாட்டின் பயன்மட்டுமல்ல, அதன் மூலமும் அதுவே. ஒரு தலைமுறையின் கனியாக, விதையாகப் பிறந்து அடுத்த தலைமுறையின் வித்தாக அது தலைமுறையுடன் தலைமுறை இணைப்பது ஆகிறது.

வித்து முந்தியதா, மரம் முந்தியதா? கோழி முந்தியதா, முட்டை முந்தியதா?—இவ்வாறு புதிர் போடுவதுண்டு. இனம், பண்பு ஆகியவற்றின் தொடர்புக்கும் இதே நிலை பொருந்தும். இரண்டில் எதுவும்

முந்தியதன்று, பிந்தியதன்று—இரண்டும் மாறி மாறிப் பின்னி வருபவை.

வித்து இல்லாமல் மரம் இல்லை. மரம் இல்லாமல் வித்து இல்லை. வித்து இருக்கும்வரை பயிருக்கு அழிவு கிடையாது. பயிர் இருக்கும்வரை வித்துக்குப் பஞ்சமில்லை. இதுபோல இனம் இருக்கும் வரை பண்பு உண்டு. பண்பு இருக்கும்வரை இனம் உண்டு. இனமே பண்பாக, பண்பே இனமாக ஒன்றை ஒன்று தழுவிப் பின்னி இயங்குகின்றன. அவற்றின் இன்றியமையாத் தொடர்பு இதுவே.

விதையையும் விதைபோன்ற இனக்கான் முளைகளையும் தமிழர் 'ஆயிரம் காலத்துப்பயிர்' என்று அருமைபட அழைப்பதுண்டு. இரண்டின் அருமைப்பாடும் அறிந்த இனம், பண்பார்ந்த உயிர்ப்பண்பு வளமுடைய இனம் தமிழினம்.

## 3. உடல், உடை, உயிர்

நாகரிகத்தை நாம் இனவாழ்வுக்குரிய உடை என்று குறித்தால், பண்பாடு அதன் உயிர் வளர்ச்சியுடைய உடல் ஆகும். பண்பு அதன் உயிராய் அமைவது.

உடை உடலுக்காக அமைவது, உடல்சார்ந்து இயங்குவது. உடலுக்கு இசைவது, உடலின் தோற்றம் ஓரளவு உடையது. ஆயினும், அது உடலுக்குப் புறம்பானது. உடல்போல இயங்காதது, வளராதது. ஏனெனில் அது உயிரற்ற சடப்பொருள். உடல் வளர வளர, அவ்வளர்ச்சிக்கேற்ப அது வளர்ச்சியின் ஒவ்வொரு படியிலும் மாற்றிப் புதிதாக உருவாக்கப்படுகிறது. உடை வளர்வது இவ்வகையிலேயே—அது உண்மையில் வளர்வதில்லை, மாறுவது, மாற்றப்படுவது மட்டுமே.

நாகரிகம் இது போல இனம் சார்ந்தே அமைவதானாலும், இனவாழ்வுடன் இயங்காது, வளராது. இன வளர்ச்சி, அதாவது பண்பாட்டின் படிகள் தோறும் அது அவற்றின் புறச்சின்னமாகத் தோடுபோலப் புதிது புதிதாக அமைக்கப்பட்டுக் கழற்றப்படுகின்றது. அது இவ்வாறு இனவாழ்வுக்குப் புறம்பானது. இனவாழ்வுடன் இனவாழ்வும் வளர்ச்சியும் பெற்று இயங்காதது ஆகும்.

உடலும் உயிரும் வாழும் காலத்திலேயே உடை அழிய முடியும். அளவொத்த மற்றொருவர் உடலுக்கு மாற முடியும். பூட்டிவைத்துப் பேணப்பட்டால், உடல் உயிர் ஆகியவற்றின் வாழ்வும் தலைமுறையும் கழிந்தபின்னும், புதிய தலைமுறையினர்க்கோ, வேறு ஒருவர்க்கோ பயன் படக் கூடும். நாகரிகமும் இது போலவே இனவாழ்வுக் காலத்திலேயே அழியலாம். இனத்துக்கு இனம், நாட்டுக்கு நாடு தொத்தித் தாவலாம். இனவாழ்வுக்குரிய காலம் கடந்து தாவிச் செல்லலாம்.

பண்பாடும் பண்பும் நாகரிகம் போன்றவையல்ல, உடைபோன்ற சடத்திறங்கள், இனவாழ்வுக்குப் புறம் பான திறங்கள் அல்ல. அவை உயிர்த்திறங்கள்—இயங்கும், வளரும் திறங்கள். அத்துடன் உடலும் உயிரும் போல அவை இடையறுது இணைந்து இயங்குபவை. அவை இனம்விட்டு இனமோ, நாடுவிட்டு நாடோ, காலம் தாவிக் காலமோ செல்லமாட்டா. ஆயினும், அவற்றிடையே சில முக்கியமான வேறுபாடுகளும் உண்டு.

உடல் உயிரின வாழ்வின் ஒரு தலைமுறைக்கே உரியது. ஆனால், உடலுடன் கூடிய உயிர் அதனை ஒரு தலைமுறை யெல்லையில் இயங்கவைப்பதும், வளரவைப்பதும் மட்டு மன்று. முந்திய தலைமுறையின் உருவையும் இன இயல்பையும் வாழும் உயிருக்கு அளிப்பதும், உடலழியுமுன் அடுத்த தலைமுறைக்குரிய உடலுயிர் அல்லது உடலுயிர்களை

உருவாக்கி விடுவதும் அதுவே. இது போலவே, பண்பு இனத்தலைமுறையின் உயிராகமட்டுமன்றி, இது உயிராகவும் இயங்குகிறது. அது இனத்தின் ஒவ்வொரு தலைமுறையையும், அதாவது பண்பாட்டின் ஒவ்வோர்வ் அலையையும் இயக்கி வளர்ப்பதுடன், தலைமுறை கடந்து தலைமுறையாகப் பண்பாட்டைப் பெருக்கி வளர்க்கிறது.

உயிரினத்தில் இன உயிரின் அலையே உடலின் உயிரியக்கம், அதுபோலப் பண்பின் அலை அல்லது அலைகளே பண்பாடு. அது இனவாழ்வின் வளர்ச்சியில் வளரும், அதன் தளர்ச்சியில் தளர்வுறும், ஆனால், பண்போ, இன வாழ்வின் வளர்ச்சியிலே வளரும், அதன் தளர்ச்சியில் தளராது. உடல் தளர்வுற்ற அல்லது பிணியுற்ற போன, அதில் உயிராற்றலை இயக்கித் தளர்வும் நோயும் அகற்றப் பாடுபடும் உயிர்போல, பண்பாட்டின் தளர்ச்சியையே பண்பு மறுமலர்ச்சி யூட்டித் தளர்வகற்றப் போராடும். தளர்ச்சி பெரிதானால் பண்பாடழியுமுன் அது புரட்சி அல்லது புதுமலர்ச்சி யூட்டிப் புதிய தலைமுறையின் புதுப் பண்பாடுகளையே உருவாக்கிவிடும் திறமுடையது.

உயிர் இவ்வாறு தலைமுறை கடந்து தலைமுறையாக உடலைமட்டுமன்றி உடலோடு கூடிய உயிரையும் ஒன்று பலவாகப் பெருக்குவது போல, பண்பு பண்பாட்டலை கடந்து பண்பாட்டை மட்டுமின்றிப் பண்பையே—தன்னையே—பெருக்கி வளர்வது ஆகும். ஒரே இனப்பண்பு இவ்வாறு வேறு வேறு பண்பாட்டலைகளுடன் வேறு வேறு கிளைப்பண்புகளையும் உருவாக்குவதனாலேயே, இனம் கிளையினங்களாகப் பல்வகைப் பெருக்கமுற்றுப் பரவுகிறது.

பண்பாடு நாகரிகம் போல இனம்விட்டு இனம், நாடு விட்டு நாடு, காலம் விட்டுக் காலம் தாவுவதில்லை யானாலும் ஒரே காலத்தில் இட அணுக்கத்தால் நெருங்கிப் பழகிய

...MARA PUBLIC LIBRA... 3 JUL

அல்லது காலத்தில் அணுக்கத் தொடர்புடைய இனங்களுக்கு மெல்லப் பரவவல்லது. ஒலி, காற்று ஆகியவை நேர்திசையாகச் செல்வதுடன் ஒரு சிறிது பக்கவாட்டிலும் செல்வது போன்றதே இது. ஆனால், பண்பு நேர் வழியாகப் பண்பாட்டின் அலைமூலமாக, இனவாழ்வின் தலைமுறைகள் மூலமாக வன்றி,பக்கவாட்டில் இனத்துக்கு இனமோ, நாட்டுக்கு நாடோ, காலத்துக்குக் காலமோ ஒரு சிறிதும் தாவிச் செல்வதன்று. இன வாழ்வில், இனத் தலைமுறைகளில், இனத்திலிருந்து பிறந்து கிளைக்கும் கிளை யினங்களில் மட்டுமே அது இயங்கவல்லது.

பண்பு இவ்வாறு இனத்தின் பழமையுடன் பழகிய காரணத்தால்தான், அது என்றும் இனத்தை விட்டகலாத இன உயிர் ஆகின்றது. தமிழில் பழமை என்ற சொல்லுடன் அதன் தொடர்பும் இதுவே.

## 4. இனமும் குடும்பமும்

நீடித்த உழைப்பின் பின் சேமிக்கப்படும் உழைப்பின் முதலீடு போன்றது பண்பு. உழைப்பின் பயனான ஊதிய முழுவதும் முதலாவதில்லை. சிக்கன வாழ்வற்றவனுக்கு அதன் ஒரு சிறு கூறு கூட மீதமாவதில்லை. ஊதியத்துக்கு மேல் செலவிட்டுக் கடனாளியாகுபவரும், உழைக்காமலே காலந்தள்ளும் வீணர்களும், உழைக்காமல் பிறர் உழைப்பின் பயனைத் திருடி, கொள்ளையிட்டு, பசப்பிக் கெஞ்சி இரந்து வாழ்பவரும் இல்லாமலில்லை. ஆனால், இத்தனை அவலநிலைகளிலிருந்தும் தப்பிச் சிறுகச்சிறுகச் சேர்ப்பவன் உண்மைப் பண்புமுதல் உடைய பண்புச் செல்வனாகிறான். சிக்கனத்துடனும் உழைப்புடனும் நீடிக்கும் செல்வனது முதல் பெருக்கமுற்று வளரும் முதலுக்கு முதலீடாவது போல, பண்பு வழியும் பண்பாட்டு வழியும் வழுவாது நீடித்து வாழும் இனங்கள் உயிர்ப் பண்புடைய இனங்க

க. திருநாவுக்கரசு
M. A. (தமிழ்) M. A (வரலாறு)
LITT. DIP. IN LINGA


ளாகவும், உயிர்ப் பண்பு வளமுடைய இனங்களாகவும், உயிர்ப் பண்பு வளத்தின் செறிவான பொங்கல் வள முடைய இனங்களாகவும் நின்று வளரும்.

இறுதி நிலையடைந்த இனமே, பழமையும் பழமையின் உயிர்ப்பயனும் வாய்க்கப்பெற்ற இனமே சாவா மூவா இன நலனும், பொங்கல் மாவளமுமுடைய இனம் ஆகும். தமிழினம் உலகில் அத்தகைய இனமாய் நிலவுகிறது.

பழமை மிக்க இனமெல்லாம் பண்பில் முதிர்ந்த இன மாக இருந்து தீரவேண்டு மென்பதில்லை. ஏனெனில் **பண்பின் பழமை** மட்டுமே பண்பு முதிர்ச்சி தரும். ஆனால், பண்பில் முதிர்ந்த இனங்கள் யாவுமே பழமைமிக்க இன மாய் அமைவது ஒருதலை. உழைப்பு, ஊதியம், சிக்கனம் சேமிப்பு, முதலீடு, முதலீட்டுப் பெருக்கம் என்ற மேற் கண்ட விளக்கம் இதனை வலியுறுத்தும். இவற்றுக்குச் சரியான பண்பின் படிகள் அனுபவ அறிவு வளர்ச்சி, இனப்பாசம், ஒப்புரவு அல்லது இனத்தின் சரிசமத்துவம் பேணல், இனச்சார்பான தன்மறுப்புப்பழக்கம் (இனநலத் துக்கான தியாக வாழ்வு), இனங்கடந்த இனநலம் (பேரினத் துக்குரிய இனத்தின் தொண்டு, இனத்தின் தியாகம்) ஆகியவைகளே. பண்பின் பழமை இப்படிகளின் வழி மேற் சென்றாலன்றி இனம் பொங்கு மாவள இனம் ஆக முடி யாது. ஏனெனில் பண்பும் பழமையும் இன்றியமையாத் தொடர்புடையவையாயினும், பழமை பண்பின் காலக் கூறு மட்டுமே. அது பண்பின் உடல் போன்றது. மற்ற ஐந்துமே அதன் பிற உயிர்க்கூறுகள் ஆகும்.

இனம் என்று சொல்லும்போதே அது குறுகிய நோக் குடையது என்று சிலர் எண்ணுகின்றனர். இது இனம் என்ற சொல் பற்றிய அறியாமை, அது பற்றிய தவறான கருத்து ஆகியவற்றின் பயனே யாகும். உண்மையில் இனம் என்ற சொல் நேர்வழி மரபாகப் பண்பு வளர்ப்பதாயினும்,

பிறப்பு வேறுபாட்டு அடிப்படையானது அல்ல. ஏனெனில் மனித இனம் மட்டுமல்ல, உயிரினங்கள் யாவுமே ஒரே அடிப்படைப் பிறப்புடையவைதான். தவிர, இனம் பண் படிப்படையாகப் பிறப்பது. அச்சொல்லுக்கு ஒரு பொருள் வரையறை உண்டு, அதுவே அதன் பண்பு வரையறை. இது நீங்கலாக அது வேறெவ் வரையறையும் அற்றது.

இனம் என்று நாம் குறிக்கும் குழுக்கள் எவையும் மற்ற இனங்கள் அல்லது குழுக்களுடன் தொடர்பற்றவை அல்ல. ஏனெனில் எல்லா மனித இனங்களும் மனிதப் பேரினத்தில் அடங்குவன. மனிதப் பேரினம் பிற பேரினங் களுடன் இணைந்து பெரும் பேரினமான உயிரினத்தில் அடங்குவது. உயிரினம் உயிர்ப் பொருள் தொகுதி (Animate beings) என்ற மாபெரும் பேரினத்திலும், அது இயற்கை யென்னும் இன முழுமையிலும் அடங்குவனவே.

இனத்தின் ஒருமையையும் ஒன்றுபடுத்தும் அரும் பண்பையும் அதன் பேரெல்லையைவிடச் சிற்றெல்லையே திறம்படக் காட்டும். ஏனெனில் பேரெல்லையாகிய முழுமை அதன் அகல் விரிவு மட்டுமே. அதன் உறுபெருஞ் செறி வைச் சிற்றெல்லையிலேயே காணவேண்டும்.

இனம் பேரினத்தின் பிரிவாவதுபோல, இனத்தின் பிரிவான சிறிய இனம் கிளையினம் ஆகிறது கிளையினம் அதனினும் சிறிய துணைக் கிளையினமாக, அது பின்னும் சிறு துணைக் கிளையாக இவ்வாறு எல்லை குறுகிக் கொண்டே செல்கிறது. பிரிவுற முடியாத சிறு இனமாக அமையும் சிற்றெல்லை குடும்பமே.

இனத்தின் எல்லாப் பண்புகளும் முழுதுறழ் அளவில் அல்லது பெரும் பேரளவில் இயல்பாக நிரம்பிச் செறி வுற்ற இனம் குடும்பமே. இனத்தின் முதற் பண்புத் திற மாகிய அனுபவ அறிவின் வளர்ச்சி ஒன்றையே அது இனத்

திலிருந்து எதிர்பார்க்கிறது. இனப்பாசம், ஒப்புரவு, இனத் தன் மறுப்பு ஆகிய அடுத்த மூன்று திறங்களும் உலகின் மற்ற எந்த எல்லை விரிவான இனங்களிலும் அமைந்துள்ளதைவிடக் குடும்பத்திலேயே சிறக்க அமைவு பெற்றுள்ளது. ஆனால், இவற்றில் தாய் இனத்தில் பண்பு வளம் பற்றிய ஏதேனும் குறை இருந்தால் கூட, கடைசித் திறத்தினால் இவை சரியீடு செய்யப்பட்டு விடுகின்றன. இனங்கடந்த இனநலம் குடும்பத்தில் இயல்பாக எளிதில் அமைந்ததுபோல, உலகில் எல்லை விரிந்த எந்த இனத்திலும் அமையவில்லை. ஏனெனில் ஒவ்வொரு குடும்பமும்—அது மிகமிகப் பண்படாத படியிலுள்ள காட்டுமிராண்டிக் கும்பலாய் இருந்தாலல்லாமல்—அடுத்த தலைமுறை வாழ்வுக்கு இன்னொரு குடும்பத்தின் உறவையே நாடித்தீரும்!

குடும்பம் இனத்தின் சிற்றெல்லையானாலும், பண்பில் பேரெல்லையினும் சிறந்து விளங்குவதைக் கண்டவர் தமிழர். ஏனெனில் அதை அவ்வாறு விளங்கச் செய்தவர்கள் அவர்களே.

முழுப் பேரினமான இயற்கையின் தலைவர் கடவுள். அவர் புகழ் எல்லையற்றது. ஆனால் தமிழர் மட்டுமன்றி உலக முழுமையும் அவர் எல்லையற்ற புகழுக்குக் கூறும் உவமை ஒன்றே ஒன்றுதான்—அனைத்துலகுக்கும் ஒரு **தந்தை**, அனைத்துயிருக்கும் **ஒரு தாய்**—அதைவிட உயர்ந்த புகழ் கடவுளுக்குக்கூடக் கிடையாது. அன எல்லையில் நாட்டின் அரசனுக்கும் 'நாட்டுக்குத் தந்தை', 'நாட்டுக்குத் தாய்,' என்பதைவிட உயர்ந்த புகழ்ச்சி எதுவாக அருக்க முடியும் ? அதுமட்டுமோ? அனைத்துயிருக்கும், மனிதரனைவருக்கும் உரிய ஒப்புரவுத் தொடர்பை **அண்ணன்—தம்பி, அக்காள்—தங்கை** என்பவற்றைவிடச் சிறப்பாகக்காட்டும் சொற்கள் எவைதான் உண்டு ?

உலகெலாம் பொதுவாக இன்று அமைந்துள்ள இந்தப் பண்பை மொழி மரபில், இலக்கிய இலக்கண மரபில், ஒழுக்க மரபில், சமய மரபில் பதிய வைத்தவன் தமிழன் ஒருவனே.

குடும்பத் தலைமை ஒன்று, ஆனால், அதனைத் தாங்குபவர் இருவர், இரு பாலார். ஈருடலில் ஒருயிராக ஒருமனப் பட்ட ஒருமை இருவர். இத்துணைமை தோன்றக் குடும்பத் தலைமை ஏற்குமுன்பே, குடும்பம் தோற்றுவிக்க அவாவிய நிலையிலேயே, காதல் துணைவர் இருவரையும் தமிழர் ஒரு நிலைப்படுத்தித் தலைவன், தலைவி என்றனர்.

உலகெங்கும் பலருக்கு ஒருவன் தலைவன், பல அடியாட்களுக்கு ஓர் ஆண்டை தலைவன் என்பதே வழக்காயிருக்கிறது. தமிழன் பண்டே குடும்பத் தலைமையை வேறொரு வகையில் கண்டான்.

குடும்பத்தின் உறுப்பினர் இருவர்தான்! ஆனால் இருவரும் தலைவர்!! ஒருவருக்கொருவர் தலைவர்!!!

வண்டி ஓடத்திலே, ஓடம் வண்டியிலே என்ற அருந் தொடர்பறிந்த தமிழன், தலைவனை ஆள ஒரு தலைவி, தலைவியை ஆள ஒரு தலைவன் வகுத்தான்.

தமிழில் ஆண் (ஆண்மை) என்ற சொல்லின் மூல வேர் ஆள். இதுவே இருபால் பொதுவாக மனிதரையும் குறிக்கும். "பெருமாள்" கடவுளையே சுட்டவல்லது! ஆனால், இதுவேதான் பெண்பாலுக்குச் சிறப்பான விகுதியும் ஆகும்!

தமிழில் மட்டுமல்ல, தமிழின மொழிகளிலும் இப் பண்பு பரவியுள்ளது. மலையாளத்தில் அவள் என்பதற் குரிய சொல் அயாள் (அ—ஆள், அவ்வாள்) என்பதுதான். தெலுங்கிலோ ஆளைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லான 'ஆடவன்' விகுதிமட்டும் மாறிப் பெண்ணைக் குறிக்கிறது.

குடும்ப எல்லையிலுள்ள இந்த இருபால் துணைமைத் தலைமை இன எல்லையில் நாட்டிலோ, முழுப்பேரின எல்லையில் இயற்கையிலோ இருக்க முடியாது. இந்த இரண்டு எல்லைத் தலைமையையும் தமிழர் பொதுப்பால் சுட்டி இறை என்றனர். இறைவன் என்ற சொல் அரசனைச் சுட்டும், எனினும் இறைவி என்ற சொல் அரசியைச் சுட்டாது; தலைவி, கடவுள் என்ற பொருள் மட்டுமே கொள்ளும் என்பதும் இங்கே குறிக்கத் தக்கது. ஆனால், முழுஇன எல்லையின் இறைவனைப்பொதுப்பாலால் தமிழர் 'தலைவர்' என்றே குறித்தனர்.

இருபால் வேறுபாடற்ற இறைவனைக் குறிக்கக் கடவுள், கந்தழி, வள்ளி என்ற சொற்கள் தமிழுக்கே சிறப் பானவை. ஏனை மொழிகளுக்குக் கிடையா. ஆனால், இறைவன் தலைமை குறிக்கும் பால்பொதுச் சொல்லாகவும் 'தலைவர்' தமிழில் அமைந்ததுபோல வேறு எம்மொழி யிலும் அமையவில்லை. இதைப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே சைவ சித்தாந்தநூற் பேராசிரியர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.

ஆண் பெண் சுட்டாத பலர்பாலும் நன்மதிப்பு ஒருமைப்பாலும் தமிழுக்கும் தமிழின மொழிகளுக்கும் மட்டுமே உரியன. 9-ஆம் நூற்றுண்டுக்குப்பின் சமஸ்கிருத மும் இதைப் பின்பற்றி ஆண்பால் பன்மையை நன்மதிப் பொருமையாக்க முயன்றதுண்டு. ஆனால், அது இவ்வகை யில் வெற்றி காணவில்லை.

## 5. உயிர்ப் பண்பு

செடியினங்களிலே வித்தில்லாதவை உண்டு. வித்துடைய வற்றிலும் சில உயிர் விதையற்றவை. இவை மனித ரால் பேணி வளர்க்கப்பட்டாலன்றித் தாமாக இயற்கை வெளியில் பரவி வளரமுடியாதவை. இவற்றுள் சில

நாளடைவில் விதையையே இழந்து விடுவதுகூட உண்டு. விதையுடைய நெல்லும், விதையை இழந்துவிட்ட அல்லது இழந்துவிடும் நிலையில் உள்ள கரும்பும் வாழையும் வனமல்லியும் (ரோஜாவும்) இதற்குச்சான்றுகள். ஆனால் உயிர் விதையுடைய செடி கொடி மரங்கள் மிகப் பல. அவை பயிரிடுவாரும் பேணுவாரும் இல்லாமலே இயல்பாகப் பரவி வளம் பெறுவன.

அண்டை அயல் செடியினங்களுக்கும் உயிரினங்களுக்கும் கூட வளமும் உரமும் தந்து வளரும் செடி கொடி மரங்களும் உண்டு.

மனித உலகில் தமக்கெனப் பண்பு உருவாக்கிக் கொண்டு தனி இனமாக முதிர்வுபெருத குழுக்கள் உண்டு. மற்ற இனங்களிலிருந்து பிரித்தறியும் வகையிலேயே இவற்றையும் நாம் சில சமயம் முதிர்ந்த இனங்கள் என்றும், முதிரா இனங்களென்றும் உபசார வழக்காகக் குறிக்கிருேம். விதையற்ற அல்லது விதையிழந்த செடியினம் போன்றவை இவை.

இனமாக முதிர்வுற்ற குழுக்களிலும் சில இம் முதிர்வுருக் குழுக்களிலிருந்து வேறுபட்டன அல்ல. அவை மாண்ட இனங்கள் அல்லது அருகே சூழலில் உள்ள இனங்களின் நாகரிகங்களை மேற்கொண்டோ, அவற்றின் பண்பாட்டொளியில் நீடித்துப் பயின்ருேதான் பண்புடைய இனங்களாகச் சிறிது காலம் திகழ்கின்றன. பேணி வளர்க்கப்படும் உயிர் விதையற்ற செடியினங்கள் போன்றவை இவை.

முதிர்வுற்ற பிற இனங்களின் நாகரிகம், அல்லது நாகரிகத்துடன் பண் பாட்டிலும் நீடித்துப் பயின்ற துணைப் பண்பாடு சில இனங்களின் பண்பின்மீது சுமத்தப் பட்ட பளுவாக இயல்கின்றது. அப் பளுவின் கீழே பண்பு

செயலற்றதாகி விடுகிறது. ஏனெனில் அவ்வயல் நாகரிகம். பண்பாடு ஆகியவற்றைச் செரிமானம் செய்து தமதாக்கி, தம் பண்பில் தாம் புதிதாக வளரும் ஆற்றல் அவற்றுக்கு இல்லை. இவை விதையிழந்து விட்ட அல்லது இழந்து வரும் செடியினங்கள் போன்றவை.

இன்றைய உலகில் தமிழினம், சீன இனம் நீங்கலான பிற இனங்களின் நிலை கிட்டத்தட்ட இதுவே என்பது ஊன்றிக் கவனிப்பவர்க்கு விளங்கும்.

இவை போலன்றித் தம் பண்பின் மீதே தமக்கெனப் பண்பாடு வகுத்து, அதன் விளைவாக நாகரிகம் உருவாக்கிக் கொண்டு வளரும் உயர் நாகரிக இனங்களே உண்மையில் பண்பு வாய்ந்த இனங்கள். இவை உயிர் விதையையுடைய செடி கொடி மர இனங்கள் போன்றவை.

செடியின் விதையைச் செடியே விளைவித்து விட்டதாகவும், உயிரினத்தின் முட்டையை அல்லது கருவை உயிரினமே பெற்று விடுவதாகவும் நாம் பொதுவாகக் கருதுகிறோம். இது பொதுவான உண்மை; முழு உண்மை அன்று. ஏனெனில் விதையும் முட்டையும் கருவும் உயிரின் முந்திய தலை முறை வாழ்வினை மட்டும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கவில்லை, இனவாழ்வு முழுவதையும்—இனத்தின் தாய் இனம், பேரினம்—பேரினத்தின் மூதாதை இனங்கள், முழுப் பேரினமான இயற்கை ஆகியவற்றின் வாழ்வு முழுவதையும் தம்முள் அடக்கிக் கொண்டிருக்கின்றன.

விதை, முட்டை, கரு ஆகிய மூன்மற்கும் தமிழர் உயிரின் அண்டம் என்றும், இயற்கை அண்டத்துக்குப் பிண்டம் என்றும் பெயர் வைத்திருக்கும் முரண்பாட்டின் விளக்கம் இதுவே. இன்று இரு சொற்களும் குழப்பமடைந்து தெளிந்து அண்டம் பேரெல்லையையும், பிண்டம் சிற்றெல்லையையும் மட்டும் குறிக்கிறது.

தமிழிலக்கண மரபில் பிண்டம் முழுமை குறிப்பது ஆகும்.

“அண்டத்திலுள்ளது பிண்டத்திலு முண்டு”என்பது தமிழகப் பழமொழிகளில் ஒன்று. அண்டம், பிண்டம் ஆகியவற்றின் தெளிந்த புதுப்பொருளிலேயே இதை நாம் மேற்கொள்ளலாம். ஏனெனில் பொருள் மாறு பட்டால் வாசகத்தின் கருத்து மாறுபடாது.

இயற்கையில் உயிரற்ற பொருள், உயிர்ப் பொருள் என்ற வேறுபாடு காண்கிறோம். ஆனால், உயிர்ப்பொருளெல் லாம் உயிரியக்கமுடைய உயிரினப் பொருளே. உடல், உயிர் என்ற நம் பாகுபாட்டில் உடல் இந்த உயிரிலாப் பொருளின் கூற்றையே குறிக்கிறது. கரு நிலையில் இயற்கை யின் உயிரிலாப் பொருள் நிலையிலிருந்து உச்ச உயிரினப் படி வரையிலும் உயிர் அடைந்துள்ள எல்லா இனமலர்ச் சிப்படிகளின் வாழ்வும், இனத்தின் எல்லா மலர்ச்சிப் படி களும் கால எல்லையில் மட்டும் சுருங்கி கருநிலைவளர்ச்சிப் படியிலும் அதனைத் தொடர்ந்து முதிரா இளமைப் படியிலும் இடம் பெறுகின்றன.

மனிதக் குழந்தை இதனாலேயே கருவில் புல், செடி, கொடி, மரம்; புழு, பூச்சி, நீர் வாழ்வன, ஊர்வன ஆகிய படிகளை எல்லாம் கடந்து தாய் வயிற்றிலிருந்து வெளிவரு கின்றது. ஆனால், பிறந்த பின் மீண்டும் புழுப்பூச்சி நிலை, தவழ் நிலை, ஊரும் நிலை கடந்தே அது உயர் உயிரினங்களின் நடை நிலைக்கு வருகிறது. இதன்பின்னும் உடல்தான் மனித நிலை அடைந்துள்ளது—காட்டுமிராண்டி மனித நிலையிலிருந்து நாகரிகப் படிகளைக் குடும்பம், பள்ளி, கல் லூரிப்பருவங்கள் கடந்த பின்பே, அவன் முழு மனிதனாக, நாகரிக மனித உலகின் உரிமை உறுப்பினனாக மணப் பருவம் எய்துகிறான்.

கருவுயிர்க்கும் உயிரினங்கள், முட்டையிடும் உயிரினங்கள் ஆகியவற்றைப் போலவே உயிர் விதையுடைய செடியினங்கள் இவ்வாறு ஒவ்வொரு தலை முறையிலும் நேரே இயற்கையிலிருந்தே வளம் பெறும் மரபுடையவையாகும். உயிர்ப் பண்புடைய இனங்களும் இதுபோல இயற்கையின் மூலவளத்திலிருந்து இடையறாத தொடர்பினையே பண்பாகக் கொண்ட இனங்கள் ஆவன.

பண்பு இனத்திலும் பேரினத்திலும் நேர்வழி மரபே உடையது. உயிர்ப் பண்பு முழுப் பேரினமான இயற்கையிலிருந்து இடையறாத நேர் வழி மரபு உடையது. அதன் உயிர்வளம் இயற்கையின் எல்லையற்ற மூலத் தலையூற்றிலிருந்து வளம் பெறுவதாலேயே, அது கன்னித் தாய் வளமாக இயங்கமுடிகிறது.

தமிழின் கன்னித் தாய்மை வளத்துக்குரிய நுட்ப விளக்கம் இது.

## 6. இன ஒட்டின் படிப்பினை

பண்பாட்டுடன் பண்பாடு நீடித்துப் பழகுவதனால் பண்பாடு வளம்பெற முடியும். ஆனால்,பண்பின் வழி வரும் உயிர்ப் பண்பாட்டு வளத்துக்கு அது ஈடாகாது.

பண்பாட்டு வளத்துக்கும் உயிர்ப் பண்பு வளத்துக்கும் உள்ள வேறுபாட்டை இன ஒட்டு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

இரண்டு இனங்களை ஒட்டவைத்து, இரண்டு இனப் பண்புகளையும் விட மேம்பாடுடைய பண்பு வாய்ந்ததாக ஒரு மூன்றும் இனத்தைப் படைத்துவிடும் முயற்சியே இன ஒட்டு. பழங்காலத்திலிருந்தே மனிதன் செடியினங்களிலும் உயிரினங்களிலும் இதைப் பயின்று சிறிதும் பெரிதுமான வெற்றிகள் கண்டுள்ளான். ஆனால், காட்டில் திரிந்த

ஆடு, மாடு, குதிரை, கழுதை ஆகியவற்றைப் பழக்கி அவன் அடைந்த அளவு பயனை இத்துறையில் அவன் அடையவில்லை எனலாம்.

இன ஒட்டு வெற்றியடைந்த அளவிலே, அது மனிதனுக்கு இனப் பண்பு பற்றிய சில படிப்பினைகள் தந்துள்ளன.

இன ஒட்டு வெற்றியடைய வேண்டுமானால், இரு செய்திகளில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

முதலில் ஒட்ட வேண்டும் இனங்கள் வேறு வேறாக மட்டுமல்ல, வேறு வேறு பண்புடையவையாக, ஒருங்கே விரும்பத்தக்க வேறு வேறு நற்பண்புடையவையாக இருக்க வேண்டும். இல்லையென்றால் ஒட்டினால் மேம்பாடு இராது. பயன், ஆதாயம் இராது.

இரண்டாவதாக, ஒட்டும் இனங்கள் முற்றிலும் வேறு வேறாக இருந்தால். அவை ஒட்டவேமாட்டா. இரண்டும் உயிர்த் தொடர்புடையனவாக, ஒரே மூல இனத்திலிருந்து தோன்றியனவாக மட்டுமின்றி மிகுதொலைவற்ற கிளையினங்களாக, அதாவது கூடிய மட்டும் குறைந்த தொலைவுடைய கிளையினங்களாக இருத்தல்வேண்டும். அவற்றின் பண்பு வேறுபாடு அடிப்படைப் பண்பு ஒற்றுமைமீது கட்டமைக்கப்பட்டதாக, மூல ஒருமையின் கிளைவிரிவாக அமைந்திருத்தல் வேண்டும்.

ஒட்டவேண்டும் இனங்கள் எந்த அளவு தொலைவுடையவையா யிருத்தல் நலம், எந்த அளவு அணிமையுடையவையாய் இருத்தல் இன்றியமையாதது என்பதை உயிர் நூலார் இன்னும் வரையறுக்க வழிகாணவில்லை. இது வருங்கால உயிர்நூல் ஆராய்ச்சிகளுக்கே உரியது ஆகும்.

இன ஒட்டின் இந்த இருமைத் தொடர்பையே மனித நாகரிகம் மணத்தொடர்பின் வளத்துக்கு மேற்கொண்டுள்ளது, மேற்கொண்டு வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது. பந்தயக் குதிரைகள், வேட்டை நாய்கள் பயிர்ப்பு வகையிலும் இரு சார் மரபுகளின் அணுக்கத் தொலேகள் இரண்டு பற்றியும், வேறுபாடுகளின் சிறப்புப் பற்றியும் போதிய கவனம் செலுத்தப்படுகிறது.

இன ஒட்டுக்களிலுள்ள மற்ருெரு படிப்பினே வெற்றிகரமான இன ஒட்டுக்களின் அனுபவத்தால் ஏற்பட்டதேயாகும்.

வெற்றிகரமான இன ஒட்டுக்களுக்குக் கரும்பு, வாழை, வனமல்லிகை (ரோஜா), சீமைக்கிச்சிலி (ஆரஞ்சு), சீமைப் பேரிக்காய் (Apple), கோவேறுகழுதை ஆகியவற்றைச் சான்றுகளாகக் கூறலாம்.

இவற்றிலுள்ள செடி ஒட்டுக்கள் சதுப்புநிலங்களிலோ பாலேகளிலோ காடாய் வளர்ந்த செடிகள், காட்டில் அழகு, சுவை, அல்லது மணம் வாய்ந்த செடியினத்துடன் ஒட்ட வைத்தவையே. குறைந்த உணவுடன் நீடித்த உழைப்பும் உடலுறுதியும் உடைய கழுதை யினத்தோடு உடலழகும் வேகமும் உடைய குதிரையை ஒட்டவைத்ததே கோவேறு கழுதை. இவ்வொட்டுக்கள் கிட்டத்தட்ட அனேத்துமே கீழ்த் திசை மக்களின் முயற்சிகள் ஆகும்.

இவ்வொட்டுக்களில் பண்பாட்டு ஆதாயம் உண்டு என்பது வெளிப்படை, ஆனால், பண்பில், இனத்திறத்தில், உயிராற்றலில் இவற்றுக்குச் சரியீடான இழப்பையும் பேரளவில் காண்கிருேம். ஒட்டுக்கள் அருமுயற்சியுடனேயே பேணப்படுவன, அவற்றுக்கு உயிரூறு மிகுதி என்பதை வனமல்லிகை காட்டுகிறது. அவை விதையாற்ற விழப்பதை வனமல்லிகையும் வாழையும் கரும்பும் காட்டு

கின்றன. ஆனால், கோவேறு கழுதை தரும் படிப்பினைகள் தாம் தெளிவானவை, உயிர் முக்கியத்துவம் வாய்ந்தவை.

கோவேறு கழுதை, கோவேறு கழுதையை ஈனுவதில்லை. ஏனெனில் அது அலியாகவே பிறக்கிறது. ஒவ்வொரு தலைமுறையிலும் அது ஒட்டினாலேயே உருவாகிறது. ஒட்டின் பயனாக, புதுஉயிர் உயிராற்றலைமட்டுமல்ல, அதற்கு மூலமான ஆண் பெண்பாலின வேறுபாட்டையே அடியோடு இழந்து வருவதை இது காட்டுகிறது.

மேலும் கழுதை குதிரை இரண்டும் மிகமிக அணிமையான கிளை இனங்களே. கழுதை ஆணுடன் குதிரைப் பெண் இணைவதன் மூலமாகவே கோவேறு கழுதை உருவாகிறது. கழுதைப் பெண் குதிரை ஆணுடன் இணைவதால் இவ்வெற்றி ஏற்படுவதில்லை. இரண்டு கிளையினங்களில் கழுதை இனமே மூத்த இனம்; தாய் இனம் என்றும், அதுவே பொலிவூட்டும் இனமாக இருப்பதன் காரணம் இதுவே என்றும் விலங்கு நூலார் கூறுகின்றனர்.

## 7. பொங்குமாவளம்

இனப்பண்பாடுகள் கூடிப் பண்பாட்டு வளத்தில் ஆதாயம் காணுந்தோறும், இனப்பண்பு வளத்தில் இழப்பு மிகுதியாகிறது. பண்பாட்டு வளம், பண்பு வளம் ஆகியவற்றின் இவ் வெதிரெதிர்ப் போக்கிலிருந்து விலகும் வழிகள் மூன்று உண்டு.

முதலாவதாக, வேறு வேறு பண்புச் சிறப்புக்களுடைய இரண்டு சரிசம இனங்களுக்குப் பதிலாக, பண்பாட்டுச் சிறப்புடைய ஓர் இனத்துடன் கிட்டத்தட்டப் பண்பாட்டுச் சிறப்பற்ற ஓர் இனம் இணைதல் கூடும். இதில் பண்பாட்டு ஆதாயம் கிடையாது. ஆனால், இழப்புக் கிடையாது. ஏனெனில் இங்கே பண்பாடு கூடுவிட்டும்

கூடு பாய்ந்துவிடும். பண்பாடுடைய இனம் தன்னுரிமை இழந்து அழியும், அல்லது பண்பாடிழக்கும். பண்பாடற்ற இனம் அச்சுமையை எளிதில் ஏற்கும். புதிய ஆற்றலுடன் சில தொலை அது கொண்டு விரைந்து ஓடுவதுகூட நடவாத தன்று. ஆனால், புதிய இனத்தின் முதிராப் பண்பு இம் முதிர் பண்பாட்டின் பளுவினால் முதிரா நிலையிலேயே செய விழந்துவிடும்.

உலக வரலாற்றில் இதற்குப் பல சான்றுகள் உண்டு நடுநிலக் கடலக இனத்துடன் கலந்த மேலையுலகின் தென் ஆரியக் கிளை புகழ்வாய்ந்த கிரேக்க உரோம நாகரி கங்களை உருவாக்கி, வானவில் வண்ணத்துடன் சிலகாலம் நிலவி அழிந்தது. கீழ்த்திசையில் பாரசிகத்திலும் கிட்டத் தட்ட இந்நிலையே நேர்ந்தது. சிந்து கங்கை வெளியில் திராவிட நாகரிகமும் பண்பாடும் ஏற்று வளர்ந்த கீழை ஆரியக் கிளையின் நிலையும் இதற்கு மிகுதி மாறுபட்ட தன்று. ஆனால் திராவிட இனத்தவர் இங்கே தன்னுரிமை இழந்தும் முற்றிலும் அழியவில்லை. புதிய பெயர்களுடன் புத்தினங்களாக நீடித்தனர். அத்துடன் கலப்பால் மிகுதி பாதிக்கப்படாத தென்திசைத் திராவிட நாகரிகங்களின் அணுக்கத் தொடர்பும் அவற்றுக்கு உயிர்த்தூண்டுதல் தருகின்றது. சிந்து கங்கை வெளியிலுள்ள ஆரிய நாகரிகம் தளர்ந்து தளர்ந்து நலிவுற்றும், இருநாறு நானூறு ஆண்டு களுக்கு ஒரு மொழித் தலைமுறை கண்டும் முற்றிலும் அழிவுறாமல் இன்னும் நீடித்து வருவதன் காரணம் இதுவே.

பண்பற்ற இனங்கள் உயிர்ப்பண்புடைய இனங் களின் பண்பாட்டினைப் பளிங்குபோல் உயிர்ப் பொலிவுற நிழலிட்டுக் காட்ட முடியும். ஆனால், உயிர் வேறு, உயிர்ப் பொலிவு வேறு. முன்னது நீடித்து வளரும். பின்னது நீடிக்காது, வளராது.

இரண்டாவதாக உயிர்த் தொடர்புடைய, ஆனால், சிறிது வேறுபாடுடைய இனங்கள் ஒன்று கூடி, சரிசம நிலையில் கொடுத்து வாங்கி, இரண்டறக் கலந்து ஒன்று பட்டுவிட முடியும். இங்கே இன இழப்பு மிகுதி இல்லை. ஆதாயம் பேரளவாகும்.

இதற்கு வரலாற்றில் இரண்டு சான்றுகளும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தொடர்பில் மறைந்து நிலவும் ஒரு சான்றும் காணலாம்.

இங்கிலாந்தில் கி. பி. 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் டேனியரும், 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் நார்மானியரும் கொள்ளைக்காரராகவும் வெற்றி வீரராகவும் வந்து குடியேறினர். பழைய ஆங்கிலோ சாக்ஸானியருடன் இவர்களுடன் மூவேறான இவர்களின் மொழிகளும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்குள்ளாகவும் கி. பி. 14-ஆம் நூற்றாண்டுக்குள்ளாகவும் முற்றிலும் ஒன்றுபட்டுவிட்டன. ஆங்கில மக்கள் நாகரிக வளர்ச்சியில் இடையிடையே இதனால் சிறிது சிறிது தடை ஏற்பட்டபோதும், 15-ஆம் நூற்றாண்டின் மறுமலர்ச்சியில் அவை பெரிதும் ஈடு செய்யப்பட்டன.

தமிழகத்தில் கி.பி.3-ஆம் நூற்றாண்டிலிருந்து கன்னட நாட்டெல்லையிலுள்ள களப்பிரர் தமிழகமெங்கும் பரவினர். தமிழகத்திலிருந்தே தொல் பழங்காலத்தில் வடதிசை சென்ற கடம்ப மரபினரின் ஒரு பகுதியினராகவே இவர்களைக் கருதலாம். ஆயினும் தமிழக அரசியல் வாழ்வு மூன்று நூற்றாண்டுகளுக்குச் சீர்குலையுமளவுக்கும், களப்பிரரின் சமண சமயம் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் தமிழகத்தில் தழைக்குமளவுக்கும் அவர்கள் பெருந்தொகையாக வந்து தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இந்நிலையிலும் 7-ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் யார்பழந்தமிழ் மரபினர்,யார்களப்பிரர் மரபினர் என்பதே

அறிய முடியாத நிலையில் அவர்களும் அவர்கள் மொழியும் தமிழர் வாழ்வுடனும் தமிழுடனும் இரண்டறக் கலந்து விட்ட நிலை காண்கிறோம்.

மூன்றாவது சான்று வரலாற்றாசிரியர் இன்னும் தெளிவுபடக் காணாத ஒன்று.

கி. மு. இரண்டாயிரத்துக்கு முன்னிருந்து தமிழினத் திரையருடன் தொடர்புடைய நடுநிலக் கடலக இனத்தின் ஒரு பெருங்கிளை ஸ்பெயினிலிருந்து நார்வே வரையிலும், பிரிட்டன் முதலிய தீவுக ளத்தனையிலும் பரவியிருந்தது. கிட்டத்தட்ட முதிராப்பண்பு நிலையிலும்கூட, ஆரியர் படையெடுப்புக்கு ஒதுங்கியிருந்த காரணத்தால் ஆரியப் பண்பாட்டுடன் கலந்த பின்னும் அவர்கள் தற்பண் பிழவாமல், நடுநிலக் கடலக நாகரிக அழிபாட்டின் பின்னும் அதன் தூண்டுதலேற்று, மெல்ல மெல்லத் தலைதூக்கி, இன்றைய மேலை ஐரோப்பிய நாகரிக இனங்களாகி யுள்ளனர்.

மாண்ட பேரினத்துக்குத் தன் பொங்குமாவளத் தூண்டுதலால் உயிர்ப்பூட்டியஇனம் தமிழினம். தமிழினத் தின் தொலைத் தொடர்பால் மேலையினம் ஏற்கெனவே தனிப்பண்பில் முன்னேறி வருகிறது. தளர்ந்த தமிழினம் தலைதூக்கிவரும். இப்புத்தினமும் போதிய அளவு ஒன்றுக் கொன்று புதுமலர்ச்சித் தூண்டுதல் தரக்கூடுமானால், மேலை இனம் மாண்ட இனங்கள் வழிச் செல்லாமல் நீடிக்க வும், தமிழகம் மீண்டும் உலகளாவிய புதுமலர்ச்சி பெற்றும், இரண்டும் இருதிசைப் பொங்குமாவள இனங் களாக நிலவவும் வழி ஏற்படலாம்.

இனப்பண்பி இழப்பில்லாமல் பண்பு வளமும் பண் பாட்டு வளமும் ஒருங்கே பேணும் முறைதான் தமிழகம் கண்ட மூன்றாவது இன ஓட்டு முறை—அதுவே பொங்கு

மாவள முறை எனல் தகும். பண்பில் மூத்த இனம் தன் பண்பில் நின்று, மற்ற இனங்கள் மீது தன்பண்பைச் சுமத்த விரையாமல் மற்ற இனங்களையும் தத்தம் பண்பிலேயே நிலவவிட்டு, அவற்றின் வளத்துக்குத் தூண்டுதல் தந்து தானும் அவற்றின் தூண்டுதல் பெற்று வளரும் அருஞ்சிறப்புடைய முறை இது.

எதிரெதிர் பளிங்குகள் ஒருசிற்றொளியை எல்லையறப் பெருக்கி உறுபேரொளியாக்கிவிடத் தக்கவை. இரு இனங்களின் சரிசமக் கொடுக்கல் வாங்கல் இது போன்றது. வாழ்வில் தாய், பிள்ளை, அல்லது அக்காள், தங்கை போன்ற—இன்னும் பொருத்தமாகக் கூறின் காதலன் காதலி தொடர்பு போன்ற எல்லையற்ற இனவளம் பெருக்குவது இன்கலப்பு இது.

பண்பாட்டுக்கும் ஆதாயம், பண்பிலும் வளம்— கொள்பவனுக்கும் ஆதாயம், கொடுப்பவனுக்கும் வளம்— இதுமட்டுமன்று, கொள்வதிலும் சரி. கொடுப்பதிலும் சரி, இரண்டிலுமே ஒன்றுக்குப் பத்து நூறு பதினாயிரமாகப் பண்பும் பண்பாடும் பெருக்கிக் கொண்டே செல்லும் இந்த இன ஒப்புரவு முறைதான் தமிழர்கண்ட பொங்குமா வளமுறையின் 'இலக்கணம்' ஆகும்.

## 8. இனமாளிகை

நாகரிகம், பண்பாடு: பண்பு ஆகிய இனவாழ்வுக் கூறுகளையும், உயிர்ப்பண்பு, உயிர்ப்பண்புவளம், பொங்குமாவளம் முதலிய இனவாழ்வுப்படி நிலைகளையும் இயலுலகின் சில உருவகங்களே விளக்கிக் காட்டவல்லன. மாளிகை, ஆறு, ஏரி, படர்கொடி ஆகியவை இத்தகைய விளக்க உருவகங்களாகும்.

மாளிகைக்கு மாண்பும் பீடும் தரும் மாடகூட கோபுரங்கள் போன்றது நாகரிகம். அதன் மதில்கள், சுவர்கள்,

தளங்கள் பண்பாடு. கடைகால் இத்தனைக்கும் உறுதியும் ஆதாரமும் ஆகும். அது போன்றது பண்பு.

கட்டடத்துக்கு மூன்றும் உறுதியாய் இருந்தால் போதாது. மூன்றின் இசைவுறுதி வேண்டும்; ஆனால், இசைவுறுதி என்பது சரிசம ஒப்பான உறுதியல்ல. மோடும் மதிலும் கடைகாலும் ஒப்பான உறுதியுடையவையாயிருப்பதினும் மோட்டைவிட மதில், மதிலைவிடக் கடைகால் உறுதிமிக்கதாயிருப்பதே கட்டடத்தின் நீடித்த வாழ்வுக்குரிய இசைவுறுதி ஆகும். மேலிருந்து கீழே படிப்படியாகப் பளுவும் உறுதியும் பெருகுவதற்கு மாறாக, கீழிருந்து மேலே பெருகிச் சென்றால், கட்டடம் ஒருகணங்கூட நில்லாது.

இந்த இசைவுறுதியே பண்புறுதிநிலை ஆகும். நாகரிகத்தைவிடப் பண்பாடு உறுதி மிக்கதாக, பண்பாட்டினும் பண்பு உறுதியானதாக அமைந்துள்ள இனமே உயிர்ப் பண்புள்ள இனமாகும்.

உறுதியான கடைகால்கூட மணல்மீது அல்லது சதுப்பு நிலமீது அமைந்தால் கட்டடம் நில்லாது, நிலை கொள்ளாது. நிலம் திட்பமுடையதாக, பாறையாக அமைந்தால்—பாறை மேல்நிலப் பாறையாக நிலவாமல் அடி நிலப் பாறையாகத் திகழ்ந்தால்—மலைகளின் அடித்தளம்போல நிலவுலகத் தோட்டுடன் இணைந்ததாக விளங்கினால் கட்டடத்தின் நிலை அசைக்க முடியாததாகும். பண்பும் இதுபோல இயற்கையின் மூலதளத்தின்மீதே, அதன் மூலவளத்துடன் தொடர்புடையதாக அமைந்தால், அது உயிர்ப் பண்பின் உறுதி கொண்டதாய் இலங்கும்.

கட்டடத்தின் உறுதிக்கும் பாதுகாப்புக்கும் அதன் தனி நிலையைவிடக் கூட்டு அமைவு எல்லையற்ற வளம் தரும். ஏனெனில் அதன் கடைகாலின் உறுதி மற்றக் கட்டடங்களின் கடைகால்களுக்கும், மற்றக் கட்டடங்

களின் கடைகால்களது உறுதி அதன் கடைகாலுக்கும் மாறி மாறி வலுப் பெருக்குவன ஆகும். இனப் பண்பின் வளமும் இதுபோல, மற்ற இனங்களின் பண்புகளுடன் சரிசம ஒப்புறவு மேற்கொள்வதே யாகும்! இக்கூட்டமைதி மொத்தவளம் மட்டுமன்றி, ஒவ்வோர் உறுப்பின் வளமும் பெருக்குவதாகும்.

கட்டடத்தின் கூட்டு அமைவு கட்டடத்துக்கு வலுப் பெருக்குவதுபோல, அதில் வாழ்பவருக்கும் வளம் பெருக்குவதேயாகும். இவ்வளம் சமுதாய வாழ்விலு லேயே கிடைக்கிறது. இச் சமுதாய வாழ்வுக்கு உதவும் படியே கட்டடத்தின் மதில்களுக்கு வாயில்கள், பலகணி கள்; அவற்றுக்குத் திறந்து அடைக்கவல்ல கதவுகள்; அடைத்த கதவு வேண்டிய அளவில் அடைத்தபடியே பாதுகாப்புடன் இருக்கத் தாழ்கள், பூட்டுத் திறவுகள் ஆகியவை அமைந்துள்ளன. அத்துடன் வாயில்களி லிருந்து சூழ் கட்டடங்களுக்கும் இயற்கையின் சூழ்வெளி களுக்கும் செல்லத்தக்க வழிகள், பாதைகள், தெருக்கள் அமைந்துள்ளன. இயற்கையின் காற்று வளம், ஒளி வளம், தட்பவெப்ப வளங்கள் ஆகியவற்றுடனும், மற்றக் கட்டடத்திலுள்ளவர்கள் வாழ்வு தாழ்வுகளுடனும் விரும்பிய, தேவைப்படும் தொடர்புகளைத் தேவைப் படும் நேரங்களில் தேவைப்படும் அளவில் தங்குதடை யின்றிப் பெறவும், தேவைப்படும் அளவில் அவற்றைத் தடுத்து நிறுத்தவும் உதவும்படியே இவை திட்டமிட் டமைக்கப்பட்டுள்ளன. இயற்கை, சமுதாயம் ஆகியவற் றுடன் கட்டடத்துக்கும் அதில் வாழ்பவருக்கும் உள்ள இந்த இருதிசைத் தொடர்புகளும் பண்புடைய இனங் களுக்கும் உரியன ஆகும்.

பண்பின் உரத்துக்கும் தடைபடா உயிர்ப்புக்கும் இன வாழ்வு முற்றிலும் இயற்கையிலிருந்தோ, சமுதாயத்தி

லிருந்தோ அடைபட்டு ஒதுங்கிய வாழ்வாய் அமைவதும் உகந்ததன்று. தனிப்பண்பு, தனி வாழ்வு முற்றிலும் கெடுமளவுக்கு அது தங்குதடை யின்றி இயற்கை யாற்றல் களுடனே, அயற் பண்புகளுடனே மோதிக் கலப்பதும் பொருந்துவதன்று. இரண்டுக்கும் இடைப்பட்ட பொன் னூர்ந்த நெறி தற் பண்பில் நின்று அயற் பண்பாடு ஊக்கி, அதனால் தானும் ஊக்கப்பட்டு விரவுவதே—தேவையான நேரத்தில் தேவையான அளவில் அவற்றின் அனுபவம் ஏற்று. தேவையான— அளவிலே அவற்றை வளர்த்துத் தானும் வளர்வதே யாகும். இதுவே தற்பண்பின் உரத் துக்கும், உயிர்ப்புக்கும், வளத்துக்கும் மட்டுமன்றி, அயற் பண்பாடுகளின் கூட்டு வளர்ச்சிக்கும் உகந்ததாகும்.

தென்றல் உள்ளே வர வாயில் திறந்து, வாடை வராமல் தடுத்து நிறுத்த முற்பட்டுள்ள பண்டைத் தமி ழினத்தின் பண்பு, உயிர்ப் பண்பு, உயிர்ப்பண்பின் வளத்திறம் இதுவே.

பழந்தமிழினம் தற்பண்பு பேணிற்று. சமரச நலமும் காத்தது. அச் சமரசம் தமிழகத்தின் உயிர்ப் பண்பு காத்தது மட்டுமன்று. உறவாடிய அயலினங்களும் தற் பண்பே பேணி, உயிர்ப் பண்பு நோக்கி வளர உதவிற்று.

தமிழினத் தொடர்பு கொண்டிருந்த சுமேரிய, ஏலமிய, சிந்துவெளி நாகரிகங்களும், எகிப்திய நாகரிகமும் அத் தொடர்பறு திருந்த காலமுழுவதும் ஆயிரக்கணக்கான ஆண்டு நீடித்துப் புகழ் வளத்துடன் நிலவியதன் காரணம் இதுவே.

## 9. இனம் ஓர் உயிராறு

இன வாழ்வை நாம் மீண்டும் ஓர் ஆறாக உருவகப் படுத்திக் கண்டால், நாகரிகம் அதன் படுகை. பண்பாடு

அதன் ஓடும் நீர், நீரோட்டம். அதன் மூலத் தலையூற்றே பண்பு.

மழைவளம் குன்றிய மலையிலிருந்தோ, தாழ்வரைகள்; சமநிலத்திலிருந்தோ, ஏரிகளிலிருந்தோ ஒழுகும் ஆறுகள்—சிற்றாறுகள்—உண்டு. கடல்வரை செல்லாமல் ஏரிகள், காயல்கள், உள்நாட்டுக் கடல்களில் சென்று சேர்வனவும், இடையே மணல் திட்டுக்களில் சுவறி மறைவனவும் இல்லாமல் இல்லை. பண்பு அற்ற, அல்லது பண்புவமை யற்ற, அல்லது உயிர்ப் பண்பற்ற இனங்கள் இவை போன்றவை. அவற்றுள் பலவும் இடையே தோன்றி இடையே மறைவன, அல்லது முன் தோன்றி முன்னே பின் தோன்றிப் பின்னே மறைவன.

இவை போலன்றிக் கங்கை, பொன்னி, பொருநை போன்ற உயிராறுகள் மழைவளம் செறிந்த முகில்தவழும் பனிமாறா உயர்சிமையக் கொடுமுடிகளில் பிறக்கின்றன. அவை இயற்கையின் வானமழைநீ ராதாரமும் பனிநீரா தாரமும் இவ்விரண்டின் சுனைநீர்த் தேக்கவளமும் ஒருங்கே பெற்று, வளங்கொழித்து நெளிந்து நடமிட்ட வண்ணம் மண்ணுலகில் ஆடிச்சென்று, இயற்கையின் வற்றாநீர் நிலை யாகிய பொங்குமாகடல் நோக்கி என்றும், எப்போதும் பாய்ந்துகொண்டே இருக்கின்றன. உயிர்ப்பண்பும் உயிர்ப் பண்புவளமும் உடைய இனங்களுக்கு இவை பீடுசான்ற உவமைகள் ஆகும். ஏனெனில் அவை இயற்கையின் அளக்கலாற்றுக் கன்னிப் பெருவளத்திலிருந்து தோன்றி, அதன் உயிர்வளத்தில் ஊடாடி விளையாடி, இயற்கையின் ஈடிலா நிறைபெரு வண்மை நோக்கி விரிந்து வளர்ந்து கொண்டே செல்பவை ஆகும்.

உயிராறுகளிலும் உயிர்வளமிக்க பேராறு பொன்னி. அது பொன்குலவிப் பூவிரியக் காவிரித்துச் சென்று புனல்

விரித்து, சுழித்தெழுந்து பொங்கும் அலைகடலில் சென்று கலக்கும் பொற்புடையது. இப் பொன்னியாறு போன்றது தமிழினம்.

இயற்கையே தான் பிறக்கும் குடமலையாகக்கொண்டு, நிலையுயிர், இயங்குயிர் ஆகிய உயிரினத்தின் இரு பெருங் கிளைகளே இரு கரைகளாகப் பெற்று; தமிழ்மொழியே தன் இடையறு நீர்வளமாக ஏந்தி ஒழுகும் ஒரு தடங் கரைப் பொன்னி தமிழினம். அது தமிழ்ப் பண்பெனும் பொன்குலவி, தென்னகப் பண்பாடெனும் காவணம் பரப்பி, மனித நாகரிகமெனும் பூவணம் பொலிவித்து, தமிழின மொழிகளாகிய ஐம்பெருங் கிளைகள் விரித்து, வருங் கால உலகின் மங்காவளமாகிய வங்கமாகடல் நோக்கிப் பாய்ந்துகொண்டே யிருக்கிறது.

## 10. பேரினம் என்னும் ஏரிப்பரப்பு

இனப்பண்பு இனமுழுமைக்குமே உரியது. இனப் பரப்பு முழுவதிலும் பரவி நிலவுவது. ஆனால் இனமக்கள் எல்லாரிடமும் அது ஒரே அளவாய் இருப்பதில்லை. இனப் பண்பு முழுவதையும் தமதாகக் கொண்டு பேணி வளர்ப்ப வரும் உண்டு. அவர்களே திருவள்ளுவரால் பண்பாளர் என்று குறிக்கப்பட்டுள்ளனர். அவ்வினப்பண்பு குன்றிய வர்களும் அதற்கு மாறான திசையில் சறுக்குபவர்களும் கூட உண்டு. பண்பேணியில் கடைக்கோடியில் கயவர் என வள்ளுவரால் ஒதுக்கப்பட்டவர்கள் அவர்களே.

இனவாழ்வில் வளர்ச்சி தளர்ச்சிகள் உண்டு. பண்பின் செயல்வடிவமான பண்பாடு வளர்ச்சியின்போது தான் ஏறத்தாழ இனமுழுவதும் பரந்திருக்கும். தளர்ச்சிநிலை ஏற ஏற, இப்பரப்புக் குறையும். ஆனால் தளர்ச்சி கீழ் எல்லை நிலை அடையும் காலத்தில்கூட இனப்பண்பில் வழு

வாதவர் பண்பாளர். அவர்கள் பிறந்த, அவர்கள் வழிவந்த குடியே உயர்குடி.

**வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பில் தலைப்பிரிதல் இன்று.**

என்று தாழ்விலும் பண்பு தாழாதது என்று வள்ளுவர் சிறப்பித்தது இத்தகைய பண்பாளர் பழங்குடியையே யாகும்.

பண்புடைய இனத்தில் கூடப் பண்பாளர் ஒரு சிலர்; அதற்குப் பெரிதும் புறம்பானவரும் ஒரு சிலர். 'பண்புடை யார்ப் பட்டு உண்டு உலகம்' என உலகப் பொதுமறையும்,

**'உண்டா லம்மஇவ் வுலகம்...**
**தமக்கென முயலா நோன்றாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மையானே!'**

என்று புறநானூறும் கூறுவதன் காரணம் இதுவே.

**'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
**எல்லார்க்கும் பெய்யும் மழை'**

என்ற பிற்கால அருந்தமிழ் அவ்வையின் மூதுரை மேலீடாகப் புனைந்துரை போலத் தோன்றினும், உண்மையில் மேற் கூறிய உண்மை பொதிந்த வாய்மையுரையே யாகும்.

இனத்தினுள் பண்பாளர் ஒரு சிலர், அவர் வளர்க்கும் பண்பெல்லையிலுள்ள இனத்தில் முதிராப் பண்புடைய பலர் இருப்பது போலவேதான், பேரினத்திலும் பண் புடைய ஓரிரு இனங்கள், முதிராப் பண்புடைய பல இனங் கள், முதிரா இனங்கள் ஒரு சில நிலவுகின்றன.

பெரும் பேரினமாகிய உயிரினத்தின் நிலையும் இதுவே அதன் பிரிவுகள் ஆகிய பேரினங்கள் எண்ணற்றவை. அவற்றுள் உயிர்ப்பண்புடைய பேரினமாகவே மனித இனம் விளங்குகிறது.

பெரும் பேரினமாகிய உயிர்ப்பொருள் தொகுதியில் உயிரினம், முழுப்பேரினமாகிய இயற்கையில் உயிர்ப் பொருள் தொகுதி ஆகியவற்றின் நிலையும் இதுவே.

நிலத்தின் உயர்முகடு மலைத்தொடர், மலைத்தொடரின் உயர்முகடு உயர்மலை, அதன் உயர்முகட்டின் முகடு உச்சி. இதுபோல இயற்கையின் முகடு உயிர்ப்பொருள் தொகுதி, அதன் முகடு உயிரினம், அதன் முகடு மனித இனம், உச்ச முகடு தமிழினமாக விளங்குகிறது.

வட்டத்துக்குள் வட்டமாக இவை ஒன்றிலிருந்து ஒன்று மேம்படுவன.

சிற்றெல்லையாகிய குடும்பத்தில் தாய்தந்தையர், இனத்தில் பண்பாளர், பேரினத்தில் தமிழினம், உயிரினத்தில் மனித இனம், இயற்கையில் உயிரினப் பண்பு ஆகியவை இத்தகைய முகடுகள் ஆகும். இந்நிலையை நன்கு விளக்குவது ஏரி உவமை.

மனிதப் பேரின வாழ்வாகிய ஏரியில், மனித உலகின் நாகரிகமே அதன் நீர்ப்பரப்பு. மனித இனப் பண்பாடே அதன் நீர்வளம், ஆழம். அதன் ஆழமிக்க வற்றா மையப் பகுதியே பண்பு.

புறநின்று பார்ப்பவருக்கு ஏரி என்பதே அதன் நீர்ப் பரப்புத்தான். ஏரியின் கண்கண்ட பகுதியும் அதன் புறத்தோற்றமும் அதுதான். ஆயினும் ஏரியின் பெருமை சிறுமைக்கு, அது உயிர் முக்கியத்துவத்துக்கு உரிய பகுதி நீர்ப்பரப்பு அல்ல. நீர் வளம் அல்லது ஆழங்கூட அல்ல. அது ஆழமிக்க பகுதியின் வற்றா வளம், சூழ் நிலங்களை வளப்படுத்தும் அதன் பயன் அல்லது வாய்ப்பு வளம் ஆகியவற்றையே பொறுத்தது ஆகும்.

நீர்வளம் சுருங்கிய காலத்தில், அது சுருங்கச் சுருங்க ஏரியின் பரப்பும் சுருங்கிக்கொண்டே வரும். அது மட்டு,

மன்று. ஒரே ஏரிப் பரப்பாகக் காட்சியளித்த நீர்வளம் பல நீர்த்திட்டுக்களாகவும் காணப்படும். ஆனால் திட்டுக்களும் ஒவ்வொன்றாக வற்றும். ஆழமிக்க பகுதிக்கு அருகாமையிலுள்ளவை, அதனுடன் மேல்நில அல்லது அடிநிலத் தொடர்பு கொண்டவை மற்றவற்றைவிட நீடிக்கும். ஆனால் முழு வரட்சியில் பெரிய பரப்புடைய ஏரி முழுவதும் மறைந்து, பல நீர்த்திட்டுக்கள் உள்ள ஏரித்தடமும் மறைவுற்றபின் சுனைபோன்ற சிறிய; ஆனால் ஆழமிக்க பகுதி ஒன்றே மீந்திருக்கும்.

ஏரியின் ஆழமற்ற பகுதிகள் பேரினத்தில் உள்ள பண்பற்ற இனங்கள், இனத்தில் உள்ள பண்பு குன்றிய மக்கள்போல்வன. அரை வரட்சியின்போது கண்ட திட்டுக்கள் தாழ்விலும்பண்பு மாறாப் பண்புடைய மக்கள், பண்புடைய இனங்கள் போன்றவை. பல இனங்கள் பண்புகளுடையனவாக இத் தறுவாய்களில் தோற்றினும் அவை முன் ஒரே பரப்பாய் ஒரே மனித நாகரிகத்துக் குரியவையாய் இருந்தனவே. உண்மையில் அவை ஒரே இனப்பண்பில்—உயிர்ப்பண்புடைய இனமாகிய சுனையிலிருந்து—கிளைத்தவையே. இதனை முழு வரட்சிக்காலம் காட்டிவிடும். ஏனெனில் ஏரி தொடங்கிய இடத்திலேயே அது ஒடுங்கி மீண்டும் தொடங்கும்.

ஏரியின் ஆழமிக்க பகுதி அதன் பழமைமிக்க, நீடித்த பண்புடைய, என்றும் நிலவும் பகுதி. அது போலவே பேரினத்தில் உயிர்ப் பண்புடைய இனமும்; இனத்தில் பண்புடையாளரும் பேரினம், இனம் ஆகியவற்றின் பழமைமிக்க, நீடித்த, என்றும் நிலவும் மரபாகிய உயிர்ப் பண்பின் சின்னங்கள் எனல் தகும்.

மனித இனத்தில் தமிழினத்தின் நிலை, தமிழினத்திலும் மற்ற இனங்களிலும் பண்புடையாளர் நிலை ஆகிய இரண்டும் இதனை ஒத்ததே.

மையச்சுனை நீரூற்றுடையதாக அமைந்தால், அது உயிர்ப் பண்பு வளம் உடையது. ஏனென்றால் இயற்கையின் நீர் வளங்களுள் மிகச் சிறந்த அடிநில நீர்வளமே அதற்கு ஆதாரம் ஆகிறது. வான்வளம் காலத்திலும் பருவத்திலும் மட்டுமே பயன்படுவது. வேண்டிய இடங்களுக்கும் வேண்டாத இடங்களுக்கும் அது ஒருங்கே பொழிவது. அடிநில நீர்வளத்தைப் போல வேண்டிய இடத்தையும் நேரத்தையும் கருதித் தேங்கி நிற்பதன்று. ஆற்று வளம்கூட, உயிரற்று வளம்கூட, இந்த அளவு தேக்கமுடையதன்று. வானின்று நிலம் பெறும் பொங்கல் வளம் உண்மையில் இவ்வூற்று வளமே, அடிநில நீர் வளமே.

மையநீரூற்று அடிநில நீர் வளத்தை மேற்கொணர்ந்து ஏரி வாழ்வுக்கு நீடித்த வளம் தருவதுடன் அமைவதில்லை. ஏரிப் படுகையையும் சூழலையும் அது ஒருங்கே புல் மரஞ் செடி கொடிகளால் நிரப்பி, உயிர்கள் விலங்கு பறவை மனித இனம் பேணி, ஏரி வளத்துடன் மேல் நிலவளமும் அடி நிலவளமும் காப்பது. காக்கும் வளத்தை எதிர் காக்கும் இப் பொங்கல் வளம் ஏரி வாழ்வின் பொங்கல் வளமாகிறது.

இத்தகைய மைய நீரூற்றுக்கே தமிழினம் உவமிக்கத் தக்கது. ஏனெனில் அது இடைவிடாது உலகு வளர்ப்பதுடன், அதன்மூலம் தானும் வளர்ந்து அவ்வளர்ச்சியை ஊக்கி அதனால் ஊக்கம் பெற்று வருகிறது.

ஊருணி நீர்நிறைந் தற்றே, உலகவாம்
பேரறி வாளன் திரு.

## 11. பண்ணை, கொடி வாழ்வு உருவகம்.

மனித இன நாகரிக வரலாற்றில் தமிழினம் கொண்டுள்ள இடத்தையும், அதன் தற்போதைய நிலையையும்,

அதன் வருங்கால வளத்தையும், தனிப்பெரும் பொறுப்பையும் ஒருங்கே காட்டவல்லவை படர்கொடியுருவகமும், அதனோடிணைந்த அதன் பண்ணை வரலாறுமே யாகும்.

செடி கொடியினங்களுள் விதைகொண்டு தம் இனம் பெருக்குபவை உண்டு. கிளை அல்லது அடித்தண்டு வெட்டி வைத்து மரபு வளர்ப்பவை, தூரிலே தளிர்விட்டுத் தழைப்பவை உண்டு. மூன்றாவது வகை சார்ந்த படர் கொடியினமாக நாம் மனிதப் பேரின வாழ்வை உருவகம் செய்யலாம்.

யாரும் பயிரிடாமலே, பேணாமலே கொடிகள் எங்கும் படர்ந்து அடர்ந்து காடாய் வளர்ந்து வந்துள்ளன. நெடுங் காலமாக, அதன் வளமும் பயனுங் கண்ட பல குடிகள் படரும் கொடிகளைச் சுற்றி வளைத்து வேலி கட்டிப் பண்ணைகளாக்கி யுள்ளனர். அவர்கள் அனைவருமே கொடியின் வளத்தில் வாழ்வின் வளங் கண்டனர். அதன் தளர்ச்சியில் தத்தம் வாழ்விலும் தளர்ச்சி ஏற்படுவது கண்டனர். ஆயினும், கொடி வளர்ச்சி தளர்ச்சிபற்றி எவருக்கும் எதுவும் தெரியாதிருந்தது. கொடிகள் ஒவ்வொரு பண்ணையிலும் கூடப் பல இருந்தன என்ற எண்ணம் பொதுவாக நிலவி வந்தது.

ஒவ்வொரு பண்ணையிலும் கொடிகள் வாலும் தலையும் தெரியாதபடி குறுக்கும் மறுக்குமாகத் தாறுமாறாகச் சென்று படர்ந்திருந்தன. தண்டுகள் எங்கும் ஊதா நிறமாகவும், தழைகள் கிட்டத்தட்ட எங்குமே பசுமையாகவும் காணப்பட்டன. ஆனால் இலைக் காம்புகள் மட்டும் ஆங்காங்கே ஊதா, கறுப்பு, சிவப்பு, மஞ்சள், வெள்ளை ஆகிய பல நிறங்கள் உடையவையாய் அமைந்தன. இலைகளிடையே கூடச் சிற்சில வெளிறியும் சில பழுப்பு நிறமாகவும் காட்சி தந்தன.

கொடி வாழ்வில் கருத்துச் செலுத்திய சித்தர் சிலர் வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு பண்ணையிலும் கொடி ஒன்று, பலவா, பல இனக் கொடிகளா என்றும்; பண்ணைக்குப் பண்ணை கொடிகள் ஓரினமா, பல இனமா என்றும் அவர்கள் வாதாடினர். ஒரே ஒரு சித்தன் மட்டும் கொடிகள் பல இனம் சார்ந்தவை, பண்ணைக்குப் பண்ணை இனக் கொடிகள் எல்லாம் விரவியதன்றி ஒரே இனத்தின் வேறு வேறு கொடிகள் அல்ல என்று கூறினான். அவன் பட்டாலான சரிகையிட்ட காவியுடை அணிந்தவன். ஆனால் பண்ணைகள் அனைத்திலுமே கொடி ஓரினக் கொடி மட்டுமல்ல, ஒரே கொடிதான் என்று மற்றொரு சித்தர் கருதினார். அவர் வயதில் முதிர்ந்து பஞ்சுப் பொதிபோல் நரைத்திருந்தவர். ஆனால் அவர் கண்களில் எப்போதும் ஓர் ஒளி வீசிற்று. அதனால் அவரைப் பிறர் கண்ணொளிச் சித்தர் என்று அழைத்தனர்.

காவிச் சித்தர் இனக்கோட்பாட்டைக் காம்புகளின் நிறத்துக் கிசைய ஐந்து இனக்கோட்பாடாக வளர்த்தார். வெள்ளைக் காம்பும் பழுப்பு நிற இலையும் உடைய இனம் உச்ச உயர் இனம் என்று அவர் கருத்துரைத்தார். அது பொன் ஏந்திய வெள்ளி இனம் என்பது இதற்கு அவர் தந்த விளக்கம். இதுபோல வெள்ளி ஏந்திய பித்தளை இனமாக வெளறிய இலையுடைய பழுப்புக் காம்பும், செம்பு இனமாகச் சிவப்புக் காம்பும், இரும்பு இனமாக ஊதாக் காம்பும், கரி இனமாகக் கறுப்புக் காம்பும் அடுத்தடுத்த கீழ்ப்படி இனங்களாகக் கருதப்பட்டன.

செல்வத்திலும் ஆட்சியிலும் வெள்ளைக் காம்புக் கொடி மிகுத்த ஒரு பண்ணை ஓங்கியிருந்ததாலும், பின் தங்கிய பண்ணைகளிடையே வெண்காம்பு ஏந்திய பழுப்பிலைக் கொடிக்குரிய பண்ணையே ஆதிக்கம் செலுத்தி வந்

திருந்ததனாலும், காவிச்சித்தருக்குச் செல்வாக்கு மிகுதியாயிருந்தது. இது அவர் காவியுடையை மாற்றவில்லை. ஆனால் அதில் சரிகை ஏற்றி அதைப் பட்டுக் காவியுடை ஆக்க இது பயன்பட்டது-

அறிவையே மதிக்கும் சித்தர்களிடையே கூட காவிச் சித்தரின் செல்வமும் செல்வாக்கும், அச்சமும் மதிப்பும் தந்திருந்தன. அவரிடம் யாரும் வாதிடத் துணியவில்லை. கண்ணொளிச் சித்தரிடம் சென்று வாதாடவும் அவர்களுக்கு விருப்பமில்லை. அவரை ஒரு பித்தர் என்று அவர்கள் கூறிக்கொண்டனர். ஏனெனில் காவிச்சித்தரின் ஆதரவை இழக்க அவர்கள் துணியவில்லை. ஆனால் காவிச் சித்தரின் இனப்பேச்சு எழுந்தபோதெல்லாம் கண்ணொளிச் சித்தரின் கண்களில் வீசிய புத்தொளி கண்டு அவர்கள் வியப்புற்றனர்.

செல்வாக்கற்ற, செல்வத்துக்கும் மதிப்புக்கும் எட்டாத் தொலைவிலிருந்த பொதுமக்களில் சில பலர் கண்ணொளிச் சித்தரிடம் வந்து அவரை வாதுக்கிழுப்பதுண்டு அவர் ஆய்ந்தமைந்த பேச்சு கொடிவரலாறு, பண்ணை வரலாறுகள் ஆகியவற்றை ஒவ்வொன்றாக அவர்களுக்கு விளக்கிற்று. கொடிவளர்ச்சியின் உள்ளார்ந்த இயல்பை உணர்ந்து மக்கள், மெல்லமெல்லச் செல்வர், செல்வாக்குடையவர் ஆகியோர் அறிவிலோ, காவிச்சித்தர் அறிவிலோ, சித்தர் குழுவின் அறிவிலோ நம்பிக்கை இழக்கலாயினர்.

புதிய சித்தர்குழு மக்களிடையிலிருந்து மெல்லமெல்ல உருவாகலாயிற்று.

அது பண்ணை வரலாற்றில் மட்டுமல்ல, பண்ணை வாழ்விலேயே புதுமலர்ச்சி யூட்டத் தொடங்கிற்று.

## 12. கண்ணொளிச்சித்தர் வாதம்

கண்ணொளிச் சித்தர் பேச்சில் வாதம் இருந்தது, விளக்கம் இருந்தது, வரலாறு இருந்தது, மூன்றும் சேர்ந்து மெய்ந்நிலையை வெட்ட வெளிச்சமாகக் காட்டிற்று.

கொடி பல பண்ணைகளிலும் ஒரே வகைப்பயன் தருகிறது. ஆகவே அது ஒரே இனம், பல இனம் சார்ந்ததன்று. அது பல கொடிகளல்ல. ஏனெனில் ஒரு பண்ணைக்குள்ளே அது கிட்டத்தட்ட வேறுபாடற்றதாக விளங்குகிறது. பண்ணை வாடும்போது, கொடி வாழ்வு முழுதுமே வாடுகிறது. வளம் பெறும்போது முழுதுமே வளம் பெறுகிறது.

பண்ணையினுள்ளே காலத்துக்குக் காலம் வளர்ச்சி தளர்ச்சி வேறுபாடு காணப்படுகிறது. அதேசமயம் பண்ணைக்குப் பண்ணை ஒரே காலத்திலே வேறுபாடு நிலவுகிறது. ஆகவே இவ்வேறுபாடுகள் பண்ணை நிலவளத்தின் வேறுபாடாகவும் இருக்கமுடியாது, பருவ வேறுபாடாகவும் இருக்க முடியாது.

இன்று வாழும் பண்ணைகள் நான்கு. உச்சநிலை வாழ்வுடையது செம்பியன் பண்ணை (மேலை ஐரோப்பா) இது புதிய வாழ்வு கண்ட பண்ணை என்பது யாவருக்கும் தெரியும். மற்ற மூன்றும் பழமையுடையவை. ஆதன் பண்ணை (தென்னகம்), காரிபண்ணை (இந்திய ஆரியம்), பண்ணன் பண்ணை (சீனம், சப்பான்) ஆகிய இவை ஒன்றை ஒன்று தொட்டே கிடக்கின்றன.

வாழ்ந்த பண்ணைகளாக, மாண்ட பேரினங்களாக நாம் அறியும் இருவேறு பண்ணைகள் முன்பு இவற்றை இணைத்துக்கிடந்தன. அவையே சாத்தன் பண்ணை (நடுநிலக்கடலக, எகிப்திய, சுமேரிய, ஈளமிய இனம்),


1.ஆதன் பண்ணை(தென்னகம்)
2.காரி பண்ணை(இந்திய ஆரியம்)
3.பண்ணன் பண்ணை(சீனம்,சப்பான்)
4.சாத்தன் பண்ணை(நடுநிலக் கடலகம்)
5.வளவன் பண்ணை(கிரீசு,ரோம்)
6.பாணன் பண்ணை(அமெரிக்க சிவப்பு-இந்தியர்)
7.பழயன் பண்ணை(தென் கிழக்காசியா)
8.மாரி பண்ணை(எதியோபிய நீக்ரோவர்)
9.செம்பியன் பண்ணை(மேலை ஐரோப்பா)

இனப் பண்ணைகள்

வளவன் பண்ணை (தென் ஐரோப்பாவின் கிரேக்க உரோம நாகரீகங்கள்) ஆகியவை.

மாண்டு மறக்கப்பட்டுப்போன இன்னும் மூன்று பண்ணைகள் உண்டு. அவையே பாணன் பண்ணை (அமெரிக்கச் சிவப்பிந்திய நாகரிகங்கள்), பழயன் பண்ணை (மலாயா, சாவா உட்பட்ட தென்கிழக்காசிய இனம்), மாரி பண்ணை (எதியோப்பியர் உட்பட்ட ஆபிரிக்க நீகிரோவ இனம்).

இந்த ஒன்பது பண்ணைகளின் கிடப்புக்களையும் ஒருங்கே பதிவு செய்து பார்த்தால் இந்த ஒன்பது பண்ணைகளுக்கும் நடுநாயகமாக வாழும் நான்கு இனங்களில் ஒன்ருகிய ஆதன் பண்ணையே ஒன்பதில் இரண்டு நீக்கி மற்ற ஆறையும் தொட்டுக் கிடப்பது தெரியவரும். இதுவே ஒன்பதிலும் நடு நாயகப் பண்ணை என்னல் தகும்.

ஒன்பது பண்ணைகளிலும் உள்ள கொடி ஒரே இனம் சார்ந்ததுமட்டுமல்ல, அது ஒரே கொடிதான். அதன் உயிர்த்தளம், மூல வேரோடிய மூடு ஆதன் பண்ணையிலேயே உள்ளது.

ஆதன் பண்ணையின் கொடியே அது கடந்து மற்ற எட்டுப் பண்ணைகளிலும் பரவி, கால இடத் தொலைவேறுபாடுகளால் சிலசில இடங்களில் நலிந்து அழிபட்டும், சிலவற்றில் வளமோங்கி வளர்ந்தும் உள்ளது.

கண்ணொளிச் சித்தரின் இந்த வாத விளக்கங்களைப் பலரும் ஆர்வமாகவே கேட்டனர். எல்லோருக்கும் அது முழுமன நிறைவு தரவில்லை. ஆனால் பலருக்கும் பெருநிறைவு தந்தது.

'மூடு ஆதன் பண்ணையில் இருப்பதென்று உமக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்டனர் சிலர்.

'மாண்ட வாழ்வும், மாண்டு மறந்த வாழ்வும் நீர் சென்று கண்ட மாயம் என்ன?' என்று கிண்டல் பேசினர் ஓரிருவர்.

காவிச் சித்தரின் பணியாள் ஒருவன் வந்து குறும்பாகப் பேசினான். கொடி ஒன்று, ஓரினமானால் 'காம்பில் வெள்ளியும் தங்கமும், செம்பும் இரும்பும், கரியும் பூசிய கருத்தன் யாவன்?' என்று கேட்டுத்தானே கொல்லென்று சிரித்தான். கூடவே ஒரு சிலர் சிரித்தனர். சிரிக்காதவரைப் பார்த்து முறைத்துக் கொண்டே அவன் வீறுநடை போட்டு வெளி யேறினான்.

கண்ணொளிச் சித்தர் கண்ணில் தோன்றிய ஒளி முகமெலாம் பரவிப் பொன் முறுவல் பரப்பிற்று.

அவர் நிற விளக்கம் தந்து பண்ணைக் கதை விரித்துச் சிரித்தவர் சிந்திக்கும்படி தூண்டினார்.

## 13. ஐந்து நிறங்கள்

வாழும் பண்ணைகள் நான்கின் வாழ்விலே, சில தனித் தன்மைகளைக் காணலாம்.

செம்பியன் பண்ணை புதுவளம் உடையது. முதலில் சாத்தன் பண்ணையாகவும் பின் வளவன் பண்ணையாகவும் இருந்த பகுதிகளில் **மேல் கோடியில்** தொடங்கி, அது வடகிழக்குத் திசையாக வளர்ந்து ஒரு புறம் 'மாண்டு மறைவுற்ற பாணன் பண்ணை வழியாகவும், மற்றொருபுறம் பண்ணன் பண்ணை வழியாகவும் படர்வது காணலாம்.

இதில் காம்பு வெள்ளை, ஆனால் இலை பச்சையாகவே உள்ளது.

காரியின் பண்ணையில் காம்பு வெள்ளை. இலைகள் விளறிய நிறம். ஆனால் விளறிய இலைகள் பொதுவாக

வெம்பி வதங்கி விழுவதுபோல் வெம்பி விழாமல் அது நீடித்து இருக்கிறது. இன வேறுபாட்டை வலியுறுத்தும் காவிச்சித்தர் இப்பண்ணையின் கொடியையே உச்ச உயர் இனமாக மட்டுமன்றி, மூல இனமாகவும் கருதிப் பெருமை கொள்கிறார். இந்த இரண்டு கருத்துக்களும் ஒன்றுக் கொன்று பொருந்தாதது என்பதை நீங்களே காணலாம். அது உச்ச உயர் இனமானால், மூல இனமாவது எங்ஙனம்! மூல இனமானால், உச்ச இனமாவதுஎப்படி?(சிரித்தவர் இது கேட்டு விழிக்கின்றனர். மற்றவர்கள் அவர்களையும் தம்முள் ஒருவர் மற்றவரை நோக்கிக் கொள்கின்றனர்).

பண்ணன் பண்ணையில் காம்புகள் பழுத்துள்ளன. இலைகள் விளறியுள்ளன. ஆயினும் அது காலங்கடந்து ஊழிகள் பல கடந்து வாடாமலர் வாழ்வே கண்டுள்ளது.

ஆதன் பண்ணை வாழும் பண்ணைகளில் இரண்டடுத் துக் கிடக்கிறது. அத்துடன் மாண்ட பண்ணைகளில் ஒன்று டனும், மாண்டு மறந்த பண்ணைகள் இரண்டுடனும் இணைந்து கிடக்கிறது. எல்லாவற்றுக்கும் கிட்டத்தட்ட மையமாகவும் அமைந்துள்ளது. ஆனால் கொடி வாழ்வின் மூடு அதிலேயே உள்ளது என்று கூறுவதற்கான காரணங் கள்—கண்கூடான காரணங்கள்—பிறவும் உண்டு.

இதில் காம்பு பெரிதும் ஊதாவாகத்தான் உள்ளது. ஆனால் இன வேறுபாடு காண்பவர் குறிக்கொண்ட எல்லாக் காம்பு நிறங்களும் இலை நிறங்களும் சிறிதளவாவது இங்கே ஒருங்கே காணப்படுகின்றன. அதே சமயம் பல வகைக் காம்பு, இலை நிறங்கள் கலந்தாலும் காம்புகள் எப்போதும் பெரும்பாலும் ஊதா நிறமாகவும் இலைகள் பசுமை நிறமாகவே உள்ளன.

வேறு பண்ணைகள் எவற்றிலும் காணாத புதுக் கூறு களும் இங்கே உண்டு.

மூட்டிலிருந்து காலத்துக்குக் காலம் இளந்தளிர்க் கொடிகள் தளிர்த்துக்கொண்டே யிருக்கின்றன.

தளிர்களில் சில முதலில் வெள்ளை நிறமாய், பின் சிவப்பாகவும் ஊதாவாகவும் மாறுவது காண்கிறோம் காம்பு ஊதா நிறத்திலேயே நிலையாக நின்று விடுகிறது. ஆனால் இலை மேலும் இளம் பச்சையாய், முது பச்சையாய் அந்நிறத்தில் நிலைத்து விடுகிறது. வாடிவிடும் இலைகள் தான் அதன் பின்னும் நிறம் மாறிப் பழுப்பாகவும் ஊதாவாகவும் இறுதியில் கறுப்பாகவும் ஆகின்றன.

தளிர்களில் ஒரு சில வெண்ணிறத்திலேயே நின்று பழுத்து விளறி விடுகின்றன. சில சிவப்பு நிறமாக மாறிய பின் அதில் நின்று பழுத்து மஞ்சளாகி விடுகின்றன. சில ஊதா நிறமாகி, அதில் நின்று பழுத்த போதும் அந்நிறமே கொண்டு கறுத்து வாடி விடுகின்றன. இவ்வாறு வளர்ச்சி தடைப்படாமல் நீடித்தவையே முழுவளர்ச்சியடைந்து, ஊதா நிறக் காம்பும் பச்சையிலையும் உடையனவாய்த் திகழ்கின்றன.

பல இனங்கள் என்று கருதப்படும் பல கொடியின் கிளைகள் வந்து அமைந்த வகை இது. ஊதா வரை வளர்ந்து மேல் வளராமல் வாடிய கொடி கறுப்பின மாகத் தெரிகிறது. சில சிவப்பு நிறமாகி அதிலே முதிர்ந்து நின்று சிவப்பு நிறமாயின. சில சிவப்பு நிறம் எட்டிய உடனே வளர்ச்சி தடைபட்டு மஞ்சள் நிறமாயின. சில வெள்ளை நிறம் முதிர் வடைந்த வளர்ச்சி தடைபட்டு விளறிய நிற மாகவும், சில வெண்ணிறத்திலேயே வளர்ச்சி குன்றி வெண்ணிறமாகவும் நிலைபெற்றன.

செம்பியன் பண்ணைக் கொடி வெண் தளிர் நிறத் திலேயே வளர்ச்சி தடைப்பட்டதானாலும், புத்துரம் பெற்று அவ்வுயிராற்றலால் பச்சையிலையுடன் விளங்கு

கிறது. பண்ணன் பண்ணைக் கொடி காம்பு சிவப்பு நிறத்தில் வளர்ச்சி தடைபட்டுப் பழுத்தாலும், புத்துரம் பெற்று இலை பழுப்பு நிறமாகாமல் வெளிறிய நிலை எட்டியுள்ளது. காரி பண்ணைக் கொடியின்காம்பு வெண்ணிறத்தில் தடைபட்டும், இலை பழுப்பேறியும் அதன் பின் பெற்ற உயிர் வளத்தால், பழுப்பு வாட்டமடையாமல் இலங்குகின்றது.

கண்ணொளிச்சித்தர் அருவிளக்கம் கேட்ட மக்கள் கண்ணிலே ஈயாடவில்லை.

இச் சமயம் ஒருவன் எழுந்து செம்பியன் குடிசார்ந்த சித்தர் ஒருவர் இயற்றிய ஓர் ஏட்டிலிருந்து(H. G. Wells: History of The World) சில வரிகள் வாசித்தான் :

'பழங்கற்கால மனிதரிடையே நாம் ஒரு புறம் கறுப்பு மனிதரும், மற்றொரு புறம் வெள்ளை மனிதரும் இருந்ததாக அறிகிறோம்.

ஆனால் புதுக்கற்காலத்தில் உலகின் நடுப்பகுதி எங்கும் ஊதா நிறமான ஒரு மக்கள் இனமே பரந்து நிலவி, இன்றைய உலக நாகரிகத்தைப் பேரளவில் வளர்த்துப் பேணிற்று.

'வரலாற்றுக் காலத்துக்குள் மஞ்சள் இனமும் வெள்ளை இனமும் நாகரிகத்தில் முன்னேறி இடம் பெறக் காண்கிறோம்.

'ஊதா நிற மக்களே நாகரிக மனித உலகின் தாய் இனம் என்று தோற்றுகிறது. வெள்ளை இனம், மஞ்சள் இனம், சிவப்பு இனம் ஆகியவை கட்டாயம் அதன் கிளைகளாக, அல்லது அதனிடமிருந்து நாகரிகம் மேற்கொண்டனவாக இருத்தல் வேண்டும். ஒரு வேளை கறுப்பு இனம் கூட அதன் கிளையாகவே இருக்கலாம்!'

கண்ணொளிச் சித்தர் இதில் முதலில் கருத்துச் செலுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால் கொஞ்ச நேரத்துக்குள் கண்ணில் ஒரு மின்னொளி குதித்தாடிற்று. திடுமென அவர் கவிஞர்—பாடகர் — ஆடற்கலைஞன் — பித்தர் ஆக நடிக்கலானார்.

'ஆதனும் செம்பியனும் சேர்ந்து விட்டால்—உலகில்
ஆகாத காரியம் என்ன உண்டு!
காரியின் காவி அகன்று விடுமே—காலம்
கடந்தும் இளமை கை வந்துவிடுமே!'

என்று அவர் சில நேரம் கூத்தாடினார்.

## 14. வரலாற்றின் இரு கண்கள்

உலக வரலாற்றுக் கண்கொண்டு தமிழக வரலாறும், தமிழக வரலாற்றுக் கண்கொண்டு உலக வரலாறும் காணும் இரு கண்ணுக்கு உடையவர்தான் மேலே கண்ணொளிச் சித்தர் என்று உருவகப் படுத்தப்பட்டவர். உலக நாகரிகப் பின்னணி கொண்டு தமிழர் நாகரிகமும், தமிழர் நாகரிகப் பின்னணி கொண்டு உலக நாகரிகமும் காணும் ஒளிகள்தான் அவர் கண்ணொளிகள்.

ஆதன் பண்ணை தமிழினம் அல்லது தென்னகத்தையும்; செம்பியனும் வளவனும் காரியும் மேலை ஐரோப்பிய இனத்தையும், கிரேக்க உரோம நாகரிகங்களாகிய தென் ஐரோப்பிய இனத்தையும், சிந்து கங்கை வெளி ஆரியத்தையும்; மாரி, பழயன், பண்ணன், பாணன் ஆகியவர் முறையே ஆபிரிக்க, தென்கிழக்காசிய, சீன, அமெரிக்கச் செவ்விந்திய நாகரிகங்களையும் குறித்தன என்பதும் இங்கே தெளிவாதல் கூடும்.

வெள்ளை, கறுப்பு, ஊதா, மஞ்சள், சிகப்பு ஆகிய நிறங்களையும் நிறம் சார்ந்து நிலவும் இடைகால நாகரிகச்

சின்னங்களையும் அடிப்படையாகக் கொண்டு, மனித இனத்தை ஆரியம், நீகிரோ, நடுநிலக் கடலினம், மங்கோலிய இனம், சிவப்பிந்திய இனம் என்று பிரிக்கும் பிரிவு இன்னும் வரலாற்றில் நிலவுகிறது. திராவிட இனத்தின் தொடர்புகள் இன்னும் தெளிவுபடாத நிலையில் அது தொடர்பற்ற தனி இனமாகவே வரலாற்றாசிரியர் பலரால் கொள்ளப்பட்டு வருகிறது. சிங்களவர், மலாய்கள், அசாமிய நாகர்கள், பர்மியர் உட்படத் தென் கிழக்காசிய இனமும் இன்னும் எவ்வினத்துடனும் சேர்க்கப் படவில்லை.

வரலாறு கடந்தும், வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தாண்டியும் துருவிய அறிஞர்களில் ஒருவர் எச். ஜி. வெல்ஸ். அவர் திராவிட இனம் நடுநிலக் கடலக இனம் சார்ந்ததே என்று கருதுகிறார்.

உண்மையில் தென்கிழக்காசிய இனமும் இதே இனம் சார்ந்ததேயாகும். வருங்கால ஆராய்ச்சிகள் இதைத் தெளிவுபடுத்த இடமுண்டு.

சீனரும் சப்பானியரும் இடச் சூழலாலும் மங்கோலியர் கலப்பாலும் மஞ்சள் நிறத்தவரானாலும், நாகரிக முறையில் தென் கிழக்காசியாவுடனும் தென்னகத்துடனும் தொடர்புடையவர்களே.

அமெரிக்கச் சிவப்பு இந்தியர்களும் தென்கிழக்காசிய, தென்னகத் தொடர்புடையவர்களே.

இன்றைய மனித இனம் ஒரே மனித மரபில் வந்த பேரினம் என்பதைப் பழம் பொருளாராய்ச்சியாளர் கிட்டத்தட்ட ஒருமுகமாகக் கூறுகின்றனர். அத்துடன், இன்றைய மனித நாகரிகம் இன்னும் நெருங்கிய ஒருமை உடையது. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே, அது பேரினத்துக்குள் ஒரு பெரும் பண்பட்ட பேரினப் பகுதியாக நிலவிற்று என்பதில் ஐயமில்லை.

# 15. பேரினத்தின் உயிர் மண்டலம்

பண்பட்ட மனித இனப்பகுதி மெக்ஸிக்கோ-நடுநிலக் கடல்—தமிழகம்—மலாயா—சீனு வழியாக நிலவுலகைச் சுற்றிச் செல்லும் ஓர் உயிர்மண்டலம் என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் இவ்வுயிர் மண்டலத்தின் உயிர் மையம், பண்பு மண்டலத்தின் பண்பு மையம் எது என்பதில் முடிந்த முடிவு இன்னும் ஏற்படவில்லை.

மேலையறிஞர், பாரக்கூம்புகள் (Pypamids) அமைத்த எகிப்திய இனத்தில் இதனைத் தேடிக் காணச் சில காலம் எண்ணினர். தைகிரியஸ்—யூப்ரட்டிஸ் ஆற்றின் இடை நிலமான சால்டியா அல்லது பாபிலோனியாவில் சுமேரிய நாகரிகத்திலோ, அதனையடுத்த பழம் பாரசிகப் பகுதியி லுள்ள ஏலமிய நாகரிகத்திலோ கண்டு விட்டதாகச் சின்னுள் கருதினர். சிந்து வெளிநாகரிகத்தில் காண்பதாக இன்று கருதி வருகின்றனர்.

சிந்து வெளி நாகரிகம் கி. மு. 2500-க்கு முற்பட்டது வேத ஆரியகாலம் கி. மு. 1500க்குப் பிற்பட்டது முன்னது ஆரியர் வருகைக்கு முற்பட்டது என்பதில் ஐயமிருக்க இடமில்லை. ஆயினும் வேத நாகரிகத்துடன் அதில் தொடர்பு காண ஆரிய இனப்பற்றுளரான அறிஞர் பெரிதும் முயன்று வருகின்றனர். இம் முயற்சியியில் வெற்றி ஏற்படினும்—அவ் வெற்றி கூட ஆரிய இன முதன்மைக் கோட்பாட்டுக்குச் சிறிதும் உதவமாட்டாது. ஏனெனில் வேதநாகரிகமும் அதனுடன் இணையான பாரசிக அவெஸ்தா நாகரிகங்களும் ஆரிய நாகரிகங்களானு லும் சுமேரியர், ஏலமியர், சிந்து வெளிமக்கள் வாழ்ந்த பகுதியில் அவர்கள் அழிபாட்டின் மீது அமைந்தவையே. ஆதிக்கமட்டும் இழந்து விட்ட அவ்வினத்தவர் சூழலி டையே வளர்ந்தவையே அவை.

## 16. ஆரியர் தோற்ற வளர்ச்சி வரலாறு

மனிதப் பேரினம் ஒன்றுதலால், ஆரியர் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வடதிசை ஆசிய ஐரோப்பிய மேட்டு நிலத்திலிருந்து வந்தவர்களே யன்றி, அங்கேயே பிறந்து, தொன்று தொட்டு வாழ்ந்த இனத்தவர்களல்லர் தென்னக நாகரிகத்துக்கும் மற்ற எல்லா நாகரிகங்களுக்கும் உள்ள தொடர்புகள் அவர்களிடத்தில் இல்லை. ஆனால் அத்தனைக்கும் முற்பட்ட மொழி, பண்புத் தொடர்புகள் உண்டு. ஆகவே தென்னவர் நாகரிகம் நடுவுலக நாகரிகமாக வளர்ந்து அந்நாகரிகம் பரவாத மாபெருந்தொல் பழங்காலத்திலேயே—தமிழரும் உலக மக்களும் நாகரிக நிலையடையாத காலத்திலேயே—தமிழரிடமிருந்து பிரிந்து சென்றவர்கள் தான் ஆரிய இனத்தவர்.

தமிழின் சுட்டுச் சொல்பகுதிகள்; வினைப்பகுதிகள் அஃறிணை ஒன்றன்பால் பெயர்வினை விகுதிகள்; அஃறிணைப் பன்மை விகுதிகள்; இக் காலக்கூறு அமைவதற்கு முன்னுள்ள முற்றுவினை, முற்றுவினை நிலைகள்; ஏவல் வியங்கோள் வினைப்பாடுகள்; ஆய்த ஒலி (சமஸ்கிருத விசர்க்கம்) ஆகியவை எல்லா ஆரிய இனமொழிகளுக்கும் தமிழின மொழிகளுக்கும் உள்ள மூல அடிப்படை ஒற்றுமை ஆகும். இவை சமஸ்கிருதம் போன்ற ஆரிய மொழிகளுடனோ, இந்தி முதலிய மற்றத் தாய் மொழிகளுடனோ மட்டும் தமிழுக்குள்ள பொதுக்கூறுகள் அல்ல. அவை இவற்றினும் மிகப்பல. ஆனால் அவை ஆரியர் இந்தியா வந்தபின் அம் மொழிகள் உருவான காலத்துக்குரியவை. திராவிட இனத்தவர் அனைவருக்கும் ஆரிய இனத்தவர் அனைவருக்கும் பொதுவானவை அல்ல.

பண்புடைய இனங்களின் உயிர்ப் பண்புமையம் பற்றிய ஆராய்ச்சி சிந்துவெளிவரைக்குமே வந்தெட்டி

யுள்ளது. வருங்காலப் பழம் பொருளாராய்ச்சி அது தென்னகமே என்று நிலைநாட்ட உதவக்கூடும். ஆனால் முடிந்த முடிபான உயிர் மையம் தென்னகமே என்று காட்டப் பழம்பொருளாராய்ச்சியை விடத் தெளிவான சான்றுகள் உண்டு. பழம்பொருளாராய்ச்சி இது மையம் என்று திசை சுட்டுகிறதே யன்றி, இதுதான் மையம் என்று முடிவு படுத்த என்றும் உதவாது. ஆனால் வரலாற்றுச் சார்பான சான்றுகள் இவ்வாறு முடிவு கட்டக் கூடியவை ஆகும்.

பண்புடைய பண்டை மொழிகளில் ஆரியமல்லாத மொழிகளே முற்பட்டவை. அத்துடன் அவற்றுள் ஆரியச் சார்பானவை, ஆரியச் சார்பற்ற நடுநிலக் கடலினம் சார்ந்தவை யாவுமே அழிவுற்று விட்டன. மீந்திருப்பவை சீன இனமும் தமிழினமும் மட்டுமே. பழமையில் சீனம் தமிழகத்துடன் போட்டியிடுவதாயினும், அது உயிர்ப் பண்புடையதன்று. ஏனெனில் அதன் எழுத்து முறையை அது பட எழுத்து, உருவெழுத்துக் கடந்து வளர்க்கவில்லை; பிற இனங்களிடமிருந்தே கடன் வாங்கிற்று. இந் நிலையில் பட எழுத்தும் அதற்கே யுரியது என்று கொள்ள ஏது இல்லாமலிருக்கிறது.

சிந்து வெளி நாகரிகம் நிலவிய இடத்தில் பயின்ற இந்திய ஆரிய நாகரிகமோ, சிந்து வெளியோ கூட உயிர்ப் பண்புடைய பகுதியன்று. சிந்து வெளி நாகரிகமும் சரி, சிந்து வெளி ஆரியமும் சரி, தமிழகத் தொடர்பினாலேயே வாழ்ந்தது. ஏனெனில் சிந்து வெளி அழிபாட்டின் மீது வளமுடன் எழுந்த சமஸ்கிருதம் பேச்சு வழக்குப் பெறவேயில்லை; இலக்கிய வழக்கிலும் நீடிக்கவில்லை. மற்ற மொழிகளோ, எதுவும் நான்கு நூற்றுண்டுக்கு மேல் வாழ்வு காணவில்லை. இன்றுள்ள வடதிசைத் தாய்

மொழிகள் கூட இனித்தான் அத்தகைய வாழ்வு காண வேண்டும்.

## 17. உயிர்ப் பண்பின் மையம்

தென்னக மொழிகளில் தமிழல்லாத பிறமொழிகளின் இலக்கிய வாழ்வுக்கு ஏற்பட்டுள்ள ஆயிர ஆண்டு வாழ்வுகூட உலகில் எந்த மொழியும்—பண்டை மொழியோ, இடைக்கால மொழியோ, இக்கால மொழியோ, எதுவும்—இன்னும் காணாதது.

தமிழ் இனம், தமிழ்மொழி உயிருடையன, உயிர்ப் பண்புடையன மட்டுமல்ல; தம்மைச் சூழ உயிர்ப் பண்பலைகள் எழுப்புவன.

பண்டை மொழிகளில் ஆரிய மொழிகளைவிட ஆரியச் சார்பற்றவையே பழமை மிக்கவை; எண்ணும் எழுத்தும் வளர்த்தவை. ஆனால் ஆரிய மொழிகளே உயர்தனிச் செம்மொழிகளாய் உயர்ந்தன. எனினும் இந்த இரண்டு சார்பு மொழிகளும் இன்று மாண்ட வழக்குகளாய் விட்டன. தமிழின்நிலை இங்கே தனிப்பட்டது, தனிப்பெருஞ் சிறப்புடையது. ஏனெனில் அது மாண்ட ஆரிய மொழிகளைப் போன்ற உயர்தனிச் செம்மொழி. மாண்ட ஆரியச் சார்பற்ற மொழிகளைப் போலப் பழமையான ஆரியச் சார்பற்ற மொழி. அதே சமயம் மாண்ட இரு சார்பு மொழிகளையும் போலாது இன்னும் மாளாதே நிலவும் பழமை மிக்க உயர் தனிச் செம்மொழியாய் இலங்குகிறது.

உலகில் வேறு எம்மொழிக்கும் இல்லாத வருங்கால வளமும் அதற்கு உரியது ஆகும்.

உலகில் தனக்கென எழுத்துமுறை, எண்முறை, இலக்கிய இலக்கண மரபு, கலை, நாகரிகம் வகுத்துக் கொண்ட ஓரே மொழியினம் தமிழினம் ஆகும்.

## 18. நாகரிகமும் வரலாறும்

மனித இன நாகரிகம் மனித இனப் பண்பாட்டின் புறத்தோற்றம்—தோடு, தசை, எலும்புக் கூடு. மனித இனப் பண்பாடு அதன் அக இயக்கம், அக வளர்ச்சி—நரம்பு மண்டலம்; குருதி நாளங்கள், குருதி யோட்டம் ஆகியவை. பண்பு அதன் குருதிப் பையான இதயம், அதை இயக்கும் உயிர்ப்பை அல்லது உயிர்ப்பீரல், அனைத்தையும் இயக்கும் நரம்பு மையமும் ஐம்புலமையமும் ஆன மூளை. இவை அக வளர்ச்சியை இயக்குவதுடன், அதற்குத் தேவையான புற உலகத் தொடர்பும், புற உணர்வும் இணைத்து, உயிர்ப் பாற்றல் பேணுபவை ஆகும்.

உலக வரலாற்றாசிரியர் பெரிதும் புற வளர்ச்சியாகிய நாகரிகத்தில்தான் கருத்துச் செலுத்தி யுள்ளனர்—அது கூட அணிமைக் காலத்துக்குள்ளேயே. ஏனெனில் அரசியல் நிகழ்ச்சிக் கடுத்தபடி பகட்டாகப் புறந்தெரியும் வாழ்க்கைப் பகுதி அதுவே.

இது மட்டுமன்று. முதலில் அவர்கள் செயற்கை இடப்பரப்பாகிய தேசத்தை அடிப்படையாகக்கொண்டும், மிகமிக அணிமைக் காலத்திலேயே இன எல்லையாகிய நாடு, மனிதப் பேரின எல்லையாகிய உலகம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டும் வரலாறு எழுதத் தலைப்பட்டுள்ளனர்.

தேசம் நிலவுலகின் ஓர் இயற்கைக் கூறு அல்லது துண்டுப் பகுதி. அது அரசியற் பிரிவாகவும் அமையலாம். ஆனால் மனிதப் பேரினவாழ்வாகிய உலகிலும் சரி, இன வாழ்விலும் சரி, அது ஒரு செயற்கை எல்லையே யாகும். ஏனெனில் ஒரு தேசத்தில் ஓர் இனமோ, ஓரினப் பகுதியோ, பல இனங்களோ, பல இனப் பகுதிகளோ வாழ்தல் கூடும். காலத்துக்குக் காலம் வேறுபட்ட இனங்கள்

வாழவோ கலக்கவோ ஆட்சி செய்யவோ நேர்வதுண்டு. அதுபோல ஓரினம் ஒரு தேசத்திலோ, பல தேசத்தில் சிதறியோ, பல காலங்களில் பல தேசங்களிலோ வாழ இடமுண்டு.

இந் நிலையில் தேச அடிப்படையான வரலாறு நாகரிக வரலாருன பின்னும், அதில் நாகரிகத் தொடர்பை ஒரு சிறிதும் காண முடியாது. நிகழ்ச்சிகள் பலவற்றைப் படம் பிடித்து, அப்படங்களின் துண்டுத் துணுக்குகளை ஒட்டவைத்த நிலையே அதன் போக்குக் காட்டக் கூடும். வரலாறு இனத் தேசிய எல்லையையோ, உலக எல்லையை யோ அளாவிய பின்னரே, அதில் ஓரளவு நாகரிகத்தின் அக வளர்ச்சியாகிய பண்பாட்டு வளர்ச்சிப் படிகளின் நிழலையாவது காண இயலும்.

எல்லை இயற்கையளாவிய பின்கூட, நாகரிக வரலாறு பண்பாட்டுப் படிகளின் நிழலோவியமாக இலங்குமே யன்றி, அதன் தொடர்ந்த வளர்ச்சி காட்டாது. பண்பாட்டு வரலாருகவோ, பண்பு வரலாருகவோ ஒரு சிறிதும் இயங் காது. உலகப் பண்பாட்டு வரலாறு, பண்பு வரலாறு ஆகிய இரண்டும் பெரிதும் வருங்காலத்துக்கே உரியன ஆகும்.

நாகரிகம், பண்பாடு, பண்பு ஆகியவற்றின் வரலாற் றில் மட்டுமல்ல, அவற்றின் கருத்து வளர்ச்சியிலேயே உல கம் இன்னும் எவ்வளவோ பிற்பட்டுள்ளது. இதை உலக மொழிகளில் அச்சொற்கள், சொற் படிவங்கள், கருத்துப் படிவங்கள் ஆகியவை பெற்றுள்ள பரப்பும் வளர்ச்சியுமே செவ்வனே எடுத்துக் காட்டுகின்றன.

இச்சொற்கள் மூன்றும் தமிழ்ச் சொற்கள், தனித் தமிழ்ச் சொற்களே. அதுமட்டுமல்ல. சொற்கள் மட்டு மன்றி, கருத்துப் படிவங்களே தமிழர் உருவாக்கி வளர்த்து உலகுக்கு அளித்தவை. இதை மேற்குறிப்பிட்ட உலக மொழிகளின் ஒப்பீடே தெளிவுபடுத்த வல்லன. ஆயினும்

தமிழகத்தின் நீண்ட இடையிருட் காலத்தின் பிற் பருவத்தில், இச்சொற்களின் உயிர் மரபுகள் படிப்படியாக மறக்கப் பட்டன. சொற்கள் கருத்து நுட்பமும் பொருள் நயமும் இழந்து சிலசமயம் பொதுப் பொருள்பட நிலவின. நாளடைவில் பொதுப்பொருளிலும் திட்பமும் தெளிவுமின்றி, அவை பலவகைக் குழப்பங்களுக்கும் மயக்கங்களுக்கும் இடந்தரலாயின. இந்நிலை மறுமலர்ச்சி யூழியின் தொடக்கக் காலம்வரை, அம் மறுமலர்ச்சியையே இடையிருட்கால மரபில்காண எண்ணிய அறிஞர் மரபிலேயே இடம் பெற்றது.

தமிழக மறுமலர்ச்சியின் தனிச்சிறப்புக்களுள் ஒன்று அது இச்சொற்களை மீட்டுத் தந்ததாகும். மீட்சியின் படிகள் கூடச் சுவையுடையவை, சில நகைச் சுவைக்கே இடம் தருபவை.

## 19. மறுமலர்ச்சி மீட்ட உயிர்மரபுகள்

நாகரிகம் என்ற சொல் இடையிருட் காலத்தின் பிற் பகுதியிலே ஒரு சிலரால் தமிழில் வழங்கும் அயல் மொழி (சமஸ்கிருத)ச் சொல் என்று கொள்ளப்பட்டதுண்டு. தனித்தமிழாளர், தமிழ்ப் பற்று மிக்க சிலர்கூட இம்மயக்கத்தில் சறுக்கி, அதற்குச் சரியான தமிழ்ச் சொல்லாகப் பண்பாட்டைக் கண்டெடுத்து மீட்டும் வழக்குக்குக் கொண்டு வரலாயினர். இங்ஙனம் சமஸ்கிருதப்பற்று, தமிழ்ப்பற்று இரண்டும் தம்மையறியாமல் ஒத்திசைந்து நாகரிகம், பண்பாடு ஆகிய இரு சொற்களையும் ஒருபொருட் சொல்லாகக் கொண்டு குழப்பமடைந்தன. அதே சமயம் பண்பு என்ற சொல் குணம், தன்மை, இயல்பு, நற்றிறம் அல்லது பரிசு என்னும் பொருள்களிலேயே உணரப்பட்டது. இவற்றின் நுண்ணய வேறுபாடுகள் அறியப்படவில்லை.

மறுமலர்ச்சி யூழிக்கு முற்பட்ட இடைக்கால, அணிமைக்கால நிலை இது.

மறுமலர்ச்சி யூழியின் வாயிற்படியிலேயே, மறுமலர்ச்சியை அயல்மரபு மலர்ச்சியாகத் திருப்ப முனைந்த ஓரிரு மயற்கலைஞரின் முயற்சிகள் இராப்போதின் கடைசி இரு ளலைகளாக அமைந்தன.

'நாகரிகம்,' 'பண்பாடு' ஆகிய இருவேறு கருத்துக்களுக்கும் மேலை மொழிகளில் இருவேறு சொற்கள் (Civilisation, culture) உண்டு. மயற்கலை வாணப் பெரியார் ஒருவர் (காலஞ் சென்ற கலைச்சுவை மணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்) முதற்கருத்துக்குரிய சரியான சொல்லாக நாகரிகத்தை ஏற்றுக்கொண்டார். 'பண்பாடு' என்பதும் 'நாகரிகம்' என்ற கருத்துடைய தனித்தமிழ்ச் சொல் என்றே அவர் நினைத்தாரோ, என்னவோ—இரண்டாவது கருத்துக்குரிய அச்சொல் தமிழில் இல்லை என்று கருதினர். சமஸ்க்ருதத்தில் கூட அக்கருத்துடைய சொல் அவருக்குத் தென்படவில்லை. தென்பட்டிருந்தால் கலப்புத் தமிழை ஆதரித்த பெரியார் அதனைக் கட்டாயம் வழங்கியிருப்பார். இந்நிலையில் நயமிக்க இக்கருத்துப் படிவத்துக்குரிய சரியான சொல் தமிழில் இல்லையே என்று அவர் கண்ணீர்விட்டுக் குறைபட்டுக் கொண்டார்.

இது மட்டுமோ?

தமிழுக்குத் தாம் செய்யும் சேவையின் ஒரு பகுதியாக, தம் பெயரால் தமிழில் நிலை நிற்கும்படி அதன் ஆங்கிலச் சொற்படிவத்தை அப்படியே தமிழுக்குக் கொண்டு வந்து தமிழாக்கிவிட அவர் முற்பட்டார். தமிழ் மரபுக்கு மாருக ஆங்கிலத்தில் அச்சொல்லில் லகரத்தை யடுத்து சகரத்தின் வல்லொலி இரட்டித்துவருவதைக்கூட அவர் ஒரு தடையாகக் கருதவில்லை. ஆங்கிலச் சொல்லுடன் ஆங்கில

மரபையும் தமிழ் மரபாக்கி, தமிழ் இலக்கணத்தையும் மாற்றியமைக்கத் துணிந்தார். லகரத்துக்குப்பின் சகரத்தை இரட்டித்து ஆங்கிலச் சொல்லையே (கல்ச்சர் என்று) எழுதினார். ஒரு சொல்லின் மரபு மீறுவதுடன் கூட மனநிறைவடையாமல் தமிழிலக்கிய வழக்கையும் இலக்கண விதியையுமே தம்முழுச் செல்வாக்குடன் மாற்றியமைக்கவும் அவர் திட்டமிட்டார். 'லகர ளகரங்களுக்குப் பின் "கசதப"க்கள் இரட்டிப்பதில்லை, அதற்குப் பதிலாக லகர ளகரங்கள் றகர டகரங்களாக, பின்வரும் தகரமும் றகர டகரங்களாகும்' என்பது இலக்கணவிதி. இதையே மாற்றியமைத்துப் 'பாற்குடம்' என்பதனைப் 'பால்க்குடம்' என்றும், 'வந்தால் தெரியும்' என்பதை 'வந்தால்த் தெரியும்' என்றும் எழுதி அச்சிடத் தொடங்கினர். அவர் செல்வாக்குக் குட்பட்ட பத்திரிகைகள், எழுத்தாளர்கள் இப்புது மரபுக்கு ஆதரவு தரவும், பரப்பவும்கூட முயன்றனர்.

மறுமலர்ச்சித் தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த எதிர்நீச்சு வெற்றியடையவில்லை. ஆனால் வியப்பு யாதெனில், எதிர்நீச்சு நீந்த முயன்றவரே நேர் நீச்சிலும் முந்து வெற்றிகாண முன்வந்தார். 'பண்பாடு' என்ற கருத்துக் குரிய நல்ல தமிழ்ச்சொல்லாக அவரே 'பண்பு' என்ற சொல்லை முதன் முதலில் கண்டு வழங்கியதாக அவர் சீடரில் தலைசிறந்த ஒருவர் (காலஞ்சென்ற அறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள்) பெருமையுடன் குறிப்பிடுகிறார். அச் சொல்லை அப்பெரியார் அப்பொருளில் தமிழில் முதன் முதல் வழங்கிய ஆண்டு மாதம் நாளைக்கூட மாணவர் தாம் இயற்றிய நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பண்பாடு என்ற கருத்துப் படிவத்துக்கு அச்சொல்லையே முதன் முதன் வழங்கியது யார் என்று இன்று கூற முடியவில்லை. மறுமலர்ச்சியே அந்தப்பணியைச் சாதித்து விட்டது என்னலாம். ஆனால் மேலைமொழிகள் பயின்று

அக்காரணத்தால் 'நாகரிகம்,' 'பண்பாடு' ஆகிய கருத்துப் படிவங்களின் வேறுபாடு உணரப்பட்ட நாட்களில்கூட. 'பண்பாடு' 'பண்பு' ஆகியவற்றிடையே வேறுபாடு உண ரப் படவில்லை. ஏனெனில் மேலை மொழிகளிலேயே 'பண்பு' என்பதற்குரிய சொற்படிவம் இல்லை. ஆனால் இங் கும் மறுமலர்ச்சி ஊழியின் அடுத்த பருவம் வியத்தகு வெற்றி கண்டது. வேறுபாடு உணரப்படாமலே இரு சொற்களும் வழங்கி, மரபின் ஆற்றலாலேயே வேறு வேறு கருத்துப் படிவங்களாய் இனமொழியில் உருவாகி விட்டன.

பண்பு என்ற சொல்லைத் தம் முதல்வர் புதிதாகக் கண்டு பிடித்த நிகழ்ச்சியை அறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் பதிவு செய்துள்ள ஏட்டின் பெயரி லேயே பண்பு என்ற சொல் இடம் பெறுகிறது. அதன் பெயர் 'தமிழ்ப் பண்பு' என்பதே. பண்பாடு, பண்பு ஆகிய இரு சொற்களும் ஒன்று என்ற எண்ணத்துடனேயே அவர் ஏடு எழுதினர் என்பதில் ஐயமில்லை என்பதை மேற்கண்ட குறிப்புக் காட்டுகிறது. ஆயினும் மறு மலர்ச்சி அதன் எதிர் சுழலில் நீந்திய மயற்கலைஞரைக் கூட ஆட்கொண்டுள்ளது என்பதைப் பண்புக்கு அவர் கூறும் விளக்கம் காட்டுகிறது. பண்பாட்டின் நிலைத்த தொடர் விளைவு (Cultural traits), பண்பாட்டு மரபு (Cultural tradition) என்ற கருத்துக்கள் அதன் விளக்க மாகத் தரப்படுகின்றன.

தமிழக மறுமலர்ச்சி மேலை நாகரிகங்களால் தூண்டப் பட்டதே தவிர, அதன் உள்ளுயிரோட்டம், உயிராற்றல் வெளியுலகுக் குரியதல்ல என்பதை இச் செய்திகள் காட் டும். நாகரிகம், பண்பாடு ஆகிய கருத்துப் படிவங்களை மற்றொரு மொழியில் கண்ட பெரியார், கலப்புத் தமிழில் நம்பிக்கை யுடையவராயினும், முன்னது சமஸ்கிருதம்,

பின்னது தமிழ் என்று பல தனித் தமிழாளரைப் போல விட்டு விடவில்லை! அவர் மாணவரோ, பண்பாடே பண்பு என்ற கருத்துடன் எழுதினும், அவர் உள்ளத்தின் உயிர்மரபு உள்ளூர நின்று வேறுபாடு அறிவித்துள்ளது. பண்பாட்டையும் பண்பையும் ஆங்கிலக் கருத்துப் படிவமாகிய பண்பாடு (Culture) என்று கருதினும், தம்மையறியாமல் பண்பை அப் பண்பாட்டின் நிலைத்த தொடர் விளைவு என்று அவரால் விளக்க முடிந்துள்ளது.

## 20. நாகரிகம்: சொல் விளக்கம்

நாகரிகம் என்ற சொல் தமிழானாலும் சமஸ்கிருதமானாலும், அதன் சொற் பொருள் விளக்கத்தில் இதனால் வேறுபாடு கிடையாது, இரு மொழிகளின் சார்பிலுமே 'நகரத்துக்கு உரியது நாகரிகம்' என்று ஒரு சிலர் விளக்கம் தருகின்றனர். அதுபோலவே இரு மொழிகளின் சார்பிலுமே 'நாகருக்குரியது நாகரிகம்' என்று வேறு சிலர் விளக்குகின்றனர்.

இரு விளக்கங்களிலும் முதலதே இயல்பாகப் பொருந்துவது என்னல் தகும். ஏனெனில் நாகரிகம் என்பதற்குரிய மேலை மொழிச் சொல் (Civilisation) நகரத்தான் (Civilis, Civis), நகரம், நகர்—நாடு அல்லது நகரரசு (Civitas) என்ற இலத்தீன் வேர்ச் சொற்களுடன் தொடர்புடையது.

'நாகரிகம்' என்ற சொல்லைப் போலவே 'நகரம்' என்ற சொல்லும் கீழ்திசையில் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் ஒப்ப வழங்குவதாகும். ஆனால் சமஸ்கிருதத்திலும் இக்காலத் தமிழ் வழக்கிலும் அது பேரூர் என்ற பொருள் மட்டுமே குறிக்கிறது. பழந்தமிழிலோ, தலைநகரம் என்ற சொல் இன்று வழங்கு மிடத்தில்,

நாடு அல்லது நாட்டரசின் மையப் பேரூரையே அது சுட்டுவது காண்கிறோம். இன்னும் பழமையான மரபில் அது தேசியத் தலைமையிடம், இனத் தலைமையிடம் என்ற பொருளில் நகர்—நாட்டின் மையப் பேரூரையே குறித்தது.

நாடு, நகர் என்ற சொற்கள் முன்னாட்களில் பல பேரூர்களையும் சிற்றூர்களையும் உட்கொண்ட இந்நாளைய தேசம் அல்லது பெரு நாட்டையோ, அதன் பேரூர்களையோ குறிக்கவில்லை, இவை உலகில் ஏற்படுமுன் நிலவிய நகர—நாட்டின் பேரெல்லை, சிற்றெல்லைகளையே குறித்தன. முற்காலத் தமிழ்க் காவியங்களிலும், பிற்காலத் தமிழ் இதிகாச புராணங்களிலும் இம் மரபு பற்றியே ஒரு நாட்டுக்கு ஒரு மலை, ஓர் ஆறு, ஒரு நகரம் என்ற அடிப்படையில் தொடக்க வருணனை வாழ்த்துப் படலங்கள் அமைந்தன. சங்க காலத்தில் முடியரசுகளுக்கிடையே நிலவிய வேளிர் ஆட்சிகள் அல்லது குடியரசுகள் இத்தகைய நகர்—நாடுகளின் மரபில் வந்தவையே. முடியரசுகளும் குடியரசுகளும் நகர்—நாட்டு அரசுகளின் பின்னாளைய வளர்ச்சிகளேயாகும்.

'நகர்-நாடு' அரசியல் முறை தமிழகத்தில் சங்க காலத்திலேயே மரபிழந்து மறக்கப்படத் தொடங்கிவிட்டது. ஆனால் மக்கள் மரபில் அதன் பழமையும் பழமைச் சின்னங்களும் நீடித்துத் தொடர்பு அறுதிருந்தன. வட திசைச் சிந்து கங்கை வெளியில் ஆரியர் வருமுன் இத்தகைய நகர்—நாடுகள் எங்கும் நிலவி இருந்தன. மோகஞ்சதரோ, ஹரப்பா முதலிய புதையுண்ட நகரங்கள் நகர்-நாடுகளின் மரபில் வந்த வணிக நகரங்களே. ஆரியர் வந்த பின்னரும் நெடுங்காலமாக கி. பி. 3-ம் நூற்றுண்டுவரை இத்தகைய வணிக நகரரசுகள் சிலவும், கூட்டுக் குடியரசுகள் சிலவும் நீடித்திருந்தன. மேல்திசையிலும் கிரேக்க நாடு, உரோம

நாடு உட்பட்ட நடு நிலக் கடலகமெங்கும் ஆரியர் வந்த பின்னும் நகர்—நாடமைப்பு முழு உருவிலேயே நீடித்திருந்தன.

நாகரிகம் நகரத்திலிருந்து வந்தது என்பது சொல் விளக்கம். அதுவே பொது விளக்கமாகவும் அமையும். ஏனெனில் 'நகரம்' என்ற சொல் மரபுடன் அது தொடர்புடையது. ஆனால் இது பொருள் விளக்கமாக, நாகரிகம் என்ற கருத்துப் படிவம் தோன்றிய வரலாறாக முற்றிலும் அமையாது. இன்றைய உயிர் வழக்கும் மரபு வழக்குமே இதைச் சுட்டிக் காட்டும்.

புத்தம் புதிய நாகரிகத்தைப் பட்டணத்து நாகரிகம் என்பது இன்றைய தமிழர் வழக்கு. தமிழகத்தைப் பொறுத்தமட்டில், வெளியுலகத் தொடர்புக்குரிய முதலிடம் சென்னைப் பட்டினமே. அதுவே இன்று நாகரிகத்தில் வழிகாட்டியாகவும் நாகரிகத்தின் முழு அளவையாகவும் தமிழரால் கொள்ளப்படுகிறது. இதுபோல ஒவ்வொரு நாகரிக ஊழியிலும், நாகரிக வட்டாரத்திலும் அவ்வவ் வூழியில் அவ்வவ் வட்டாரத்துக்குரிய வட்டாரப் பேரூரே நாகரிகத்தின் பிறப்பிடமாக, அளவைக் கோலாக, தலைமையிடமாகக் கருதப்பட்டிருத்தல் இயல்பு.

நாகரிகத்துக்கும் நகரத்துக்கும் உள்ள சொல் தொடர்பு கடந்து, அதன் கருத்துத் தொடர்பை மேற்காட்டிய தற்காலத் தமிழர் வழக்கே சுட்டிக் காட்டுகிறது. இன்று அதற்கான புதுச் சொல் அல்லது புதுத்தொடர் ஏற்படுவதானால், அது நகரப்பாங்கு என்று அமையாது. பட்டணப் பாங்கு என்றுதான் அமையும். ஏனெனில் ஆங்கிலம் படித்த தமிழரிடையே தான் நகரம் என்ற சொல் (ஆங்கிலமோ, தமிழோ) தலைநகரம், தலைமை நகரம், சென்னை நகரம் என்ற கருத்துக்களை எழுப்பும்; அதைத் தனிப்படக் குறிக்கும். பொதுவாகத் தமிழ

ரிடையே, இனத் தமிழரிடையே, பட்டணம் என்ற சொல் தான் சென்னையைத் தனிப்படச் சுட்டும். நகரம் என்ற சொல் எடுத்த எடுப்பில் மதுரை, திருச்சிராப்பள்ளி போன்ற பழைய தலைநகரங்களையும், அடுத்தபடியாகப் பிறதற்கால நகரங்களையும் பக்கத்துப் பேரூர்களையும், மதிப்புவழக்கில் எந்தச் சிற்றூரையும் குறிக்கும். 'பூவெனப் படுவது பொங்கு தாமரை' என்பது போல, ஆங்கில வழக்கில் மட்டுமே நகரம் எனப்படுவது சூழல் அல்லது இனத் தலைமைப் பேரூரையும், பட்டணம் என்ற சொல்லே இன்றைய தென்னகத்தமிழர் இனத் தலைமைப் பேரூரான சென்னையையும் குறிக்கும்.

## 21. நாகரிகம் வளர்த்த நகரம் எது ?

நாகரிகம் என்ற சொல்லுக்கு நகரமே மூலமானாலும், அம்மூலச் சொல் 'பேரூர்' என்று இன்று தமிழர் வழங்கும் பொருளுடைய 'நகரம்' என்ற சொல்லல்ல. பேரூர், தலை நகர் என்ற சொல், நகரரசு, அல்லது இனத்தலைமைப் பேரூரானநகர்— நாட்டு மைய நகர் என்ற மரபின் முழுப் பொருளும் தன்னகத்தே கொண்ட மூல முதற் சொல்லே யாகும். இறுதிப்பொருள் தரும் சொல்லே அம்மூலச் சொல் என்பது வெள்ளிடை மலை. நாகரிகத்துக்கு மூலமானநகரம், இனத் தலைமையூரான நகர்—நாட்டுத் தலைமையூர் என்பதேசொல்லின் முழுப் பொருள் விளக்கம் ஆகும்.

நகர்—நாடு பற்றி நாம் அறியும் வரலாற்று மெய்ம்மைகள் இவ்விளக்கத்துக்கு இன்னும் உயிர் வலு அளிப்பவை. ஏனெனில் முற்கால நகர்—நாட்டுக் குடியாட்சி இக்காலக் குடியாட்சியைப் போல மக்களிடமிருந்தும், மக்கள் வாழ்வி லிருந்தும் எட்டாத்தொலைவான பேராண்மை முறை ஆட்சி (Representative Government) அன்று. அது நேர் மக்க

ளாட்சி (Direct Democracy) யாகவே நிலவிற்று. எனவே நாட்டு மக்களின் நிகழ்ச்சிகளில் பொதுவாக, சிறப்பு நிகழ்ச்சிகளில் பேரளவில், நாட்டுக் குடிமக்கள் அல்லது இனமக்கள் அனைவருமே—பல சமயம் ஆண் பெண் இளைஞர் நங்கையர் கூட—நேரடியாக வந்து நாட்டு மன்றம் அல்லது அம்பலம், பேரவை அல்லது பொதியிலில் கூடியிருந்தனர்.

அயல்நாடு, அயலரசுத் தொடர்புகள் இத்தகைய பேரவையிலேயே முடிவு செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

'மாநாடு' என்ற மக்கள் மன்றத்தின் மற்றொரு பெயர் தமிழரின் இந்நேரடியாட்சி முறைக்குச் சான்ருக இன்னும் தமிழ் மொழியில் நிலவுகின்றது !

நாட்டுமக்கள், இனமக்கள் அனைவரும் ஒரேகாலத்தில் ஒரே இடத்தில் கூடி, வெளிநாட்டார், அயலினத்தார் எவரையும் ஒருங்கே சந்திக்கும் வாய்ப்புடைய இந்தக் கூட்டுறவு நாகரிகப் பிறப்புக்கும் வளத்துக்கும், அச்சொற் பிறப்புக்கும் உயிர் வழக்குக்கும் உதவியிருக்கத் தக்க ஒன்று என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

## 22. நகரும் நகுதலும்

நகர் என்ற சொல் மரபும், நாகரிகம் என்ற சொல் மரபும் தரும் இந்த விளக்கம், கீழையுலகிலும் மேலையுலகிலும் ஒரே அடிப்படையில் அமைந்துள்ளது. இது விளக்கத்தை முற்றிலும் வலியுறுத்துவதாகும். ஆனல் அதே சமயம் இவ்வலியுறுத்தே நாகரிகம், நகர் என்ற இரு சொற்களும் சமஸ்கிருதத்துக்குரிய உயிர்ச்சொற்களல்ல, தமிழுக்கே யுரிய தனித்தமிழ்ச் சொற்கள் என்பதையும் நிலைநாட்டப் போதியன ஆகும். ஏனெனில் தமிழின் மிகப் பிற

பட்ட இக்கால வழக்கில் மட்டுமே அது சமஸ்கிருதத்தில் வழங்குகிற்று.

மொழிமரபில் மட்டுமல்ல, இனவாழ்வு மரபிலும் 'நகரம்', நகர மரபு இரண்டும் ஆரிய இனவாழ்வுக்குப் புறம்பானது. தென் ஆசிய நகரங்களை அழித்து அவர்கள் பரவிவந்த காலங்களில் (கி. மு. 1500—800) அவர்களுக்கு நகர வாழ்வல்ல—சிற்றூர் வாழ்வு, குடிசை வாழ்வு கூடக் கிடையாது. முல்லை நில நாடோடிகளாகவே அவர்கள் தெற்கே பரவினர். வந்தபின்னும் அழியாத பழங்குடி நகரங்களுடனேயே கிட்டத்தட்ட பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் வரை அவர்கள் அமைந்தனர். சிற்றூர் (கிராம) வாழ்வே அவர்கள் நீடித்த பண்பாய் அமைந்தது. தமிழர் தான் குறிஞ்சி (மலைநில) வாழ்வில் கோமன்னரின் கோட்டைகளும், மருத (ஆற்றுநில) வாழ்வில் பேரூரும், நெய்தல் (கடற்கரை) வாழ்வில் பட்டினமும் ஆக மூவகை நகர்—நாடுகள் அமைத்தனர். நாட்டுக்கு ஒரு மலையும் ஓராறும், ஒரு பேரூரும் ஒரு துறைமுகநகரும், ஒரு மரமும் இன்றியமையா உயிர் மரபுச் சின்னங்களாகக் கருதப்பட்டதன் காரணம் இதுவே.

பண்பாடு, பண்பு ஆகிய கருத்துப்படிவங்கள் அமையுமுன் எழுந்த சொல் நாகரிகம். தொடக்க காலங்களில் அது மற்ற இரண்டு பொருளும் குறித்ததன் காரணம் இதுவே தனி மனிதர் பண்பை வள்ளுவர் நாகரிகம் என்றே வழங்கியதை மேலே காட்டியுள்ளோம். நாகரிகம் என்ற சொல்லுக்கும் நகர் என்ற சொல்லுக்கும் எளிய பொது மூல வேர்ப்பொருளை இது சுட்டிக் காட்டுகிறது.

நாகரிகமற்றவர் முரட்டு உடை அணிபவர், முரடர். கடுங்கோபம், இடைவிடாப் பூசல், பொறுமை, பொச்சரிப்பு ஆகியவை அவர் பண்புகளாயிருப்பது இயல்பு. இதனால் மேன்மை, நயம், இடையறு இன்னமைதி காட்டும்

நகைமுகம் ஆகியவை நாகரிகத்தின் புறச் சின்னங்களாகக் கருதப்பட்டன. நாகரிகமுடைய நகரம் நகுதற்குரியது; கூடி மகிழ்தற்குரிய அமைதி இடம். இரு சொற்களும் 'நகுதல்' (புன்முறுவல் செய்தல்) என்ற வேர்ச் சொல்லி லிருந்து வந்தன என்று கூறுதல் பொருந்தும்.

மக்கள் கூட்டுறவு, அறிஞர் கூட்டம், கலைஞர்கூட்டம் ஆகியவற்றில் ஏற்படும்படியான உயர்திறம் 'நகு'தல். அதன் இன்பங்களை உணர்ந்தவர் தமிழர்.

> 'தவலருந் தொல் கேள்வித் தன்மை உடையார்,
> இகலிலர், எஃகுடையார் தம்முள் குழீஇ
> நகலின் இனிதாயின் காண்பாம், அகல்வானத்து
> உம்பர் உறைவார் பதி.'

இது தமிழ் நாலடியாரின் செய்யுள். இன்பத்தை வெறுத்த சமயம், இன்பந்துறந்த துறவையே உயர்வாகக் கருதிய சமயம் சமணநெறி. அந்நெறி சார்ந்த துறவிகள் நாலடியின் ஆசிரியர்கள், சமணத்துறவிகளையே இந்த உயர்ந்த நாகரிக 'நகுதல்' இன்பத்தைத் தேவருலக இன்பத்தினும் உயர்ந்ததென்று பாடவைத்த இனம் தமிழினம். சமணத் துறவிகளாயினும் தமிழர் உயர் நாகரிக இனப்பண்பில் தவறுபவர்களல்லர் என்பதை இது காட்டுகிறது.

'நயத்தக்கது', நட்பில் நஞ்சு கொடுத்தால்கூட நகை முகத்துடனே கொள்ளத் தக்கது என்று வள்ளுவர் நாகரிகத்தைச் சுட்டினர்.

மேலை மொழியில் நாகரிகம், நகரம் ஆகியவற்றுக்குரிய மூலச் சொல் (Civil) போர் சாராத, கோபமற்ற, நயமிக்க என்ற பொருள் தருவதும் கவனித்தற்குரியது.

நாகரிகம், நகர் ஆகிய இரு சொற்களும் தனித்தமிழ்ச் சொற்களே என்பதை இம் மூலச் சொல் தொடர்பும் விளக்கும். சமஸ்கிருதத்துக்கு இப் பொருள்கள் தொடர்புகள் அனைத்தும் அயலாலானவை.

## 23. உலகளாவிய உயிர்ச்சொற் படிவங்கள்

நகரம் 'நகுதல்' அடிப்படையாகப் பிறந்தது என்பது புலவர்க்குரிய கற்பனைத்திறம் வாய்ந்த சொல் விளக்கம் என்று இந்நாளில் பலர் எண்ணுதல் கூடும். இது இயல்பு ஆனால் இனவழி சென்று சொல்லாராய்ச்சி செய்பவர் அவ்வாறு கருத இடமிராது.

உயிர்ச் சொற்கள் எல்லாம் இனம் சார்ந்தவை. உயிர்ப் பண்பு வாய்ந்த இனவாழ்வு உலகளாவியது.

நாகரிகம், நகர் ஆகியவை தமிழ்ச் சொற்கள், தனித் தமிழ்ச் சொற்கள் மட்டுமல்ல. உயிர்ச் சொற்கள் அவை. உயிர்ப்பண்பு வாய்ந்த தமிழினத்தின் உயிர்ச் சொற்கள் என்ற முறையில் உலகளாவிய இன, மொழியாராய்ச்சியே இது போன்ற சொற்களின் முழுப்பண்பும் வரலாறும் விளக்கமாக எடுத்துக் காட்டும் இயல்புடையது.

ஊர், நகர், பட்டினம் என்பன தமிழர் இனமாபில் வந்த சொற்கள். ஆனால் இன்றைய தமிழக வாழ்விலோ, உலக வாழ்விலோ இச் சொற்களில் 'நகர்' ஒன்று தவிர மற்றவை பயன்படாதவை. ஏனெனில் இன்றைய உலகின் கருத்துப் படிவங்கள் வேறு, இச் சொற்கள் அமைந்த பழந்தமிழ், இனவாழ்வுக் காலக் கருத்துப்படிவங்கள் வேறு.

இன்றைய உலகில் கீழ்திசை எங்கும் ஊரின் வகைகளைக் காட்டும் சொற்கள் சிற்றூர் (கிராமம்), பேரூர் (பட்டணம்), நகரம் ஆகியவை. மேலை உலகின் ஊர் வகைகளும் இவையே— இவற்றுக்குச் சரியான சொற்கள் (Village, Town, City) மேலை உலகிலும் உண்டு, கீழை உலகிலும் உண்டு. தமிழில் முதல் இரண்டுக்கும் தனிச் சொற்கள் இல்லை, அகப்படவும் இல்லை என்பது தெளிவு.

ஊரின் சிறுமை, பெருமை குறித்த தொடர்களாகவே அவை வழங்குகின்றன—தனித்தமிழ் எழுதும் எழுத்தாளர் இக் குறைபாட்டை நன்கு உணர்வர்.

தமிழில் மட்டுமல்ல, மனித உலகில் உள்ள எந்த மொழியிலுமே இம் மூவகைக்கும் உரிய இனச் சொற்கள் அதாவது 'ஒரு மொழிச் சொற்கள்' கிடையா. ஏனெனில் சமஸ்கிருதத்தில் இவற்றுக்குரிய சொற்கள் (கிராமம், பட்டணம், நகரம் ஆகிய) மூன்றில், முதலது மட்டுமே அம் மொழிக் குரியது. மற்ற இரண்டும் தமிழ்ச் சொற்கள். சமஸ்கிருதத்துக்கேயுரிய முதற் சொல்கூட மூல ஆரிய வேர்ச் சொல்லன்று. மூல ஆரியர் ஊரும் குடியும் அற்ற நாடோடிகள் என்பதை ஆரிய மொழிகளின் ஒப்பீடு காட்டுகிறது.

மேலை மொழிகளில் கூட இச் சொற்கள் (Village, Town, City) மூன்றில், நடுவில் உள்ளது மட்டுமே தூய ஆங்கில அதாவது ஜெர்மானிய இனச்சொல். மூல ஜெர்மானிய மொழி மரபில் இது 'ஊர்' என்ற தமிழ்ச் சொல்லுடன் பொருள் மரபிலும், வழக்கு மரபிலும், கருத்துப் படிவ எல்லையிலும் முற்றிலும் ஒத்திசைவது. ஏனெனில் அது சிற்றூர்க்கும் பேரூர்க்கும் பொருந்தும் பொதுப் பெயர். தற்கால உலகில் அது பேரூரைக் குறிக்கிறது. மற்ற இரண்டு சொற்களும் இலத்தீன் மொழி சார்ந்தவை —இலத்தீன் மொழியில் கூட ஒன்று (Village) செல்வரின் ஊர்ப்புற மாளிகையையே (Villa) குறித்தது. மற்றது (City) மேலே ஓரளவு விளக்கப்பட்டது.

சிற்றூர், பேரூர், நகரம் என்ற இம் மூவகை வேறுபாடு உலகில் புதிதாக ஏற்பட்ட ஒன்று—ஆரியர் நாகரிக உலகில் பரவியபின் ஏற்பட்ட ஒன்று. அத்துடன் அது ஆரிய இனத்துக்கும் உரியதன்று. நாகரிகத்தில் மேம்பட்ட மற்றப் பழங்குடி யினங்களுக்கும் உரியதன்று. உலக

மொழிகளில் எதிலுமே மூன்றற்கும் உயிர்ச் சொற்கள் இல்லாததன் காரணம் இதுவே.

பண்டைப் பழங்குடியின நாகரிகம் முற்றிலும் அழியாது, அரைகுறையாக அதன் உயிர்ப்பாற்றல் எஞ்சிய இடங்களில், ஆரியர் வருகையின் பின் அந் நாகரிக அழிபாட்டிலிருந்து புதிது கிளர்ந்த புது மலர்ச்சியே இன்றைய உலகின் சமுதாய வாழ்வு. கீழ்திசையிலும் சரி, மேல் திசையிலும் சரி, மூன்று சொற்களின் வரலாறும் இதைக் காட்டுகின்றன.

மூன்று சொற்களும் இன்றைய மனித சமுதாயத்தின் மூன்று வகுப்புக்களைக் குறிக்கின்றன.

வேளாண்மை என்றுமே மனித இனத்தின் அடிப்படைத் தொழில். ஆரிய இனம் எங்குமே வேளாண்மையும் வேளாளரையும் மதித்ததில்லை. கீழை, மேலை மொழிகள் எல்லாவற்றிலும் (தமிழ், தமிழின மொழிகள் நீங்கலாக) இதன் தடங்களைக் காணலாம். ஆயினும் ஆரியர் வருகையின்பின் வேளாண்மை அடிப்படைத் தொழிலாக மட்டுமல்ல. மிகப் பெரும் பெரும்பான்மைப் பிழைப்பு ஆய்விட்டது. வேளாண்மைக்குரிய சிறுகுடி சிற்றூராய்த் திகழ்ந்தது.

பண்டைப் பழங்குடி இனத்தவர் தலை தூக்கிய இடத்தில் வாணிகமும் தழைக்கத் தொடங்கிற்று. ஆரியர் வாணிகத்தையும் விரும்பவில்லை, மதிக்கவில்லை. ஆனால் அதன் வழிவந்த செல்வம் அவர்களை வசப்படுத்திற்று. வாணிகத்தால், தொழில் முயற்சியால் வளம் பெற்ற ஊர்களே இந்நாளில் பேரூர்கள் எனப்படுகின்றன. தமிழிலும் சமஸ்கிருதத்திலும் இவையே பின்னாட்களில் ஒரு பழந்தமிழ்ச் சொல்லின் சிதைந்த திரிபாகப் பட்டணங்கள் எனப்பட்டன.

ஆட்சியாளரும் செல்வர்களும் நல்வாழ்க்கை வாய்ப்புடன் வாழ்வதற்குரிய வாய்ப்புக்கள் அமைந்த பேரூர்களே நகரங்கள் ஆகியுள்ளன.

மேல் திசையில் ஊர் என்ற பழஞ் சொல்லே பேரூர் குறித்தபின், செல்வரின் ஊர்ப்புற மாளிகை சிற்றூர்ப் பெயருக்கு வழி வகுத்தது. கீழ்திசையில் தமிழில் ஊர் சிற்றூர்ப் பெயராயிற்று. ஆனால் இன்றும் அது சிற்றூருக்குரிய மற்ற ஆரிய இனமொழிகளின் சொற்கள் போல நாட்டுப்புறம், பட்டிக்காட்டான் ஆகிய கருத்துக்களைத் தெரிவிக்க உதாவது என்று காணலாம் கீழ்திசையெங்கும் வழங்கும் புது வழக்கான சமஸ்கிருதச் சொல் கிராமம். அது இப்பொருள்களை (கிராமத்தான், கிராமியப் பேச்சு) வழங்குவது காணலாம். ஆனால் பேரூருக்குப் பண்டைய தமிழர் கடற்கரைத் துறைமுக நகரப் பெயரே சமஸ்கிருதத்திலும், இன்றைய தமிழிலும் ஒருங்கே வழங்குகிறது. கடற்கரை வாணிக நகரங்களின் பெயர் உள்நாட்டு வாணிக நகரங்களுக்கும் பரவிற்று.

மூன்று சொற்களிலும் மேல்திசை, கீழ்திசை இரண்டிலும் நமக்கு இனச் சொல்லாக மீந்த சொல் நகரம் ஒன்றே.

தமிழில் நகரம் 'பேரூர்' என்ற பொருளில் இலக்கிய வழக்கில் மட்டுமே வழங்குகிறது. பொது மக்கள் மதிப்புச் சொல்லாக நாலு குடிசை இருக்கும் குடியிருப்பைக் கூட 'நகரம்' என்று பகட்டாக வழங்குவது காண்கிறோம். இதிலிருந்து நகரம் என்ற சொல் மக்கள் ஆர்வப் பெயராகப் பேரூர்க்கு இலக்கிய வழக்காக வழங்கத் தொடங்கி விட்டதே யன்றி, உண்மையில் அப் பொருளுடையதல்ல என்று காணலாம். மேலும் பேச்சு வழக்கில் பட்டணம் பழய மரபு காரணமாகவும், சிறப்பு வழக்குக் காரண

மாகவும் சென்னைப் பட்டினத்தைக் குறித்தாலும், பேரூர்க்குரிய தற்கால வழக்கே என்பது தெரியவரும்.

நகரம் என்ற சொல் ஊரும் பேரூரும் குறிக்கப்பயன் படுத்தப்பட்டாலும், அது மூன்றுவது கருத்துக்கே உரியது என்பது போதரும். மேலே கூறியபடி ஆட்சியாளரும் செல்வரும் தம் வாழ்வுக்குரிய வாய்ப்பு வசதிகள் செய்து கொண்டுள்ள இடமே நகரம் எனப்படும் தகுதி உடையது. மேலை யுலகில் இவ்வாய்ப்புக்கள் இருந்தால் முப்பது வீடுகளுக்குக்கூட நகரம் என்ற பெயர் வழங்கும் என்று அறிகிறோம்.

நகரம் இன்ப வாழ்விடம், இன்ப வாய்ப்பிடம் என்ற இந்த இக்காலப் பொருள், மக்கள் நகுவதற்குரிய இடம் 'நகர்' என்ற பழந்தமிழ் மூலச் சொல்மரபை உயிர் மரபறாமல் நினைவூட்டுவது காணலாம்.

## 24. மேலையுலக நாகரிக நகர் வாழ்வு

நாகரிகம் என்ற சொல்லின் அறிவார்ந்த பொருள் பண்பாட்டின் உச்ச எல்லை, அதன் புறத்தோற்றம், சின்னம் என்பதே. இதை யாவரும் ஒப்புவர். எல்லா மொழி அகர வரிசைகளும் தரும் பொருளும் இதுவே. ஆனால் அதற்குத் தொனிப்பொருள்களும் உண்டு, முன்னேற்றம், பகட்டு, இன்ப வாய்ப்பு ஆகியவை இத்தகையவை. இவற்றுள் முதலிரண்டும் அறிவார்ந்த பொருளின் துணைப் பொருள்களே என்பது தெளிவு. ஆனால் மூன்றுவது தொனிப் பொருள் தமிழின் நகுதல் என்பதை நினைவூட்டுவதாகவே அமைந்துள்ளது.

மேலையுலகிலும் நகர வசதிகள் (city facilities, civic amenities), நாகரிக வழிகள், நாகரிக நலங்கள் (modern methods & conveniences), ஆகிய வழக்குகள் இத்தொனிப்

பொருளின் உலகளாவிய வரலாறளாவிய உயிரோட்டத்தைக் காட்டும்.

நாகரிகம் என்ற சொல்லுக்கும் நகர் என்ற சொல்லுக்கும் இத்தொனிப் பொருள் மேலையுலகில் எவ்வாறு ஏற்பட்டது என்பதை முதலில் காண்போம்.

இரண்டு மேலையுலகச் சொற்களுக்கும் வேர்மூலம் இலத்தீனச்சொல். ஆயினும் இரு சொற்களும் இன்றைய பொருளில் வழங்குவது பிரஞ்சு மொழியில்தான். உரோமக வாழ்வு அழிந்த காலம் கி. பி 5-ம் நூற்றாண்டின் நடுப் பகுதி ஆகும். அதன் அழிப்பாட்டிலிருந்து பிரஞ்சு மொழி ஒரு மொழியாய் உருவெடுத்தது கி. பி. 10-ம் அல்லது 12-ம் நூற்றாண்டில்தான், தொனிப்பொருள் மூலத்தை இதற்கிடையில் தான் காணவேண்டும்.

உரோமர் நகர்—நாடும், நகரரசும் உயிர் இன்ப நலம் வாய்ந்தவையல்ல. ஆனால் நாகரிக உலகில் ஒரு பாதியும் பிரான்சும் (கல்லியா நாடு) பிரிட்டனும் வெல்லப்பட்ட பின், பேரரசின் தொலை ஆட்சிமையங்கள் இத்தகைய வாய்ப்பைப் பெற்றன. இங்கே நாட்டுமக்களை அடக்கி வைப்பதற்காக ஏற்பட்ட ஆட்சியாளர் குடியிருப்புக்கள் குடியேற்றங்கள் (Colonies) எனப்பட்டன. அமைதியும் வளமும் ஏற்பட்டபின் ஆட்சிமையங்களான இவை 'நகர்-நாடு' என்ற பழய சொல்லால் நகரங்கள் (Civitas, City) என்றழைக்கப்பட்டன. நாட்டு மக்கள் செல்வத்தில் புரண்ட ஆட்சியாளர் அவற்றை இன்ப உலகங்களாக்கியிருந்தனர். 1800 ஆண்டுகளுக்கு முன் திடுமென எரிமலையில் புதைக்கப்பட்ட பாம்பி என்ற இத்தாலி நகரம் அந்த இன்ப வாழ்வு எத்தகையது என்பதை நமக்குக் காட்டுகிறது.

பாம்பி நகரில் அடிமைகள் எல்லா வேலைகளும் செய்தனர், உட்காரவும் படுக்கவும் தக்கபடி மடக்கத் தக்க

தாய்ச் சுழலும் சக்கரங்கள் உடைய சாய்விருக்கைகளில் அமர்ந்தபடியே அவர்கள் இரவும் பகலும் உண்டனர், இருந்தனர்; படுத்தனர், உறங்கினர். எல்லாம் அவர் களிடம் அடிமைகளால் கொண்டுவரப்பட்டது. எங்கும் அவர்கள் அடிமைகளால் இழுத்து அல்லது தள்ளிக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் இன்ப வாழ்வுக் காக, பொழுது போக்குக்காக அடிமைப் பெண்கள் ஆடினர், பாடினர்; அடிமைகள் தமக்குள்ளும் கொடு விலங்குகளுடனும் மல்லிட்டு மடிந்தனர். விலைக்கு வாங்கி விற்கப்பட்ட இந்த அடிமைகள் தாமே விலங்கு மேற் கொண்ட அடிமைக் கயவர்களின் கசையடிக்கு ஆளாகி, கட்டாய உழைப்புக்கும், கட்டாயப் போர்ச் சேவைக்கும் உட்படுத்தப் பட்டனர்.

ஆளப்படும் இனத்தவரைச் சுரண்டுவதால் ஏற்படும் செல்வத்தின் உதவியாலும், அவ்வின அடிமைகளின் உழைப்பாலும் உரோமப் பேரரசின் தொலைத் தலைமை யிடங்களில் உள்ள ஆட்சியாளர் குடியிருப்புக்களில் இவ்வாறு இன்ப வாய்ப்பு வசதிகள் மட்டுமன்றி, அவற்றுக் கேற்ற இயற்கை, செயற்கைச் சூழல்களும் அமைந் திருந்தன. நாளடைவில் இவ் வாய்ப்புக்களுக்காகவே அவை திட்டமிட்டு அமைக்கப்பட்டன.

திட்டமிட்ட இன்ப வாழ்க்கைக்குரிய இத்தகைய குடியிருப்புக்களே மேலை யுலகில் புதிய 'நகர—அரசு'கள் ஆயின. இவை அமைந்த இடமே நகரம் என்ற பொருளை மேலை உலகில் உரோமரின் மரபு இச் சொல்லுக்குத் தந் துள்ளது.

மேலையுலக மொழிகளுக்குரிய இவ்விளக்கம் கீழை யுலக மொழிகளுக்கு நேரடியாகப் பொருந்தாது. முதற் பொருளைவிடத் தொனிப் பொருள் கீழ்திசையிலும் புதுப்

பொருளே யானாலும், அப்புதுப் பொருளே உரோமக வாழ்வைவிட ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டது.

பழந்தமிழினத்துக்குப் புதிதான, ஆனால் இன்றைய தமிழகத்துக்கும் உலகுக்கும் மிகப்பழமையான இத் தொனிப் பொருள் கீழைபுலகில் எவ்வாறு தோன்றிற்று?

அது உரோமக வாழ்வு மூலம் மேலையுலகுக்கு எவ் வாறு பரவிற்று?

இவற்றை ஆராய்வோம்.

## 25. தமிழர், தமிழினம்—சொற்றொடர்களின் மாறு பட்ட பழமரபு

சங்க காலத்தில் காவிரிப்பூம் பட்டினம் போன்ற கடல் வாணிகத்துக்குரிய துறைமுக நகரங்களிலும், காஞ்சி, மதுரை, வஞ்சி போன்ற பிற தலைநகரங்களிலும் இன்ப வாய்ப்புக்கள் மலிந்திருந்தன. பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி, பெரும்பாணாற்றுப்படை போன்ற சங்கப் பாடல் களும் சிலம்பு மேகலைகளும் இதற்குச் சான்று தருகின் றன. சிந்து வெளி நகரங்களிலும் இதுபோன்ற வாய்ப் புக்கள் மிகுதியாய் இருந்தன. ஆயினும் தற்கால நகர், நாகரிகம் ஆகிய சொற்களின் தொனிப்பொருள் குறிப்பது செல்வர்க்கே பெரிதும் உரிய இத்தகைய தனி வாய்ப்புக் களையன்று. நகர் வாழ்விலே அனைவருக்கும் உரிய வகை யில் திட்டமிட்ட வாய்ப்புக்களையே அவை சுட்டுகின்றன.

நடு நிலக்கடக நாகரிகத்திலும் அதன் தடங்களான கிரேக்க புராண கதைகளிலும் நாம் இத்தகைய வியக்கத் தக்க வாய்ப்புக்களைப்பற்றிக் கேள்வியுறுகிறோம். உரோ மருக்கு முற்பட இத்தாலியில் வாழ்ந்த எதுருஸ்கானர்

என்ற பழங்குடியினரிடமும் இப்பண்புகள் நிலவியிருந்தன. உரோமர் ஆட்சி வகுப்பிலும் உயர்குடியினர் இந்த எட்ரஸ்கான மரபினராகவே இருந்ததாக அறிகிறோம். இவர்களிடமிருந்தே பிற்கால உரோமக வாழ்விலும் மேலையுலகிலும் இன்பவாழ்க்கைக் குறிக்கோள் பரவிற்றுதல் சாலும்.

கீழ்திசையிலும் தொல்பெரும் பேரின வாழ்வுகளில் இவ்வாய்ப்புக்கள் செறிந்திருந்தன. அயலினத் திரிபாகிய இன்றைய இராமாயணக் கதையே, இதை வாயார வருணிக்கிறது கிரேக்க புராணத்துக்குரிய ஈஜிய இனத் தலைவன் அரண்மனை நகரிலிருந்தது போலவே இராவணனது கையிலும் காற்றை ஆண்டு, கதிரவனொளி. நிலவாண்டு, பல இயற்கைப் பொறிகள் பல இன்ப வாய்ப்பு வளங்களை அளித்தன என்று அறிகிறோம்.

இராமாயணத்தில் வரும் இராக்கதர்களும் வானரர்களும் கந்தருவ இனத்தவர் என்று சமண புத்த மரபுகள் குறிக்கின்றன. கந்தருப்பன் என்பது மதவேளின் பெயர். கந்தருவரும் நாகரும் (தற்கால இயல்நூல் போன்ற) கலை இயல் திறங்களைக் கையாண்டு, அவற்றை இன்ப வாழ்க்கைக்கும் உயர் இன்ப வாய்ப்புகளுக்கும் பயன்படுத்தினர் என்று பழந்தமிழ் ஏடுகளும் சமண, புத்த பழங்கதைகளும் குறிப்பிடுகின்றன.

இன்று தமிழுலகில் தமிழினம் என்ற சொல் ஒரு பெரும் பிரிவையும் தமிழர் என்ற சொல் அதனுள் அடங்கிய ஒரு சிறு பிரிவையும் குறிக்கிறது. தமிழர் தமிழ்மொழி பேசுபவர்கள். தமிழினத்தவர் தமிழும் அதனுடன் தொடர்புடைய பிற மொழிகளும் பேசுபவர்கள். மலையாளிகள், தெலுங்கர், கன்னடியர் தமிழினத்தவர்; தமிழருடன் தொடர்புடையவர்கள், ஆனால் தமிழர் அல்ல. ஆனால் பண்டைத் தமிழுலகில் இவ்வழக்குத் தலை

கீழாய் இருந்தது. தமிழர் அன்று பெரும் பிரிவு. அவர்களனைவரும் தமிழே பேசினர். ஆனால் அதனுள் ஒரு சிறு பிரிவு தமிழினம் எனப்பட்டது. தமிழ்ப் பண்பு முழுதும் தழுவிய மரபினரே தமிழினத்தவர் எனப்பட்டனர். பின்னாட்களில் செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற வேறுபாட்டுக்குக் காரணமான பிரிவு இதுவே. இதன்படிதான் திரையர், குறும்பர், நாகர், கந்தருவர் முதலியோர் தமிழராக, தமிழ் மொழி பேசுபவராக இருந்தனர். ஆனால் அவர்கள் தமிழினத்தவராகக் கருதப்படவில்லை.

இன்றைய மலையாளிகளில் சிலர், தமிழகத்திலேயே சில மரபினர், ஆந்திரர், கன்னடர், சிங்களவர், வடதிசைப் பழங் குடிமக்கள், பர்மியர், மலாய் மக்கள் ஆகியோரில் பெரும்பாலோர் இக் கந்தருவர், நாகர் முதலாயினோர் மரபினரே. ஆந்திர கன்னட நாடுகளில் பண்டிருந்தே பயிலும் இசை நாடக வகை கந்தருவ கானம் என்றும், தமிழர் மணமுறை கந்தருவமுறை என்றும் வழங்குவது இதற்குரிய சான்றுகளில் ஒன்று. தென்னகமெங்கும் வெளியிலும் ஊர்ப்பெயர், குடிப்பெயர், தெய்வப்பெயர் ஆகியவற்றில் இன்றும் பெருவாரியாக 'நாகர்' என்ற சொல் காணப்படுகிறது. பழங்காலத்தில் இவ்வழக்கு இன்னும் மலிந்திருந்தது.

## 26. நாகர் வாழவும் தமிழர் வாழ்வும்

பண்டைத் தமிழினத்தவராகிய தமிழருக்கும், தமிழே பேசிய நாகர் முதலியோருக்கும் தமிழ்மொழி பொதுவாயிருந்தது. இருசாரார் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் பண்பிலும் பொதுக் கூறுகள் மிகப் பலவாயிருந்தன. ஆயினும் தமிழ்ப் பண்பு அவற்றில் ஓர் அடிப்படை வேறுபாடு கண்டது. தமிழர் நாகரிகத்தின் இனப்பண்பு அதா

வது அகப்பண்பே பேணினர். அந்த அளவிலேயே அவர்கள் இயல், கலைத்திறன்களைப் பயன்படுத்தினர். நாகர், திரையர், கந்தருவர் முதலியோர் நாகரிகத்தின் புறப்பண்பு அதாவது தனிமனித வாய்ப்பு, சமுதாய வாய்ப்பு ஆகியவற்றையே நாடினர். கலை, இயல்களை அவர்கள் தமிழர்களைவிடப் பேரளவில் உழையா இன்ப வாய்ப்புக்கு, இனப்பெருக்கத்துக்கு, வாழ்க்கை நீட்டிப்புக்குப் பயன்படுத்தினர். தமிழர் ஆடை யணிமணி கலன்களை அழகுக்காக மட்டுமன்றி, இன்பத்துக்காக மட்டுமன்றி, மானம் மறைக்கவும் பயன்படுத்தினர். நாகர் முதலியோர் அழகுக்காக மட்டுமே பயன்படுத்தினர். ஆடையில்லாமல் ஆடவும் பாடவும் தயங்கவில்லை. சைவ, சமண சமயங்களில் இந்நாகரிகத்தின் தடங்களைக் காணலாம். சென்னை யடுத்த பெரியநாயகியம்மன் கோயில் வழிபாட்டு முறையிலும், வங்கம், குஜராத் பகுதிகளிலும் தென்கிழக்காசியாவிலும் நடைபெறும் சமயமரபுகளிலும் இதன் பொறிப்பு உள்ளது.

நாகரிகம், நகர் என்ற சொற்களின் தொனிப்பொருள் இன்றைய மேலை நாகரிகத்துக்கோ, உரோமக வாழ்வுக்கோ பொருந்துவதைப் பார்க்கிலும் முழு அளவில் நாகர் நாகரிகத்துக்குப் பொருந்தும். ஏனெனில் தற்கால நாகரிகத்தில் இன்பக் குறிக்கோளைவிட ஆதாயக் குறிக்கோளும் ஆதிக்கக்குறிக்கோளும் மிகுதி. இயந்திரங்களை இயக்கும் தொழிலாளரும் கலைத்தொழிலாளரும் அறிஞரும் உண்மையில் பழைய அடிமைகள், கங்காணிகளின் புது வடிவங்களே. உரோமர் வாழ்விலும் அடிமைகளைப் பயன்படுத்தியே இன்ப வாழ்வுக் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டது. ஆட்சி வகுப்பினர் இன்பக் குறிக்கோள் அடிமைகளுக்குத் துன்பக் குறிக்கோளாயிற்று. ஆனால் நாகர் வாழ்வில் அடிமைகளுழைப்பின் சுரண்டல் தேவையற்ற நிலையிலே

இயற்கையாற்றல்கள் உழைப்பைக் குறைத்து இன்பம் பெருக்கப் பயன்படுத்தப்பட்டன.

பெருங்கதை, அராபிக் கதைகள், சீவக சிந்தாமணி வாசிப்பவர்களின்முன் நிழலாடும் மாய நாகரிகம் இது.

நாகரிகம் நகரச் சார்பிலே தமிழரிடையேயும் உலகிலேயும் வளர்ந்தது. ஆனால் அது பண்பாடு என்னும் அடித் தண்டும், பண்பு எனும் வேரும் உடைய நாகரிகம். நாகரிகம், நகர் என்ற சொல்லின் நேர் பொருளாக வளர்ந்த அகப்புறப் பண்புகள் இவையே, ஆனால் நாகரின் நாகரிக வாழ்வு பலவகையில் இன்றைய மேலை நாகரிகத்தைவிட உயர் வுடையதானாலும், தமிழர் குறிக்கோளில் குறைபட்டது. அதில் புறப்பண்பு வற்புறுத்தப்பட்டது. புறப்பண்பே வெளிக்காணும் பண்பாதலால், பண்பாடு, பண்பு என்னும் அதன் அகப்பண்புகளுடன் சாராமலே, நாகரிகம் என்ற சொல்லையும் பொருளையும் தழுவி, அது நாகரிடம் இருந்து உலகெங்கும் பரவி, நாகரிகம், நகர் ஆகிய சொற்களின் தொனிப் பொருளாக உலக மொழிகள் எல்லாவற்றிலும் இயங்குகிறது,

தமிழருக்கும் நாகர் முதலியோர்க்கும் பொதுவான மொழியே தமிழ். 'நகுதல்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து இரு தமிழ் மொழி இனங்களினூடாகவும் நாகரிகம், நகர் என்ற சொற்கள், கருத்துப் படிவங்கள் ஆகியவற்றின் அகப் பொருளும் புறப் பொருள் அல்லது தொனிப் பொருளும் தோன்றி உலகெலாம் பரவின என்று காணலாம்.

நாகரிகம் நாகர் சார்ந்தது என்பதும் இங்ஙனம் அச் சொல்லின் துணைப் பொருள் கூறு, தொனிப் பொருள் கூறு ஆகிறது.

# 27. பண்பாடு: சொல் விளக்கம்

நாகரிகம் என்பதன் சொற்படிவம், கருத்துப் படிவம் ஆகியவற்றைப் போலவே, பண்பாடு என்ற சொல்லின் சொற்படிவம், கருத்துப் படிவம் ஆகிய இரண்டும் உலகளாவப் பரவியுள்ளன.

மேலீடாகப் பார்ப்பவர்களுக்குப் பண்பாடு என்ற தமிழ்ச் சொல்லும் பண்பு என்ற சொல்லிலிருந்து நேரடியாகப் பிறந்ததென்றோ, அதன் விரிவு என்றோ தோற்றக் கூடும். பண்பு என்பதே பண்பாடு என்பதற்கும் அதன் விளைவடிவான பண்படு என்பதற்கும் உரிய மூலப் பகுதி என்று கூட கருதப்பட இடமுண்டு, ஆனால் உண்மையில் பண்பு என்ற சொல்லுக்கும் பண்படு, பண்பாடு என்ற சொற்களுக்கும் நேரடியான தொடர்பு கிடையாது. பண்பாடு பண்படு என்ற சொல்லிலிருந்து வந்தது, பண்பு என்ற சொல்லிலிருந்தன்று. எனினும் பண்பு, பண்படு, பண்பாடு ஆகிய மூன்று சொற்களும் பண் என்பதையே மூலச் சொல்லாகக் கொண்டவை.

பண்ணின் தன்மையே பண்பு, பண் சந்தமற்ற சொல்லுக்குச் சந்தம் ஊட்டி, இனிமையற்ற ஓசைக்கு இனிமை தருகிறது. சொற் கோவையை அது ஓசைக் கோவையாக்கி இன்னோசை பயக்கிறது. இந்தச் சந்தம், இனிமையே பண். வாழ்வில் இந்த இசையும் சந்தமும் இனிமையும் ஊட்டுவது பண்பு.

சந்தம், இனிமை, இசை ஊக்கும் படிப்படியான சிறு முயற்சிகளின் விளைவே பண்பாடு, பண்படுத்தல். அது பெறல் பண்படுதல், தமிழில் இச்சொல் நன்செய் புன் செய்களுக்கேற்ப நிலத்தைப் பக்குவப் படுத்தலுக்கும். நாகரிக வாழ்வுக்கேற்ப மனிதனைப் பண்படுத்துதலுக்கும் ஒருங்கே வழங்குகிறது. நிலத்தைப் பண்படுத்தும் செயலி

விருந்தே தமிழர் இச் சொல்லை, நாகரிக வளப்படுத்தும் செயலுக்கும் வழங்கியிருத்தல் வேண்டும் என்று நாம் ஊகிக்கலாம்.

நிலத்தைப் பண்படுத்துவது போல இனத்தைப் பண்படுத்துவது பண்பாடு. நிலத்தைப் பயிரிடுவதற்காகப் பண்படுத்துகிறோம். இனத்தையும் வாழ்வுக்காக, வாழ்வின் வளத்துக்காக, நீடித்த நலத்துக்காகப் பண்படுத்துகிறோம். ஆகவே அதுவும் பண்பாடு ஆகிறது.

பண்பட்ட நிலத்தில் நாம் பயிரிடுகிறோம். பண்படா நிலத்தில் நாம் பயிரிட முடியாது. அதே சமயம் பண்பட்ட நிலத்தையும் பண்படுத்தியே நாம் அதில் பயிரிடுகிறோம். பண்படுத்திப் பயிரிடப் பயிரிட, நிலம் மேன்மேலும் பண்பட்டதாக, பண்பாடு உடையதாக அமையும். பயிரும் மேன்மேலும் மேனி காணும், பொலிவுறும். இதுபோலப் பண்பட்ட இனத்திலேயே நாம் வாழ முடியும். அதே சமயம் மேலும் மேலும் பண்படுத்தினால்தான் நாம் வாழ்வதுடனில்லாமல் வாழ்வின் வளமும் காண முடியும், இன்பம் எய்த முடியும். இனத்தைப் பண்படுத்துந்தோறும் அது மேன் மேலும் பண் பட்டதாகவே, பண்பாடு உடையதாகவே, வளத்தின்மீது வளமாக 'நாடா வளந்தரும்' இனமாகவே வண்மை பெறும். இந் 'நாடா வள'மே வாழ்வில் 'பொங்கல் வளம்'.

பண்பாடு இவ்வாறு ஒரு நிலையான பண்பல்ல. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குரிய தனிச் செயலல்ல, அது இன வாழ்வின் இடையறாச் செயல், இடைவிடா முயற்சி, தொடர்ச்சியின் உயிர்ப்பு ஆகும். அது பண்பை விதையாகக் கொண்டு வளர்ந்து வளந்தருவது மட்டுமன்று. பண்பு விதையைத் தலைமுறை தோறும் புதுப்பித்துப் புது விதையாக்குவதும் அதுவே.

பண்பாடு என்னும் சொல்லின் இக்கரு விளக்கமும், நிலம், இனம் இரண்டும் சார்ந்த அதன் இரு வழக்குத் தொடர்புகளும் அப்படியே அதற்குரிய மேலையுலகச் சொல்லுக்கும் (culture) பொருந்துவதாகும், அதுவும் நிலம் பண்படுத்தும் முறை (agriculture) வேளாண்மை, (horticulture) தோட்டப் பயிராண்மை, (culture solution) சே நீர் அல்லது விரை வளர்ச்சி தரும் உயிர்ச்சாறு, இனப் பண்பாடு ஆகிய இரு பொருளும் உடையது.

## 28. பண்பாடு: கருத்து வளர்ச்சி

மேலையுலகுக்கும் கீழை யுலகுக்கும் உரிய இந்தச் சொல்லின் இருமை இசைவு உணர்ந் தின்புறுவதற் குரியது மட்டுமன்று, வியப்புக்கும் உரியது. ஏனெனில் மேலை யுலகச் சொல்லின் சொற்படிவ மூலம் இலத்தீன மொழிக் குரியது. ஆனல் கருத்துப் படிவ மூலம் பிரஞ்சு மொழிக் குரியது. இலத்தீன மொழியில் இதே சொல் தமிழில் வேளாண்மை (வேள்—கடவுள், தலைவன், குடிமன்னவன்; வேள்வி—வழிபாடு) போல உழவு, வழிபாடு ஆகிய பொருள்கள் மட்டுமே உடையது. பண்பாட்டை அது குறிப்பதில்லை, பிரஞ்சு மொழிச் சொல்லே பண்பாடு என்ற தமிழ்ச் சொல்போல நிலம் பண்படுத்தல், இனப் பண்பாடு ஆகிய இரு பொருள்களும் உடையது.

மேலை மொழிகள் யாவும் பிரஞ்சு மொழியிலிருந்தே இந்தச் சொல்லையும் அதன் இரு திசைக் கருத்துப் படிவங்களையும் பெற்றுள்ளன.

நாகரிகத்துக்கும் பண்பாட்டிற்கும் தற்கால மேலை யுலகில் பேர்போன இனம் பிரஞ்சு இனம். பண்டையுல கில் அதே நிலையில் இருந்த இனம் தமிழினம். இவற்றுக் குரிய கருத்துப்படிவங்களை இந்த இரண்டு இனங்களுமே

சொற்படிவங்களாக்கியிருப்பது பொருத்த முடையதே. ஆனால் இடத்தாலும் காலத்தாலும் நெடுந்தொலைப்பட்ட இந்த இரு இனங்களும் சொல்லின் இரு பொருளிலும் முற்றிலும் இசைந்துள்ளது எவ்வாறு?

இது ஆராய்வதற்குரியது. ஆனால் ஆய்ந்து முடிவு காணின், அது நம் வியப்பார்வத்தையும் இறும்பூதையும் இன்னும் பெருக்குவது ஆகும்.

மேலே நாம் காட்டிய பண்ணை உருவகத்தில் சாத்தன் பண்ணையாகிய நடுநிலக்கடலக இனத்தின் மூலம் ஆதன் பண்ணையாகிய தமிழினத்துடன் தொல் பழங்காலத்திலே உயிர்த் தொடர்பு கொண்டிருந்த செம்பியன் பண்ணையே மேலை ஐரோப்பிய இனம். நகர், நாகரிகம் ஆகிய சொற்களுக்கும், பண்பாடு என்ற சொல்லுக்கும் சொற்படிவங்களின் மூலமாகிய இலத்தீனம் காணாத பொருளை அது கணடது இத் தொடர்பினாலேயே ஆகும் என்னலாம், தமிழினம், நடுநிலக்கடலக இனம், மேலை ஐரோப்பியப் பழங்குடியினம் ஆகிய வற்றின் தொடர்புகள் சார்ந்த ஒப்பீடுபற்றி இன்னும் விரிவுபட ஆராயின், இதில் வருங் காலம் மேலும் ஒளி காண்டல் கூடும்.

கீழ்திசையும் மேல்திசையும் அளாவிய இச்சொற் படிவங்களும் சரி, கருத்துப்படிவங்களும் சரி—வடதிசை அளாவவில்லை; இன்னும் இன்றளவும் அளாவியதில்லை, அளாவ முற்படவுமில்லை என்னலாம்.

இது வியப்புக்குரியதே, ஆனால் குறிப்பிடத்தக்கது ஆகும்.

நாகரிகம், நகர் என்ற சொற்களில் பண்பைவிட்டு விட்டுச் சொற்படிவத்தையே மேற்கொண்ட சமஸ்கிருதம் பண்பாடு வகையில் சொற்படிவத்தையும் இதுபோல மேற் கொள்ளவில்லை. அதற்கு முற்றிலும் சரியான சொற்

படிவமோ, கருத்துப்படிவமோ இன்றுவரை வளர்த்துக் கொண்டதில்லை.

நாகரிகம் என்ற சொல் சமஸ்கிருதச் சொல் என்று கருதியும், அதையே தமிழ்ச் சொல்லாக ஏற்ற கலைச்சுவை மணி டி. கே. சிதம்பரனாரோ அவர் மரபினரோ பண்பாட்டுக்குச் சமஸ்கிருதத்தில் 'ஏகதேச'மான சொல் இருந்திருந்தால்கூடத் தம் புதுத் தமிழ் வளர்ச்சிக்குரிய சொல்லாக அதை ஏற்றிருப்பர். ஆனால் பண்பாடு, என்பதற்கான ஆங்கிலச் சொல்லின் முழுப்பொருள் நயம் உணர்ந்தவர்கள் அவர்கள். அந்நயம் உடைய சொல் சமஸ்கிருதத்தில் இல்லை என்றே அவகள் விட்டுவிட்டனர். அத்தகைய சொல்லைக் கண்டுபிடிக்கும் நம்பிக்கை அற்றதாலேயே, இறுதியில் 'பண்பு' என்பதையே கையாளத் துணிந்தனர்.

பண்பாட்டுக்குச் சரியாக இன்று சமஸ்கிருத வாணரிடையே வழங்கும் சொல் (ஸப்யதா) அவைத்திறம் (ஸபா—அவை, சங்கம்) என்னும் பொருளுடையது. இதுவும் பழமையான வழக்கன்று, சமஸ்கிருத இலக்கிய கால வழக்கன்று; இந்தி முதலிய தாய் மொழிகளின் புதிய தற்கால வழக்கே.

இச் சொல்லின் போதாமையை விளக்க வேண்டுவதில்லை. ஆங்கில முணர்ந்த சமஸ்கிருத வாணரே மொழி பெயர்ப்புக்களில் இதைப் பயன்படுத்துவதில்லை. கலைமரபு என்று பொருள்படும் புதிய (கலாசாரம் என்ற) சொல்லை வழங்குகின்றனர்.

பண்பாடு என்ற கருத்துக்கு இவற்றினும் நெருங்கிய தொடர்புடைய ஒரு சொல் சமஸ்கிருதத்தில் உண்டு. அது உண்மையில் தமிழுடன் நெருங்கிய உயிர்த்தொடர்புடைய சொல், சமஸ்கிருதம் என்ற மொழிப் பெயரே அதிலிருந்து தான் வந்தது.

சமஸ்கிருதம் தமிழுடன் நெருங்கி உறவாடி தமிழுடன் சரிசமமான மதிப்புப் பெற்று, கீழ்திசை மொழிகளிடையே தமிழின் செல்வாக்கில் பங்கு கொள்ளத் தொடங்கிய காலம் தேவார ஊழிக்கும் கம்பர் ஊழிக்கும் இடைப் பட்டது (கி. பி. 7-12-ம் நூற்றுண்டு) ஆகும். தமிழ் செந்தமிழ் என்று அழைக்கப்பட்டதுபோல, சமஸ்கிருதமும் இவ்வூழியிலேயே அப்பெயர் பெற்றது. செந்தமிழ் என்பதன் பொருள் செம்மையுற்ற அதாவது திருந்திய தமிழ் என்பது. சமஸ்கிருதம் என்பதன் பொருளும் திருந்தியது என்பதே. முதலில் செந்தமிழ் என்ற தொடருக்கு ஈடாகச் சமஸ்கிருத பாஷா என்று பெயர் பெற்று அதுவே சுருங்கிச் சமஸ்கிருதம் ஆயிற்று.

சமஸ்கிருதம் திருந்திய என்ற பெயரடை மொழிச் சொல் ஆகும். அதற்கு இரண்டு பெயர்ச் சொல் வடிவங்கள் உண்டு. ஒன்று சம்ஸ்காரம், மற்றது சம்ஸ்க்ருதி. இவற்றுள் இரண்டாவது சொல்லே திருத்தம் என்ற பொருளுடையது. இதைப் பண்பாட்டுக்குரிய சொல்லாக வழங்கிஞல் கருத்துப்படிவத்தில் அரைகுறை இசைவாவது இருத்தல் கூடும். ஆனுல் சமஸ்கிருதவாணரின் பண்பற்ற மரபு இங்கும் முதற் சொல்லை முழுதும், இரண்டாவது சொல்லைச் சிற்சில சமயமும் ஆசாரம், மரபு என்ற பொருள்களில் வழங்கிக் கொடுத்துள்ளது.

நாகரிகப்படி கடந்து பண்பாட்டுப் படிக்கு வடதிசை இனம் வளரவில்லை. அந் நாகரிகப் படியிலேயும் பெரிதும் நாகர் அளித்தது. ஏனெனில் நாகர் பண்டிருந்தே வடக்கே இமயம் வரையும், தெற்கே இலங்கை வரையும், கிழக்கே பர்மா முதலிய தென்கிழக்காசிய நாடுகள் கடந்து பசிபிக் தீவுகள் வரையும் பரவியிருந்தனர். அவர்கள் வகுத்த எழுத்து முறையே நாகரி—நாகரி என்ற பெயரிலும் தேவநாகரி என்ற பெயரிலும் வடதிசைச் சமஸ்கிருதமும்

பிற வடதிசைத் தாய் மொழிகளும் எழுதப்படும் எழுத்து வடிவு இதுவே.

நாகரிகப் படி கடந்து பண்பாட்டுப் படியை எட்டிய இனங்கள் தமிழினமும் பிரஞ்சு இனத்தை மையமாகக் கொண்ட மேலை ஐரோப்பிய இனமுமே ஆகும்.

## 29. வேறு எம்மொழியும் காணாப் பொன்மொழியின் சொல்: பண்பு

மேலை மொழிகள் பயின்ற தமிழர் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் நுட்ப மரபுவேறுபாட்டை ஓரளவு உணர்ந்துள்ளனர். அவற்றுக்குரிய மேலை மொழிச் சொற்படிவ வேறுபாடுகளே இதற்குப் பெரிதும் காரணம் என்பதில் ஐயமில்லை. ஆனால் பண்பாடு, பண்பு ஆகியவற்றின் வேறுபாடு அவ்வளவு எளிதாக உணரப்படவில்லை. ஏனெனில் பண்பு என்பதற்குச் சரியான சொற்படிவம் மேலை மொழிகளில் மட்டுமல்ல, தமிழ் நீங்கலான வேறெந்த உலக மொழிகளிலுமே காணப் பெறவில்லை. அதற்குரிய கருத்துப்படிவங்கூட முழு அளவில் வேறெம்மொழியிலும் கிடையாது.

தமிழ் நீங்கலான உலக மொழிகளில். இச்சொல்லை நோக்கிச் செல்லத் தொடங்கி, அதனை ஒரு சிறிதேனும் சென்றணுகிய சொல்—சொல்லல்ல. சொற்றொடர்—உருவாக்கிக்கொண்டுள்ள ஒரே மொழிக்கூடப் பிரஞ்சு மொழிதான், அதுவே குழுமரபுத்திறம், வழிவழிப் பண்பாடு என்ற பொருளைத் தரும் தொடர் (Espirit de corps) ஆகும். 'குழுவின் உயிர் மரபு' என்பது அதன் சொற்படிவம் குறித்த பொருள். தொனிப் பொருள் வழிவழி மரபு என்பது. தமிழுடன் ஒத்து நாகரிகம், பண்பாடு ஆகிய இரு கருத்துக்களுக்குரிய சொற்படிவங்களை முழுதளவு படைத்

தாக்கிக் கொண்ட மொழியே, 'பண்பு'க்குரிய கருத்துப்படிவம் உருவாக்குவதிலும் சிறிது தொலை சென்றுள்ளது என்பது தற்செயல் இசைவுப் பொருத்தமன்று. தமிழினத்துக்கும் பிரஞ்சு இனத்துக்கும் அதை மையமாகக் கொண்ட மேலை ஐரோப்பிய இனத்துக்கும் உயிர்த் தொடர்பு உண்டு என்பதை இது காட்டுகிறது.

பிரஞ்சுத் தொடர்கூட முதிர்ந்த இனப்பண்பு குறிக்காது, சிறுகுழு, நிலையம் ஆகியவை சில தலைமுறைகளாக வளர்ந்துள்ள மரபுத்திறத்தையே அது குறிக்கும். ஆயினும் மேலை மொழியாளர் உணர்ச்சிகரமான வேளையில் ஒருமுகப்பட்ட கருத்துவடிவாக அன்றி, உணர்ச்சி வடிவாகப் 'பண்பு' என்பதன் படிவம் உருவாவதுண்டு: அச்சமயங்களில் மேலை மொழியினர் மட்டுமல்ல, அவை பயின்றவர்கூட அதை ஒரு சொல்லாக, தொடராக வன்றி, ஒரு சிறிய முழு உரையாக ஆற்றுவதுண்டு.

நாங்கள் ஓரினத்தவர். எங்களுக்கென ஒரு மாண்ட பழம் புகழ் உண்டு. எங்களுக்கென வழிவழி மரபுகள் உண்டு. அவை எங்களுக்கு உயிர் போன்றவை—உயிரினும் சிறந்தவை. ஊழூழியாக அவை எம்மால் வளர்க்கப்பட்டவை. அவற்றின் தொகுதி எம் இன மரபு உரிமை எதை இழந்தாலும், உயிரே இழந்தாலும் அதை நாங்கள் இழக்க ஒருப்படமாட்டோம். (We have a grand past. We have our own traditions near and dear to us as life, cherished and nourished by us through the ages. We would part more easily with our wealth, our lives, all else we hold dear, rather than lose an atom of it. It is the heritage of our nation, the sum total of the life of our race.) இவ்வுணர்ச்சிக்கு காரணமான இனத்தின் தனித்தன்மையே பண்பு—உணர்ச்சி காட்டி மேலையுலகினர் வெளியிடும் இத்தனை கருத்துக்களையும் தன்னகம் கொண்ட, அவை

கடந்து உயிர்ப்பொருள் கொண்ட உயிர்ச் சொல்லே பண்பு.

மேலையுலக உணர்ச்சி சித்தரிக்கும் மரபுத்திறம் இறந்தகாலப் பண்பாடுகளின் தொகை மொத்தம்—தமிழ்ப் பண்பு அத்தகைய தொகை மட்டுமல்ல; அது வருங்கால வளத்துக்குரிய கருமுதல்—இரண்டுக்கும் இடையே நிகழ் காலத்தின் உயிர்த் துடிப்புடைய ஒரு முழுமுதல். அது இயங்கும் திறம், இயக்கும் திறம், இயக்குவிக்கும் திறம் ஆகும்.

தன்மை, இயல்பு, குணம் ஆகிய பொருள்களில் வள்ளுவர்கூடப் பண்பு என்ற சொல்லைப் பயன்படுத்துவதாக உரைகாரர் கருதுகின்றனர். இவ்வெல்லாப் பொருளும் 'பண்பு' என்ற சொல்லுக்குப் பொருந்துவனவே. ஏனெனில் அது இப்பொருள்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியது. ஆனால் வள்ளுவர் இச்சொல்லைக் கிட்டத்தட்ட எல்லாப் பால்களிலும் எல்லா இயல்களிலும் மிகப்பல அதிகாரங்களிலும் குறட்பாக்களிலும் வழங்கியுள்ளனர். பல குறட்பாக்களில் இச்சொல் இருதடவைகூட வழங்குகிறது. தவிர பண்புடைமை என்ற ஒரு முழு அதிகாரமுண்டு. அதன் பத்துக் குறட்பாக்களில் ஒன்பது இச்சொல்லைக் கையாண்டுள்ளன. இந்நிலையில் கூட, ஓர் இடத்திலாவது அது முழுதும் தன்மை முதலிய சொற்களின் பொருளில் அமைவதல்ல. எல்லா இடத்திலும் இனச் சூழலை உளங்கொண்டே வள்ளுவர் பண்பு என்ற சொல்லைக் கையாண்டுள்ளார் என்னலாம்.

தன்மை, இயல்பு, குணம், நற்றிறம் அல்லது பரிசு. பண்பு ஆகிய சொற்களின் படிநிலை வேறுபாடு கண்டு, பண்பின் முழுப்பொருள் கண்டால் இது தெளிவாகும்.

தன்மை என்பது பொருளின் தனித்திறம். சூழலிலிருந்தும் சேர்க்கையிலிருந்தும் அகற்றப்பட்ட நிலையில்

பிரித்தறியப்படும் தனிக்கூறு இது. இயற்கைப் பொருள் கள், உயிரில் பொருள்கள் சார்ந்தே இது வழங்கத்தக்கது. நீரின் தன்மை தட்பம், நெகிழ்வு என்று இதன்படி நாம் கூறலாம்.

இயல்பு என்பது சூழலுடன் இயைந்து இயங்கும் திறம். இது உயிரில் பொருளுக்கும் உயிர்ப்பொருளுக்கும் ஒருங்கே பொருந்துவது. இதன்படி கெட்டியின் இயல்பு நீரில் மிதத்தல், பாம்பின் இயல்பு நிலத்தில் நெளிந்து செல் வது என்று நாம் கூறலாகும்.

குணம் சூழலில் உயிரில் பொருள் அல்லது உயிர்ப் பொருள் செயறபடும் அல்லது செயலாற்றும் திறம், சூழலை மாறறும் அல்லது மாற்றியமைக்கும் ஆற்றல் குறிக்கும். இதன்படி நாம் தீயின் குணம் பட்டது எரிப்பது, பாம்பின் குணம் தீண்டியவரைக் கடிப்பது என்று கூறலாம். ஆனால் இப்பொதுப்பொருள் அருவழக்காகிவிட்ட ஒன்று. நல்ல குணம், கெட்ட குணம் என்ற இணைவில் மட்டும் அப் பொருளில் அடிக்கடி வழங்குகிறது. பேசுபவருக்கு அல் லது மனிதருக்கு அல்லது விரும்பிய செய்திக்குச் சார்வா னது அல்லது நலமானது என்ற பொருளில், அதற்கு எதிர் சாயலுடைய குற்றம், குறை, தீங்கு, பழி ஆகிய சொற்க ளுக் கெதிராக அது பயன் படுகிறது.

இம்மூன்றுமே இயற்கையில் அமைந்த திறங்கள். மேலே காட்டியபடி அவை உயிர்ப்பொருள், உயிரில் பொருள் இரண்டுக்கும் உரியன. இவற்றுக்கு மாறான செயற்கைத் திறங்கள்—உயிருக்கே, சிறப்பாக மனித இனத்துக்கே உரியன.

பண்பு இயற்கைத் திறமன்று. ஆகவே தன்மை, இயல்பு, குணம் ஆகியவற்றுடன் அது மாறுபட்டது. அதேசமயம் அது செயற்கைத்திறமன்று. ஏனெனில் அது

தனிமனிதன் தனி உயிரின் செயலன்று. அது இனத்தின் செயல், காலத்தின் செயல். மற்றும், அது இயற்கையையே அடிப்படையாக, மூலதனமாகக் கொண்டு அமைவதால் இயற்கைத் திறம்போல் நடப்பது; அவ்வழியிலேயே தன்மை, இயல்பு, குணம் ஆகிய இயற்கைப் பண்புகளை உட்கொண்டுவிடுவது. இயற்கைக் கேற்பத் தன்னையோ, தனக்கேற்பச் சூழலையோ மாற்றியமைப்பதால் அது இயற்கைக்குள் ஓர் இயற்கையாய், தன் சூழலின் எல்லையில் ஒரு தனி இயற்கையாய், இயல்பாய் இயங்குவது ஆகிறது.

## 30. பண்பு: வளமார்ந்த இன உயிர்ச்சொல்

பண்பாடு என்னும் சொல்லைப் போலவே பண்பு என்பதும் 'பண்' என்னும் பெயர்ப்பகுதி, 'பண்ணு' என்னும் வினைப்பகுதியை மூலமாக உடையது. இரண்டினுடனும், அவற்றுடன் தொடர்புடைய பல்வேறு சொற்களுடனும் விரவி அது அவற்றின் பொருள்களும் அளாவியது.

பண்ணு என்ற வினைச்சொல் செய் என்னும் பொருள் உடையது. ஆனால் முயன்று செய், இணைத்துச் செய், பலர் கூடிச் செய், கூடி இணைத்து உண்டுபண்ணு, திருத்தமாகச் செய், திருத்து, யாழ் முதலியன மீட்டு, இசைவி ஆகிய துணைப் பொருள்கள் அதற்கு உண்டு. செய் என்ற பொருளுடன் இணைவது பண்டம் (செய்பொருள்). செய், கூடி இணைத்துச் செய், திருந்தச் செய் என்ற பொருள்களுடன் பணி (கூடி இணைத்துச் செய்யும் தொழில்) என்பதும்; இசைவு என்ற பொருளுடன் பணிவு (குறிக்கோளுக்கு, ஆணைக்கு இசைவு, கீழ்ப்படிதல்) என்ற சொல்லும் தொடர்புடையன. இதனுடன் தொடர்புடைய பிற சொற்கள் படி (கீழே தங்கு, இழைந்துகிட, படியச் செய், மனத்தில் படியச் செய், அதாவது கற்று அறி,

ஏற உதவும் கால் பதிவு, வளர்ச்சிப்படி); பண்ணை,பண்டாரம், பழமை, பழம், பழனம் ஆகியவை. இசைவு என்ற பொருளின் தொடர்பாகப் படிமேற்கொள்ளும் அத்தனை பொருள்களும் பண்பில் இடம் பெறுகின்றன. முயற்சியின் தற்கால விளைவுமட்டுமன்றி அதனால் ஏற்படும் முயற்சியாளன் அகவிளைவு படிவு அதாவது பணிவு ஆகி, அதுவே இனத்தில் தங்கி, பண்பு நோக்கிய படிகள் ஆகின்றன. பண்ணை பண்டாரம் ஆகியவையும் கூட்டம், வளர்ச்சி. பெருஞ்செல்வம் என்ற பொருளைத் தருகின்றன. படிப்படியாகப் படிந்த செயல்விளைவு பண்ணையாக வளர்ந்து பண்டாரமாகக் குவிகிறது.

இனம், இனமுயற்சியின் படிப்படியான வளர்ச்சியின் பழமை முதிர்வே பண்பு. ஆனால் அது பயனுடைய பழமை, பழம்போன்றது. அது பழனம் (வயல்) ஆக மேலும் மேலும் மேனி தருவது.

இசைவு என்ற பொருளில் பண்ணு என்பதனுடன் இணைவதே பண். சொல் இனிமையுடனும், பொருள் உணர்ச்சியுடனும் சேர்ந்து இரண்டும் உணர்வுடனும் பயனுடனும் இசைவதே பண். இசைக்கு உருவளிப்பது அதுவே. ஓசையும் சொல்லும் பண் வழி ஒழுகும் வழிகளான பண்புவழியிலும் பண்பாட்டு வழியிலும் இனம் செல்லும்.

பழகி இனிதாகி இன்னலம், இனநலம் அளிக்கும் ஓசை, இசை பண். இனிய இனமாக்குதல் பண்ணுதல், இன்னலத்தை நீடித்த இன முயற்சியால் வளர்ப்பதே பண்படுத்தல்,பண்பாடு. நிலத்தைப் பண்படுத்தல் என்பது அதை வளமாக்குதல், வள வாய்ப்புடைய தாக்குதலே. இனப் பண்பாடு இதுபோலவே இனத்தை வளமுடையதாக்கும். ஆனால் பண்பு, பண்பாட்டுக்குக் காரணமான இனநல அவா, இனநல முயற்சித்திறம், இனநலத் திருத்

தம், இனத்தின் பொங்கல் வளம் நோக்கிய செப்பம் ஆகிய வற்றை உரமாகப் பேணி வளர்த்துக் கொண்டே, பெருக்கிக்கொண்டே செல்கிறது.

பண் இசையின் உரு, ஓசையின் ஒழுங்குபட்ட இனிய வடிவம். பாட்டு நின்றாலும் பண் நில்லாது. அது ஒழுகிச் சென்று சொல்லுடன் சொல் இணைக்கும். வருஞ் சொல்லை யும் ஓசையையும் அது தன்வயமாக்கிச் சென்று இயற்கை வழி நின்று நீடிப்பது, தலைமுறை தலைமுறையான இடை யரா முயற்சியின் விளைவாக, அது இனச்செயல், மரபுச் செயலாகி, முயற்சியில்லாமலே எளிதில் நடைபெறுவதா கிறது. சிறு முயற்சியாலேயே பெரும்பயன் தரும் இனத் தின் கற்பகத்தருவாக அது இன்பம் பெருக்குகிறது.

பண்ணுதல் முதல் பண் வரை—படிதல், படித்தல், பணிதல், பணித்தல், பிணைத்தல், பண்ணை, பழமை, பழகுதல்; பழக்கம், வழக்கம்; வண்மை, வளம், பழுத்தல் பழம் ஆகிய அனைத்தின் பொருளையும் திறங்களையும் உட் கொண்டது பண்பு. அது இனப்பண், இனப்பண்ணின் பொலிவு.

தொல்பழந்தமிழ்ச் சொல்லாக்கத்தில் இரும்பொன் (கரிய உலோகம்) இரும்பு ஆகவும், செம்பொன் செம்பு ஆகவும், கரும்பயிர் கரும்பு ஆகவும் சமைந்தது போலவே, பண்ணின் பொலிவு பண்பு ஆகியுள்ளது.

நாகரிகம், பண்பாடு, பண்பு ஆகிய சொற்கள் தமி ழகமே உருவாக்கிய தனித்தமிழ்ச் சொற்படிவங்கள். அவை தமிழகமே வார்த்தெடுத்தகருத்துப்படிவங்கள் மட்டு மல்ல; தமிழகமே உலகில் சொல்லுருவாக, சொற்படிவ உருவாக, கருத்துப்படிவ உருவாகப் பரவவிட்டவை ஆகும். ஆனால் முதலிரு சொற்கள் கடந்து உலகம் இன்னும் தமிழர் வகுத்த கருத்தேணியில் ஏறவில்லை.

நாகரிகம் என்ற சொல்லைத் தமக்கென உருவாக்காத இனங்கள் மிகப்பல — அவற்றுள் சமஸ்கிருதம் போன்ற உயர்தனிச் செம்மொழிகள் கூட இடம் பெறுகின்றன. நாகரிகம், பண்பாடு ஆகிய இரு கருத்துப் படிவங்களையும் சொற்படிவங்களையும் தமிழகத்துக்கு வெளியே தமிழக மரபுவழி நின்று தாமே உருவாக்கிய ஒரே இனம் பிரஞ்சு இனமும், அதன்வழி நின்ற மேலை இனமும் ஆகும். பண்பு நோக்கி உணர்வுக் கரங்களை உலவவிட்டுள்ள இனமும் அது ஒன்றே.

## 31. வள்ளுவர் பண்பு

மனித இனக் கருத்தேணியில் தமிழர் நாகரிகம், பண்பாடு, பண்பு என்ற மூன்று படிகள் வகுத்ததுடன் அமைந்து விடவில்லை. பண்பின் படியிலும் அது கடந்தும் நெடுந்தொலை முன்னேறத் திட்டமிட்டுள்ளார். உயிர்ப் பண்பு, உயிர்ப்பண்பு வளம், பொங்கல் வளம், இறவாநிலை, இறவாப் பிறவாநிலை, மூவா இளநலம், கன்னித்தாய்மை ஆகிய படியேற்றங்களை உருவாக்கி, முழுநிறை இனநல மென்னும் எல்லையற்ற எட்டா நீள் குறிக்கோள் நோக்கி முன்னேறினர்—இன்னும் முன்னேற இன உள்ளம் வழி வகுத்துக்கொண்டே இருக்கிறது.

இப்புதுக் கருத்துக்களே தமிழகத்தில் ஆயிரக்கணக் காண ஆண்டுப் பழமையுடையவை. இதன்முழு நிறைவாக 19-ம் நூற்றாண்டின் இறுதியில் பேராசிரியர் சுந்தரனார்.

‘பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி
இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்
மலையாளமும் துளுவும்

**உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று**
**பல ஆயிடினும்**
**ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து**
**சிதையா உன்**
**சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து**
**வாழ்த்துதுமே!'**

என்று பாடினர். ஆனல் இதே கருத்தை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ்ப் புலவர் பாடியுள்ளனர். தமிழர் நினைவு கடந்து இக்கருத்தே தமிழன்னையைக் கன்னித் தமிழ்த் தெய்வமாக்கி, அதைப் பொதிகையிலும் குமரியிலும் மதுரையிலும் தில்லையிலும் திருப்பதியிலும் பல உருவில் புகழ் நீட வைத்துள்ளது.

பண்புகடந்த ஏழு படிகளும், எட்டாப்படியான எட்டாவது படியும் இன்னும் கருத்துப் படிவங்களாகவே, சொற்றொடர்ப் படிவங்களாக மட்டுமே நிலவுகின்றன—தனிச் சொற்படிவங்களாக இன்னும் அமையவில்லை. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இன்னும் இனப்பட்டறையில் வார்த்து உருவாக்கப்படவிருக்கிற கருப்படிவங்களாகவே அவை இன்றும் உள்ளன. ஆயினும் வருங்காலத்தின் புதுமலர்ச்சிக்குரிய மூலப்படிவங்களாகவே அவை மொழிவாழ்வில் ஊடாடுகின்றன என்பதில் ஐயமில்லை.

தவிர, மனித இனத்தின் முன்னோடியாகத் தமிழினம் சென்றது போலவே, தமிழினத்தின் முன்னோடியாகச் சென்றவர் முப்பால் முதல்வர். அவர் பண்பு கடந்த படிகளில் முதற்படியான உயிர்ப்பண்பின் கூறுகளாகவே பண்புடைமை, சான்றாண்மை அல்லது சால்பு, பெருமை, மானம், குடிமை ஆகிய நுண்படிகளை வகுத்துள்ளார். 'நயத்தக்க நாகரிகம்' என்று அவர் குறிப்பிட்டதுகூட இவற்றின் வழிவந்த பண்பின் நயத்திறமாகிய பண்பாட்டுக் கூறேயாகும். வள்ளுவர் வகுத்த பண்புடைமையும்

இனப்பண்பன்று. இனப்பண்பின் மரபில் நின்று அதை இனத்தில் பரப்புபவர் திறமேயாகும். சான்றாண்மை அல்லது சால்பு என்பது பண்பை வளர்த்து அதில் புது மரபு ஆக்கும் திறம். இனத் தலைமுறையில் பண்பை உச்ச அளவுக்கு உயர்த்திப் புதுமரபை ஊக்குவது பெருமை. இனமுழுதும் பரவிய பண்பு சரியாது காக்கும் காவல்திறம் மானம். தனிமனிதர் காவல்திறமாக வன்றி, அதனை இனத் தலைமுறை தோறும் செயலாற்றவல்ல வழிவழிக் குடிமரபாக்கும் உயிர்ப்பண்பின் மரபுத்திறமே குடிமை.

உலக மொழிகளிலே தமிழ் மொழிக்கு உள்ள. சிறப்பு முழுவதும், தமிழ் மொழிக்குள்ளே வள்ளுவத்தமிழுக்கு உண்டு. அந்தத் தெய்வத் திருவார் தமிழிலே, தனிமனிதன் வரைவந்து எட்டிய பண்பே அறம் எனவும், சமுதாயத்தில் பரவிய உயிர்ப்பண்பின் நுண்படிகளே பொருள் எனவும் அதுகடந்து எட்டாப் படிவரை இட்டுச் செல்லும் 'மேம் படி'கள், இனப்படிகள் இன்பம் என்றும், எட்டாப்படியே 'இறைவன்' என்றும், அதன் திசையே 'இறைவன்தாள்' என்றும் வகுத்துரைக்கப்பட்டன.

பண்பில் தொடங்கி உயிர்ப்பண்பளாவி இனப்பண்பு நோக்கிய வளர்ச்சியையே வள்ளுவர் 'கல்வி' என்று வகுத்தார். மேலையுலகில் தொடக்கத்தில் கல்வி தனிமனிதர் கல்வியாகவும், பின் இன்று சமுதாயக் கல்வியாகவும் மாறிக் கல்விக் குறிக்கோள் வளர்ந்து வருகிறது. இனக் கல்வி இன்னும் குறிக்கோள் அளவில்கூடக் கனவு காணப் பெறவில்லை. வள்ளுவர் அறம், பொருள், இன்பம் மூன்றும் இத் தனிமனிதக் கல்வி, சமுதாயக்கல்வி, இனக்கல்வி ஆகிய குறிக்கோள் படிகளே. அவை கடந்து 'இறைவன் தாள்' எட்டாப் படியின் திசை நோக்கு அடைவதே வள்ளுவக் கல்வியின் பயன்.

"கற்றதனு லாய பயன்என்கொல், வாலடுவன்
நற்ருள் தொழாஅர் உனின்'

என்ற இறைவாழ்த்து அதிகாரத்தில் இரண்டாம் குறட்பாவின் மெய்ப்பொருள் இதுவே.

## 32. இனமலர்ச்சி

சாவா மூவா இனநல நோக்கிய இக்கருத்தேணியும் அதன் படிகளும் வாழ்க்கைக் களங்காணுத வெறுங் கற்பனைகளல்ல. மனித இனத்தின் தலை மூத்தபிள்ளை என்ற முறையில் தமிழினம் இயற்கை, உயிரினம் ஆகியவற்றின் மலர்ச்சியாக மனித இனத்தின் சார்பில் பெற்ற மரபுரிமைகளே இவை. இம்மரபுகள் தமிழ்மொழி கடந்து சமய வாழ்விலும், நடைமுறை வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் பரவித் ததும்பி, ஊறிச் செறிவுற்றவை. அத்துடன் அவையே உலகமொழிகளில் மட்டுமன்றி,மனித இனத்தின் பல்வேறு கிளையினங்களின் வாழ்விலும், பல்வேறு படிகளில், கிளைகளும் துணைக்கிளைகளும் தலைமுகளும் பரப்பியுள்ளன. இவ்வின வளர்ச்சி, பேரினவளர்ச்சிகளின் மூடாகவும், வளர்ப்புப் பண்ணையாகவும், வளர்ச்சிக்கு உதவும் கருத்துநீர், பண்பு உரம் ஆகியவற்றின் சேமதளமாகவும் தமிழகம் திகழ்கிறது.

படைக்கும் ஆற்றலுடைய பொருள்கள் மூன்று தளங்களில் உள்ளன. கால இட எல்லையும் கருத்தெல்லையும் கடந்த பாரப்பெரும் பொருள் அல்லது பரம்பொருள் கடவுள். கருத்தெல்லையின் இரண்டாவது தளத்தில் காலமும் இடமும் படைப்பாற்றல் உடையனவாய் இலங்குவன, மூன்ருவது எல்லை வாழ்வெல்லை. அதில் படைப்பாற்றல் உடையது உயிர்.

படைப்பாற்றலின் மூலதளங்கள் முதலிரண்டுமே. விரைந்து இயங்கமுடியாத யானை, மலைபோன்ற பேராற்

றல்கள் அவை. ஆனால் படைப்பாற்றலில் மிக்கது சிறு தளத்திலுள்ள உயிராற்றலே. அது விரைவாற்றலைத் தன்னகம் கொண்ட அணுப் போன்றது. கடவுளோ இயற்கையோ, கதிரவனோ தன்னைப் படைக்க முடியாது தன்னைப் பலவாகப்பெருக்கவும் முடியாது. உயிர் ஒன்றே தன்னைப் படைக்க முடியும். தன்னைப் பலவாகப் படைக்கவும் முடியும். தன்னைப் போலவே தற்படைப்பாற்றலும் தற்பெருக்க ஆற்றலும் உடைய பல உயிர்களைப்படைத்து, அவற்றை எண்ணில் கோடியாகப் பெருக்கிக் காலமும் இடமும் நிரப்பமுடியும். இதுமட்டுமோ? மரபின் வளத்தால் மீட்டும் இயற்கையின் எல்லையற்ற வளத்தையே அது எட்டிப்பிடிக்கவும் முடியும்.

கடவுள் உயிராவதில் அளவில் சுருக்கம் ஏற்படுகிறது. ஆனால்செறிவிலும் ஆற்றலிலும் பெருக்கம் உண்டாகிறது. எனினும் உயிர் மீட்டும் கடவுளாவது இயற்கையின் புது வகை,புதுத்திசை வளர்ச்சி; அது காலமும் இடமும் கடந்த கூட்டுவளர்ச்சி; அளவு, செறிவு ஆகிய இரண்டிலும் அது வளர்ச்சியாற்றலுடையது. வாழ்வு வளம், பொங்கல் வளம் என்ற தமிழ்த்தொடர்கள் இயற்கையின் இப்புதுத் திசை குறிப்பன.

கால இடம் என்ற தாய்தந்தையர் கூறாக, இயற்கையும் கதிரவனும் படைத்த உயிர், தாய்தந்தையர் மூதாதையர் ஆற்றல்களை இணைத்தே இப்புதுத்திசை திரும்புகிறது. இப்புதுத்திசையே இனமலர்ச்சி.

## 33. இயற்கையை வெல்லும் முயற்சிகள்

காலமும் இடமும் கடந்து இயற்கையை வெல்லும் அளவிலேயே மனித நாகரிகம் உயர்வு பெறுகிறது. இதை இன்று உலகில் யாவரும் ஒப்புவர், இது யாவரும் அறிந்த செய்தியே. ஆனால் அவ்வெற்றி இயற்கை வழி சென்ற

வெற்றியாய் இருத்தல் வேண்டும். அது மனித இன வாழ்வுக்குப் பயன்பட வேண்டும், மனித இன உணர்வை மேம்படுத்த வேண்டும். அதாவது இனத்துக்குப் புறம்பான புறவளர்ச்சியாய் நின்றுவிடாமல், இனஞ் சார்ந்த அகவளர்ச்சியாய் நிலவவேண்டும்.

இம்மூன்று திறங்களிலும் ஒருங்கே கருத்துச் செலுத்திய இனம் தமிழினம். தமிழ்ப்பண்பு என்பது இம்மூன்றின் இணைவே.

மூன்றில் எதையும் பேணாமல், தனிமனிதர் வாழ்க்கை வசதி, வாழ்க்கை நீட்டிப்பு ஆகியவற்றை மட்டுமே குறிக்கொண்ட இனம் பண்டைத் தமிழரில் ஒரு பகுதியான, ஆனால் தமிழ்ப் பண்புக்குப் புறம்பான நாகர் இனம். வடதிசை வாடைப்பண்பாக உலகில் இன்று உலவுவது கூட அதன் பிற்காலச் சிதைவேயாகும். அதேவழியில் மூன்றையும் பேணாமல் தனிமனிதர் ஆதிக்கம், சுரண்டல் ஆகியவற்றையே பெருக்கும் இனம் தற்காலத்தில் 'அறிவார்ந்த' இனமாக இயலும் மேலை நாகரிகம்.

உலகம் அண்ணாந்து பார்த்துத் திகைக்கும் அளவில் தற்கால மேலை நாகரிகம் காலமும் இடமும் வென்று வருகிறது. அது ஆற்றல் பெருக்குவதாகக் கூறிக்கொண்டே அது ஒருபுறம் மட்டும் அழிவாற்றல் பெருக்குகிறது. அதே சமயம் மறுபுறம் 'இதோபார் ஆக்க ஆற்றல்' என்று கூறிக் கொண்டு அது ஆதிக்க ஆற்றல் பெருக்கி, ஆதிக்க வாதிகளின் சுரண்டல் ஆட்சி வளர்க்கிறது.

அது இன வெற்றியன்று, சடப்பொருள் சார்ந்த புற வெற்றி—இன ஆக்க வெற்றியன்று, அழிவு வெற்றி—இன ஒப்புரவுடையதன்று, இன ஆதிக்கம், இனச் சுரண்டல் முறை சார்ந்தது—மனித வாழ்வின் வளத்துக்கு அது அவ்வப்போது பயன்படுத்தப்பட்டாலும், அதை மனித வாழ்

வுக்குப் பயன்படுத்த அது ஒரு சிறிதும் உள்ளார எண்ணியது கிடையாது, நோக்கமாகக் கொண்டது கிடையாது. இங்கிலையில் மேலை நாகரிகம் புறத்தே பகட்டாரவாரமுடையதாகவும், உண்மையில் இன வேட்டையாடி, இன வாழ்வைச் சீர்குலைத்து ஆதிக்க ஆதாயம் நாடும் ஒரு சில ஆதிக்க முதலாளிக் குழுவினர் வெற்றியாகவே வளர்கிறது.

இயற்கையை வெல்லும் முறைகளில் தமிழகத்திலிருந்து உலகம் பெற்றவையும் உண்டு. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இன ஒட்டு முறைகளே. காட்டு விலங்குகளையும் செடிகளையும் பயிற்றுவித்து, நாட்டுவளம் காணும் முறைகளிலும் தமிழகத்தின் பங்கு பெரிது. இவை உயிர்ப் பண்பு வளம், பொங்கல் வளம் சார்ந்த வளர்ச்சிகள்.

தமிழினத்தின் சாவாவளம் நோக்கிய வளர்ச்சிகளை மனித இனம் பொருள்பேணும் திறத்தில் கண்டுள்ளது. தற்கால உலகம் இவ்வகையில் கண்ட புதுமுறை குளிர் காப்பு முறை (Refrigeration). ஆனால் பண்டை உலகம் உலர்காய், உப்பு, புளிக்காடி, எண்ணெய் ஆகியவற்றின் மூலமான காப்பு முறைகள் கண்டது. முதலது சுவை குறைத்தது, கடைசி முறை தோற்றமட்டுமே காத்தது. இடையிலுள்ள இரண்டுமே சுவை கெடுக்காமல் புதுச் சுவை யூட்டி, மனித வாழ்வில் பெரும் பயன் கண்டுள்ளது.

தேனிலிட்டுப் பொருள்களைப் பாதுகாக்கும் முறை தமிழன் கண்ட காப்பு முறைகளில் சிறந்தது. ஏனெனில் அவை இனிப்புப் பொருள்களுக்கே இனிப்புச் சுவை மிகுத்துப் பாதுகாத்தது. காப்புப் பொருளில் 'இனிமை' மிக்க முறை இது. தேனின் வெறியுணர்ச்சி பெருக்கி மனித இனம் கள் முதலிய பல்வகை வெறிப் பொருள் ஆக்கி, பாதுகாப்புடன் உயிர்ப்பு ஊக்கமும் பெருக்கவும் வகை

கண்டுள்ளது. ஆயினும் தேனைப்போல் முழுதும் ஆக்க மாக வழங்காமல், இவை இன அழிவுக்கும் நாளடைவில் பயன் படுத்தப் பட்டுள்ளன.

தேனின் அழியாப் பண்பை இனிய பழங்களில் ஊட்டி இனிமை பெருக்குவதுடன் அழிவிலா இனிமை, அமுத இனிமை காணும் முயற்சியில் ஈடுபட்டுத் தமிழர் கண்ட வெற்றியே அவர்கள் முப்பழ மரபு.

## 34. முப்பழ மரபு

பழங்களில் அழியாத பண்புடையவை, பிற பொருள்கள் அழியாமல் காக்கும் பண்புடையவை உண்டு. பழமாகிவிட்ட மிளகாய் அழியாதது; ஆனால் அழிவு காப்பதன்று, எரிவுடையது. புளியம் பழம் தானும் அழியாதது, பிறபொருள் அழிவும் காப்பது. ஆனால் எரிப்பு, கைப்புடன் சேர்ந்தே அது சமநிலைச் சுவையுடன் உண்ணத் தக்க நிலை உடையது.

கொடி முந்திரிப்பழம் நடுநிலக் கடலக இனம் அல்லது பாரசிக இனம் கண்ட இனஒட்டு. அதன் சாறு துப்புரவாக்கப் பட்டால் இனிப்பு, அழியாத் தன்மை, அழிவு காப்பு ஆகிய எல்லாத்திறங்களும் உடையது. இவற்றுடன் அதற்கு உயிர்ப்பூக்க ஆற்றல், வெறியூட்டம் ஆகியவையும் உண்டு. ஆனால் இவை முற்றிலும் ஆக்க ஆற்றல்கள் அல்ல. நேரே பழத்தின் பண்புகளாகவும் அமையவில்லை.

பழத்தில் மலரின் மணம், தேனின் இனிப்பு, அழியாத் தன்மை, அழிவு காப்பு ஆகிய ஆற்றல்களும் ஆக்கப் பண்புகளும் பொங்கல் வளமும் நாடினான் தமிழன். இவற்றில் அவன் வெற்றியும் கண்டான்.

**தேமா—தேங் கதலி—தேம்பலா!**
**தமிழன் கண்ட முப்பழங்கள் இவை.**

தற்காலத் தமிழர் மூன்றிலும் உள்ள 'தே' அல்லது 'தேன்' என்ற சொற் பகுதியை வெற்று அடை மொழியாகக் கருதி விடுகின்றனர். பல கவிஞர் அவ்வாறே அவற்றைப் பயன்படுத்தியும் உள்ளனர். ஆனால் தமிழ் மரபில் இம் மூன்று பழங்களுக்குமே இந்த அடை வழங்குகிறது. மூன்றுமே தொகையாக முப்பழங்கள், முக்கனிகள் என்றும் வகுக்கப்பட்டன.

முக்கனி மரபு, தமிழர் இன மரபு, தேசிய மரபு என்று கொள்பவர் கூட, தமிழகம் நன்கு அறிந்த, மிகுதி விரும்பிய, தேர்ந்தெடுத்துத் தொகைப் படுத்தியவை இவை என்று கருதி அமைந்து விடுகின்றன. பழகி இனிதாகிப் பழமையில் இனிமை பெருக்கி என்றும் புதுமையுடனிருக்கும் தேனினிமையின் திறம் முப்பழத்தின் திறம் —இது 'பழம்' என்ற பொதுச் சொல்லிலேயே அடங்கியுள்ளது என்பதை மரபு துருவிக் காணாத தமிழர் கவனிப்பதில்லை.

இது மட்டுமோ?

காயின் வேறாகப் பழம் என்ற சொல் எம் மொழிக்கும் இல்லாதது.

அத்துடன் பழம் என்ற பொருளில் 'கனி' என்ற சிறப்புச் சொல் ஏற்கனவே இருக்கத் தமிழர் பழம் என்ற மற்றும் ஒரு சிறப்புச் சொல் வகுத்தது இம் முப்பழப் பண்பாலேயே.

தமிழர் நாடிய முப்பழ மரபின் தன்மைகளைக் கனி, பழம் என்ற சொற்களே காட்டுவன. ஆனால் நாடிப் பெற்ற அழியா இனிமைத் தன்மை காட்டவே அவர்கள் அவ்வாறு பெற்ற மூன்று பழங்களுக்கு மட்டும் அவ்வடை தந்தனர்.

தேமா—தேனின் பண்பும் தீந்தமிழின் பண்பும் மாவினத்தில் ஊட்டித் தமிழர் படைத்து உருவாக்கிய மாங்கனி, 'தமிழ் மாங்கனி'.

தேங்கதலி—தேனின் பண்பும் தீந்தமிழின் பண்பும் வாழையினத்தில் ஊட்டித் தமிழர் படைத்து உருவாக்கிய கதலி, 'தமிழ்க் கதலி'.

தேம்பலா—தேனின் பண்பும் தீந்தமிழின் பண்பும் பலா வினத்தில் ஊட்டித் தமிழர் படைத்து உருவாக்கிய பலா, 'தமிழ்ப் பலா'.

தமிழர் நீடித்த காலம் ஆய்ந்துணர்ந்து தேடி உரு வாக்கிய இம் முப்பழங்களும் இன ஒட்டுக்களே. அரு முயற்சியால் அவற்றின் மரபு காக்க அவர்களிட்ட திட்டத் தின் நிழலே முப்பழ மரபு. ஆனல் இன்று பொதுவாக அவை மூன்று வகைப் பழங்களுக்குத் தமிழர் இட்ட அடைமொழி மரபாகக் கருதப்பட்டு விட்டன. அவை மா, பலா, வாழை ஆகியவற்றில் அருமையான இன மரபு கள் என்பது மிகச் சிலருக்கே தெரியும். ஆனல் வரவர அவற்றின் வழக்கு மட்டு மன்றி, அவை பற்றிய தகவலும் அருகி வருகின்றன. உயிர் மரபு மறக்கப் பட்டே போயிற்று.

முழுப் பழமாக வைத்தாலும் புட்டியிலிட்ட தேன் போல் அழியாதவை; வெட்டி வைத்தாலும் உப்புப் போல் புளிபோல், தேன்போல் கெடாதவை; ஈ யெறும்பு தின்ரு லன்றி, அவை அழியா அமுத உணவுப் பொருள்கள், உணவூட்ட மிக்கவை.

மூன்றும் மூவகை இனிமையுடையவை, உடலுக்கு மூன்றும் மூவேறு குணம் அளிப்பவை என்று தமிழ் மருத்துவர் கூறுகின்றனர். இதை அனுபவத்தாலும் அறியலாம்.

ஆனால்,........இன்று உயிர் மரபு கெட்டுப் பண்பிலா மொழிகளுடன் பண்பிலா மொழிபோல் இயங்கும் தமிழ் போல, பண்பிலாச் சமயத்துடன் இணைந்து பண்பிலாச் சமயமாய் இயங்கும் தமிழர் சமய வாழ்வுபோல, பண்பிலா இலக்கியக் கூட்டுற விடையே பண்புணரப் படாமல் நிலவும் தமிழ்ச் சங்க இலக்கியம் போல, இலக்கணங் களுடன் இலக்கணமாகவும், ஒழுக்க நூல்களுடன் ஒழுக்க நூலாகவும் கருதப்படும் தொல்காப்பியர், திருவள்ளுவர் ஏடுகள்போல, தமிழர் கண்டு உலகங் காணு முப்பழ மரபும் உலகின் பழுத்த காய்களுடன் பழுத்த காய்களாய் நடமாடு கின்றன.

காட்டு மலர்களுடன் காவிரித்தடத்துப் பைம்பொழில் தாமரையும் இன்று வைத்தெண்ணப் படுகிறது.

அழியாத் தமிழ்ப் பண்புகளின் பண்ணையாக, ஓவியக் கூடமாக, காட்சிச் சாலையாகத் தமிழர் போற்றிய தண்ட மிழ்ப் பொதிகை மாமலையின் அருகாமையிலேயே, காட்ட கத்திலிருந்து தமிழர் மீட்டு உருவாக்கிய முப்பழங்கள் மீட்டும் சில இடங்களில் காட்டுமலை வளங்களாகவும், சில இடங்களில் சிறு வாணிகப் பண்ணையாகவும், சில இடங்களில் உயர்ந்தோர்க்குரிய அருவகையாகவும் எஞ்சி யுள்ளன என்று அறிகிறோம்.

நற்கதலி என்ற பெயருடன் இவ்வகை வாழை பொதிகை மலையடுத்த ஆனைக் காடுகளிலும், உலக்கை யருவிப்பக்கமும், வருக்கை என்ற பெயருடன் பலா பொட் டல் என்ற ஊர்ப்பகுதியிலும், சர்க்கரை மரைக்கான் என்ற பெயருடன் மாவினம் ஈத்தா மொழி என்ற ஊரிலுள்ள முன்னாள் திருவாங்கூர் அரசர் தனித் தோட்டத்திலும் நீடிக்கின்றன.

பாராட்டாத இடைக்கால மரபினிடையே, பாராட்டப் படத் தொடங்கினும் பாராட்டுதற்குரிய பண்பு மறந்த தமிழரிடையே முத்தமிழ் மறுகி மயங்கியது போலவே மயங்கி வருகின்றன, தமிழ் வாழ்வு வளர்த்த சாவாப் பண்பின் சின்னங்களான முத்தமிழ்ப் பழங்கள்!

மலையாடும் காட்டுமாடும், காட்டில் திரிந்த கழுதையும் குதிரையும் பழக்கி நாட்டில் வாழவிட்ட, வாழ்வின் வளம் வழங்கவிட்ட இனம் மனித இனம். முதல் மனித இனமாகிய தமிழர் இதை மறந்து விடவில்லை. இன ஓட்டில் அவர்கள் முனைந்தனர். அதை உலகெலாம் பரவ விட்டனர். இம் மரபுகளைப் பழந்தமிழினம் மறக்க வில்லை. மறவாது பேணிற்று, இதன் சின்னமாக, புதிது பழக்கப் பட்ட விலங்கு பறவைகள், செடி கொடியினங்கள் தெய்வங்களின் ஊர்திகளாகவும் கொடிகளாகவும், சின்னங்களாகவும் பதிவு பெற்றன. ஒருவேளை அத் தெய்வங்கள் கூட, அச்செயல் வெற்றி கண்ட முதல்வர்களின் வீர வடிவின் பதிவுகளாக இருக்கக் கூடும் என்னலாம். ஆயினும் பல முதல்வர்கள் பெயர்கள் நமக்கு வந்து எட்டவில்லை. வானுலகிலிருந்து கரும்பு கொண்டு வந்த வேளிர்குடி முதல்வன் ஒருவனைப் பற்றி மட்டுமே சங்க இலக்கியம் சான்று கூறுகிறது. முதலில் தேன் இயல்பு கண்டவர், முப்பழ மரபு கண்டவர் பெயர்களும் இதுபோல் மறைந்து விட்டன. ஆனால் முப்பழமும் ஒருங்கே உண்பது அரசர்க்கு மட்டுமே உரிய உயர் மதிப்பாக அணிமைக் காலம் வரை பேணப் பட்டுளது.

கடலில் முத்தும் பவளமும் சங்கும் கண்டெடுத்து அவற்றின் பயன் கண்டு உலகுக்குக் கற்பித்த தமிழினம்—மலைகளில் மணிகள், மாணிக்கங்கள், தேக்கு, கருங்காலி, அகில், சந்தனம், தந்தம், அரக்கு ஆகியவை தேடிப் பெற்று வழங்கிய தமிழர்—நாடு நகர், பட்டினம் துறைகள்,

தோணி நாவாய்கள், பண்டி தேர் கண்ட மூலமுதலினம்— கருத்துத் தெரிவிக்கச் சொல், சொல்லறிய ஒலிவடிவ எழுத்து, அது சுட்ட வரிவடிவ எழுத்து, பொருளளவை காண எண்ணின் கருத்துமானம், ஒலிமானம், இலக்க மானம், இலக்கிய இலக்கணம், இயல்கலைகள் கண்ட பண் பார்ந்த இனத்தவர் தமிழர். இவையனைத்தும் கடந்து நாடியசாவா அமுத இனிமை வாய்ந்த தமிழ்த் தென்றல் பண்பின் ஒரு பொறிப்பே முப்பழ மரபு.

முப்பழம் கண்ட இனமே, மொழியிலும் முத்தமிழ் கண்டது.

பழங்களில் கண்ட இதே வகை இனிமையைத்தான் தமிழர் தென்றலிலும் இளவேனிலிலும், பால் நிலவிலும் காதலிலும், பண்ணிலும் மொழியிலும், முத்தமிழ்ப் பரப் பிலும் வாழ்விலும், இயலறிவிலும் கலையுணர்விலும், வாழ் விலும் ஆட்சியிலும், சமயத்துறையிலும் காண அவா வினர். இவ் அவாவே தமிழ்ப் பண்பாகி, பொதிகை சூழ் தண்டமிழ்ச் சோலைகளில் உலாவி, பொய்கைகளில் தேங்கித் ததும்பி, ஓடைகளில் ஊடாடி, ஆறுகள் வழித் தமிழ் நிலமெங்கும் அளாவி, இனவள மென்னும் கடலில் கலந்து இன்பம் கண்டு வருகிறது.

## 35. வடதிசை பேணும் தென்றல் மரபின் தடம்

தமிழினம் முப்பழ மரபைத் தமிழகத்திலேயே தேங்க வைத்துவிட்டது. ஆனல் தென்றல் மரபை அது உலகெங் கும் உலவ விட்டது. வாடைக்கு வடதிசை இலக்காகும் முன்பே, அது இமயம் வரை சென்று பரவிற்று.

தென்றல் உள்ளேவர வாயில் திறந்து வைத்த இனம் மட்டுமன்று, தமிழினம். அதனை ஆக்கிப் பரப்பியவரே அவர்கள் தான். இதனைப் பழங்காலச் சிந்து கங்கை வெளி

உணர்ந்திருந்தது, உணர்ந்து என்றென்றைக்கும் தென் திசை மரமாகப் பதிவு செய்துள்ளது. சமஸ்கிருதத்தின் முதல் மலர்ச்சி யூழியின் மாபெருங்கவிஞனை காளிதாசன் காலம் வரை—பொருள் மரபு மறக்கப் பட்ட நிலையில் இன்றளவும் கூட—தென்றலின் பிறப்பிடம் தமிழ்ப் பொதிகை மலை என்றே எல்லா வடதிசைக் கவிஞராலும் வடதிசையின் எல்லா மொழிகளிலும் கொண்டாடப் பட்டு வருகிறது.

இவ் வகையில் காளிதாசனுக்கும் பிற்காலத்தவருக் கும் உள்ள வேறுபாடு ஒன்றே ஒன்றுதான்—தென்றலின் பிறப்பிடம் தமிழகத்திலுள்ள பொதிகை அல்லது மலைய மலை என்று காளிதாசன் தெரிந்து பாடினான், அது நீலகிரிக் கும் குமரிமுனைக்கும் இடையில் மேலை மலைத்தொடரில் உள்ளது என்று கூடச் சுட்டியுள்ளான். ஆனால் பிற்காலத் தவரின் தமிழ்ப் புறக்கணிப்பிடையே, காளிதாசன் மரபு வெறுஞ்சொல் மரபாக இடையறுது நீடித்தது, அதன் உயிர் மரபுமட்டும் மறக்கப் பட்டது.

காளிதாசன் காலம்வரை வடதிசையாளர் வெறுந் தென்றலையல்ல, தென்றல் பண்பையே, அதன் சூழ லுடனும் பண்புத்திறத்துடனும் இணைவுறக் குறித்தனர் என்பதை அவர்கள் முழுத்தென்றல் மரபு காட்டுகிறது. ஏனெனில் அது பொதிகை அல்லது மலைய மலையில் பிறந்த சந்தணம் (சமஸ்கிருதம்: மலயஜம்—மலைய மலையில் பிறப் பது, அதாவது சந்தணம்) கமழ, தண்ணிலவும், கரும்பும் காதலும், சாவாப் பண்புடைய வாடா மணமலர்களும் (ஐந்தருவின் மலர்களும்), மாலை வேளையின் மென்சாயலும், இளவேனிலும் (சமஸ்கிருதம்: மலயராஜன்—மலைய மலைக்குரிய அரசனாகிய வசந்தன்) உடனேந்திய தென்றல் (சமஸ்கிருதம்: மலயவாதம், மலயாநிலம்=மலையத்திற் பிறந்தகாற்று, அதாவது தென்றல்) ஆகும்.

தென்றல் சூழல்கள் இத்தனையையும் வடவர் ஒரே அழகு உருவகம் ஆக்கியுள்ளனர். தென்றலஞ் செல்வன் என்றும் இளவேனிலான் என்றும் அவர்கள் காதற் கடவுளாகிய மதவேளுக்குப் பெயர்கள் சூட்டினர். அம் மத வேளுக்குத் தென்றலே ஏறிவரும் தேர். கொஞ்சிடும் அஞ்சுகமே பஞ்சவன்னக் குதிரை. கரும்பே வில். சுரும்பு வரிசையே நாண். சுரும்பிசையே நாணொலி. குயிலே குழலிசைஞன், அருவியே முழவோசை, முரசொலி. காதலர் மீது அவன் எய்யும் கணைகளே ஐந்தரு மலர்கள். அம்மலர்களே கூடலவாவையும், கூடலின்பத்தையும், ஊடலின் இன்ப துன்பக் கலவையையும், பிரிவின் துன்ப ஏக்கத்தையும், பிரிவின்பின் கூடும் மட்டற்ற மகிழ்வையும் ஐவகை உணர்ச்சிகளாகக் காதலர் உள்ளங்களில் பாய்ச்சுவன. மற்றும் பிரிவுற்றவர்க்குத் துன்பமும், கூடியவர்க்கு இன்பமும் ஒருங்கே இழைக்கும் நிலவு, தட்பத்தில் வெப்பமும் வெப்பத்தில் தட்பமும் ஒருங்கே அடக்கியுள்ள சந்தனம், பன்னீர், அகிற்புகை ஆகியவையும் அக்காதலஞ் செல்வன் துணை ஏவல்களாகின்றன.

இவ் வழகிய தொடர் உருவகம் தமிழிலக்கியம் அறியாததன்று. ஆனால் சமஸ்கிருத இலக்கியத்துக்கும் வடதிசை இலக்கிய மரபுக்கும் இது மிகப் பெரு வழக்கு என்பது வியப்புக் குரியது, குறிப்பிடத் தக்கது. சமஸ்கிருத இலக்கியத்தில் மட்டுமல்ல, இன்றைய இந்தி, வங்காளிக் கதைகளிலும், காவியங்களிலும், நாடகங்களிலும், தற்கால வடதிசைத் திரைப் படங்களிலும் கூட நாம் இடைவிடாது மலய பவனம் (தென்றல்), மலயஜம் (சந்தணம்) மலய ராஜன் (வேனிலான் அல்லது மதவேள்) ஆகிய தொடர்களைக் கேட்கலாம். சரத் சந்திரர் இயற்றிய தேசிய கீதத்தில் பண்டைப் பாரத அன்னை சந்தணம் தழைக்கும் குளிர் நறு மேனியளாக (மலயஜ சீதளா),

தண் நிலவுப் பொன்னூர்ந்த வானீல ஆடையணிந்த (சுப்ர ஜ்யோத் ஸ்நா புளகிதயாமினீ) இளநங்கையாகக் காட்சி யளிக்கிறாள்.

## 36. பண்பார்ந்த பைம் பொழில் வண்ணம்

மலரின் அழகும் வண்ணமும், மணமும் மென்மையும், பழத்தின் கவர்ச்சியும் மணமும், இனிமையும் ஊட்டமும் செடியினத்துக்கு மட்டுமேயன்றி உயிரினத்துக்கும் மனித இனத்துக்கும் இன்பமும் இன்பயனும் இனநலமும் ஒருங்கே தருவன. அதுபோல இனப்பண்பு இன உறுப் பினருக்குக் கவர்ச்சியும் இனிமையும், இனத்துக்கு இன்னல மும் பொங்கல் வாழ்வும், சூழ் இனங்களுக்கு எல்லையற்ற இனிய பயனலைகளையும் பரப்புவது ஆகும். மலர் நுகரும் வண்டு செடியினத்துக்கு எண்ணுமலே உதவுவது போல, பண்பு இன உறுப்பினரை இயல்பாகவே இனநலத் துடனும் பேரின வளத்துடனும் இசைவிப்பது. அத்துடன் அதுவே உறுப்புக்கு உறுப்பு, சினைக்கு முதல், முதலுக்குச் சினை; இனத்துக்கு இனம், இனச் சூழலுக்கு இனம், இனத்துக்கு இனச் சூழல் ஒத்திசையும் ஒத்துழைப்பும் கூட்டு ஆக்கமும் நலப்பெருக்கமும் பொங்கல் வளமும் உண்டு பண்ணுவது ஆகும்.

அழகுடைய பொருளுக்கு மணம், அழகு உடையவற் றுக்கு இனிமை, மென்மை, இவை எல்லாவற்றுடனும் ஒருங்கே பயன், உயிர்ப்பு ஆகியவை அமைவது அருமை. பூவில் பேரளவும், பழத்தில் முழு அளவும் கிட்டத்தக்க அருவாய்ப்பு இது. ஆனுல் இவற்றுடன் அழியாப் பயன், அழியா உயிர்ப்பு, பொங்கு மாவளம் இணைந்தால், அது அமுத இனிமை எனத்தகும். அத்தகைய அமுதக் கூட்டுக் கலவை இனிமையுடையது தமிழ்ப் பண்பு. பொன்னு லான மலர், அழகு வண்ணமும் மணமும் இனிமையும்

மென்மையும் பெற்று, அதுவே அழியா வாழ்வும் தளரா இனப் பெருக்கமும் தரவல்ல கனிவளம், விதை வளம் அடக்கி, உண்ண உண்ணக் குறையா மாயக்கனி மலரா யிருந்தால், அத்தகைய அரும் பெறல் பேற்றுக்கே தமிழ்ப் பண்பை உவமையாகக் கூறலாம்.

பண்பில் பண்ணையும் பண்ணில் பண்பையும் கண்ட இனம் தமிழினம். தென்றலுடன் குலவிய அப் பண்ணே தென்னு தெனு வென்று தெம்புடன் பாடும் தெம்பாங்கு· அதுவே நிலவுடன் குலவி நிலாவணி (லாவணி)ப் பாட்டாகவும் பரவுகிறது. தென்றலின் மென்மை, நிலவின் பாலொளி, இளவேனிலின் வெதுவெதுப்பு, சந்தணத்தின் குளிர்ச்சி. மாலைப் போதின் தளர்வகற்றும் தளரிள நலம் ஆகியவை தமிழ்ப் பண்பெனும் பண்ணில் குழைந்து அலையாடுகின்றன.

வானிடை மழையின் வண்ணம், அது கண்டாடும் வானவில் போன்ற தோகை மயிலின் சாயல், அதன் ஒயிலான நடனம், அதற்கிசைய முழங்கும் தண்ணுமை யாகிய அருவி முழக்கு, சுரும்பிசை யாழ், குயிற் குரல் குழல், பறவைகளின் பல்லியம், இத்தனைக்கும் ஊடாக உலவும் தென்றலின் இன்னியம் ஆகிய இவை மிடைந்த சூழலாகத் தமிழர் தென்னகப் பண்பை உருவகப் படுத்தினர். இத்தனையையும் ஒரு சோலைச் சூழலாக்கி, உலகின் உயிர்மையமாகிய தம் தமிழகத்திலே, அத் தமிழகத்தின் உயிர் மையமான தண்டமிழ்ப் பொதிகையின் சாரலிலுள்ள ஒரு தண்டலைப் பூம்பொழிலாகக் கவிஞர் கனவு கண்டனர்.

இவ் வுருவகமே தமிழர் தேசியச் சின்னம். தேசியங் கடந்த பெருந் தேசியமாக அவர்கள் வளர்த்த வருங்கால ஒருலகக் கனவார்வத்துக்கும் அதையே எழிலார்ந்த புகழ்க் கொடியாக்கித் தமிழர் உலகில் பறக்க விட்டுள்ளனர்.

தமிழ்ப் பண்பில் ஓங்கிய தமிழ்க் கவிஞராக, கவிதையிலே கடவுட் பற்றுர்வமும், கடவுட் பற்றுர்வத்திலே கவிதையும் மிதக்க விட்ட அருட் பெருங் கவிஞரான திருநாவுக்கரசர் இதே தமிழ்ப் பண்பின் சின்னமாகவே தாம் நாடிய இறைவன் திருவடி நீழலைக் கண்ணாரக் கண்டு பாடினர்.

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே,
ஈசன் எந்தை இணையடி நீழலே!'

மாலை—III

# மொழி வாழ்வு

## 1. முக்கோண அச்சு

### இனம், மொழி, பண்பு!

இணை பிரியாது இடைவிடாது சுழலும் ஒரே முக்கோண அச்சின் மூன்று கோணங்கள் இவை.

மூன்று கோணங்களில் மற்ற இரண்டையும் ஆட்கொள்ளும் தலைக்கோணம் மொழியே. ஏனெனில் அதுவே மனித இனத்தை மற்ற உயிரினங்களிலிருந்து பிரித்து ஒரு தனிப் பேரின மாக்குவது. அதுவே அப் பேரினத்தைப் பல்வேறு இனங்களாகப் பிரிப்பதும் ஆகும்.

மனிதனை மனிதனிடமிருந்து பிரித்து வைக்கும் திறங்கள் பல. நிறம், பண்பு, நாகரிகம்; சமயம், கொள்கை, பழக்க வழக்கங்கள், அரசியல்; தன்னலம், தனிநலம், குழுநலம் முதலியவை இவற்றுட் சில. இவை தனி மனிதரைத் தனி மனிதரிடமிருந்து, மனிதர் குழாத்தை மனிதர் குழாத்தினிடமிருந்து ஒரோவிடத்து, ஒரோ வேளை பிரிப்பனவே. ஆனால் மொழியைப் போல எவையும் நிலையாக, தலைமுறை கடந்து தலைமுறையாகப் பிரிக்கும் ஆற்றல் உடையன அல்ல.

மனிதனை மனிதனுடன் இணைத்து வைக்கும் திறங்களும் எத்தனையோ உண்டு. ஒத்த வயது, இருபால் ஒத்த பருவம், நிறம், அழகு, குணம், நட்பு, சரிசமச் சூழல், ஒத்த நலன், ஒத்த குறிக்கோள், பொது இடர் முதலியவை இவற்றுட் சில. ஆனால் இவையும் ஒரு தலைமுறையில் ஒரு பொழுது, ஓரிடச் சூழலில் தற்காலிகமாக இணைப்பவை

மட்டுமே. மொழியை ஒத்த நிலைத்த அடிப்படை இணைப் பாற்றல் உடையன அல்ல.

பிரிவினைத் திறங்களில் ஆற்றல் சான்ற பிரிவினைத் திறம், இணை திறங்களில் தலைசிறந்த இணை திறம் மொழியே. அது மற்றெல்லா இணைப்பாற்றல்களையும் மேற் சென்று உறுதிப் படுத்தும். மற்ற எல்லாப் பிரிவினை யாற்றல்களையும் கவிந்து மேற்சென்று செயலாற்றும். அத்துடன் அதன் பிரிவினையாற்றல் கூட என்றும் பகைமை விளைவிப்பதன்று. அதன் இணைப்பாற்றலோ, மற்ற மனித இனப்பாசங்கள் யாவுங் கடந்து இனப்பாசம் வளர்ப்பது. இயற்கைச் சூழலில் இனங்கடந்து பொங்கல் வாழ்வு வளர்ப்பது.

மற்றப் பிரிவினைகள் யாவும் பிரிவினையின் வித்தாகிப் பிரிவினை வளர்ப்பவை. ஆனால் மொழி ஊட்டும் பிரிவினையோ, குடும்பங்களுக்கிடையே உள்ள பிரிவினை போன்றது. குடும்பப் பிரிவினை இடையே காதலென்னும் இனிய கூட்டுறவுக்கு இடமளித்து அதன் இனிமை பெருக்குவது, மொழிப் பிரிவினையும் மொழிகளிடையே, காதல் ஊடல் போன்ற இனிய பண்புகளை மட்டுமே இடையே ஊடாட விடுவது!

மொழியின் இந்த இருதிசை யாற்றலுக்கு இனம், பண்பு ஆகியவற்றுடனும் இனங்கடந்த பேரினத்துடனும் அதற்குள்ள நீடித்த இடையறாத் தொடர்பே உயிர்க் காரணம் ஆகும்.

மொழி, மற்றப் பிரிவினைக் குரிய அல்லது இணைப்புக் குரிய திறங்களைப் போல இனவாழ்வின் மேற்பரப்பில் அலையாடி எழுந்தமைவ தன்று. அது இனத்தின் முழு ஆழமும் கடந்து சென்று செயலாற்றும் ஆழ்தள உயிராற் றல் ஆகும். அத்துடன் பண்பு எவ்வாறு இனம் கடந்து தாயினமாகிய பேரினத்தின் தாய்ப் பண்பிலும், முழுப்

பேரினமான இயற்கையின் மூல இயல்பிலும் வேரூன்றி யுள்ளதோ, அது போலவே மொழியும் இனம் கடந்து பேரினத்தையும், பேரினம் கடந்து இயற்கையின் மூல வளத்தையும் பற்றி நிற்பது ஆகும்.

உண்மையில் மொழி மனித இனம் பிறப்பதற்கு முன் பிறந்தது. அதன் அடிப்படையாற்றல் உலகில் உயிர் தோன்றுவதற்கு முன்னே உயிர் முதலுடன் உயிர் முதலாக, உலகு படைக்கப்படு முன்னே அதன் இயல் முதலுடன் (மூலப் பிரகிருதி, Primordial Matter) இயல் முதலாக இயங்கியது.

முந்தையோர் மொழியைக் கடவுளாற்றலின் கூறாக, தெய்விக ஆற்றலாக, தெய்வமாகக் கருதியது இதனாலே யே. ஆனால் காலப் போக்கில் வழிபாடு வணக்கமாகி, வணக்கம் அன்பு மதிப்பாகிய பின், அது கண்கண்ட அன்புத் தெய்வமாகிய தாய் வடிவில் போற்றப் படுகிறது.

## 2. இருமுக ஆற்றல்

*பிரிவினை ஆற்றல் ஒரு புறமும் இணைப்பாற்றல் மற்றொரு புறமுமாக, இரண்டுமே மொழிக்கு உச்ச அளவில் எவ்வாறு அமைந்துள்ளது?*

மொழியின் பிரிவினை ஆற்றல் கண்டு கிலிகொண்டு, அதை ஒரு விலக்க முடியாத தீமையாகப் பாவித்து ஒதுக்க எண்ணும் அரசியல் வாதிகள் உண்டு. போலித் தேசியத்தின் பெயராலோ, தேசியங் கடந்த ஒருலகவாதத் தின் பெயராலோ, அவர்கள் மொழிப் பற்றையே ஒரு வெறியாகக் கருதி எதிர்ப்பதுண்டு. அவர்கள் கருதுவது அல்லது கூறுவது போல, மொழி தேசியத்துக்கோ, தேசியங் கடந்த உறவுக்கோ, ஒருலக வாழ்வுக்கோ குந்தக மானதா?

PUBLIC LIBR
JUL

ஒரே மனிதப் பேரினத்தின் மொழிகள் ஏன் பலவாக இருக்கின்றன? உலகம் ஒருலகாக ஒன்றுபட வேண்டும் என்று நாம் விரும்புவது சரியானால், அதுபோல உலக மொழிகளும் ஒன்றுபட்டு ஒரே உலக மொழியாக வேண்டு மென்று நாம் விரும்புவதும் சரியல்லவா? அவ்வாறு அமை வது நல்லதல்லவா?

மொழிகள் ஒன்று பலவாக, பல ஒன்றாக வழியுண்டா? இயல்பாக உலகில் அவ்வாறு ஒன்று பலவாகப் பிரிந்த துண்டா? பல ஒன்றாக இணைந்தது உண்டா? செயற்கை முயற்சியால் அவ்வாறு பிரிக்க அல்லது இணைக்க இயலுமா?

ஒரு மொழியின் சொற்களுடன் இன்னொரு மொழி யின் சொற்கள் இணைதல் இரண்டு மொழிகளும் ஒன்றாவ தற்கு, இரு மொழிகளின் நேச ஒற்றுமைக்குப் பயன் படுமா? இயல்பாக இவ்வாறு நேர்ந்தால், அதன் விளைவுகள் யாவை? கொடுக்கும் மொழி அல்லது கொள்ளும் மொழி அல்லது கொடுத்து வாங்கும் மொழியில் அதனால் ஏற்படும் பயன்கள் என்ன?

இக் கலப்பு இன்றியமையாததா? நலந்தருவதா? தீங்கானதா?

மொழி சார்ந்த கடாக்கள், கடுஞ் சிக்கல் வினாக்கள் இவை. இவற்றுள் அரசியல், சமுதாய, இனவாழ்வுச் சிக்கல்களிலிருந்து எழுந்த வினாக்கள் சில. சில அத்தகைய சிக்கல்களையே விடுவிக்கத் தக்க விளக்கங்களை விடை யாகத் தருபவை.

மொழியின் இரு ஆற்றல்களும் இருவேறு ஆற்றல்கள் அல்ல: பெயரளவில்தான் அவை இரண்டு ஆற்றல்கள், உண்மையில் அவை ஒரே ஆற்றலின் இரு திசைகளே, அத்துடன் மேலீடாகப் பார்ப்பவர் காட்சியில்தான் ஒன்று

இணைப்பாற்றலாகவும், மற்றது பிரிவினை ஆற்றலாகவும் தோற்றுகிறது. செயல் துறையில் இரண்டும் இருவகை இணைப்பாற்றல்களே. பிரிவினை ஆற்றல் மேல் பரப்பில் பேரினத்தில் எல்லையில் குறுக்குப் பிரிவினை செய்கிறது. ஆனால் பரப்பாற்றலை அதுவே செறிவாற்றலாக மாற்றி ஆழ்திசையில் செலுத்துகிறது. அதன் மறுதிசையாற்றலான இணைப்பாற்றல் அவ்வின எல்லையில் பேரினத்தின் ஆழ்தடம்வரைச் சென்று பேரின வாழ்வை இணைக்கிறது. இணைப்பாற்றலுக்கு இவ்வாறு ஆழ்திசைப் போக்கு அளிப்பது பிரிவினை ஆற்றலே.

மொழியின் இணைப்பாற்றல் மட்டுமன்றி, பிரிவினையாற்றலும் இணைப்பாற்றலாகவே செயலாற்றுவதன் காரணம் இதுவே. அதனாலேயே மொழியின் இணைப்பாற்றல் மற்ற இணைப்பாற்றல்கள் பிரிவினை யாற்றல்கள் ஆகியவற்றை மட்டுமன்றி, மொழியின் பிரிவினை யாற்றலையே மேற் சென்று இணைக்கத் தக்கதாயுள்ளது.

மொழியின் பிரிவினை யாற்றல் பற்றிய குறையீடு இங்ஙனம் பொருளற்றதாகிறது. பிரிவினை ஆற்றலாக அதை ஒதுக்கி வைக்க எண்ணுபவர்கள்கூட, இன மொழிகளைத்தான் ஒதுக்கி வைக்க முயல்கின்றனர். பொது மொழியாக அரசியல் தளத்திலோ, ஆட்சித் தளத்திலோ, உலகத் தளத்திலோ ஒரு மொழியைப் பயன்படுத்தியே அவர்கள் மொழியின் பிரிவினையாற்றலை தவிர்க்க எண்ணுகின்றனர். அவர்கள் வாதத்தின் அடிப்படையையே இது தகர்த்து விடுகிறது.

மனிதப் பேரினத்தில் இனத்திலிருந்து இனத்தைப் பிரித்து வைப்பது மொழி என்பது உண்மையே. ஆனால் மனிதப் பேரினத்தை ஒன்றுபடுத்துவதும் அதுவேதான். ஏனெனில் மற்ற உயிரினங்களிலிருந்து மனித இனத்தை வேறு பிரிக்க உதவும் பண்புகளுள் தலைசிறந்தது அதுவே.

மொழியின் பிரிவினை ஆற்றல், இணைப்பாற்றல் ஆகிய இரண்டும் சேர்ந்தே இனத்தின் ஆழ் தடங்கள் வரை பண்பைப் பரப்புகின்றன. மொழியின் பிரிவினை யாற்றல் இவ்வாறு இனத்துக்கும் பேரினத்துக்கும் பேரளவான இன்றியமையாத நலன்கள் தருவதாகும். உண்மையில் போலித் தேசியவாதிகள், போலி ஒருலகவாதிகள் விரும்புகிறபடி, உலகப் பரப்பு அல்லது அதன் ஒரு பெரும் பகுதி முழுவதும் ஒரே மொழி நிலவியிருந்தால், இனத் தளத்தில் ஆழ்ந்த உயிர்ப்பண்பு வளம் ஏற்பட்டிருக்காது. பேரினத்திலும் உயிர்ப் பண்பு, உயிர்ப் பண்பு வளம் ஆகியவை செயலாற்றியிருக்க மாட்டாது.

பிரிவினை ஆற்றல் பேரினத்தின் கூறுகிய இனத்துக்கு ஆழ் பண்பும் பேரினத்துக்கு உயிர்ப் பண்பும் அளிப்பது. இணைப்பாற்றல் நாகரிக, பண்பாட்டுவழி அதை மீண்டும் பேரினப் பரப்பு முழுவதற்கும் தூண்டுவது ஆகும்.

## 3. தமிழர் இன ஒப்புரவுப் பண்பு

மொழி தேசியத்துக்கு எதிரானது, ஒருலகக் குறிக்கோளுக்கு மாறானது என்ற வாதம் சொல்லின் செப்படி வித்தையேயன்றி வேறன்று, ஏனென்றால் தேசியம் என்ற ஒன்று அமைவதே மொழியினால்தான். ஒருலகம் அமைவதும் மொழியடிப்படையில்தான், மொழியினம் கடந்து இணை தேசிய அரசியல் அல்லது உலக அரசியல் வகுப்பவர் கூட, இனமொழி அல்லது இனமொழிகளை அடக்கி ஒருமை காண, தவறான வழியிலேயே யெனினும், வேறொரு மொழியையே பயன்படுத்த வேண்டியவராகின்றனர்.

ஒவ்வோர் இனத்திலும் இனத்தின் மிகச் சிறிய கூறான ஒரு சிறுபான்மையினரே அத்தகைய செயற்கை மொழியும், அயல் மொழியும் பயில முடியும். அத்துடன்

அவர்கள் மொழி உள்ளத்தில்கூட செயற்கை மொழியும், அயல் மொழியும், உயிராழம் தோயாமல், மேற் பரப்பிலேயே மிதந்து உலவும். நாளடைவில் இனமொழியுடனும் மொழியினத்துடனும் அவர்கள் தொடர்பு குறைந்து அவர்கள் ஒரு தனி இடையினமாகத் துண்டு பட்டு விடுகின்றனர்—எந்த இனப் பண்புமற்ற ஒரு போலி இனமாகவும் அவர்கள் அமைகின்றனர். ஏனெனில் அவர்கள் ஆளப்படும் இனத்துக்கும் அயலாராகி, ஆளும் இனத்துக்கும் அயலாராகி விடுகின்றனர். இங்ஙனம் மொழி கடந்த தேசியம், மொழிச் சார்பற்ற ஒருலகம் ஆகிய இரண்டுமே உண்மையில் இனத்துடன் இனத்தை மோதவிடுபவை. அவை பேசும் ஒற்றுமைகூட இனவாழ்வுக்குப் புறம்பான ஒரு சிறு செயற்கைக் குழுவை உண்டு பண்ணுவதாகவே முடிகிறது. இச் செயல் மூலம் அவர்கள் இனங்களின் வாழ்விலும் இன உறுப்பினர் பெரும்பாலாரின் வாழ்விலும் பண்பிலும் படிப் படியாக உயிராற்றல் கெடுத்து இன அழிவுக்கே வழி வகுக்கின்றனர்.

மொழி கடந்த, தேசியங் கடந்த சமுதாய, பொருளியல், சமய, அரசியல் வாழ்வுகள் அடையக் கூடாதன அல்ல. ஆனல் அதற்குரிய நேரியவழி மொழி புறக்கணிப்பதாகக் கூறி ஆதிக்க மொழியை மொழியினங்கள் மீது திணித்து அழிவு செய்வதன்று. எல்லா இனமொழிகளும் சரிசம அடிப்படையில் விரவ விடுவதன் மூலம் ஒவ்வொரு மொழியையும் தத்தம் முற்காலப் பண்பில் தனித்தனி இயக்கி, வருங்கால நோக்கிப் படிப்படியாக ஒன்றுபட வழிசெய்வதே நேரிய வழி ஆகும். இது இயல்பாக நிகழ வேண்டிய ஒன்று—எவரும் திட்டமிடுவதோ, அவாவுவதோ, ஆர்வம் காட்டுவதோகூட அழிவுப் பண்பாகிய ஆதிக்கத்தின் முன்னேடும் நிழலாய்விடும். திட்டமிட்டாலும், திட்ட மிடுபவர் இரு இனப்பண்பு மற்றவராயிருத்

தல் நல்லதன்று, பெருங்கேடு விளைப்பது. அவர் ஓரினப் பண்பில் நிறைந்து ததும்பி இனங்கடந்த 'தமிழ்ப் பண்பு' உடையவராய்த் திகழ்தல் வேண்டும்.

இணைந்து வாழும் இன மொழிகள் இறுதியில் ஒரு மொழியாய்விடலாம், அல்லது ஒருமொழியாகாமல் இருக்கலாம். ஆனால் அவற்றின் நாகரிகம் முதலிலும், பண்பாடு அடுத்தும் ஒன்றுபடுவது உறுதி. பண்பும் படிப்படியாக ஒரு திசைப்படச் செல்வது கூடாததன்று. ஆனால் இணைந்து வாழும் மொழியினங்கள் பேரின வாழ்வின் மரபில் எந்த அளவு நெருக்க முடையவையோ, அந்த அளவிலேயே பண்புகள் இயல்பாக ஒரு திசைப்பட்டு இணையும். அந்த இணைவும் எவ்வளவு காலந் தாழ்த்து நிறைவேறுகிறதோ அந்த அளவிலேயே இனங்களின் உயிர்ப்பும் உயிர்ப் பண்பின் வளர்ச்சியும் தடைபடாது இயலும். இனங்களிடையே சரிசம அடிப்படையில் வளரும் இயல்பான நேசபாசத் தொடர்பன்றி வேறு எத்தகைய செயற்கைத் தொடர்பும் இருத்தல் தகாது. ஏனெனில் அவை இனங்களின் மலர்ச்சியையும் உயிர் வளர்ச்சியையும் கெடுத்துவிடும்.

இணைவுக்குரிய இனமொழிகளில் ஒன்றே ஆதிக்க மொழியாய் இருக்கும் இடங்களில், ஒரு மொழி உரிமையுடனும் மற்றது அல்லது மற்றவை உரிமையற்றும் சில நாள் இயங்கும். இவற்றுள் உரிமை யிழக்கும் மொழிகள் தான் அழியும் என்று இன்று பொதுவாக நம்பப்படுகிறது. ஆனால் ஆதிக்க மொழியின் அழிவு அதைவிட உறுதியானது, அதன் மொழி உரிமை கூட அதன் உயிரைக் காக்காது. முதன் முதலில் உயிரிழப்பது ஆதிக்க மொழி தான் என்று கூடக் கூறலாம். ஏனெனில் பல தறுவாய்களில் ஆதிக்க மொழி அழிந்த பின்னும் அடிமை மொழிகள் தழைத்துள்ளன. ஆதிக்க மொழியை எதிர்க்கும்

எதிர்ப்பாற்றலே அடிமை மொழிகளுக்குப் புதுத் தூண்டுதலும் புத்தாக்க மலர்ச்சியும் அளித்து விடுகிறது!

மாண்ட உலகப் புகழ் மொழிகள் அத்தனையும் ஆதிக்க மொழிகளே. அவற்றின் மாள்வு இதைப் பெரிய எழுத்தில் எழுதி உலகுக்கு எடுத்துக் காட்டும் படிப்பினை ஆகும். மாண்ட அம்மொழிகள் கிட்டதட்ட யாவுமே மீளா தொழிய, அவற்றினிடத்தில் அவற்றின் ஆதிக்கத்துக்கு ஆளான மொழிகளே பெரும்பாலும் புதுவாழ்வு பெற்றியங்குகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

இணைந்து வாழும் இனங்களும் பண்புகளும் மொழிகளும் ஒன்றுடனொன்று சரிசமமாக, ஆதிக்க அடிமை மனப்பான்மைகளுக்கோ, உயர்வு தாழ்வுக் கருத்துக்களின் தொலை நிழலுக்கோ கூட இடமில்லாமல் நேசபாசத்துடன் ஒத்து உறவாடி, ஒன்றன் வளர்ச்சியை ஒன்று ஊக்குவதே தமிழர் பின்பற்றிய இன ஒப்புரவு மரபு. தமிழ்ப் பண்பின் உயிர் வண்மைக் கூறு இதுவே; ஆனால் இந்தத் தமிழ்ப் பண்பு தமிழர் தமக்காக மட்டுமே உருவாக்கிய தனிப் பண்பு அன்று. ஏனெனில் அதுவே மனிதப் பேரினத்தின் பொங்கற்பண்பு; முழு மனித இனத்தின் மூவா இள நலனும் நாடித் தமிழர் வகுத்த பண்பே அது. அதைப் பின் பற்றிய எந்த இனமும் பிற இனங்களைக் கெடுக்க முனையாது; தானும் கெடாது. தான் முன்னேறுவதுடன் அயலினத்தின் முன்னேற்றத்தையும் ஊக்கி ஒத்துழைத்து. உலகில் பொங்கல்வளம் பரப்பும்.

## 4. உலகில் பல மொழிகள் ஏன்?

மனித இனத்தில் மொழிகள் பலவாயிருப்பதற்கு இயல்பான காரணங்கள் உண்டு.

கல்வி நிலயங்களில் பல வகுப்புகள் உள்ளன. பெரிய நிலயங்களில் ஒவ்வொரு வகுப்பிலும் பல பிரிவுகள் ஏற்

படுவது இயல்பு. நிலையங்களிலேயே தொடக்கப்பள்ளி, இடைத்தரப்பள்ளி, உயர்தரப் பள்ளி, கல்லூரி என்ற பெரும்படிகளும் உண்டு.

மாணவர் தொகையும் பரப்பும் பெருகப் பெருக, ஒரே வகைப் பள்ளிகளிலும் பல தேவைப் படுகின்றன.

ஒரு பள்ளியில், ஒரு வகுப்பில், ஒரு பிரிவிலேயே மாணவர்களில் பல படியான தேர்ச்சியுடையவர் காணப் படுவர். மாணவர் தேர்ச்சிக்கேற்ப, வகுப்பில் பிரிவுக்குப் பிரிவு, பள்ளிக்குப் பள்ளி கல்வி மதிப்பு வேறுபடுவதும் உண்டு.

கல்வி நிலையங்கள் பற்றிய இவ் வேறுபாடுகளை யாவரும் அறிவர். ஆயினும் 'இவை ஏன்?' என்று யாரும் கேட்பதில்லை. ஏனெனில் இவை தெளிவாய் அறியப்பட்ட வாழ்வின் மேலீடான செய்திகள். ஆனல் இதே முறையில், இதே அடிப்படையில்தான், பேரினத்தில் இனங்களும், இனத்தில் கிளையினங்களும் ஏற்படுகின்றன. இவற்றுக் கேற்ப, இதே முறையில், இதே அடிப்படையிலேயே பேரினத்தில் பல மொழியினங்களும், மொழிகளும், கிளை மொழிகளும் பெருகியுள்ளன.

அறிவு நிலையில் ஒரேபடியான நான்கு மாணவர்கள் ஓரிடத்தில் படித்தால் அது ஒரு பள்ளிதான். ஆனல் அந்தப் பள்ளியில் வகுப்பு ஒன்றே. வகுப்பின் பிரிவும்ஒன்றே. நால்வரும் நால் வேறு படியான அறிவுநிலை உடையவர்களா யிருந்தால், நால்வருக்குமே நான்கு வகுப்புகள் தேவைப் படும். மாணவர் தொகை பெருகப் பெருக, வகுப்புகள் பல, வகுப்பின் பிரிவுகள் பல, பள்ளிகள்பல, பள்ளியின் படிகள் பல கட்டாயம் தேவைப்படும். ஒரே வகுப்பு ஒரே பிரிவாயிருந்த ஒரே பள்ளி பல வகுப்பு, பல பிரிவுகளையுடைய பல பள்ளிகளின் தொகுதியாகப் பெருகி விடும்.

இனப் பெருக்கம், மொழிப் பெருக்கம் இது போன்றனவே யாகும்.

மனிதப் பேரினம் ஒரு சில மக்களாக இருந்த தொடக்கக் காலத்தில், அவர்கள் ஒரே இடத்தில் ஒருங்கு வாழ்ந்து ஒரே இனமாய், ஏறத்தாழ ஒரே பண்பும் ஒரே மொழியும் உடையவர்களாய் வாழ்ந்தனர். மக்கள் தொகை பெருகுந் தோறும் அவர்கள் பல இடங்களில் படிப்படியாகச் சிதறுண்டனர். ஒரே இடத்தில் கூடிவாழ்ந்த ஒவ்வொரு கும்பல் அல்லது குழுவும் ஓர் இனமாயிற்று. இனங்களிடையே தொடர்பு குன்றி, பண்பில் வேறுபாடும் உயர்வு தாழ்வும் பெருகின. மொழியும் பலவாக, பல்வகை உயர்வு தாழ்வுகளுடைனவாகப் பெருகிற்று.

மனித இனம் பல இனங்களை உட்கொண்ட பேரினமாயிற்று. இனங்கள் கிளையினங்களாயின. மனித இனத்தின் பொது உடைமையாகிய மொழியும் பல மொழிகளாக, பல கிளைமொழிகளாகக் கிளைத்தது. பல கிளை மொழிகளாகப் பிரிந்துவிட்ட மொழிகளையே நாம் மொழியினங்கள் என்கிறோம். அவற்றின் கிளை மொழிகள் தனி மொழிகளாக நிலவுகின்றன.

இத் தனி மொழிகளும் கிளை மொழிகளாகப் பிரிவுற்றுக் கிளையினங்களாதல் கூடியதே.

இனமும் பண்பும் பிரிவுற்று, மொழிகள் பலவாய் விட்டமைக்குரிய மூலகாரணம் தொடக்கக் கால மக்கள் கூட்டத்தின் பெருக்கமும், அதன் விளைவான இடப்பிரிவுமே யாகும். ஆனால் நாளடைவில் வேறு இரண்டு ஆற்றல் சான்ற துணைக்காரணங்கள் தோன்றின. நீடித்துக் கூடி வாழ்ந்த குழுக்கள் தம் பொது மூல மரபில் மட்டுமன்றி, தம் நீடித்த காலப் பொது வளர்ச்சியிலும் பங்கு கொண்டன. மனித இன முழுமைக்குரிய பொது மர

புடன் தனியினத்துக்குரிய சிறப்பு மரபாக இது விளங்கிற்று. இரண்டாவது துணைக் காரணத்துக்கும் இதுவே வழி வகுத்தது. நேர் வழி மரபுக்கு இச் சிறப்பின மரபு புது மதிப்புத் தந்தது. மனித இன முழுமைக்கும் பொதுவான நேர்வழி மரபிலிருந்தும் பிற தனி இன மரபுகளிலிருந்தும் இது இனத்தை வேறுபடுத்திற்று.

உலக வரலாற்றில் இனங்களின் நீடித்த கூட்டு வாழ்வும் நீடித்த பிரிவும் இனங்களையும், கிளையினங்களையும்; பண்பு, கிளைப் பண்புகளையும்; மொழி, கிளையின மொழிகளையும் பலவாகவும், பல வகைகளாகவும், பல படிகளாகவும் பெருக்கியுள்ளன.

## 5. ஓருலகப் பண்பு

உலகை ஒருலகாகக்காணப் பண்டைத் தமிழர் கனவு கண்டனர். அதையே ஆர்வத் திட்டமாக்க இன்று உலகப் பெருமக்கள் முனைந்துள்ளனர்.

இன்றைய உலகில் அரசியல். சமயம், தேசிய இனம், இனம், மொழி, பண்பு, பண்பாடு, நாகரிகம் ஆகிய எல்லா வகையிலும் பிரிவினைகள், வேறுபாடுகள், உயர்வு தாழ்வுகள் ஏராளம் உண்டு. இவற்றுள் அரசியல் நீங்கலாக மற்றவை யாவும் மனித இனத்தின் உயிர்ப் பண்பிலிருந்தும், வரலாற்றின் வளர்ச்சியிலிருந்தும் இயல்பாக எழுந்து முதிர்ந்தவையே. அரசியல் ஒன்றையே எளிதில் மாற்றவோ, துடைத் தழித்துப் புத்துருவாக்கவோ முடியும். அதற்கு அடுத்தபடியாக நாகரிகம், சமயம், பண்பாடு ஆகியவை நூற்றாண்டுக்கான வரலாற்று வளர்ச்சியினால் மட்டுமே மாறக் கூடியவை. ஏனையவை இனத் தளத்திலும் பேரினத் தளத்திலும் வேரூன்றியவை. அவற்றின் மீது வருங்காலக் கட்டடத்தின் ஒருமை காண முடியுமேயன்றி, அவற்றை எளிதில் அசைக்க முடியாது.

பண்டைத் தமிழர் தாம் கண்ட ஒருலகக் கனவை நனவாக்கவே விரைய வில்லை. அதற்கான திட்டமோ அவர்கள் கனவிலும் புகுந்ததில்லை. ஆயினும் தம்மை யறி யாமலே, தம்கனவின் நனவுப் படியில் அவர்கள் படிப்படி யாக முன்னேறிச் சென்று வந்தனர். உலக வாழ்வில் தமி ழர் தமக்குரிய பங்கை இழந்து தவிக்கும் அணிமைக் காலம் வரை உலகில் இந்த முன்னேற்றம் தடைபடவில்லை.

இன்றைய ஒருலகத் திட்டத்துக்குரிய பெருமக்கள் இனத்தின் நடு தளத்தையோ, வரலாற்றையோ ஒரு சிறி தும் அசைக்க எண்ணியவர்களல்ல. ஏனெனில் அவர்கள் உலகின் அரசியல் வேறுபாடுகளை, உயர்வுதாழ்வுகளை, பட் டாங்கமான அநீதிகளைக் கூட ஒரு சிறிதும் அழித்துவிட முனையாதவர்கள் ஆவர். உண்மையில் அவர்கள் திட்ட மிடும் ஒருலகம் அரசியல் சார்பான ஒருலகம் மட்டுமே.

ஒருலகப் பண்புகளின் வளர்ச்சிக்கு அரசியல் ஒருலக அமைப்பு ஒரு நல்ல அடிப்படையாய், வாய்ப்பான பின்ன னணிக் கட்டமாய் உதவும் என்பது ஒருலகத் திட்டவாணர் கருத்து.

இது தவறன்று.

ஒருலக வளர்ச்சி இயல்பாக ஏற்படவேண்டிய ஒன்று. திட்டமிடுபவர் செய்ய வேண்டியதெல்லாம் அரசியல் அதற்குத் தடங்கலாயிராமல் பார்த்துக் கொள் வதே. அரசியல் சார்ந்த ஒருலக அமைப்பு—எவ்வளவு வேறுபாடுகள், உயர்வு தாழ்வுகள் கொண்ட அமைப்புக் கூட—இதற்கு உதவுவதேயாகும் என்பதில் ஐயமில்லை.

தமிழர் கனவு இயல்பான வளர்ச்சியை ஊக்கும் அகத் திட்டம். தற்காலப் பெருமக்கள் ஆர்வம் அதற் கான தடைகளை நீக்கும் புறத்திட்டம். இரண்டுக்கும்

இடையேயுள்ள வேறுபாடு இதுவே. ஆனால் தற்காலத் திட்டத்தில் ஒரு குறைபாடு, ஓர் உட்கீறல் உண்டு. அது அரசியல் ஆர்வத் திட்டமாதலால், அரசியல் ஆதிக்க வாதிகளின் ஆர்வத்துடனும் அடிக்கடி கலந்துவிட இடமேற்படுகிறது.

'உலகை ஒருலகாகக் காண அவாவுவது உயர் குறிக்கோளானால், உலக மொழிகளை ஒரு மொழியாக்குவதும் உயர் குறிக்கோள் தானே!'—இது அரசியல் ஒருலகக் குறிக்கோளின் அருகில் நின்று, அரசியல் ஆதிக்க வாதிகளாகிய ஏகாதிபத்திய வாதிகளும், போலித் தேசிய வாதிகளும், உலக ஏகாதிபத்திய வாதிகளும் அவாவும் குறிக்கோள் ஆகும். ஏனெனில், ஆதிக்கம் கருதாத அரசியல் ஒருலகக் குறிக்கோளாளர் அரசியல் பிரிவினைகள், அரசியல் உயர்வு தாழ்வுகள் ஆகிய வற்றையே அகற்ற எண்ணுதபோது, மொழி வேறுபாட்டைச் துடைத்தழிக்கும் செய்தி எழுவதற்கே இடமில்லை.

உலகம் ஒருலகாக வேண்டும் என்ற கனவைப் போலவே, உலக முழுதும் ஒரு மொழியுலகாக அமைதல் வேண்டும் என்ற கனவும் சீரிய கனவேதான் என்பதில் ஐயமில்லை. இக்கனவிலோ, குறிக்கோளிலோ ஏகாதிபத்திய வாதம் இல்லை. அதற்காக மொழிகளைத் துடைத்தழிக்க, அல்லது அடக்கி மடக்கி அடிமைப்படுத்த எண்ணுவதில்தான் ஏகாதிபத்தியம் நிழலாடுகிறது. ஆனால் கனவும் குறிக்கோளும் கூட, மனித இன நல முழுதும் அளாவிய தகுதி வாய்ந்த வகை முறை காணாத வரையில் பித்தர் கனவுகளே யாகும்.

'பைத்தியத்திலும் முறைமையுடைய பைத்தியம் உண்டு' என்பர் ஆங்கிலப்புகழ்ப் பெருங்கவிஞர் ஷேக்ஸ்பியர். ஒருலக மொழிவகையில் இத்தகைய முறைமையுடைய பித்தர் பலர் தோன்றி பைத்தியக்காரத்தனமான

திட்டங்கள் தோற்றுவித்து, புகழ் மிக்க தோல்விச் சுவடு களை மனித இனத்துக்குப் படிப்பினைகளாக விட்டுச் சென் றுள்ளனர்.

அறிஞர் உலகின் பொதுமொழியாகக் கீழ்திசையில் வடபுலத்தில் தோன்றியதுதான் சமஸ்கிருதம். கீழ்திசை யின் தாய்மொழிகளின் வாழ்வு வளராமல் பலநூற்றாண்டு களாகத் தடுத்து வைக்கவே அது பயன்பட்டது. அது உலகுக்கு அளித்துள்ள புகழ் சான்ற இலக்கிய, அறிவுத் துறைப் பரிசுகள் கூட, அதன் மூலம் ஏற்பட்ட பல தாய் மொழி இலக்கிய, அறிவுத்துறை வாழ்வுகளின் அழிவு களுக்கு ஈடுசெய்ய முடியாது. ஏனெனில் அது தரும் பரிசுகள் அவ்வழிபாட்டில் எஞ்சிய ஒரு சிறு பகுதியே யாகும்.

கீழ்த்திசையிலேயே பாளி பாகத முதலிய பிற மொழி களும், பழம் பாரசீகமும் அதுபோல மேல் திசையில் இலத்தீன கிரேக்க மொழிகளும் இதுபோலவே ஆதிக்கம் செலுத்தி உயிர்த்துடிப்படங்கியுள்ளன.

தற்காலமேலையுலகில் ஓருலக, ஓருலக மொழி மரபைப் புதுப்பிக்க முயன்றவர்களில் சிலர் இலத்தீன அடிப் படையிலோ, இலத்தீன கிரேக்க அடிப்படையிலோ, பல முக்கிய உலகமொழிகளைக் கலந்தோ, உலக முழுவதும் எளிதில் பயின்று ஏற்று வளர்க்க வல்ல ஒரு மொழியைப் படைத்து உருவாக்க முயன்றுள்ளனர், இச்செயற்கை மொழிகளில் சில சமஸ்கிருதம்,கிரேக்கம், இலத்தீனம் ஆகி யவை போன்ற படைப்புகள், அவற்றினும் சிறந்தவை என்று கூடக் கூறப்படுகிறது. ஆக்கியோர் திறமைக்கும் விடாமுயற்சிக்கும் அறிவாற்றலுக்கும் அவை மாபெருஞ் சான்றுகளே. ஆனால் அவர்கள் பெருமுயற்சிகள் விழலுக் கிறைத்த நீரேயாகியுள்ளன. சிறந்த செப்படி வித்தைக்

காரரின் நீடித்த உழைப்புக்குள்ள பயன்கூட அவர்கள் முழு வாழ்நாள் உழைப்புக்கு ஏற்படவில்லை.

செயற்கை மொழிப் படைப்பு முயற்சிகளை நாம் 'அரைத்திருமண வெற்றி', 'பூனைக்கு மணி கட்டும் திட்டம்' ஆகியவற்றுடன் ஒப்பிடலாம். அரசியை மணப்பது என்று ஆண்டி உறுதிகொண்டதாயிற்று-ஆனால் அரசி அதற்கு இணங்கவேண்டுமே! பூனைக்கு மணி கட்ட எலிகள் தீர்மானித்துவிட்டன. ஆனால் போய்க் கட்டுவது யார்? உலக மொழி படைத்தாகிவிட்டது, உலகம் அதை ஏற்கவேண்டுமே! யார் ஏற்கச் செய்வது?

இத்தகைய வியக்கத்தக்க செயற்கைப் படைப்பான 'உலக மொழி'களில் பேர்போனது 'யெஸ் பரான்டோ.' அதனைப் படைத்தவர் உண்டே தவிர வேறு யாரும் அதை இன்று வரை பேசியதுமில்லை, வழங்கியதுமில்லை, அறிந்ததுமில்லை!

வரலாறும் அணிமைக்கால அறிவுலகமும் தரும் இப் படிப்பினையை ஏகாதிபத்திய வாதிகள்கூட ஓரளவு அறிந்துகொண்டுள்ளர். ஆனால் ஏகாதிபத்தியக் கனவு காணும் சில போலித் தேசிய வாதிகளும், போலி ஒருலக வாதிகளும் இப் படிப்பினைகளின் பக்கம் கருத்துச் செலுத்தவில்லை.

ஒருலகம், ஒருலகப் பண்பு, ஒருலக மொழிக் கனவை வகையுடன் நனவாக்க விரும்புபவர்கள் அவற்றைத் தமிழ்ப் பண்பு என்னும் கண்ணாடி கொண்டு, மனித இன வரலாறு என்னும் ஒளியுதவியுடன் காணவேண்டும். அது நிறைவேறவே முடியாததன்று. ஆனால் படிப்படியாகச் செல்லவேண்டும் குறிக்கோள் அது. இன வேறுபாடு,பண்பு வேறுபாடு, மொழி வேறுபாடு ஆகியவற்றைத் துடைத்தல்ல, அவற்றினடிப்படையிலேயே, அவற்றின் வளர்ச்சி

களை இயல்பாகப் பின்னியிணைத்தே காணவேண்டிய குறிக்கோள் அது!

## 6. ஓருலகப் பண்பின் சீரழிவு

பேரினம் தொகையில் பெருக்கமுற்றுப் பிரிவுற்ற போது, நேரடியாக இனங்களாகப் பிரிந்துவிடவில்லை. ஏனெனில் முன் இயலில் குறித்துள்ளபடி, பேரினவாழ்வு ஏரி போன்றது. பண்பாழமிக்க பகுதிகள் உயிர்ப்பண்பு வளமுடையவை, உயிர்ப்பண்புடையவை, பண்புடையவை எனப் பல படிகளாகவும்; பண்பாழமற்ற பகுதிகள் துணைப்பண்புடையவை; இனமாக முதிர்வு பெறாது பண்போ, இன எல்லையோ அமையாத குழுக்கள்; இனமாக உருவாகாப் பரப்புக்கள் எனப் பல படிகளாகவும் பிரிவுற்று நிலவின. ஆனால் இயல்பாக உயிர்ப்பண்புடையன, பண் புடையன, துணைப்பண்புடையன, முதிராக் குழுக்கள், உருவிலாப் பரப்புக்கள் ஆகியவை ஒன்றனை ஒன்று சூழ்ந்து பரந்து இயங்கின. இதனால் பிரிவினைக்குப் பின்னும் உலகம் ஓருலகமாகவே இயங்கிற்று.

தொல் பழங்கால உலகில் உயிர்ப் பண்பு வளமிக்க இனமாகத் தமிழகம் விளங்கிற்று. மனித இன ஏரியின் தொடக்க ஊற்றுப் பகுதியாக நிலவிய இடமாகவும் ஏரியின் ஆழமிக்க பகுதியாகவும் அது திகழ்ந்ததனால், அதுவே பேரின வாழ்வின் இயல்பான உயிர் மையமாய் அமைவுற்றது. அதனைச்சூழ, வட்டார மையகளாகங் உயிர்ப் பண்புடைய இனங்களும், அவற்றைச் சூழத் துணை வட்டாரமையங்களாய்ப் பண்புடைய இனங்கள் பண்புடைய இனங்களும் அவற்றுடன் தொடர்பு கொண்டு துணைப் பண்புடையவை, முதிராக் குழுக்கள் ஆகியும் நிலவின. நேரடியாகப் பேரினப் பொது மரபுடன் தொடர்பு கொண்ட உருவிலாப் பரப்பு மனித இனத்தின்

சூழ்வெளி அல்லது புற எல்லையாக நிலவிற்று.

வட்டத்தின் மிக முக்கியமான கூறுகள் அதன் மையமும் சுற்றுவரையுமே. ஏனெனில் ஆரம் (Radius), விட்டம் (Diameter) என்பதெல்லாம் மையத்துக்கும் சுற்று வரைக்கும் உள்ள தொலை சார்ந்தவையே. இதுபோல, மனிதப் பேரினத்தின் மிக முக்கியமான பகுதிகள் அதன் உயிர்மையமான உயிர்ப் பண்பு வளமிக்க பகுதியும், உயிர்ப் பண்பு முற்றிலும் சென்றெட்டாத, ஆனல் அதனுடன் பொது இன மரபுத் தொடர்புடைய சுற்றுவரைப் பகுதியாகிய உருவிலாப் பரப்புமேயாகும். ஏனெனில் மையத்தின் பண்புடன் சுற்றுவரையின் பொதுப் பண்பு இணையும் நாளே ஓருலகம் அமையும் நாள் ஆகும்.

மையம் தாய், சுற்றுவரை சேய். அதுமட்டுமன்று. மையம் என்றும் இன நலம் வாய்ந்த தாய். சுற்று வரை என்றும் இன நலம் வாய்ந்த சேய். இரண்டும் பேரினத்தின் மூலமரபின் நேர்வழி வந்தவை. ஒன்று அதன் வேர்மூல வடிவமாகவும் மற்றது அதன் இன்றைய வளர்ச்சியாகவும் அமைகிறது. ஆனல் இங்கே மூலமரபு சேயினிடம் உள்ளது. மூலமரபுடன் வளர்ச்சியும் தாய்க் குரியதாகின்றது.

ஓருலகக் குறிக்கோள் செல்ல வேண்டும் திசைமையத் தினின்று சுற்றுவரை செல்லும் திசை, முற்போக்கு வளம் இது. இதற்கெதிராக, சுற்று வரையிலிருந்தே மையத் துக்கு இன ஆற்றல் வரவேண்டும். இது முற்போக்கான திசையாற்றல். இவை தலைமாறி விட்டால், போக்கு பிற் போக் காகிவிடும்.

தொல் பழங்கால உலகில், முற்போக்குத் திசையி லேயே உலகம் வளர்ந்து வந்தது. ஆனல் அகம் நின்று புறம் செல்லும் உயிராற்றலுக் கெதிராக, புறநின்று.

அகஞ்செல்லும் நோயாற்றல் போல, சென்ற நாலாயிர ஆண்டுகளுக்குள் தமிழர் வளர்த்த தென்றலாகிய உலக வாழ்வின்மீது நீண்ட கால வாடை அலைகள் வீசியுள்ளன.

தமிழ்ப் பண்பு நில உலகில் கடல் வழியாகக் கடல் சூழ் உலகிலேயே பெரிதும் பரந்தது. கடலெல்லையிலிருந்து நெடுந் தொலைப்பட்ட அகப் பகுதிகளில் பரவவில்லை. இமயத்தைத் தமிழர் வட பேரெல்லையாகக் கருதியதன் காரணம் இதுவே. இதற்கு வடக்கே ஆசிய ஐரோப்பியப் பரப்பில் பண்போ, பண்பாடோ, நாகரிகமோ சென்று எட்டாத் தொலைவில் தொல் பழங்காலங்களில் திரிந்த பண்படா நாடோடிக் குழுக்கள் தென்திசை ஆசிய, ஐரோப்பிய-ஆபிரிக்க நாகரிகங்களின்மீது சாயத் தொடங்கின. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கிழக்கே சீனமுதல் மேற்கே மேலை ஐரோப்பா வரை நிலவிய நாகரிக இனங்கள் இதைத் தடுத்து நிறுத்தி வந்தன. ஆனால் கி. மு. 2000-லிருந்து கி. பி. 1800 வரை இது அந் நாகரிகங்களை மீட்டும் மீட்டும் அழித்தன.

பண்படாக் குழுக்கள் வந்து பண்பட்டுப் புது நாகரிகம் வளர்த்தன. ஆனால் அவர்களது மூல மரபினரான புதிய பண்படாக் குழுக்கள் கையில்சிக்கி அவர்களும் வீழ்ச்சியுற நேர்ந்தது.

நிலவுலகின் நடுப்பகுதி யெங்கும் பழம் பண்பாடுகள் காடாகி, பழய உலகின் மேல் கோடியிலும், கீழ் கோடியிலும் தென் கோடியிலும் மட்டும் இன்று மனித நாகரிகம் எளிதில் வளர்வதன் காரணம் இதுவே.

இவ் வாடைப் பண்பின் பேரலைகள் ஆரியர், ஊணர், மாங்கோலியர் ஆகியவர்கள் எழுச்சிகளே. ஏனெனில் மூன்றும் மேற்கு, கிழக்கு, தெற்கு ஆகிய முத்திசையிலும் வீசியடித்தன. மூன்றிலும் ஒவ்வொன்று ஏறத்

தாழ ஆயிர ஆண்டு நீடித்த காலமாக அடுத்தடுத்து வீசின. ஆனால் இம்மூன்று பேரலைகளுக்கும் இடையே, மேல் திசையில் காத்தியர், வீசிகாத்தியர், வண்டலியர் ஆகியோரும், கீழ் திசையில் பார்த்தியர், பாக்டிரியர், பஹ்லவர் (தமிழகப் பல்லவர் அல்லர்) ஆகியோரும் நூற்றாண்டுக் கணக்கிலேயே நீடித்த சிற்றலைகளாகச் சுழன்றடித்துச் சூறையாடினர்.

முதலலையில் நடுவுலகம் வந்து பண்பட்டு, புகழ் மிக்க ஆரிய நாகரிகங்களை அமைத்தவர்கள் சிந்து கங்கை ஆரியர், கிரேக்கர், உரோமர் ஆகியவர்களே. ஆனால் இவர்கள் ஹூணப் பேரலைக்கும், பிற சிற்றலைகளுக்கும், மங்கோலியப் பேரலைக்கும் ஆளாகி அவதியுற்றனர். கிரேக்க உரோம இனங்கள் இதனால் மாண்டொழிந்தன. தமிழகத் தொடர்புடைய சிந்து கங்கை ஆரிய நாகரிகம் சீரழிந்தாலும் இன்னும் உயிர் வாழ்வு பெற்று நிலவுகிறது. தமிழகம் இவ் அலை வீச்சுகளுக்கு நேரடியாக ஆளாகாமல், அதனால் சீரழிவுற்ற வடதிசை வாழ்வின் எதிரலைகளுக்கு மட்டுமே ஆளாகி மறுக்கம் அடைந்துள்ளது. இவ்விரண்டும் நீங்கலாக, வாடையலைகளுக்கு ஆட்பட்டாலும் முற்றிலும் சீரழியாமல் மீந்துள்ள பகுதிகள் நாகரிக உலகின் எல்லைக்கோடிகளிலுள்ள சீனமும் மேலை ஐரோப்பாவும், வாடையின் வட திசையில் ஒதுங்கி நிலவிய சுற்றுவரைப் பகுதியாகிய ரஷ்யாவுமே யாகும்.

சீரழிக்கப்பட்ட நடுவுலகின் நடுப்பகுதி முழுவதும் தமிழ்ப்பண்பு பரப்புவதே, ஒருலகக் கனவு காண்பவரின் முதல் திட்டமாய் அமைதல் வேண்டும். உலகப் பெரியார்களான புத்தர் பிரானும் இயேசு பெருமானும் நபி நாயகம் அவர்களும் அரும்பாடுபட்டு உயிர்ப்பூட்ட முயன்ற பகுதிகளும் இவையே.

## 7. பேரின அடிப்படை மொழியின் கூறுகள்

உலகை ஒருலகாகக் காண்பதுடன் அமையாமல் உலக மொழிகளை ஒரு மொழியாக, அல்லது ஓரினமொழி யாக வேனும் காண அவாவுபவர்கள் மனித இன வரலாற் றின் மொழித்துறையில் கவனிக்க வேண்டும் செய்திகள் சில உண்டு. மொழியியலார் (Phi ologists) இவற்றுட் சில வற்றைச் சுட்டிக் காட்டி யுள்ளனராயினும், அவற்றின் உயிர் முக்கியத்துவத்தை உணரவுமில்லை, அவற்றைக் கோவைப் படுத்தவுமில்லை. அத்துடன் மொழியியல் ஒரு புறம் மொழி வாரியாகவும், மொழியின வாரி யாகவுமே முன்னேறத் தொடங்கி யுள்ளது. மொழியியல்புகளும் பொதுவாக ஆராயப் பட்டுள்ளன. ஆனால் இனத் தொடர் பல்லாத பேரினத் தொடர்புகள் ஆராயப் பட வில்லை. பேரின அடிப்படையிலும் ஆராய்ச்சி இன்னும் எழவில்லை.

முதலாவது, இன ஆராய்ச்சியாளரின் ஒரு பெருந் தவற்றை—தவறான போக்கை—மொழியாராய்ச்சியாளர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இனம், இனப்பண்பு ஆகியவை நேர்வழி மரபானவை, வழிவழி தொடர்பவை. ஆயினும் அவற்றின் சுவடுகளை உடற்கூற்றிலோ, குருதியணுக் களிலோ, மேனி நிறத்திலோ, மண்டை யோட்டின் அள விலோ, கண்நிறம், மயிர்நிறம் ஆகியவற்றிலோ காண முடி யாது ஏனெனில் மனித இன வளர்ச்சி மற்ற உயிரின வளர்ச்சிகள் போல உடல் சார்ந்ததன்று. உண்மையில் விலங்குகளைத் தாண்டி மனிதன் உடற் கூற்றில் மிகுதி வளரவேயில்லை என்று கூடக் கூறலாம். அகவளர்ச்சிக் கேற்ற சில வாய்ப்புக்களை மட்டுமே உடற்கூற்றில் அவன் வளர்த்துள்ளான்.

அண்டத்தைப் பிளக்கும் இன்றைய மனிதன் கட்ட றுத்து ஓடிவரும் ஓர் எருமையின் முன் ஆயுதமின்றி

செல்ல நேர்ந்தால், தப்பி யோடக் கூட வழியற்றவன் ஆய்விடுகிறான். வானில் மணிக்கு முந்நூறு நானூறு கல் வேகத்தில் பறக்கும் ஆற்றல் உடையவன்தான் அவன். ஆனால் ஓட்டத்தில் இன்றும் அவன் ஒரு நாயிடமிருந்து தப்பமுடியாது. இவை காணப் பேராராய்ச்சி தேவை யில்லை. ஆயினும் உலகின் இன ஆராய்ச்சியாளர் இவை காணவில்லை. மொழியாராய்ச்சியாளர் அவர்கள் வழியை ஆராயாது ஏற்றுள்ளனர்.

மனித இன வாழ்வில் இனம், இனப்பண்பு ஆகிய வற்றின் சுவடுகள் பதிந்த உடல் புற உடலன்று, அக உடல், மொழி.

இரண்டாவது மொழியியல் வாய்மை பல மொழி நூலார் சுட்டியுள்ள ஒன்றே. ஆனால் அதன் உயிர் முக்கியத்துவத்தை, இனப்படிப்பினையை அவர்கள் காண வில்லை, காட்டவில்லை.

மனிதப் பேரின மொழி ஒன்றுதான். இம்மெய்ம்மை யின் தடங்களை இன்றும் மொழி வாழ்வில் காணலாம்.

மொழி மனித இனம் பிறப்பதற்கு முன் பிறந்து, மனித இனத்தில் இயல்பாக, இனமலர்ச்சியாக வளர்வது. ஆனால் அதற்கு எல்லைகள் வகுத்தவன்—உருவெல்லை, வடிவெல்லை, பண்பெல்லை ஆகியவை வகுத்தவன்—மனிதனே, இனவளர்ச்சியும் இனமுதிர்ச்சியும் பெற்ற மனித சமுதாயமே, இத்தகைய இனச் சமுதாயத்தின் சார்பான பேராட்கள் (பிரதிநிதிகள்) தான் பண்டைத் தமிழகத்துக்கும் இற்றை மேலையுலகுக்கும் உரிய இலக் கணப் புலவர், மொழி நூலறிஞர் ஆகியோர்.

மொழிகளுக்கெல்லாம் பெயரும் இலக்கிய இலக்கணங் களும் அகரவரிசைகளும் உருவாகிவரும் இந்நாட்களில் கூட, மொழிக்கு வடிவெல்லை அல்லது இட எல்லை தெளி

வாகக் காணப்படுவதில்லை. தமிழகத்திலிருந்து தெலுங்கு நாட்டுக்குச் செல்பவன் இருமொழியகங்களின் நடு ஊட்டற் கூறுதாண்டியபின் எந்த ஒரு குறிப்பிட்ட இடத்திலும் மொழி மாறுபடுவதைக் காணமுடியாது. உண்மையில் தமிழ் மெல்ல மெல்லத் தெலுங்கன் பேசும் தமிழ் போல மாறுவதையும், அதுவே தமிழன் பேசும் தெலுங்கு போலப் படிப்படியாகத் திரிந்து, இறுதியில் தெலுங்கு உருப்பெறுவதையும்தான் காண்பான். முற்றிலும் தமிழ் தெலுங்காய் விட்டபின் கூட, மாறுபாடு பெரிதன்று. ஏனெனில் இருமொழிகளும் ஓரின மொழிகளே.

மொழி எல்லை கடந்துகூட அணிமை செயலாற்றுவது உண்டு. தமிழ் மலையாள மொழிகளுக்குக் குறுக்காக, தென்மலையாள, தென் தமிழக மொழிகள் ஒரு புறமும்; வட மலையாள, வட தமிழக மொழிகள் ஒரு புறமும் மொழி கடந்த ஒலிப்பு, சொல் வழக்கு, மரபு ஒற்றுமை காட்டுகின்றன,

மொழியின் இன எல்லை கடந்தால் கூட நிலை மிகுதி மாறுபடுவதில்லை. வடகோடித் திராவிட மொழிகளாகிய கன்னடம், தெலுங்கு ஆகியவை படிப்படியாக மராத்தி, குசராத்தி மொழிகளாகவும்; ஓரியா, வங்க மொழிகளாகவும் திரிவதை அவ்வாறு எல்லை கடப்பவன் உணர்வான். இவ்வட கோடித் திராவிட மொழிகள் திராவிட மொழிகளின் ஓர் ஆரியக் கூறு போலவும், தென் கோடி ஆரிய மொழிகள் ஆரிய மொழிகளில் ஒரு திராவிடக் கூறு போலவுமே அமைந்துள்ளன. பண்டை நாளில் குசராத்தி. மராத்தி, ஓரியா ஆகியவை திராவிட மொழிகளில் தான் சேர்க்கப் பட்டிருந்தன என்பது குறிப்பிடத் தக்கது. இதுமட்டுமன்று, கன்னடத்தின் பல தனி இயல்புகளை மராத்தியிலும், மராத்தியின் பலதனிஇயல்புகளைக் கன்னடத்திலும், அதுபோலவே தெலுங்கின் பல இயல்புகளை

ஒரியாவிலும், ஒரியாவின் பல இயல்புகளைத் தெலுங்கிலும் கண்டுணர்தல் அரிதன்று. மற்றும் கன்னட மொழி எல்லையில் கன்னடத்துடன் இன்னும் நெருக்கமான தொடர்புடையனவாக, மராத்தி மொழிக்குக் 'கொங்காணி' என்ற தென்கிளையும், குசராத்திக்குப் 'பீலி' என்ற தென்கிளையும் அமைந்துள்ளன. கீழ்த்திசையிலோ பண்டு வங்கத்துக்கும் தெலுங்குக்கும் இடையே வங்கத்தின் திராவிடக் கிளையாகவோ, தெலுங்கின் ஆரியக் கிளையாகவோ தோற்றிய இன மொழிதான் ஒரியா. கலிங்கம் என்ற பெயருடன் அது ஆயிர ஆண்டுகளுக்கு முன் கூடத் தெலுங்கு பேசப்படும் பகுதியின் நேர் கூறாக இயங்கிற்று

கடல், மலைகள், ஆறு குறுக்கிடாத இடங்களில், சில சமயம் அவை குறுக்கிட்டபோதுகூட, உலக முழுதும் இதே நிலை காணலாம்.

## 8. பேரின மொழி வாழ்வில் ஆரிய இனத் தலையீடு

இனவேறுபாடு என்ற ஒன்று, சிறப்பாக ஆரிய இனம், பிற இனம் ஆகியவற்றில், இடையீடு இல்லாவிட்டால், உலகில் அணிமைத் தொடர்பும் அணிமை இயைபும் இன்றைவிட மிகுதியாயிருக்கும். அத்தலையீடு உள்ள இடங்களில்தான் அணிமை தாண்டிய தொலைத் தொடர்புகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இத்தொடர்புகள் பெரிதும் மூல முதன் மொழியாகிய தமிழின தொடர்புகளாகவே உள்ளன.

வடிவெல்லை எளிதில் வரையறுக்கப்படமுடியாத இந் நாட்களில், உருவெல்லை முனைப்பாகியுள்ளது. ஆனால் இதுவும் மிக அணிமைக் காலத்தில் ஏற்பட்ட ஒன்று. மொழிகளுக்குத் தனித்தனி எழுத்து வடிவமும் இலக்கிய

இலக்கணமும் அகரவரிசையும் ஏற்பட்டதனுலும், எல்லே கடந்து மனிதர் விரைந்து செல்லும் வாய்ப்புகள் பெருகி யுள்ளதனுலும் ஏற்பட்டுள்ள மாயைகளில் ஒன்றே இது. ஏனெனில் இன்றும் பலமொழிகள் ஒன்ரு பலவா என்று வாதிடத் தக்க நிலேயிலேயே உள்ளன. இந்தியைப் பல மொழிக் குழு என்பாரும் ஒரு மொழி என்பாரும் உண்டு. ஒரு மொழி என்பவருள்ளும் அதை மேலே இந்தியாக, கீழை இந்தியாக, சமஸ்கிருத மயமான இந்தியாக, உருது வாக, இந்துஸ்தானியாகக் காண்பவர் உண்டு. மராத்தி யும் கொங்காணியும் ஒரு மொழியா, இரு மொழிகளா; துளுவும் குடகும் படகமும் துதவமும் குறவமும் கன்னட மொழிவகைகளா, தமிழ் மொழி வகைகளா. தனி மொழி கள் தானு என்ற வாதம் இன்னும் முற்றிலும் முடிவுபெற வில்லே.

எது மொழி, எது மொழியின் திசை வழக்கு (Dialect) என்று மக்கள் பெயர் மரபு ஒன்றுதான் பிரிக்க வேண் டுமே தவிர, அறிஞரால் எளிதில் பிரிக்க முடியாது. ஏனெனில் மொழிக்கு மொழி எங்கும் வேறுபாடும் உண்டு; ஒற்றுமையும் உண்டு. எந்த அளவு ஒற்றுமை இருந்தால் அவை ஒரு மொழியாகலாம், எந்த அளவு வேற்றுமை நிலவினுல் அவற்றை இரு மொழிகளாகக் கொள்ள வேண்டும் என்பதற்கு நேரிய விதி எதுவும் கிடையாது.

மொழிகளின் இந்நிலே மொழியினங்களுக்கும்பொருந் தாததன்று. இந்திய ஆரிய மொழிகள் மற்ற ஆரியமொழி களேவிடத் திராவிடத்துக்கு அணிமையாக உள்ளன. நேபாள மொழி திபெத்துடனும், அசாம் மொழி பர்மா, சீனுவுடனும், பாரசீக ஆரிய மொழி மற்ற நடு உலக மொழிகளுடனும் மிகுந்த ஒப்புமை யுடையனவாக இயல் கின்றன. அதேசமயம் ஒரு புறம் மேலேயாரிய மொழி களும் கீழை ஆரிய மொழிகளும் ஒரே இன மொழிகளாக

வகுக்கப் பட்டிருப்பினும், அவை அடிப்படை யியல்புகளி லேயே வேறுபட்டுள்ளன. மற்றொரு புறம் தமிழ் சூழிட அணிமை மொழிகளுடன் மட்டுமன்றி, தொலை மொழி களுடனும், கிட்டதட்ட எல்லா மொழியினங்களுடனும் ஒப்புமைகள் உடையதாய் விளங்குகிறது.

பொதுச் சொற்களின் அடிப்படையிலேயே இன்று மொழிகளும், மொழி இனங்களும் வகுக்கப் பட்டுள்ளன. ஆனால் ஒரு மொழியிலேயே ஓரிடத்தில் வழங்கும் சொல் பிறிதோரிடத்தில்; ஒரு காலத்தில் வழங்கும் சொல் பிறி தொரு காலத்தில் வழங்குவதில்லை. இலக்கியமும் அகர வரிசையு மில்லாவிட்டால், எந்தச் சொல் எந்த் மொழிக் குரியது என்றோ, எந்த மொழிக்கு எச்சொற்கள் உரியவை என்றோ வகுப்பது முடியாத காரியமாகவே இருக்கும். சொற்களைவிட இலக்கண அமைதிகளே மொழிவேறு பாடு, இனவேறுபாடு ஆகியவற்றை அறுதியிடும் அடிப் படைப் பண்புகள் என்று மொழி நூலாரே கூறுகின்றனர். மொழிகளும், மொழியினங்களும் இவ்வடிப்படையில் திருத்தி வகுக்கப் பட்டால், இன்றுள்ள உலக மொழி களின் தொகை மட்டுமல்ல, மொழி யினங்களின் தொகை யும் மிகக் குறைந்து விடும். ஆனால் சொல் தொகுதி, இலக்கண அமைதி ஆகிய இரண்டைவிட அடிப்படைத் தன்மை வாய்ந்தது கருத்துப் படிவம். இதனடிப்படை யில் மொழிகள் ஆராயப்பட்டால், உலகமொழிகள், மொழி யினங்கள் மொத்தத்தில் இரண்டு மூன்று அல்லது ஒன்று தானு என்ற நிலையை அடைந்துவிடும்.

உலகப் பொது மொழி, ஒரே உலக மொழி என்பது இவ்வாறு இனி ஏற்படவேண்டிய ஒன்றன்று. முன் இருந்த ஒன்று, இன்றும் அடிப்படையில் உயிருடன் நிலவும் ஒன்றே. ஆனால் மொழியின் ஒருமை கூட்டு வாழ்விலிருந்து

வந்தது. அதன் பிரிவு பிரிந்து வாழ்வதிலிருந்து வந்தது வாழ்வில் ஒருமை உண்டு பண்ண முயலாமல் மொழியில் ஒருமை உண்டுபண்ண முயல்வது என்பது செருப்பைத் திருத்தாமல், காலைத் திருத்த முற்படுவது போன்ற மடமைச் செயலேயாகும். அத்துடன் பொதுமை என்பது சிறப்பு நீக்கிய உயிர்ப்பற்ற, உருவற்ற பொதுமை யன்று. சிறப்புக்கள்யாவும் உள்ளடக்கி இசைவித்த நிறை பொதுமையாகும்—அது உலக இனங்களின் அல்லது மொழிகளின் நிறை பொதுக் கூறு (H+C. F. அல்லது G. C. M) அன்று, அவற்றின் குறை பொது மடங்கே (L.C. M) யாகும்.

இலக்கிய வடிவான ஓருலக மொழி என்பது இன்று நிலவும் எந்த மொழியையும்—மிகப் பிற்பட்ட மொழியைக் கூட—அழித்து உருவாகக் கூடியதன்று. எல்லா மொழிகளின் மூல அடிப்படைமீது, எல்லா மொழிகளின் தனி வளர்ச்சிகளின் சிறப்புக்களையும் உள்ளடக்கி, எல்லா மொழிகளின் இயல்பான வளர்ச்சியாக அது அமைய வேண்டும். ஆனால் இது எதிர்ப்பார்த்தோ, திட்டமிட்டோ, அவசரப் பட்டோ அமைக்கக் கூடியதன்று. அந்த அவா வையே உலகமளாவ, மனித இனமளாவப் பரப்பி, உலக மளாவிய மனித இன மொழிகள் அனைத்தையும் தம் தாய் மொழிகள் போலக் கொள்ளத் தக்க அருள் மனப்பான்மை யுடையவர்களால் விருப்புடன் அவாவி, பொறுமையுடன் காத்திருந்து காணவேண்டிய ஒன்று அது. அத்துடன் அதைப் பெற்று விடுவதன்று முக்கிய மானது—அத்திசையில் செல்வதே போதிய நிறைவுடை யது ஆகும், அது ஒரு குறிக்கோளின், இலக்கின் திசை யாய் அமையவேண்டும், செயல் நோக்கம் ஆய்விடக் கூடாது.

## 9. ஒன்று பல ஆகும், பல ஒன்றுதல் அரிது

மொழி ஒன்று பலவாதல் உண்டு. இது இயல்பாகவே நடை பெறுவது, நடைபெற்றுள்ளது. ஆனால் பலவோ, இரண்டோ கூட ஒன்றுதல் அரிது. அது இயல்பல்ல வலிந்து செயற்படும் இடத்திலும் பெரும்பாலும் இது வெற்றி காண்பதில்லை. ஏனெனில் மொழி என்பது இனத்தின் உயிர். இனத்துடன் இனம் ஒட்டினாலன்றி, மொழிகள் பலவோ. இரண்டோகூட ஒன்றாக முடியாது. இயல்பாகவாயினும் சரி, வளர்ந்தாயினும் சரி—இனத்துடன் இனம் அணிமையுறவும், ஒன்றை ஒன்று ஊக்கிக் குறை நிரப்பவல்ல சிறப்பு வேறுபாடுகளும் உடையனவாயிருந்தால் தான், இத்தகைய இன ஒட்டும் மொழி ஒட்டும் வெற்றி பெறும்.

இயற்கை முறை, செயற்கை முறை ஆகிய இரண்டும் கடந்து. இயற்கை மீதமைந்த செயற்கை முறையாக, தமிழகம் மொழி இணைப்பில் ஒரு பொங்கல் முறை கண்டுள்ளது. அது அக இணைப்பு முறை. மேலே குறிப்பிட்டபடி அது உலகளாவச் செயலாற்ற வல்லது.

மனித இன வரலாற்றில் மொழி தங்கு தடையின்றி ஒன்று பலவாகியுள்ளன என்பதற்கு இன மொழிகளே சான்று.

மூல ஆரிய இனமொழி ஒன்று. ஆனால் இன்று உலகில் —ஆசிய ஐரோப்பியப் பரப்புக்களில் அது ஏறத்தாழ இருபத்தைந்துக்கு மேற்பட்ட வேறு வேறு மொழிகளாகப் பிரிவுற்றுச் சிதறியுள்ளது.

மூல திராவிட மொழியும் இது போல ஒன்றே. நல்லாயர் கால்டுவெல் கணிப்பின்படி இன்று அது பண்பட்ட ஆறு மொழிகளும் பண்படாத ஏழு மொழிகளும் ஆகப்

பதின்மூன்று மொழிகளாய்ப் பிரிந்து பரவியுள்ளது. அத்துடன் திராவிட இனம் என்று இன்று நாம் கூறுவது பண்டைத் திராவிடப் பேரினத்தின் உயிர்க் கூருன ஒரு பகுதியை மட்டுமே. அப்பேரினத்தின் கிளை மொழிகளில் பல மாண்டழிந்தன. ஆனால் உண்மையில் அவற்றின் பெயரும் உருவும் வடிவும் புகழுந்தான் மாண்டு போயுள்ளன. வேறு பெயர், வேறு மொழியினப் பெயர் பூண்டு அவற்றின் மறைவில் அவை இன்றும் நிலவுகின்றன என்று கூற இடமுண்டு.

ஆரியமல்லாத உலக இனங்கள் யாவும், மிகத் தொலைக்கணிப்பில் ஆரிய இனமும் கூட, மனிதப் பேரினத்தின் மறு பெயர் வடிவான இத்திராவிடப் பேரினத்தின் கிளைகளே யாகும்.

மொழிகள் பிரிவதற்கு எவ்வளவு சான்றுகள் உலகில் கிட்டியுள்ளனவோ அவ்வளவு சான்றுகள் இணைவதற்குக் கிட்டவில்லை. இதனை யாவரும் ஒப்புவர், அறிவர். ஆனால் இதற்குரிய காரணம் பொதுவாக உணரப்படவில்லை. ஏனெனில் இணைந்த மொழிகளை மாண்ட மொழிகளில் தான் காணவேண்டும். மாண்ட மொழிகளின் இலக்கியப் பெரும்புகழே இக் காட்சியைத் தடுத்து மறைத்துள்ளது என்னலாம்.

மாண்ட மொழிகள் யாவும் இரண்டு இனப் பொது எல்லையிலேயே அமைந்துள்ளன. அவை மொழி இணைவுகளாக மட்டும் இயலவில்லை. இரு வேறு இனமொழிகளின் இணைவாக வாழ்வு தொடங்கின. அவற்றின் பெரும் புகழுக்கும் மாள்வுக்கும் இவ்வின இணைவே காரணம் ஆகும்.

ஜிப்ரால்ட்டருக்கும் வங்கக் குடாவுக்கும் இடையேயுள்ள இந்த இனக் கலப் பெல்லைக்குப் புறம்பாக, சீனம்,

சப்பான், தமிழினம் ஆகியவை மாளா மாண்புடைய தொல் பழம் பெருமையுடைய மொழிகளாகவும், மேலை ஐரோப்பிய இனங்கள் புது வாழ்வு பெருக்குபவையாக வும் அமைந்துள்ளதன் காரணம் இதுவே.

இனங்கடந்த மொழி ஒட்டு இன ஒட்டுப்போல உயிர்ப் பண்பையும் உயிராற்றலையும் கெடுப்பதாகும்.

ஓரினத்துக்குள்ளே கூட மொழிகள் எப்போதும் எளிதாக இணைவது அரிது. ஆனால் வெற்றிகரமான இத்தகைய ஓர் இணைவை வரலாற்றில் காண்கிறோம். இது கூர்ந்து கவனிக்கத்தக்கது. ஏனெனில் விதியின் பண்பு விளக்கும் ஒரே விதிவிலக்காக இது அமைகிறது. பிரிட்டனில் கி. பி. 10–12-ம் நூற்றாண்டுகளில் பழய ஆங்கில இனத்துடன் அவ் இனத் தொடர்புடைய டேனிய இனமும் நார்மானிய இனமும் அடுத்தடுத்து வந்து மோதிக் கலந்தன. அடுத்த சில நூற்றாண்டுகளுக்குள் வலிந்து மோதிக் கொண்ட இந்த மூன்று இனங்களும் இன மொழிகளும் இயல்பாகக் கலந்து, பின் என்றும் பிரித்தறிய முடியாதபடி ஒன்றுபட்டு விட்டன.

டேனியரும் நார்மானியரும் அயலவராக வந்து படை யெடுத்து வென்று குடியேறியுள்ளவர்கள்தான். ஆனால் அவர்கள் ஒரே இனத்தவர். கலக்கும் காலத்தில் வேறு பட்ட பண்பாடு உடையவர்களானாலும், முற்பட ஒரே பண்பில் வளர்ந்தவர்கள். அத்துடன் வென்றவர்களின் நாகரிகம், மொழி ஆகியவற்றைவிட, நாட்டு மக்கள் நாக ரிகமும் மொழியும் மேம்பட்டவை, வென்றவர் வெற்றி யிறுமாப் படங்கிச் சரிசமமாக உறவாடியதனால், அவர்கள் விரைந்து ஒன்றுபட முடிந்தது.

இவ்வழியிலும் ஆங்கில நாகரிகமும் மொழி இலக்கி யம் ஆகியவற்றின் வளர்ச்சி நான்கு நூற்றாண்டுகளுக்கு மேற்படத் தடைபட்டது. அண்டையயல் நாடுகளுக்கும்

இதே தடை ஏற்பட்டதனுலேயே பிரிட்டனின் இவ் வளர்ச்சித் தடை வரலாற்றில் முனைப்பாகக் காட்சி தரவில்லை.

ஒரே இனத்தவர் கூடச் சரிசம அடிப்படையில் இணையா விட்டால், மொழி ஒன்று படுவதுமில்லை, வளர்வதுமில்லை. ஏனெனில் ஆங்கிலேயர்களும் அவர்களுக்கு முன் பிரிட்டனில் வாழ்ந்த பிரிட்டானியரும் ஒரே ஆரிய இனத்தவர்தான். ஆங்கிலேயர் பிரிட்டானியரை வேல்ஸுக்கும் வட ஸ்காத்லாந்துக்கும் அயர்லாந்துக்கும் துரத்தினர். டேனி நார்மானியர் காலக் கலப்பைப் போலவே இங்கும் வென்றவரைவிட நாட்டு மக்கள் நாகரிகத்தில் உயர்வுடையவராகவே யிருந்தனர். ஆயினும் இன்றளவும் பழம் பிரிட்டானிய இனமொழிகள் வேருகவும் புதிய பிரிட்டனின் ஆங்கில மொழி வேருகவும் தான் இயங்குகின்றன.

இந்திய ஆரிய மொழிகள் என்று கூறப்படும் சிந்து கங்கை வெளி மொழிகள் யாவும் உண்மையில் ஆரிய திராவிடக் கலப்பின மொழிகளே. திராவிடக் கலப்பு மிகுதியான தென்திசை, கீழ்திசை மொழிகளே இன்று கூட இலக்கியச் சிறப்பும் பண்பாடும் மிக்கனவாய்த் திகழ்கின்றன. ஆயினும் எங்கும் இனக்கலப்பு சரிசம அடிப்படையில் நிகழவில்லை. ஆரிய மொழி பெரும்பான்மை மக்களான திராவிட மக்கள் மீது வலிந்து திணிக்கப் பட்டது. இதனுல் ஆரிய மொழி தடம் தெரியாமல் அழிந்து விட்டது. ஆரியமயமாக, ஆரியப் பெயருடன் நிலவிய கலப்பு மொழிகள் பெரிதும் உயிர்ப் பாற்றலற்றவையாகவே நிலவுகின்றன, ஏனெனில் அவை இன்றுவரை ஒரே பெயருடனே உருவுடனே நான்கு நூற்ருண்டுகளுக்குமேல் வாழ்வு காணுத நிலையிலேயே இயங்குகின்றன.

மொழிக் கலப்புப் பற்றிய படிப்பினைகளை நாம் கீழ் வருமாறு வகுத்துக் காணலாம்,

பொதுவாக மொழிக் கலப்பு விரும்பத்தக்க ஒன்றன்று. ஏனெனில் அது எப்படியும் மொழி வளர்ச்சியைத் தடைப் படுத்தும். இனவாழ்வைக் குலைக்கும். மொழியின் வாழ் வைக் குறுக்கும். இரண்டின் உயிர்ப்பாற்றலையும் சிதைக் கும். பெரும்பாலும் கலப்பின மொழிகள் எவ்வளவு புகழ் வளர்ச்சியடைந்தாலும் நீடித்து நிலவாது மாளவே நேரும். மாண்ட மொழிகளாகிய சமஸ்கிருதம், கிரேக்கம், இலத் தீனம் ஆகியவை இதற்குச் சான்றுகள்.

ஓரினத்துக்குள் மிக நெருங்கிய உயிர்த் தொடர் புடைய மொழிகள், ஒன்றை ஒன்று ஊக்கும் சிறப்பியல்பு களையுடையனவாய்ச் சரிசம அடிப்படையில் கலக்கும் இடத்தில் மட்டுமே, கலப்பு இயல்பான வெற்றி கண்டுள் ளது. ஆனால் வரலாற்றில் இது விதிவிலக்கான, அருவாய்ப் பான நிகழ்ச்சி.

மொழிகள் கலக்குமிடத்தில் ஒரு மொழி ஆதிக்க மொழியாகவும், மற்ற மொழி அடிமை மொழியாகவுமே பெரிதும் அமைகின்றன. கலப்பு நேரடியாக ஒன்றன் அழிவு நாடுகிறது, ஆனால் ஆதிக்க மொழியும் இதனால் உயிர்ப் பிழந்து மாள்வுக்கே உரியதாகிவிடுகிறது. தன் இனம் கடந்து பிறஇனம் ஆண்ட மொழிகள் யாவுமே இன்று உலகில் மாண்ட மொழிகளாகத்தான் விளங்கி யுள்ளன.

கலப்பால் மொழிகள் ஒன்றுபடமாட்டா. பிரிவு படவே வழியுண்டு என்பதற்கு இந்திய மொழிகளும் ஐரோப்பிய மொழிகளும் சான்று, முந்தியவற்றில் கலந்த சமஸ்கிருதம், பிந்தியவற்றில் கலந்த இலத்தீனம் அடிமைப் பண்பூட்டி மேலும் பிரிக்கவே உதவின என்று காணலாம்.

## 10. சொற் கலப்பு: ஆதிக்கவாதம்

இன்றைய உலகமொழிகளில் தமிழ், சீனம், ஜெர்மன் ரஷ்யம் ஆகியவை நீங்கலான ஏனைய மொழிகள் அயல் மொழிச் சொற்கள் பெற்றே வளமும் வளர்ச்சியும் நாடி யுள்ளன. கீழ்திசை, மேல்திசை முழுதும் அளாவிய இந்தச் சூழல் எங்கும் ஒரு தவறான கருத்தைப் பரப்ப உதவி யுள்ளது. அயல் மொழிச் சொற்களின் கலப்பு ஒரு மொழிக்கு ஊட்டமும் நலமும் தரும் என்று சிலரும்; மொழி வளர்ச்சிக்கு அது இன்றியமையாதது என்று சிலரும்; இக் கலப்பு இல்லாமல் எம்மொழியும் வளராது என்று சிலரும் வாதாடி வற்புறுத்தி வருகின்றனர். இத் தகைய வாதம் தமிழகத்தின் மீதும் இத்தாக்குதலை நீண்ட நாள் விடா முயற்சியுடன் செய்து வருகிறது. நாகரிகத்தில் முதிர்ந்த மொழிகளாக இன்று கருதப்படும் மேலை மொழி களின் நிலை இதற்குச் சீரிய சான்றாக அடிக்கடி எடுத்துக் காட்டப்பட்டும் வருகிறது.

மொழியில் அயல்மொழிச் சொற்கள் கலப்பு நன்றா, தீதா என்பது மொழித்துறை சார்ந்த ஆராய்ச்சி. ஆனால் அதை வற்புறுத்துபவர், மேலை மொழிச் சான்று காட்டு பவர், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழகம் சூழ்ந்த நிலங்களில் அதை வெற்றிகரமாகக் கையாண்டு தமிழகத்தி லும் கையாண்டு வெற்றி காண அரும்பாடுபடுவர் அதற்கு அரசியல், இனவேறுபாட்டு உருவம் தந்துள்ளனர். மொழித்துறைப் பகுதியை ஆராயுமுன் இவ்வாதம் முதலில் கவனிக்கத்தக்கது.

அயல் மொழிச் சொற் கலப்பில்லாமல் மொழி வளராது என்று கூறுபவர்களில் ஒருசாரார் மேலைமொழிக் கலப்பையே பெரிதும் விரும்புபவர். மேலீடாகப் பார்ப்பவர் களுக்கு இவ் வாதம் ஓரளவு பொருத்தமுடையது என்று

தான் தோன்றும். ஏனெனில் மேலை மொழிகள் கலப்பைப் பெரிதும் பயன்படுத்தியவைதான்; வளர்ந்துள்ளவைதான் கலப்பைப் பயன்படுத்தியே பெரிதும் வளர்ந்துள்ளன; என்பதும் பேரளவில் ஒத்துக்கொள்ளத்தக்கதுதான். அவர்கள் வாதத்திலுள்ள பொள்ளல் ஒன்றே ஒன்றுதான்: கலப்பைப் பயன்படுத்திச் சில மொழிகள் வளர்ந்தன என்பது உண்மையானல், எல்லா மொழிகளும் அப்படித்தான் வளர வேண்டும் என்று அதனல் எப்படி ஏற்பட்டுவிடும்? அது ஒன்றுதான் வளர்ச்சிக்கு வழி என்று எப்படிக் கூறுவது?

இவை பற்றி மேலே ஆராய்வோம்,

அயல் மொழி கலக்க வேண்டுமென்று கூறுபவர்களில் மிகப்பலர் உள்ளத்தில் மேலை மொழிகளின் சான்று நிழலாடுகிறதே தவிர, மேலை மொழிகளின் கலப்புப் பற்றிய ஆர்வம் நிழலாடவில்லை. மேலை மொழிகள் மாண்ட இலத்தீன கிரேக்க மொழிச் சொற்களைப் பயன்படுத்துவது போலக் கீழ்திசை மொழிகளும் அவற்றில் ஒன்ருகத் தமிழும், மாண்ட சமஸ்கிருதச் சொற்களைக் கலந்து அம் மயமாக்கவேண்டும் என்பதேஅவர்கள் உள்ளக்கிடக்கை.மேலை மொழிப் பற்ருளர் போலத் தம்மைக் காட்டிக் கொண்டு இவர்களும் கலப்பில்லாமல் மொழி வளராது என்று கூறுகின்றனர். ஆனல் சமஸ்கிருதமொழி கலப்பால் வளர்ந்ததென்று அவர்கள் கருதியதாகத் தெரியவில்லை. ஆகவே அவர்கள் வாதமே அவர்களுக் கெதிரானது. சமஸ்கிருத மொழியின் உயர்வைப் பாதுகாத்து, அதன் ஆதிக்கத்தை வலியுறுத்துவதுதான் அவர்கள் நோக்கம் என்பதை இது காட்டிக்கொடுத்து விடுகிறது,

உண்மையில் சமஸ்கிருதம் கலப்புமட்டுமல்ல, பன்மொழிக்கூட்டுக் கலப்பு, இரண்டின மொழிகளின் கூட்டுக்

கலப்பு என்பது மேலே காட்டப்பட்டது. அதன் மாள்வுக்கு இதுவே காரணம் என்பதும் குறித்துணர்த்தப் பட்டது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், அயல் மொழிக் கலப்புக்காக வாதாடுபவர் செயல்கள் மூலம் அவர்கள் கலக்க விரும்பும் மொழிகள் எவை என்பதை எளிதில் காணலாம். இதில் சமஸ்கிருதம் முதலிடமும், மேலை மொழிகள் இரண்டாமிடமும், வடதிசைச் சிந்து கங்கை மொழிகள் மூன்றுமிடமும் வகிக்கின்றன என்பது தெளிவு.

கலப்பை வற்புறுத்துபவர் இதைத் தமிழில் மட்டுமல்ல; மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளிலும் வற்புறுத்துகின்றனர். வேறுபாடு ஒன்றே ஒன்றுதான் தமிழகத்தில் மூன்று மொழிகளுக்கும் எதிர்ப்பு இருக்கிறது. மற்ற இடங்களில் சமஸ்கிருதத்துக்கு எதிர்ப்புக் கிட்டத்தட்ட இல்லை என்னலாம். ஆனால் எங்கும் அயல் மொழிக் கலப்பு இன்றியமையாதது என்று வலியுறுத்துபவர் அண்டை மொழியை மட்டும் ஏனோ விட்டு விடுகின்றனர்? யாராவது தமிழில் மலையாள, தெலுங்கு, கன்னடச் சொற்களையோ, மலையாளத்தில் தமிழ், கன்னடத்தில் மலையாளம், தெலுங்கில் கன்னடமோ கலக்கத் தொடங்கினால், அப்போது முதல் எதிர்ப்பாளர்கள் சமஸ்கிருத முதலிய அயல் மொழிக் கலப்பாளர்களாகவே இருப்பர். தாய் மொழிப் பண்பைக் காக்கவேண்டுமென்று அச் சமயம் அவர்கள் கூக்குரலிடும் புதுமையைக் கட்டாயம் காணலாம்.

மேலை மொழிகளில்கூட ஆங்கிலத்தையன்றி, பிரஞ்சையோ, ஜெர்மனியோ, ஸ்பெயின் மொழியையோ கலக்க வேண்டுமென்று எவரும் முனையமாட்டார். கலந்தால் ஆதரவு தரமாட்டாகள். குரல் எழுப்பாமலும் இருக்கமாட்டார்கள்.

வடதிசை மொழிகளில் கலைவளம், பண்பு வளமற்ற இந்தியை யன்றி, அவ்வினங்களில் சிறந்த வங்க மொழிக் கலப்புப் பற்றியோ, மராத்தி மொழிக் கலப்புப் பற்றியோ எவரும் கருதியதில்லை. வடதிசையில் வடக்குக்குரிய பஞ்சாபி, நேபாளி பற்றியோ கேட்கவேண்டியதில்லை. கலப் பார்வலர் உள்ளத்தில் கலையார்ந்த கன்னித் தமிழுக்கும் ஆதிக்கமற்ற அவ்வடதிசை மொழிகளுக்கும் ஒப்பான இடம்தான் இருக்க முடியும்!

சீனமொழி, மலாய், சிங்கள மொழி பற்றி யாராவது கவலை கொள்ள முடியுமா?

மொழிக் கலப்புப் பிரச்சினையும் அதன் வலியுறுத்தும் இன ஆதிக்க, அரசியலாதிக்கம் சார்ந்தவையே என்பதைக் காட்ட இவ் விளக்கங்கள் போதியன.

இனி, மொழிச் சார்பிலேயே, சான்றாக எடுத்துக் காட்ட உதவும் மேலை மொழிகள் நிலைபற்றி ஆராய்வோம்.

## 11. மேலை மொழிகளும் கலப்பு வாதமும்

சொற்கலப்பு மூலமே மேலைமொழிகள் வளர்ந்துள்ளன என்பது உண்மை. ஆனால் அவை 'ஏன் அயல் மொழிச் சொற்கள் நாடின? எந்த எந்த வகை மொழிச் சொற்களை, எந்த எந்த அளவில், எந்த எந்தச் சூழலில் மேற்கொண்டன?' என்று காண்போம்.

தெற்கு ஐரோப்பா முழுதும் கி. பி. 5-ம் நூற்றாண்டு வரை உரோமர் ஆட்சியில் இருந்தது. இலத்தீன மொழி ஆட்சி மொழியாக, நாகரிக, கலை, கல்வி மொழியாக அமைந்தது. சமயத்துறை மொழியும் அதுவே. ஆட்சி சரிந்து காட்டுமிராண்டிகளாக விளங்கிய வட ஆரியர்கள் புகுந்து அழிவு செய்து குடியேறியபின்னும், இந்நிலை மாற

வில்லே. ஏனெனில் உரோம நாகரிகமும் இலத்தீன மொழியும் அவர்களை ஆட்கொண்டது. அதன் மூலமே அவர்கள் பழய உலகில் நாகரிக இனமாக வாழ்கின்றனர்.

இன்று ஆங்கிலத்திலும் மற்ற மேலை ஐரோப்பிய மொழிகளிலும் மிகமிகப் பெரும்பான்மைச் சொற்கள் இலத்தீனச் சொற்களே. இலத்தீனச் சொற்களை நீக்கினுல், இன்னும் அவர்கட்குச் சமய வாழ்வு, நாகரிக வாழ்வு, அரசியல் கலை வாழ்வு ஆகியவற்றுக்கு வழியே இருக்காது. ஏனெனில் அவற்றுக்குச் சொற்களே இருக்கமாட்டா.

கி.பி.10-12-ம் நூற்ருண்டுகளில் பிரஞ்சு, நார்மானியர் பிரிட்டனை ஆண்டனர். 14-ம் நூற்ருண்டுவரை பிரஞ்சு மொழியே ஆட்சி மொழியாய் இருந்தது. இக்காலத்தில் ஆங்கிலத்தில் பிரஞ்சுச் சொற்கள் ஏராளமாகக் கலந்தன. இலத்தீனச் சொற்களுக்கு அடுத்தபடி ஆங்கிலத்தில் பிரஞ்சுச் சொற்களே மிகப் பெரும்பான்மை பொது வழக்கிலுள்ள நயநாகரிகச் சொற்கள், உயர்தர வாழ்க்கைக் கலைச் சொற்கள் பெரும்பாலும் இவையே.

ஆங்கிலத்தில் இலத்தீனச் சொற்கள் இல்லாவிட்டால் மொழி தசை இலா உடல்போன்றது ஆய்விடும். பிரஞ்சுச் சொற்கள் இல்லாவிட்டால், அது நாடிநரம்பற்ற கங்காளமாயிருக்கும்.

15, 16-ம் நூற்ருண்டின் மறுமலர்ச்சியியக்கக் காலத்திலும், 17-ம் நூற்ருண்டிலும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பிலக்கியம் புதிதாக வளர்ந்தது. இலத்தீன கிரேக்கச் சொற்கள் மிகப்பேரளவிலும், அன்று இலக்கிய வளத்தில் முன்னணியிலிருந்த இத்தாலி. பிரஞ்சு, ஸ்பெயின் மொழிகள் அடுத்தபடியும் சொற்கள் வழங்கின.

பிரிட்டிஷ் குடியேற்றப் பரப்பும், பேரரசாட்சிப் பரப்பும், வாணிகத் தொடர்புகளும் சிறுபான்மையாக,

உலகின் பற்பல மொழிச் சொற்களை மேற்கொள்ளுவித்துள்ளன.

ஆங்கில மொழியில் அயல் மொழிச் சொற்கள் மிகுதி விரவியதற்குரிய காரணங்களாக, அயலாட்சி, அயல் நாகரிக ஆதிக்கம், உரோம ஆதிக்கத்துடன் இணைந்து வந்த கிறிஸ்தவ சமய ஆதிக்கம், கலை நாகரிக இலக்கியத்துறையில் பிரிட்டனுக்கு நீண்டநாள் இருந்துவந்த பிற்போக்கு நிலை, ஆங்கில மொழியின் சொல்வறுமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஒரு சிறுபான்மைச் சொற்களே பிரிட்டிஷ் ஆதிக்கம் காரணமாக அடிமை மொழிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டவை. மற்றக் கலப்புச் சொற்களைப்போல இவை கலப்புக்குரிய மொழிகளுக்கு உயர்வோ மதிப்போ அளிப்பதில்லை என்பது தெளிவு. சான்றாகத் தமிழிலிருந்து ஆங்கிலம் மேற்கொண்ட சொற்கள் தமிழுக்கு மதிப்புடையவையல்ல, பல அவமதிப்பே தருபவை என்பது காணலாம்.

மிளகுத் தண்ணீர், கறி, கட்டுமரம், நாரங்காய் (ஆரஞ்சு) ஆகியவை மதிப்புத்தராதவை. இத்தகையவற்றில்கூட ஆங்கில அகரவரிசை பலவற்றை மலையாளம், மலாய், இந்தி, அரபு முதலிய வேறு மொழிகளுக்கு உரிமைப்படுத்தி விடுவதுண்டு! தமிழுக்கே போட்டியற்ற உரிமைவாய்ந்த சொற்கள் கூலி (நாளடிமை வேலையாள்) பறையன் (சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட பண்படாக் குடியினன்) ஆகியவையே! இச்சொற்கள் பிறமொழி செல்லுமுன் தமிழிலேயே அழிக்கப்பட்டிருக்கக்கூடாதா என்றுதான் பண்புடைய தமிழ்ப் பற்றுளர் எண்ணக் கூடும்.

ஆங்கில மொழியின் அயற்சொற் கலப்புக்குக் கூறப்படும் காரணங்களில் தமிழுக்குப் பொருந்தும் காரணங்

கள் என்று குறிக்கப்படத்தக்கவைகள் அரசியலாதிக்கம், அயலின ஆதிக்கம், சமயத்துறைப் பெயரால் ஏற்பட்ட அயல் மொழி, அயலின ஆதிக்கம் ஆகியவையே. தன்மானமும் தன்மொழி மதிப்பும் தாய்மொழிப்பற்றும் உடையவர் எவரும் இவற்றை ஒரு சிறிதும் ஏற்கமாட்டார்கள். அத்துடன் வாதம் இங்கும் முற்றிலும் சரியன்று. ஏனென்றால் பிறமொழி ஆதிக்க நாட்களில் ஆங்கில மொழியும் சரி, மேலை மொழிகளும் சரி, மிகப் பிற்பட்ட மொழிகள். சொல் வறுமையுடையவை. சமய நாகரிகச் சொற்களற்றவை. தமிழ் மொழியின் நிலைநேர்மாறானது. உண்மையில் தமிழ் மொழியை இழிவுபடுத்திக்கொண்டே ஊறுசெய்யும் கீழ்திசை வடபுலமரபின் மாயத்திரை நீக்கப்பட்டால், தமிழ் தற்கால மேலை மொழிகளுக்கும், அவற்றின் வளர்ச்சிக்கு உதவிய இலத்தீன,கிரேக்க,பிரஞ்சு மொழிகளுக்கும் கீழ்திசை மொழிகளை வளர்ப்பதாகக் கருதப்படும் சமஸ்கிருதத்துக்கும் ஒருங்கே மேம்பட்ட வளமுடைய மொழி என்பது தெரியவரும்.

மொழி வளர்ச்சிக்கு அயற்சொற் கலப்பு நலம்தருவது, இன்றியமையாதது என்பது உண்மையா யிருந்தால்கூட, தமிழ் மொழியைப்பற்றிய வகையில் இவ்வுண்மை பொருந்தாது. ஏனென்றால் தமிழ் மொழி பிறமொழிகளுக்குச் சொற்கள் வழங்கத்தக்க வளமுடையதே யன்றி பிற மொழிகளிலிருந்து சொற்கள் கடன் பெறத்தக்க நிலை உடையதல்ல. உண்மையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ்ச் சொற்களே பேரளவில் சென்று சமஸ்கிருதத்தையும் மற்ற உலக மொழிகளையும் வளர்த்துள்ளன. இது வருங்காலம் திண்ணமாக விளக்க இருக்கும் ஒரு செய்தி. ஏனெனில் தமிழக அடிமைநிலை, அடக்கப்பட்டுவரும் உரிமைக் குரல் ஆகியவற்றின் விளைவாகவே ஆதிக்க உலகம் இவற்றுக்கு மறைதிரை போட்டு வைத்திருக்கிறது.

## 12. சொல்லின் இனவளம்

'அயல் மொழிச் சொல் விரவுதல் மொழி வளர்ச்சிக்கு நலம் மட்டுமன்று, அது இன்றியமையாதது'—இவ்வாதத்தைச் சீனம், ஜெர்மன், ரஷ்யம் ஆகியவற்றின் அனுபவங்கள் பொய்ப்பிக்கின்றன. இவற்றுள் ஜெர்மன் இயல் நூலாராய்ச்சித் துறையில் மேலையுலகிலேயே முதனிலை பெற்றது. இயல்நூல் துறையில் மட்டுமன்றிக் கலைத் துறையிலும் மேலையுலகின் தலை சிறந்த சிந்தனையாளர்களைத் தந்த மொழியினம் அது. ரஷ்யா மேலையுலகின் பல நூற்றாண்டு முன்னேற்றத்தை ஓரிரு தலைமுறைகளில் கண்டது. சீனம் பழமைசான்ற நாகரிகம், புதுமையில் அதுபோல முன்னேறி வருகிறது.

இந்தி மொழியைத் தூய தாய்மொழி அடிப்படையிலும். தாய்மொழிப்பண்புடனுமே 'இந்துஸ்தானி' என்ற பெயரால் வளர்க்க எண்ணியவர் காந்தியடிகள். அவர்தம் 'சர்வோதய'ப் பத்திரிகையில் தூய தாய்மொழியின் வாய்ப்பு வளத்துக்குச் சான்றாகச் சீன ஜெர்மன் மொழிகளை எடுத்துக் காட்டியுள்ளார். ஜெர்மனியில் இயல் நூலறிவும் இயல்நூல் சிந்தனையும் மற்ற மேலை நாடுகள் தாண்டி முன்னேறியுள்ளதற்குக் காரணமே இத் தாய்மொழிப் பண்புதான் என்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். பகட்டாரவாரமான, பொருள் சுட்டாத, உணர்ச்சி தூண்டாத, கவர்ச்சியற்ற அயல் மொழிச் சொற்களை விட, தாய்மொழிச் சொற்கள் பொது மக்கள் அறிவுள்ளத்திலும் உணர்வுள்ளத்திலும் எளிதில் பதிந்து பரவுகின்றன, உயிர் அறிவு தூண்டுகின்றன என்றும் அவர் வாதிட்டுள்ளார்.

அடிகள் சுட்டிக்காட்டிய உண்மை மொழி நூலார் ஒப்பிய உண்மை மட்டுமல்ல, அவர்கள் வற்புறுத்துகிற

உண்மை ஆகும். தமிழகத்திலும் வெளியிலும் அயல் மொழி படித்த வகுப்பினரின் தன்னலமும் குழுநலமும் இவ்வுண்மைகளைத் தாமே அறியாமலும் பொருட்படுத் தாமலும், தாம் அறிந்தால் பொது மக்கள் அறியாமலும் தடுத்துவைக்கத் தூண்டியுள்ளன.

மொழி என்பது இனத்தின் உயிர் மட்டுமன்று— அதற்கே இனவாழ்வின் எல்லா பண்புகளும் உண்டு.

மொழியின் சொற்கள் ஒவ்வொன்றும் இனத்தின் உயிர் போன்றது. இச்சொற்கள் பல சேர்ந்து சொற் குடும்பமாக, சொற்குடும்பம் பல சேர்ந்து சொற்குழுவாக, சொல்லின் கிளையினமாக, சொல் இனங்களாக விளங்கு வன. சொல்லினங்களின் கோவையான சொற்பேரினமே மொழி.

ஒரு சொல் எம்மொழிக்குரியது என்று அறியா நிலைபற்றி மேலே குறிப்பிட்டுள்ளோம். அது உண்மை யில் சொற்கலப்பு, இனக்கலப்பு ஆகியவற்றினுல் நேர்ந் துள்ள பொது உலகநிலை மட்டுமே. இயல்பாகச் சொற்கள் அதனை வழங்குவோர் தனி வாழ்வு, கூட்டு வாழ்வு, வழி வழி இனமரபு வாழ்வு ஆகியவற்றின் அனுபவச் செறிவுகள். வழங்குவோர் சூழலிலிருந்து அவை வலிந்து அகற்றப்பட்டால், அல்லது வேறு சொல் வலிந்து வருவிக் கப்பட்டால், அது சொல்லினங்கள், சொற் குடும்பங்க ளுடன் சாராமல் தனியாக வாழும். அத்துடன் மற்றச் சொற்களைப்போல அது உயிருடைய சொல்லாய் உலவா மல், உயிரற்ற சொல்லாய்க் கிடந்து மிதந்துருளும்.

பேரினத்தில் பண்புடைய இனம், இனத்தில் பண் புடைய குடி, பண்பாளர்போல, மொழியிலும் பண்புடைய சொல்வளம், பண்புடைய சொற்குடும்பம், பண்புடைய சொல் உண்டு. ஒரு சொல் எந்த அளவு இனவாழ்வில்

பழமையுடையதோ அந்த அளவில் அதற்கு உயிரும் பண்பும் உயிர்த்துடிப்பும் மிகுதி. எந்த அளவு அத்தகைய பிற சொற்களுடன் அது குடும்ப. குழு, கிளையின, இனத் தொடர்புடையதோ, அந்த அளவுக்கு அது மொழியில் செல்வாக்கும் ஆற்றலும் மிக்க சொல் ஆகும். எந்த அளவுக்கு அது இனவாழ்வின் அனுபவங்களுடன் பின்னி, இன வழக்கில் கேட்பவர் உள்ளத்தில் சொற்பொருள் மூலம் அறிவை மட்டுமன்றி, மரபு மூலம் சிந்தனையையும், தொனி மூலம் உணர்வையும், தொடர்பு மூலம் எண்ண அலைகளையும் தூண்டுகிறதோ, அந்த அளவுக்கு அது வளமான சொல் ஆகும்.

ஒரு மொழியில் கலக்கும் அயலினச் சொற்களுக்கு இத்தகைய பண்போ, உயிர்த்துடிப்போ, செல்வாக்கோ, வளமோ கிடையாது, அது மட்டுமன்று. செல்லாக்காசு ஒவ்வொன்றும் செல்லும்காசின் ஓட்டத்தை அடைத்து அழித்துவிடுவதுபோல, அயல்மொழிச் சொல் ஒவ்வொன்றும் தாய்மொழிச் சொற்களை ஓட்டும். அதன் உயிரற்ற சூழலில் தாய்மொழிச் சொற்களின் பண்பும் தாய்மொழிப் பண்பும், இனப்பண்பும் படிப்படியாகக் கெடும். இவற்றுடன் கூட அதன் தீமை நிற்பதில்லை. அது புகுந்த மொழியைக் கெடுப்பதுடன் அமையாது. தம் பிறப்புக்குரிய மூல மொழியின் வாழ்விலும் அச்சொல் வழக்கு உயிரிழப்பதுடன், நாளடைவில் அம்மொழியும் அழிவுறும்.

அயல்மொழிச் சொற்கள் விரவுமிடத்தில் மொழிக்கும் பொது மக்களுக்குமுள்ள தொலை மிகுதியாகும். பொது மக்களிடம் மொழிக்குரிய தொடர்பு குறையும், இதனால் இனம், மொழி ஆகிய இரண்டுமே பாதிக்கப் படும். இனத்தின் உயிர்ப் பண்பு கெடும். மொழியும் உயிர்ப்பிழந்து, இனவாழ்வின் தொடர்பற்று மாள்வுற நேரும்.

மற்றும் இனமாக உருவாகாத தளத்தில் உலகிலேயும், இனத்தளத்தில் நாட்டிலேயும், பொது மக்களிடையே கல்வியும் அறிவும் நாகரிகமும், பண்பாடும் பண்பும் வளர வேண்டுமானால் மொழிக்கலப்பு, அயல் மொழிச் சொற் கலப்பு ஆகியவை மட்டுமல்ல, அயல்மொழிக் கல்விகூட விலக்கப்பட வேண்டியது ஆகும்.

தாய்மொழியின் கலப்பற்ற தூயசொற்களே உண்மையில் தாய்மொழிச் சொற்கள், தாய் இனச்சொற்கள். அச்சொற்களே மொழியை வளர்க்கும், இனத்தை வளப்படுத்தும். அச்சொற்களே உயிர் அறிவு தூண்டும். அயல் மொழிக் கல்வி அயல்மொழி ஆதிக்கம் ஒன்றுக்கே பயன்படுவதென்பதையும், தாய்மொழி இனவாழ்வுக்குப் பயன்படும் சிந்தனையாளர்களையோ, பண்பாளர்களையோ அது ஒருபோதும் தோற்றுவிக்க முடியாதென்பதையும் காந்தியடிகள் மீட்டும் மீட்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

## 13. இரு நிகழ்ச்சிகள்

இந்திய மாநிலவாழ்வின் இரு நிகழ்ச்சிகள் கீழ்திசையின் மொழி மாயத்திரையின் இருட் செறிவையும் கண் திறந்த குருட்டு மடமையையும் விளக்குவன ஆகும்.

தாய்மொழிப் பத்திரிகைகள் மாநிலத்தில் புதுவளம் பெறத் தொடங்கிய காலத்தில், இந்தியத் தாய்மொழிப் பத்திரிகை யாசிரியர்கள் தங்கள் பொதுப்பிரச்சினைகளை ஆய்ந்து வாதிட ஒரு மாநாடு கூட்டியிருந்தனர். தற்கால நாகரிக உலகக் கருத்துக்களை ஏந்திய மேலைமொழிச் செய்திகளை இந்தியத் தாய்மொழிகளில் பெயர்த்தெழுது வதிலுள்ள இடர்ப்பாடுகள் பற்றிப் பலர் பேசினர். தாய் மொழிகளில் அன்று முன்னணியில் நின்ற வங்கப் பத்திரிகையாளர் முதல் அங்கிலயில் பிற்பட்ட மொழிகளுக்குரிய பத்திரிகையாளர் வரை கிட்டத்தட்ட

வருமே இந்திய மொழிகளின் சொல்வளத்திலுள்ள பிற்போக்கு நிலைபற்றிக் குறைபட்டுக் கொண்டனர். சமஸ்கிருத மொழியின் சொல்வளம்கூடப் புதுக்கருத்துக் களுக்கு ஒரு சிறிதும் போதாது என்றும் பலர் மனமுளைந்து கூறினர்.

இருளில் ஒளிபோல் ஒருவர் முகமலர்ச்சியுடன் எழுந்தார்:

'எம் தாய்மொழியில் நீங்கள் சொல்லும் இடர்ப் பாடுகள் எதுவும் கிடையாது. எத்தகைய புதுக் கருத்துக் களையும் எளிதாக வெளியிடும் ஆற்றலும் சொல்வளமும் எங்கள் மொழிக்கு உண்டு,' என்றார் அவர்.

எல்லாரும் வியப்புடன் அவரை நோக்கினர். "அத் தகைய வியத்தக்க வளமுடைய மொழி ஒன்று 'இந்தியா விலே'யே இருக்கிறதா? அது எந்த மொழி?" என்று கேட்க விதிர்விதிர்த்தனர்.

அந்தோ! அவர் தாய்மொழி வங்கமல்ல, தமிழல்ல; மராத்தியல்ல, தெலுங்கல்ல—அது பஞ்சாபி மொழி! இந்திய மொழிகளில் மிகவும் பிற்பட்ட இந்தியாலும் பிற்பட்டதென்று இன்று வரை கருதப்படும் மொழி அது.

கேட்டவர் நம்ப முடியவில்லை. 'என்ன, பஞ்சைப் பஞ்சாபிக்கா இத்தனை வளம்! வங்கம் பஞ்சப்படுமிடத் தில் பஞ்சாபிக்கு வளமா? தமிழ் குமுறும் இடத்தில், மராத்தி மறுகுமிடத்தில், சமஸ்கிருதமே மயங்குமிடத்திலா பஞ்சாபிக்கு இந்த வீறு?' என்று ஆத்திரத்துடன் வினவினர்.

அன்பர் பதில் ஒரு மொழி நூற் படிப்பினை உருவில் வந்தது.

'எங்கள் மொழியில் இலக்கியம் இல்லை. அதனால் எதற்கும் சமஸ்கிருதச் சொல் நாடும் பழக்கமும் இல்லை.

மொழியின் கருத்து வளம், சிந்தனை வளம் இதனால் உயிர் வளமாக நிலவுகிறது. அவ்வளவுதான்!' என்றார் அவர்.

இரண்டாவது நிகழ்ச்சி காந்தியடிகள் வாழ்க்கை சார்ந்தது.

'இந்தியாவின் அயல் மொழிக் கல்வி மாநில வாழ்வுடன் ஒட்டாத ஓர் இடையின வகுப்பைத்தான் உண்டு பண்ணியுள்ளது. இனவாழ்வுக்குப் பயன்படும் ஒரு செயல் வீரனைக் கூடத் தந்ததில்லை. ஒரு சிந்தனையாளன் சிந்தனையைக் கூடத் தூண்டியதில்லை. மேலை நாகரிகத்துக்குச் சிறப்பளிப்பதாகக் கூறப்படும் இயல் நூல் துறையில் ஒரு புத்தாராய் வறிஞரைக்கூட அளித்த தில்லை!' என்று அவர் அயல் மொழிக் கல்வி முறையைச் சாடினார்.

'ஆண்டு தோறும் எத்தனை இயல் நூல் தேர்ச்சியாளர் வெளி வருகின்றனர். அவர்களில் எத்தனை பேர் ஆசிரியர், பேராசிரியர்களாக, வல்லுநர்களாக விளங்குகிறார்கள். இவர்களெல்லாம் அறிஞர், சிந்தனையாளர், ஆராய்ச்சியாளர் அல்லரா?' என்று ஒரு பேராசிரியர் வினவினார்.

'அவர்கள் புத்தாராய்வாளர்கள் அல்லவே!' என்றனர் அடிகள்.

'ஜே. ஸி. போஸ், ஸி. வி. இராமன் போன்றார்...?'

'பலகோடி மக்கள், பல மொழி மாநிலங்களின் ஒரு நூற்றாண்டுக் கல்வியின் பயன் இவ்விருவர் என்பதில் என்னால் பெருமை கொள்ள முடியாது. மற்றும் அவர்கள் ஆராய்ச்சிகள் இந்தியர் செய்த மேலையுலக ஆராய்ச்சி தான். அது கீழையுலக மண்ணுடன் இன்னும் தொடர்பு கொள்ளவில்லை.'

காந்தியடிகள் விளக்கம் கூடப் பல உள்ளங்களில் ஏறியிருக்க முடியாது. ஏனெனில் அயல் மொழி ஆதிக்கம் என்பது காந்தியடிகள் கருதியது போல் ஆங்கில ஆதிக்கம்

மட்டுமன்று. அதனினும் நீடித்த, தேசிய இன வாழ்வு களின் உயிரை எல்லாத் துறையிலும் விடாப் பிடியாய் அழுத்திவரும் சமஸ்கிருத மொழி ஆதிக்கத்துக்குரிய மீளா அடிமை பரப்பு இந்தியா. அதன் செறிந்த ஆயிர இரண் டாயிரக் கணக்கான ஆண்டுக்கால இருளை ஒரு காந்தியடி களால் எவ்வாறு போக்க முடியும்?

காந்தியடிகளோ ஆங்கிலத்தைத்தான் அயல் மொழி யாகக் கருதியவர். சமஸ்கிருதத்தையோ, இந்தியைவிட, தம் தாய் மொழியான குஜராத்தியைவிடத் தம் இனத் துக்குரிய மொழியாகக் கருதியவர், கருதிய சூழலில் வாழ்ந் தவர் அவர்.

## 14. தனித்தமிழ் அடிப்படை மொழி இயக்கம்

காந்தியடிகள் கண்ட தாய்மொழிப் பண்பைத் தமி ழகத்திலேயே இன்னும் திறம்படக் கண்டவர் ஆசிரியர் மறைமலையடிகள். அவர் வகுத்த தனித்தமிழ் இயக்கம் தமிழக மறுமலர்ச்சியின் உயிராய் இயங்குகிறது. தமி ழினத்தின் இன எழுச்சியையும் இனத் தேசியத்தையும் அது தட்டி எழுப்பியுள்ளது. தமிழகத்துக்கும், உலகுக்கும் அது அளித்துள்ள வளம் பெரிது. ஆனால் அளிக்க விருக் கும் வளம் இன்னும் மாபெரிது. அது தமிழ் மொழி யின் ஆற்றலையும் வளத்தையும் காட்டியுள்ளது, இரண் டையும் தட்டி எழுப்பியுள்ளது. தாய் மொழியின் தாயினச் சொல்லாற்றலிலும் அதன் வாய்ப்பு வளங்களி லும் கருத்துச் செலுத்திய வகையில் அது உலகுக்கே ஒரு வழிகாட்டியாகும். ஏனெனில் இன்று உலகெங்கும் பரவியுள்ள 'அடிப்படை மொழி இயக்கம் (Basic Movement) அதன் வழிமரபே யாகும்.

அடிப்படை மொழியியக்கத்தின் குறிக்கோள் குறுகி யது. ஏனெனில் அது மொழியை அயல் மொழியாளர்

எளிதில் கற்பதற்காகவே அமைந்தது. இது உண்மையில் மொழி ஆதிக்கவாதிகளின் குறிக்கோளே யாகும். ஆனால் கல்வி பரப்புவதிலும் அது இப்போது பயன் படுத்தப் பட்டு வருகிறது. ஆனால் மொழி வளம், மொழி வளர்ச்சி, பொதுப் பண்புவளம் ஆகிய தனித்தமிழ்க் குறிக்கோள்கள் அடிப்படை மொழி யியக்கத்தில் இன்னும் அளாவவில்லை. மேலையுலகினர் இக் கருத்துக்களை உணர்ந்து ஆதரிக்காமல் இல்லை. ஆனால் இன்றைய மேலை மொழிகளும், உலக மொழிகள் பலவும் எளிதில் இன உயிர் மொழிகளாக முடியாதபடி கலப்பில் நீடித்துத் தோய்ந்து விட்டன.

மேலையுலக மக்கள் சென்ற இரண்டு நூற்றாண்டு களில் எங்கும் பிறமொழிக் கலப்புப்பற்றிப் பகட்டுப் பேச்சுப் பேசுகின்றனரேயன்றி அதை வளர்க்க வில்லை. உண்மையில் சந்தடியின்றி அதை மெல்ல நிறுத்தியே வருகின்றனர். வந்த சொற்களை யாரும் நீக்கவில்லை. ஆனால் புதுக்கருத்துக்கள் இனச்சொற்களாலேயே நிரப் பப்படுகின்றன. ஆங்கிலம் சிறப்பாக அமெரிக்கர் கையில் இம் முன்னேற்றத்தில் வாய்பேசாமலே நெடுந்தொலை சென்றுள்ளது.

மேலை மொழிச்சான்று காட்டுபவர் இம்மேலை மொழிப் போக்கின் படிப்பினையைக் கூர்ந்து கவனித்தல் நலம்.

கலப்பு இயக்கம் 'மணி மிடை பவளம்' (மணிப் பிரவாளம்) என்ற அழகிய பெயருடன் 13-ம் நூற்றாண் டில் இந்திய மாநிலத் தாய்மொழிகள் பெரும்பாலனவற்றில் தொடங்கி, இன்றளவு பலமொழிகளின் உயிர்ப்பாற்றலைக் கெடுத்துப் பேரழிவு செய்து வருகின்றது. தமிழகத்தில் அது மிகுந்த வெற்றிகாணாதது தமிழின் நற்பேறு என்றே கூறவேண்டும். ஆசிரியர் மறைமலையடிகளாரின் தனித் தமிழியக்கம் இந்நலம் பெருக்கி, தமிழுக்கும் தமிழகத்துக்

கும், அவற்றின் மூலம் உலகுக்கும் ஒரு பொங்கல் வளத் தலையூற்றாய், மூலக் கருவூலமாய் உள்ளது.

தமிழர் இதனை நன்கு பயன்படுத்துவதுடன், தென்னகத்தில் இப்பண்பு பரவப் பாடுபட வேண்டும். ஏனெனில் தமிழகம் தென்னகத்தின் இன்றியமையா உயிரானால், அந்த உயிர் தென்னகமாகிய உடல் வழியன்றி இயங்க முடியாதது ஆகும்.

## 15. உலகின் மும்மண்டலங்கள்

மனித இன வாழ்வில் மொழிக்குரிய இடம் பற்றிய சரியான உணர்வு வுலகில் இன்னும் ஏற்படவில்லை. ஏனெனில் மொழி பற்றி ஆராயும் துறையாகிய மொழி நூல் மேலை யுலகில் 19-ம் நூற்றாண்டிலேயே புதிதாகத் தோன்றியுள்ளது. தொடங்கிய பின்னும் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலம் ஆரிய மொழியாராய்ச்சியிலும், சமஸ்கிருதச் சார்பான மொழிக் கோட்பாடுகளிலுமே கழிந்தது. இதனால் மொழி பற்றியும் மனித நாகரிகம் பற்றியும் இடையிருட் காலத்தில் வளர்ந்த தப்பெண்ணங்கள், ஆராயா நம்பிக்கைகள் இன்னும் நீடித்து வருகின்றன. அவற்றின் அலைகள் தமிழகத்திலும் பரவி வருகின்றன.

தமிழகத்திலேயே இவற்றை அகற்றும் பொறுப்புடன், உலகில் இவ் வகையில் விழிப்புணர்வைத் தூண்டும் கடப்பாடும் தமிழக மறுமலர்ச்சியாளர் மீதே சுமந்துள்ளது.

மனித வாழ்வுடன் வாழ்வது, மனித வாழ்வின் பதிவேடே மொழி. மனித வாழ்வுக்கு மட்டுமன்றி, வாழ்வின் அனுபவங்களுக்கும், அனுபவங்களின் விளைவான அறிவுக்கும், உணர்ச்சிகளுக்கும், கருத்துக்களுக்கும், சிந்தனைகளுக்கும் அதுவே ஒரு தொடர்ந்த இனவாழ்வு அளிக்கிறது.

தவிர, இன எல்லை கடந்து, இனங்களின் போக்கு வரவுகள், இணைபிரிவுகள், இடச்சூழல் மாறுபாடுகள், தொடர்புகள் ஆகியவற்றை உயிரோவியமாகத் தீட்டிக் காட்டும் பேரின வரலாருகவும் அது இலங்குகிறது.

இயற்கையிலும் இயல்பான மனித வாழ்விலும் நாம் ஒரே சரிநேர் மட்டமான உயிரற்ற சரிசமத்துவத்தையும் காணமுடியாது. ஏறுமாருன உயர்வு தாழ்வுகளையும் காணமுடியாது. ஒரே உடலின் உறுப்புக்கு உறுப்புக்கு இடையேயுள்ள படிப்படியான ஒத்திசைவான ஏற்றத் தாழ்வே காணமுடியும். ஏனெனில் இன வேறுபாட்டால் ஏற்படக்கூடும் உயர்வு தாழ்வுகள் கூட நாகரிகம், பண்பாடு ஆகியவை பரவுவதாலும், துணைப் பண்பாலும் மட்டுப் படுத்தப்பட்டு மெல்ல வளர்ச்சியடைகின்றன. இன்றைய உலகப் பரப்பில்கூட இதைப் பேரளவில்காணலாம். ஆனுல் இதற்கு விலக்காக, முனைப்பான விலக்காகச் சில எல்லைகள் உண்டு.

மனித இன வாழ்வில் மொழியின் இடம், மனித இன மொழி வாழ்வில் தமிழன் இடம் ஆகியவற்றை உணர இவற்றில் நாம் கருத்துச் செலுத்துதல் வேண்டும்.

இயற்கையான ஏரியில் நீர் நிரம்பிய நேரத்தில் எல்லாம் ஒரே பரப்பாகத் தெரியும். ஆழ வேறுபாடு மேலீடான பார்வைக்குத் தெரியாது. ஆனுலும் ஆழ வேறுபாடுகள் காண வழிகள் உண்டு. படிப்படியான வரட்சியின் போதும் இது தெளிவாகிவிடும். இம் முறைகளில் ஆழ வேறுபாடுகளைக் கவனித்தால் பெரும்பாலும் செயற்கை ஏரியில் காணப்படுவது போன்ற திடீர்ப் பள்ளங்களோ, கட்டிவிட்ட குளங்களில் காணப்படுவது போன்ற செங்குத்தான ஆழமோ காணப்படாது. ஏரித்தடம் பரப்பில் சிறிது சிறிதாகச் சாய்ந்து மையநோக்கித் தாழ்ந்த சாய்

வான ஆழத் தடங்களும், கிட்டத் தட்டச் சமதளமான பகுதிகளுமே மிகுதியாகக் காணப்படும்.

உலகப் பண்பாடு, மொழிவாழ்வின் ஆழம், அதாவது காலப் பழமையும், வளமும், பெருமையும் பெரிதும் இதே நிலையுடையதே. எடுத்துக் காட்டாக, டேனிய, நார் வீஜிய, ஸ்வீடிஷ், ரஷ்ய மொழி உட்பட வட ஐரோப்பிய ஆசியப்பரப்பு மொழிகள், தற்கால சிந்துவெளி மொழி கள் 19-ம் நூற்றாண்டிலிருந்தும்; இவற்றை யடுத்த ஜெர் மன், இந்தி மொழிகள் 18-ம் நூற்றாண்டிலிருந்தும், ஆங் கிலம், வங்கம் முதலியன 16-ம் நூற்றாண்டிலிருந்தும்; பிரஞ்சு, தென் ஐரோப்பியத் தாய் மொழிகள், தமிழ் கன் டம் நீங்கலான தென்னகத் தாய் மொழிகள் 12-ம் நூற் றாண்டிலிருந்தும், கன்னடம் 9-ம் நூற்றாண்டிலிருந்தும். தற்கால இஸ்லாமிய மொழிகள், சமஸ்கிருதம் ஆகியவை 5-ம் நூற்றாண்டிலிருந்தும்; கிரேக்க மொழி கி. மு. 7-ம் நூற்றாண்டிலிருந்தும் இதற்குமுற்பட கி. மு. 3000-லிருந்து எகிப்து உள்ளடக்கிய நடுநிலக் கடலக மொழிகள், சுமே ரியர் தொல்பழங்காலச் சிந்துவெளி மொழிகள், தமிழ், சீனம் ஆகியவையும் இலக்கியவளம் உடையவையாய் உள்ளன.

19, 12-ம் நூற்றாண்டுப் பரப்பே உலகின் மிகப் பெரும் பரப்பு என்பதை இது காட்டும். உலகில் கிழக்கும் தெற்கும் பரவிய இச் சமதளங்கள் இயல்பாக உலகளாவ நிலவிய ஒரு சமதள வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுவன வாகும். மண்ணூலாரின் நில அகப்பாறை ஆராய்ச்சி களில் பெரிய சமதள அடுக்குகளினிடையே ஆற்றின்கரை முறிப்பு, மலையின்நிலமடிப்பு, நிலநெளிவு ஆகியவற்றால் திசைமாறித் தளமாறிக் கிடப்பதுபோல, சமதள வளர்ச்சி யின் பரந்த சின்னங்கள் இங்கேயும் இடை முறிவு, இடை

மடக்கு, இடை நெளிவுகளாலே சிறிதுவேறுபட்டுள்ளது என்பது தெளிவு

இச் சமதளம், மடக்கு ஆகியவற்றில் தற்கால மேலை ஆராய்ச்சியாளர் கூட வரலாறு, மொழியாராய்ச்சி, இன ஆராய்ச்சி ஆகிய எத்துறையிலும் வேறுபாடுகண்டும் காணுதவராகிக் கருத்துச் செலுத்தாது சென்று வருகின்றனர். சமத்துவமும் சரி, வேறுபாடும் சரி—இரண்டும் இயல்பானவை என்று அவர்கள் விட்டுவிடுகின்றனர்.

இச் சமதள, மடக்குப் பகுதிகளை நாம் இயல்பாக மூன்று மண்டலங்களாகப் பிரிக்கலாம்.

மூன்று மண்டலங்களில் முதலதே உலகின் உயிர்மண்டலம். ஐரோப்பிய—ஆசியத் தென்கரை, ஆபிரிக்க வடகரை, அமெரிக்க நடுப்பகுதி அளாவி, ஐரோப்பாவின்மேல் கரை, ஆசியாவின் கீழ்கரை ஆகியவற்றை ஓரளவு உட்கொண்ட பகுதி இது. பனுமா, ஜிப்ரால்டர், மால்ட்டா, சூயஸ், ஏடன், குமரி—யாழ்ப்பாணம், சிங்கப்பூர் ஆகியவை இவ்வுயிர் மண்டலத்தின் உயிர்க்கண்ணிகள். உலகின் உயிர் நாகரிகங்கள்,பழம் புகழ் நாகரிகங்கள் வாழ்ந்த, வாழ்ந்து வருகிற பகுதியும், மறுமலர்ச்சிகளும் புது மலர்ச்சிகளும் தொடங்கும் பகுதியும் இதுவே. இம் மண்டலத்திலேயே எகிப்து உள்ளடங்கிய நடு நிலக் கடலக நாகரிகங்கள், அசிரிய பாபிலோனிய, சுமேரிய சிந்துவெளி நாகரிகங்கள், திராவிடத்தென்கிழக்காசிய நாகரிகங்கள், சீன சப்பான் நாகரிகங்கள் ஆகியவை. கி. பி. 5-ம் நூற்றுண்டு வரை நாகரிக உலகமாய் நிலவிய பகுதி இதுவே. இவற்றுக்கு மட்டுமே பிற்பட்ட பண்டை உரோம கிரேக்க நாகரிகங்களும், வட இந்திய ஆரிய நாகரிகமும், இடைக்கால இஸ்லாமிய நாகரிகமும் தற்கால மேலை ஐரோப்பிய நாகரிகமும்கூட இம் மண்டலத்தில் இடம் பெறுபவையே.

திராவிட இனத்தை உள்ளடக்கி, அதனுடன் ஒப்புமையும் தொடர்பும் மிக்க பேரினங்கள் வாழ்ந்த இப்பகுதியை நாம் திராவிடப் பெரும் பேரினப் பகுதி என்னலாம். மனித இனப் பண்பின் சேமதளமாக இன்றும் விளங்கும் பகுதி இதுவே.

இவ்வுயிர் மண்டலத்துக்குத் தெற்கிலும் வடக்கிலும் உள்ள பரப்புக்கள் பொதுவாக இவ்வுயிர் மண்டலத்தின் ஆழத்திலிருந்து திடுமெனக் குறைந்து கிட்டத் தட்டச் சமதளமாகக் கிடக்கும் பகுதிகள் ஆகும். இவற்றை நாம் மனித இனச் சுற்றுவரை மண்டலம் என்னலாம். ஆனால் தெற்கே இச் சுற்றுவரை ஒரே நிலப் பரப்பாக இல்லாமல் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்காக் கண்டங்களாகப் பிரிந்து, ஏறத்தாழ தனி வாழ்வே வாழ்ந்து வருகின்றது. வடக்கிலும் வடகோடி இத்தகையதே. ஆனால் வடபகுதியின் தன் கூருகிய நடு ஆசிய—ஐரோப்பியப் பரப்புத் தனி இயல்புகளை உடையது. இயற்கை மண்டலங்களாகிய இரண்டினிடையே எழுந்த மூன்றுவது மண்டலம் இதுவாதலின், இதில் நாம் கருத்துச் செலுத்துதல் இன்றியமையாதது.

வரலாற்றாசிரியர், இன ஆராய்ச்சியாளர், மொழியாராய்ச்சியாளர் காட்சிகளைக் குழப்பிய மண்டலம் இந்த இடை மண்டலமே. இதில் கருத்துச் செலுத்திய ஆராய்ச்சியாளர் மிகச் சிலர். அவ்வாராய்ச்சிகளும் எக்காரணத்தாலோ மரபற்றுப் போய்விட்டன.

உலகின் வடகோடி துருவப்பகுதி இன்று வற்றல் குளிர் மண்டலமான பனிப்பாழ் வெளி. உயிர் வாழ்வுக்கு இப்பகுதி இடம் தருவதில்லை. ஆனால் பண்படா மொழிகள் என்று கூறப்படும் எழுத்திலக்கணமற்ற மொழிகளில் தலைசிறந்தவை, நாகரிக மொழிகளனைத்தையும் விடக்

கருத்து நுட்பமும் செறிவும் உடையவை இப் பகுதி சார்ந்த லாப்லாந்திலும், கானடாவிலும் இன்னும் நிலவு வதாக அறிகிறோம். ஆங்கில முதலிய தற்கால மொழி களில் பத்துப் பக்கங்களில் எழுதி விளக்கும் அல்லது பத் துக் கண நேரம் பேசி விளக்கும் அதே செய்தியை இம் மொழிகளில் ஒருபக்கத்தில் எழுதியோ, ஒரு கணத்தில் பேசியோ ஆங்கில மொழியை விடத் தெளிவாக, ஆற்றல் பட, சுருக்கமாக விளக்கிவிட முடியும் என்று அமெரிக்கப் பழங்குடி மொழிநூல் வல்லார் வியப்பார்வத்துடன் குறிக்கின்றனர்,

இந்த ஆற்றல் வற்றற் பாலை மக்களுக்கு எவ்வாறு வந்தது?

துருவப் பகுதி இன்றிருப்பது போல என்றும் இருந்த தில்லை. இன்று மேலை ஐரோப்பாவிலுள்ள மட்டான தட்ப வெப்பநிலை ஆயிரக்கணக்கான ஆண்டின்முன் அங்கு நிலவியிருந்தது. உயிர் மண்டல மக்கள் தம் நடுவரையில் மட்டுமன்றி, கடற்கரை வழியாகச் சுற்றி அன்று உலகில் நடமாடினர். இங்ஙனம் தொலை வடக்கிலும் உயிர்நாகரிக ஒளி பரவியிருந்தது. உயிர் மண்டல நாகரிகத்திலும் அது பலவகையில் பிற்பட்டிருந்தாலும், அது தனிவளர்ச்சி யடைந்தது.

ஆரிய நாகரிகத்தின் மூலதளப்பகுதி இடைமண்டலம் அல்ல, வடதுருவமே என்று வரலாற்றுப் பேரறிஞரும் காந்தியடிகளுக்கு முற்பட்ட மாநில அரசியற் பெருந் தலை வருமான பாலகங்காதர திலகர் விளக்கியுள்ளார். ஆரியப் பழமை மரபுகளில், இருக்கு முதலிய வேதங்களில் கூட இத்துருவகால வாழ்வின் தடங்களைக் காணலாம்.

வடதுருவத்தின் தட்ப வெப்ப நிலை திடுமென மாறத் தொடங்கிற்று. ஒரு மையத்திலிருந்து பனிப்படலம்

வடதிசை மக்களைப் படிப்படியாகத் தெற்கே துரத்திற்று. நடு உள்நாட்டு வெளியில், ஐரோப்பிய ஆசிய வடதிசைப் பரப்பில் ஆயிரக் கணக்கான ஆண்டுக்காலம் தங்கி அவர்கள் பெருகினர். பனிவரை தெற்கே சரியச் சரிய, அவர்கள் தென்திசை நாகரிகங்கள் மீது சாய்ந்தனர். கி. மு. 2000-லிருந்து இது வளமான தென்திசை உயிர் மண்டல வாழ்வைச் சீரழிக்கத் தொடங்கிற்று.

துருவத்தில் பிறந்தாலும், உயிர் மண்டலத் தொடர்பற்று, நடு ஆசிய—ஐரோப்பியப் பரப்பில் நீடித்துவாழ்ந்து பெருகிய ஆரிய இன வாழ்வுப் பகுதியே இடை மண்டலப் பகுதியாகும்.

ஒரே ஆரிய இனம் சார்ந்த இந்திய ஆரியர்; பாரசீக ஆரியர், தென் ஐரோப்பியர், மேலை ஐரோப்பியர் ஆகியவர்களிடையே வேறுபாடுகளை எவரும் கவனிக்கவில்லை, விளக்க முன்வரவும் இல்லை. தென் ஐரோப்பியர் ஆயிரக் கணக்கான ஆண்டு முற்பட்டு நாகரிகமடைந்து, முற்பட வீழ்ந்தனர். மறுமலர்ச்சியிலும் தென் ஐரோப்பா முற்பட்டு வளர்ச்சியுற்று முற்பட்டுத் தளர்ச்சியுற்றது. மேற்கும் வடமேற்கும் படிப்படியாகப் பிற்பட்டுத் தோன்றிச் சிறிது காலம் நீடித்துத் தளர்வதும் காண்கிறோம். ஆனால் கீழ்திசையில் அதே ஆரியம் பாரசிகத்தில் விழுந்து விழுந்து எழுந்து இன்றும் வாழ்கிறது. அது பல தலைமுறை நாகரிகமும் மொழியும் கண்டுள்ளது—தொடர்ச்சி மட்டும்தான் கிடையாது. இந்திய ஆரியமோ நாகரிகத் துறையில் தளர்ந்து தளர்ந்து நீடிக்கிறது. ஆனால் மொழித் துறையில் பாரசிகர் நிலையையே அடைந்துள்ளது. எம்மொழியாற்றலும் நானூறு ஆண்டு கடந்து நீடிக்கவில்லை. தென்னகத்திலோ தமிழ் நீங்கலான தாய் மொழிகள் தமிழக மணுகுந்தொறும் முன்பிறந்து நீடித்து வாழ்கின்றன.

உலக நாகரிகம், பண்பாடு, பண்பு, மொழி ஆகியவற்றின் சேமதளம் உயிர் மண்டலம் என்பதையும், அதன் உயிர் மையம் தமிழகம் என்பதையும் இவ்வுலக விளக்கம் காட்டும்.

## 16. தமிழின் பன்முக, பன்மடிச் சிறப்பு

பேரின வாழ்வு, மனித இனமொழி வாழ்வுடன் அதற்குள்ள தொடர்பு, தமிழ் மொழியுடன் அவற்றுக்குள்ள தொடர்பு ஆகியவை பற்றிய அகல் உலக அறியாமை இன்னும் உலக மக்கள் நடைமுறை வாழ்வைப் பாதிக்காமலில்லை என்பது உறுதி. ஏனெனில் தமிழகத்திலும் தமிழகம் சூழ்ந்த நிலங்களிலும் அது பல சிக்கல்களையும் குழப்பங்களையும் உண்டுபண்ணத் தொடங்கி விட்டது. தமிழர் தங்களையே முற்றிலும் அறிந்துகொள்ளாத வகையில் தமிழக மறுமலர்ச்சி அவர்களை இயக்கத் தொடங்கியுள்ளது. தம் உணர்ச்சியைத் தாமே உணராத பல தமிழர்கள் அதைப் பிறருக்கு எடுத்து உரைக்க முடியாமல், தம்மால் அடக்கிவிட அல்லது ஒதுக்கிவிடவும் வகை காணாமல் உள்ளனர், அதே சமயம் அவ்வப்போது தமிழர் உணர்ச்சியின் எதிரலைகள் அடிக்கடி தென்னகத்தின் பிறபகுதிகளிலும் வடதிசையிலும் கூட அலை எதிர் அலையாக எழுகின்றன.

தமிழரின் தமிழ்ப் பற்றில், உணர்ச்சிப் பின்னணியாக விளங்கும் இனச் சூழல்களைக் காணாமல் கீழ்திசை வாழ்வின் எந்தப் பெருஞ்சிக்கல்களிலும் இன்று தீர்வு காண்பது அரிது. ஏனெனில் அது எல்லாச் சிக்கல்களிலும் புகுந்து சிக்கியுள்ளது.

தமிழ் ஒரு தனி மொழி மட்டுமல்ல, தனி மொழிகளினுளெல்லாம் புகுந்து பரவிய இனமொழி. மற்ற

இனமொழிகளிலும் போய்ப் புகுந்து பரவி, அது இன உயிர்மொழியாய், வாழ்வு மாள்வுகளை ஊடுருவி அழியா வாழ்மொழியாய், உலக அடிப்படை மொழியாய் உள்ளது. தேசிய மொழிகளின் உள்ளார்ந்த தேசியமாய், உயர் தனிச் செம்மொழிகளின் உள்ளார்ந்த உயர்தனிச் செம்மையாய் இயங்குவது அது. அதன் வாழ்வில் உலகு வாழ்ந்து, அதன் தாழ்வில் உலகம் தாழ்கிறது. தன் மறுமலர்ச்சி யிலும் புது மலர்ச்சியிலும் உலக மொழிகளும் உலகும் மறுமலர்ச்சியும் புது மலர்ச்சியும் உறும் தன்மையுடையது அது.

தமிழரின் தமிழ் உணர்ச்சி வெறும் தாய்மொழிப் பற்று என்று கருதுபவர்—தமிழர்கூட—அவ் உணர்ச்சியை உணராமல் அதில் அரசியல், இனப்பூசல் விதைகளைக் காண்பது இதனாலேயே. தமிழ் என்ற மொழியின் பெயர் உலகின் வேறு எம்மொழியும் புகாத அளவுக்கு அரசியல் தேசிய, இனக்கடாக்களைத் தாங்கி ஐயப்பாடுகளையும் தோற்றுவிப்பதன் காரணம் இதுவே.

தமிழின் இத்தகு பன்முக, பன்மடி, பல்தளத் தனித் திறங்களை நாம் வகுத்துக் காண்டல் இன்றியமையாதது. ஏனெனில் இவற்றை ஆய்ந்து காணாதவர் உள்ளத்திலும் தமிழினச் சார்பான பின்னணி உணர்ச்சிகளாக இத் திறங்கள் செயற்படுகின்றன.

## 17. உயிர்ப் பண்பார்ந்த உயர்தனிச் செம்மொழி

மக்களால் பேசப்படுவதுதான் மொழி. மக்கள் பேச்சு அதன் உயிர். மக்கள் நாவிலன்றி வேறெங்கும் அது உயிருடன் நடமாட முடியாது. ஆயினும் செயற்கை யாக உருவாக்கப்பட்ட 'மொழி'களும், பேச்சு வழக்கிறந்த 'முன்னாள்' மொழிகளும் உண்டு. இவற்றுள் சமஸ்கிருதம்,

கிரேக்கம், இலத்தீனம் போன்ற சில உலகப் புகழ்வாய்ந்த இலக்கியம் வளம் உடையவை. ஆனால் இவை எத்தனை சிறப்புடையவையாயினும், அச்சிறப்பு முழுவதும் அழகுச் சிலைகளுக்குரிய சிறப்பே. 'தாய்மொழி', 'உயிர்மொழி' என்ற பெயர்களுக்கு அவை உரிமையற்றவை. இலக்கியச் சிறப்பு இருந்தாலும், இல்லாவிட்டாலும், பேச்சு வழக்கில் இன்றும் நிலவும் மொழிகளுக்கே இவ்வுரிமை உண்டு.

தமிழ் இலக்கியச் சிறப்புடைய மொழி, அதே சமயம் உலகில் இன்றும் பேச்சு வழக்கில் நிலவும் நூற்றுக்கணக்கான மொழிகளிலும் அது சீரிய இடம் பெறுகிறது. தாய்மொழிகளில் ஒரு தாய்மொழியாக, உயிர்மொழிகளில் ஓர் உயிர்மொழியாக அது நிலவுகிறது.

உலகின் மாண்ட மொழிகள் பல. இன்று அவை மாண்ட மொழிகள் ஆனாலும், அவை யாவுமே ஒரோ காலத்தில் தாய் மொழிகளாக, உயிர் மொழிகளாக உலவியவையே. மாண்ட மொழிகளுக்கு உயிர் மொழிகளுடன் தொடர்பு இருப்பதன் காரணம் இதுவே. 'தாய் மொழி' கள் அல்லது 'உயிர் மொழு'களுக்கு உரிய காலப் பின்னணியை இது சுட்டிக் காட்டுகிறது. உண்மையில் உயிர் மொழிகளில் சில மாண்ட மொழிகள் காணாத நீடித்த வாழ்வு ஏற்கெனவே கண்டு, பின்னும் நீடிக்கின்றன. நேர்மாறாகப் பழய மாண்ட மொழிகளுள் சில இன்றைய பல உயிர் மொழிகள் கண்டுள்ள வாழ்வினும் நீடித்த வாழ்வு கண்டிருந்தன.

மாண்ட மொழிகளில் மிக மிக நீடித்த வாழ்வுடைய மொழி தொல்பழங்கால எகிப்திய மொழியே. உயிர் மொழிகளிலும் உயிர்த் துடிப்புடைய தாய் மொழிகளான சப்பான் மொழி, சீன மொழி, தமிழ்மொழி ஆகியவை அவற்றுக்கடுத்த, அல்லது அவற்றினும் நீடித்த

வாழ்வை ஏற்கெனவே கண்டு, இன்றும் நீடித்து வரு கின்றன.

தமிழ்மொழி தாய் மொழிகள், உயிர்மொழிகள் ஒன்று மட்டுமன்று. நீடித்த வாழ்வுடைய உயிர் மொழிகளிலும் அது முன்னணி முதல் நிலையில் நிற்பது. உலக மொழிகளில் உச்ச அளவு நீடித்த வாழ்வை ஏற்கெனவே கண்டு, இன் றும் உயிர்த் துடிப்புக் குன்ருமல் அது வீறுடன் இயல் கின்றது.

இலக்கியச் சிறப்பு வகையில், மாண்ட அல்லது உயி ரற்ற மொழிகளையும் உயிர் மொழிகளையும் ஒப்பிட்டு நோக்கிஞல், முந்தியவையே பொதுவாக மேம்பட்டனவாய் உள்ளன. உயிர்மொழிகளில் சில அவற்றுடன் போட்டி யிட்டுப் புதுமையில் அவை கடந்து முன்னேற முயல் கின்றன. ஆயினும் பெரும்பாலான உயிர் மொழிகள் மாண்ட மொழிகளைச் சார்ந்தும், அவற்றின் சொல்வளம் மேற்கொண்டும், அவற்றின் இலக்கிய முன்மாதிரி பின் பற்றியுமே வளர்ந்துள்ளன, வளர்ந்து வருகின்றன. இவ் வகையாக, உயிர்மொழிகளின் வாழ்வு மூலமாக மாண்ட பின்னும் மாண்பு நிறுவியுள்ள சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீனம் போன்ற மொழிகளின் முதன்மை, முன் மாதிரித் தன்மை, முன்ஞேடிச் சிறப்பு, நிலைத்த மதிப் புடைய சீரிய பண்பு ஆகியவை நோக்கி இம்மொழிகள் இலக்கிய மொழிகள் என்ற முறையில் மட்டுமன்றி, உயர் தனிச் செம்மொழிகள் (Classical Languages) என்றும் புகழப்பட்டுள்ளன.

உயிர் மொழிகள் அல்லது தாய் மொழிகளில் எழுத்து வடிவின்றிப் பேச்சு வழக்காக மட்டும் நிலவும் மொழிகள் பல. பண்பட்ட இலக்கிய மொழிகள், மாண்ட மொழிகளின் நிழலாட்சி கடந்து புதுமையில் முன்னேறும்

புத்திலக்கிய மொழிகள் சிலவே. தமிழ் பண்டு பண்டிருந்தே எழுத்து வடிவும் இலக்கியமும் உடைய பண்பட்ட இலக்கிய மொழிகளிலும், புத்திலக்கிய மொழிகளிலும் முதன்மை வாய்ந்தது. அத்துடன் எழுத்து வடிவும் சொல்லும் மாண்ட மொழிகளிலிருந்து பெற்று, அவற்றைப் பின்பற்றி வளர்ந்த மிகப் பெரும்பாலான உயிர் மொழிகள் போன்றதன்று அது. ஏனெனில் அதுவே உயர்தனிச் செம்மொழி. உயர்தனிச் செம்மொழிகளில் மிக நீடித்த பழமை மட்டுமன்றி, மிக நீடித்த வாழ்வும் கண்டு இன்றும் உயிர்ப்புடன் நிலவும் ஒரே உயர் தனிச் செம்மொழிஅது. இவை மட்டுமோ? மற்ற உயர்தனிச் செம் மொழிகள் எவையும் தமக்கெனத் தம் எழுத்து முறையும் எழுத்து வடிவம் இலக்க வடிவும் உருவாக்கிக் கொண்டவையல்ல. ஆனல், தமிழ் தனக் கெனத் தானே தன் எழுத்து முறையையும் எழுத்து வடிவையும் இலக்க வடிவையும் உருவாக்கிக் கொண்ட உலகின் உயர் தனிச் செம்மொழி. அவற்றை உலக மொழிகளுக் கெல்லாம் வழங்கிய மூல முதன் மொழியும் அதுவே.

## 18. கன்னித் தாய்மை

தமிழின் சிறப்புக்கள் மிக மிகப் பல. உலக மறிந்த மற்ற மொழிகள் அத்தனையையும் தாண்டிப் பின்னும் பலபடி, பலமடி உயர் சிறப்புக்களை உடையதாக அது அமைகிறது. உலகம் அவற்றை இன்னும் அளவிட்டுக் காணுததன், காண முடியாதிருப்பதன் காரணம் இது. ஆனல் அது காண முயலாமலும், காட்சியின் திசை திரும்பாமலும் இருக்கிறது. இதற்குக் காரணம் தமிழரின் உரிமையற்ற அரசியல் அடிமை நிலையும், மேன் மேலும் அதை வளர்த்து வரும் தமிழக ஆட்சி வகுப்பின் தன்னல அடிமை மனப்பான்மைகளும், அடிமைப் போட்டி

களுமே ஆகும். அளவிட முனைபவர் முயற்சிகளும் இந் நிலையில் விழலுக் கிறைத்த நீராகின்றன; ஏனெனில் இதை அயலவர் செய்தால், அடிமைத் தமிழகம் ஆனந்தக் கூத் தாடி அவர் புகழ் பாடுகிறது. தமிழர் செய்தாலோ, அது கம்பர் கற்பனையாகக் கொள்ளப்பட்டு, தாமரையிலையில் தண்ணீர் போல ஒட்டாது, ஒதுக்கித் தள்ளப்படுகிறது. உயர்வு சிறப்பாகவன்றி வாய்மை யுரையாகத் தமிழ் பற்றி எதுவும் கொள்ளப்படும் நிலை அடிமைத் தமிழகத் துக்கு இன்னும் ஏற்படவில்லை.

உயர்தனிச் செம்மொழிகளில் தமிழ் ஒன்று என்ற கருத்தின் நிழல் கூடத் தமிழக ஆட்சி வகுப்பிலோ, சென்னை, அண்ணாமலை போன்ற தமிழகப் பல்கலைக் கழகங் களிலோ, தமிழகப் பத்திரிகை உலகிலோ சென்று எட்டுவ தில்லை. ஆனால் ஆய்ந்தமைந்து தமிழர் அடிமைச் சூழலை ஒரு கணம் மறந்து நோக்கினால், அது உயர் தனிச் செம் மொழிகளில் ஒன்று மட்டுமல்ல; அவற்றில் தலை சிறந்தது மட்டுமல்ல; உயிர் மொழிகளுக்கில்லாது உயர் தனிச் செம் மொழிகளுக்கே யுரிய எல்லாச் சிறப்புகளும், உயர்தனிச் செம் மொழிகளுக்கில்லாது உயிர் மொழிகளுக்கு மட்டுமே உரிய எல்லாச் சிறப்புகளும், இரண்டுக்கும் இல்லாத எத் தனையோ உயர்தனிச் சிறப்புக்களும் அதற்கு ஒருங்கே உரியனவாயுள்ளன.

இச் சிறப்புக்களின் பெருமை, அருமை, பல் பெருக்க இணைவே சிறப்பு முழுவதையும் மறைத்து விடுகிறதோ என்று கூடக் கருதலாம். மற்றும்,

'நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படல்'

என்ற வாய்மொழியுரை தமிழர் வகையில் வாய்மை யுரை ஆகியுள்ளது என்னலாம். யானை மரபின் பெருமை

கூறிப் பூனே மகிழ்ந்தால், கேட்பவர் ஒன்று யானே மரபு இல்லாத ஒன்று என்று கருதவேண்டும் அல்லது பூனே மரபு வேறு என்று கருதவேண்டும். முந்தியதையே உலகம் கருதி வாளா இருப்பது இயல்புதானே என்று எண்ணல் தகும்!

மாண்ட மொழிகளுக்கோ உயிர் மொழிகளுக்கோ இல்லாத தமிழின் தனி உயர் சிறப்புக்களுள் முதன்மை யானது அதன் கன்னித்தாய்மைப் பண்பே. இது இறவாப் பிறவா வாழ்வு, பொங்குமாவளம், மூவா இன நலம் ஆகிய வற்றை உள்ளடக்கியது ஆகும். மாண்ட மொழிகளில் ஆயிரக்கணக்கான ஆண்டு நீண்ட வாழ்வுடைய எகிப்திய மொழியையும், மாளா உயிர் மொழிகளில் அதனினும் ஆயிரக்கணக்கான ஆண்டு நீடித்த வாழ்வுடைய சீன மொழியையும் தாண்டிப் பல்லாயிரக் கணக்கான ஆண்டு கள் நீடித்த வாழ்வுடையது தமிழ். அத்துடன் அது இன் றும் மாளா உயிர்த் துடிப்புடையதாய் இலங்குகிறது.

இன்றைய உயிர் மொழிகளோ, மாண்ட உயர்தனிச் செம் மொழிகளோ கூடப் பெருத வகையில் தமிழ் தனக் கென எழுத்து முறையும், எழுத்து வரிசையும், எழுத்து வடிவும் உடையது. அது மட்டுமன்று. இன்றைய உயிர் மொழிகள் மிகப் பலவும் அம்மாண்ட உயர்தனிச் செம் மொழிகளின் சொல்வளமும் இலக்கிய வளமும் சார்ந்தே வளர்ந்துள்ளன. சார்ந்தன்றி மேலும் வளரமுடியாத நிலை யில் பல இன்னும் உள்ளன. ஆனல் மட்டுமல்ல, இவ் உயிர் மொழிகள் இவற்றுக்கு மூல ஊற்ருக நிலவிய மாண்ட உயர்தனிச் செம்மொழிகளின் நிலேயும் இவற்றின் வேறுபட் டது அன்று. சமஸ்கிருதம் 2500 ஆண்டுகளுக்குமுன் பேசப் பட்ட பல ஆரிய திராவிடக் கலவை மொழிகளின் திருந் திய கூட்டுத் திரட்டேயாகும். கிரேக்கமும் இலத்தீனமும்

இது போல நடு நிலக்கடலக இனக் கலப்பின் பின் ஏற்பட்ட மொழியேயாகும். வட ஆரிய மொழிகளுக்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகள் முற்பட்டே விரைந்து பண்பட்டு வளர்ந்து, வட ஆரிய மொழிகள் பண்படத் தொடங்குவதற்கே ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குமுன் அவை தளர்வுற்றழிந்து போனதற்குக் காரணம் இதுவே. **உயிர் மொழிகளிலும் சரி, மாண்ட உயர்தனிச் செம் மொழிகளிலும் சரி—தனக்கென எழுத்து முறை மட்டுமன்றிச் சொல்வளமும் இலக்கிய வளமும் வகுத்துத் தன் பண்பில் தானே வளர்ந்த உயிருடைய உயர் தனிச் செம்மொழி தமிழ் ஒன்றே.**

## 19. உயர் தேசிய மொழி

மூவாயிர ஆண்டுகளுக்கு மேற்பட்ட மொழியினத்தின் உலகளாவிய வாழ்வையும், வரலாற்றையும் பளிங்குபோல் காட்டும் இலக்கியம் தமிழ் ஒன்றிலேயே உண்டு. அதன் பரப்பிலே தமிழகத்தின் சமய வாழ்வு மட்டிலுமன்றி, உலகின் பெரும்பாலான சமய வாழ்வு முழுவதும் வேறெம் மொழியிலும் இல்லாத அளவு நிழற்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. சிவநெறியாளர்க்கான மூல பக்தி நூல்களான தேவார, திருவாசக முதலிய அருட்பாடல்களும், திருமந்திரம், மெய்ஞ்ஞான நூல்களாகிய அறிவேடுகளும், தமிழிலேயே உள்ளன. வைணவர்களுக்குரிய மூல முதல் பக்தி ஏடுகளான திரு நாலாயிரமும் தமிழே. இவ்விரு சமயங்களுக்கும் உரிய சமய ஏடுகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றுக்கு மேற்பட்ட விழுக்காடு தமிழிலும், மீந்த சிறுபகுதி கன்னடம், மராத்தி, குஜராத்தி, வங்கம் ஆகியவற்றிலுமே உள்ளன. சமஸ்கிருதத்தில் பிற்கால மொழிபெயர்ப்புகளும் பாகவத புராணமுமே இருக்கின்றன. இரு சமயத்தினரும் முற்பட்ட காலத்தில் தமிழையே தம் தெய்வ மொழியாகக் கருதியதன் மறைதிறவு இதுவே.

தமிழகச் சமயங்கள் மட்டுமன்றி வடதிசைச் சமயங்களான புத்த சமண நெறிகட்கும், மேல்திசைச் சமயங்களான கிறித்தவ இஸ்லாமிய நெறிகளுக்கும் தமிழிலக்கியத்தில் சிறந்த இடம் கிட்டியுள்ளது. புத்த சமயப் பேரேடு மணிமேகலை என்னும் நிறை பெருங்காப்பியமும் மற்றும் பல அற நூல்களும், இலக்கிய ஏடுகளும் உள்ளன. இஸ்லாமிய நெறிக்குச் சீருப் புராணமும் எண்ணற்ற பாடல்களும் துறை நூல்களும், கிறித்தவ நெறிக்கு வீரமா முனிவரின் தேம்பாவணியும் கிருட்டிணப்பிள்ளையின் இரட்சணிய யாத்திரிகமும் மற்றும் பல சிற்றேடுகளும் உரிமைச் செல்வங்களா யுள்ளன. கிட்ட தட்ட உலகின் எல்லாச் சமய ஏடுகளையும், சமயச் சார்பான இலக்கியங்களையும் கொண்டதாகத் தமிழ் திகழ்கிறது.

உலகின் பல மொழியினங்களுக்குச் சமயத்துறை மொழி வேறொன்றாகவே அமைந்துள்ளன, தமிழருக்குத் தமிழ் தாய்மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் இருப்பதோடன்றி, தமிழரின் சமயவாழ்வுக்கு உரிய தெய்விக மொழியாகவும் இலங்குகிறது. தமிழகத்தில் ஆண்ட தமிழரசர், தமிழக முழுதாண்ட பேரரசர், தமிழகம் கடந்தாண்ட நிலப்பெரும் பேரரசர், கடற் பெரும் பேரரசர் ஆகிய அனைவரின் ஆட்சி மொழியும், தமிழர் கடல் கடந்த கலவாணி மொழியும் தமிழே, தமிழர் சிந்தனைக்குரிய நூல்களெல்லாம் தமிழில் எழுதப்பட்டது மன்றி, அச்சிந்தனைகள் மொழியிலேயே படிந்துள்ளன. இதன் பயனாகத்தான் வேறு எம்மொழியையும் விடத் தமிழ்—சிறப்பாகத் தனித் தமிழ்—ஓர் அறிவாராய்ச்சிக் கருவூலமாகவும், சிந்தனைப் பதிவேடாகவும் துலங்குகின்றது.

எல்லாச் சமய இலக்கியமும் உடையதாக மட்டு மன்றி, தனிச் சமயப் பண்பு வாய்ந்ததாகவும், பெயரளவில் சமயஞ்சாரா இலக்கிய முடையதாகவும் தமிழ் விளங்கு

இன்றது. சிறப்பாக, இலக்கியத்திலும் ஒரு தனி இலக்கியமாக விளங்கும் சங்க ஏட்டுத் தொகுதி உலகின் ஒப்புயர்வற்ற சமயஞ்சாரா இலக்கியத் தொகுதியாக, மனித வாழ்க்கையின் முழுநிறை கண்ணாடியாக, மனித இன வரலாற்றுப் பதிவாக விளங்குகிறது.

தமிழ் இவ்வாறு தமிழரின் தேசிய மொழியாக, இன உயிர் மொழியாக நிலவுகிறது.

தமிழ் மொழியின் பெயரே தமிழகம் என நாட்டின் பெயராகவும், தமிழினம் என இனத்தின் பெயராகவும், தமிழுலகு எனச் சூழ் பண்பாட் டெல்லையின் பெயராகவும் தொன்று தொட்டே நிலவுகிறது. ஆனால் உலகின் பிறமொழிகள்—தமிழின மொழிகள், இந்திய மொழிகள் உட்பட—நாட்டுப்பெயரிலிருந்தே பிறப்புற்றன. இவற்றுள் எதுவும் தமிழகம் போல, மொழிசார்ந்து இனமும், இனம் சார்ந்து நாடும் பிறக்கவில்லை என்பதை இது காட்டுகிறது. அத்துடன் தேசிய இனங்களாக மற்ற உலக மொழிகள் யாவும் மொழித் தேசியமும் எல்லை வகுக்கப்பட்டு ஒருருவாக்கப்பட்டது கி. பி. 10, 14-ம் நூற்றுண்டுகளின் பின்னரேயாகும். அதற்கு முன் நாடு தவிர,நாட்டெல்லையோ, மொழி எல்லையோ,மொழியுருவோ உலகில் எங்கும் உருவாகவில்லை. ஆனால் தமிழகத்தில் 2500 ஆண்டுகளுக்கு முன்பே 'தமிழ் கூறு நல்லுலகம்' 'வடவேங்கடம் தென் குமரி' யிடைப்பட்டது என்ற மரபு ஏற்பட்டு விட்டது. தமிழ் என்ற மொழிப்பெயரும் தமிழகம் என்ற நாட்டுப்பெயரும் தொல்காப்பியம், சங்க இலக்கியம் ஆகியவற்றில் மட்டுமன்றி, கிரேக்கர் வழக்கிலும் (தமிரிகா=தமிழகம்) காணப்படுகிறது.

உலகில் முதல் முதலாக, மற்றமொழிகளுக்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னுக, மொழி எல்லை,

இன எல்லை, நாட்டு எல்லை வகுக்கப்பட்டு, தாய்மொழியே இனத்தின் வாழ்வில் இலக்கிய மொழியாகவும், சமய மொழியாகவும் கலை இயல்மொழியாகவும்,ஆட்சி மொழியாகவும் விளங்கி, இவ் எல்லாத் துறைகளிலும் ஒருங்கே தோய்ந்து, நிரம்பிய உலகின் முதல் தேசிய மொழி உச்ச அளவான நிறைதேசிய மொழி தமிழ் ஒன்றே.

## 20. உலகளாவிய மரபு

மற்ற எம்மொழிகளுடனும் தொடர்பு படாமல் ஒதுங்கித் தனியாகத் துண்டுபட்டு வாழும் மொழிகள் உலகில் ஒரு சில. அவற்றுள் சிறப்பு வாய்ந்தவை கீழ் கோடி ஆசியாவிலுள்ள சீன சப்பான் மொழிகளே. மாண்ட மொழிகளுடன் வாழ்ந்து, வாழும் மொழிகளுடன் நிலவும் சிறப்பில் அவை தமிழுடன் ஒத்தவை. இந்திய மாநில மொழி வாழ்வுகளுடன் அவை நீண்ட காலத் தொடர்பு கொண்டு அதனுல் சில வகைகளில் தூண்டப்பட்டாலும், அவற்றின் ஒதுங்கிய வாழ்வு இதனுல் மிகுதி பாதிக்கப்படவில்லை. ஏனெனில் அவை வேறு எம்மொழியையும் தூண்ட, தூண்டி வளர்ப்பதற்குரிய வாய்ப்புப் பெறவில்லை. அத்துடன் வளர்ந்துவிட்ட மொழிகளுக்கு முன் மாதிரியாய், அவற்றை என்றும் தூண்டி வளர்க்கும் உயர் தனிச் செழிப்பமும் அவற்றுக்கு அமையவில்லை. அச்சிறப்பு உலகில் பேரளவுக்கு இலத்தீனம், கிரேக்கம், சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளுக்கே கிட்டியுள்ளன. ஆரிய இனத்துக்குக் கிடைத்த இப்பேறு பெறலரும் பேறு என்பதில் ஐயமில்லை. ஆனல் ஆரிய இனத்துக்கு வெளியே அதே பேறு மட்டுமல்ல, அதனினும் சிறப்புடைய பேறு தமிழுக்கு உண்டு. இந்தியத் தாய் மொழிகளிடையேயும், கீழ்திசையிலுள்ள மொழிகளிலேயும், அது அளித்த தூண்டுதல் பெரிது—அது இன்றும் ஆராய்ச்சி

யாளர்களால் தேடி நமக்குத் தொகுத்துத் தரப் படவில்லை. ஆனால் 12-ம் நூற்றாண்டு பக்தி அலை மூலம் அது இந்தியத் தாய் மொழிகள் அத்தனைக் குமே இலக்கிய வளம் தந்துள்ளது. அத்துடன் சமஸ் கிருத வாழ்வுக்கே அது மூலத் தூண்டுதலாய் இருந்து வந்துள்ளது. இதுவும் வருங்கால ஆராய்ச்சியாளர் நமக் குத் தேடித் தொகுத்துத் தரவேண்டியதாகவே உள்ளது. பக்தி யியக்கத்துக்கு முன்னுள்ள தமிழக அறிவியக்கத் தின் கலை நிழலாக நமக்குச் சங்க இலக்கியம் கிடைத்திருப் பது போல, அதன் சமயத்துறை அறிவாராய்ச்சி நிழலாக உபநிடதங்கள் காட்சியளிக்கின்றன. தவிர சங்க இலக் கியத்தின் தடங்களைச் சமஸ்கிருதப் பொற்கால இலக்கியத் திலும் பிற்கால இலக்கியத்திலும் காணலாம்.

இந்திய மாநிலத்துக்கு மட்டுமன்றி மேலையுலகுக்கும், உலக மொழிகளுக்கும், உயர் தனிச்செம்மொழிகளில், சமஸ் கிருதத்துக்கு மட்டுமன்றிக் கிரேக்க மொழிக்கும் பிற மொழிகளுக்கும் தூண்டுதல் தந்த தமிழினக் கலைவாழ்க் கைப் பகுதிகள் உண்டு. வட திசையில் மறைந்த தாய் மொழி வாழ்வுகள் வழியாக உலகில் பரவியுள்ள கதை மரபு இவற்றுள் ஒன்று. உயர் தனிச் செம்மொழிகளிலும் உயிர் மொழிகளிலும் ஒருங்கே பரவியுள்ள உலக நாடக மரபு மற்றொன்று.

கதை மரபுகள் இந்திய மாநிலத்திலிருந்தே உலகெங்கும் பரவியுள்ளன என்பது உலகக் கலை மரபாராய்ச்சியாளர் ஆய்வின் முடிவே. அதன் மூலமுதல் சமஸ்கிருதமன்று, தாய் மொழிகளே என்பதும், அது ஆரிய இனத்துக்குரியதன்று, தமிழினத்துக்குரியதே என்றும், எல்லாரும் வேறுபாடின்றி ஒத்துக்கொண்டுள்ளனர். ஆயினும் தமிழிலக்கியத்தைப் பற்றிய அளவில், சிதைந்த உருவில் நமக்குக் கிடைத் துள்ள பெருங்கதைப் பகுதியல்லாது, அதன் தடங்களைக்

கூடத் தெளிவாகக் காண முடியவில்லை. அது மாண்ட இலக்கியப் பகுதியாக நமக்கு எட்டாது போயிற்றோ, அல்லது இலக்கியத் தொடர்பற்ற மக்கள் வாய்மொழி மரபாகவே நிலவி மரபழிந்ததோ—நம்மால் எதுவும் வரையறுத்துக் கூற முடியவில்லை.

நாடக மரபு வகையில் நம் அனுபவம் இதற்கு நேர் மாறானது. கதை மரபு வகையில் ஒப்பீட்டடிப்படையாக மூல மரபை இந்தியத் தாய்மொழி வரை கொண்டு வந்த உலக அறிஞர், உலக நாடக மரபுகளைப் பெரும்பாலும் தனித்தனி மரபுகளாகவே கண்டுவருகின்றனர். அவற்றை ஒரே மரபாகக் கூட அவர்கள் கருதியதில்லை. ஆயினும் கிரேக்கமரபு தமிழ்,மலையாள மரபு ஒருபுறமும்— தென் கிழக்காசியமரபு மலையாள மரபு மற்றொரு புறமும் —ஆங்கில, சமஸ்கிருத மலையாள, தமிழ் மரபுகள் மூன்றாவதாக இன்னொரு புறமும் கிளைமரபுகளாக இணைந்து காணப்படுகின்றன. தமிழ்ச் சிலம்பு இவையனைத்தையும் இணைப்பதாக, உலக மரபுகளின் மூலமரபாகக் காட்சி யளிக்கிறது.

வருங்கால ஆராய்ச்சியுலகம் இரு மரபுகளிலுமே இன்னும் ஆழ்ந்து பரந்து கருத்துச் செலுத்துதல் தகும். ஆனால் வேறுபல துறைகளிலும் உலகளாவிய தமிழ் உயிர்ப்பாற்றலை எடுத்துக் காட்ட இவை போதியவை ஆகும்.

## 21. மனிதப் பேரின உலக முதன் மொழி

மாண்ட உயர்தனிச் செம்மொழிகள், உயிர்மொழிகள் ஆகியவற்றின் எல்லை, சூழல், செல்வாக்கெல்லை ஆகியவை கடந்து தமிழ்ப் பண்பாட்டு மரபுகள் இவ்வாறு உலகளாவி யுள்ளவகை யாது? அதன் மறைதிறவு என்ன?

தமிழின் பொங்கல் வளம், கன்னித் தாய்மை ஆகிய வற்றுடன் தொடர்புடைய பண்பு இது.

ஒரு மொழியைப் பேசுபவருடன் மட்டுமன்றி வேறு தாய்மொழி பேசுபவருடனும், தாய்மொழிகளுடனும், ஒரு மொழி தொடர்புடையதாயிருந்தால், அதை இனம் சார்ந்த மொழி என்கிறோம். அதனுடன் தொடர்புடைய தனி மொழிகள் யாவும் ஒரே மொழியினம் சார்ந்தவையாகக் கருதப்படுகின்றன. தாய்மூலமொழி அவற்றிடையே பழமை மிக்கதாகவோ, சிறப்புடையதாகவோ, இவை யிரண்டும்மிக்கதாகவோ அமைதல் கூடும். அதுவே இனத் தின்மூல முதன் மொழியாக இருத்தலும் கூடாததன்று.

ஆரிய இனத்தில் கிரேக்கமும் சமஸ்கிருதமும் பழமை வாய்ந்த, சிறப்பும் உடைய மொழிகள். திராவிட இனத் தில் அதுபோல, தமிழ் பழமையும் சிறப்பும் ஒருங்கே வாய்ந்த மொழி. அது மட்டுமன்றி அதுவே திராவிட இனத்தின் மூல முதன் மொழியும் ஆகும்.

உலகில் இனங்கள் பல. ஆனால் திராவிட இனம் நீங்கலாக, மற்ற எந்த இனத்துக்கும் இன முதன்மொழி என்று எதுவும் இன்று நிலவவில்லை. கிளையின், துணைக் கிளையின் மொழிகளைத் தோற்றுவித்த மூலமுதன் மொழிகள் பெரும்பாலும் இறந்துபட்டுவிட்டன, கிளை மொழிகளும் துணைக் கிளைமொழிகளும் ஓயாது பிரிவுற்றுக் கொண்டே இருக்கின்றன—பிரியும் ஒவ்வொரு நொடி யிலும் இன முதல் மொழி மட்டுமன்றி, கிளை முதன் மொழியும், துணைக்கிளை முதன் மொழியும் இறந்துபட்ட வண்ணமேயுள்ளன. தமிழ் ஒன்று மட்டுமே கிளைகள், துணைக்கிளைகள் எத்தனை பிறப்புற்றாலும் தான் அவற்றுள் ஒன்றாய், அவற்றுள் ஒன்றுபோல நின்று நிலவுகிறது. மொழி நூலார் தமிழைத் திராவிட மூலமொழியாகக் கொள்ளும் பழய மரபை ஒதுக்கிவிட்டு, அதைக் கிளை மொழிகளில் ஒன்றாகக் கருதுவதன் காரணம் இதுவே.

மேலை யாராய்ச்சியாளர் உலக மொழிகளுக்கு மூலம் யூத மொழியாகிய ஏபிரேயம் என்று கருதியிருந்த காலம் உண்டு. ஆரிய மொழியினத்துக்கு மூலம் சமஸ்கிருதம் என்று நம்பியதுடனன்றி ஆய்ந்துரை கூறிய காலமும் உண்டு. தமிழ் திராவிட இனத்தின் மூலமொழி என்று அவர்கள் கருத்துரைத்த காலம் இதுவே. ஆனால் முந்திய இரு முடிபுகளும் சரிவுற்றபோது, தமிழ் பற்றிய தம் முடிபையும் கைநெகிழவிட்டனர். ஏபிரேயம் உலகின் பழமையான மொழிகளில் ஒன்று, சமஸ்கிருதம் ஆரிய இன மொழிகளில் ஒன்று, பழமையான ஒன்று என்று தம் பழய முடிபுகளைத் திருத்திக்கொண்டபோது, தமிழ் வகையிலும் இதே திருத்தங் கண்டனர். அது திராவிட மொழிகளின் மூலமன்று, திராவிட மொழிகளில் ஒன்று, ஆனால் பழமை மிக்க ஒன்று என்று கருதினர்.

மேலை ஆராய்ச்சி மரபின் ஒளியில் கரந்த சில கறைகளை இது எடுத்துக் காட்டுகிறது, அது உலகளாவிய பண்பாட்டு வளம் ஆராயும் பரிசு உடையது. ஆனால் மெய்மை காண்பதில் முன்கருத்தார்வம் (preconceptions) இணைமை (Analogy) ஆகிய இரு தடங்களைப் பின்பற்றுகின்றனர், இது இயல்பு, நேர்மையான வழியுங்கூட. ஏனெனில் முன்னது விலக்க முடியாதது. பின்னது புது மெய்மை காண்பதற்குரிய இயல்பான வழி. ஆயினும் ஆராயா நம்பிக்கைகள் அல்லது ஆராய்வுக்கு இடந்தராத ஆர்வ அவாக்கள் முன்னதன் உருவில் கரந்தும், பின்னதன் வழி நழுவியும் ஆராய்வு முடிவில் பிழைபாடு உண்டு பண்ண வழியுண்டு. திராவிட இனத்தில் தமிழின் இடம் பற்றிய வகையில், இம் முறைகளும் அவற்றின் பிழைபட்ட தடங்களும் தலையிட்டுள்ளன என்று கூறலாம்.

ஆர்வவழி, நம்பிக்கை வழி ஆராய்ச்சிகளும், இணைமை வழி ஆராய்ச்சிகளும் எப்போதும் சரியான முடிபுகளா

யமைய வேண்டுமென்ற அவசியம் இல்லை. அதே சமயம் அவை தவருகத் தான் இருந்து விடவேண்டு மென்ற கட்டாயம் இல்லை. ஆரிய இனம் வழி, நடு நிலக் கடலக இனம்வழி மேலையுலகில் ஆராய்ச்சி நாட்டம் சென்றது ஆர்வ நம்பிக்கை வழியாகவே. ஆனல் வரலாறும் ஆராய்ச் சியும் இரண்டிலும் ஐரோப்பிய நாகரிகத்தின் மூலமரபுகள் கண்டுள்ளன. ஆயினும் ஏபிரேய மொழியில் உலக மூல முதன் மொழி காணும் ஆர்வம் வேத மொழியின் பழமை யாலும், வேத மொழியில் ஆரிய மொழி மூலம், உலக மொழிமூலம் காணும் ஆர்வங்கள், ஆரிய மொழி ஒப்பீட் டாராய்ச்சியாலும், நடு நிலக் கடலக நாகரிகத்தின் மிகு பழமையாலும் தகர்ந்துள்ளன. இது எவ்வகையிலும் திராவிட இனம், தமிழ் ஆகியவற்றைப் பாதிப்பதன்று. பாதிப்பதாகக் கொள்ளுவது ஓர் ஆர்வ நம்பிக்கையின் முறிவை இன்னென்றின்மீது சுமத்துவதே யாகும்.

தமிழ் மொழி திராவிட இனத்தின் மூல முதன் மொழி என்பதும், உலக மூல முதன் மொழி என்பதும் ஆர்வ நம்பிக்கையாய் எழுந்திருக்கலாம், இணைமையால் பட்டிருக்கலாம். இவை அக்கருத்துக்களின் மெய்மையை ஊக்கப் வலியுறுத்தி விட்டதாகவும் ஆகமாட்டா, அதே சமயம் அதனை மறுத்துவிட்டதாகவும் முடியமாட்டா. அவை இத்தூண்டுதல் மீது தனிப்பட ஒப்பிட்டாலும் வரலாற்றுமரபாலும் ஆராயப்படவேண்டியவை ஆகும்.

## 22. இன முதன்மொழி திராவிடமா, தமிழா?

*திராவிட மொழிகளின் மூலமொழி யாது?*

இம் மூலமொழி முதலில் அறிஞராலேயே 'தமிழ்' என்று அழைக்கப்பட்டது. இப்போது 'திராவிடம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

முதலில் திராவிட இனமொழிகளின் மூலமொழி எதுவாயினும், எத்தகையதாயினும், அதைத் திராவிடம் என்று குறிப்பதில் தவறில்லை. ஒரு முடிவு காணும் வரை 'திராவிடம்' என்ற சொல் 'தமிழ்' என்ற சொல்லைவிட நல்லது, இடர்ப்பாடற்றது, பொருத்தமானது என்பது உண்மையே. ஒரு முடிவு ஏற்பட்ட பின்னர்க்கூட அச் சொல்லையே வாய்ப்புக் கருதி நீடித்து வழங்க நேரலாம். நேர்வது இயல்பு. ஏனெனில் ஆயிர ஆண்டு இரண்டாயிர ஆண்டு முழுவாழ்வுடைய மொழிகளில்கூடப் பழமை, இடைமை, புதுமை என்ற பெரும் பிரிவுகளும்; முற் பழமை, நடுப் பழமை, பிற்பழமை என்ற சிறு பிரிவு களும் போதவில்லை, மொழியின் படிகளைக் குறிக்க விளக்க மற்ற நீள்தொடர்களை வழங்கவேண்டியுள்ளது, பல ஆயிரக்கணக்கான ஆண்டு நீடித்துள்ள திராவிட மொழி யினத்தின் வாழ்வை முற்றிலும் 'தமிழ்' என்ற ஒரே சொல்லால் குறிப்ப தென்பது வசதிக் குறைவும் குழப் பமும் இடர்ப்பாடும் தருவதாக முடியும்.

அதேசமயம் 'திராவிடம்' என்ற பொதுப்பெயர் இவ்விடத்தில் வழங்கப்படுவதனுல், இனப்பெயரோ மூல மொழியோ தமிழன்று என்று ஒதுக்கப்பட்டுவிட்ட தாகவும் எவரும் கருதுதல் தவறு. ஏனெனில் திராவிடரே பண்டு வழங்கிய இனப்பெயர், மூலமொழியின் பெயர் 'திராவிடம்' அன்று, 'தமிழே'. இது மட்டுமன்று. இனப் பெயராக அயலவர் வழங்கிய 'திராவிடம்' என்ற சொல் கூட, உண்மையில் மொழியினத்துக்கும் நாட்டுக்கும் மூலமொழிக்கும் மட்டுமன்றி, தமிழுக்கும் அவர்கள் இட்டு வழங்கியதேயாகும். பண்டை நாளிலேயே மூலமொழி தமிழ் என்றுதான் அயலின மக்களும் அயலின அறிஞரும் கருதியிருந்தனர் என்பதற்கு இது வலிமையான சான்று ஆகும்.

நாட்டின் பெயராக வடதிசையிலுள்ளவர்களாலும், இனத்தின் பெயராக அயலுலகிலும் பண்டை நாளி லிருந்தே 'திராவிடம்' என்ற சொல் வழங்கிற்று. இதனுல் அதன் பழமை, பொதுமை பற்றி யாரும் ஐயுறவுகொள்ள வேண்டுவதில்லை. ஆனுல் நாட்டுக்கு வந்த தொலே அய லவர்கள் நாட்டு மக்கள் வழங்கிய பெயராகக் குறிப் பிடுவது 'தமிழகம்' என்ற சொல்லேயே. ஒரே நாட்டை, நாட்டுப் பகுதியை, இனத்தை, இனமொழிப் பொதுவைப், பண்டுபண்டிருந்தே ஒரு சாரார் திராவிடம் என்றும், மற்ருெரு சாரார் தமிழகம் என்றும் வழங்கிஞராதலால், இரண்டும் தொடக்கத்தில் ஒரே பொருள் குறித்ததாய், ஒரே வகையில் பொதுமொழியினம், நாடு குறித்ததாய் வழங்கி நாளடைவில் ஒன்று பொது, மற்றது சிறப்பு என வேறுபட்டன என்பது தெளிவு.

வடதிசையிலும், கடல் கடந்தும் தமிழகம் என்ற சொல்லேவிடத் திராவிடம் என்ற சொல் மிகுதியாக வழங்கிற்று. அதே சமயம் திராவிட வழக்கில் தமிழ் என்ற சொல்லே நெடுங்காலம் பொது, சிறப்பு ஆகிய இரு வழியிலும் வழங்கிற்று. இதற்குரிய காரணம் இயல் பானது. தென்தமிழரை வடபாலிருந்த தெலுங்கர் 'அரவர்' என்றனர். தமிழர் என்ற பெயர் அவர்கள் அறியாததல்ல. ஆனுல் அவர்கள் மற்றத் தமிழர்களே விட வட தமிழகத்திலுள்ள தொண்டை நாட்டு அல்லது அருவா நாட்டு மக்களுடனேயே மிகுதி பழகியி ருந்தனர். அணிமைச் சுட்டுட் பெருவழக்காகி, பொதுமை யும் குறித்தது. இதே அருவரின் இனப்பெயரே திரை யர் என்பது. ஏனெனில் ஆந்திரரும் இதன் கிளேயினத்த வரே. வடவர் தமிழின முழுவதையும் திராவிடம் என அழைத்தது இதனுலேயே.

தமிழரில் கடலோடியினத்தவர் திரையர். தமிழர் எங்கும் கடலோடிகளாயிருந்தாலும், மூவரசர் நேராட்சிக்கு வெளியிலுள்ள திரையரே முதன் முதலிலும் பேரளவிலும் தொலைநாடுகள் சென்று வாணிகமும் குடியேற்றமும் திசையாட்சிகளும் பரப்பினர். மூவரசர் சில சமயம் அவர்களைத் தாயகத்தில் வென்றபின், பின்பற்றிச் சென்றாலும், அவர்கள் தனித்தன்மை இதனால் கெடவில்லை. கீழ்திசையில் பேரளவாகச் சென்று ஆட்சி செய்தவர்கள் 'கலிங்கர்'களாதலால், அங்கே தென்னவர் யாவரும் இன்னும் 'கிளிங்கு'கள் என்றே அழைக்கப்படுகின்றனர். மேல்திசை யெங்கும் திராவிடர், திரையர் என்ற பெயர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பரவிய வகை இதுவே.

திராவிடம் என்ற சொல் ஆரியச் சொல் என்று இன்று பலரால் தவறாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் அது திரு, (திரையர் திரைகடலோடிக் கொணர்ந்த செல்வம்), இடம் (நாடு) ஆகியவற்றுடன் சார்ந்த சொல்லே யாகும். ஆரியரும் பிறரும் அதை வழங்க நேர்ந்த வகை மேலே விளக்கப் பட்டுள்ளது. ஆனால் அதற்கு மேலும் வலியுறவுகள் உண்டு. தெலுங்கர் தமிழரைக் குறிக்கும் சொல்லாக இன்று பொது மக்கள் வழக்கில்'அரவர்' என்ற சொல்லும், புலவர் வழக்கில்'திராவிடர்' என்ற, சொல்லும் இயல்கின்றன. இதுபோலெழுந்த சொற்களே கேரளர், கருநாடகர் என்பன. தமிழும் மலையாளமும் ஒரே மொழியாயிருந்த காலத்தில், தமிழரும் மலையாளிகளும் தம் நாட்டின் ஒரு பகுதியை மலையாளம் என்றனர். பின்னாளில் இதுவே மலையாள மொழிக்கும் குமரிமுதல் கோவாவரை யுள்ள கடற்கரைக்கும் பெயராயின. ஆனால் இதன் வட. பகுதியே சேரர் தாயகப்பகுதி. கன்னடர் இதனால்மக்களைச் அதன் சேரலர் என்றனர். கன்னட மொழியில் சகரம்

ககரமாதல் யாவரும் அறிந்த ஒன்றே. சேரலம் என்ற சொல் இவ்வாறு மலையாளம் குறித்த சொல்லாய்க் கன்னடியர் வழக்கில் தோன்றி, அதுவே வடதிசை வழக்காயிற்று.

கன்னடம் என்பது தாய் மொழியாளர் தாய் மொழிக்குத் தந்த பெயர். அது இன்று கருநாடகத்தின் சிதைவாகவோ, அதன் மூலமாகவோ கருதப்படுகிறது. ஆனால் கருநாடு, கருநாடம் என்ற சொல், மேற்கே மலையாளிகளால் பருத்தி வளரும் கரிசல் நிலமாகிய கீழ்கரை முழுதும் குறிக்க வழங்கிய சொல் ஆகும். அப்பகுதியையும் அதில் வழங்கிய மொழியையும் மலையாளிகள் கருநாடகம் என்று சுட்டினர். மலையாள வழக்கே வடதிசை சமஸ்கிருத வழக்கமாயிற்று.

இங்ஙனம் தமிழுக்கும் இனப் பொதுவுக்கும் மூல முதல் மொழிக்கும் உரிய பெயராகத் திராவிடமும், மலையாளத்தின் பெயராகக் கேரளமும், கன்னடத்தின் பெயராகக் கருநாடகமும், தெலுங்கின் பெயராக ஆந்திரமும் திராவிடரிடையேயுள்ள அணிமை அயல் வழக்குகளாக வட திசைப் புகுந்தன. அவை சமஸ்கிருதச் சொற்களல்ல, சமஸ்கிருதத்தில் வழங்கிய தென்திசைத் திரிபு வழக்குகளே.

## 23. மூலதிராவிடம் தமிழே

தமிழ் இன்றைய தமிழ் வடிவில் அப்படியே திராவிடத்தின் மூலவடிவு மாகாது, தமிழின் மூல வடிவு மாகாது. ஆனால் இது எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் செய்தியேயன்றி வேறன்று. மூல திராவிடமொழி தமிழல்ல என்பதற்கோ—தெலுங்கு கன்னடமல்ல, மலையாளம் துளுவல்ல என்பதற்கோ கூட—இது ஒருவாதமாய் விடாது.

மூல திராவிடத்துக்கும் இன்றைய தமிழுக்கும் மரபு வேறுபாடு எதுவும் கிடையாது. ஆனால் கால வேறுபாடு உண்டு. இடவேறுபாடு உண்டு. இரண்டிலும் அது தேய்வும் குறுக்கமும் கண்டுள்ளது. மூல திராவிடத்தின் முத்தமிழ் இலக்கண இலக்கியப் பரப்பில் தொல்காப்பிய மூலமாக நமக்கு இயல் தமிழின் தடமே கிட்டியுள்ளது. அத்தடத்தின் அளவில் கூட இன்றைய பரப்புக் குறுகியது. இட எல்லையிலும் அது போல இலங்கையை உட்கொண்ட கடல் கொண்ட தமிழகப் பகுதி மட்டுமன்றி, மற்றத் தென் மொழிப் பரப்பும் அளாவியது மூல திராவிடம்; வடக்கே இமயம் வரைக் கூடப் பழந்தமிழ் பரவியிருந்ததென்று தமிழ்மரபு கருதுகிறது—சிலமொழி நூலாரும் இதன் மெய்மைச் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால் இப் பெரும் ப்ரப்பு இன்று ஒரு குறுகிய திசை வழக்களவில் நிற்கிறது.

இவ் வேறுபாடும் தொடர்பும் தமிழுக்கு மட்டும் பொருந்துவதன்று—ஏனைய தென்னக மொழிகளுக்கும் பொருந்துவதே. ஏனெனில் அவையும் மூல திராவிட மரபில் வந்தவையே—காலத்தால் அவையும் தேய்ந்தவை—இடப் பரப்பால் அவையும் குறுகியவையே.

இந்த அளவில், மூல திராவிட மொழியைத் தமிழ் என்பது எவ்வளவு பொருந்துமோ அதே அளவு மற்ற மொழிப் பெயர்களை வழங்குதலும் பொருத்தமேயாகும். இவை தவிர, தமிழுக்கு வேறு தனிச் சிறப்புகள் உண்டு. இல்லாவிட்டால், அதனைத் தனிப்பட்ட மூல திராவிடம் என்று கூற ஏது இருக்க முடியாது.

இனத்துக்கும் மூலதிராவிட மொழிக்கும் 'திராவிடம்' என்ற பெயரை அறிஞர் பொதுவழக்காக முதன்முதலில் பயன்படுத்தியவர் நல்லாயர் கால்டுவெலே யாவர். அது

வரை தமிழினம் என்ற சொல்லே முழு இனத்துக்கும் மூல மொழிக்கும் பயன்பட்டது. ஆனால் திராவிடம் என்ற சொல்லை முழு இனத்துக்கு வழங்கிய அவரே, மொழி நூலடிப்படையில் அதில் இரு பெரிய உட்குழுக்கள் கண்டார். ஒன்று ஆந்திர உட்குழு. இது ஆந்திர மொழி ஒன்றை மட்டுமே உட்கொண்ட இனக் குழு. இனக் குழுவான இதனை அவர் தமிழ்க்குழு என்றே குறிப்பிட்டார்.

வரலாற்றடிப்படையாக, 12-ம் நூற்றாண்டுவரை கூட தெலுங்கு கன்னட மொழிகள் ஒரே மொழியாக (ஆந்திர கர்நாடகம் அல்லது ஆந்திரம் என்ற பெயருடனும் தமிழரால் வடுகு என்ற பெயருடனும்), ஒரே எழுத்து முறையுடன் (தெலுங்கு என்றே முன் அழைக்கப் பட்டும் இன்றைய கன்னட எழுத்து வடிவுடன்) நிலவியதாக அறிகிறோம். நல்லாயர் கால்டுவெலே இதை எடுத்துக்காட்டியும் உள்ளனர், அக்காலத்தில் திராவிடம் தென் திராவிடம் (தமிழ், மலையாளப் பகுதிகள்), வடதிராவிடம் (தெலுங்கு, கன்னடப் பகுதிகள்) எனப் பிரிவுற்றுக் கிடந்தது என்னலாம்.

வரலாற்று மரபு, மொழி நூல் ஒப்பீட்டு முறையான மொழி மரபு ஆகிய இந்த இரண்டு மரபையும் இணைத்துப் பார்த்தால், வடதிராவிடம் தென் திராவிடமாகப் பிரிந்த காலத்தில், தென் திராவிடம் ஒரே தமிழ் மொழியாய் இருந்தது என்றும்; வடதிராவிடமும் ஒரே மொழியாய் இருந்ததென்றும், வடதிராவிடம் தென் திராவிடமாகிய தமிழினின்றும் இன்றைய தெலுங்களவு பிரிந்து விடவில்லை என்றும்; தமிழுடன் நெருங்கிய தொடர்புடைய கன்னடத்திலிருந்தே தெலுங்கு பிரிந்ததென்றும் விளங்கும். தமிழுக்கடுத்தபடி கன்னடமே இலக்கியப் பழமையுடையதாயிருப்பதும் இங்கே கருதத் தக்கது.

முன்பே பிரிந்து சென்ற கன்னடம் பின்பிரிந்த மலையாளத்தைவிடத் தமிழுக்கு அணிமையாயிருப்பதும், கி.பி. 9-ம் நூற்றாண்டுக்கு முன் மலையாள நாடும் தமிழ் நிலமாகவே நிலவியதும், கிரேக்கர் இரண்டையும் தமிழகம் என்றே குறித்ததும் தென் திராவிடத்தில் தமிழின் பழமையை வலியுறுத்தும்.

தமிழ் திராவிட இனத்தின் பழமை மிக்க மொழி மட்டுமல்ல, மூல மொழியின் உயிர்மையமும், தாய்மரபும் அதுவே என்பது தெளிவு. தமிழ் என்ற பெயருடனேயே மூலமொழியும் இனமும் நாடும் ஒருங்கே தொன்று தொட்டுக்குறிக்கப்பட்டன. மலையாளக் கவிஞராலேயே 16 ம் நூற்றாண்டுவரையும் அயலவரால் 19-ம் நூற்றாண்டளவும் மலபாரில் வழங்கிய மொழி தமிழ் என்றே குறிக்கப்பட்டது.

பழய இடப்பெயர், கல்வெட்டு ஆராய்ச்சிகளும் தென்னக முழுவதும் முன் வழங்கிய மூல திராவிட மொழி தமிழே என்று நிலைநாட்டும்.

நீலகிரியிலுள்ள உதகமண்டலம், ஆந்திர நாட்டின் வடபாலுள்ள ஓரங்கல் ஆகியவற்றின் பெயர் மரபுகளே இதற்கான சான்றுகளுள் சில. உதகமண்டலம் என்பதில் உதகம் என்பது நீரைக் குறித்த சமஸ்கிருதச் சொல் என்றும், மண்டலம் இரு மொழிக்கும் பொதுவான இடப்பெயர் என்றும் இன்று கருதப்படுகிறது. ஆனால் கல்வெட்டுக்களில் அதன் பழம் பெயர் 'ஒற்றைக்கல் மன்றம்' என்பது. ஓரங்கல் என்பதும் 'அம்' சாரியை பெற்றுப் புணர்ந்த 'ஒருகல்' என்ற தொடரே யாகும். புராணங்களில் இதற்குப் பண்டிருந்தே வழங்கும் 'ஏகசிலா நகரம்' என்ற பெயர் இப்பழம் பொருளைப் பதிவு செய்துள்ளது

## 24. இனப் பண்பு நிறைவே திராவிடம்!

மூல திராவிட மொழி தமிழேயானால், அதனை அறிஞர் திராவிடம் என்றழைப்பதைவிட, தமிழ் என்றே அழைத்தல் பொருத்தமல்லவா என்று பல தமிழர் வாதிடு கின்றனர். இதற்கு மறுமொழியன்று, விளக்கம் மேலே தரப்பட்டுள்ளது. ஆனால் தமிழர் வாதத்துக்கெதிரான ஏனைத் தென்னவர் வாதங்களை ஆய்வது சுவையுடையது. பயனுமுடையது.

மூலதிராவிட மொழிக்கு இன்றைய மொழிகளில் ஒன்றின் பெயரிடுவதாய் இருந்தால், தெலுங்கு (ஆந்திர) மொழியின் பெயரே அதற்கு மிகமிகப் பொருத்தமுடையது என்பது திராவிடமொழி யறிஞரான பேராசிரியர் இராம கிருஷ்ணய்யாவின் முடிவு. இலக்கிய வழக்கு ஒன்றில் அது தமிழுக்குப் பிற்பட்டு விட்டதாயினும், மூல திராவிட மொழிக்கு அதுவே மிகவும் அணிமையுடையது என்றும், மிகத் தெளிவான திராவிடப் பண்புகளும், மிகப் பழமை வாய்ந்த திராவிடப் பண்புக்கூறுகளும் உடையது அதுவே என்றும் அவர், ஆங்கிலத்தில் தொகுக்கப்பட்ட 'திராவிட ஒப்புச் சொற்கள்' (Dravidan Cognates) என்ற ஏட்டில் குறிப்பிடுகிறார். பேராசிரியர் தாய்மொழிப் பற்றார் வத்துக்கு மட்டுமன்றி, அவர் தம் ஒப்புயர்வற்ற ஆராய்ச்சித் திறத்துக்கும், நுண்ணேக்குக்கும் ஆழ்புலமைக்கும் கூட இது ஒரு சான்று என்பதில் ஐயமில்லை. உண்மையில் வாதம் தாய்மொழிச் சார்பாய் இருந்தால்கூட, அவர் முடிபு மனமார நடுநிலை தவறாத ஒன்றே ஆகும்.

ஆனால் இதே முதன்மையை இதே நடுநிலை ஒப்பீட் டாராய்ச்சித் திறத்துடன் இன்னும் வன்மையாக அறிஞர் கவிஞர் உள்ளூர்ப் பரமேசுவர ஐயர் முதலியவர் மலையாளத்தின் சார்பிலும், தமிழுடன் சேர்த்துக் கன்னடமொழிச் சார்பில் திருத்தந்தை ஹீராஸும் வாதிட்டுள்ளனர்.

தமிழர் மூலதிராவிடத்தைத் தொல்பழங்காலத் தமிழ் என்றும்; தெலுங்கர் அதைத் தொல்பழங்காலத் தெலுங் கென்றும்; மலையாளிகள் அதைத்தொல்பழங்கால மலையாள மென்றும்; கன்னடியர் அதைத் தொல்பழங்காலக் கன் னடமென்றும் கூற விரும்புகின்றனர். இதில் தவறொன்று மில்லை. ஏனெனில் எல்லா மொழிகளும் ஒரே நேர்மரபில் வந்தவையே. ஒரே முற்காலப் பெரியார் படத்தைக் கொண்டு 'இது என் பாட்டன் படம், இல்லை என் பாட் டன் படம்' என்று போரிடுகின்றனர் நாகன், கருப்பன், வேலன், பெருமாள்,' என்ற நால்வர். படத்தில் கீழ் இருந்த பெயர் மங்கி மறைந்துள்ளது. அது நாகன் தான், கருப்பன் தான், வேலன் தான், பெருமாள் தான் என்றும் அவர்கள் போரிடுகின்றனர். நால்வர் குடும் பத்திலும் வழங்கும் ஆதன் என்ற பெயரைக் கண் டெடுத்து, மயங்கிய பெயர் அதுவே என்றும், நால்வர்க்கும் அவ் ஆதனே பாட்டனு ரென்றும், நால்வரின் நண்பனான அந்துவன் கூறுகிறான். நால்வரும் பொதுவில் அதனை ஏற் கின்றனர்—திராவிட மரபின் நிலையும், பெயர் மரபின் நிலையும் இதுவே.

திராவிட மொழியின் ஒவ்வொரு கிளையும் மூலமரபு தான் என்று கூறுமளவுக்கு மூலமரபு பேணுவது; மூல மரபின் பண்பில் ஒவ்வொரு அல்லது சிலபல அடிப்படைக் கூறுகளை ஒவ்வொன்றும் வளர்ப்பது ஆகும், மூலமரபு வாதம் காட்டும் உண்மை இதுவே. இது திராவிட இனத் தின் உயிராற்றலுக்கு, உயிர்க் கட்டுப்பாட்டுக்கு ஒருசீரிய சான்று. ஏனெனில் இவ்வொற்றுமை கால இட வேறுபாடு கடந்த ஒன்றுமட்டு மன்று, பிற இன ஆதிக்கம், அடிமை நிலை ஆகிய இனத்தளர்வுக்குரிய சூழல்கள் கடந்தது. இப்போட்டி உண்மையில் திராவிட இனப்பற்றுளர் கண்டு இறும்பூதெய்துவதற்குரிய ஒன்று ஆகும்.

ஆனால், எல்லா மொழிகளும் எப்படி மூல மொழிகள் ஆகும்? தமிழே மூலமொழி என்பதும் இவ்வாதங்களில் ஒன்று தானா? எவரும் எளிதில் கேட்கத் தோன்றும் கேள்விகள் இவை.

உதகமண்டலம், ஓரங்கல் முதலிய மேலே காட்டிய இடப்பெயர் மரபு நால்வர் வாதங்களும் கடந்தது. கடற்கரைத் துறைமுக நகரங்கள் பழந்தமிழ் மரபில் பிழையாது ஆந்திர, கன்னட நாடுகளிலும் (விசாகப்பட்டினம், மசூலிப்பட்டினம், காரைப்பட்டினம்) காணப்படுவதும் இத்தேவகையினதே.

நாலு மொழிகளும் நேர் வழியில் ஒரே மூலமரபின் திசை வழக்குகளானாலும், கி. பி. 9-ம் நூற்றாண்டு வரை நான்கின் மொழி வடிவமும் தமிழே, பெயரும் தமிழே, நான்கிற்கும் உரிய தொடர்ந்த இலக்கிய மொழி தமிழ் ஒன்றே.

தெற்கின் ஒரே இலக்கிய மொழி தமிழாகவும், வடக்கின் ஒரே இலக்கிய மொழி சமஸ்கிருத மாகவும் இருந்த காலத்தின் சின்னமே தென்மொழி, வடமொழி என்ற வழக்கு. இது கி.பி. 5-ம் நூற்றாண்டுக்கும் 9-ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிப்பது ஆகும்.

தமிழ் நீங்கலான மற்ற மொழிகள் சமஸ்கிருத நெடுங்கணக்கையே இறக்குமதி செய்து, சமஸ்கிருதச் சிறப்பு எழுத்துக்களையும் கொண்டுள்ளன. ஆனால் தமிழ்ச் சிறப்பெழுத்துக்களைச் சில கொண்டுள்ளன. சில முன் சிறப்பெழுத்துக்களை உடையனவாய் இருந்து, படிப்படியாக விலக்கின. ஆனால் மூல திராவிட மொழிகளிலும், கிளை மொழிகளின் தூய தாய்மொழிச் சொற்களிலும் சமஸ்கிருதச் சிறப்பொலிகள் கிடையாது. தமிழ்ச் சிறப்பொலிகள் உண்டு.

தமிழில் முதலில் வராத எழுத்துக்கள். கூட்டு மெய் யெழுத்துக்கள் பெரும்பாலும் தூய தாய்மொழிச் சொற்களில் இல்லை. சிறுபான்மையாக இருப்பவையும் மூல திராவிடத்தில் கிடையாது.

மூல திராவிடமொழி கிளைகளாகப் பிரியும் ஒவ்வொரு படியிலும், பிரிகின்ற மொழிகள் தனியாகவும், தமிழ் நீங்தஇனத் தாய்க்கிளையின் முதலாகவுமே உள்ளன. இதன் மரபு கிளைமரபல்ல, தாய் மூலமரபு என்பதை இச் செய்திகள் நிலைநாட்டுகின்றன.

## 25. உலகளாவிய தமிழ்ப் பண்பு

திராவிட இனமொழிகள் தென்னகத்தில் மட்டுமல்ல; அது கடந்தும் பண்படா நிலையில், பிறதிராவிட மொழிகள் உள்ளன.

வடமேற்கில் பலூச்சியும், வடக்கில் நடுவே கோண்டு, கூயி, ஒராவோன் ஆகியவையும், வட கிழக்கில் இராசமகாலியும் இவற்றுள் முக்கியமானவை.

வடதிசை எங்கும் இவை பரவியிருப்பதை நோக்க, திராவிட இனம் ஒரு காலத்தில் சிந்து கங்கை முழுவதும் பரவி யிருந்ததென்று திடமாகக் கூறலாம். ஆரியர் வருமுன் நிலவிய சிந்துவெளி நாகரிகமும் பிறசெய்திகளும் இதை மெய்ப்பிக்கின்றன. இன்றைய திராவிட இனம் மாநிலத்துக்குள் வடமேற்கில் 'பலூச்சி'யின் தடம் வழி வந்ததென்று சில மேலை அறிஞரும், அது வடகிழக்கிலிருந்து வந்ததென்று வேறு சிலரும் கூறுகின்றனர். எந்த நாகரிக இனமும் ஆரியரைப் போல வடக்கிருந்து, வடமேற்கிலிருந்து வந்திருக்க வேண்டு மென்பது மேலை யறிஞரின் முற்கோள் அல்லது முன்கருத்து ஆகும். ஆரிய இனத்தவராகத் தம்மை உயர்வுபடக் கருதிக் கொள்ளும் ஆரிய

இனப்பற்றுளர்க்கும் இது உகந்த கருத்தாகவே அமைகிறது. ஆனால் உலக நாகரிகப் போக்கைக் கவனிப்பவர்க்குப் பண்படாக் குடியெழுச்சிகள், படையெடுப்புக்கள் மட்டுமே மேற்கிலிருந்து கிழக்கு, வடக்கிலிருந்து தெற்கு செல்கின்றன என்பதும், நாகரிகப் போக்கு எப்போதுமே கிழக்கிலிருந்து மேற்கு, தெற்கிலிருந்து வடக்கு என்றே செல்கின்றன என்பதும் தெளிவாகும்.

பண்படாத் திராவிட மொழிகளிலும் மிகப் பண்படா மொழிபலூச்சி. ஆகவே அது மூலதிராவிடத்துக்கு அருகாமையுடையது என்பதும், காலத்தால் முந்தியது என்பதும், திராவிடர் வருகையில் வழியில் முதலில் இருந்த இடம் என்பதும் மேலையறிஞர் வாதம். ஆனால் மேற்கே பண்பாடு குறைந்த நிலை திராவிட இனத்தில் மட்டுமன்று. ஆரிய இனத்திலும் உள்ள நிலையே என்பதை அவர்கள் கவனிக்கவில்லை—அல்லது கவனித்தும் கவனியாதது போல் விட்டு விடுகின்றனர். ஆரியர் இந்தியா வந்ததன் பின்னரே பண்பாடுற்றனர் என்பதை மனமார ஏற்க அவர்கள் விரும்புவதில்லை. திராவிடர் தென்திசை வந்த பிற்பாடே பண்பாடு பெற்றனர் என்பதை ஆராயாது நிலைநாட்ட மட்டுமே அவர்கள் உள் மனம் துடிக்கிறது என்று காண்டல் தெளிவு.

பலூச்சி மொழியின் பண்பாட்டுக் குறைவு அதன் பழமை சுட்டுகிறது என்பது உண்மையே. பண்பட்ட மொழிகள் தம்முள் பிரியுமுன் அது மூலமொழியிலிருந்து முதல் பிரிவுற்றது என்பதும், இனச்சூழல், பண்பாட்டுச் சூழல் ஆகிய இரண்டிலிருந்து விலகி நீடித்த காலம் இருந்ததென்பதும் இதற்குப் போதிய விளக்கம் ஆகும்.

திராவிட இனம் தெற்கிலிருந்து தான் வடக்கே பரவிற்று என்பதற்கு நாம் வேறு சான்றுகள் காட்ட முடியும்.

வடதிசைப் பண்படா இனங்களைக் கிளையினங்களாக நல்லாயர் கால்டுவெல் வகுக்கவில்லை. ஆனால் வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்ற திசை வழியே அதன் கிளைகளும் பிரிவன ஆகும். இக்கிளையினங்கள் மூன்றும் வடதிசையில் இருந்தாலும் அவை தம்முள் கொள்ளும் தொடர்பையும், அணிமைத் திராவிட மொழியாகிய தெலுங்குடன் கொள்ளும் தொடர்பையும்விட, அவை கூட்டாகவும் தனித் தனியாகவும் தென்கோடி மொழிகளுடன், சிறப்பாகத் தமிழுடன் கொள்ளும் தொடர்பே மிகுதி என்று நல்லாயர் கால்டுவெலே குறிக்கிறார்.

தமிழ் மற்றப் பண்பட்ட கிளை மொழிகளாகப் பிரிவதற்கு முன்பே, மூலதிராவிடமாகிய தமிழிலிருந்து பலூச்சி முதலிலும், மற்றவை பின்னும் பிரிந்து சென்றன என்பதை இந்நிலை விளக்குகிறது.

தமிழ் பண்பட்ட திராவிட இனத்தின் மூலமொழி மட்டுமல்ல—பண்பட்ட மொழிகள், பண்படா மொழிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய திராவிடப் பேரினத்தின் மூலமொழியாகும்.

திராவிட மொழிப் பண்பில் திராவிட மொழிகள் அத்தனையையும் விஞ்சியது இந்தி என்று கருதுகின்றனர் இந்தி மொழி அறிஞர். ஏனெனில் வேறு எந்த இனத்துக்கும் இல்லாத முறையில் வினை முற்றுக்களுக்குப் பால் வேறுபாடு கொண்டுள்ளது திராவிடம். ஆனால் இதை வேறு எந்த மொழியோ, எந்தத் திராவிட மொழியோ மேற் கொள்வதைவிட மிகுதியாக இந்தி மேற்கொண்டுள்ளது. ஏனெனில் திராவிட மொழிகள் படர்க்கை ஒருமையில் மட்டும்ஆண் பெண்பால் வேறுபாடு உடையன. இந்தியோ படர்க்கை ஒருமையில் மட்டுமன்றிப் பன்மையிலும், தன்மை, முன்னிலை இரு எண்களிலும் பெண்பால்

வினைமுற்றுக்கள் உடையது. தெலுங்கு மொழியின் தனித் திராவிடப் பண்புக் கூறுகளில் ஒன்றாகப் பேராசிரியர் இராமகிருஷ்ணையா டகர ளகர ணகர மிகுதியை எடுத்துக் காட்டுகிறார். ளகர மிகுதி கன்னடத்துக்கும் உண்டு. தவிர மாண்ட மொழிகளில் பாளியும் சமஸ்கிருதமும், உயிர் மொழிகளில் மராத்தி, கொங்காணிகளும், ஓரியாவும் இப் பண்புகளில் பங்கு கொள்கின்றன.

ஒலி மாறுபாடு, கருத்துப்படிவங்கள், வேற்றுமை உருபுகள், முற்றுவினைப்படிவங்கள், வினைமுற்றுப் பெயர்கள் ஆகியவற்றில் இந்தி மட்டுமன்றி, வடதிசை இந்தோ ஆரிய மொழிகள் அனைத்துமே பொதுவாகவும், தனித்தனியாகவும் திராவிடத்துடன் தொடர்புடையன. திராவிட மொழிகளுடன் சமஸ்கிருதத்துக்கு உரிய தனி ஒப்புமைகளும், வேத மொழிக்குரிய தனி ஒப்புமைகளும் பல. பல திராவிடச் சொற்கள்—தெலுங்குச் சொற்களே—சமஸ்கிருதத்தில் மட்டுமன்றி வேத மொழியிலும் இடம் பெற்றுள்ளன என்பதைப் பேராசிரியர் இராமகிருஷ்ணையாவும் பிறரும் எடுத்துக் காட்டுகின்றனர்.

உலக மொழியினங்களுக்கு ஆரிய மொழியினம் தந்த விலை மதிப்பதற்கரிய தனிப் பரிசுகள் பல உண்டு. இவற்றை உற்றுணர்ந்தால் ஆரிய இனப்பற்றாளர் உண்மையிலே மகிழ்ந்து குதித்தாட இடமுண்டு. இவற்றுள் பயனிலைப் பாடு மட்டுமே குறித்தவினை (Verb ‘be’), மிசைநிலை நவிற்சி (Degrees of comparison), முக்காலத்தும் ஏவலிலும் நுட்ப வேறுபாட்டு நிலைகள் குறித்த வினைப்படிவங்கள் (Aorist, benedictive, optative etc.), உடன் பிறந்தார், குறித்த பொதுச் சொற்கள், வகை வகையான இணை சுட்டுப் பெயர்கள், (Relative pronouns & relative adverbs & ever ‘relative adjectives’) ஆகியவை இவற்றுட் சில திராவிட மொழிகள் மட்டுமன்றி, ஆரிய இனம் சாரா

எம் மொழியும் மொழிபெயர்க்கவே முடியாமல் வெட்கித் தலை குனியத்தக்க அளவில் வெளியிடவே முடியாத நுண்ணயங்கள் உடையவை இவை.

பண்பாட்டு அடிமை நிலையில் நீடித்த திராவிடமொழிகள்கூட, இதுபோன்ற தனிச் சிறப்புடைய நுண்ணயங்களை விட்டுக்கொடுக்க இசையாமல் நீடித்துப் போராடியுள்ளன. அப்படியிருக்கத் தாய்மொழி வாழ்வுகளைப் பெரும் பரப்புக்களில் முழுதும் கெடுக்கு மளவு நீடித்த ஆதிக்கம் செலுத்திய ஆரிய மூலமொழி இவற்றை எளிதில் விட்டுக் கொடுக்கக்கூடும் என்று நம்ப முடியாது. மேல் திசையில் இன்றளவும் இத்தனிச் சிறப்புக்கள் மேலை மொழிகளில் மிகுதி குன்றிவிடவில்லை. ஆனால் மேல் திசையில்கூட இச்சிறப்புக்கள் முழுதும் வளரவில்லை—கீழ்திசையிலோ வேதமொழியிலேயே இவை படிப்படியாகக் குறைவதையும் திராவிடப் பண்புகளுடன் இவை விரவுவதையும் காண்கிறோம். வேத மொழியில் மட்டுமன்றி, தொல் பழம் பாரசிகத்தில் (அவெஸ்தாவில்) கூட இவ்வாரியத் தனிச் சிறப்புக்கள் மங்கி மறுகுவதையே காண்கிறோம்.

திராவிட இனமொழிகள் யாவும் தமிழுடன் பொதுவாகவும், தனித்தனியாக நேரடியாகவும் தொடர்பு உடையன. இதற்குக் காரணம் தமிழ் அவற்றின் மூல மொழி என்பதே. ஆனால் இந்தோ ஆரிய இனம் என்று கூறப்படும் இந்தியத் தாய்மொழிகள் சமஸ்கிருதம், பாளி, பாகதங்கள், வேதமொழி ஆகிய யாவுமே பொதுவாகவும் தனித்தனியாகச் சிறப்பாகவும்; பலபடி, பலவகை, நேரடித் தொடர்புடையவையாகவே விளங்குகின்றன. தமிழ் அவற்றுக்கு நேராக மூலமொழியல்லவானாலும், தமிழின் வழி வந்த மொழி அல்லது தமிழ்த்திசைவழக்கு ஒன்றின் அடித்தளமீதே அவை பலபடி, பலவகை ஆரியக் கலப்பால் உருவாகியுள்ளன என்பதையே இது காட்டுகிறது. ஆகவே

தமிழ் இந்தியா முழுவதும் பரவியிருந்த திராவிடப் பேரினத்துக்கு மூலமொழியாகவும், அவ்வழி, இந்தோ ஆரியம் என்னும் திராவிட ஆரியக் கலப்பு மொழியினத்திலும் திராவிட மூலத்துக்கு மூலமும் ஆகும்.

இந்திய ஆரியம் எப்படி பலவகை, பலபடி ஆரிய திராவிடக் கலப்பினமோ, அதுபோலவே, பாரசீக ஆரியம், கிரேக்க ஆரியம், இலத்தீன ஆரியம், மேலை ஆரிய இனத்தின் ஈரடுக்குகள் (கெல்ட்டியர், டியூட்டானியர் அல்லது ஜெர்மானியர்) ஆகிய இனங்கள் பலபடி, பலவகை ஆரியக் கலப்பின மொழிகளே. இவையும் பலவகை பலபடியில் பொதுவாகவும், சிறப்பாகவும் தமிழுடன் தனித்தனித் தொடர்புடையன. சொற்படிவம், கருத்துப்படிவம், இலக்கணப் படிவங்கள், மரபுகள் ஆகியவற்றில் இவ்வகைத் தொடர்புகளைக் காணலாம். கிரேக்க மொழியிலும் சமஸ்கிருதத்திலும் ஓரை(ஹோரா), நாவாய் ஆகிய புதிய சொற்களையும், பழய. புது போன்ற பழய சொற்களையும், இலத்தீனில் ஏர் (ஆரா)போன்ற சொற்களையும், மேலை ஐரோப்பிய மொழிகளில் இயற்கைப் பொருள் சார்ந்த பால் வேறுபாடுகளையும் இவற்றுக்குச் சான்றுகளாக குறிக்கலாம்.

ஆரிய மொழிகளுடன் உலகின் உயிர் மண்டல முழுதும் கலந்து அவற்றைப் பல காலங்களிலும் பல படியான பண்பட்ட மொழிகளாக்க உதவிய மூல ஆரியச் சார்பற்ற மொழி அல்லது மொழிகள் அல்லது மொழியினங்கள் தமிழ்த் தொடர்புடையவை என்று இதனுல் உய்த்துணரல் தகும்.

இவ்வினங்கள் யாவும் பொதுவாக நடுநிலக் கடலக இனம் என்று குறிக்கப் படுபவையே. இவற்றுள் பழமை மிக்கன எகிப்து, சுமேர், ஏலம், சிந்து வெளியினம் ஆகியவை. சிந்து வெளியிலேயே அவை முற்பட்டு முன்னேங்கித்

தழைத்தது காண்கிறோம். நடு நிலக்கடலக இனத்தின் மூலத் தாயகம், மூலப்பண்பகம் தென்னகத்தின் திசையில் உள்ளது என்பதைப் பொது ஒப்பீடும் பொருளாராய்வும் ஒருங்கே காட்டுகிறது.

பண்புடைய நடுவுலக நாகரிக முழுமைக்கும் அதன் மொழினங்களுக்கும் தமிழ் மூல உயிர் ஊற்றாய், உலகின் உயிர் நாகரிக மண்டலத்தின் உயிர்மையமாய் விளங்கிற்று.

நல்லாயர் கால்டுவெல் திராவிட இனத்தைச் சிதிய இனத்துடனும், சிறிய பேரினம் என்று அவர் கருதிய சிதிய, துரானிய, மங்கோலிய இனங்களுடனும் தொடர்பு படுத்தியிருந்தார். ஒரே பேரினம் என்று கூறுமளவு அவை உயிரொற்றுமை உடையவையல்ல என்று இன்று அறிவுலகம் கருதுகிறது. ஆயினும் தமிழினத்தை மையப் படுத்தியே நல்லாயர் அவற்றில் ஒற்றுமை காண முடிந்தது. பண்புடைய உலக மொழிகள் தமிழினப் பெருமூல மொழியிலிருந்து பிரியுமுன், தமிழுலகமே பண்படா நிலையில் இருந்த காலத்தில் நடு உலக மனித வாழ்விலிருந்து பிரிந்து சென்ற இனங்களே இவை என்று கூறத்தகும்.

ஆரியச் சார்போ, நடுநிலக் கடலகச் சார்போ அற்ற வட ஆசிய — ஐரோப்பியப் பெருங்குழுவில் வட மேல் கோடியில் உள்ள பின்னிஷ், நடு ஐரோப்பாவிலுள்ள ஹங்கேரியன் ஆகியவை தமிழினத்துடன் வியத்தக்க முறையில் மிக நெருங்கிய தொடர்புடையன என்று மேலையறிஞர் கருதி வருகின்றனர். துருக்கி, சீனம் ஆகியவற்றின் தொடர்புகளையும் நல்லாயர் கால்டுவெல் சுட்டிக் காட்டியுள்ளார். இவற்றுடன் தென்கிழக்காசிய, அமெரிக்க நாகரிகங்களை இணைப்பதாகத் தமிழ் நிலவுகிறது.

வட ஆசிய ஐரோப்பியப் பெருங்குழுக் கடந்து அவற்றினும் முற்பட்டு மனித இன மூல மொழியாகிய தமிழ்

லிருந்து பிரிவுற்று வடகோடியில் தனிவளர்ச்சி பெற்ற மொழியினமே ஆரியம். அது தெற்கில் சாய்வுற்ற போது, மற்ற வட ஆசிய-ஐரோப்பியப் பெருங்குழுவினரும், நடு நிலக்கடலக இனங்களும் பிறவும் பிரிந்து சிதறுண்ட தனாலும், அவற்றுடன் விரவி ஆரியர் பல வேறு இடங்களில் பல வேறு படியில் பல வகைப்பட்ட உயர்வு தாழ்வுகளு டைய பண்பாடுகள் வளர்த்த தனாலுமே, இன்றைய மனித உலகம் ஒரே இன வளர்ச்சியுடையதாகத் தோற் றாமல் பல இனங்கள் போலக் காட்சியளிக்கின்றது.

மனித இனத்தின் இன முதிர்வருச் சுற்று வரைப் பரப்பிலிருந்து படிப்படியாகத் தமிழ்ப் பண்பாடு என்னும் மலை, பல பெருங்குழுக்கள், குழுக்கள் ஆரிய தளங்களி னூடாக; தளங்கள், மேடுகள் ஆகிய அனைத்தின் மையக் கொடுமுடியாக நின்று, எல்லாத் தளங்களையும் மேடுகளை யும் அடிவாரத்துடன் இணைத்து, தானே மலைத்தொடராக வும், மலையாகவும், பீடபூமியாகவும், அனைத்தின் மணிமுடி யான கொடுமுடி உச்சியாகவும் திகழ்கிறது.

உலகெலாம், மனித இன மெலாம் பரவி, மனித இனப் பண்பே தன் பண்பாகக் கொண்டு, மனித இன வாழ்வின் முக்கால மளாவிய இப் பேரினத்தின் வளமும், வளவாய்ப் புமே தமிழின் கன்னித்தாய்மை, மூவா இளமை, பொங்கு மாவளம் ஆகியவற்றின் மறைதிறவு ஆகும்.

## 26. முப்பால் முழக்கம்

*தமிழ், தமிழகம், தமிழினம், தமிழ்ப்பண்பு!*

தமிழ் என்ற சொல்லின் நால்வகைப்பட்ட அழகிய அடுக்குத் தொடர்கள்—சொல்லழகும் புனை சொல்திறமும் உடையாரின் நாநயத்துக்குச் சான்றான சொல்மடக்குகள் என்றுதான் இவற்றைப் பலரும் எண்ணுவர், எண்ணு கின்றனர்!

தமிழரல்லாதார் மட்டுமல்ல, தமிழரும் - தமிழ்ப் பொது மக்கள் மட்டுமல்ல, மாணவரும் அறிஞரும் கலைஞரும் கூட இவ்வாறு எண்ணி விடுகின்றனர். தமிழர் அவல வாழ்வும், உலகில் தமிழர் பெறும் இடமும் தமிழரே இவற்றை விரும்பி மேற் கொள்கிற, மேற் கொண்டு பெருமைப் படுகிற நிலையும் இவ் வெண்ணத்தையே அடிப்படையாக, தொடங்கு முகமாகக் கொண்டவை; அதை வலியுறுத்துபவை ஆகும்.

மறுமலர்ச்சித் தமிழரேனும்—புதுமலர்ச்சியில் காலடி எடுத்து வைக்க நினைப்பவராவது மேலீடான இவ்விடக்கு மடக்குகள் கடந்து அவற்றின் புதைமலர்ச்சிப் படிகளின் நயத்திறங்கள் காண்டல் வேண்டும்.

மனித இன வாழ்வு என்னும் ஏரியின் வற்றிய நீர்த் தடங்கள் சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன் முதலிய மாண்ட உயர்தனிச் செம்மொழிப் பரப்புக்கள். வற்ரு நீர்வளப் பகுதிகளே வங்கம், மராத்தி, சீனம், பிரஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் போன்ற உயிர் மொழிகள். மாண்ட உயர் தனிச் செம்மொழிகளில் வாழும் ஒன்ருகவும், வாழும் உயிர் மொழிகளில் மாளா வாழ்வு வளமுடைய ஒன்ருகவும் தமிழ் தனிப்பண்புடன் நிலவுகிறது. மொழியின் பெயராகிய தமிழ், பொது அளாவிய இத் தனிநிலை குறிப்பதாகும்.

தமிழகம் தனிநிலைத்தமிழ் இன்று பேசப்படும் இடம் குறிப்பதன்று. முன்பு பேசப்பட்ட முழு எல்லையை—திராவிடம் என்ற தென்மொழியின் பரப்பைச் சுட்டுவது ஆகும். அது உண்மையில் தென்னக மென்பதன் மறு பெயரே.

திராவிட இனம் திராவிடம் கடந்தும் உலகெலாம் அதன் உயிர் மண்டலமாகப் பரவியது, தமிழினம் என்ற சொல் குறிக்கும் விரிமலர்ச்சி இது.

தமிழ்ப்பண்பு என்ற தொடரும் தமிழுலகு என்ற தொடரும் மனித இனப்பரப்பு முழுதும் அளாவிய தொடர்கள் ஆகும். முன்னது பண்பட்ட உலகின் வளர்ச்சித் திசையையும், பிந்தியது அதன் தொடக்கத் தளத்தையும் குறிப்பது ஆகும். உலகைத் தமிழ்மொழி, நாடு, இனம் கடந்த ஓர் அகல்பெருங் குடும்பமாகத் தமிழர் கருதினர். தென்றலானின் தீந்தமிழ்க் கொடியுயர்த்த பொதிகையே உலகமையமான மேருவாக அவர்களால் உவமிக்கப்பட்டிருந்தது. கதிரவன் அதனையே வலம் வருவதாகவும், அதனை நோக்கி வலமாக எழுந்து வடதிசை நாடும் சமயமே பொங்கல் குறித்த வேளையாகவும் தமிழ்க்கவிஞர் கற்பனை செய்தனர்.

உயிர்ப்பண்பையும் உயிர்ப்பண்பு வளத்தையும் பொங்கல் வளத்தையும் ஏந்திய இனம் தமிழினம், தென்னகம். அது மனிதப்பேரினத்தின் உயிர்விதை, மூலமுளை, ஆயிரங் காலத்துப் பயிர். வருங்காலத்துக்குரிய வளத்தைக் கருவிலேந்திய அவ்விதை நீண்ட காலம் துயிலும் பொதிகையருகே துயிலில் ஆழ்ந்து கிடந்துள்ளது. ஆனால் துயிலும் போதும் கனவின் சிற்றலையோட்டங்கள் அதன் துயிலாழத்தில் அதிராமல் இல்லை. இப்போது துயில் கலையத் தொடங்கியுள்ளது. கண் மலரத் தொடங்கியுள்ளது. அதன் விடியற்காலக் கனவுகள் கீழ்வானில் தகத் தகாயமாய் வண்ணப் பட்டொளி காலுகின்றன.

துயிலும் இனம் இன்னும் தன் போர்வையை இழுத்து மூட, திறக்கும் இமைகளை மீண்டும் சிறிது மகிழச் செய்கின்றன. வாடையின் கடைசி அலை வீச்சுக்கள். கோடையின் வெது வெதுப்பு வாடையை விரைந்து விலக்கினும் தளர்ச்சியிடையே அயர்ச்சி ஊட்டுகிறது. ஆயினும் விழிப்படைந்துவிட்ட அகநரம்புகளின் வழியாகப் பொதிகையின் பூங்குயில் இசை மெல்ல யாழ்குழல் இசைபோல அதிர்

கின்றது. சுரும்பிசை முரல்கின்றது. மலர்மணம் கமழ்கிறது. தேன் இருவின் புத்தூக்கத்தை இவை தட்டி எழுப்புகின்றன. இளவேனில் உயிரலை பாய்கிறது.

பொதிகை தரும் இப்புது மணம் இனக்கண்களைத் திறந்து வைக்கின்றது,

தமிழினத்தின் துயிற்கால இராப்போதில் வீசியடித்த வாடையின் வெறியாட்டத்தால், சூழ்திசை சோர, கீழ்திசை துவண்டு கிடக்கிறது. கோடையே புறவெறியேற்றி வடமேல் கோடியிலுள்ள மனிதனை இனமரத்தின் உச்சிக்கிளை யேறிநின்று அடிமரத்தில் சுரங்கம் வைக்கத் தூண்டுகிறது. துயிலெழும் தமிழினத்துக்கு இம்மூவேறு சூழலையும் திருத்தித் தானும் புதுவளம் நாடும் பெரும் பொறுப்புக் காத்திருக்கிறது. வள்ளுவரது பெண்மை போலத் தற்காத்து, தற்கொண்டான் பேணி, தகை சான்ற சொற்காக்க' வேண்டியவளாகி யுள்ளாள், மூவா இளந்தமிழ்ச் செல்வி!

தான் தமிழாக, தற்கொண்டான் தமிழினம் ஆக, தகை சான்ற சொல் பண்பாகக் கொண்டு புத்தாட்சி செய்ய இன்னே எழுகிறுள், அன்னை!

முப்பால் முழங்குகிறது.
சிலம் பதிர்கிறது.
மேகலை அசைந்தாடுகிறது.
அன்னை விழிக்கிருள். எழுகிருள்.
உலகில் புதுமலர்ச்சி அலைபாயத் தொடங்கிவிட்டது!

சங்கத் தமிழோசை சங்கோசையாகப் பொங்கி எழுகிறது.

இன்பக் கடலின் எழிலார் அரவம் எங்கும் தவழ்கின்றது,

தென்னு தெனு வெனும் ஏங்கியல், தூங்கியல் இசை 'தெந்தாந்தெனு தெனத் திகைதீந் தெனுதென' என நடன எழுச்சிப் பண்ணுகத் தொடங்கி விட்டது.

கண்ணுட, கண்ணின் இமையாட, நுதலாட; கைகள் மருங்கசைய; பட்டிசைக்க, யாழில் பட்டெழுந்த நாதமென அன்னையின் மெல்லடிகள் நிலமீதெழுந்து தவழத் தலைப் பட்டுவிட்டன.

இனி இற்றது தளை, உற்றது விடுதலை, பாய்ந்தெழுக புதுமலர்ச்சி எனத் தமிழகப் புகழோங்குவது உறுதி!

# மாலை—IV

# இலக்கிய மரபு

## 1. இலக்கியத்தின் இலக்கு

*இயற்கை, வாழ்க்கை. இன்ப இலக்கு!*

இடையருது என்றும் இயங்கும் அழிவிலா முப்பொருள்கள் இவை. தமிழகச் சமய அறிவுத்துறை மரபில் உலகு, உயிர், இறை என்றும்; சிறிது முறை மாறிப் பதி, பசு, பாசம் என்றும்; சில சமயம் முறை மாருமலே முறைமையும் பொருள் மரபும் தவறிச் சத்து. சித்து, ஆனந்தம் என்றும் பின்னுட்களில் இவை நிலவி வந்துள்ளன.

இயற்கையினின்று தோன்றி இன்ப இலக்கு நோக்கிச் சுழன்று சுழன்று சென்றுகொண்டேயிருப்பது வாழ்க்கை, இயற்கை அதன் பின்னணி, இன்ப இலக்கு அப் பின்னணியிலே அதற்கு உருவொளி தரும் ஒளி விளக்கு.

*இயல், கலை, இலக்கியம்!*

வாழும் இனம் என்னும் கண்ணுடியில் முப்பொருளின் நிழல் வண்ணங்கள் இவை.

இயற்கையின் இயல்பு பற்றிய அறிவு இயல். வாழ்க்கையின் இன்பதுன்ப உணர்ச்சி இயக்கங்களின் உயிர்ப் படப்பிடிப்பு கலை. அறிவு, உணர்ச்சி, அவற்றின் கலப்பு வண்ணமாகிய உணர்வு ஆகிய மூன்றும் இயைந்து இன ஆக்க நலநோக்கி உருவாகும் பயனுர்ந்த இன்பம், இன்ப உருவான பயன் வடிவான கருத்துப் படிவமே, கனவியல் படைப்பே இலக்கியம்.

மூன்றிலும் முதலது இயலே யானுலும், மூன்றும் ஏட்டுருவம் பெறும்போது, அதுவே நான்காம்படி, அதா

வது முதற்படிகள் மூன்றின் முழுச் சுழற்சி கடந்த இரண்டாம் சுழற்சியின் முதற்படி ஆய்விடுகிறது. ஏனெனில் முதலில் ஏடு ஆக்கியது, இலக்கியமே.

***வீடு! நாடு! இனம் சார்ந்த பீடு சான்ற உயர்வீடு!***

*மனித வாழ்க்கைக்குரிய மூன்று வளர்ச்சித் தளங்கள் இவை. இம் மூன்றனூடாகவும் மனிதன் வளரும் வளர்ச்சி யுருவாகவே தமிழன் இலக்கியத்தைக் கண்டான், வீடும் நாடும் பீடும் தரும் ஏடாக அவன் அதை வடித்தமைத்தான்.*

**வீடு, அறம்.**
**நாடு, பொருள்.**
**பீடுசான்ற உயர் வீடு, இன்பம்.**
**இதுவே தமிழர் வகுத்த முப்பால் மரபு.**
**வீடும் பீடுசான்ற இன்பவீடும் அகம்.**
**நாடு பொருள்.**
**இதுவே தமிழர் வகுத்த அகப்புறப் பாகுபாடு.**

*வீடு புறத்தில் அகம், நாடு புறத்தில் புறம்; இன்பம் அகத்தில் புறம், அகத்தில் அகம் ஆகிய இரண்டும் கூடிய அகம் என இரு வகுப்பு மரபுகளும் ஒன்றுபடுவன. இரண்டின் விரிவாகப் பிறந்த அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பால் பாகுபாடு இதுவே.*

## 2. முத்தமிழ் மரபு

*இயல், இசை, நாடகம்!*

*தமிழர் கண்ட முத்தமிழ் மரபு, ஒரு தமிழை மூன்று தமிழாகக் கண்ட மரபு இது.*

*கருத்தில் கருத்தேணியும், பண்பில் பண்பேணியும் கண்ட தமிழர், இயல், கலை, இலக்கியம் ஆகிய முப்பொருள் வண்ணங்களையும் மீண்டும் குழைத்து உருவாக்கிய இயலேணி, கலையேணி இது. இயல், கலை, இலக்கியம்*

என்ற முப்பிரிவில், ஏடார்ந்த இலக்கியமே ஏடார்ந்த இயலாகி, இலக்கியத்தையும் இயலையும் உண்டாக்கிற்று. ஆனால் இது இயலும் இயல் வண்ணமான இலக்கியமும் மட்டுமே. இது போலக் கலையும் கலை வண்ணமான இலக்கியமும் கலை வண்ணமான இயலும் இசையாயிற்று. வாழ்க்கைக் கலையான இலக்கியம் மூன்றுவது பிரிவில் வாழ்க்கை வண்ணமான கலை இலக்கியமும், வாழ்க்கை வண்ணமான கலை இலக்கியம் சார்ந்த இயலும் நாடகம் ஆயிற்று.

உலகில் தமிழர் நீங்கலான எந்த இனத்துக்கும் பண்டோ, இடைக்காலத்திலோ, இன்றுகூட இல்லாத மரபு, கனவிலும் கருத்திலும் எட்டாத பாகுபாடு இது. இன்றும் இதைத் தமிழிலேயே, தமிழறிஞரிலேயே பலர் முற்றிலும் சரிவர உணர்வதில்லை—இதில் வியப்புக்கும் இடமில்லை. ஏனெனில் உலகு இன்னும் காணாத உயர் நுண்ணயம் இப்பாகுபாட்டில் உண்டு.

தொல்பழங்காலத்தில் தமிழர் கண்ட இம் முத்தமிழ் மரபு, முத்தமிழ்ப் பாகுபாடு சங்க காலத்திலேயே, சங்க காலத்துக்கு நெடுங்காலம் முற்பட்ட தொல்காப்பிய காலத்திலேயே; எக்காரணத்தாலோ மங்கி மறுகத் தொடங்கியிருந்தது. சங்க காலத்தில் சிலம்பு இதற்கு ஒரு மின்னல் மறுமலர்ச்சி தந்தது. ஆனால் மீண்டும் அது மங்கி மறுகவே நேர்ந்தது. கி. பி. 7-ம் நூற்றுண்டில் தேவார ஆசிரியர்கள் அதன் புகழைச் சமயத்துறையில் புதுப்பித்தனர். ஏனெனில் முத்தமிழ் அன்னையாகிய தமிழ்த் தெய்வ மரபில், இப்போது தமிழர் பெருஞ் சமயகுரவர் கடவுளை முத்தமிழ் வடிவமாகக் கண்டனர். ஆனால் இப் பெயர் மரபும் பெயர் மரபூடாக, சொற்பொருள் மரபுமே மீந்தன.

இயல், பொதுப்பட இலக்கியம் என்று உணரப்பட்டது. அவ்வியலுக்குரிய இலக்கணமும் அதன்பாற்பட்டது.

இசை, இசைக்கலை அன்று அறியப்பட்டிருந்தது, இசையறிவு அழியாது நீடித்தது. தேவாரங்களுக்கும் திருநாலாயிரங்களுக்கும் பண் வகுப்போரும், பண்மரபறிந்து பாடுவோரும் அன்று அருகி விட்டாலும் மரபழிந்துபோய் விடவில்லை. பின்னாளில் அருகிய இம்மரபு ஆரியர் கைப்படாமலே ஆரியப் போர்வை போர்த்துக் கருநாடக இசை ஆகியுள்ளது.

நாடகம் கிட்டத்தட்டச் சீரழிந்த நிலையில் இருந்தது. கடவுள் வழிபாடு ஒன்றுக்காக மட்டும் அது கோயில்களில் வளர்க்கப்பட்டது. பரத நாட்டியம் இந்த வடிவிலேயே ஆரியர் கைப்படாவிட்டாலும் ஆரியப் போர்வை போர்த்து நம்மை வந்து எட்டியுள்ளது.

19-ம் நூற்றுண்டிறுதியில் முத்தமிழ் மரபு வெறும் சொல் மரபாகவே இருந்தது,

இயல் என்றால் உரைநடை, இசை என்பது செய்யுள், நாடகம் ஆடற் கலை என்றுகூட அதற்குக் குறும்பொருள் வகுத்தவர் அந்நாளில் உண்டு. இவற்றின் தடத்தை ஆங்காங்கே மக்கள் கருத்தில் மட்டுமன்றி அறிஞர் கருத்துக்களில் கூடக் காணலாம். உண்மையில் நாடகத்தின் எச்சமிச்சம் இன்று நாடகமாக வளர்ந்து நாட்டிய வடிவிலேயே பரத நாட்டியமாகியுள்ளது, அது நாடகத்தில் ஒரு கூறு என்பதில் ஐயமில்லை. ஆனால் அதுவே நாடகம் என்று சாதிக்க விரும்புபவர் இன்றும் இல்லாமலில்லை.

சிலப்பதிகார வெளியீட்டின் பின் முத்தமிழ் என்னும் சொல்லில் இயல் இன்றைய முழு இலக்கியமே என்பதும், இசை (சமஸ்கிருதப் பெயரால் சங்கீதக்கலை எனவழங்கிய) பாடற்கலையே என்பதும், நாடகம் ஆடல் கலை மட்டுமல்ல, ஆடல் பாடல் உரையாடல் கதை நாடகம் முழுவதுமே என்பதும் பேரளவில் விளக்கமாயின.

ஆனால் இப்போதுகூட வாடையின் மயக்கும், கோடையின் மருட்சியும் முத்தமிழ்ப் பாகுபாட்டை ஓர் அழகுச் சொற்றொடராகவோ, மறைநிலை விளக்க வேதாந்தமாகவோ ஆக்க முயன்றன. தமிழர் மொழியில் நுணுகிக் கண்ட அறிவு, ஓசை, பாவம் ஆகிய முத்திறங்களே அவை என்று விளக்கியமைய முயன்றவர் உண்டு.

வாடை ஒரு புறமும், கோடை ஒரு புறமும் முத்தமிழ் மரபை ஒரு சிறு நுண்ணயமாக்கிப் புறக்கணிக்க முயன்றதில் வியப்பில்லை. ஏனெனில் இதுபோன்ற, இதை அணுகிய ஒரு வேறுபாடு கூட உலகில் தமிழகத்துக்கு வெளியே என்றும் தோன்றியதில்லை. இன்று வரை ஏற்பட்டதும் இல்லை. உண்மையில் மற்றப் பண்பாடுகள், பாகுபாடுகள் பரவியது போல இதுவும் பரவினும், பாகுபாட்டின் உயிர் மரபு பரவத் தொடங்குமுன், தமிழகத்திலேயே வளர்ச்சி தடைபட்டு நின்றுவிட்டது என்னல் தகும்.

## 3. முத்தமிழ் மரபின் அருஞ்சிறப்பு

பாகுபாட்டின் முழுச் சிறப்பு உணரப்படின் அது இன்று மட்டுமல்ல, இனியும் உலக முழுவதும் வியந்து போற்றுதற்குரியது ஆகும்.

முதலில் இயல் தமிழ் என்பது நாடகமும் இசையும் சாராத இலக்கியம், அதற்குரிய இலக்கணம் மட்டுமல்ல, இயற்கை சார்ந்த, வாழ்க்கை சார்ந்த அறிவு நூல்கள் யாவும் இதனுட் சேர்ந்தவையே. இயலுக்குரிய செய்யுள் வகைகளில், இலக்கியத்துக்குரிய பாக்கள், பாவினங்களின் வேறாக நூலுக்குரிய நூற்பாவும் பாயிரமும் நூற்பயனும் பிற இலக்கணங்களும் அமைந்ததன் காரணம் இதுவே. பிற்காலத்தார், பாயிரம், நூற்பயன் ஆகியவற்றை இலக்கியம் குறித்த வழக்குகளாக மயங்கினர். தவிர, இலக்

கணம் இலக்கியத்தின் உட்பிரிவன்று. இயல்களுள் ஓர் இயலே, இலக்கியம் சார்ந்த இயலே யாகும்.

தமிழில் இயல் இலக்கணத்துக்குத் தொல்பழங்காலத்தில் பிற்பகுதியில் மதிப்பு மிகவும் உயர்ந்ததற்குரிய காரணங்களில் முக்கியமானதென்று அது இயலின் இயற் பிரிவாகிய நூலை உள்ளடக்கியதேயாகும். ஏனெனில் இலக்கணங்கள் யாவும் நூலுட்படுபவையே. பெயரளவிலேயே இசையிலக்கணம், நாடகஇலக்கணம் ஆகியவை இசை நாடகத்துடன் சேர்க்கப் பட்டன. தவிர இயல் இலக்கணம் சிறப்பாக, தானே நூல்களில் ஒன்ருனலும், மொழியின் இலக்கணத்தையும், இயல் இலக்கணத்தின் இலக்கணத்தையும். நூலின் இலக்கணத்தையும் நூல்களின் இலக்கணம் என்ற முறையில் இலக்கணத்தின் இலக்கணத்தையும் உள்ளடக்கியது ஆகும்.

நூல்களில் இயற்கை சார்ந்த நூல்கள் மட்டுமன்றி, உயிரினம் சார்ந்த நூல்கள், வாழ்க்கைசார்ந்த நூல்கள், தொழில்சார்ந்த நூல்கள், கலைகள்சார்ந்த நூல்கள்,சமயஞ் சார்ந்த நூல்கள் உட்படுவன. பின்னுட்களில் இவை யாவுமே சமஸ்கித வாணர்களால் 'சாஸ்திரங்கள்' என்று அழைக்கப்பட்டன. நூல் என்பது இன்றைய இயல் நூல் துறைகளின் (Sciences) தொகுதியே என்பதை இது விளக்குகிறது.

இயல் நூல்கள் மட்டுமன்றி, கலைகளிலும் இசை நாடகம் நீங்கலானவை இயலிலேயே அடங்கும். இலக்கிய ஏடுகளின் உரைகளும் இயலின் நூற்பிரிவு சார்ந்தவையே.

சூத்திரம், படலம், காண்டம் ஆகியவற்றின் இலக்கணங்கள்; நூல் இலக்கணம், நூற்பயன், நூலழகு, நூற்குற்றம், உரை, இலக்கணம். நூல் வாசிப்பவர் தகுதி, ஆசிரியர், மாணவர் இலக்கணம் ஆகிய இத்தனையும் மொழி

இலக்கணப் பகுதியோ, இலக்கியத்தின் இலக்கணப் பகுதிகளோ அன்று—நூல் இலக்கணப்பகுதிகளே. தொல்காப்பியம் முழுஇயல் இலக்கணமாதலால், அதில் இவை பொருட்பாலிலேயே அடங்குகின்றன. ஆனால் பிற்கால, சிறப்பாக இடைக்கால இலக்கணங்களில் பொருட்பால் மரபு கெட்டு விட்டது. ஆகவேதான் யாப்பியல், அணியியல் ஆகிய இலக்கிய இலக்கணங்களுடன் இவை வகுக்கப் பெறாமல், தனியாகப் பாயிரத்தில் இடம்பெற்றன. இவற்றுக்கு இடமற்ற பழய நேரிய பாயிரம் சிறப்புப் பாயிரம் ஆக்கப்பட்டு நூல் இலக்கணம்கூற ஒரு பொதுப்பாயிரம் வகுக்கப் பட்டது.

இசைத் தமிழ் என்பது இசைக்கலை, இசைக்கலைக் குரிய தொழில்கள், இசைக்கலைப் பயிற்சி, இசைத் துறைக் குரிய பாடல் இலக்கியம், இவ்வனைத்துக்கும் உரிய இலக்கணம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

நாடகத் தமிழ் ஆடல்கலை, கதை நாடகக்கலை, அத் தொழில்களின் நுட்பங்கள், பயிற்சிகள், அவற்றுக்குரிய இசை நாடக இலக்கியம், இவை யாவற்றுக்கும் உரிய இலக்கணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் மரபு இவ்வளவு பரந்தகன்றதோர் பாகுபாடு என்பதை நமக்குக் கிட்டியுள்ள இயல் இலக்கணமும், சிலப்பதிகாரம், அதன் உரைகள், உரை மேற்கோள்கள் ஆகியவையும் தெள்ளத் தெளியக் காட்டும்,

முத்தமிழ் மரபின் பெருமை இப்பெரும் பரப்பிலும் நுணுக்க விரிவிலும் அகற்சியிலும் மட்டுமே அடங்கியதல்ல. அப்பாகுபாட்டில் மறைந்துள்ள அரிய நுண்தத்துவமும் உணர்ந்து வியத்தற்குரியது. கலைகள் என வகுக்கப் படுவனவற்றுள் மொழி சார்ந்தன இந்த மூன்றுமே. மூன்றும் இயல் இசை நாடகத் துறைகளெனப்படாமல்,

இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற சிறப்புப் பெயர்கள் பெறுவதற்குரிய காரணம் இதுவே.

நாம் அறிந்தவரை இந்தப் பாகுபாடு மட்டுமல்ல, அதன் மறை நுட்ப அறிவு மட்டுமல்ல—இவ்வழக்கும் உலகில் வேறு எங்கும் கண்டு கேட்டறியாத ஒரு புதுமை ஆகும். ஆனால் தமிழகத்துக்கு இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பழமைப் பட்டுப்போன ஒரு புதுமை என்பது தேற்றம்.

## 4. முச்சங்க வாழ்வு

முத்தமிழ் வாழ்வைச் சிலப்பதிகார வெளியீட்டுக்கு முன்னுள்ள ஆரிய மறுமலர்ச்சியூழியில் முற்றிலும் அவநம்பிக்கை, ஏளனக் கண்களுடன் பார்த்த வாடை மயக்கமும் கோடை மருட்சியும், அவ்வெளியீட்டுக்குப்பின் மறுக்க வில்லை, ஏற்கவில்லை—கருத்திலிருந்தும் மனமார்ந்த ஆராய்ச்சிகளின் திசையிலிருந்தும் அதை ஒதுக்கிவைத்துள்ளன. இதுபோலவே முத்தமிழ் வளர்த்த முச்சங்க வாழ்வையும் அவை கடைச்சங்க ஏடுகளின் வெளியீட்டுக்குப்பின் புறக்கணித் தொதுக்கவோ, கால ஆராய்ச்சியால் அதை ஆரியப் போர்வைக்குள் கொண்டுவரவோ அல்லது அதன் பண்பு மறைக்கவோ முனைந்துள்ளன.

சங்கம் என்ற சொல்லே சமஸ்கிருதமாயிற்றே, ஆரியர் கைத்தடம் அதிலேயே இருக்கிறதே என்று முதலில் கூறப் பட்டது.

சங்கம் சமஸ்கிருதச் சொல் என்பது சரியாயிருந்தால் கூட, தமிழில் கூடல், கழகம், அவை, மன்றம் முதலிய வேறு எத்தனையோ சொற்கள் உள்ளன. இவை யாவும் இலக்கிய வழக்குடையன. முதல் இரண்டும் முச்சங்க மரபே குறிக்க வழங்கின. ஆனால் சங்கம் என்ற சொல்லே

சமஸ்கிருதத்துக்குரிய ஆரியச் சொல்லல்ல. பிற ஆரிய மொழிகள் எதனிலும் அதற்குரிய தொடர்பு கிடையாது.

தவிர, தமிழில் சங்கம் முழுக்கழகமும், அங்கம்அதன் உறுப்பையும் குறிக்கும். தமிழகத்தின் சில பகுதிகளில் சகரம் அகரமாகப் போவியாதலுண்டு. எதிரெதிர் பொரு ளுடைய சங்கம், அங்கம் ஒன்றுபட்டு முதலும்கிளையுமான உடல், உறுப்பு ஆகிய இருபொருளும் இன்றும்தருகின்றன. சங்கம் இடைக்காலத்தில் வழக்கிழந்ததன் காரணம் இதுவே. சங்குகள்கூடி இணைந்து வாழ்வதை அச்சொல் முதலில் குறித்திருக்கக்கூடும். சரி, சமம், சம்மட்டி, சம்மணம்,சம்மதி ஆகியவற்றுடன் இது தொடர்புடையது. எந்தச் சொல்லையும் பிளவுபடுத்திச் செயற்கையாகப் பொருள் விளக்கம் காணும் இயல்புடைய சமஸ்கிருத வாணர் 'சங்கம்' என்ற சொல்லுக்கு எத்தகைய விளக்க மும் கூறமுடிவதில்லை என்பதும், 'ஒன்ருக' என்றும் பொருளுடைய 'சம்' என்ற சமஸ்கிருத வேர்ச்சொல்கூட ஆரியத்தின் மேலை ஐரோப்பியர் கிளையறியாத ஒன்று என்பதும் குறித்துணரத்தக்க செய்திகள் ஆகும்.

முச்சங்கமரபு மிகப் பழமை வாய்ந்த மரபு என்பதில் ஐயம் இல்லை. முத்தமிழ் மரபுடன் முச்சங்கமரபும் 7-ம் நூற்ருண்டில் பழங்கதையாய் விட்டதால் பழம் புகழுக் குரிய புனைந்துரையாயின. சங்ககாலத்திலேயே பழங்கதை யாய் இருந்த கடல் கோள்களின் நினைவு மரபுடனும் அது தொடர்புடையது. 7-ம் நூற்ருண்டுக்கு முற்பட்ட இறை யனுர் அகப்பொருளுரையிலும் அது கிட்டத்தட்ட மறந்து விடப்பட்ட நிலையிலேயே ஒரு பழங்கதைப் பெருவிளக்க மாகத் தரப்பட்டுள்ளது.

முச்சங்கமரபின் பாரித்த ஆயிரக்கணக்கான வட்ட வட்டமான எண்கள் அவநம்பிக்கை யூட்டுபவை என்பது உண்மையே. ஆனுல் இக்கணக்குத் தரப்பட்ட காலம் அம்

மரபு அப்போதுதான் முடிந்துவிட்ட காலம். இன்று நமக்குக் கிட்டாத ஏடுகள் அன்றும் உலவாதிருக்கக் கூடியனவே யாயினும் அழியாது நிலவிய காலம்—பெயரும் தொகையும் புகழும் மரபறாத காலம் ஆகும். எனவே பாரித்த எண்கள் மக்கள் உள்ளத்தில் நிலவிய மாண்ட நெடுங்காலத்தின் புலமை வரையறைக் குறிப்பு என்பதில் ஐயமில்லை. இத்தகைய மதிப்புக்களில் பொதுவாக நூறு ஆயிரமாகப் பெருக்கப்பட வழி உண்டானாலும், அன்றைய தமிழகப் பழமைச் சூழல் அறிபவர்க்கு இது ஒருபோதும் பொருத்தமாகத் தோற்றாது. இக்காலத் தமிழகநிலை, அதே கால உரோமக, கிரேக்க நாகரிக நிலையிலிருந்து, சிறப்பாக எகிப்திய நாகரிக நிலையிலிருந்து வேறுபட்டதல்ல. இந்நாளைய உரோம கிரேக்கர்களின் வரலாற்றுப் பின்னணியை நாம் இன்று அறிவோம். ஆனால் அறியாத அந்நாளைய மக்கள்கூட அதனை நூறு ஆயிரமாக மட்டுமே மதிப்பிட முடியும். அவர்கள் பழமை யெல்லை கடந்து அவர்கள் இயல்பான கற்பனை சென்றிருக்க முடியாது. ஆனால் அதேகால எகிப்தியர் வரலாற்றுவகையில் கற்பனை கூட எகிப்தியர் வரலாற்று உண்மையை ஒருபோதும் சென்றெட்டியிருக்கமுடியாது. ஏனெனில் பழம் பொருளாய்வு, புதைபொருளாராய்ச்சி உதவியுடன் ஆராய்ச்சித் திறம்வாய்ந்த வரலாறு காணுமுன், மனித நாகரிகத்துக்கே அவ்வளவு தொல் பழமையைத்தற்கால உலகம் கற்பனை செய்ததில்லை.

இந்நிலையில் முச்சங்க மரபின் மதிப்பீடு உண்மைப் பழமை நினைவு மரபைப் பதிவு செய்யும் போது, நூறை ஆயிரமாகப் பெருக்கிற்று என்பதைவிட, ஆயிரத்தை நூறாகக் குறுக்கிற்று என்பதே பொருத்த முடையது. அத்துடன் கி.பி.மூன்றும் நூற்றாண்டைய எகிப்தியர் நிலைக்கே அதே காலத்தை யடுத்த தமிழகநிலை முழுதும் ஒத்ததாகும்.

பண்பும் உயிர் மரபும் இரண்டு நாடுகளிலும் குறைந்தன. ஆனால் பழம்புகழ் வெளியாரும் போற்றி யிருக்கத்தக்க நிலையில் மறவாதிருந்தது. அடிமை நிலையிலிருந்த இருநாடு களிலும் பழமையை அதன் மொத்த அளவில் ஒத்துக் கொண்டு, அதன் எல்லையைக் குறுக்கி மதிப்பிடுவதே இயல்பானதாகும்.

இந்த ஊக வாதங்களுக்கே தேவையற்ற வகையில் நமக்குத் தமிழ் முச்சங்க வாழ்வுபற்றிய ஓர் ஒளியும் காணப்படாமலில்லை. அதுவும் எகிப்துதரும் ஒளியே யாகும்.

## 5. முச்சங்க வாழ்வுக்குரிய வரலாற்று விளக்க ஒளி

எகிப்துக்கும் தமிழகத்துக்கும் இடையேயுள்ள வாணிகத் தொடர்பு இன்றைக்கு ஐயாயிர ஆறுயிர ஆண்டுகளுக்கும் முற்பட்டது. ஏனெனில் பார கோபுரங்களில் மிகப் பழமை வாய்ந்த வற்றில்கூட, தமிழகத் தேக்கும், பிறமணப் பொருள்களும் காணப்படுகின்றன.

கி. மு. 2000-க்கு முன் எகிப்திலிருந்து தென்கிழக்காசியா, சீனம்வரை நடைபெற்று வந்த உலக வாணிகம் இரு வழிகளாகச் சென்றது. ஒன்று நிலவழி: அது நடு ஆசிய மேட்டு நிலத்தினூடாகச் சென்றது. இன்றிருப் பதைவிட அம்மேட்டு நிலங்கள் அன்று வளமாயிருந்தன என்று அறிகிறோம். இரண்டாவது வழி கடல் வழி. அது கிழக்கு, தெற்கு ஆசியக்கரை முழுவதும் சுற்றி, செங்கடலூடாக எகிப்து சென்றது. ஆனால் இது முற்றிலும் கடல்வழியா யமையாமல், தென்கிழக்காசியாவிலும் தமிழகத்திலும் இடையே நிலங்கடந்து, செங்கடல் முடிந்த இடத்தில் மீண்டும் நிலவழியாக எகிப்து சென்று சேர்ந்தது.

CONNEMARA PUBLIC LIBRARY
3 JUL

தென்கிழக்காசியாவிலும் தமிழகத்திலும் கடல்வழி நிலவழியாக மாறியது வாணிக வளத்துக்கு ஒரு குறைவும் உண்டுபண்ண வில்லை, வளமே வழங்கிற்று. ஏனெனில் இவ்விரு நாடுகளும் அன்று எகிப்தையும் சீனத்தையும் விட நாகரிகத்தில் மேலோங்கியவை. பண்டையுலகில் பொது.நிலை இயல்புக்கு மாருக, நல்லாட்சிகள் காரணமாக இங்கே நிலவழிகள் கடல் வழிகளைவிடப் பாதுகாப்புடையவையாக இருந்தன. தவிர இருநாடுகளின் வளமும் வாணிகத்தை வளர்க்க உதவின. வணிகர்களிலும் பெரும்பாலார் இவ்விரு நாட்டு மக்களாயிருந்தது இந்நிலைக்கு மிகவும் உகந்ததாயமைந்தது.

ஆசிய நிலவழி அன்றுகூடக் கடல்வழியைவிட இடர்ப்பாடுகளும் இடர்களும் மிகுந்ததே. ஆகவே அவ்வழியில் கொண்டு செல்லுதற்கு எளிதும் மதிப்பில் பெரிதுமான வைரம், மாணிக்கம் போன்ற விலையேறிய நுண்பொருள்கள் மட்டுமே கொண்டு செல்லப்பட்டன. பேரளவான வாழ்க்கைப் பொருள்கள், கொடுக்கல் வாங்கல் பொருள்கள் கடல் வழியாகவே சென்றுவந்தன.

கி. மு. 2000-ம் ஆண்டினையடுத்து திடுமென ஆசிய நிலவழி அடைபட்டு, மரபிழந்து மறக்கப்பட்டுப் போவதைக்காண்கிருேம். கி. பி, 12-ம் நூற்றுண்டில் மார்க்கோ போலோ காலத்தில் அது மீண்டும் ஓரளவு திறக்கப்படும் வரை, மூவாயிர ஆண்டுகளாக அவ்வழி உலகைவிட்டே மறைந்து விடுகிறது. உலகில் மூவாயிர ஆண்டுக்குமேலாக நடைபெற்ற ஒரு பேரழிவு நிகழ்ச்சியையே வரலாற்ருசிரியர் இந்நிலைக்குக் காரணமாகச் சுட்டிக் காட்டுகிருர்கள்.

நடுமேட்டு வெளிக்கு வடக்கிலுள்ள பரப்பு இன்று பெரிதும் வற்றற் பாலையாகவும், அதன் வடதிசையில் துருவப்பகுதி பனிமலை, பனிக்காடாகவும் நிலவுகிறது. வடமாகடல் மக்கள் நடமாட்டமற்றதாகவும் இயல்கிறது.

ஆனால் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் துருவப்பகுதி ஓரளவு நடமாட்ட முடையதாகவும், வடமேட்டுப் பரப்பு காட்டு ஆடு மாடுகள், குதிரைகள் மேயும் பசும் புல் வெளிக்காடாகவும் இருந்தன. தென்திசை நாகரிகங்கள் அன்று தொலைவட மாகடல் வரை கூடச் சென்று சேய்மைத் தொடர்புகள் கொண்டிருந்தன. இதனால் வட கோடியிலும் நீண்ட நாட்களுக்கு முன் வாழ்ந்த ஆரிய இனம் திராவிட மூல இனத்துடன் இருவகைத் தொடர்பு கொள்ள முடிந்தது. முதல் தொடர்பு மனித இனமே பண்படாத நிலையில் பேரின மையத்திலிருந்து தமிழினத் திடமிருந்து பிரிந்த மூல இனத்தொடர்பு. இரண்டாவது உலகக் கடல்கள் சுற்றிய தொலை நாகரிகத் தொடர்பு.

கி. மு. 2000-க்கு நெடுநாள் முற்பட்டே உலகின் வட திசைப் பனிப்படல இயக்கத்தில் ஒரு மாறுபாடு ஏற்பட் டது. துருவப்பகுதி கடந்து வடமாகடலும் கடற்கரை யும் பனி மூடின. ஆரிய இனம் நடுமேட்டு நிலத்தின் வட திசை நோக்கிச் சரிந்து, அவ் உள்நாட்டுப் பகுதியில் மக்கள் நெருக்கமும் பெருக்கமும் வளர்த்தது. பல ஆயிர ஆண்டுகளாக உள்நாட்டில் வாழ்ந்ததால், மனித இனப் பண்பாட்டுத் தொடர்பு குன்றி, ஆடு மாடுகள், குதிரைகளை மேய்த்து வாழும் நாடோடி இனமாக மேலும் பெருகிற்று. அதே சமயம் பனிப்படலம் அவர்களைத் தெற்கு நோக்கி மேன்மேலும் தள்ளிற்று. கி. மு. 3000-லிருந்தே நடுவுலகின் நாகரிக இனங்கள் மீது அவர்கள் சாயத் தொடங்கினர் இயற்கையின் அழிவாற்றலைப் பின்னணியாகக் கொண்டு புயல் அலைகள் போல் இடைவிடாது வீசியடித்த அவர்கள் சாய்வை, நடு உலக நாகரிகங்கள் நீண்ட நாள் தடுத்து நிறுத்த முடியவில்லை. கி. மு. 2000 முதல் புகழ்சான்ற நடு உலகப் பேரினங்களில் பலவும்—சிறப்பாகச் சிந்து ஆற்றுக்கும் ரைன் ஆற்றுக்கும் இடைப்பட்ட நாகரிக

இனங்களின் வாழ்வுகளை முற்றிலும் சீர்குலைந்து படிப்படியாகச் சரிந்தன.

புயலலைகளின் மூன்று முன்னணி அலைகள் நாகரிக உலக வாழ்வில் கலந்து ஆயிர ஆண்டு வாழ்ந்து, அதன் பயனாக ஆயிரக்கணக்கான ஆண்டு புது நாகரிக வாழ்வு நிறுவின. இவை இந்திய ஆரியர், கிரேக்க ஆரியர், உரோமக ஆரியர்ஆகியவர் நாகரிகங்களே. ஆனால் பின்வந்த புதிய பண்படா அலைகள் அவர்களை ஒரு சிறிதும் பிரித்தடையாள மறிய வில்லை. அவர்களிலும் கிரேக்க, உரோம வாழ்வுகள், அண்டைநடுவுலக வாழ்வுகள் முற்றிலும் அழிந்த பின்னும் சிந்து கங்கை வெளியின் புதிய ஆரிய வாழ்வு சிந்துவெளி தென்னகப் பழங்குடி யினவாழ்வுகளின் உதவியுடன் ஆரிய நாகரிகத்தின் பண்ணையாக நிலவ முடிந்தது.

கி. மு. 2000-ல் ஆரியருடன் தொடங்கிக் கி. பி. 1200-ல் மங்கோலியருடன் முடிவுற்ற இந்த மூவாயிர ஆண்டைய புயல் எழுச்சி நடு உலக முழுமைக்கும் கேடாயிருந்தாலும், இந்திய ஆரியத்தைப் பாதிக்கவில்லை. இந்திய ஆரியம் கடந்து தமிழகத்துக்கு அதன் அழிவு வந்து எட்டுவதற்கு நெடு நாளாயிற்று, ஆனால் அதனிடையே அது தமிழகத்துக்கு ஒரு பொங்கல் வாழ்வே பெருக்கிற்று. ஏனெனில் உலகின் வடதிசை நிலவழி அடைபட்டு விட்டதனால், மூவாயிர ஆண்டுக்காலமாகக் கடல் வழியும் அதன் மையமான தமிழகமும் முன்னிலும் பன்மடங்கு தழைத்தோங்கின.

அத் தொல்பழங்காலத்தில் சீனரும் கடலோடிகளல்ல, எகிப்தியரும் கடலோடிகளல்ல. மேல்திசையில் பினீஷியரும் கிரேக்கரும் அராபியரும் வெனிஸீயரும் அம்மரபின் உரிமை மேற்கொள்ளாத காலம் அது. தமிழினமும் தென்கிழக்காசிய இனமுமே உலகின் தலைசிறந்த

கடலோடி இனங்களாக இருந்தன. கடல்நிலவழி வாணிகத்தில் கடல்வழி மையமாகவும் நிலவழி மையக்களமாகவும் இருந்த தமிழகம் அன்று முதல் பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் வரை இடையறாத பொங்குமாவளம் பெற்றது. உலகின் வாணிக முழுதும் தமிழக மூலமாகச் சென்றது. உலகின் செல்வ முழுவதும் தமிழகத்தில் வந்து குவிந்தன. தமிழர் வாணிகமும் தொழிலும் தழைத்தன. கலைகளும் அறிவியல்களும் ஓங்கின. ஆட்சியும் சிறந்தது.

தமிழகத்தின் மூவரசர்களிலும் முதலரசனாக, தமிழக முழுதும் போட்டியின்றி ஆணை செலுத்திய பேரரசனாக அன்று பாண்டியன் விளங்கினான். அவன் செல்வமும் செல்வாக்கும் புகழும் தமிழக மட்டுமன்றி அன்றைய நாகரிக உலக முழுவதும் பரவியிருந்தது. இதன் தடங்களைத் தொல்பழங்கால உலகெங்கணும், தமிழக வாழ்விலும் ஒருங்கே காணலாம். மேல்திசையிலும், வடதிசையிலும், கீழ்திசையிலும் எங்கும் பாண்டியர்குடிப் பெயரும் மரபும், தமிழக மலைப் பெயர், ஆற்றுப் பெயர், ஊர்ப் பெயர்களும் உருத்தெரியாமல் மாறியும், மாறாமலும் இன்றளவும் காணப்படுகின்றன. தமிழகத்தில் பாண்டியருக்கு மட்டுமன்றித் தமிழக முழுமைக்கும், தமிழகத்துக்கேயன்றித் தென்னக முழுமைக்கும் உரியதாக நிலவிய பாண்டியர் தமிழ்ச் சங்க மரபே அவற்றின் சின்னம் ஆகும்.

தமிழகத்தின் இப் பொங்கல் மலர்ச்சிக்கு, முத்தமிழ், முச்சங்க முதல் மலர்ச்சிக்கு, வரலாற்றிலேயே இன்னொரு தடமும் உண்டு.

உலக வாணிகம், செல்வம், கலை, பண்பாடு ஆகிய அனைத்துக்கும் அன்று பிறப்பிடம், உச்ச உயர் தளமையமாகத் தமிழகம் விளங்கிற்று. அதன் கீழ்க் கோடி நாகரிக நிலம், தென் கிழக்காசியா—சீனம் அப்போதுதான் தலை

தூக்கி வந்தது. அது போல அதன் மேல் கோடி நாகரிக நிலம் எகிப்து—அதனை அடுத்த நடுநிலக்கடலக நாகரிகம் கூட அன்று வளரவில்லை. கி. மு. 2000-ல் தமிழகம் பெற்ற இப் புது மலர்ச்சிப் பொங்கலில் பங்கு கொள்ளும் அவாவே எகிப்தியப் பேரரசன் செஸோஸ்டிரிஸை உலகின் முதல் கடல் கால் முயற்சியில் தூண்டிற்று. செங்கடலினூடாக வரும் தமிழக வாணிகக் கப்பல்கள் நேரே தன் நாட்டகமுள்ள நீலாற்றுக் கரைக்கே வரும்படி, அவன் செங்கடலையும் நீலாற்றையும் இணைத்து ஒரு கடற்கால் வெட்டினான். இதன் மூலமே எகிப்து கிழக்கு முகமாகத் திரும்பி நின்று கடல்வழியாக வரும் தமிழக நாகரிகக் கதிரொளியை நேரே ஏற்று, அதை மேல் திசையில் பரப்பும் கதிர்மணியாக நிலவ முடிந்தது.

மேலை யுலகில் நாகரிகம் வளர்த்த இனங்கள் யாவும், ஆண்ட இனங்கள் யாவும், தமிழக வாணிகத் தொடர்பாலும் வாணிக வளத்தாலுமே வளர்ந்து, அத்தொடர்பற்றவுடன் தளர்ந்தழிவுற்றன என்பதை இடையுலக, மேலை யுலக வரலாறுகள் காட்டும். நீலாற்றுக் கால் மரபில் வந்த சூயஸ் கடற்கால், 19-ம் நூற்றாண்டில் வெட்டப்பட்ட பின்பே, எகிப்து மறுபடியும் பழைய நிலையில் தலை தூக்கி வளர்ச்சி பெற்று, கீழ்திசை மலர்ச்சியை ஊக்க முயன்றுள்ளது.

## 6. திட்ட வாழ்க்கை மரபு

முத்தமிழ் வாழ்வு என்பது என்ன, முச்சங்க வாழ்வு என்பது என்ன என்று காணாதபோதே அதில் அவநம்பிக்கை காட்டும் நம் கால உலகம், அவை இத்தகையன என்று கண்டால் என்ன மனநிலை மேற்கொள்ளுமென்று எண்ண முடியவில்லை.

முத்தமிழ் வாழ்வு முச்சங்க வாழ்வின் தொடக்கமாகவே இருத்தல் சாலும். பிற்காலங்களுக் கேற்ற பல

வகைத் திரிபுடன் கடைச் சங்க காலம் வரை வந்தெட்டிய அகத்திய மரபின் குறிப்பு இதற்கு உகந்ததே. இம் முத் தமிழ் வாழ்வு நடு ஆசியாவில் ஆரியர் வரவின் தொடக்கம், எகிப்தியர் நீலாற்றுக் கால் திறப்பு ஆகியவற்றுடன் சம காலத்ததாய் இருந்ததென்று கூறலாம். அவ் வாழ்வு பற்றி நமக்கு வரலாற்றில் இவை தவிர வேறு புலன்கள் கிட்டா விட்டாலும், பின்னுளைய நிலைமைகளிலிருந்தும், இதுவரையில் கிட்டியுள்ள பழம் பொருளாய்வுகளிலிருந் தும் சிலவற்றை ஊகிக்க முடியா தென்றில்லை.

திட்டம் என்பது மனித வாழ்விலும் சரி, உயிரின வாழ்விலும் சரி—ஓர் அடிப்படைப் பண்புக் கூறேயாகும். திட்டயில்லாமல் தனிமனித வாழ்வோ, மனித நாகரி கமோ, உயிரின வாழ்வோ ஒரு படி கூட முன்னேற முடி யாது, அதே சமயம் திட்டம் ஒவ்வொரு படி வளர்ச்சி யிலும் வளர்ச்சித் தொடக்கமாயிருப்பதில்லை. ஒவ்வொரு படியின் திட்டமும் அப்படி வளர்ச்சி முற்றுப் பெற்று மறுமலர்ச்சி எய்தும் போதே தொடங்கும். வளர்ச்சி வளம் பெற்று ஓரளவு மனவளமும் உண்டுபண்ணிய பின்பே, வளரும் ஆக்கத் திட்டம் முதல் முதலில் பயன் படுத்தப் படுவது இயல்பு.

மேலையுலகிலும் தற்கால உலகிலும் நாடு நகர வாழ்வு, இனவாழ்வு ஆகியவற்றில் திட்டமிடும் பண்பு இப்போது தான் தொடங்கியுள்ளது—நற் சூழலுடன் தொடங்கி யுள்ளதென்றுகூடக் கூறுவதற்கில்லை. ஏனெனில் அது முதலாளித்துவ, அல்லது ஆதிக்கவாதிகள் திட்டமாகவே இன்றும் உள்ளது. ஆயினும் அதில் முதலில் முன்னேறிய ரஷ்யா, அதை முதலில் தொடங்கிவைத்த பிரான்சின் மனவளம் தந்த ஓர் உயர் ஒருலகக் குறிக்கோளுடனேயே அதில் கால் வைத்து ஓரளவு வெற்றி கண்டது என்பது குறிப்பிடத் தக்கது.

தற்கால மேலை யுலகில் திட்டமிட்ட முதல் நகரம் பாரிஸ். அதன் வளர்ச்சி பூலவார்(தற்கால பிரஞ்சு: சாலைத் தெரு; பழம் பிரஞ்சு; பூலவாடு=கோட்டை கொத்தளம்= ஆங்கிலம்: Bulwark) வரை சென்று எட்டிய பின்பே நகரத் திட்ட எண்ணம் எழுந்தது. பிரஞ்சுப் பேரரசு முழுவதற்கும் அது பயன்படினும், பிரஞ்சு நாகரிக முழுவதற்குமோ மேலை நாகரிக முழுவதற்குமோ கூட இன்னும் அதைப் பிரான்சு பயன்படுத்தி விடவில்லை. பிரான்சின் மொழி வளர்ச்சிக்கான திட்டமும் அதற்கான கழகமும் (Academy) தமிழ்ச் சங்கத்தை நினைவூட்டுகிறது. இதையும் மற்ற எந்த மொழியோ, நாடோ, இனமோ இன்னும் பின்பற்றி விட வில்லை. ஒருவேளை மொழி திட்டமிடுவதற்குரியதன்று என்ற மொழிநூல் முடிவு அதற்குக் காரணமாய் இருந் திருக்கலாம்.

பண்டை மேலையுலகில் நாடு நகர், பாதைகள், பூங் காக்கள் ஆகியவற்றை முதலில் திட்டமிட்டவர்கள் உரோமர் என்று அறிகிறோம். வீட்டுத்தளம் போலச் செங்கல் பாவிய தெருக்கள், பாதைகள், நாட்டு வழிகள் உரோமநாகரிகத்துடன் மாண்டவைகள், இக்காலத்தின் காரைப்பாதைகள்( Cement Roads) வேறு திசை நோக்கிய வளர்ச்சி சார்ந்தவை. ஆனால் இவையும் உரோமர் அரச வாழ்வு முற்றிப் பேரரச வாழ்வின் மலர்ச்சியில் ஏற் பட்டவையே. மொழியிலும் வாழ்விலும்கூட ஓரளவு திட்டம் கிரேக்க உரோமர்கள் அமைத்ததுண்டு. ஆனால் மொழித்திட்டத்தில் பண்டை ஆரிய உலகின் உச்சி கண்ட வர்கள் சமஸ்கிருத வாணரே—மக்கள் தாய் மொழி களாகிய பாளிகள், பாகதங்களின் அடிப்படையில் இலக்கிய மொழியாய் வளர்ந்த ‘பாஷா’ என்னும் வடதிசை மொழிக்கு, உலகம் முன்னும் பின்னும் காணாத திட்ட மிட்ட செயற்கை இலக்கணம் வகுத்து அதைச் செயற்கை

மொழியாக வளரச் செய்து உயிரற்ற மொழியாகவே உலவ விட்ட பெருமை பாணினிக்குரியது.

திட்டமிட்ட நகரவாழ்வில் உரோமருக்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குமுன் எகிப்தியரும், சுமேரியரும் சிந்துவெளி நாகரிக இனமும் முன்னேறி யிருந்தது. அத் திட்ட மிட்ட நாகரிகப் பரப்பில் பழமையும் முதன்மையும் உடையது சிந்து வெளியே.

திராவிட இனம்வரை வந்து எட்டியுள்ள இந்தத் திட்ட மரபின் சிறப்பை—வரலாறு இன்னும் குறியாத சிறப்பை — மதுரைநகர்த் தெருக்களில் இன்றும் காணலாம்.

இது ஆரிய நாகரிகம் வந்ததற்குப்பின் வளர்ந்த சிறப் பன்று—திட்டமில்லாமலே கோட்டைகளாக வளர்ந் துள்ள தென்னகக் கோயில்கள், திட்டமற்ற இடைக்கால பிற்கால நகர்கள் இதைக்காட்டுகின்றன.

இதுமட்டுமன்று.

திராவிடர் திட்டம் கண்டு குருட்டுத்தனமாகப் பின் பற்றிய பின்னுளைய தமிழர்—ஆரியப்பண்பாடு பின்பற்றிய தமிழர்—ஆரியர் வகுத்த பிற்கால நகர, வீட்டுத் திட்டம் வேறு; தமிழர் பழங்கால நகர, வீட்டுத் திட்டம் வேறு; இரண்டையும் பக்கத்துக்குப்பக்கம் இன்றும் தமிழ் வாழ்வில் காணலாம், தலைமைக் கோயில் மையமாக அகல் தெருக்கள் சுற்றிலும் வட்டமாக அல்லது சதுர மாகத் தாமரைப் பூப்போல் அமைப்பது பழய தமிழர் நகர்த்திட்டம். மதுரை, திருநெல்வேலி, மயிலாப்பூர் போன்ற பழய நகரங்களில் காணப்படுவது இது. தலைமைக் கோயில் தலையாக, புரோகிதர் வீடுகள் கழுத் தாக அகல் வீதிகள் உடலாக, சேரிகள் கால்களாக வடக் கிருந்து தெற்காக வகுக்கப்பட்ட ஆரிய வருணசிரம, தத்துவ விளக்கப் பொறிப்புடைய, இடைக்கால, அணி

மைக்கால நகர்கள், சிற்றூர்களில் இவ் வமைப்பைக் காணலாம்.

'சிவ பெருமான் அழிவுக் கடவுள். அவர் கோயில் சுடுகாட்டில், அல்லது அதன் திசையில் வடக்கே இருந்தால்தான் நல்லது. நகர் நடுவிலிருந்தால் 'நகரழியும்' என்ற கோட்பாடு பிற்காலச் சிற்பநூல்களில் புகுந்ததால் தான் இம்மாறுதல் ஏற்பட்டது. ஆனல் இருவகை நகரங்கள் அமைத்த மன்னரும் இன்று பொன்றிவிட்டனர். பழய அமைப்புடைய மதுரை இன்றும் பொன்ருது நாட்டுப்புகழ் அன்றி நகரப்புகழ் குன்ருது, பைந்தமிழ் புகழ்போல நிலவுகிறது.

தமிழர் பண்புகளிற் பல நாகரிக உலகெலாம் பரந்து விட்ட ஒரே காரணத்தால், தமிழர் புற வாழ்க்கைப் பண்புகளின் திட்டங்களை இன்று பிரித்தறியக் கூடவில்லை. ஆயினும் வாணிகக்குழு, ஒரேவகைப் பொருள் வணிகர் வரிசை, கடைத்தெரு ஆகியவை இன்றும் கீழ்திசைக்குள்ளேயே பரவியுள்ளன. சில திசைப்பண்புகள் தமிழகத்தில் அழிந்து பிற புலங்களில் நிலவுகின்றன. வணிகர் வாய்மையுடன் விலைகூறி விற்றல், வணிக நகராட்சி, வணிகத்துறை அரசியல் கட்டுப்பாடுகள் ஆகியவை இத்தகையன.

ஆய்ந்து காண்பவர்க்கு உணவு, குளிப்பு, மருந்து, ஆடை மயிர் ஒப்பனை, மேனி ஒப்பனை ஆகியவற்றில் தமிழர் திட்டங்கள் தமிழர் வாழ்விலும், இலக்கியத்திலும் இன்றும் தேடிக்காண்டல் அரிதன்று. அறுசுவை, நால்வகை அருந்தல், உணவு வட்டிப்புமுறை, இலையில் பரிமாறும் வரிசை, கறிவகை ஒழுங்கு அமைத்து சரிசம உணவும் சமுதாய உணவும் முதன் முதலாகத் திட்டமிட்ட தமிழரின் பந்திமுறை ஆகியவற்றை 'வைதிகர்' என்று சிலரால் தவருகக் குறிக்கப்படும் பழம்பண்பாடு விடாத தமிழர் இன்றும் கைக்கொணடுள்ளனர். ஆரியப்

பழமை புதிதாகப் பரவிய நூற்றாண்டுகளிலேயே ஒதுக்கப்பட்ட தமிழ்ப் பழமைகளுள் இவை சில.

பிரஞ்சு மக்களிடையே தோன்றிய ஒரு சிறு நிழல் நீங்கலாக, தமிழகத்திலும் முற்றிலும் உயிர்மரபிழக்கப் பெற்று உலகுக்கு ஒரு சிறிதும் தெரியவராமல் போய் விட்ட ஒரு தமிழர் திட்டப்பண்பே முச்சங்க மரபு.

## 7. நான்காவது சங்கந்தரும் படிப்பினை

மதுரைத் தமிழ்ச் சங்கம் மதுரைக்கோ, பாண்டி நாட்டுக்கோ உரியதன்று. அது தமிழர் தேசியப் பொது உரிமை என்ற ஒரு செய்தி மட்டும் இன்றளவும் தமிழகம் மறவாத மரபு ஆகும். ஏனெனில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இம்மரபு புதுப்பிக்கவே மூன்று சங்கங்களின் புது மலர்ச்சியாகத் திரு. சௌந்தரபாண்டியனவர்களால் நான்காவது சங்கம் ஒன்று அமைக்கப் பட்டது. அச்சங்கம் தன் பொன்விழாவும் நிகழ்த்தியுள்ளது.

ஆரியப் போலிப் பழமை வாதிகள் கைப்பட்டு இந் 'நான்காம்' சங்கம் முச்சங்க வாழ்வை மறக்கத் தொடங்கிய பின், அந்த நான்காம் இடத்தையே மீண்டும் வகிக்கும் முறையில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களால் கடைசிச் சங்கப் புலவர்களை நினைவூட்டும் வகையில் 49 உறுப்பினர்களுடன் மீண்டும் ஒரு தேசியச் சங்கம் நிறுவப்பட்டு நிலவுகிறது என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

முச்சங்கம் பற்றித் தமிழர் கொண்டுள்ள கருத்தின் புறவடிவாக இது இயங்குகிறது என்பதில் தடையில்லை. காலத்துக்கேற்றபடி செயல்முறை மாறுதல் இருந்தாலும், செயல் முறையின் பின்னணியிலுள்ள நோக்கம், முச்சங்கம் நிறைவேற்றிய பொறுப்புகளைத் தொடர்ந்து நடத்துவதுதான் என்பதை எவரும் ஒப்புவர்.

இன்றைய மதுரைத் தமிழ்ச் சங்கம் ஒரு தமிழ்க் கல்லூரி நடத்துகிறது. தமிழுக் கென்று பல்கலைக் கழகங்கள் பட்டத் தேர்வுகள் தொடங்குமுன், தமிழகத்தின் முதல் பட்டத் தேர்வு இக்கல்லூரி அளிக்கும் 'பண்டிதர்' பட்டமே. பண்டைய சங்கத்தைப்போல இது ஆளும் மொழிக்கோ, ஆளும் இனத்துக்கோ, ஆளும் நாட்டுக்கோ உரிய சங்கம் அல்ல. இக்காரணங்களால் நடத்துபவர் பெரும் புலக் கிழாராகவும், நாட்டில் 'உயர்குடி' யினர் என்னும் மதிப்புப் பெற்றவராக இருந்தாலும், தமிழ்ப் பட்டங்களை முதலில் இதுவே வழங்கினாலும், தம் பட்டங்களில் கடை வரிசைத் துணைப் பட்டமாக, அயல் மொழிக் கல்விக்குரிய பல்கலைக் கழகங்களும், மேலை, வடவ அரசினரும், அயல் முறைக் கல்வியின் தமிழ்த் துறைக்கு உரியதாகக் கூட இப்பட்டத்தை இன்னும் மதிக்கவில்லை.

இன்றைய மதுரைத் தமிழ்ச் சங்கம் உறுப்பினரல்லாத புலவர்களின் மாநாடுகளையும் நடத்துகிறது.

ஏடுகள் தொகுத்து ஏடகம் நடத்துகிறது.
நூலாராய்ச்சி செய்கிறது:
தமிழ் நலம் பற்றிய செய்திகளை விவாதிக்கிறது:
தமிழ்ப்பற்றிய ஆராய்ச்சி நடத்துகிறது.

தமிழ் மக்களிடையே அறிவுபரப்பச் 'செந்தமிழ்' என்ற ஒரு மாத இதழ் நடத்துகிறது.

தமிழர் தேசிய வாழ்வை மொழிமூலம் தலைமை வகிக்க உருவாக்க, வளர்க்கத் திட்டமிடும் கழகமாக இன்றைய மதுரைத் தமிழ்ச் சங்கமே விரும்பியுள்ளது. முதல் நாட்களில் இவ்விருப்பம் கரைபுரண்டோடும் ஆர்வமாக இருந்தது என்பதனை அந்நாளைய அதன் முதல்வர் பெயரே காட்டும். அதன் பொன்விழா அம்மரபில் வந்த தலைவர் திரு. பி. டி. ராஜன் அவர்களால், அம்மரபு காக்கும்முறையில் திட்டமிட்டு நடத்தப் பட்டது. ஆர்வம் தொடக்

கத்தை விடச் சங்கச் சூழலில் குறைபட்டாலும், தமிழகத்தில் இதற்குள் எழுந்துவிட்ட மறுமலர்ச்சி வெள்ளத்துக்கு உள்ளே வரச் சிறிது வாயில் திறக்கப்பட்டதனுல், வெளி தோற்றத்திலேனும் தொடக்கப் புகழ் மரபு காக்கப்பட்டது. மீட்டும் புதியதொரு தேசீயத் தமிழ்ச் சங்கத்துக்கு அவ் வார்வம் அடிகோலியுள்ளது.

மறுமலர்ச்சித் தமிழகத்தில்கூட இச்சங்கம் மறுமலர்ச்சியை உருவாக்க, அதற்குத் தலைமை வகிக்க, அதில் பங்கு கொள்ள முடியவில்லை. ஓரளவு அதைப் பயன்படுத்த மட்டுமே முடிந்துள்ளது.

தற்கால நிகழ்ச்சி வண்ணங்களை இவ்வளவு தொலை விளக்குவதற்குரிய காரணம் அதன் மூலம் முச்சங்க மரபின்மீது ஏற்படும் ஒரு படிப்பினைக்காகத்தான்.

தற்கால மறுமலர்ச்சி மக்களிடமிருந்து தோற்றியது. பழங்கால மறுமலர்ச்சி அவ்வாறு தோற்றவில்லை. ஆனுல் அது அப்படிமை. கடந்த நிலமட்டுமே.மக்கள் மறுமலர்ச்சி அன்று ஓர் உரிமைத் தேசியத்தின் மறுமலர்ச்சி, அது மறுமலர்ச்சித் தலைவனையே ஓர் அரசனுக்கி, அவனைத் தன் குடியும் மரபும் ஆட்சியும் கடந்த தேசியத் தலைவனுக மலர்வித்து உருவாக்கியிருந்தது. அத்தமிழகத் தேசியத் தலைவனும் ஒரு பாண்டியன்—நாலாம் சங்கத்தைத் தோற்றுவித்தவரும் ஒரு சீரியபாண்டியனே —அதே மரபில் வந்த பாண்டியனுக, முந்தைநாள் சௌந்தர பாண்டியப் பெயர் வழியினரான ஒரு சௌந்தரபாண்டியராகக் கூட அவர் இருக்கலாம்! ஆனுல் இரு பாண்டியர்களிடையே அவர்கள் உணர்ச்சி ஒரு வகையாயினும், உரிமையிலே, தமிழகத்தில் அவர்கள் தலைமை ஒரு நிலையாய் இருக்கக் கூடுமாயினும், இருவர் தமிழகத்துக்கும் இடையே எத்தகைய வேற்றுமை!

முச்சங்க வாழ்வின் மூலச் சங்கம், அதன் வளர்ச்சி, நாலாம் சங்கத்தின் முன்னோடி. அதே நோக்கம், அதே நடை முறைகளை உடையது. ஆனால் பின்னது அடிமைத் தமி ழகத்தின் தளர்ந்த விச்சு. தேசிய அடிப்படையில் அது தற்காகலித்தோல்வி கண்டுள்ளது. முன்னது உரிமைத்தமி ழகத்தின் வீறுமிக்க வீச்சு. அது முழு வெற்றி கண்டு நீடித்து வாழ்ந்தும், காலத்தின் போக்கில் தமிழ் காற்றில் கலந்து விட்டது.

## 8. சங்க அமைப்பு

முச்சங்கம் எத்தகைய நடைமுறைத்திட்டம்உடையது என்பதை முழுதளவாகக் காணுமுன், அதன் நோக்கம் அமைப்புக்கள் ஆகியவை எத்தகையவை என்பதை நாலாம் சங்கம், இன்றைய தமிழ் மக்கள் கருத்து ஆகிய வற்றிலிருந்தே ஓரளவு ஊகிப்பது முடியாததன்று.

சங்கத்தின் நோக்கம் தேசிய நோக்கம். ஆனால், அது அர சியல் தேசிய நோக்கமன்று. நாடு கடந்த தேசிய நோக்கமே அதில் நிலவிற்று. அது ஒரு பேரரசின் அரசியல் நோக்கம் கூட அன்று. ஏனெனில் மூன்று சங்கங்களும் பாண்டியர் சங்கமேயானாலும், எந்நாளிலும் மற்றச் சேர சோழ நாடு களோ, மற்றத் தென்னகப் பகுதிகளோ, தமிழ் இலங் கையோ போட்டிச் சங்கம் நடத்தவில்லை. துணையமைப் புக்கள்கூடத் தொடங்கவில்லை. தமிழ்ப் புலமையிலும் புலவர் வள்ளன்மையிலும் பாண்டியருக்கிளைக்காத சேரர், கரிகால் வளவனைத்த சோழர், தமிழ்த் தேசியத் தலைவன் என்ற ஒரு முறையில் மட்டும் பாண்டியனுக்கும் பாண்டி நாட்டுக்கும் என்றும் தலைவணங்கத் தவறவில்லை.

இத் தேசியப் பண்பின் மரபினுக்கேற்ப, நாடு இன வேற்றுமைகள் எதுவும் சங்க வாழ்வில் குறுக்கிட வில்லை. தமிழ்ப் பண்பு தோன்றி வளரும் இடமாகச் சங்கம்

நிலவியது. ஆரியப் புலவர், ஆரிய அரசர்கூட அங்கே மதிப்புப் பெற்றனர். பிறப்பு வேறுபாடோ, தொழில் வேறுபாடோ, செல்வ உயர்வு தாழ்வோ அதைத் தீண்டியதில்லை என்று புலவர் பெயர்களே காட்டும். ஆடவர் பெண்டிர் வேற்றுமை அங்கே இல்லை—நடைபெற்ற இடமே ஒரு பெண் தெய்வத்தின் கோயில்—தமிழன்னை கோயில்—என்பதை நாம் மறந்தால்கூட, பெண்பாற் புலவர்கள் எண்ணிக்கை, பெண்பாற் புலவர்களின் 'பெண்மை' இதனை வலியுறுத்திக் காட்டிவிடும்.

திட்டவட்டமான சங்கமரபுக் கணக்கில், புலவர் தொகையும் நிலையானதாக, திட்டவட்டமாக முச்சங்கங்களில் ஒவ்வொன்றுக்கும் தரப்பட்டுள்ளன. அவ்வச்சங்க காலத்திலிருந்த புலவர்களே இத்தனை பேர்தான் என்றோ, பாடிய புலவர்களே அத்தனை பேர்தான் என்றோ, உறுப்பினரான புலவர்களே அத்தனை என்றோ கொள்ள விரும்பியவர்கள் தொடக்க ஆராய்ச்சியாளரிடையே உண்டு. ஆனால் அந்த எண்ணிக்கை நிலவரமாக வகுக்கப்பட்ட உறுப்பினர் 'இடங்களின்' அல்லது 'பதவி'களின் எண்ணிக்கை. சங்க உறுப்பினர் ஒவ்வொருவரும் அரசனால் அமர்த்தப்பட்டவர்களோ, அல்லது சங்கத்தாராலோ அல்லதுவேறு குழுவினராலோ அமர்த்தப்பட்டவர்கள் என்பது தெளிவு. யார் அமர்வித்தவர்கள், அவர்கள் குறிப்பிட்ட கால எல்லை வகுத்து அமர்த்தப்பட்டனரா, வாழ்நாள் முழுமைக்குமாக அமர்த்தப்பட்டனரா என்பது தெரியவில்லை.

நான்காம் சங்கம் ஒரு சரியான வழிகாட்டியானல். உறுப்பினர்கள் தம் வாழ்நாள்காலத்துக்கு நிலவரமாக அமர்த்தப்பட்டவர்களாகவே இருத்தல் சாலும்.

சங்கத்துக்குத் தலைவர் உண்டு. ஆனல் மூவகைத் தலைமை பற்றிக் கேள்விப்படுகிறோம். ஒன்று தெய்வத்

தலைமை. அணிமை வரை திருவாங்கூரில் ஆட்சி திருமாலுக்கே (சிரீ பதுமநாபனுக்கே) உரியதாக நடத்தப் பட்டது. அது போலவே சிவபெருமான் இங்கே தலைவராகக் கருதப்பட்டார். அது முதலில் பெண் தெய்வமாகிய மீனுட்சியாகவே—முற்படத்தமிழன்னையாகவே அமைந்து, அம்முறையில் ஒரு பீடமோ, பீடத்தமர்ந்த உருவோ—தலைமை வகிப்பதாகக் கருதப்பட்டிருத்தல் கூடும். அன்றித் தோற்றுவித்த மரபில் ஒரு பாண்டியனே—நாலாம் சங்கப் பெயர் முதல்வனுன ஒரு சௌந்தரபாண்டியனே—துணைத்தலைமை வகித்து, பின் தெய்வத்தலைவராகக் கருதப்பட்டிருக்கலாகும். நக்கீரர் போன்ற தலைவர் செயல் தலைமை வாய் மரபாலும், அதே வகையில் மாங்குடி மருதன் தலைமை சங்கப் பாடலாலுமே அமைந்திருந்ததாகத் தெரிய வருகிறது.

உறுப்பினர், தலைவர் யாவரும் பதவி வகிப்பவர்களே—ஆள் மாறினர், பதவி நீடித்தது, உறுப்பினர் எண்ணிக்கையும் கிட்டத்தட்ட நிலையாய் இருந்தது என்னலாம்.

சங்க வேலைகளை, திட்டக் கூறுகளை நடத்த இன்றைய அரசியல்களில், கழகங்களில் இருப்பதுபோலக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கலாம். பணியாளர்களும் இருந்திருக்கலாம். ஆனுல் கதை மரபுகளே படியெடுப்பவர், கேட்டு நினைவிலிருந்து ஒப்பிப்பவர், சுருக்கெழுத்தாளர் இருந்ததாகக் குறிக்கிறது. இது ஒதுக்கிவிடத்தக்க மரபன்று—சுருக்கெழுத்து உலகில் ஏற்படுமுன்பே இக்கருத்துக் கதை மரபேறி அச்சேறிவிட்டது. இடைக் காடர் கதை இதற்குச் சான்று.

சங்கப் புலவர் கூட்டம் நிலையாகவோ, அடிக்கடியோ, காலகாலத்திலோ கூடியிருக்கலாம். நிலையான உறுப்பினர் இருந்ததனுல், இன்றைய கழக நடவடிக்கைகள் இருந்தனவாதல் வேண்டும்.

சங்கம் ஓர் ஆராய்ச்சிக் கூடமாக நிலவியிருத்தல்வேண்டும். பட்டிமன்ற மரபு இன்றும் இதற்குச் சான்று.

சங்கம் ஓர் ஏடகமாக நிலவியிருத்தல் வேண்டும். படிப்பகமாகவும் படிப்பகங்களின் மையமாகவும் இருந்திருக்கக்கூடும். சங்கமிருந்த தலங்கள் அகழ்ந்து காணப்பெறுமானால், ஒரு வேளை நமக்குப் பாபிலோனில் கிடைத்தது போன்ற புதையுண்ட மாண்ட இலக்கியப் பகுதிகள் கூடக் கிட்ட இடமேற்படலாம்.

சங்கம் ஏடுகளின் பதிவகம், ஏற்பகம், உரிமை யளிப்பகமாக இருந்த தென்பதில் ஐயமில்லை. அரங்கேற்றம் (Exhibition) மேலை யுலகுக்குப் புத்தம் புதிய, கீழையுலகுப் பழய மரபு. ஆனால் அதன் முறையிலும் சொல்லிலும் தமிழன் பொறுப்புத் தெளிவானது. இன்றும் அரங்கேற்ற மரபு தமிழகத்திலும் சூழ் புலங்களிலும் மட்டுமன்றி வேறெங்கும் கிடையாது.

சங்கம் ஒரு வெளியீட்டகமாய் இருந்ததா?

அச்சும் தாளும் அற்ற அந்நாளில் எப்படி ஏடுகள் வெளியிடப்பட முடியுமென்று இந்நாளில் எவரும் வினா எழுப்பக் கூடும். ஆனால் சங்க இலக்கியப் பரப்பிலும் அதன் தேசியத் தன்மையின் வெற்றியிலும் ஒரு சிறிது கருத்துச் செலுத்துவோருக்கு, அது ஒரு வெளியீட்டகமாகக் கட்டாயம் செயலாற்றியிருக்க வேண்டுமென்பது மட்டுமல்ல—அச்சுந் தாளும் ஏற்பட்டுவிட்ட இன்றைய தமிழகத்தின், உலகின் வெளியீட்டகங்கள் எவையும் அடையாத வெற்றியை அது அடைந்திருந்தது என்பது தெளிவாகும்.

சங்கம் ஓர் ஏட்டு விற்பனைக் களமாய் இருந்திருக்குமா?

தற்காலப் புது மண்டப மரபு இவ்வாறு கேட்கத் தூண்டுகிறது. தமிழகத்தில், கீழ்திசையில் மற்ற எல்லாக் கோயில் முகப்புகளிலும் வேறென்ன வேண்டுமாஞலும் வாங்கலாம், புத்தகம் கட்டாயமாக வாங்க முடியாது. மதுரைக் கோயிலுக்கு வருகிறவர்கள், பண்டைத் தமிழன்னை வழிபாட்டாளர் என்பதனுலோ என்னவோ, பூசைக்குரிய பூவும் சந்தனமும் விற்கும் கடைகளருகே, அவைகளைவிட மிகுதியாகப் புத்தகக் கடைகள் இன்றும் உள்ளன.

தமிழ்ச் சங்கம் ஒரு கல்வி நிலையமாகக் கட்டாயம் இருந்திருத்தல் வேண்டும். தமிழ் மக்கள் ஆர்வ மரபில் நாலாம் சங்கம் மட்டுமல்ல, கரந்தையும் திருவையாறும் மயிலமும் திருப்பதியும் முச்சங்க நினைவின் வழிவந்தவையே.

ஆஞல் கல்வி நிலையம் ஆராய்ச்சிக் கூடத்தளமான ஒரு கழகமா, திண்ணைப் பள்ளியா, பள்ளியா, கல்லூரியா?

மருத்துவம், வான நூல், கணக்கு முதலியவற்றுக்கு அதில் இடமுண்டா?

சமய அறிவு அதில் போதிக்கப்பட்டதுண்டா?

அது ஒரு பல்கலைக் கழகமா?

அது ஒரு கல்வித்துறை அரங்கமா?

இக் கேள்விகள் நாமாகக் கேட்பவையே. ஆஞல் இதற்குரிய தூண்டுதல்கள் இரண்டே இரண்டு தான். ஒன்று சங்க இலக்கியம். மற்றது உலகத் தேசியங்களில் தமிழ்த் தேசியம் பெற்றிருந்த, இன்னும் மூடிக் கிடப்பினும் உள்ளார இழக்கப் பெருத தனியிடம்.

## 9. நம் கால மரபும் சங்க வாழ்வும்

நம் காலத்தில், நம் இருபதாம் நூற்றுண்டில் நமக்கு எத்தனையோ நாகரிக வசதிகள் இருக்கின்றன. அரசியல்கள்

இவற்றைப் பயன்படுத்தி மக்கள் வளம் பெருக்க எத்தனை எத்தனையோ அரிய வாய்ப்புக்கள் உடையன. பல தேசிய அரசியல்களுக்கு, குடியாட்சி அரசியல்களுக்கு மக்கள் ஆர்வ ஒத்துழைப்பும் ஏராளம்.

இத்தகைய நம் உலகில் தமிழகமோ, அல்லது தமிழகத்தைவிடத் தன்னுரிமையும் முற்போக்கு வசதிகளும் வாய்ந்த வேறு ஒரு நாடோ—அமெரிக்காவோ, ரஷ்யாவோ கூட, பண்டை முச்சங்க வாழ்வு போல ஒன்றை அமைத்துப் பார்க்கின்றன என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் சாதிக்கக் கூடும் சாதனையுடன் பண்டை முச்சங்கத்தின் இறுதித் தளர்ச்சிக்காலத்தில் நமக்குத் தெரிய வரும் சாதனைகளையும் ஒப்பிட்டுக் காண்போம்.

சங்கத் திட்டத்தை அளந்தறிய இது ஒரு சிறந்த வழி என்பதை எவரும் ஏற்பர். அதன் இயல்பு காணவும் இதுவே உதவும்.

சங்க இலக்கியம் என்று நம்மிடம் வந்தெட்டிய பாடல்கள் சங்க காலத்தில் பாடப்பட்ட பாடல்களின் தொகுதியன்று. சங்கத்தில் அரங்கேற்றப்பட்ட பாடல்களின் தொகுதிகூட அன்று. அவை நம்மை வந்து எட்டவில்லை. பிற்காலத் தமிழகத்துக் கென்று பொறுக்கி எடுக்கப்பட்ட பாடல்களே, இங்ஙனம் பொறுக்கித் திரட்டியவையும் முழுதும் வந்து எட்டியுள்ளன என்று கருத இடமில்லை. சங்க இறுதிக் காலத்திற்குரிய தொகுப்புகளே, அதுவும் சிதைந்த உருவிலேயே நமக்குக் கிடைத்துள்ளன. இவற்றுள் கடைச்சங்க காலத்துக்கு முற்பட்ட பழமை யுடையவை சில. ஆனால் பெரும்பாலன கடைச்சங்க காலத்தனவே, அதன் இறுதிக்குரிய இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு உரியனவே.

இத்தகைய திரட்டு எந்நாளிலும்கால தேசச் சூழல்களுக்கு மிகச்சிறு அளவிலேயே பேராண்மை (பிரதிநிதித்

துவம்)வகிக்க முடியும். ஆயினும் அந்த அளவிலேயே பாடல்கள் பெரிதும் சிறிதுமாக 2381க்கு மேற்பட்டன ஆகியுள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காவியங்கள், திருக்குறள், பதினெண் கீழ்க்கணக்கிலுள்ள முழு நூல்கள் இவற்றுட் சேராதவை. தொகுதியுட் சேராத துண்டு நூலாகத் தகடூர்யாத்திரை, தொகுதியில் ஐயப்பாட்டுக்குரிய இடம் உடையதாகக், களவழி நாற்பது, நக்கீரர் உரைக் குரியதாகக் கருதப்படும் இறையனார் அகப்பொருள் முதலியன வேறு உண்டு. இவற்றுள் திரட்டினுள்ளேயே பாடிய ஆசிரியர் பெயர் தெரியாத பாடல்கள் 102-க்கு மேற்பட்டன- இவைப் போகப் பாடல்களைப் பாடிய புலவர்களில் பெயரறியப் பட்டவர்கள் 473க்கு மேற்பட்டவர்கள். இவர்களில் இரு பாலாரும் உண்டு; பெண் பாலார் 31 பேர். இருபாலாரிலும் அரசர் முதல் ஆண்டிவரை, வணிகர், உழவர் முதல் மருத்துவர் வான நூலார் (கணிகர்கள்), பள்ளியாசிரியர் (கணக்காயனார்),கல்லூரி ஆசிரியர் (ஆசிரியர்) வரை, நாடாள்குடிகள் முதல் வேடர், எயினர் வரைச் சமுதாயத்தின் எல்லாப்படியினரும் எல்லாத் தொழில் வகுப்புகளும், எல்லாத் திணை நிலக் குடிவேறுபாடுகளும் உண்டு. அரசர் 31 பேரில் பாண்டியர் 13, சேரர் 9, சோழர் 6 பேர், ஆந்திர நாட்டிலுள்ள குடிமன்னரான திரையர்,வடதிசை ஆரிய அரசர் ஆகியோர் கூடப் பாடிய அரசர்களிலேயே இடம் பெற்றுள்ளனர், இது தேசப் பரப் படிப்படையிலும் புலவர் பேராண்மையைச் சுட்டிக் காட்டுவதாகும். இன்றைய தமிழகத்தின் எந்த மாவட்டமோ, தென்னகத்தின் எந்த மொழிமண்டலமோ, நகரமோ, ஊரோ கூட, சில சமயங்களில் தத்தம் தெரு, குடிக்குரிய புலவரைப் பெருதிருந்ததில்லை என்னலாம். ஈழம் அல்லது இலங்கை சார்ந்த புலவர்களும் உண்டு. ஏனெனில் பெயரும் ஊரும் தெரிந்த புலவர்

களுக்குள்ளேயே மதுரை நகர்ச் சார்பில் 40 புலவரும், கருவூர்ச் சார்பில் 40 புலவரும், உறையூர்ச் சார்பில் 8 புலவரும், காவிரிப் பூம்பட்டினத்தில் 5 புலவரும். இவை போன்ற 80 ஊர்களில் ஒன்றும் ஒன்றுக்கு மேற்பட்ட புலவர்களும் உள்ளனர். மற்றத் தொழில்கள் வகையிலும்—ஆசிரியர் 8, கணக்காயர் 2, மருத்துவர் 1, கணியர் (வான நூலார்) 2, செய்தி வள்ளுவன் (Secretary of State) 1, வண்ணக்கர் (Washer men) 3, அறுவை வாணிகர் 1, பொன் வாணிகர் 3, பொற் கொல்லர் 2, கொல்லர் 4, தச்சர் 2, காவிதி (Lord Chancellor) 4, ஏனாதி (Treasurer) 1, ஓதுவார் 2, பார் காப்பார் (Police Commissioner) 1, இடையர் (Shepherds) 2, மன்னர் 2, கோவர் 2, வினைத் தொழிலர் (Farmer) 1, கூத்தர் (Actor) 7, எயினர் (Hill Tribesmen) 10 என எல்லா வகையினரும் பேராண்மை பெறுகின்றனர்.

பொறுக்கிய ஏடுகள், அவற்றுள் கிட்டியவை, பெயர் அறியப்பட்டவை, ஊரோ, மரபோ, தொழிலோ அறியப் பட்டவற்றுள்ளேயே காணப்படும் இம் முழு நிறை பேராண்மை வியப்புக்கல்ல, மலைப்புக்கே உரியது. சங்க ஏடுகள் நம் கண் முன் இராவிட்டால், அவை அத்தனையும் பொய் என்று கூறப்பட முடியாத நிலையில் ஒரு பேரேடு போலச் சங்க இலக்கியம் அமைந்திராவிட்டால், இவ்வளவும் முற்காலத்திலல்ல, இக்காலத்திலல்ல, வருங்காலத்தில் கூட இம் மண்ணுலகில் கண்கூடாகச் சாதிக்கத் தக்க செய்திகள் என்பதையே எவரும் நம்ப முடியாது. ஆயினும் இவை—அருளாளர் கனவுகளுக்கு, கற்பனைத் திட்டவாணர் மதிப்பு இலக்குகளுக்கு (Targets) குறித்தன போல அமைந்த இப்பட்டியல்-நிகழ்ந்த செய்திகளில் கிட்டிய தொகுப்பை மட்டுமே குறிப்பன.

தமிழரிடையே சிக்காமல் நீகிரோவரிடையே, காட்டு மனிதரிடையே, மனிதரை மனிதர் தின்னும் முரட்டினங்களிடையே இவை சிக்கியிருந்தால்கூட, நாகரிக உலகின் ஆர்வக் கவனத்தை, அவா வெறியையே இது தூண்டியிருக்கப் போதியது. ஆனால் அடிமைத் தமிழக ஆராய்ச்சிகள் மெய்ந் நிலைகளையே உலகின் கண்களில் படாமல் மறைப்பதில் ஈடெடுப்பற்ற திறமை யுடையவை. தூங்குபவர் குருதியுறிஞ்சும் சமயத்தில்கூட நோவு தெரியாமல் நாவால் தடவியும் இறகால் விசிறியும் இன்பமூட்டும் குருதி வௌவால் போல, மேல் திசையோ வடதிசையோ கூடத் தமிழ்ப் பக்கம் கண் திருப்பும் சமயம், தமிழ்ப் பற்றெனும் நாவால் தடவி, நடு நிலை ஆராய்ச்சி என்னும் விசிறி வீசித் தமிழாராய்ச்சிகளால் தமிழின் மெய்ந் நிலை மறைக்கும் குழாங்கள் தமிழகத்தில் தோன்றி விடுகின்றன.

## 10. சங்கம் ஒரு தேசியத் திட்டம்

மனித உலகில் என்றுமே வேறு எந்நாட்டிலுமே ஏற்பட்டிராத, இன்றும் இனியும் எளிதாக ஏற்படுவதற்கரிதான வியத்தக்க இவ்வறிவுப் பேராண்மை தென்னகத்தில் எவ்வாறு ஏற்பட முடிந்தது.

இந்நிலை எவ்வாறு, எப்போது அழிந்தது?

இவற்றைச் செய்து முடித்தது உலகின் முதல் மாபெருந் தேசியம், முன்னும் பின்னும் உலகு கண்டிராத முதன்மைத் தேசியம்—அதன் சின்னமான, உயிர்மையமான முச்சங்கத்தின் வளர்ச்சி இச் சாதனையை உருவாக்கிற்று. அதன் தளர்ச்சி, அதன் மரபழிவே, தென்னகத்தையும் தமிழகத்தையும் படிப்படியாகத் தற்கால அவல நிலை வரை கொண்டுவந்து விட்டது. ஏனெனில் பிரிட்டிஷ் ஆட்சி வரை, அது கழிந்து இன்று வரை, அவற்றுக்கு

ஒரு சிறிது ஈடு செய்யும் தேசிய அமைப்புக்கள் கூடத் தோன்றவில்லை—அதற்குரிய தேசியமே மக்கள் மனத்தில் தான் இன்றும் அரும்பிக் கொண்டிருக்கிறது.

சங்கம் நாம் மேலே குறிப்பிட்ட அமைப்புக்கள் மட்டும் உடையதன்று—அது நாடு கடந்து, தேசங்கடந்து கூடச் செயலாற்றிய ஒரு பாரிய தேசிய கல்வித் துறை யரங்கம். தொடக்கப் பள்ளி முதல் கல்லூரி கடந்த கல்வி வரை, அது கடந்த புலவர் அமைப்புக்கள், பல் கலைக் கழகம், ஏடாராய்ச்சி, கலையாராய்ச்சி உட்பட யாவும் பல பேரரங்கங்களாக, துறைகளாகத் திட்ட மிட்ட ஓர் அமைப்பாய் அது இயங்கிற்று என்னல் தகும். ஏனெனில் இன்றைய முன்னணி உலக நாடுகளில் உள் ளது போல, நூற்றுக்குக் கிட்டத்தட்ட நூறு பேர் எழுத வாசிக்கத் தெரிந்த நாடுகளில் கூட இத்தகைய இட மளாவிய, வகுப்பளாவிய, இனமளாவிய இலக்கியப் புலமைப் பேராண்மை நிலையைக் காண முடியாது. சங்க காலங்களின் இறுதிக் காலத்தில்கூட, கிட்டத்தட்ட எல்லா மக்களும்—வேடர், வேட்டுவத்தியர் உட்பட— இலக்கியம் நுகருமளவாவது இளம் புலமை பெற்றிருந் தனர் ஆதல் வேண்டும். இத்தகு கல்விப் பரப்புக்கு மாவட்ட வட்டந்தோறும், நகர் ஊர் தோறும், தெருக் குடி யிருப்புத்தோறும் கட்டாயத் தொடக்கப் பள்ளி மட்டு மன்றி, கிட்டத்தட்ட அதே நிலையில் நடுத்தரப் பள்ளி மட்டுமன்றி, கிட்டத்தட்ட அதே நிலையில் கல்லூரிக்கும் பேருக்கமும் ஆக்கமும் காட்டப் பட்டிருத்தல் வேண்டும்.

புலவர் வறுமை பற்றிச் சங்க இலக்கியமே பாடு கிறது. புலவர்களின் அக்காலச் செல்வ நிலையை இது பொய்ப்பித்துக் காட்டுகிறது என்பதில் ஐயமில்லை. பல புலவர் மற்றவரை நோக்க வறுமைச் சூழலில்இருந்து வந்தி ருக்கக்கூடும். ஆனால் எல்லாப் புலவருமே இப்படிப்

பாடுதல் அக்கால மரபு என்று கருத இடமுண்டு. ஏனெனில் அவர்கள் மன்னரிடமிருந்து தம் வறுமை தீரவல்ல, தம் புகழ் உயர, தம் கல்விப் பணி, தம் சூழல் வளரவே. பரிசில் வாழ்வு மேற்கொண்டிருந்தனர். தேரும் புரவியும். ஆனையும் சிவிகையும், இறையிலி நிலமும் பொற் குவையும் பெறும் வகுப்பினர் வறுமைக்கு வேறு பொருள் இருக்க இடமில்லை. வறுமைச் சூழல்களைச் செல்வச் சூழலாக, சிறு கொடையைப் பெருங் கொடையாக, சிறியவரைப் பெரியவர்களாகப் பாடும் பிற்காலப் புலவர் மரபுக்கு மூலம் இவர்களே—ஆனால் முன்னுள் மரபு இதற்குத் தலை மாறானது.

புலவர்களில் எல்லாத் தொழில் வகுபபினர் மட்டுமன்றி, எல்லா வகை அறிவுத்துறை வகுப்பினரும் காணப் படுகின்றனர். மருத்துவம், வானநூல் ஆகிய அறிவுத் துறைகளுக்கும், வாணிகம், தொழில், கலை ஆகியவற்றுக் கும் உரிய கல்லூரிகள் சங்கத்தை ஒட்டியும் நாடெங்கும் அன்று இருந்திருத்தல் இன்றியமையாதது. தொழிலும் கலைத் துறையும் பெயருடன் கூறப்படும் சிறப்பு இதனைச் சுட்டுகிறது. தவிர இத்துறையாளர் மொழியிலும் இலக் கியத்திலும் பொது நிலை யறிவுடையரா யிருப்பதே பெரும்பான்மை. அத்துறைத் தலைவர்க்கே சிறப்புப்புலமை வாய்ப்பு வசதி இருக்கமுடியும். அவர்களில் பலர் இயல் இலக்கிய மட்டுமன்றி இசை நாடக இலக்கியங்கள், இலக் கணங்கள், அறிவு கலை தொழில்துறை நூல்கள் எழுதி யிருத்தல் கூடாததன்று, பின்னாட்களில் இவற்றைப் பின் பற்றியே வேத மொழி வாணரும் சமஸ்கிருத வாணரும் தமிழரும் 64 துறைக்கலைகளை வகுத்து, அவற்றில் ஆராய்ச்சி மரபு அழிவுற்ற பின் பழய அறிவைப் பல் வகையில் தத்தம் நூலறிவு, நூலறிதிறன் ஆகியவற்றுக் கேற்பத் தொகுத்துப் பழய உலகின் புகழைத் தம் புக

மூக்கி யிருத்தல்வேண்டும். அவர்கள் கூற்றுக்களே இதை மெய்ப்பிக்கப் போதியன.

இந்நாளில் தமிழ் கற்ற ஆரியர், ஆரியப்புலவர் பலர். இராமாயணம், பாரதம் தமிழில் இயற்றியவர் உண்டு. பிற் காலத்தில் இவை சமஸ்கிருதத்திலிருந்து தமிழ்ப் படுத்தப் பட்டதாகத் தமிழர் எண்ணியது இயல்பு. ஆனால் சங்க காலத்தில்—கடைச்சங்க காலத்தில்கூட — சமஸ்கிருதம் என்ற இலக்கியமொழி ஏற்படவில்லை. சமஸ்கிருத இரா மாயண பாரதங்கள், மற்றக் கதைகள், புராணங்கள், சமய சாத்திரங்கள், கலைத்துறை ஏடுகள் உண்மையில் தமிழரால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் ஒதுங்கிக் கிடந்த ஏடுகளின் அரைகுறை மொழிபெயர்ப்புகள், தழுவல்கள், திரிபுகள், சிதைவுகளே,

தற்போது உலகெங்கும் பரவியுள்ள மேலை நாகரிகம் திடுமென வீழ்ச்சியடைந்துவிட்டதென்று வைத்துக்கொள் வோம். ஒரு சில ஆண்டுகளில் பல்கலைக்கழகங்கள், கல் லூரிகள், தொழில் நுணுக்கத்துறைகள் பழங்கதைகளாய் போய் விடும். அவ்வத் துறைவல்லுநர் மரபு அழிந்தபின்பு பொது அறிவு சிறிதுடையவர் கையில் அத்துறைநூல்கள் பட நேர்ந்ததால், அவை மூலவடிவில் அவர்களுக்கோ, பொதுமக்கள் உலகுக்கோ பயன்படாதவையாகவே இருக்க முடியும். அவற்றைக் கைக் கொண்டவர் அறிவு நிலை கேற்பத், திரிப்பும் சிதைப்பும் தொகுப்பும் விரிப்பும் பெற்ற நிலையில், அவை அவர் புதுச் சூழலில் அவருக்குப் புதுப் புகழ் உண்டுபண்ணும் பழய பேரறிவின் ஒரு சிறு கசிவு வடிவில் துறைச் சொற்களாக நிலவிப் புதுவளர்ச்சியை ஓரளவு தூண்டி, ஓரளவு தடுத்தும் நிற்கும். இது இயல் பென யாவரும் காண்பர்.

இந்நிலை உலகில் அடிக்கடி ஏற்பட்டுள்ளது. கிரேக்க நாகரிக வீழ்ச்சி, உரோமர் வீழ்ச்சி, அராபியர் நாகரிக

வீழ்ச்சி, சமஸ்கிருத நாகரிக வீழ்ச்சி ஆகிய ஒவ்வொன்றின் இறுதியிலும் பொது நிலை இதுவே. கிரேக்க அறிவைப் பயன்படுத்த உரோமரும் அராபியரும், சமஸ்கிருத அறிவைப் பயன்படுத்த அராபியரும் சீனரும் இல்லாவிட்டால், பழங்கால அறிவில் இன்னும் சிறு பகுதியே நமக்கு மீந்திருக்கும். ஆனால் இவையனைத்துக்கும் மூலமான தமிழக அறிவில், பண்பாட்டில் தமிழரே மரபறுந்து நமக்குப் பெற்றுத் தருவது மொழியும் பண்பும் மட்டுந்தான். சமஸ்கிருதம் அதன் அழிவடுத்துத் தோன்றியிரா விட்டால், அவ்வறிவு உலகுக்கு இன்று எட்டிய அளவு கூட வந்து சேர்ந்திருக்காது. ஆனால் சேர்ந்த அளவிலே, உலகம் அதைச் சமஸ்கிருதத்துக்கு, ஆரியத்துக்கு உரியதெனக் கொண்டு, அதன் புகழைக் கூடச் சங்கத் தமிழினிடமிருந்து பிரித்துள்ளது, பிரித்து வருகிறது!

இன்றைய மறுமலர்ச்சித் தமிழர் சமஸ்கிருதத்தின் புகழ் பற்றி அக்கரை கொள்ளவேண்டியதில்லை. இலத்தீனப்பண்பைஇலத்தீன இனத் திசை வழக்குகளாகிய இத்தாலியமும் பிரஞ்சும் ஐரோப்பாவுக்களித்தது போல, திராவிடப் பண்பைத் திராவிட இனத்தின் ஆரியத்திசை மொழியாகிய சமஸ்கிருதம் உலகுக் களித்துள்ளது—அவ்வளவே, ஆனால் இலத்தீனப் பண்புடன் இலத்தீனமும், கிரேக்கப் பண்புடன் கிரேக்கமும், சமஸ்கிருதப் பண்புடன் சமஸ்கிருதமும் அழிந்து நிலவாதொழிந்தன. ஆனால். தமிழ், தமிழ்ப் பண்பு இரண்டும் நம்மிடமே உள்ளது பண்பு பண்பாடாக உயிர் மலர்ச்சி பெற்று, நாகரிகமாக விளைச்சல் கண்டு, உலகில் மீண்டும் பரவவிட வேண்டுவதொன்றே நாம் செய்யவேண்டுவது. அவ்வகையில் தமிழர் ஊக்கம்பெறவும், உலகு தமிழ்ப்பண்பை வளர ஒத்துழைப்புத் தரவும் மட்டுமே இன்றைய மறுமலர்ச்சி பாடுபட வேண்டும்.

மீட்டும் சங்கம் சாதித்ததைத் தமிழர் சாதிப்பது முடியாததன்று. ஏனெனில் அச்சங்கம் அமைத்தவர்கள் நம் முன்னோர்கள், நம் தேசிய மரபின் முதல்வர்களே. ஆனால் முதலில் நாம் உரிமை பெறவேண்டும்; அவர்கள் மரபினர் நாம் என்பதை உலகறியச் செய்தல் வேண்டும்.

## 11. இலக்கியம், இலக்கணம்: சொல்மரபு.

சங்கம் தமிழ்ச் சொல் அல்ல என்று கூறியதைப் போலவே, இலக்கியம், இலக்கணம் ஆகியவை தமிழ்ச் சொற்களல்ல என்று கூறுபவர்கள் இன்றும் உளர். தனித் தமிழ் பற்றுடனேயே சிலர் இருசொல்லையும் விலக்கவும், அதன் மூலம் இயல் என்பது இலக்கியத்துக்குரிய தமிழ்ச்சொல் என்றோ, காப்பியம் என்பது இலக்கணத் துக்குரிய தமிழ்ச்சொல் என்றோ புத்தாராய்ச்சிகளில் ஈடுபடவும் முனைவதுண்டு. இரு சாராரும் இரக்கத்துக்குரியவர்களே —ஏனெனில் ஒரு புறம் இலக்கியம், இலக்கணம் என்ற சொற்களோ, அவற்றுக்குரிய சமஸ்கிருத மூலச் சொற்களோ (லக்ஷயம், லக்ஷணம்) இன்றளவும் எந்தச் சமஸ்கிருத இலக்கிய ஏட்டிலும் அப்பொருளில் வழங்கியதில்லை. சமஸ்கிருத அகர வரிசை எதுவும் அச்சொற்களுக்கு அப்பொருள்களை இதுவரைச் சேர்த்துக் கொள்ளவில்லை. எந்தச் சமஸ்கிருத மாணவரைக் கேட்டாலும் இது தெளிவுபட்டிருக்கக்கூடும், ஆனால் துரதிர்ஷ்டவசமாகப் பல சமஸ்கிருத மாணவரும் புலவரும் தம் சமஸ்க்ருத அறிவைக்கூடச் சமஸ்கிருதப்பற்று அல்லது தவறான இனப் பற்றுக் காரணமாக இத்தகைய தறுவாய்களில் மனமார அடக்கிவைத்துக் கொண்டு வந்துள்ளார்கள்.

இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றுக்கு இயல், காப்பியம் முற்றிலும் சரியான மறு சொற்களும் அல்ல. ஏனெனில் மேலே காட்டியபடி இயலில் இலக்கியம்

(இயலிலக்கியம்), இலக்கணம் (இயலிலக்கணம்) உண்டு. அதே சமயம் இலக்கியமும் இலக்கணமும், இசை நாடகம் ஆகிய மற்ற இரு துறைகளிலும் உண்டு. காப்பியம் மொழி காப்பது என்ற பொருளுடையதானால், அது இலக்கணத்துக்குச் சரியான சொல் அல்ல. ஏனெனில் அது மொழி காப்பது ஆகமாட்டாது. மொழியின் பண்பைக் காப்பது என்று கொண்டால், அது இலக்கியத்துக்கும் உரியதிறமே யாகும். தவிர காவியம் தமிழ்ச் சொல்லன்று என்ற தனித் தமிழாளர் எண்ணமே இப்பொருள் தூண்டியிருத்தல் வேண்டும். காவியம், காப்பியம் இரண்டுமே, கவர், கவி, கவ்வு, கப்பு என்ற சொற்களுடன் தொடர்புடையது. காப்பு என்பதும் இவற்றின் வேறுபட்டதன்று. இருபுறம் சமமாக வளைந்து கொடுப்பது 'கா' 'கா'வடி. சரியாகப் பங்கிட்டளிப்பதே, சமத்துவம் பேணுவது, காப்பு, பாது காப்பு (பாத்து=பகுத்து, பாதுகாப்பு=பகுத்துக்காப்பது) என்றே பொருள் படுவது!

இலக்கியம், இலக்கணம் தமிழ்ச் சொற்கள், தனித் தமிழ்ச் சொற்கள் மட்டுமல்ல. நாகரிகம், பண்பாடு, பண்பு ஆகியவற்றைப் போலவே இன உயிர்ச் சொற்கள். தமிழரே வகுத்த கருத்துப் படிவங்கள் அவை. இதைத் தெளிவாகக் காட்டுபவை இச் சொற்களே. ஏனெனில் கருத்துப் படிவம் ஏறத்தாழ உலக முழுவதும் பரவி விட்டது, சொற்படிவம் தமிழகம் கடந்து மிகுதி பரவி விடவில்லை.

இலக்கியம் என்றால் என்ன என்று உலகில் அறிஞரோ, கலைஞரோ, சிறந்த இலக்கியவாணரோகூட எளிதில் முற்றிலும் விளக்க முடியவில்லை. ஆயினும் விளக்கக் முற்படும் பல் அறிஞர் கலைஞர்களின் விளக்கங் களூடாக நாம் இலக்கியம் என்ற தமிழ்ச் சொல் காட்டும் பண்பின் ஒவ்வொரு கூற்றினைக் காண்கிறோம். தமிழர்

கருத்துப் படிவம்உலகெங்கும் உலகப் பண்பாட்டுடன் பண் பாடாக வளர்ந்துவிட்டது, அதை எல்லாரும் உணருகின் றனர் என்பதை இவ் விளக்கங்களின் போக்கே காட்டு கின்றது. ஆனால் சொற்படிவம் பரவாததால், ஒவ்வொரு வரும் கருத்துப்படிவத்தின் ஒரு மூலையையே அல்லது ஒரு குறிப்பிட்ட கோணத்தையே காண்கிறார்கள்.

மற்ற உலக மொழிகளின் சொற்படிவங்கள் பொரு ளுக்கு ஒரு சிறிதும் உதவவில்லை. மேலை மொழிச் சொல் (Literature: இலத்தீனம்: Litera : எழுத்து எழுதுவது; எழுதப்பட்டது) என்ற பொது நிலைப் பொருளே தருவது. சமஸ்கிருதச் சொல் (சாஹித்யம்: உடனிருப்பது, தோழமை, என்னும் பொருளுடையது.

தமிழில் இலக்கியம் என்ற சொல்லுடன் இயை புடைய கருத்துப்படிவமாகவே இலக்கணம் என்ற சொல் அமைந்திருக்கிறது. இதையும் மற்ற மொழிகளில் காண முடியாது. மேலைமொழிகளில் இலக்கணம் என்பதற்குரிய சொல் (Grammar: கிரேக்கம். Gramma-எழுத்து) எழுத்து எனும் பொருளும், சமஸ்கிருதத்தில் (வ்யாகரணம்; வ்யாக்ரு=பிரித்துச் சொல், விளக்கு) பிரித்துச் சொல்வது, விளக்குவது என்னும் பொருளுமே உடையன. இலக்கியம் என்ற சொல்லுடன் இஃது எத்தகைய பொருத்தமான இயைபும் இல்லாதிருப்பது காணலாம்.

இலக்கியம், இலக்கணம் ஆகியவற்றின் சரியான பொருளை, அத்துறைகளில் உள்ளவர்களின் தலைசிறந்த ஆராய்ச்சி விளக்கங்கள் அத்தனையையும் படித்தபின்பே மனதில் தெளிவாக உணரமுடியும்.

இலக்கியம் நிலையான கருத்துக்களின் கோவை; அழகிய சொற்கோவை, அழகிய கருத்துக்களின் அழகிய கோவை; அருமையாகத் தோற்றும் கருத்துக்களின்

திரட்டு; அழகுக் கற்பனை; காணு அழகைக் கற்பனையில் காட்டுவது; இயற்கையின் உருக்காட்டும் கண்ணுடி அல்லது படப்பிடிப்பு; வாழ்க்கையின் படப்பிடிப்பு; இயற்கை, வாழ்க்கை ஆகியவற்றில் அல்லன களைந்து நல்லன தொகுத்த தொகுப்பு; வாழ்க்கைச் சிக்கல்களை எடுத்துக்காட்டுவது; வாழ்க்கைச் சிக்கல்களை அவிழ்க்க வழிகாட்டுவது; நீதிகளைப் போதிப்பது; நீதிகளை இனிய உருவில் புகுத்துவது; காலங்கடந்த கருத்து; காலங் கடந்த அழகு; பல சொற்களில் பிறர் சொல்வதைச் சில சொல்லில் சொல்வது; பலர் நினைப்பதை ஒருவன் உருப் படுத்திக் கூறுவது; உணர்ச்சிகளின் செறிவு......

உலக அறிஞர் தரும் பல்வேறு விளக்கங்கள் இவை.

இலக்கணத்தின் விளக்கத்தில் இவ்வளவு வேறுபாடு காணமுடியாது. ஆனால் இன்றைய மேலையுலகும் பண்டைய தமிழுலகும் கண்ட உண்மையைப் பண்டைய, இடைக் காலத்திய ஐரோப்பாவும், இடைக்காலச் சமஸ் கிருத உலகும் கண்டதில்லை.

'இலக்கிய மின்றி இலக்கண மின்றே,
எள்ளின்றாகில் எண்ணெயும் இன்றே!
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல,
இலக்கியத்தினின் றெடுபடும் இலக்கணம்!'

அகத்தியர் பெயரால் இயலும் இந்தப் பழமைசான்ற உரைமேற்கோள் சூத்திரம் குறிக்கும் உண்மையை இடைக்காலத் தமிழ் உரைகாரர் பலரும், சமஸ்கிருத வாணரும், பழைய ஐரோப்பிய மொழிப்புலவரும் உணராது, இலக்கணமே இலக்கியத்துக்கு வழிகாட்டி யென்றும், இலக்கணமே மொழிக்கு வழிகாட்டுவது, காப்பது என்றும் எண்ணினர்!

இலக்கியம், என்பதற்குரிய சரியான பொருளை— உலக முழுவதிலும் எல்லா அறிஞரும் கலைஞரும் ஒத்து ஏற்றுக் கொள்ளத்தக்க பொருளை—அந்தச் சொற்களே பேரளவு தெரிவிக்கின்றன.

இலக்கியம் இயற்கை, வாழ்க்கை ஆகியவற்றின் கண்ணுடியும் அன்று, இவை சாராத கற்பனையும் அன்று. அவற்றின் அடிப்படையில் இனமுதல்வனான கவிஞன் உருவாக்கும் புதுப்படைப்பு—மனித இனத்தை ஒரு கவிஞன் 'கனவு' நோக்கி, ஓர் உயர் 'இலக்கு' நோக்கி ஈர்த்துச் செல்லும் இயல்பான ஆற்றல் வாய்ந்த இன உயிர் ஓவியம் அது. அது நீதியன்று, வெறும் பொழுதுபோக்கு மன்று. இனநலமாகிய இன்பத்தில் மிதக்கவிட்டபடியே, இன வளமாகிய பண்பின் உதவியால், இனமேம்பாடு என்ற உயர் நீதியில் மனிதனைக் கொண்டுவிடுவது அது. அது கொள்கை பரப்புவது மன்று, கொள்கையற்றது மன்று— இனமரபில் உந்தி இனக் கொள்கையையே பண்பாக உருவாக்கிவிடுவது. அது இன்பம் வேருகப், பயன்வேருக, தன்னலம் வேறு, பொதுநலம் வேருகக் கொண்டதன்று— அத்தனையும் ஓரினக்குழைவாக வார்த்துப் படியவிடுவது. அழகிய சொற்களையும் கருத்துக்களையும் படிவத்தையும் தொடக்க இலக்கியப் பயிற்சியாளன் தனித்தனி தேடித் திரட்டக் கூடும். ஆனல் இலக்கியப் படைப்பாளன் இயற்கை மரபு, இன மரபு, மொழி மரபு ஆகியவற்றில் ஈடுபட்டு இழைந்து அவற்றின் துடிப்பில் துடிப்பவனுதலால், அழகிய புதுக்கருத்துக்கள் அழகிய புதுச்சொற்களில் இழைந்துருகி, அழகிய புதுப்படிவங்களாகத் தாமாகவே உருவாகி, மொழியுடன் மொழியாகவும், இனத்துடன் இனமாகவும், இயற்கையுடன் இயற்கையாகவும் இழைந்துவிடும் இயல்புடையவை.

இலக்கு என்பது குறிக்கோள், நோக்கம் ஆகியவற்றின் இயைபு. நோக்கம் (motive), என்பதுதனி மனிதன் நாட்டம். அது தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டது. அதற்குத் தனி ஆற்றல் உண்டு. ஏனெனில் அது தனி மனிதன் ஆர்வ அவாவால் உந்தப்படுவது. இதைமட்டும் நிறைவேற்றும் கலை, இலக்கியம், ஆகியவை உண்மைக் கலை, உண்மை இலக்கியம் அல்ல அவை பொழுதுபோக்கும், இன்பமும் அளிக்கும் கீழ்த்தரக்கலை, இலக்கியம் ஆகும். குறிக்கோள் சமுதாய நோக்கம், சமுதாய நலம் நாடிய அருளாளர், அறவோர் நாட்டம் ஆகும். இதற்குச் சமுதாய ஆற்றல் உண்டு, பயன் உண்டு. ஆனால் தனி மனிதன் நோக்கம் இதில் இழையாததாலேயே உலகில் சமயம், ஒழுக்கம், கோட்பாடு ஆகிய எதனிலும் மனிதர் இயல்பாக இருமனப்பட்டு இரண்டகச் செயலை ஆற்ற முடிகிறது. உலகில் அறமுறைகள், சமயங்கள், கட்சிகள், கோட்பாடுகள் எவ்வளவு திட்டமிட்டுச் செயலாற்றப்பட்டாலும் பெரும்பாலும் விரும்பிய வெற்றி காணாததற்குரிய காரணம் இதுவே. இதனை இயல்பாயுணர்ந்த வள்ளுவர் மரபில் வந்த இனமுதல்வர்களே உயிர்க்கலை, உயிர் இலக்கியப் பண்பாளர்கள். இனிப்புக் கவர்ச்சியுடன் மருந்தின் பயனுடைய சமுதாய நலமும் கலந்து, உணவின் தன்மையுடைய நீடித்த இனநலமாக்கி அவர்கள் தாய்ப்பால் ஊட்டுகின்றனர். தனிமனிதன் நோக்கம், சமுதாயக் குறிக்கோள் ஆகிய இரண்டையும் இவற்றினும் உயர்ந்தே இயற்கையமைதியில் நின்ற இனநோக்கு என்னும் பண்பில் அதாவது இலக்கில் இழைத்து, இனமுதல்வர் படைக்கும் படைப்பே கலை, இலக்கியம் ஆகும்.

இயம் என்பது இனிமை, இயல்பான இனிமை, இயற்கையின் கூறு. இசையின் பின்னணியான இசைக்கருவிகள் இதனாலேயே இயம் எனப்பட்டன.

இலக்கியம் இலக்கின் இனநலத்தை, இனிப்பாகவு மன்றி, மருந்தாகவு மன்றி. இயற்கை நலமாக, இன்றியமை யாப்பயனும் நலமும் சுவையுமுடைய உணவுபோல,மக்கள் விளையாட்டுடன் விளையாட்டாக, வாழ்க்கையுடன் வாழ்க் கையாக, பொழுது போக்குடன் பொழுது போக்காக, கதை வரலாற்றுடன் கதை வரலாருக, நீதியுடன் நீதியாக எவ்வுருவிலும் இரண்டறக் கலந்து தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் இனத்துக்கும் தொடர்ந்து தலைமுறை தோறும் அளிக்கப்படும் உயிர்ப்பூட்டம் ஆகும்.

இந்த இலக்கின் வண்ணமே இலக்கணம்.

வண்ணம் என்ற சொல்லின் மூலவடிவத்தில் 'ண கரம் இரட்டுவதில்லை, 'வ' கரமும் கிடையாது. 'அணம்' 'அனம்' என்ற அப்பகுதியை வகர உடம்படுமெய்யுடன் அவ்வண்ணம், எவ்வெண்ணம் என்ற தொடர்களிலும், உடம்படுமெய்களே போன்ற 'ங' கர, 'ன' கரங்களுடன் அன்னணம், அங்ஙனம் ஆகியவற்றிலும், பண்புப்பெயர் விகுதியாகவும் தொழிற்பெயர் விகுதியாகவும் செவ்வனம் (செவ்வனே), நிறுவனம், ஏளனம் (எள்ளும் செயல்) ஆகியவற்றிலும் காணலாம்.

தமிழில் மிகமிகப் பழமையான சொற்களில் 'இயம்' 'அனம்' ஆகிய இரண்டும் சேர்வன. ஏனெனில் தமிழ் உலகின் மூல மொழியாய் இருந்த காலத்திலிருந்து நிலவி, ஆரிய மொழிகள் கிட்டத்தட்ட அனைத்திலும் நடுநிலக் கடலக மொழிகள் அனைத்திலும் பலவகையில் அவை விகுதியளவாகச் சென்றுள்ளன. ஆனால் தமிழில் மட்டுமே அவை இன்றும் விகுதிகளாகவும் தனிச் சொற்களாகவும் நிலவுகின்றன.

## 12. புலனெறி வழக்க மரபு

இலக்கியம் இலக்கணம் ஆகிய சொற்களின் தொடர்பு தமிழில் வெறும் சொல் தொடர்பு மட்டுமல்ல. அதில் கருத்துத் தொடர்பும் உண்டு. ஆனால் இலக்கியம் அளாவிய அளவில் அது உலகெங்குமே பரவியுள்ளது. இலக்கணமளாவிய வகையில் அது தமிழகத்துக்கு வெளியே மிகுதி பரவவில்லை.

இலக்கியம் வாழ்க்கையின் கண்ணுடி அல்லது அதன் படப்பிடிப்பு என்றும், இலக்கிய நடை அப்படியே பேச்சு நடையாயிருத்தல் சிறப்பு என்றும் கருதுபவர் உண்டு. இக் கருத்திலும் பலவகை வேறுபாடுகள் உண்டு. ஆனால் பொதுவாக இதை வாய்வியல் கருத்து (Realism) என்று கூறலாம். இலக்கியம் தங்கு தடையற்ற கற்பனை என்றும், இலக்கிய நடை பேச்சுநடையிலிருந்து எவ்வளவு வேறு பட்டதோ அவ்வளவும் நல்ல தென்றும் கருதுபவர் எண்டு. இதிலும் பல படிகள் உண்டு. ஆனால் பொதுவாக இதைப் புனைவியல் கருத்து (Idealism) என்று கூறலாம். உலக முழுவதும் கலையிலும், இலக்கியத்திலும் இவ்விரு கருத்துக்களும் மாறிமாறி வரும் அலைகளாகியுள்ளன என்னலாம்.

தமிழர் இரு அலைகளையும் தொடக்கத்திலிருந்தே இணைக்க எண்ணினர். திணைவகுப்பிலும் அகப்புற வகுப்பிலும் அவர்கள் வாய்வியலை உலகின் வேறெந்த இலக்கியமும் வலியுறுத்தாத அளவுக்கு வலியுறுத்தினர். ஆனால் இரண்டாம் அலையை இலக்கியத்தின் பெயரிலேயே உள்ள இலக்கிலும், இலக்கியப்பயனாகிய அறம், பொருள், இன்பம் என்ற முப்பால் அல்லது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பாலிலும் சுட்டினர். ஆனால் இலக்கைச் சுட்டியதனுடன் அவர்கள் அமையவில்லை. வாய்வியலடிப்படை கெடாமல் இலக்கு நோக்கிய வளர்ச்சிக்கு

அவர்கள் ஒரு முறையையே வகுத்தனர். அதுவே 'உள்ளது சிறத்தல்' முறை. உள்ளது உள்ளபடியே கூறும் போதும் அதன் சிறப்பு வெளிப்படும்படியான வகையில் அதற்கு மரபு வகுக்கவேண்டும். இதற்கே தமிழர் 'புலனெறிவழக்கம்' என்ற அழகிய பெயர் சூட்டினர்.

இலக்கிய ஏடுகளிலும் இந்த 'உள்ளது சிறத்தல்' முறை பின்பற்றப்பட்டது.

இலக்கிய நடைக்குள்ள அடிப்படை பேச்சுவழக்கே, ஆனால் இதில் சில சொற்களைக் கலைஞர் பொறுக்கியெடுத்து மிகுதி கையாண்டனர். தமிழர் இவற்றையே இலக்கிய அடிப்படைச் சொற்கள் அல்லது இயற்சொற்கள் என்றனர். இவை பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் ஒருபடியாக நிலவுவன. காலத்துக்குக் காலம் இவை கூடலாம், குறையலாம்; சிறிது சிறிது மாறலாம். ஆனால் இவையே இலக்கியத்தின் அடிப்படைச் சொற்கள். இவற்றில் சாராத பேச்சு வழக்குச் சொற்கள் திசைச் சொற்கள். இலக்கிய வழக்கில்கூடப் பழமைப்பட்டு, பேச்சுவழக்கில் அருகிவிட்ட சொற்களே திரிசொற்கள். இவற்றுள் பல பேச்சு வழக்கில் அழியாமல் புதுப்பொருள் சுட்டியதனால், பல பொருள் ஒரு சொல்லாகவும், ஒரு பொருள் பல சொல்லாகவும் இயல்பாக நிலவின. இன்னும் சில சொற்கள் அறிஞர் வழங்கிய அறிவுநூற் சொற்கள்—இன்று நாம் துறைச் சொற்கள் ( Technical words ) என்று குறிப்பவை இவை. இவையே வடசொற்கள்.

இயலுக்குச் சிறப்பு இயற்சொற்கள். திரிசொற்களும் உரியன. இசையில் இயற் சொற்களுக்கே பேரிடம் திசைச் சொல் சிறுபான்மை கலக்கும். நாடகத்தில் இயற் சொற்களும் திசைச் சொற்களும் விரவும். வடசொற்கள் அறிவு நூல்களுக்கே உரியன.

தொல்காப்பியர் வகுத்த நால்வகைச் சொற்கள் இவையே.

இம்மரபுகள் இன்று உலகின் பெரும் பான்மை மொழிகளிலும் பரவியுள்ளன. புலனெறி வழக்கமே இலக்கியமரபுகள் (Literary Conventions) என்று இன்று வழங்குகின்றது. அகப்புறத் துறைகளிலும், பின்னாளில் இவற்றைப் பேரளவாகக் காணலாம். தமிழர் திணைவகுப் புக்கூட ஒரு புலனெறி வழக்கம்தான். கிரேக்க மொழி வாயிலாக முல்லைத்திணைக்குரிய பாடல் (Pastoral Song), நாடகத்துறைக்குரிய தெய்வம் பராவும் கலிப்பாடல் வகை (Odes), இரங்கல் பாக்கள் (Elegy) முதலியவை மேலை இலக்கிய வாழ்வில் பரவியுள்ளன. பருவ வருணனை, தூது முதலியன சமஸ்கிருதத்தில் பரவியுள்ளன. இவையும் பிள்ளைத்தமிழ், பள்ளு, குறவஞ்சி முதலிய பிறதுறை களும் பின்னாட்களில் இயலுடன் இயலாக வளர்ந் துள்ளன.

இலக்கிய மரபுகள் உலக இலக்கிய முழுதும் உண்டா னாலும், எம்மொழியையும்விட அதை மிகுதியாக வழங் கியது தமிழ்தான். கடைச்சங்க இலக்கியம் மொழி 'இயலே' பெருக்கி, அதிலேயே அவற்றை மட்டுமீறி வழங்கிய தனால்தான் இன்று வெளி நாட்டாருக்கும் உடனடியான எளிய கவர்ச்சியளிக்காது இயல்கின்றன. உண்மையிலே அழகிற் சிறந்த பெண்டிரின் அழகைப் பிறர் கவனிக்க முடியாத அளவில் அணிமணிகள் செறிவுற்றது போல, சங்க இலக்கியம் இயற்கையழகில் மிகச் சிறந்து விளங்கி னாலும், செயற்கையழகும் நிரம்பி, சுவை நுகர்வோர்க்குக் கடுஞ்சிக்கல் வாய்ந்ததாகியுள்ளது.

சங்க இலக்கியம் போலன்றி, சிலம்பு பேரளவிலும் மணிமேகலை ஓரளவும் இயல் சொல்லும் திசைச் சொல்லும் பெருக்கியதனாலேயே அவை இழுமெனும் இனிமை

உடையவையாய் இருக்கின்றன. திசைச் சொல் வழங்காத கம்பராமாயணம் போன்ற பிற்காலநூல்கள் சிலம்பை நோக்க இனிமை குறைந்துள்ளதற்கும் இதுவே காரணம்.

திரிசொற்கள் இன்று வழக்கிறந்த அல்லது அருவழக்குகள் (Obsolete or obscure words) என்றும், வடசொற்கள் (Technical words) என்றும் வகைப்பட்டு உலகின் வளர்ச்சியுற்ற மொழிகள் எல்லாவற்றிலும் இடம் பெறுகின்றன. திசைச் சொற்களை நாம் பேச்சு வழக்குகள் (Colloquial words) என்கிறோம்.

## 13. தொல்காப்பிய மொழி நூல் மரபு

இலக்கியத்தில் இவ்வாறாக, 'இலக்கு'ப் பண்பு முப்பால், நாற்பால் நோக்கமாகச் சமஸ்கிருதத்திலும்; புலனெறி வழக்கம், இலக்கிய நடை, சொல் வகைகள் ஆகிய வடிவில் உலகெங்கும்; அகப்புறத் துறைகள், திணைநெறி, நாடகத் துறைகள் உருவில் ஓரளவு சமஸ்கிருதத்திலும், பேரளவில் அதற்கும் முற்பட்ட கிரேக்க மொழியிலும் மேலை மொழிகளிலும் பரவியுள்ளன. ஆனால் இப்பண்பு 'இலக்கணம்' பற்றிய மட்டில் உலகில் மிகத் தாழ்த்தே பரவியுள்ளன.

உலகில் முதன் முதல் இலக்கணம் அமைந்த மொழி—மற்ற மொழிகளுக் கெல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முற்பட இலக்கணம் அமைந்த மொழி தமிழ். அத்துடன் தமிழர் இலக்கணம் வகுக்கும் போதே, அதன் பின்னணியாக 'மொழி நூல்' மரபும் வகுத்திருந்தனர். தொல்காப்பியர் தம் எட்டின் இயல்களுக்குத் தந்த பெயர்களே—'மொழி மரபு,' 'நூல் மரபு' ஆகியவையே இவற்றைச் சுட்டிக் காட்டுவன. தமிழ் இலக்கண உரைகாரரோ, புலவர்களோ இவற்றில் கருத்துத் திருப்பியதில்லை. இது இயல்பே. ஆனால் சமஸ்கிருதவாணர் தொடக்கக் காலத்

தில் தமிழைப் பின்பற்றியே இலக்கணம் எழுதியதனால் இப்பண்புகளில் சில மேற்கொண்டனர். எனினும் பாணினி, காலத்துக்குள் தமிழ் உயிர் மரபு அங்கே முற்றிலும் ஆறி அலந்து போய் விட்டது. பாணினி காலத்துக்குப் பின் சமஸ்கிருதத்தின் நிலை பிற்காலத் தமிழக நிலை ஆகி விட்டது.

தமிழில் மூவாயிர ஆண்டுகட்குமுன்வரையும், பழய சமஸ்கிருதம் என்று இன்று கூறப்படும் பாணினிக்கு முற்பட்ட வேதமொழியில் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்வரையும் நிலவி, உலகில் மரபற்று மறைந்து விட்ட இப்பண்பு, கி. பி. 19-ம் நூற்றுண்டில் புதிதாக 'மொழிநூல்' என்ற புது அறிவியல் துறையாகக் குருத்து விட்டது.

மேலை மொழி நூல் வளர்ச்சிக்குச் சமஸ்கிருதமும் பாணினியுமே தொடக்கத்தில் பெருந் தூண்டுதலாயிருந்தன. கீழ்திசையில் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே மொழி நூலுணர்வு இருந்தது கண்டு மேலையறிஞர் வியப்புற்றனர். இதில் நாம் வியப்புறுவதற்கில்லை. ஆனால் அந்நூற்றுண்டின் முடிவிற்குள், பாணினியின் மொழி நூலுணர்வு தாண்டி அத்துறை வளர்ந்து விட்டது. பாணினிக்கு முற்பட்ட வேத பிராதி சாக்கியங்களில் இப் புதுமலர்ச்சி முன்னோடியிருப்பது கண்டு, அவர்கள் பாணினியிடம் கொண்ட மதிப்பை மாற்றிக் கொண்டனர். வேத மொழிக்கு அச்சிறப்பளித்தனர்.

20-ம் நூற்றுண்டில் தாய் மொழிகளிடையே தாய் மொழியாகத் தமிழும், தாய்மொழி இலக்கணங்களிடையே இலக்கணமாகத் தொல்காப்பியமும் அவர்கள் கண்களில் பட்டன. வேத பிராதி சாக்கியங்களின் மொழி நூல் உணர்வு, இலக்கணம் ஆகிய அனைத்துக்கும் தொல்காப்பியமே மூலம் என்பதையும்; இரண்டினும் அவை தாண்டித்

தொல்காப்பியம் மேற் சென்றுள்ளதையும்; வடதிசையில் இல்லாத உயிர்த்துடிப்பும் வளர்ச்சியும் அதில் காணப்பட்டதையும் அவர்கள் இப்போது உணர்ந்து முன்னிலும் வியப்புற்று வருகின்றனர். ஏரி காணுதவன் பசிபிக் மாகடலையே கண்டது போன்ற நிலை இன்று உலகின் நிலை என்ருல் மிகையாகாது.

இந் நூற்ருண்டின் மொழி நூல் முன்னேற்றத்துக்குப் பல்வகைத் தூண்டுதல் தந்துவரும் ஏடு தொல்காப்பியம். அதற்குரிய மொழி தமிழ்.

## 14. யாப்பணி நூல்: சமஸ்கிருதமளாவிய வளர்ச்சி

தமிழிலக்கணத்திலுள்ள ஒரு புதுமையைப் புலவருலகம் நெடுங்காலமாகவே ஊன்றி நோக்கி வந்துள்ளது. தொல்காப்பிய காலத்திலிருந்த தமிழிலக்கணத்தில் 'பொருட்பால்' இலக்கணம் ஒன்று உண்டு. இது சமஸ்கிருதத்தில் இல்லாததனுலேயே புலவர் கவனத்துக்குப் பெரிதும் இலக்காகியுள்ளது.

தமிழ்ப் புலவரும் சமஸ்கிருத மரபறிந்தவர்களும் பொருளிலக்கணத்தில் காட்டிய கவனமும் அக்கரையும் மேலை மொழி படித்தவர்க்கு ஏற்படவில்லை. ஏனெனில் பலருக்கு இது இலக்கண நூலுக்குத் தேவைப்படாத புறவளர்ச்சி அல்லது புடைப்பாகவே தென்பட்டது. இதிலும் வியப்புக்கு இடமில்லை. ஏனெனில் அவர்கள் சமஸ்கிருதத்தின் பக்கம் கருத்துச் செலுத்தியிருந்தால், அங்கும் படராலமரம் போல் வளர்ச்சியுற்று வந்துள்ள அணியிலக்கணத்தை (அலங்கார சாஸ்திரம்) அவர்கள் ஒரு புடைப்பாக, பெரும் புடைப்பாகத்தான் கருதியிருப்பர். தொடக்கக் காலத்தில் மேலை நாட்டினரே அதைச் சொல்திறமை (Rhetoric) என்றுதான் மொழி பெயர்க்க முடிந்தது.

இன்றும் அணி நூலும் யாப்பு நூலும் (Prosody and Poetics) மேலை யுலகிலும் சமஸ்கிருதத்திலும் தனி நூல் துறைகளாக இயல்கின்றனவே யன்றி, தமிழிலிருப்பது போல இலக்கண நூலின் பிரிவுகளாக இயங்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது!

மேலை நாட்டினர் சமஸ்கிருத அணி நூலின் சிறப்பை உணர்ந்து கொண்டதாகக் காட்டிக் கொள்வதில்லை. ஏனெனில் அத்துறையில் சமஸ்கிருதம் மேலை நாட்டினரைத் தாண்டி அவ்வளவு நெடுந்தொலை சென்றுள்ளது. ஆனால் இலக்கியக் கலை பற்றிய அவர்கள் கருத்து, அதுபற்றிய விளக்க ஏடுகள் பல உண்மையில் சமஸ்கிருதம் இத்துறையில் ஆயிர ஆண்டுகளுக்கு முன்பே எட்டி விட்ட வளர்ச்சியின் முதற்படியின் நிழல்களேயாகும்.

இலக்கியம் என்ற தமிழ்ச் சொல்லின் கருத்துப்படிவம் மேலை யுலகுக்கு எட்டியது உண்மையில் இந்த சமஸ்கிருத அணி நூல் மூலமாகவே தான் என்பது குறிப்பிடத் தக்கது.

சமஸ்கிருதத்தின் அணி நூல் வளர்ச்சிக்குத் தந்தை தண்டி என்ற பேராசிரியப் பெருங் கவிஞனே. அவனும் அவன் பாட்டனை சமஸ்கிருதப் பெருங்கவிஞன் பாரவியும் கி. பி. 8-ம் நூற்றாண்டிலும் 9-ம் நூற்றாண்டிலும் தமிழக மாண்ட பல்லவரின் கீழ் காஞ்சிபுரத்தில் பணியாற்றியவர்களே. ஆனால் இதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முற்பட்ட தொல்காப்பியத்தில், எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பால்களே இருந்தாலும்; பொருட்பாலின் பகுதியாகவே, யாப்பும் அணியும் இடம் பெற்றிருந்தன. தண்டியின் 'காவியாதர்சமும், பரத முனிவரின் 'பரத நாட்டிய சாஸ்திரமும்' உண்மையில் தொல்காப்பியப் பொருட்பால் சார்ந்த மெய்ப்பாட்டியல், உவம

இயல் ஆகியவற்றின் அகல் விரிவுரை விளக்கங்களே யாகும்.

பரத நாட்டியமும் கருநாடக இசையும் சமஸ்கிருதத்தில் தொடங்குவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, சிலம்பும் அதன் உரை மேற்கோள்களும் தமிழகத்தில் அக் கலைகள் அடைந்திருந்த மாபெரு வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுகின்றன என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது.

ஆனால் தொல்காப்பியத்தின் மொழி நூற் பண்பை, தொல்காப்பியர் மூலம் தமிழகத்திலும் சமஸ்கிருதத்திலும் வளர்ந்த அணி நூலை உணர்ந்த அளவில்கூட மேலை மொழி படித்தவரோ, மேலையுலகமோ இன்னும் தொல்காப்பியர் பொருட்பால் நுட்பம் காணவில்லை என்னலாம்.

## 15. சமஸ்கிருத வளர்ச்சியின் மூலமரபு தொல்காப்பியம்

தமிழில் இலக்கணம் எவ்வளவு பழமையானதானாலும், மொழி வளர்ச்சியில் அதுவே கிட்டத்தட்டக் கடைசிப்படி என்னலாம்.

மொழியின் ஒலிப் படிவப்படி, எழுத்துருவப்படி, இலக்க உருவப்படி, இலக்கிய வாழ்வுப்படி ஆகியவை கடந்து நெடுநாள் பின்னரே அது இலக்கணப்படி அடைதல் இயல்பு.

உலக மொழிகள் பல இப்படிகளில் சிலபல கடந்துள்ளன. ஆனால் பல இரண்டாம் படியிலேயே, மிகப் பெரும்பாலன மூன்றும் படியிலேயே அதுவும் பிறமொழிகளின் வளர்ச்சிப்படியை அப்படியே மேற்கொண்டிருப்பது காணலாம். அத்துடன் படிகளின் வளர்ச்சி,

தமிழக அணிமை, தமிழகத்தொடர்பு ஆகியவற்றின் அளவிலேயே மேம்படுவது தெரியவரும்.

தமிழ் தானே ஐந்து படிகளையும் தன் வளர்ச்சியால் கடந்து மேம்பட்ட மொழிமட்டுமல்ல. தொல்காப்பியருக்கு நெடுநாள் முன்னரே ஐந்து படியும் ஏறிச் சென்று விட்டது என்றும், உலகம் இன்றும் காணுத ஆறும்படி ஏறித்தொல்காப்பியர் காலத்துக்குள் இறங்கவே நேர்ந்தது என்றும் காண்கிறோம். ஏனெனில் தொல்காப்பியருக்கு முற்பட இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று தமிழுக்கும் தனித்தனி இலக்கியமும் இலக்கணமும் இருந்ததாக அறிகிறோம். மூன்று தமிழுக்கு உரிய முழுமுத்தமிழ் இலக்கணமாக 'அகத்தியம்' என்ற பெயருடன் 12,000 சூத்திரம் அடங்கிய ஒரு பாரிய இலக்கணம் இருந்ததாகவும் தமிழ் மரபு குறிக்கிறது. இது முற்றிலும் புனைந்துரையல்ல என்பதற்குச் சிலம்பும் சிலம்புரைகளும் சிலம்புரை மேற்கோற்களும் போதிய சான்றுகள் ஆகும். தொல்காப்பியர் காலத்திலிருந்தோ, அதற்கு முற்பட்டோ பிற்பட்டோ மூன்று முழு இலக்கணங்கள் ஒரு முழு இலக்கணமாகக் குறுகிவிட்டதறிகிறோம்.

இது மட்டுமன்று.

சமஸ்கிருதம் உட்பட உலகின் எல்லா மொழிகளுமே இலக்கணத்தை மொழிக்கு மட்டுமே உரிய விளக்க வரம்பாகக் கொண்டன. உலகில் இன்றும் பலர் உள்ளங்கள் இந்த அளவில்தான் நிலவுகின்றன. இலக்கியத்துக்கு இலக்கணமாக அது கருதப்படவே யில்லை. யாப்பியல், அணியியல் ஆகியவை கூடச் சமஸ்கிருதத்தில் இலக்கணத்தின் (வ்யாகரணத்தின்) பகுதியாகக் கருதப்படாமல் இரண்டு தனித்துறைகளாக வகுக்கப்பட்டதன் காரணம் இதுவே.

பாணினி காலத்தில் (கி. மு. 4-ம் நூற்றாண்டில்) இலக்கிய மொழியான சமஸ்கிருதம் பிறப்புற வில்லை. பாளி பாகதங்களே நிலவின. இலக்கியப் பண்போ, வளமோ அற்ற அம்மொழிகளில் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு, வேதமொழியை ஓரளவும் பிற மொழிகளைப் பேரளவும் கலந்து, அவர்காலத்தில் வழங்கிய ஒரு பொது மொழியை அவர் 'பாஷா' என்று குறிப்பிட்டார். உபநிடதங்களில் சிலவும், பாரத இராமாயணங்கள், புராணங்கள் ஆகியவற்றின் முதிரா முதல்வடிவமும் இதில் எழுதப்பட்டு, பின்னாட்களில் சிறிது சமஸ்கிருத மணம் பூசப்பட்டது. ஆனால் இலக்கிய மொழியாகிய சமஸ்கிருதம் பாணினிக்கு ஏழு எட்டு நூற்றாண்டுகள் கழித்து. அவர் இலக்கணத்தையே அடிப்படையாகக் கொண்டு, தாய் மொழிச் சொற்கள் பேரளவில் கலந்தும், தமிழ் இலக்கியப் பண்பாட்டைப் பின்பற்றியுமே உருவாயிற்று. இவ் வளர்ச்சி கி. பி. 1-ம் நூற்றாண்டில் தொடங்கி, 5-ம் நூற்றாண்டிலே முற்றுப் பெற்றது. வால்மீகி இராமாயணத்தில் ஓரளவும், காளிதாசன் கையில் பேரளவிலுமே செயற்கை மொழியான சமஸ்கிருதம் தமிழுடன் ஒப்பான, உலகம் போற்றத்தக்க ஒரு மொழியாயிற்று.

பாணினி காலத்தில் வடதிசைக்கு ஒரு பொது மொழி இருந்தது. ஆனால் இலக்கியம் இல்லை. பாணினியின் இலக்கணம் எழுத்தும் சொல்லும் மட்டுமே அடங்கியதாயுள்ளதன் காரணம் இதுவே. இவை யிரண்டும் மொழிக்கே உரிய இலக்கணம். யாப்பும் அணியும் இலக்கியத்துக் குரியன.

வடதிசையில் சமஸ்கிருதம் உருவாகி, இலக்கியமும் நானூறாண்டு வளர்ச்சியடைந்தபின் தமிழகத் தண்டி அதற்கும் யாப் பணித்துறைகள் அளித்தான். ஆனால்

பழைய இலக்கண மரபில் அது அடங்கியிராததால், புதுத் துறைகளாகக் கருதப்பட்டு, இலக்கிய வளர்ச்சியில் தமிழுடன் போட்டியிடும் அளவில் வளர்ச்சி பெற்றது. ஆனால் சமஸ்கிருத அணியிலக்கணத்தின் முதற் பெருங்க விஞனும் (தண்டியும்) கடைசிப் பெருங்கவிஞனும் (அப்பய்ய தீட்சிதரும்) பெரும்பாலான கவிஞர்களும் தமிழகத்துக்கோ அல்லது தென்னகத்துக்கோ உரியவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழகத்துடனும் தென்னகத்துடனும் அன்று போட்டியிட்ட வடதிசை நாடு அந்நாளைய ஆரிய நாகரிகத்தின் நடுமையமான கங்கை வெளியே, புடைமையமான சிந்து வெளியோ கூட அல்ல—ஆரிய நாகரிகப் பாட்டையிலிருந்து ஒதுங்கிக் கிடந்த பண்டை ஆசியப் பெருங் குடி மக்கள் நிலைக் களமான காசுமீரமேயாகும் என்பதும் மறக்கத் தக்க செய்தி யன்று.

யாப்பும் அணியும் தனித்துறைகளாகவாவது சமஸ்கிருதத்துக்கு வழங்கப்பட்டதன் காரணம் தண்டிகாலம் வரை அவை தமிழகத்தில் உயிர் மரபாக நிலவியதேயாகும். தொல்காப்பியத்துக்குப்பின் தமிழகத்திலேயே அவற்றின் வளர்ச்சியைக் காண்கிறோம். தண்டிகால முதல் வளர்ச்சி சமஸ்கிருதத்தில் பதிவு செய்யப்பட்டு, தமிழில் அதன் நிழல் பதிவு செய்யப்படத் தொடங்கிற்று. கம்பர் காலத்துக்குப்பின் உயிர்வளர்ச்சி சமஸ்கிருதத்துக்கு மட்டுமே உரியதாயிற்று.

யாப்பும் அணியும்போல, பொருளிலக்கணத்தைச் சமஸ்கிருதம் நாடவில்லை. ஏனெனில் தொல்காப்பிய காலத்துக்குப்பின் சங்க காலத்திலேயே அது உயிர்மரபு இழந்துவிட்டது காண்கிறோம். அணிநூல் போலவே அகப்புறப் பொருள் இலக்கணங்கள் தொடர்ந்து எழுதப் பட்டன. ஆனால் அவை உருவளர்ச்சி, விரிவகல்வான புதர் வளர்ச்சி

தான் பெற்றன. அவை இலக்கியத்துக்கு உயிரான பின்னணி வண்ணமாகாமல், அதன் விலங்கு, சிறைக்கோட்டமாகவே வளர்ந்தது.

பொருளிலக்கணம், இன்றளவும் சமஸ்கிருதத்துக்கோ, மேலை மொழிகளுக்கோ உலகின் வேறெம்மொழிகளுக்கோ, பரவாமல், தமிழ் ஒன்றில் மட்டுமே உள்ள ஒரு தமிழ்ப் புதிராக நிலவுகிறது.

யாப்பும் அணியும் சமஸ்கிருதத்தில் மட்டுமன்றி மேலை மொழிகளுக்கும் சென்றுள்ளன. ஆனால் சமஸ்கிருதத்தில் வளர்ந்த அளவுகூட அவை அங்கே வளரவில்லை. ஆனால் சமஸ்கிருதத்தில் அவை தனி நூல்களாக வழங்கியது போல அவையும் வழங்குவதுண்டானாலும், பலசமயம் இலக்கணங்களில் பெரும் பிரிவுகளாகவும் இயங்குவதுண்டு. கீழை மொழிகளிலில்லாத, அல்லது கீழை மொழிகளில் தனிப்பாலாக வகுக்கப்படாத சொற்றொடராக்கத்தை (Syntax) ப் பொருட்பாலுக்குப் பதிலாகச் சேர்த்து அங்கும் ஐந்திலக்கண உறுப்புக்களைக் காணலாம். எழுத்து (Orthography), சொல் (Etymology), சொற்றொடர் (Syntax), யாப்பு (Prosody), அணி (Rhetorics) என்பன அது. இறுதிக்கூறு சரியாக மொழி பெயர்க்கப்படின், பெயர் கவிதையியல் (Poetics) என்றிருத்தல் வேண்டும். இத் திருத்தத்தையும் சில இலக்கணங்களில் காணலாம்.

இப்பிரிவினை தமிழைப் பார்த்தே அமைத்தது என்று வன்மையாக ஐயுற இடமுண்டு. ஏனெனில் ஐந்துபால் வகுப்பு எட்டிலிருந்தாலும், இன்று வழக்கில் சொல், சொற்றொடர் இரண்டுமே மேலை மொழிகளின் முழு இலக்கணமாகப் பயில்கின்றன.

இலக்கியத்துக்கு இங்கும் இலக்கணம் ஏற்படவில்லை என்பது காணலாம்.

இலக்கியத்துக்கு இலக்கணம் வகுக்காத மொழிகளிலும் இலக்கிய நடை ஏற்பட்ட பின்பே இலக்கணம் எழுதப்பட்டது. அதையே இலக்கணத்தின் கருமூலமாகப் பலர் கொள்வண்டு. இத்தவற்றை மொழிநூலார் இன்று திருத்தி வருகின்றனர். தமிழிலும் இயல்பாக இலக்கணம் இலக்கிய நடையையே பெரிதும் அடிப்படையாகக் கொண்டதானாலும். தமிழர் மொழிநூற் குறிக்கோள் பேச்சு நடையையும் வற்புறுத்தத் தவறவில்லை.

'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்........' எனத் தொல்காப்பியப் பாயிரமும், அதே முறையில்,

'உலக வழக்கும் செய்யுள் வழக்குமென்று........' எனத் தொல்காப்பிய நூற்பகுதிகளும் இதை மீண்டும் மீண்டும் வற்புறுத்துகின்றன.

## 16. தமிழ், தமிழின மொழிகளின் மாறாத்தன்மை

மொழி காலத்தில் மாறுவது. தமிழ்மொழியும் இப்பொது விதிக்கு விலக்கல்ல. ஆனால் உலகின் ஏனைய மொழிகளை நோக்க, தமிழ் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் காலத்தின் மாறுதலுக்கு மிகுதி ஆளாகாமலே இருந்து வந்துள்ளது. இதுகண்டு உலக மொழியாளரும் மொழி நூலாரும் வியப்புத் தெரிவிப்பதுண்டு. ஆனால் தமிழகத்திலேயே சிலர் காலமாறுபாடு பெரிதெனக் காட்ட முனைந்துள்ளனர். சங்க இலக்கியத்துக்கும் தற்காலத் தமிழுக்கும் இடையேயுள்ள வேறுபாடு ஆங்கிலத்தில் தற்காலத்துக்கும் சாஸர் (14-ம் நூற்றுண்டு) காலத்துக்கும் இடையே உள்ள அளவு வேறுபாட்டுடன் சமமென்று கருதியுள்ளனர். இது உண்மையானுல்கூட, தமிழின் காலமாறு

பாடு குறைவே என்னல் தகும். ஏனெனில் தமிழின் வேறுபாடு இரண்டாயிர ஆண்டுகட்கு இடைப்பட்டது. ஆனால் உண்மையில் சங்கத் தமிழுக்கும் இன்றைய தமிழுக்கும் இடையேயுள்ள வேறுபாடு ஆங்கிலத்தில் 10—12 நூற்றாண்டுகளுக் கிடையேயுள்ள மாறுபாட்டினும். குறைவு இந்தில் கபீர்தாஸுக்கும் துளசிதாஸுக்கும் இடைப்பட்ட, அல்லது துளசிதாஸுக்கும் இன்றைய இந்திக்கும் இடைப்பட்ட மாறுபாடு இரண்டு நூற்றாண்டுகளுக் குரியனவே. அவற்றை நோக்க, தமிழின் இரண்டாயிர ஆண்டு மாறுபாடு பெரிதன்று,

இந்நிலைக்குரிய ஒரு காரணம் மொழிநூலார் சுட்டிக் காட்டியுள்ளதே. ஆங்கில மொழி 17-ம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை கண்ட மாறுபாடு முந்திய மாறுபாட்டை நோக்கக் குறைவே. ஏனெனில் ஆங்கிலேயர் 16-ம் நூற்றாண்டுடன் தனித்தேசிய வாழ்வு மேற்கொண்டு விட்டனர். அவர்கள் இலக்கியத்துக்கும் பேச்சு மொழிக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு விட்டது. பேச்சு மொழிக்கு இலக்கியம் திட்ப உருவம் கொடுத்து அதன் மாறுபாட்டைப் பேரளவு தடுத்தது. தமிழில் இது போல நீண்டகாலத் தனிப்பண்பு பேணிய தேசியமும், பேச்சு மொழி, இலக்கிய மொழி ஆகியவற்றுக்குரிய தேசியத் தொடர்பும் இரண்டாயிர, மூவாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டிருந்தது. மொழி மாறுபடா திருந்ததற்குரிய முக்கிய காரணம் இதுவே.

தமிழ் ஆயிர மூவாயிரக் கணக்கான, பல்லாயிரக் கணக்கான ஆண்டு நீடித்த வாழ்வுடைய தேசியமாதலால், கிட்டத்தட்ட நிலையான கரை நிறைந்த நீர்ப் பெருக்குடைய ஆறு போல் மெல்ல மெல்ல இறுமாந்து செல்கிறது.

பண்டைத் திராவிடத்தின் எல்லைகளாகிய இன்றைய தமிழின நாடுகளிலும், சிந்து.கங்கை வெளி நீங்கலான சூழ்திசைத் தென் கிழக்காசிய மொழிகளிலும் தமிழை விட மாறுபாடு மிகுதி. சில மாறுபாடுகள் பண்டைத் தமிழின் உள்ளார்ந்த மாறுபாடுகளாதலாலேயே மலையாளமும் தெலுங்கும்—இந்திகூட—திராவிடப் பண்பின் வளர்ச்சியில் தமிழ் கடந்தோடியுள்ளன. ஆனால் திராவிட ஒலித்திரிபுப் பண்புகள் (தமிழிலக்கணத்தார் வகுத்த போலி போன்றவை) வகையில் பாளி பாகத மொழிகள் இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்பே தமிழையும் திராவிடமொழிகளையும் வட இந்திய மொழிகளையும் தாண்டி நெடுந் தொலை சென்றிருந்தன.

உண்மையில் ஜூலியஸ் சீசர் ஆண்ட காலத்திலிருந்து (கி.மு. 1-ம் நூற்ருண்டிலிருந்து) கி.பி. 12-ம் நூற்ருண்டுக்குள்ளாகப் பிரஞ்சு மண்ணில் உரோமர் பேச்சு மொழியான இலத்தீனம் அடைந்த மாபெரு மாறுதல் ஒன்றே திராவிப ஒலிப் பண்பு நோக்கிப் பாளிபாகத மொழிகள் அடைந்த மாறுதலுக்கு ஓர் ஒப்புமையாகக் கூறத்தகும், சென்ற இரண்டாயிர மூவாயிர ஆண்டுகளில் கூடத் தமிழோ பிற திராவிட மொழிகளோ இத்திசையில் இதில் பத்திலொருபங்கு மாறுபாட்டைக் கனவுகண்டதில்லை.

சமஸ்கிருதத்துக்கும் வேத மொழிக்கும் மூல அடிப்படையாயிருந்த தாய் மொழிகள் மேற்குறிப்பிட்ட பாளி பாகதங்களில் பட்டவையே. பல ஆரியச் சொற்கள் அம்மொழிகளில் திராவிட மயமாகியுள்ளதன் காரணம் இதுவே (விண்மீன்—சமஸ்கிருதம்; தாரா—தாரக: இலத்தீனம் ஸ்டெல்லா; ஆங்கிலம் ஸ்டார் காண்க.)

தமிழுக்கடுத்தபடி நீடித்த கால மாறுபாடற்ற மொழிகள் தமிழின மொழிகளே. வடதிசை மொழிகள் இரு

நூற்றாண்டுகளில் அடையும் மாறுபாட்டை அவை ஆயிர ஆண்டுகளில்கூட அடைந்ததில்லை. அவற்றின் நடித்த வாழ்வுக்குக் காரணம் இதுவே.

தமிழின் மாறுபடா நெடு நீள் வாழ்வுக்கு இன்னொரு காரணம் தமிழிலக்கிய மொழி பேச்சு மொழியைக் கட்டுப்படுத்தியதுடன் நில்லாது, அதன் வளர்ச்சியைத் தான் மேற்கொண்டு, தன் வளர்ச்சியை அதற்கும் தந்ததாகும். இலக்கிய மொழியில் மேற் கொள்ளப்பட்ட திசைச் சொற்கள் நாளடைவில் இயற் சொற்களாயின. இலக்கிய மொழியில் ஒதுக்கப்பட்ட திரிசொற்கள் திசை வழக்கில் வெறு பொருள் பட்டு இலக்கிய வழக்கில் நீடித்தன. இயற்சொல் தொகுதி மொழியின் நடுத்தளமாக. திசைச் சொற்கள், வட சொற்கள், திரிசொற்கள் ஒரு வகையிலிருந்து ஒருவகைக்குத் தாவிச் சென்று சுழன்று கொண்டே யிருந்தன.

ஓயா மாறு பாட்டிடையே மாறா நிலையை இச் சுழற்சி உண்டு பண்ணிற்று.

## 17. செந்தமிழ் நிலம்! தொல்காப்பிய, சங்ககாலங்கள்

இலக்கிய நடைக்கு மூலதளம் பேச்சு வழக்கே, ஏனெனில் இயற் சொற்கள் உண்மையில் இலக்கியம் ஏற்ற திசைச் சொற்களே. பிறப்பில் பேச்சு வழக்குடன் தொடர்புடைய இவ்விலக்கிய நடை மேற்குறிப்பிட்ட சொல் வகைச் சுழற்சியால், ஓயாது பேச்சு வழக்குடன் உயிர்த் தொடர்புடையதாக நிலவிற்று. இலக்கிய நடை இவ்வாறு பேச்சு வழக்குடன் பிணையும் போது, இனத்தின் நடுவிடமும் அது சூழ்நத தலை நிலமுமே அதில் மிகுதி பங்கு கொள்வது இயல்பு. இலக்கிய மொழிக்கு மூலதளமாக ஒரு திசை நிலம் அல்லது தாயக நிலமும், திசை யெல்லை

யும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே ஏற்படத் தொடங்கி விட்டது இத்திசையெல்லையே செந்தமிழ் நிலம். தொடக்கத்தில் அதன் எல்லை வடவேங்கடம் அல்லது திருப்பதியும், தெற்கே கடலுளாழ்ந்த குமரி யாறும், மற்ற இருபுறமும் அராபி, வங்கக் கடல்களும் ஆகும். இலக்கிய வழக்கோடு ஒட்டிய இத்திசை வழக்கே செந்தமிழ் எனப்பட்டது.

தொல்காப்பியர் காலத்திலேயே செந்தமிழ் நாடுஇன் றைய தமிழகத்துக்கும் குறுகிய ஒரு எல்லையாயிற்று என்றும், அவர் குறித்த 'செந்தமிழ் சிவணிய பன்னிரு நிலம்' சங்க காலத் தமிழகத்துக்கு உட்பட்டதே யென் றும் சிலர் கூறுவர். உரையாசிரியர் பலர் கருத்தும் இது.

'தென்பாண்டி குட்டம் குடம் கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன் வடக்கு—நன்றுய
சீத மலாடு புனனாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.'

இப்படி வெண்பாக் காட்டி, வடபாண்டி நாடும் சோணாட்டின் ஒரு பகுதியுமே செந்தமிழ் நாடென்பர் பல உரையாசிரியர்கள்.

ஆசிரியர் தேவநேயப் பாவணர் சுட்டியுள்ளபடி தொல்காப்பியர் காலத்தில் மட்டுமல்ல, கடைச் சங்க காலத்திலேயே சேர சோழ பாண்டிய நாடுகள் மூன்றும் அதற்கு அப்பாலும் ஒரே செந்தமிழ் நாடாகக் கிடந்தது. ஆகவே தொல்காப்பியப் பாயிர ஆசிரியர் குறித்த 'செந் தமிழ் இயற்கை சிவணிய நில'மும் தொல்காப்பியரே குறித்த செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலமும் அவர்களா லேயே 'தமிழ் கூறும் நல்லுலகம்' என்றும், 'செந்தமிழ் நிலம்' என்றும் குறிக்கப்பட்ட எல்லைக்கு உட்பட்ட பகுதிகளன்று. 'பழயவெண்பா' உண்மையில் பின்னுளைய

நிலைசுட்டிய செந்தமிழ் அகப் பகுதிகள் ஆகும். ஏனெனில் அங்கே தென்பாண்டி என்பது பாண்டியின் தெற்கு அல்ல. பாண்டி நாடே. தென்பாண்டி உண்மையில் தொல்காப்பியர் காலச் செந்தமிழ் நிலமே யாகும். அந்நாளைய பாண்டியர் தலைநகரம் அதற்குத் தெற்கிலேயே—இன்றைய வடபாண்டியிலோ, தென்பாண்டியிலோ அன்றி, கடலுளாழ்ந்த தமிழகத்திலோ, இலங்கையிலோ அதன் அருகாமையிலோ தான்—இருந்தது.

தொல்காப்பியர் காலத் தமிழ்ப் பிரிவினை செந்தமிழ், தமிழ் என்பதே. கொடுந்தமிழ் என்ற வழக்கு அன்று ஏற்படவில்லை. செந்தமிழ் சிவணிய நிலம் செந்தமிழ் நிலமாகிய வட வேங்கடம் தென் குமரி இடை நிலத்துக்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ள 'தமிழ் நிலங்களே'. தொல்காப்பிய காலத் தமிழர் செந்தமிழை மூலதளமாகக் கொண்டாலும், அதற்கு வெளியேயுள்ள தமிழை முற்றிலும் புறக்கணிக்கவில்லை என்பது தெளிவு. தமிழ், திராவிட மொழிகளாகப் பிரிவுற்றதற்குரிய காரணம் பின்னுளைய அடிமை நிலைப் புறக்கணிப்பே ஆகும்.

பழய உரையாசிரியருட் சிலரே செந்தமிழ் சிவணிய பன்னிரு நிலம் என்பதற்குச், சிங்களம், பழந்தீவம் (மாலத்திவம்), கொல்லம், கூபம், கொங்கணம், துளு, குடகம், கருநடம், கூடம், வடுகு, தெலுங்கு, கலிங்கம் ஆகியவற்றைப் பெயர்களாகக் காட்டியுள்ளனர். தொல் பழந்தமிழக விரிவு பற்றிய பழந்தமிழர் கருத்துப் பதிவாக இது அமைகிறது.

செந்தமிழுக் கெதிராகக் கொடுந்தமிழ் என்ற சொல் பயன்படுத்தப் பட்டது சங்க காலத்துக்கு நெடு நாள் பின்னரே தான். ஆயினும் அதன் விதை தொல்காப்பியர் கால வளர்ச்சியே, அது தமிழகத்தைச் செந்தமிழகமாகச்

சங்ககாலத்தில் குறுக்கி, பின்னுட்களில் திசை வழக்கு களைத் தனிமொழிகளாக்கியதுடன், தமிழகத்தைத் தொல் காப்பியர் கால, சங்க காலச் செந்தமிழ் நிலத்தைவிட மிக மிகக் குறுக்கியுள்ளது.

## 18. செந்தமிழின் கால இட வேறுபாடுகள்

தொல்காப்பியர் காலச் செந்தமிழ் சேர் நிலம் கொடுந் தமிழாகிப் பின், தனி மொழிநிலங்களாகத்தலைப்பட்ட பின் செந்தமிழ் நிலம் பின்னும் குறுகி, அதன் எல்லையிலுள்ள பழய செந்தமிழ் நிலப் பகுதிகளும் அதே முறையில் செந் தமிழ்சேர்நிலங்களாகக் கருதப்பட்டு,பிங்கள கொடுந்தமிழ் நிலங்கள் என்ற பெயர் சூட்டப்பட்டன. ஆனுல் இந்தத் தொல்காப்பியர் காலச் செந்தமிழ்ப் பகுதியில் மலை யாள நாடு நீங்கலாக வேறு எப்பகுதியையும் இது தனி மொழி நிலமாகத் திருத்திவிட வில்லை. எப்படியும் இடைக் காலத் தமிழகப் போக்குத் தமிழக எல்லையைக் குறுக்குவ தாகவே இருந்த தென்பதில் ஐயமில்லை. ஏனெனில் கி. பி. 9-ம் நூற்ருண்டில் மலையாளம் பிரியும் சமயம், பாண்டித் தமிழ் வேருகவும் சோழர் தமிழ் வேருகவும் பிரியும் நிலை இருந்தது என்பதை மலையாள மொழி நூலார் குறிக் கின்றனர். இதற்கேற்ப, தென் தமிழ் எழுத்து வேருக வும் (பழய வட்டெழுத்து ஆகவும்), வடதமிழ் எழுத்து (இன்றைய சேர அல்லது சோழ அல்லது கிரந்தத் தமிழ் எழுத்தாகவும்) பிரிவுற்றே இருந்தன. சோழர் பெரும் பேர ரசுதான் 12-ம் நூற்ருண்டுக்குள் மீண்டும் செந்தமிழகத் தமிழை ஒன்று படுத்திற்று என்பதை மலையாள மரபு சுட்டிக் காட்டுகிறது.

செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற பிரிவினையை விரைவு படுத்திய ஒரு செய்தி தொல்காப்பியத்திலும் அதன் உரை யிலும் தடம் பொறிக்கப்பட்டுள்ளது.

எழுத்துப் போலிக்கு எடுத்துக் காட்டாக இலக்கண நூலும் உரையும் சில சொற்களே தருகின்றன. ஆனால் இவை இலக்கிய வழக்கில் புகுந்து, போலிகளாக அறியப் பட்டனவே. இப்போலிகள் உண்மையில் திசை வழக்கு களிடையே எழுந்த மாறுபாடுகளே. சில இலக்கணவழக்கு களும் சில சொற்களும் இது போல் திசைக்குத் திசை வழக்கு மாறுபடுவன உண்டு.

செந்தமிழ் நிலம் என்று முதலில் வகுக்கப்பட்ட இடத்துக்குள்ளேயே இத்தகைய மாறுபாடுகள் உண்டு. அவை புதிதாகத் தோன்றவும், வெளியேயுள்ள திசை வழக்குகளிலிருந்து புகுந்திருக்கவும் கூடும். தமிழகத்தில் தலைநகர் மாற்றம், குடிமாற்றம், ஆட்சியாதிக்க மாற்றம் முதலியவை ஏற்படும்போது, செந்தமிழ் நிலமையம் மாறு படுவதும், அதற்கேற்பப் பழய செந்தமிழ் வழக்கு வீழ்ந்து புதுச்செந்தமிழ் வழக்கு எழுவதும் கூடாததன்று.

ஆட்சிமையம், வாணிகமையம், பண்பாட்டுமையம் ஆகியவையும் அவற்றின் மாறுபாடும் இலக்கிய மொழியை உருவாக்கவும் மாற்றவும் செய்பவை என்பதை எல்லா மொழிகளிலும் காணலாம். ஆங்கில மொழியில் தொடக்கக் காலத்தில் வட ஆங்கிலமும், பின் படிப்படியாகத் தென் ஆங்கிலமும் ஆட்சி ஆதிக்கம் பின்பற்றி இலக்கிய மதிப்புப் பெற்றன. பழய வட ஆங்கிலவளம் அடிப்படையாக, தென் ஆங்கில நோக்கி வளர்ந்த இலக்கிய மொழி அரசர் ஆங் கிலம் (King's English) எனப்பட்டது. ஆனால் இடைக் காலத்தில் இலண்டன்மாநகர்ப் பொதுமக்கள் பேச்சு பல திசைக் கலப்பானதால், கொச்சை (Cockney) எனப்பட்டது. ஆக்ஸ்போர்டு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆங்கிலம் கலை யியல் துறைகள் மூலமாகவும், இலண்டன் ஆங்கிலம் வாணிகத்துறை மூலமாகவும் இன்று போட்டியிடுகின்றன.

பெரும் பரப்பானதனுல், அமெரிக்க வழக்கும் போட்டியிடுகின்றது.

பிரான்சில் பாரிஸ்நகர் மொழியே இலக்கியமொழி அளவையாக மதிப்பிடப்படுகிறது.

இத்தாலி நாட்டில் தாந்தே காலம் வரை அரசியல் குழப்ப நிலையால் எது 'இத்தாலியம்' என்று கூற முடியாதிருந்தது.

தமிழகத்தில் பாண்டியர் தலைநகர் தென் மதுரை, அலைவாய் (கவாடபுரம்), கொற்கை, மதுரை என்று மாறுபாடடைந்தபோது செந்தமிழ் படிப்படியாகப் பலமாறுதலை அடைந்திருத்தல் இயல்பு. தொல்காப்பியத்துக்கு முற்பட்ட இலக்கியப் பரப்பு பேணப்படாமல் அழிந்துபடுவதற்கு இதுவும் ஒரு காரணமாய் இருந்திருத்தல் கூடும். அத்துடன் கடைச் சங்ககாலத்தில் அடிக்கடி சேர சோழ பாண்டியரும், வேளிரும், ஆட்சியிலும் ஆதிக்கத்திலும் மாறுபாடுற்றனர். இவ் ஓயா மாறுபாடு அந்நாளில் மொழியைச் சிதைக்காமல் அதைப் பாதுகாத்தது சங்கமே. ஆனல் சங்ககாலத்துக்குப்பின், சில நூற்ருண்டுகள் மதுரையும் காஞ்சியும் தலை சிறந்த தமிழகத் தலைநகர்கள் ஆயின. சோழர் ஆட்சியில் தஞ்சை வட்டாரமும் கடைசிப் பாண்டியர், நாயகர் ஆட்சியில் மீண்டும் மதுரையும் திருச்சிராப்பள்ளியும் ஆதிக்கம் பெற்றன.

இன்று தமிழக நகர்களில் மதுரையையும் திருச்சியையும் பேரளவில் விஞ்சிய ஆட்சித்தலைமையகம் சென்னையே.

இம் மாறுபாடுகளைத் தமிழ் மொழி நூலார் காணலாம்—கண்டு விளக்கவேண்டும். ஏனெனில் தொல்காப்பிய காலத்திலிருந்து ஏற்பட்டுள்ள சிக்கல்களை — கால ஆராய்ச்சிகளைத் தலைகீழாக்கவல்லபல தவறுகளை—திருத்த இது உதவும்.

'அ ஐ ஔ' என்ற மூன்று உயிர்களுடன் சகரம் தமிழ்ச் சொற்களின் முதலில் வருதலில்லை என்று தொல்காப்பியர் சூத்திரம் வகுத்தார். சிலர் 'அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே' என்பதற்கு 'அவை ஔ என்னும் ஒன்றலங்கடையே' என்று பாடபேதம் காட்டிக் கருத்துத் திருத்த எண்ணுகின்றனர். ஆனால் இங்கே 'அவை' என்ற பன்மை பொருத்தமற்றது. தவிர, தொல்காப்பிய நூலிலே 'ச'வை முதலாக்கொண்ட சொல்லே இல்லை. திருக்குறளில் ஒரு சிலவும், சங்க இலக்கியத்தில் இன்னும் மிகச் சிலவுமே இடம் பெறுகின்றன.

இன்றைய தமிழ் மொழியில் 'ச'வை முதலாகக் கொண்ட தமிழ்ச் சொற்கள் ஏராளம்—அவை பெரும்பாலும் ஐயத்துக்கிடமற்ற தனித்தமிழ்ச் சொற்களே. சட்டி. சரிவு, சரிதல்; சம்மட்டி, சந்தணம், சவ்வு; சவ்வீரம் சங்கிலி, சமன்; சண்டை, சச்சரவு, சமையல் என இவற்றை நூற்றுக்கணக்காக அடுக்கலாம், தொல்காப்பிய காலத்தில் இவை இல்லாதன என்று சொல்லலாமா? மெய்ந்நிலை அதுவானால் இவை எங்கிருந்து வந்தன?

உண்மை யாதெனில் தொல்காப்பியர் ஏற்றுக்கொண்ட இலக்கிய மொழிக்கு நிலமான திசை நிலம் (செந்தமிழ் நில மையம்) சகரம் கெடும் போலிகளில் உயிர்முதலாக உள்ளவற்றை மட்டுமே ஏற்றுக்கொண்டிருந்தது. சவை, அவை; சமணர், அமணர்; சான்ற, ஆன்ற; சுழல், உழல்; சுருத்து, உருத்து; செட்டி, எட்டி; சேமம், ஏமம்; (மலையாளம்; சேட்டன்—ஏட்டன் = அண்ணன்) என எல்லா உயிர்களுடனும் இச்சகர முதற்போலி தமிழில் உண்டு. இவற்றுள் பிற உயிர்களின் போலிகள் இரண்டையும் பழங்காலச் செந்தமிழ் ஏற்று, அகரத்தில் மட்டும் சகரம் கெட்டவற்றையே கொண்டதாதல் வேண்டும். பின்னாட்களில் செந்தமிழ் நிலமைய மாறுதலாலும், மைய ஆதிக்

கமே குறைந்ததாலும் மற்ற வடிவங்களும் நல்ல தமிழில் புகுந்தன என்பது தெளிவு.

சட்டி, சட்டுவம் போன்ற சொற்களை உரையாசிரியர் 'கடி சொல்' என்றனர். பழய செந்தமிழின் மரபரு ஆதிக்க நிழலை இது காட்டுகிறது.

சொற்களிலும் இதுபோன்ற வேறுபாடுகளைக் காண லாம். தொல்காப்பியர் காலத்தில் நகரடுத்த பகுதியாக, செந்தமிழ் சேர் நிலத்தின் மையப்பகுதியாகவே, சொற்கை நாடு இருந்திருந்தது. ஆனால் அது உரையாசிரியர் காலத் துக்குள் எண்ணற்ற பல இயற்கை நிலவியல், வர லாற்று, அரசியல் மாறுபாடுகளின் விளைவாக, கொடுந் தமிழ் நிலமாகவே கருதப்படத் தொடங்கிவிட்டது. இதனால் தொல்காப்பியர் தம் காலத்தில் செந்தமிழாகக் கொண்டு தனிவிதியே வகுத்த 'பெண்மகன்' என்ற சொல் பின்னாட்களில் உரையாசிரியர்களால் கொற்கை நாட்டுத் திசை வழக்கு என்று கூறப்பட்டுள்ளது. இன்றும் இது சென்னை சூழ்ந்த வட தமிழகப் பகுதியில் பேச்சு வழக்கில் உள்ளது.

ஒரு காலத்தில் திசை வழக்காக இருந்தது மட்டுமல்ல, கொச்சை வழக்காக இருந்ததே, அடுத்த காலத்தில் இலக் கிய வழக்காகவும், இது போல இலக்கிய வழக்காக இருந் தது கொச்சை வழக்காகவும் மாறி இயல்வதுண்டு. இன்று கிழத்தி, பெண்டாட்டி, இல்லாள், மனைவி, துணைவி ஆகியவை. இலக்கிய வழக்கு. பெண்டாட்டி கொச்சை வழக்கு. கிழத்தி இலக்கியத்திலும் புலமை வழக்கு. ஆனால் தொல்காப்பியர் காலத்தில் கிழத்திக்கே முன்னிடம். திருக் குறளில் மனை, மனையாள் உண்டு, மனைவி இல்லை. இல்லாள், வாழ்க்கைத்துணை பொது வழக்கு. ஆனால் சங்க இலக்கி யத்தில் பெண்டாட்டியே சிறந்த வழக்கு. கம்பர் காலத்

தில் மீட்டும் இல்லாள் தலை தூக்குகிறது. அதன் பின் எழுந்த பொதுவழக்கு மனைவி.

இக்காலத் தமிழகச் சிற்றூர் வழக்கு கொச்சை வழக்குகளிலே சங்கத் தமிழை மிகப் பேரளவில் காண லாம். அயலாட்சி, அயற் பண் பாட்சிகள், தமிழர் அடி மைப் பாசம் ஆகியவைசங்கத் தமிழைத் துரத்தி ஒதுக்கித் தள்ளியுள்ள இடம் இது!

எழுத்து, சொல் ஆகியவற்றைப் போன்றதே இலக் கண வழகக.

உலகின் எல்லா மொழிகளிலுமே வியங்கோள் மூவி டத்துக்கும் வருவது. இன்றைய தமிழிலும் அப்படியே. இவ் வழக்கு சிலப்பதிகாரத்திலும் சங்கப் பாடல்களில் மிகப் பழமையானவற்றிலும் காணப்படுகின்றது. ஆனால், தொல்காப்பியர்,

> 'முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடும்
> மன்னா தாகும் வியங்கோட் கிளவி'

என விதி வகுத்துள்ளனர்.

இவையெல்லாம் தொல்காப்பியர் காலத் தமிழின் நிலை குறிக்கும் என்று பல ஆராய்ச்சியாளர்—மொழி நூலில் விளையாடியவர்கள்கூட—முடிவு செய்து விடுகின் றனர். உண்மையில் இது அவர் கால இலக்கிய வழக்கை, அதிலும் இயல் துறை சார்ந்த இலக்கிய வழக்கை மட்டுமே காட்டும். அவர் விதிக்கு மாறுபட்ட வழக்குகள் அவருக் குப் பிற்பட்ட இலக்கிய வழக்காக மட்டுமன்றி, முற்பட்ட இலக்கிய வழக்காகவும் இருக்கலாம். முற்பட்டும் பிற் பட்டும் அவர் காலத்திலும் தொடர்ந்து திசை வழக்கில் நிலவு வனவாகவும் இருத்தல் கூடும்.

இலக்கண வழக்குகள் மட்டுமன்றி நான், நாம், நாங் கள்; நீர், நீங்கள், உங்கள் முதலிய சொல் வழக்குகளும்

பிற்பட்டன என்று கொண்டு கால ஆராய்ச்சியில் இறங்கு பவர் உண்டு. இவர்களில் மொழி நூல் ஆராய்ச்சி செய்த வரையும் காணுதல் வியப்புக்குரிய செய்தி ஆகும்.

தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் இடம் பெருத நான், நீர் போன்ற சொற்கள் அக்காலத்தில் வழக் கிலேயே கிடையாது என்று கூறுவதிலும் பார்க்க மொழி நூல் மடமை வேறு கிடையாது. ஏனெனில் அச் சொற்கள் அல்லது அவற்றின் திரிவுகளே மற்ற எல்லாத் திராவிட மொழிகளிலும் (மலையாளம்; ஞான், நாம். ஞங்ஙள்—, நிங்ஙள், தெலுங்கு; நேனு, மனமு, மம்ழுலு, மீரு—) இடம் பெற்றுள்ளன, தவிர நாம், நாங்கள் என்ற வேறு பாடு சொல் வேறுபாடு மட்டுமல்ல. நாம் முன்னிலை உட் படுத்திய வழக்கு. நாங்கள் அதை விலக்கிய வழக்கு. தன்மைப் பன்மையில் இவ்விருசார் வழக்கு உலகில் வேறெம் மொழியினத்துக்கும் கிடையாது, திராவிட இன முழுமைக்கு முள்ள சிறப்பு இது. முற்கால இலக்கியத் தமிழில் யாம் ஒன்றே நிலவியதால், முன்னிலையுட்படுத்திய கருத்துப்படிவமே இல்லை என்று கூறவேண்டும்.

இது தொல்காப்பியர்கால, சங்ககால இலக்கியத் தமிழின் குறைபாடுகளில் ஒன்று, அதற்கு மூலமான திசை வழக்கிலும் ஒன்று என்பதில் ஐயமில்லை ஏனெனில் தொல்காப்பியர்காலத் தலைநகருக்கு அணித்தாயிருக்க வேண்டிய யாழ்ப்பாணப் பகுதித் தமிழில், இன்று தன் மைப் பன்மையில் 'நாங்கள்' ஒன்றுதான் வழக்கில் உண்டு. ஆனால் அதன் கருத்துப்படிவம் வடபால் தமிழ கத்தின் முன்னிலை விலக்கிய 'நாங்கள்' அல்ல. முன்னிலை யுட்படுத்தி 'நாம்' என்ற பொருளை உளங்கொண்டே அவர்கள் இன்றும் 'நாங்கள்' என்று பேசுகிறார்கள். அவர்கள் பேச்சு வட தமிழருக்கும், வடதமிழர் பேச்சு யாழ்ப்பாணத் தமிழருக்கும் இந்த ஒரு சொற்பொருள்

வேறுபாடு காரணமாகச் சில சமயம் கோபத்தையும், சில சமயம் பொருளறியவாராக் குழப்பத்தையும் இன்றும் உண்டு பண்ணுகிறது.

தமிழ் மொழியின் மாறுபடாத் தன்மைக்குரிய மற்றும் ஓர் இயல்பான காரணத்தை இங்கே காண்கிறோம்.

தொல்காப்பிய காலமுழுதும் பேரளவிலும் சோழர் காலம்வரை ஓரளவிலும் தமிழ் தென்பாண்டி நாட்டின் ஆதிக்கத்தில் இருந்தது. தமிழர் பெருமைக்குரிய இக்காலத்தின் ஒரு சில சிறுமைகளைக் கூடத் தாண்டிச் சோழர் ஆட்சியும் பின்னாட்களும் மீட்டும் தமிழ் ஒருமை கண்டு வருகின்றன.

தென்னக அடிமைநிலை நீங்கித் தேசீய வாழ்வும், தேசீய அடிப்படையில் கூட்டரசு நிலையும் ஓங்கும் நாட்களில் தமிழ் மட்டுமல்ல, தென்னக மொழிகள் யாவுமே தத்தம் பண்பில் நின்று தனிப்பண்பு கெடாமலே, அத் தனிப் பண்படிப்படையிலேயே ஒரு திசைப்பட வளர வழியுண்டு, தமிழ்ப்பண்பு உலகில் மிகுதி பரவும் நாட்களில் உலகமொழிகளும் இதுபோல ஒரு நோக்குப்பட வளர வழி ஏற்படும். ஏனென்றால், தமிழ்ப்பண்பு இனங்களின் தற்பண்பில் ஊன்றித் தனிப்பண்பு வளர்த்து அதனடிப்படையில் பொதுமை காண வல்லது. இனங்களின் எல்லை கடந்த பேரினப் பண்பாக அது விளங்குவதே இதன் அடிப்படைக் காரணம் ஆகும்.

## 19. முத்திற இலக்கியப் பின்னணி

தொல் பழங்காலத் தமிழர் இயற்கை, வாழ்க்கை, இனம் ஆகிய மூன்றையும் பின்னணிச் சட்டங்களாகக் கொண்டு இலக்கியம் வகுத்தனர். வாய்வியலும் இலக்கியலும் அதில் இரண்டறப் பின்னிப் பிணையப்பட்டிருக்கும் வகை இதுவே.

இயற்கைப் பின்னணி ஐந்திணை நெறியாய் இயல்கின்றது, முத்திறச் சட்டத்தின் அடித்தளம் அதுவே. அதன் ஒரு கூறாக, அதனுடன் இணைந்த வாழ்க்கைப் பின்னணி அகப்புறப் பகுப்பே யாகும். இந்த இரண்டுடனும் பின்னிப் பிணைந்த வண்ணப் பின்னணியாக விளங்குவது இனப் பின்னணி. அதுவே அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாற் பாகுபாடாகவும், அம்மூன்றன் தொகையாகிய வீட்டையும் உடன் சேர்த்து, அறம், பொருள் இன்பம், வீடு என்னும் நாற்பாகுபாடாகவும் இயல்கிறது.

மூன்று பின்னணிகளும் ஒவ்வொன்றிலும் மற்றவற்றின் கூறமைய அமைந்துள்ள நேர்த்தி கூர்த்துணர்ந்தின் புறத்தக்கது. இயற்கைப் பின்னணியாகிய ஐந்திணைப் பாகுபாடு முதல், கரு, உரி எனும் முப்பொருள் வகுப்புடையது. முதல் என்பது காலத்தின் பெரும் பிரிவு, அல்லது ஆண்டுப்பிரிவு; சிறுபிரிவு அல்லது நாட்பிரிவு ஆகிய பெரும் பொழுது, சிறு பொழுதுகளையும்: இடம்—அதாவது நிலப்பிரிவுகளாகிய ஐந்திணை நிலங்களையும் உறுப்புகளாகக் கொண்ட இயற்கையின்கூறு. கரு என்பது அவ்வந் நிலத்துக்குரிய வாழ்க்கைக் கருவிகள், சூழல்கள் குறிப்பது. இது ஐந்திணை நெறியின் வாழ்க்கைக் கூறு என்னலாம். உரிப்பொருள் என்பதே இன வாழ்க்கை. இதன் பகுதியாகவே அகமும் புறமும்; இவற்றின் இன நோக்காகவே முப்பால், நாற்பால் பகுப்பும் வகுக்கப்பட்டுள்ளன.

அகப்புறப் பாகுபாட்டிலும் இதுபோல முக்கூறுகளும் முறுக்கிப் பின்னப்பட்டே யுள்ளன. அகத்தில் ஏழுதிணைகளும், புறத்தில் ஏழுதிணைகளும் உண்டு. நேருக்கு நேராக இணை இணையாக வகுக்கப்பட்ட இரு திறங்களிலும் அகத்தின் 'நடுவண் ஐந்திணை' அகத்தில்

அகமும், ஏனைய இருதிணைகளும் அகத்தின் புறமும்; புறத்தின் 'நடுவண் ஐந்திணை, புறத்தில் புறமும், ஏனைய இருதிணைகளும் புறத்தின் அகமுமாகக் கூறுபடுத்தப்பட்டுள்ளன. புறத்தில் புறமாகிய புறத்திணை ஐந்தும் வாழ்க்கையின் இயற்கை நெறி. புறத்தில் அகம் அது முற்றிய அருள் நெறி. அகத்தில் புறம் புறத்தில் அகத்தோடொத்த, ஆனால் தலைமாறிய அகவாழ்க்கையவா. அகத்தின் அகமாகிய ஐந்திணையகப் பொருளே தமிழர் உச்ச உயர் நெறியாகப் போற்றிய ஒத்த அன்பு நெறி.

புறத்தில் புறம், புறத்தில் அகம், அகத்தில் புறம், அகத்தில் அகம் என்ற படிகளே சமயத்துறை வாணர் வகுத்துள்ள தொலை நோக்கு (சாலோகம்), அணிமை (சாமீபம்), உரு ஒப்பு (சாரூபம்) இழைவு (சாயுஜ்யம்) எனக்கூறிய நிலைகள் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. கடவுளைக் காதலியாகவும் பக்தனைக் காதலனாகவும் கொண்டால் சைவ சமயகுரவர் நால்வருள் அப்பர் நிலை அணிமைக்கும், சம்பந்தர், சுந்தரர் நிலைகள் உரு ஒப்புக்கும், மாணிக்கவாசகர் நிலையே இழைவுக்கும் பொருந்துவன. சம்பந்தரையும் இறுதி நிலைக்குரியவரென்பர் ஆசிரியர் மறைமலையடிகள்.

அகத்திலேயே தம் முழுக் கருத்தும் செலுத்திய தமிழர் அதிலே களவியல், கற்பியல் என்றும், முன்னதில் கூடல், பிரிதல் என்றும், பின்னதில் கூடல், பிரிதல், ஊடல் என்றும் பல படிப் பிரிவினைகளை நுணுகி வகுத்து, அகத்துறைகளை அகலின்பக் கடலின் துறைகளாக்கினர்.

முப்பால் நாற்பால் பாகு பாடுகளும் இது போன்று முக்கூற்றில் இணைபவையே. புறத்தின் புறம் பொருட்பால். அது வாழ்க்கையின் சமுதாயப் பின்னணி, புறத்




அகப்புறச் சுழிகள்

தின் அகம் அறம். அது சமுதாய உறுப்பினனான தனி உயிரின் வாழ்வு. அகத்தின் புறமே வீடு. அது நாற்பாற் பாகுபாட்டில் மூன்றிடையும் பிரிவுற்று, அறத்தில் துறவாகவும், பொருளில் குடியியலாகவும், இன்பத்தில் தொடக்கக் காதலான கைக்கிளை, பெருந்திணைக் கூறுகவும் இணைக்கப்பட்டது. அகத்தின் அகமே இன்பப்பால்.

ஐந்திணை நெறி, அகப்புறப் பகுப்பு, முப்பால் நாற்பாகுபாடு ஆகிய மூன்றுமே இயற்கை, உயிர்வாழ்வு, மனித இனவாழ்வு ஆகிய முப்பொருளையும் மூவேறு வகைகளில் கூறுபடுத்திப் பின்னி இழைத்து முறுக்கியுள்ளன என்பது காணலாம். ஆனால் அவற்றின் முறைவைப்பில் நாம் மூவகைச் சுவையார்ந்த வேறுபாடுகள் காண்கின்றோம்.

ஐந்திணை நெறி இயற்கை, வாழ்க்கை, இனம் என மலர்வது. பொங்கு தாமரை யென மலரும் அதன் மலர்ச்சியில் முதலில் விரியும் புற இதழ்களாக இயற்கைக் கூறான முதற் பொருளும் அடுத்து விரியும் இடையிதழ்களாக வாழ்க்கைக் கூறாகிய கருப்பொருளும், இறுதியில் பொகுட் டவிழ்ந்து விரிந்து நறுந்தேன் மணமுகிழ்த்து நகைமுகம் காட்டும் அகவிதழாக இனக் கூறாகிய உரிப் பொருளும் இயங்குகின்றன.

அகப்புறப் பாகுபாட்டைப் புறம், அகம் என்று கொண்டால் அதன் எதிரிணை சுழிவடிவான அழகிய மலர்ச்சிப் போக்கு எளிதில் புலனாகும்.

படுக்கவைத்த ‘எட்டு’ என்ற எண்ணின் உலகப்பொது எண்ணுரு அல்லது நடுவுடல் வளைத்துப் பின்னி மீண்டும் தலைவால் எதிரெதிர் பொருந்த இரு சுழியாகக் கிடக்கும் பாம்பு அல்லது மூக்குக்கண்ணாடி முகப்பின் வடிவை மனத்துட்கொண்டு,அதன் மைய இணைப்பிலிருந்து வலஞ்சுழித்து எழுதினால். இப்போக்குத் தென்படும். முதற் சுழியின் கீழே புறத்தில் புறத்திலிருந்து, மேலே புறத்தில் அகமும்,

அது தொடர்ந்து எதிர் சுழியின் கீழே அகத்தில் புறமும், இறுதியில் முதற் சுழியின் மேலே அகத்தின் அகமும் ஒன்றை ஒன்று மேம்பட்டனவாகத் தொடரும்.

முப்பாற் பாகுபாடும் நாற்பாற் பாகுபாடும் ஒருங்கே மூன்று ஆரங்களையும் இரு சுற்று வட்டப்பட்டைகளையும் உடைய ஒரு சக்கரமாக உருவகப்படுத்தப் பெறலாம். மூன்று ஆரங்களும் பிரிக்கும் பிரிவுகளே வலஞ்சுழித்து இடமிருந்து வலமாக அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பால்களாகவும், அகப்பட்டையில் அடங்கிய அக வட்டமே மூன்றின் கூறுகளும் அடங்கிய வீட்டுப் பாலாகவும் கொள்ளலாம். இவ்வமைப்பில் புறத்தின் அகமாகிய அறத்தின் வெளிக்கூறு இல்லறமாகவும், உட்கூறு வீட்டின் பகுதியாகிய துறவறமாகவும்; புறத்தின் புறமாகிய பொருளின் வெளிக்கூறு அரசியல், அங்கவியலாகவும், உட்கூறு வீட்டின் பகுதியாகிய குடியியலாகவும் அமைகின்றன. ஆனால் அகத்தின் அகப்புறக் கூறுகளாகிய இன்பப் பால் வெளிக்கூறு புறக்கூறு இணைந்தே கிடப்பதும், அதன் வெளிக்கூறு அகத்தின் புறமாக ஒவ்வா இன்பம், ஒருதலை இன்பம், களவியல், பிரிவு, ஊடல் ஆகியவற்றையும், அகக்கூறு அகத்தினமாக ஒத்த இன்பம், கற்பியல், கூடலாகவும் விளங்குவன.

சக்கரத்தின் சுழற்சியை ஒரு மின்காந்த ஆழியின் சுழற்சியாக உருவகம் செய்தால், அகமும் புறமும் மாறிச் செல்லும் அகத்திசை யாகிய கற்பியல் கூடலிலிருந்து இல்லறம், துறவறம்; குடியியல், அரசியல்; ஊடல்; கூடல் என இயல்பாக வட்டச் சுழற்சியுடன் சுழற்சியாக, ஒவ்வொரு பாலிலும் உட்கூறு வெளிக்கூறாக ஊடுருவி ஓடுவதையும், சக்கரமும் மின் ஓட்டச் சுழற்சியும் இரண்டும் தொடக்கத்தில் முடிந்தும், முடிவில் தொடங்கியும் எல்லையின்றிச் சுழித்துச் செல்வது காணலாம்.

தமிழக இனமுதல்வர் வகுத்த முப்பாலில் பால் முறையும், இயல் முறையும் அதிகார முறையும் பாயிரமும் அவருக்குரியதன்று எனப் புத்தாராய்வாளர் சிலர் புதுமை நாடிக் குழம்புவதுண்டு. ஆனால் அவர் முறை வைப்பின் அழகு இம்முப்பால் ஆழி மரபிலேயே அடங்கியுள்ளது, அதுமட்டு மன்று. இவ் ஆழிமரபு வலஞ்சுற்றாக எட்டின் நூற் பகுதியில் அமைகிற தென்றால், அதன் பாயிரம் அதன் எதிர் சுற்றாக இன்னொரு வட்டமாக அமைந்து, ஒருபெரு வட்டம் முத்தாரம் போன்றும் பாயிரம் அதில் தொடங்கும் சிறு வட்டமாக அதன் முகப்புப் பதக்கம் போலவும் அமைந்துள்ளன. பெரிது சிறிதான இரு வட்டங்களும் அகப்புறப் போக்கின் பாம்பு வளைவில் எதிரெதிர் குறுக்காகப் பின்னிச் செல்வதையும், பாயிரமாகிய சிறுவட்டம் ஐந்திணை மலர்ச்சி முடிவில் உருவகப் படுத்திய பொங்கு தாமரை மலரின் பொகுட்டேந்திய காம்பாக இயல்வதையும் காண்டல் தகும்.

## 20. ஐந்திணை மாடம்

ஐந்திணை நெறி இனவாழ்வுக்குரிய இடம், காலம் முழுதளாவிய ஒரு மாடம். அதன் அடித்தளம் இடப் பரப்பாகிய ஐந்திணை நிலம், அல்லது முழு உலகப் பரப்பு, அதன் மேோடு காலம். அது ஆண்டளாவிய பருவங்கள் அல்லது பெரும்பொழுதுகளாகிய உத்தரங்கள்விட்டங்கள், நாளளாவிய சிறுபொழுதுகளாகிய வாரிகள்,வரிக் கைகள் உடையது. இவை ஐந்திணை நெறியின் முதற் பொருள்கள்.

அண்டமாடத்தின் மதில்கள், சுவர்கள், வாயில்கள், பலகணிகள், தூண்கள் போன்றவையே கருப்பொருள்கள். வாழ்வின் சூழலும் துணைகளும் கருவிகளும் இவற்றுள் அடங்கும். வாழ்க்கைக்கு அடிப்படையான உணவு; அதற்கும் உடைக்கும் உறையுளுக்கும் உதவும்

மரஞ்செடி கொடியினங்கள், விலங்குயிர் பறவைகள்; வாழ்வில் இன்பம் தரும் பறை, யாழ்வகைகள், அவ்வின பக் குறிக்கோளான தெய்வம் இத்தனையும் கருப்பொருள் கள் ஆகின்றன.

ஐந்திணை நெறிக்குத் தமிழர் ஐந்திணை நெறி என்று தான் பெயர் வைத்தனர். ஆனால் திணைகள் அகத் தும் ஏழு, புறத்தும் ஏழு. எனினும் நிலமுடைய திணைகள், அகவாழ்வுக்குரியவை ஐந்தே. மற்ற இரண்டு திணைகளும் மாடத்தின் புறவாரங்கள் அல்லது தோட்டம் போல்வன. அகவாழ்வுக்குரிய ஐந்திணை நிலத்தில் நடைபெறுவதே இனவாழ்வு—அதையே தமிழர் மாடத்தின் உரிப்பொரு ளாக்கினர்.

ஐந்திணை நிலங்களின் பெயர்களும் அகத்திலும் புறத் திலும் ஐந்திணைக்குப் புறம்பான 'புறவார'த் திணைகளின் பெயர்களும் அவ்வந்நிலத்துக்கு அல்லது வாழ்க்கைக்குரிய மலரின் பெயர்களாகவே தரப்பட்டுள்ளன. ஐந்து நிலங் கள் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்பன. குறிஞ்சி மலைப்பகுதி. அதற்குரிய உரிப்பொருள் கூடல். முல்லை காட்டுப் பகுதி. அதற்குரிய உரிப்பொருள் கூடி யிருத்தல். பாலை வறறல் நிலம் அல்லது மணற்காடு. அதன் உரிப்பொருள் பிரிவு. மருதம் ஆற்றுப் பாங்கான நாட்டு நிலம். அதன் உரிப்பொருள் ஊடல். நெய்தல் கடற்கரைப் பகுதி. அதன் உரிப்பொருள் பிரிவாற்று திரங்குதல். இவற்றுள் நடுத்திணையாகிய பாலை பண்டைத் தமிழகத்தில் நடு நிலமாகவும் அமைந்தது. அப்பாலையை நீக்கி ஏனையவற்றையே நானிலம் என்பர். தமிழ் மரபில் இதுவே நிலவுலகம் குறிக்கிறது.

நடுவண் ஐந்திணைக்குப் புறம்பாக உள்ள இருதிணை கள் கைக்கிளை, பெருந்திணை என்பன. அவை ஒரு தலைக்

காமமும், பொருந்தாக் காமமும் குறித்தன. மனித இன வளர்ச்சியிலும் ஒத்த காதலிலும் முதற்படி நிலைகளாகவே தமிழர் இவற்றை வகுத்ததுடன் நிலமில்லாத, அதாவது தமிழர் பண்பட்ட வாழ்வில் தனியிடம் பெறாத ஒழுக்கங் களாகவும் இவற்றை வகுத்தனர்.

அகம் காதலை மையமாகக் கொண்டது போல, புறம் பேராண்மையை நடுவாகக் கொண்டது.

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் ஆகிய நடுவண் ஐந்திணைக்கும் எதிரிணையான புறத்திணைகள் வெட்சி, வஞ்சி, வாகை, உழிஞை, தும்பை ஆகியவை. வெட்சி எல்லைப் புறப்போர். எதிரி நாட்டின் ஆனிரை கவர்தல், அது காத்தல் அதன் உரிப்பொருள். வஞ்சி எதிரி நாட்டின் மீது படை யெடுத்தல். வாகை தன் பெருமை காட்டல். இது போர்த்துறையில் மட்டுமன்றி வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் பரவிய செயலுடையது. உழிஞை கோட்டை முற்றுகையும், முற்றுகை காத்தலும் ஆகும். நெய்தல் படையெதிர்ப் பெதிர்த்த நாட்டுப் பாது காப்புப் போர்.

புறவாரத்தின் திணைகளாகிய கைக்கிளை, பெருந் திணைக் கெதிரிணையான புறத்திணைகள் பாடாண், காஞ்சி ஆகியவை. பாடாண் வாழ்த்து, அறவுரை, வீரம், வண் மைப் புகழ்ச்சி, வசை ஆகியவற்றையும், காஞ்சி உலகமும் வாழ்வும் நிலையாமை குறித்த வெறுப்பும் பழிப்பும் குறிக்கும்.

## 21. அகத்துறைப்பண்பு

மனித இனப் பண்பு நிலவுலகமானல், அதில் தமிழப் பண்பு இமயமலை யுள்ளடக்கிய திபெத் நில மேடை

ஐந்திணை நெறி அதன் மீதெழும் இமயமலைத் தொடர். அகப்புறப் பாகுபாட்டில் அகம் அதன் எவரெஸ்ட் பொருட்டு. அகத்தின் ஊடலும் அதன்பின் கூடலும் அகத்தின் உயிர்; அதுவே அவ் எவரெஸ்ட் பொருட்டின் முகடு ஆகும்.

இவ்வுண்மையைச் சங்க இலக்கியத்தில் பத்துப் பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டுப் பற்றிய மரபு விளக்குகிறது.

ஆரிய அரசன் பிரகத்தன் சங்கப் புலவர்களில் ஒருவன். அவன் தமிழ் நன்கு படித்துப் புலமை பெற்றான். தமிழ்ப்பாட்டுக்கள் இயற்றும் வன்மை தனக்கு உண்டு என்று தருக்கினான். கபிலர் அவன் நண்பர். அவன் தருக்குக் கண்டார். 'அரசனே நீ ஆரியனாகலாம், அரசனாகலாம். தமிழருடன் பழகித் தமிழும் கற்றிருக்கலாம். பாட்டும் பாடலாம். ஆனால் நீ தமிழனல்ல. உன் பாட்டுத் தமிழ்ப்பாட்டு ஆகாது,' என்றார்.

பிரகத்தன் அவரை மடக்க எண்ணினான்:

"புலவரேறே! நீர் இப்போது என்னிடம் மாட்டிக் கொண்டு விட்டீர். தப்ப முடியாது. பிறப்பால் வேற்றுமை காட்டுபவர் ஆரியர். தமிழர்க்கு அவ்வேற்றுமை கிடையாது. நீர் தமிழ்ப் புலவராயிருந்தாலும் காட்டிவிட்டீர். என்ன இருந்தாலும் நீரும்.........."

அரசன் முடிக்கவில்லை, நையாண்டியாக முகம் கோட்டினான்.

கபிலர் புன்முறுவலுடன் விடையிறுத்தார்:

"அரசே, நீ இன்னும் தமிழனாகாததால் இவ்வாறு ஐயுற்று விட்டாய். நீ தமிழனல்ல என்பதற்கு மொழியும் காரணமல்ல—பல தமிழரைவிட நீ நன்றாகத் தமிழ் பேசுகிறாய். புலமை காரணமல்ல—பல தமிழர் நாணும் புலமை

உன்னிடம் உண்டு. பிறப்பும் நேரடிக் காரணமல்ல, ஏனெனில் தமிழர் இனவேறுபாடு, பிறப்பு வேறுபாடு காணுதவர், ஆனுல் தமிழர் தமிழ்ப்பண்பில் வேரூன்றி வளர்ந்தவர். அதனைத் தாய்ப்பாலுடன் அருந்தி உரு வானவர். இனமரபுக் குருதியுடன் அதை நாடி நரம்பு களில் ஓடப்பெற்றவர். நீ எல்லாம் பெற்றும் தமிழ்ப் பண்பு கைவரப் பெறவில்லை."

அரசன் சிறிது நேரம் விழித்தான்.

"புலவரேறே! மன்னிக்கவேண்டும். தாங்கள் கூறு வது விளையாட்டல்ல. அதில் பேருண்மை பொதிந்துள்ளது என்பதை உணர்கிறேன். மேலோர் நகையாடல்கூட. பண்பு மேம்பாட்டின் முதற்படி என்பர். அவ்வகையில் எனக்குத் தாங்கள் முதற்பாடம் தொடங்கி விட்டீர்கள். இனி நீரே எம் ஆசிரியர். நான் உம் மாணவன். தமிழு டன் தமிழ்ப்புலமையும், தமிழ்ப்புலமையுடன் தமிழ்ப் பண்பும் கலந்து எனக்கு ஊட்டுக" என்று அரசன் புலவரின் பணிந்தான்

கபிலர் உளங் குளிர்ந்தது.

அவன் கோரிய மூன்றும் பெறக் கபிலர் அவனுக் காகப் பாடியதே குறிஞ்சிப் பாட்டு எனச் சங்க ஏட்டு மரபு கூறுகிறது.

ஆரிய அரசன்பிரகத்தன் (பிரகதத்தன்)நிலையிலேயே இன்று ஆரியரும் மற்ற அயலினததாரும் மட்டுமன்றித் தமிழருட் பலரும் உள்ளனர். ஏனெனில் அக ஒழுக்கம் குறிக்கத் தமிழர் வழங்கிய 'காமம்' என்ற பண்பார்ந்த தெய்வத் திருசொல் காலப்போக்கில் பொருளிலும் பொருள் தொடர்பிலும் பண்பிலும் இழிந்து கெட்டு, அதனிட மாகக் காதல் என்ற சொல் வழங்கி, அதுவும் அதே வகை யில் இழிந்து கெட்டு வந்துள்ளது. 'பழய தமிழர் கருத்துப் படிவம் இன்றைய தமிழருக்கும் உலக மக்களுக்குமே

கருத்துக்கு எட்டாத ஒன்றாகவும், அதனை அணுகு வதற்குக்கூட ஏற்ற சொல் கிட்டாத ஒன்றாகவும் ஆகி யுள்ளது.

அறியப்படத்தக்க ஒன்றாகவோ, அறியப்பட வேண் டிய ஒன்றாகவோ இக்கருத்தை இன்று எவரும் — எந்நாட் டாரும், மொழியாரும், இனத்தாரும் எண்ணுவதில்லை. எல்லாருக்கும் இயல்பாகத் தெரிந்து விடுகிற ஓர் இன்றி யமையாத் தீமையாக, கூடியமட்டும் மறைத்து வைத்து அடக்கப்பட வேண்டிய ஒரு பொல்லாத பண்பாகவே ஆண்டிமுதல் அரசர் வரை, பொதுமக்கள் முதல் அறிஞர் வரை எல்லாரும் அதை மதிக்கின்றனர்.

அதேசமயம் ஏனோ, எதற்காகவோ, உலகின் எல்லா இலக்கியங்களும் அதற்கு வெளியே போக மாட்டாமல் அதைச் சுற்றியே செக்கு மாடுகளாகச் செல்லுகின்றன. புதிய புதிய இலக்கியங்கள், பாடல்கள், நாடகங்கள், ஓவியங்கள், திரைப்படங்கள் இந்த ஒரு பொருள் சூழ்ந்து பெருகி, மக்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் இருபாலாரின் வாழ்க்கைக்கு அடிப்படையான பொருளியல் வாழ்விலும் பெரும் பங்குகொண்டு விடுகிறது! தகாத பொருளைத்திரை யிட்டு மூடி நுகர்வது போல, கடவுட் பெயரால், சமயத் தின் பெயரால் அதை நுகர்ந்து நுகர்வித்து, இன்ப வேட்டையோ, பொருள் வேட்டையோ இரண்டுமோ ஆடுபவர் ஏராளம்!

அகத்துறையை இவ்வாறு இலக்கியம், கலை, சமய மையப் பொருளாக்கி உலகில் பரவ விட்டவர்கள் தமிழர் களே. ஆனால் அவர்கள் சரக்கை வண்ணத்தாளில் பொதிந்து உறையிலிட்டு, பெட்டிகளுக்குள் வைத் தடக்கிப் பூட்டி உலகுக்கனுப்பினர். தம் கைப் பெட்டிக் குத் திறவைத் தம் வீட்டில் வைத்துக் கொண்டு, அவ்வப் பெட்டிகளுடன் அவ் வவற்றுக்குரிய திறவுகளையும்

அனுப்பிவைத்தனர். ஆனால் தமிழர் வீட்டுப் பையன் பெட்டியை உட்காரும் பீடமாகவும், திறவைப் பல்குத்து கோலாகவும் பயன்படுத்தத் தொடங்கினான். முன்னோர் தந்த திறவின் பயன், பெட்டியின் பயன் இரண்டும் அவனுக்குத் தெரியாது. தொலையினத்தவரோ பெட்டியில் ஏதோ இருக்கிறது என்று மட்டும் உணர்ந்து கொண்டவர்கள். திறவைத் தொலைத்து விட்டு, பெட்டியை உடைத்தார்கள்.

சரக்குப் பொதிந்த உறையைச் சிலரும், வண்ணத் தாளைச் சிலரும், சரக்கையே சிலரும் பேணினார்கள். ஆனால் சரக்கை எடுத்தவர்களும் அது சாயமா, எழுது கோலா, மைக் கட்டியா, மருந்தா என்று தெரியாமல் மயங்கினார்கள். மருந்தானால் அது புறத்திடும் மருந்தா, உட்கொள்வதற்குரியதா, நஞ்சா என்று வாதிட்டனர் சிலர். துணிந்து அருந்த முனைந்தவர் மிகச் சிலர்.

சூழ்புலம் தெரிந்த ஆரிய அரசனுக்குத் தெரிவிக்கக் குறிஞ்சிப் பாட்டை வழங்கிய கபிலர் போல, தொடர்பறியாத இற்றை உலகுக்கு உணர்வு கொளுத்தக் கபிலர் மரபு மறு மலர்ச்சித் தமிழகத்தில் இன்றியமையாத் தேவையாகும்.

## 22. காதல் உணர்வின் பீடு

வீரத்துக்கு, அறிவுக்கு, கடவுளுக்கு—வேறு எதற்கும் தராத மீஉயர் சிறப்பைத் தமிழர் அகவாழ்வுக்கு, அகத்துக்கு அளித்திருந்தனர். இது எதனால்? ஆண் பெண் காதல் மற்றெல்லா உணர்ச்சிகளையும் விட, மற்றெல்லாப் பேறுகளிடையும்விட, கடவுளுணர்ச்சியை விடக் கூடச் சிறந்ததா?

இதன் விடையில் தமிழ்ப் பண்பின் உயிர் நிலை, தமிழர் கண்ட உயிர்ப் பண்பின் மையத்துடிப்பு அடங்கியுள்ளது.

முதலாவது காதல் இயற்கையின் இன்றியமையாத் தேவைகளுள், ஓய்வு, உறக்கம் போன்றவற்றுள் ஒன்று. உடை, உறையுள் போல அது பாதுகாப்பளிப்பது. ஆனால் மற்றத் தேவைகள் துன்ப நீக்கம், ஆக்க உதவி தருவன. காதலைப் போன்ற நேரிடை ஆக்க இயக்கமல்ல.

பசி துன்ப நீக்கம் தேடுவது. அதனுடன் ஆக்கமும் உடையது. ஏனெனில் உணவு வடிவில் அது உடல் வளர்ப்பது. ஆனால் உண்ணும் உணவு ஆயிரம் கூறானால், அதில் நூறு உணவுச் சாரமாகி, பத்துக் குருதி சேர்ந்து, ஒன்றினும் குறைந்த கூறே உயிர்க்கூறாய் உதவுகிறது. மலம், சிறுநீராக, வியர்வையாக, மூச்சாகக் கழிவன போக மிகச் சிறுபங்கே ஆக்கமாக இயல்கிறது. அதுவும் உடலின் வாழ்க்கைத் தேய்மானம் சரியீடு செய்வதிலேயே செலவாகிறது. ஒரு குறிப்பிட்ட எல்லை வரை, வாழ்வின் முதற் பாதியில்தான் இச் சரியீடும் சரிவர நடைபெறுகிறது. ஆனால் காதல் துன்ப நீக்க மட்டுமல்ல, இன்ப ஆக்கம் அளிப்பது, அது உயிராக்கத்தை, உடலாக்கத்தை ஒரு தலைமுறையிலல்ல, பல தலைமுறைகளில் ஊக்குவது, ஒன்று பத்தாகப் பெருக்குவது.

காதல் மற்ற உணர்ச்சிகளுக்கெல்லாம் தாய். அதுவே தனக்கென வாழும் மனிதனைப் படிப்படியாகத் தன் காதலிக்காக, மனைவிக்காக, காதலனுக்காக, கணவனுக்காக; பிள்ளைக்காக, தாய் தந்தையருக்காக; உடன் பிறந்தார்களுக்காக, உற்றார் உறவினர் நண்பர்களுக்காக; இனத்துக்காக, ஊர் நாடு உலகுக்காக வாழ வைக்கிறது. குடும்பப் பாசம் பிள்ளைப் பாசம், தாய்ப் பாசம், தந்தைப் பாசம், உடன்பிறப்புப் பாசம், உறவினர் பாசம், நண்பர் நேசம், இனப்பற்று, நாட்டுப்பற்று, உலகப்பற்று, கடவுட் பற்று என்ற எல்லா உணர்வுப் பண்புகளுக்கும் உயிர் மூலமாக நின்று அது இனம் பெருக்குகிறது.

அறிவு வழிகாட்டுவது. வழியில் இட்டுச் செல்லும் ஆற்றல் அதற்குக் குறைவு. உணர்ச்சிகளே இது செய்ய வல்லவை. உணர்ச்சிகளில் வீரம் ஆற்றல் சான்றது. உள்ளம் ஊக்குவது. ஆனால் அது நிலையான ஆற்றல் உடையதன்று. அதன் நிலையான ஆற்றல் வீறு. இதனை அறிவமைதியே தரும். இதன் மூலவேர் காதலே. தவிர வீரம் வீரத்தை அழிக்கும். அது ஒரு திசை ஆக்கமும் மறுதிசை யழிவும் தரும் இருபுற வேறுபாடுடைய வாள் போன்றது. சிலசமயம் அது இருதிசைக் கூர்வாள் போல இருதிசையிலும் அழிவு செய்வதுமுண்டு. ஆனால் காதல் உலகின் வியத்தக்க ஆற்றல்களில் வியத்தக்க ஆற்றல். அது வலிவு மிக்க ஆற்றல். பரந்து உலகமும் இனமும் அளாவியது. தொடர்ந்து இனமரபில் வழிவழி செயலாற்றுவது. அது ஒன்று பத்து நூறாக்கும் ஆக்க ஆற்றல். இருதிசை அழிவோ, ஒரு திசை அழிவு, மறு திசை ஆக்கமோ தரும் பிற ஆற்றல்கள் போலன்றி, அதில் ஈடுபடும் ஆண் பெண் இருபாலர் ஆகிய இரு திசைக்கும் இன்பம், பயன், நீடித்த இன்பவாழ்வு அளிப்பது. ஈடுபடும் இருவரே யன்றி இனமுழுதும் ஆக்க அலை பரப்புவது.

உலகின் மற்ற இனங்கள் காதலில் ஈடுபட்டன. ஆனால் கடவுளைத்தான் மதித்தன. கடவுளுக்கடுத்தபடி வீரரையும், அறிஞரையும், கடைப்படியிலேயே கலைஞரையும் காதலையும் மதித்தன. ஆனால் மேலே காட்டிய தமிழர் நிலை வேறு. கடவுள் எல்லாம் படைக்கும் ஆற்றலுடையவர். தன்னைப் படைக்க முடியாது. தன்னை வளர்க்க, பெருக்க முடியாது. கடவுட் பற்றில் ஈடுபட்டவர்கள் கைக்கிளை அல்லது பாடாண் நிலையிலேயே அதில் ஈடுபட முடியும். ஆனால் காதல் தன்னையே உயிர்கள் பலவற்றுடன் பலவாக, தலைமுறை கடந்து தலைமுறை,

ஊழி கடந்து ஊழி பெருக்கி எல்லையின்றிப் பரப்பும் ஆற்றலுடையது. உயிரின் உயிராற்றல், இன உயிரின் இன உயிராற்றலாக அது இயங்குகிறது. அத்துடன் காதலில் வீடுபட்டவர்களிடையே யுள்ள உணர்ச்சி கடவுளுணர்ச்சியைப் போல ஒரு திசை உணர்ச்சியன்று. உயர்வு தாழ்விடையே நிகழ்வதன்று. அது ஒத்த உள்ளங்களின் நிகழ்ச்சி. அதில் நுகர்பவர், நுகரப்படுபவர் என்ற வேறுபாடில்லை. இரு திசையிலும் நுகர்பவரே நுகரப்படுபவராகவும், நுகரப்படுபவரே நுகர்பவராகவும் உள்ளனர். இதுபோலக் கொள்வோன், கொடுப்போன்; இழப்போன், ஆதாயமடையோன் என்ற வேறுபாடு இல்லாத வேறு தொடர்பு கிடையாது. கொடுப்பவனுக்கும் ஒன்று பத்து நூறாக, கொள்பவனுக்கும் ஒன்று பத்து நூறாக, சூழ் இனத்தவர்க்கும் ஒன்று பத்து நூறாக, ஓயாது ஆதாயம் பெருக்கும் விசித்திர வாணிகம் அது.

அகத்துறை முழு அளவில் காதலை மட்டுமே சுட்டுவதன்று. அக உணர்வுகள் எல்லாவற்றையும் சுட்டுவதேயாகும். ஆனால் காதல் எல்லாவற்றுக்கும் மூல உணர்வு, எல்லாவற்றையும் உள்ளடக்கிய பேருணர்வு, எல்லாவற்றையும் கடந்து முழு மலர்ச்சியுற்ற நிறையுணர்வு என்ற முறையிலேயே, அது எல்லாவற்றின் மையமாகவும், சின்னமாகவும், இலக்காகவும் தமிழரால் பிரதிநிதித்துவ முறையில் சிறப்பிக்கப்பட்டது. மற்றும் காதலுக்கடுத்த பேருணர்வு கடவுட் பற்று. ஒரு திசை யுணர்வாக மட்டும் இயலுங்கால் அது புறத்திணையில் வாகை, பாடாண், காஞ்சித்திணைகளாகச் சித்திரிக்கப்படினும், முழு நிறை ஒப்புணர்வு வடிவில் அகனைந்திணையுட் சேர்க்கப்பட்டுத் திருக்கோவையார் போன்ற தமிழ் ஏடுகளிலும், உலகின் பிற மொழிகளின் மறைநிலைக் கவிதைகளிலும் காதற் காவியப் பொருளாதல் காண்கிறோம்.

மற்றும் அகப்புற பாகுபாடு பொருள் முனைப்புப் பற்றியதேயன்றி, தொடர்பற்ற பொருள் வேறுபாடுகள் அல்ல. புறநானூற்றில் வீரச்செய்திகள் தாயர், காதலியர், காதலர் உணர்வைப் பின்னணியாகக் கொண்டுள்ளன. அகநானூற்றில் பல அகத்திறப்பாடல்களும், அவற்றினும் விரிவாகப் பட்டினப்பாலை, நெடுநல்வாடை, முல்லைப் பாட்டுப் போன்ற அகப்பாடல்களும் புறவாழ்வுச் செய்திகளை அக ஓவியப் பின்னணி வண்ணங்களாகக் குறிக்கவோ, அழகுபட அகல் விரிவாகச் சித்திரிக்கவோ செய்துள்ளன.

புறத்தின் முடிவு அகம். அகத்தின் முடிவு ஊடலின் பின் விளைவான கூடல். ஏனெனில் இவை ஒத்த உணர்வின் முகடுகள். அது பண்பின் உயிர், பண்பு பிற இடங்களில் பரவி இதில் செறிந்துள்ளது என்று கூறலாம்.

## 23. பொருளதிகார வளர்ச்சி

ஐந்திணை நெறி, அகப்புறப் பாகுபாடு, முப்பால் நாற்பால் பாகுபாடு ஆகிய முத்திறப் பின்னணி தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் பேரிடம் பெறுகிறது. அது மிக நுணுக்க விரிவாகவும் கூறப்படுகின்றது. ஆனால் அதே பொருளதிகாரத்தில் யாப்பு, அணி என்ற வேறு இரு பகுதிகளும் இடம் பெறுகின்றன. பிற்காலத்தார் இவை மூன்றையும் தனித்தனிப் பால்களாகப் பிரித்து, எழுத்து, சொல்லுடன் சேர்த்து ஐம்பால் இலக்கணம் அல்லது ஐந்திலக்கணமாக்கினர்.

'அரும் பொருள் ஐந்து' என்று நன்னூற்பாயிரம் இந்த ஐந்திற இலக்கணப் பாகுபாடு போற்றுகின்றது. தமிழ் உரையாசிரியர்களுக்கும் சமஸ்கிருத இலக்கண ஆராய்ச்சியாளர்க்கும் பெருந்தலையிடியாயுள்ள ஐந்திர

இலக்கணம் அல்லது இந்திரன்(? இன்திறன்) இலக்கணம் இக் கருத்தடிப்படையான கோட்பாடோ என்று ஐயுற இடமுண்டு.

முத்திறப் பின்னணி இலக்கிய முழுமைக்குரிய இன்றியமையா முழுப் பின்னணியாகக் கடைச்சங்கத்தின் இறுதிக்காலம் வரைதான் வழங்கிற்று. அதன் பின் அம் மரபு பெரிதும் வீழ்ச்சியுற்றது. இவ் வீழ்ச்சிக்கு அரசியல் மாறுபாடு, களப்பிரர் எழுச்சி ஆகியவை உடனடிக் காரணம் என்பதில் ஐயமில்லை. அம் மாறுபாடு குறுக்கிடாமல் இருந்தால் அது நீடித்திருக்கக்கூடும். ஆயினும் இங்கே புறநிகழ்ச்சி புறக்காரணம் மட்டுமே. அதற்குத் தூண்டுதலான அகக்காரணம் பண்டை உயிர் மரபின் தளர்ச்சியே எனல் தகும்.

இதை இரண்டு செய்திகள் காட்டும்.

முதலாவது, முத்திறப் பின்னணியின் தோற்றம் தொல்காப்பியத்துக்கும் முப்பாலுக்கும் முற்பட்டது. ஆனால் அது தொல்காப்பியர் காலத்துக்கு முன்னோ, அவர் காலத்திலோ, பின்னோ வளர்ச்சியின் உச்சமுகடு எட்டியிருத்தல் வேண்டும். ஏனெனில் அதன் உயிர் மரபு மேற்குறிப்பிட்ட புற நிகழ்ச்சிக்கு முன்பே, சங்ககாலத்திலேயே, தளர்வுறத் தொடங்கிவிட்டது. சட்டம் உயிர்ச் சட்டமாக நிலவவில்லை. சட்டம் கவிதையின் ஒரு கூறாக, அதனுடன் இழையும் பின்னணியாக அமைவதற்கு மாறாக, படிப்படியாக அதற்குப் புறம்பாகவே நழுவி வந்துள்ளது.

சட்டத்தின் பின்னணியை அடிப்படையாகத் கொண்டே சங்கப்பாடல்கள் பெரும்பாலும் தொடுக்கப் பட்டுள்ளன. இது பின்னணியை மிகைபடுத்திக் காட்டுவதாக அமைந்துள்ளது. ஒரே தேர்வுக் கேள்விக்குப் பல திறமை வாய்ந்த மாணவர்கள் எழுதிய பரிசுப் போட்டி

விடைகள்போல, பல பாடல்கள் தோற்றமளிக்கின்றன. மேலீடாகப் பார்ப்பவர்களுக்கும், தொடர்ச்சியாகப் பயில்பவர்க்கும் சங்க இலக்கியம் பல இடங்களிலும் சலிப்பும் ஓய்வும் உண்டுபண்ணுவதன் காரணம் இதுவே.

இதை மிகைப்படுத்திச் சங்கப் பாடல்களின் சிறப்பைக் குறைக்க முயன்றவர்கள் உண்டு.

இரண்டாவதாக, சங்க காலத்திறுதியில் அதாவது கி. பி. 3-ம் நூற்றுண்டில் தமிழகத்தைத் தாக்கிய அயற் பண்பாட்டாளர்கள், உரோமகப் பேரரசைக் கி. பி. 5-ம் நூற்றுண்டில் தாக்கி வீழ்த்திய அயற் பண்பாட்டாளர்களிலிருந்து வேறுபட்டவர்களல்லர். இரண்டிடங்களிலும் தாய் மரபின் தளர்ச்சியே அயல் மரபின் தாக்குதலை எளிதாக்கிற்று. இரண்டிடங்களிலும் அயல் மரபும் தாய் மரபும் பிரித்தறிய முடியாமல் முற்றிலும் ஒன்றுபட்டன. இவைமட்டுமல்ல, இரண்டிடங்களிலும் வென்றவர்தான் வெல்லப்பட்டவர் பண்பாட்டை ஏற்றனர். ஏனெனில் வென்றவர் தாய் மரபிலிருந்து இனவேறுபாடு பட்டவர்களும் அல்லர். அதேசமயம் தமக்கென்று அவர்களுக்குரிய பண்பாடு மிகச் சிறிது. தாக்குதலால் ஏற்பட்ட மாறுதல்கள் யாவும் ஆதிக்க மாறுபாடுமட்டுமே. ஆதிக்கம் படி, திசை ஆகியவற்றின் மாறுபாடுமட்டுமே. ஆதிக்கப்படி வீரமுடையவர் திசையிலிருந்து அடிமை மனப்பான்மையுடையவர் திசை நோக்கித் திரிந்தது. வென்றவர் ஏற்றுச் செரிமானம் செய்யத்தக்க அளவிலும்வகையிலும் வெல்லப்பட்டவர் பண்பு மாறுபட்டது. தாய்மரபின் தளர்ச்சி முழுதும் சீர்குலைய, சிதைந்து திரிந்து உருவான புதிய பண்பாடு வென்றவர் பெயர் அல்லது பொறிப்புப் பெற்று உலவலாயிற்று. வேறு தாய்ப் பெயர் கூறிக்கொண்டே பிள்ளை வளர்ந்து வந்துள்ளது.

மேற்கூறிய காரணங்களால், பண்பாடு வீழ்ச்சியுற்ற போதும், பண்பின் உயிர்மரபு குலைந்தபோதும், பண்பின் உயிராற்றல் குன்றவில்லை. முத்திறப் பின்னணியும் பிற பொருளியல் பகுதிகளும் புத்துருவில் நீடித்தன—வளரவே செய்தன.

அடுத்த ஆயிர ஆண்டுகளில் முத்திறப் பின்னணியாகிய பொருளியல், யாப்பு, அணி ஆகிய தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முக்கூறுகளுமே முன்னிலும் அகல் விரிவாக வளர்வது காண்கிறோம்.

இலக்கியத்தில் சிலம்பு, மேகலை போன்ற சங்ககாலக் காவியங்களும், அவற்றைத் தொடர்ந்து பிற்காலக் காவியங்களும், செயற்கைக் காப்பியங்களும் தக்க இடங்களில் முத்திறப் பின்னணியை இழைத்து, பழந்தமிழர் பண்பு என்ற முறையில் அதை மதித்துப் பேணினர். இவற்றினும் மிகுதியாக, கிட்டத்தட்ட முழு அளவிலே துறைக்காப்பியங்கள் பொதுவாக, கோவைகள் சிறப்பாக அதைப் பண்படுத்தின. முதற்கோவைகளாகிய திருக்கோவையாரும் பாண்டிக் கோவையும் சங்ககாலத்தை அடுத்து, களப்பிரர் அழிவின் மீட்சிக்காலத்துக்குள்ளேயே எழுந்தன.

மாறுதலின் ஒரு கூற்றைக் கோவையிலக்கியம் முனைப்பாகக் காட்டுகிறது. முத்திறப் பின்னணி வளர்ச்சியடைந்தது — ஆனால் இது உயிர் மரபின் வளர்ச்சியன்று, உயிரற்ற மரபின் வளர்ச்சி. ஏனெனில் இலக்கியப் பின்னணி வரவர இலக்கியமாகிறது. இலக்கியமே பின்னணிக்குச் செல்கிறது. பல கோவைகள் உயிரிலக்கியமாக இயலவில்லை—விரிவான அகத்துறை இலக்கணங்களின் விதிகளுக்கேற்ற எடுத்துக்காட்டுக் கோவைகளாகவே அவை அமைந்துள்ளன.

'இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பு'தல் என்ற பழய மரபு இப்போது, 'இலக்கணங்'கண்டதற் கிலக்கியம் இயம்பல் ஆகிவிட்டது.

தொல்காப்பியத்தில் பொருளிலக்கணப் பகுதிகளாகக் கருதப்பட்டிருந்த முக்கூறுகளும்—பொருளியல், யாப்பியல் அணியியல் ஆகிய மூன்றுமே—கடைச்சங்ககாலத்துக்குப் பின், பெயரளவில் இலக்கணங்களாக, ஆனால் மெய்ம் மையில் தனி நூல்களாகப் புதுவளர்ச்சி யடைந்தன.

பாண்டிக் கோவையை எடுத்துக்காட்டுத் தொகுதி யாகக் கொண்ட தனி அகப் பொருள்நூலே இறையனார் அகப்பொருள்.

முப்பின்னணியாகிய பொருளியல் மட்டுமன்றி, யாப்பும், அணியுங்கூட இலக்கணங்களாக வன்றித் தனி நூல் துறைகளாக, தனிநூல்களாகத் தமிழில் இயற்றப் படத் தொடங்கின. இவற்றுக்கு இலக்கணமுடைய தமிழிலேயே உள்ள இவ்வழக்கு கி. பி. 9-ம் நூற்றாண் டுக்குப்பின் சமஸ்கிருதத்திலும் பரந்தது. ஆனால் சமஸ் கிருதத்தில் அணிநூல் ஒன்றே எல்லையற்றுப் பரந்து வளர்ச்சியுற்றது. யாப்பியல் அந்த அளவுக்குப் பரவி வளரவில்லை. பொருளியலோ தொடப்படவில்லை. அதன் உயிர்மரபு உணரப்படவுமில்லை என்னலாம். ஆனால் உயிர் மரபு இழந்த நிலையிலும் உயிராற்றல் கெடாமல் தமிழில் மூன்றும் புதிது புதிதாக வளர்ந்தன.

அணிகள் ஒன்று நூறாகப் பரவின. தமிழிலும் சமஸ்கிருதத்திலும் இத்துறை சிலகாலம் ஒத்துப்பரவிய தால், இரண்டிலும் ஒரே அணிவகைகள் விரவின. சமஸ் கிருதத்திலிருந்து இவை தமிழுக்கு வந்தன என்று பொங்கி வளர்ந்த சமஸ்கிருதப் பற்று, சமஸ்கிருத வழிபாட் டுணர்ச்சி காரணமாகத் தமிழரே குறித்தனர். ஆனால்

தமிழ் வளர்ச்சி முற்பட்டது. பலவிடங்களில் இருமொழிகளிலும் புதுவளர்ச்சி ஒருங்கே நடைபெற்றது. ஏனெனில் பல்லவர் காலத்துக்கு முன்னிருந்தே பல்லவர் கால முடிவு வரையும் அப்பாலும் காஞ்சி இரு மொழிக்கும் ஒப்பான வளர்ச்சிப் பண்ணையாய் இயங்கிற்று.

அணி நூலில் இருமொழியிலும் ஒப்பக் காணும் இணை வளர்ச்சி யாப்பில் ஓரளவிலும் பொருளில் முழு அளவிலும் தமிழின் தனி வளர்ச்சியாக, சமஸ்கிருத நிழல் பின் தொடராமல் இயன்றது.

## 24. சங்ககால, பிற்காலக் கலைப் பண்பு

சங்க காலத்துக்கு முற்பட்ட, சங்க காலத்திய தமிழகத்தின் இலக்கியம், நகரமைப்பு, வாழ்க்கைத் திட்டம் ஆகியவற்றின் வகையில் நமக்குக் கிட்டும் சான்றுகள் போல, மற்றக் கலைகளுக்குக் கிட்டவில்லை. இந்நிலைக்குரிய காரணம் முற்றிலும் விளங்கவில்லை. கோயில்கள், அவை சார்ந்த சிற்பம், ஓவியம் முதலிய கலைகளைப் பற்றியமட்டில், முற்காலத் தமிழக வேலைப்பாடுகள் மரத்தாலானவை யாதலால், அழிவுற்றன என்று கூறப்படுகிறது. பல்லவர் கால முதல் கற்கோயில்கள் கட்டப்பட்டன. மரப்பணி செய்த கலைஞர்கள் அதன் வேலை நுட்பத்தைக் கருங் கல்லில் அப்படியே மாற்றினர் என்றும் கூறப்படுகிறது.

இப்பொது விளக்கங் கடந்தும் பல்லவர் கலைக்கும் பிற்காலச் சோழ பாண்டிய, விசயநகரக்காலக் கலைக்கும் இடையே பெரு வேறுபாடு காணப்படுகிறது. பல்லவர் காலக் கலையில் செப்பம், வடிவழகுத் திட்பம் பேரிடம் பெறுகிறது. பின்னாட்களில் உறுப்புறுப்பான சித்திர (சிறுதிறநுட்ப) அழகே காணப்படுகிறது. தஞ்சைக்கோயிலும் திருமலைநாயக்கன் மகாலுமே பாரிய அளவில் செப்பத்தையும் குறிக்கொண்டுள்ளன.

கலையில் தமிழர் காட்டிய இவ்விரு வேறு கலைப் பண்புகள் பழந்தமிழர் ஒரே கலையின் இருவேறு பதிவுகள் என்னலாம். முந்திய காலங்களில் இலக்கியத்தில் நாம் காணும் செப்பம், மொத்த வடிவழகு ஆகும். பிந்திய கால நுண்ணழகை நாம் கம்பராமாயணம், வில்லி பாரதம் முதலிய பிற்காலச் செயற்கைக் காவியங்களில் காண்கிறோம். ஆனால் சிலம்பு, மணிமேகலை ஆகிய சங்ககாலப் பெருங் காவியங்கள் இரு அழகு நயங்களையும் ஒருங்கே கொண்டனவாய்த் திகழ்கின்றன.

சங்க இலக்கியப் பாடல்களில் உயர்வுதாழ்வுகள் காண்பதென்பது எளிதன்று. ஆயினும் அவற்றுள் நாம் நால்வகை அழகுகளை வேறு பிரித்துக் காண்டல் இயலும். சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற சித்திரநயம் கலந்த பார அழகை ஓரளவில் நாம் பத்துப்பாட்டில் பொதுவாகவும், நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியவற்றில் சிறப்பாகவும் காண்கிறோம். அது போலப் புறம், அகம் ஆகியவற்றில் பொதுவாகவும் குறுந்தொகையில் சிறப்பாகவும் இதே பார அழகின் செறிந்த சிறுவடிவைக் காண்கிறோம். பனித்துளியில் காணும் பனைவடிவம் போல அவை பேரழகமைதியைச் சிறு மணி வடிவாகக் கொண்ட முத்துக்களாக இயல்கின்றன. நற்றிணை இதே செப்ப வடிவினுள் கவிதை நோக்கார்ந்த கருத்து நயங்களையும் பண்புநயங்களையும் வழங்குகிறது. இறுதியாகப் பரிபாடலும் சங்க காலத்துக்குப் பிற்பட்டதென்று பலரால் கருதப்படும் முத்தொள்ளாயிரமும் நற்றிணையில் காணப்படும் அதே நளின நயத்தை இரு வேறு வடிவில் வெளிப்படுத்துகின்றன. பரிபாடல் பல அடிகளில் ஒரு முழுக் காட்சியை நம்முன் ஓவியமாகத் தீட்டுகிறது. முத்தொள்ளாயிரமோ, தன் ஒவ்வொரு நாலடியிலும் ஒரு முழு நாற்றிசையுலகையே நம் கண்முன் ஓடவிட்டுவிடுகிறது.

செப்பத்துள் நயம், நயத்துள் செப்பம் கலந்தபண்பில் குறுந்தொகையும் முத்தொள்ளாயிரமும் ஒப்பிடத்தக் கவை. நீண்ட புனைகதை யுலகை ஒரு சிறு காட்சியுள் அக்கும் தற்கால மேலைச் சிறுகதைபோல, அவை 'சிறுநாடகம்' ,சிறு பாடல்' என்று புதுவதாகக் கூறத்தக்க தனி நயச் சிறப்புடையவை. இப்பண்பில் நற்றிணை இவற்றுக்கு மிகவும் அணிமையானது. ஏனெனில் 'சிறுகதை', 'சிறு நாடகம்', 'சிறு பாடல்' போல, 'சிறு குறுங் காப்பியம்' என்று புதுவதாகக் குறிக்கத்தக்க சிறப்பு அதற்குண்டு.

தமிழகப் பெருமையை மக்கட்கு நினைவுபடுத்த வந்த மறுமலர்ச்சியியக்கம் சங்கப்பாடல்களில் புறநானூற் றுக்கே பெரும் பேரிடம் தந்துள்ளது. இது தவறன்று. ஆனால் மறுமலர்ச்சியின் ஒவ்வோர் ஊழியைப் புதிது தோற்றுவிக்க வல்ல தனித் தனிச் சிறப்புச் சங்கப்பாடல் தொகுதி ஒவ்வொன்றுக்கும் உண்டு.

தேவார காலத்துக்கு முற்பட்ட இலக்கியத்தைத் தமிழர்க்கு மட்டுமன்றித் திராவிடர்க்கே யுரிய பேரிலக் கியம் என்று மேலே குறிப்பிட்டுள்ளோம். ஆனால் உலகப் புதுமலர்ச்சி கிளர்ந்தெழும் காலங்களில், சங்க இலக்கியத் தின் ஒவ்வொரு பகுதியும் உலகின் ஒவ்வோர் ஊழிக்கு, ஒவ் வோர் ஊழியில் உலகின் ஒவ்வொரு நாட்டுக்குத் தனி மலர்ச்சி யூட்டத்தக்க நிலையில் அப்பேரிலக்கியம் உலக ளாவிய, காலமளாவிய சிறப்புடையதாகும்.

## 25. தமிழ் இலக்கியச் சிறப்பு

கீழ்க் கணக்கு (18) நூல்களில் சேர்க்கப்பட்ட திருக் குறள் முதலிய ஏடுகள் சங்க காலத்தனவல்ல, பிற்பட்டன என்று வாதிட்டு நாட்ட முயல்பவர் உண்டு. அவற்றுட் பல புத்த சமண் சமயம் சார்ந்தவை. சமஸ்கிருதப் பற்று, பிற சமய உணர்வு ஆகிய வேறு வேறு உணர்ச்சிகள் இத்

தகைய ஆராய்ச்சிகளுக்குத் தூண்டுகின்றன. ஆனால் திருக்குறள் பற்றிய அளவில் மிகப் பெரும்பாலோர் அது கடைச்சங்க காலத்தது என்றோ, கடைச்சங்க காலத்திற்கு முற்பட்டதென்றோ கருதுகின்றனர். கி. பி. 2, 1-ம் நூற்றாண்டுகள், கி. மு. 1, 2-ம், நூற்றாண்டுகள், புத்தர் காலமெனக் கருதுபவரும் உண்டு. ஆனால் மற்ற எந்தக் கீழ்க்கணக்கு நூல், கடைச் சங்க காலத்தானாலும், திருக்குறள் கடைச் சங்க காலத்தது என்றோ, அதற்குப் பிற்பட்டது என்றோ நாட்ட உண்மையில் நமக்கு எத்தகைய சான்றுகளும் கிடையாது.

திருக்குறளின் காலத்தை அறுதியிடும் வகையில் மொழி, சொற்கள், இலக்கண வழக்குகளைக் சிலர் பயன் படுத்துவதுண்டு. ஆனால் இதுவும் தவறு. ஏனெனில் தமிழையும் தமிழிலக்கணத்தையும் தமிழ்ப் பண்பையும் ஆண்ட நூல் அது. அதன் பெயர் சொல்லாமலே அதை உளங் கொண்டுதான் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் புலவர்கள் பாடியுள்ளனர் என்பது குறிப்பிடக் தக்கது. ஆகவே அது என்று தோன்றினாலும் தோன்றிய காலம் தொட்டு அது தமிழை ஆண்ட மூல ஏடாகி, தமிழின் வளர்ச்சியையே தன்வயமாக்கி உருவாக்கியுள்ளது. மற்றத் தமிழ் ஏடுகளை நோக்க அது தூய தனித் தமிழாகக் காட்சியளிப்பது கூட அதன் பழமையை வரையறுக்க உதவ மாட்டாது. ஏனெனில் அது வழங்கிய தூய தனிச் சொற்களில் சில சொற்படிவமாகவும், மிகப் பல கருத்துப் படிவங்களாகவும் அணிமை அயல் மொழிகளிலெல்லாம் பரவி யுள்ளன.

குறட்பா வெண்பா வகையில் ஒன்று. ஆனால் அது கிட்டத்தட்ட நூற்பாவின் செறிவுடன் வெண்பாவின் அழகும், இரண்டிலும் இல்லாத தெய்விக மாண்பும் இலங்க அமைந்துள்ளது. தமிழ் மொழி மீது படிந்த

இந்த நூற்பா வடிவத்தின் பண்பை, குறளுக்கடுத்த அளவில் காணத்தகும் நூல் தொல்காப்பியம் ஒன்றே.

திருக்குறள், உண்மையில் கடைச் சங்க காலம் என நாம் அறியும் ஊழிக்குப் பல நூறு, ஒரு வேளை பல ஆயிர ஆண்டு முற்பட்ட, தொல்காப்பியத்துக்கும் நூற்றாண்டுகள் முற்பட்ட தொல் பழந்தமிழர் மூல முதுமறை, சமயங்கள் தோன்றாக் காலப் பொது மறை என்று கொள்ளப் பல ஏதுக்கள் உண்டு. இக்கருத்தின் தடங்கண்ட அறிஞர் பலர் ஆராய்ச்சி வடிவில் ஆராய்ச்சி உலகின் முன் அதைக் கூறத் தயங்கி வாளா சுட்டிச் சென்றுள்ளனர். அல்லது கருத்தில் ஏந்திச் சென்றுள்ளனர்.

இது எப்படியாயினும் ஆகுக. நுதல் பொருள் ஒன்று கொண்டன்றி, வேறு எவ்வகையிலும் அதைக் கீழ்க் கணக்கில் சேர்த்துக் கருதுதல் தகாது. தமிழகத்தில்எவரும் அவ்வாறு இன்று கருதுவதுமில்லை. ஆயினும் அது சங்க ஏடு. சங்க கால ஏடு என்ற கருத்து, அது கீழ்க் கணக்கில் சேர்க்கப்பட்ட தற்செயல் நிகழ்வின் பயனே யாகும்.

சங்க நூல்களைப் போலவே, அவற்றினும் பன்மடங்காக, முப்பால் ஏடு தமிழர்க்கல்ல, திராவிடர்க் கல்ல, உலகுக்கே யுரிய நூல். மறு மலர்ச்சி யூழி ஒன்றற்கல்ல, ஒவ்வொரு நாட்டுக்கல்ல, என்றென்றைக்கும் இடையறாப் புது மலர்ச்சி யூட்டவல்லது அது. அதன் பீடு இவ் வேட்டிலும் ஒரு தனி இயலுக்குரியது.

கதிரவன் அருகிலுள்ள விண் மீன் ஒளி யிழப்பது போல, திருக்குறளின் அருகில் வைத்ததனால் மட்டுமே ஒளி மங்கித் தோன்றும் நூல்கள் கீழ்க் கணக்கில் பல. உலகம் தனக்குரிய தெனத் திருக்குறளைத் தமிழர் தனி உடைமையிலிருந்து மீட்டுக் கொண்டால் கூட, தமிழகத்தின் பெருமைக்குச் சான்றாக இயங்க வல்லது நாலடி. ஒரு மூல ஆசிரியர் இயற்றிய முப்பால் ஏட்டிலேயே முறை

வைப்பின் முழு அழகைக் காண முடியாதவர்கள் கூட, நானூறு பேர் பாடிப் பதுமனூர் என்பார் தொகுத்ததாகக் கூறப்படும் நாலடி வெண்பா நானூற்றிலும் காணப்படும் 'முழுவடி வொற்றுமை' கண்டு வியப்படைந்துள்ளனர். ஏனெனில் திருக்குறளில் காணப்படுவதைவிட இதில் காணப்படும் 'முழு வடி வொற்றுவை' முனைப்பான தாகும்.

திருக்குறளில் இலை மறை காயாய், நுட்பமாய்க் கூறப்படும் பல கருத்துக்களுக்கு. ஆங்காங்கே நாலடியும், பிற்கால அற நூல்களான ஔவை பாடல்கள், அதிவீர ராமபாண்டியன் வெற்றிவேற்கை, குமரகுருபரர் நீதிநெறி விளக்கம் ஆகியவை தரும் விளக்கம் இன்னும் வியப்புக் குரியது. உரை வழியின்றி வேறு ஏதோ பரம்பரையில்— ஒருவேளை தமிழர் குருதியோட்டத்தில்—கருத்து மரபு வந்துள்ளதோ என்றுகூட எண்ண இடமுண்டு. ஆனால் இத்தகைய தொடர்பைச் சில பல ஏடுகளில் தமிழ்மொழி கடந்துகூடக் காண இயலும்.

இவற்றை இயற்கையான ஒற்றுமைகள் என்று பலர் கொள்ளலாம். இது இயல்பே. ஆனால் உலக சமயம், கொள்கை, ஒழுக்கக் கருத்துக்கள், பண்பாடுகள் ஆகியவை ஒப்பிட்டுக் காணப்படும் நாட்களில் இவையே உலகளாவிய ஒரு முப்பால் மரபின் சின்னங்கள் என்று தோற்றும்.

கீழ்க்கணக்கேடுகளில் பழமொழி நானூறு, முது மொழிக்காஞ்சி ஆகியவை குறளுக்கும் நாலடிக்கும் அடுத்த படி தமிழுக்குச் சிறப்பளிக்கும் ஏடுகள். அணிமைக்காலத் தில் இராமாயணத்துக்கு ஒரு புலவர், கந்த புராணத்துக் கொரு புலவர் என்று அமைந்ததுபோல, இத்தகைய ஏடு களுக்குத் தனிப் புலமை மரபுகள் அமைந்தால், வருங் காலத்தில் திருக்குறளுக்கு உலகில் ஏற்படும் இடம், தமி ழகத்தில் அவை ஒவ்வொன்றுக்கும் ஏற்பட வழிஉண்டு.

சங்க இலக்கியத்துக்குக் கூறப்பட்ட யாவும் பிற்கால இலக்கியத்துக்கும் பேரளவில் பொருந்தும். ஏனெனில் அவற்றுக்கிடையேயுள்ள ஒரே வேறுபாடு முன்னிலக்கியம் உலகளாவிய பழமை, பின்னது தமிழகமளாவிய பழமை உடையது என்பதே. ஏனெனில் பின்னிலக்கியம் கூட உலகின் மற்றெந்த இலக்கியத்துக்கும் அருகே தமிழுக்குத் தனிச்சிறப்பு அளிக்கத்தக்கதே. முன் இலக்கியத்தின் பேரார்வம் கூட இதனைத் தமிழர் மறக்கும்படி செய்தல் ஆகாது. ஏனெனில் உலகின் ஒப்புயர்வற்ற தலைசிறந்த பக்தி இலக்கியம், சமய அறிவிலக்கியம் முழுவதும் வீர இலக்கியம், காவிய இலக்கியம் ஓரளவும் பின் இலக்கியத்திலேயே இடம் பெறுகின்றன. அற நூல்களிலும் முன்னிலக்கியத் தமிழன்றி வேறெம்மொழியும் பின்னிலக்கியத் தமிழுக்கு ஈடு தராது.

தமிழிலக்கியத்தில் குறைபாடு கிடையாது என்றில்லை. வளரும் உலகில் வளராது சிறிது தேங்கிவிடும் எந்த மொழிக்கும் இது இயல்பே. தவிர எல்லா மொழிகளிலும் எல்லாம் இருத்தல் கூடாத ஒன்று. தமிழின் தனிச்சிறப்பைத் தமிழர் வலியுறுத்துவது கூட, மொழிப் பெருமை வலியுறுத்துவதற்கேயென்று பலர் எண்ணுகின்றனர். இது தவறு. தமிழர்க்கு இயற்கை தந்துள்ள பொறுப்புப் பெரிது. அதை நிறைவேற்றத் தமிழர்க்குத் தன்னுரிமை வேண்டும் என்பதை வலியுறுத்தவும், அதற்குத் தமிழுக்குத் தகுதி உண்டு என்று காட்டவும், அடிமைத் தமிழகமும் அடிமைத் தமிழரும் தமிழை அடிமைப்பட்டுவிட்ட மொழிகளின் போக்கில் இழுப்பது தமிழுக்கும் உலகுக்குமே கேடு என்று கண்டிக்கவும்தான் ஆசிரியர் மறைமலையடிகளார் காலத்துக்குமுன் தமிழார்வலரும், அவருக்குப் பின் மறுமலர்ச்சியார்வலரும் தமிழ்ப் பெருமையை இன்னும் வலியுறுத்தி வாதிட்டு மன்றுடிப் போராடவேண்டியதாகியுள்ளது.

## மாலை — V

# வள்ளுவர் பண்பு

## 1. இரு புகழ் மரபுகள்

உலகப் பண்பின் தொடக்கம், மூலமுதல் முப்பால் மரபு! உலகப் பண்பு குறிக்கொண்ட தமிழ்ப் பண்பின் ஒடுக்கம், அதன் முழுநிறை இலக்கு ஆகவும் அது இயல்கின்றது. தொல் பழங்காலத் தமிழரின் மூலப் பழ மறையாக அமைந்த அதுவே இன்று உலகப் பொது மறையாகப் புதுப்புகழ் பரப்புவதன் மறைதிறவை இது விளக்குகின்றது.

உலகப் பண்பில் ஒரு கூறுகவே, உயிர்க் கூறுகவே தமிழ்ப் பண்பு கருவுயிர்த்தது. அவ்வாறே நீடித்து இயங்கி வந்துள்ளது. ஆயினும் இரண்டாயிர ஆண்டுக் காலமாகவே அது தயங்கித் தேங்கியுள்ளது, அரைத் துயில் தூங்கியுள்ளது. இதற்கிடையே சூழுலகப் பண்புகள் விரைந்து வளர்கின்றன. இன்று ஒரு திசை, நாளை மற்ருரு திசை என, இன்று ஓரினம், நாளை மற்ருேரின மென, அவை தமிழக உயரெல்லை அணுகியும், அது தாண்டியும் வளம் பெற்று முன்னேறுகின்றன.

இது கண்டு மறுமலர்ச்சியாளர் மறுக்க முறு கின்றனர். இது இயல்பே. ஆனால் இதன் படிப்பினைகளை யும் அவர்கள் உளங்கொண்டாக வேண்டும்.

தமிழகம் முப்பாலை ஈன்று உலகுக் களித்துள்ளது. அதன் பண்பு தமிழின மறியாமலே இன்னும் தமிழர்

நாடி நரம்புகளில் குருதியுடன் குருதியாக ஓடுகிறது. தமிழ் மொழியில் தமிழர் காணுமலேயே, அதன் தடம் என்றென்றைக்கும் அழியாமல் நிலை பெற்றுள்ளது. ஆயினும் முப்பாலின் புகழைத் தமிழினம் வளர்க்கத் தவறிவிட்டது. முப்பாலின் புகழைத் தமிழினத்தின் புகழாக்கவும் தமிழர் முனையவில்லை.

தமிழகம், தமிழினம், தமிழ் மொழி தாழ்வுற்றதற்கான காரணங்களுள் ஒன்று, முக்கியமான ஒன்று இது.

இரண்டாவது தமிழகப்பண்பு உயிர்ப்பண்பானாலும் அது உலகப் பண்புகளில் ஒன்றே. பேரினப்பண்புடன் ஒத்து வளர்ந்தாலன்றி, தன் வளர்ச்சியைச் சூழ்திசையெங்கும் உலகில் தடைபடாது பரவவிட்டாலன்றி, அது உயிர்நலம் பெற முடியாது. நாலாயிர ஆண்டுகட்கு முன்வரை, அதாவது கி.மு. 2000 வரை தமிழகத்தின் உயிர்ப்பண்புக்கு உலகில் இவ் வாய்ப்பு இருந்தது. தமிழகத்திலிருந்து நாகரிகமும் பண்பாடும் தங்கு தடையற்று அலையலையாக உலகக் கோடிவரை பரவி வந்தன. ஆனால் சுற்றுவரையிலுள்ள பண்படா இனங்களின் தலையீடு இந்தத் தடையற்ற போக்கைத் தடுத்துள்ளது. இடைப்பள்ள நிரப்பியன்றி, பண்பாட்டு வெள்ளமோ, அலைகளோ, உலகின் கோடியிலிருந்து தமிழகத்துக்கு, தமிழகத்திலிருந்து உலகக் கோடிக்குச் செல்ல முடியவில்லை. இடைப்பள்ளத்தின் சுழிகள் வேறு நடு உலக அமைதி கெடுக்கின்றன.

இடைப்பள்ளச் சுழிப்பையே அதன் நண்பருள்ளும் எதிரிகளுள்ளும் பலர் 'ஆரியர்', 'ஆரிய நாகரிகம்', 'இந்திய நாகரிகம்' என்று அழைக்கின்றனர். ஆனால் அது ஆரிய இனத்தின் நாகரிகமன்று. திராவிட நாகரிகத்தின் பளுவை மட்டுமீறி ஏற்று, அதைச் செரிமானம் செய்ய முடியாது

திணறும் ஆரிய திராவிடக் கலப்பினத்தின் குளறுபடியே யாகும்.

உலகப் பண்புகளின் ஒத்திசைவான வளர்ச்சிக்குத் தமிழகத்தின் அரைத்துயில் உதவியேயாகும். அம்முறை யில் அது தமிழக வரலாற்று சிரியரால்கூட வரவேற்கத் தக்கதே. ஆனால் அதன் மறுமலர்ச்சி இடைப்பள்ள நிரப்புவதாக, அது கடந்த உலக அலைகளுடன் தொடர்பு கொள்வதாக அமைய வேண்டும். இதற்கு மாறாக' சூழலலைகளையே அது வரவேற்பதனால், அதனால் தமிழக வாழ்வும் நலமுறாது; உலக நலனும் சீரழிவுறவே வழி யேற்படும். இடைப்பள்ளத்தின் சுழி எதிர் சுழிகள் 'ஒருல'கின் ஒத்திசைவான வளர்ச்சிக்கு உகந்ததன்று.

முப்பாலின் புகழே இவ்வகையில் தமிழகத்துக்கு விழிப்பூட்டவல்ல ஒரு படிப்பினை தருவதாகும்.

## 2. தமிழகப் புகழ் மரபு

முப்பாலின் தமிழகப் புகழ் பெரிது, நீடித்தது. அதன் உலகப் புகழ் தற்காலத்தது. தமிழக நோக்கில் அது பெரிதேயாயினும், இன்னும் உலகளாவிய ஒன்றாய் விட வில்லை. ஆனால் இங்கிலையிலும், அவ்வேட்டின் தனிச் சிறப்பைத் தமிழருக்கு எடுத்துக்காட்டுவது, அதன் பண்பை வருங்காலத் தமிழகத்துக்கு விளக்குவது அதன் உலகப் புகழே, தமிழகப் புகழன்று.

இது கண்டு தமிழர் வருத்தமுறக்கூடும். ஆனால் காணாதிருப்பதைவிடக் கண்டு வருத்த முறுதல் கேடன்று. விரைந்து தமிழகம் இது காணவிட்டால், வருங்கால உலகம் தமிழகத்தை எள்ளி நகையாடாதிருக்க முடியாது.

வள்ளுவருக்குத் தமிழகம் அளிக்கும் புகழ்மாலையாக திருவள்ளுவமாலை என்ற புகழ்ப்பாடல் தொகுதி இங்

நாளையத் திருக்குறட் பதிப்புக்களையே அணி செய்கின்றது. ஆனால் இதில் பெரும்பாலும் சங்ககாலப் புலவர்கள் பெயராலேயே புகழ் அறிவிக்கப்படுகிறது. அதே சமயம் அதை அவ்வப்புலவர்கள் பாடியதுதானா என்பதிலே ஐயத்துக்கு இடமுண்டு. ஏனெனில் திருக்குறள் அரங்கேற்றப்பட்ட காலையில் புலவர் ஒருங்கிருந்து புகழ்ந்தது அத்தொகுப்பு என்று மரபுரை கூறுகின்றது. பல காலப் புலவர் பெயர் காணப்படுவது அப்பாடல்களின் ஆசிரியர்கள் பற்றிய மரபையும், அரங்கேற்ற மரபையும் ஒருங்கே நம்பத்தகாத தாக்கி விடுகிறது.

பாடிய சங்கப்புலவர்கள் எவரும் தம் பாடலில் அவரையோ, அவர் நூலையோ, அரங்கேற்றத்தையோ குறிப்பிடவில்லை. அகத்தியர், மிகப் பழங்காலச் சோழர் பற்றிய புராண உரைகளையும் பழங்கதை மரபுகளையும்; தமிழக, வடபுல மூலை முடுக்கு நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்ட புலவர்கள், வள்ளுவர் பற்றி மட்டும் மௌனம் சாதித்தனர் என்பது வியப்புக்குரிய செய்தியேயாகும்.

சங்கப் புலவர்கள் உண்மையிலேயே அப்பாடல்களைப் பாடினரென்றே வைத்துக் கொண்டால்கூட, அது வள்ளுவர் புகழுக்குத் தமிழகம் செய்த சிறப்பாகி விடமாட்டாது. பத்துநாள் பட்டினியிட்டு மாளும் தறுவாயிலுள்ள ஒருவனுக்குப் பதினைந்துநாள் உணவைச் சேர்த்து அளிப்பது போன்ற செயலாகவே இது முடியும். ஏனெனில் கபிலர் பெயர், வேளிர் பெயர்கள், மன்னர் பெயர்களைப் பலதடவை கூடிப் பாடிய புலவர்கள் ஒரு தடவை தம் பாடலிடையே வாய் திறந்து 'திருவள்ளுவர்', 'திருக்குறள்' என்று கூறியிருந்தால், அது இப்புகழ்ப்பாடல்களை விடப் பல கோடி மடங்கான மதிப்புப் பெறும்.

சங்கப் புலவர்கள் பலர் அவர் கருத்துக்களை, சொற்களைக் கையாண்டுள்ளர். ஆனால் சங்கப்புலவர்கள்

இவற்றைத் திருக்குறளிலிருந்து எடுத்தனரா, அல்லது திருவள்ளுவர்தான் சங்கப்புலவர்களிடமிருந்து இவற்றைத் திரட்டிக் கொண்டாரா என்று இக்கால அறிஞர் ஆராய்ச்சி செய்வதற்கே இவை பயன்பட்டுள்ளன.

கணவன் பெயர் கூறாது கதவிடுக்கிலிருந்து 'திரு வம்பலம்' என்ற பெயருக்குப் பதிலாக 'ஏந்திரத்தையும்' 'எச்சிற்படிக்'கத்தையும் சேர்த்த தொகுதி என்று மொழி பெயர்த்துக் கூறும் இக்காலக் கற்புடைய நங்கையர்போல, 'அறம் கூறிற்றே' என்று ஒரு சங்கப் பாடலும், 'பொய் யில் புலவன்' என்று மணிமேகலையும் சங்க காலத்திலேயே முப்பால் ஆசிரியரைச் சுட்டாது சுட்டியுள்ளன. ஆனால் அதேசமயம் சாத்தனர், தாம் வழிபடு தெய்வமான புத்தர் பிரான் பெயரையோ, இளங்கோ தன் மூத்தோனாகிய செங்குட்டுவன் பெயரையோ பாடலில் வாய் நிறைய எடுத்துரைக்கத் த்யங்கவில்லை.

மேற் கூறியவற்றில் கருத்துச் செலுத்திய அறிஞர் எஸ். வையாபுரியவர்கள், வள்ளுவர் சங்க காலத்தில் அறியப்படாதவர் என்பதற்கும், **ஆகவே பிற்காலத்தவராகத் தான் இருக்க வேண்டும்** என்பதற்கும் இதை ஆதாரமாக்கு கிறார். ஆனால் பிற்காலத்திலும், நம் காலத்துக் குரிய கவிஞர் பாரதியார் காலம்வரை, நிலைமை இதுதான் என்பதை அவர் ஏனே எண்ணிப் பார்க்கவில்லை.

சங்ககாலப் புலவர் பெயர் சொல்லாமல் கருத்தை மட்டும்', அல்லது 'சொற்களை மட்டும்' கையாண்டது போலவே, மாணிக்கவாசகர், தேவார மூவர், ஆழ்வார்கள், கம்பர், சேக்கிழார் ஆகிய தமிழகக் கவிஞர்கள் எல்லாருமே வள்ளுவர் பெயரோ, அவர் நூலின் பெயரோ வாய்திறந்து கூறாத கற்புடைக் காரிகையர்களாகவே விளங்கினர்.

நாரதர் புகழும் அகத்தியர் புகழும், வியாசர் புகழும், தேவர்கள் பெயரும் தமிழுக்குப் புறம்பே சென்று தேடி எடுத்துக்கூறிய அளவில் நூற்றில் ஒரு பங்காவது இவர்கள் எவரும் வள்ளுவரை மறந்தும் குறிப்பிட்டதில்லை. சேக்கிழாரின் பொய்யடிமை யில்லாத புலவர் வள்ளுவரா சங்கப்புலவரா; ஒரு புலவரா, பல புலவர்களா என்று இன்று ஆராயப்படும் நிலை ஏற்பட்டுள்ளது இதனாலேயே.

அறிஞர் வையாபுரியார் இதை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சிப் பண்பை நீட்டியிருந்தால், வள்ளுவர் என்று ஒருவர் சங்க காலத்திலோ, பாரதியார் காலம் வரையிலோ இருந்ததில்லை என்று முடிவு செய்திருக்கக் கூடும். உண்மையில் பாரதியார்கூட இதிகாச புராணங்களைக் குறிப்பிட்ட அவ்வளவு பழகிய பாச வடிவில் இளங்கோவையோ, வள்ளுவரையோ — கம்பரையோ கூடக் குறிப்பிட்டவரல்லர்.

இந்நிலைக்கான காரணத்தை நாம் இங்கே இப்போது ஆராய வேண்டுவதில்லை. வள்ளுவர் கால ஆராய்ச்சிக்கும் இவ்விடத்தில் தங்கித் தடவ வேண்டுவதின்று. தமிழகப் புலவர்—சங்ககாலப்புலவர் கூட இதற்கு விலக்கல்ல—அறிந்த வள்ளுவர் புகழ் எல்லாம் தாம் அவரைப் பயன்படுத்துவதுடன் நின்றது. பொதுமக்கள் முன்னே அவர் பெயர் கூடியமட்டும் அறிமுகப்படுத்தப்படாமலே இருந்து வந்துள்ளது.

தமிழகத்தில் வள்ளுவர் புகழுக்குத் தமிழகக் கவிஞர் செய்துவந்த சேவையையே, தமிழகத்துக்கு வெளியே செல்லத்தக்க உயர்வாய்ப்புடைய தமிழர் யாவரும் உலக அரங்கிலும் — இந்திய மாநிலத்திலும் — தொடர்ந்து தமிழுக்குச் செய்துள்ளனர், செய்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வள்ளுவர் உலகப் புகழ், தமிழர்களின் ஒரு சிறிய முயற்சி கூட இல்லாமலே வளர்ந்துள்ளது, வளர்ந்து வருகிறது என்றும் கூற வேண்டும்.

## 3. உலகப் புகழ் மரபு

கிறிஸ்தவ சமயத் திருவேடாகிய விவிலிய நூல் ஒன்றுக்கே அடுத்தபடியாக, உலக மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

உலகாளும் இனங்கள் பின்பற்றும் சமயம் கிறிஸ்தவ சமயம். உலகாளும் பிரிட்டனும் பிரான்சும் அமெரிக்காவும் பிற வல்லரசுகளும் தத்தம் இலக்கியப் புகழேடுகளுக்குத் தரும் மதிப்பு அதற்கடுத்த மதிப்பே—அம்முறையில் போட்டியிட்டு வளரும் மதிப்புடையது விவிலியம். அச் சமயத்தைப் பின்பற்றுபவர்கள் உலகில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்டவர்கள்—அதன்பரப்பு உலகின் முக்காற்பங்குக்கு மேற்பட்டது. அச்சமயத்தின் கோடிகுவித்த செல்வர்கள் எத்தனையோ பேர் தம் செல்வமெல்லாம் அவ் வேட்டின் புகழ் உலகில் பரவுவதற்கு உதவியுள்ளனர், உதவி வருகின்றனர். உலகின் அறிவிற்சிறந்த பெருமக்கள் எத்தனையோபேர் தம் அறிவாற்றல் அத்தனையையும், உழைப்பையும், வாழ்நாளையுமே அதில் ஈடுபடுத்தியுள்ளனர். ஏழை மக்கள் கதையோ சொல்லவேண்டுவதில்லை. உலக அரசியல்களும் செல்வர்களும், பெருமக்களும் பொதுமக்களும், அறிஞரும் கலைஞரும் செய்யும் ஒப்புயர்வற்ற பெருந்தியாகத்தின் சின்னமாக விளங்குவது விவிலிய நூற்புகழ்.

இதற்கு எவ்வளவு நேர்மாறானது திருக்குறள்—அதன் நிலை திருக்குறளல்ல, உருக்குறள் என்று கூறலாம்.

உலகில் தன்னாட்சியற்ற, தன்னாட்சியையும் தன் இனப்பெயரையும் சிலகாலம் மறந்தேவிட்ட இனம் தமிழினம். அடிமை நாடுகளுக்கும் அடிமை நாடாக விளங்கி, தன்னை ஆளுவதற்காகவே அயல் அடிமை நாடுகளின் விடுதலைக்கு உழைத்து, தன் குடிகளையே சூழ்புலநாடுகளை வளப்படுத்தக் கூலிகளாய் விற்பனை செய்து, தன் வீட்டிலும் தன் மதிப்பிழந்து, அயல் வீட்டிலும் தன் உறவினர் மதிப்பிழந்து தவிக்கவிடும் பரப்பாக இன்று தமிழகம் விளங்குகிறது. அதற்குப் பேரில்லை, ஊரில்லை. அதன் கதி பற்றி ஏன் என்று கேட்பாரில்லை. 'இல்லாளை இல்லாளும் வேண்டாள், மற்று ஈன்றெடுத்த தாய் வேண்டாள்' என்ற நிலையில் இருப்பவன் தமிழன்.

நாட்டின் நிலை இது என்றால், நாட்டு மக்களின் நிலை திருக்குறள் வகையில் இன்னும் சீர்கேடானது. மேலையினங்களுக்கு விவிலியம் சமய ஏடாயிருப்பது போல், தமிழகத்தில் தமிழனுக்கு இது சமய ஏடாய் இன்று இயங்கவில்லை. அவன் சமய ஏடுகள் அவன் மொழியில் இருந்தால் கூட அவன் ஏறெடுத்துப் பார்க்கமாட்டான். உயர் வகுப்பினர் என்று தம்மைக் குறித்துக் கொள்பவர்களே, அது காரணமாகத் தாம் தமிழரல்லர் என்று வலியுறுத்த விரைபவர்கள் தமிழக ஆட்சியாளர்கள், ஆட்சியாளர்களின்நல்லெண்ணத்துக்காகத் தமிழ் மறுத்து அயல் பண்பளாவும் தமிழகச் செல்வர், உயர் பணியாளர்கள்; அயல் மொழி படித்தவர்கள், படித்ததாகப் பாவிப்பவர்கள், படிக்காமலே தாய்மொழிப் புறக்கணிப்பு மூலம் அயல் மொழிகளுக்கு நாட்டில் ஏற்பட்ட உயர் மதிப்புப் பெறவிரும்புகிறவர்கள்—இத்தனைபேரும் தாயகத்திலேயே தமிழைக் காட்டிக் கொடுக்கத் தயங்காத பிலாத்துக்களாக (Bileters, இயேசுவைக் காட்டிக்கொடுத்த சீடர்களாக) விளங்குகின்றனர்.

வால்மீகி இராமாயணத்துக்கு கீதைக்கு, கம்பராமா யணத்துக்கு; அடுத்தபடியாகவே; திருவாய்மொழிக்கு (பல தமிழக வைணவர்களுக்குத் திருவாய் மொழி தமிழ்ப் பாடல் என்பதே தெரியாது); பாகவதத்துக்கு (தமிழி லேயே பாகவதமுண்டு என்பது தமிழகத்தில் பலருக் குத் தெரியவராத ஒன்று)—இவை போன்றவற்றுக்குத் தமிழகத்தில் உள்ள செல்வ வாய்ப்பு வசதிகள், பக்தி பாராயண ஆதரவுகள் திருக்குறளுக்கு என்றும் இருந்தது கிடையாது—இன்று திருக்குறள் விரைந்து வளர்ந்துவரும் மறுமலர்ச்சி யூழியில்கூட, அது அவற்றுடன் இவ்வகை யில் ஈடிணையிலை பெற்றுவிடவில்லை.

திருக்குறளை உலக மொழிகளில் மொழிபெயர்த்தவர் களில் மிகமிகப் பெரும்பாலோர் அவ்வம்மொழியாளரே, தமிழரல்லர். விவிலிய ஏட்டைப்பரப்ப அச்சமயத்துக் குரியார் செய்த எந்த முயற்சிகளும் தமிழகம் எடுத்துக் கொள்ளாதவையே. இன்று திருக்குறள் வகையில் தமி ழகத்தில் எழுந்துள்ள மலர்ச்சி பெரிது. ஆனால் அது ஏட்டின் உலகப் புகழைத் தூண்டிய, வளர்த்த,வளர்க்கிற முயற்சிகூட அன்று. அது உண்மையில் உலகப் புகழின் எதிரொலியாகத் தன்மான இயக்கம் தோற்றுவித்த தமிழரிடையே தோன்றிப் பரவியதேயாகும்.

தமிழ்ப் புலவர் இம்மறுமலர்ச்சியில் பெரும் பங்கு கொண்டது உண்மையே. ஆனால் இவ்வகுப்புக்கு மக்க ளிடையே செல்வாக்குத்தான் உண்டு; மக்களிடையேகூட அவர்களுக்கு மதிப்பு கிடையாது. அவர்கள் ஆட்சிவகுப் பினரல்ல, ஆட்சி வகுப்பின் அயல் மொழிப்பற்றோ, அயல் மொழிப் படிப்போ, அதனால் வரும் செல்வமோ ஊக்கமோ அவர்கள் அறியாதவை.

விவிலிய நூலுக்கு அடுத்தபடி உலக அரங்கில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள ஏடு திருக்குறள்—இந்த உண்

மையை நாம் மேற்கூறிய பின்னணியில் இணைத்துப்பார்க்க வேண்டும். உலக அரங்கில் திருக்குறளுக்குக் கிடைத்துள்ள மதிப்பு இரண்டாம் இடமதிப்பல்ல—முதல் இடத்துக்கும் பன்மடங்கு மேம்பட்டமுதன்மை இடம் என்பதை இது குறித்துக் காட்டவல்லது.

தவிர, உலக அரங்கில் விவிலிய ஏட்டின் புகழ்முழுதும் வளர்ந்துவிட்ட ஒன்று. திருக்குறளின் புகழ் இன்னும் சரிவரத் தொடங்கிவிடாதது.

## 4. இயற்கைப் பண்பு வேறுபாடு

*அறம், பொருள், இன்பம்!*

மனித இன வாழ்வின் மூன்று குறிக்கோள்களாகத் தமிழர் வகுத்த முப்பால்கள் இவை.

மூன்று குறிக்கோள்களையும் மூன்று கூறுகளுடைய ஒரே முத்திறக் குறிக்கோளாகக் கொண்டவர் திருவள்ளுவர். மூன்று குறிக்கோள்களிலும் முடிந்த குறிக்கோள், முழுக் குறிக்கோளாக இன்பம் அவரது முப்பால் வகுப்பில் இடம் பெற்றுள்ளது. இன்பப்பாலில் இன்பம் பெருக்கும் ஊடலில் முப்பாலேட்டை அவர் முடியாது முடித்தவர் போல் விட்டு, அவ்வின்பத்தைஅடிப்படையாகக் கொண்ட இல்லறத்துடன் அதைத் தொடங்கிவைத்ததன் காரணம் இதுவே.

முப்பால் ஏட்டைத் தவிர, தமிழில்கூட, வேறு எந்த ஏட்டிலும் இந்த மூவொருமை நிலையைக் காணமுடியாது. அது திருவள்ளுவருக்கே உரிய தனிச் சிறப்பு. உலகில் வேறு எவரும் கனவுகூடக் காணாத சிறப்பு இது என்பதில் ஐயமில்லை. ஆயினும் திருவள்ளுவர் தமிழ்ப் பண்பில் தலைநின்றவர் மட்டுமல்ல, கிட்டத்தட்ட மொழியின் பண்பு உருவாகும் நாளிலேயே வாழ்ந்தவர் என்று கூறவேண்டும்.

ஏனெனில் அவர் மூவொருமையின் பொறிப்புத் தமிழ் மொழியிலேயே காணப்படுகிறது.

இனத்தின் தளம் குடும்பம், பொருளின் தளம் சமுதாயம், இன்பத்தின் தளம் இனம்,

தமிழில் இனம், இன்பம், இன்மை தொடர்புடைய சொற்களாய் அமைந்துள்ளன.

குடும்ப இன்பம் சிற்றின்பமென்றும், இனத்தளத்தின் நீடு அகல் இன்பம் பேரின்பம் என்றும் தமிழில் மட்டுமே ஒரு தொடர்புபட வழங்கப்படுகிறது.

குடும்பத்தளத்தின் நிலைக்களம், இனத்தளத்தின் நிலைக்களம் ஆகிய இரண்டுமே வீடு என்று தமிழ் ஒன்றில் மட்டுமே குறிக்கப்படுகின்றன,

குடும்பத் தலைவர் குடும்பமாக உருவாகுமுன்பே, அதற்குரிய காதலர் தலைவன், தலைவி என இருமைத் தலைமை தோன்றத் தமிழில் சுட்டப்படுகின்றனர். இனத் தலைவர் இது போலப் பொது வடிவால் தலைவர் என்று சுட்டப்படுகிறார். இத்தகைய பால் பொதுச் சொல்லே தமிழ் ஒன்றில்தான் உண்டு, சமஸ்கிருதத்தில் கிடையாது என்பதைச் சைவசித்தாந்த நூலுடையார் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இனத்தலைவரும், நாட்டுத்தலைவரும் ஒருங்கே இறைவன் என்றும், இனத்தலைவியாகிய பெண் தெய்வமும் குடும்பத் தலைவியும் ஒருங்கே இறைவி என்றும் தமிழில் வழங்கப் பெறுகின்றனர்.

நாட்டின் மக்கள் ஆட்சி தமிழ்மொழி ஒன்றிலேயே குடியாட்சி (குடும்பங்களின் ஆட்சி) என்ற பொருளுடையது. நாட்டு மக்களும் குடிகள் (குடும்பங்கள்) என்று குறிக்கப்படுகின்றனர்.

குடும்பத்தின் விரிவு நாடு, நாட்டின் விரிவு இன அகல் வீடு என்ற முப்பால் தத்துவம் தமிழ்மொழியின் அடிப் படையிலேயே ஊறியுள்ள ஒன்று என்று காண்கிறோம்.

முப்பாற்பண்பு, தமிழ்ப் பண்பு ஆகிய இந்த இரண் டின் அருமைப்பாட்டையும் சிறப்பையும் நாம் முற்றிலும் உணரவேண்டுமானால், அகல் உலகின் கருத்துப் பரப்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

வீரம், அறிவு, இன்பம், அன்பு!

மனித உணர்வின் நான்கு தளங்கள், அத்தளங்களுக் குரிய நான்கு செயலியக்கங்கள் இவை.

ஆற்றல், மெய்ம்மை, அழகு அல்லது இனிமை, நலம்!

இவை நான்கு தளங்களுக்குமுரிய பண்புகள் அதா வது அத்தளங்களில் செயல் மூலங்களாகவும், செயற் களங்களாகவும், செயல் விளைவுகளாகவும் ஒருங்கே விளங்கும் திறங்கள்.

இந்நான்கு பண்புகளும் வாய்க்கப் பெற்றவர்களையே நாம் வீரர், அறிஞர், இன்ப வாணர், நல்லோர் என் கிறோம்.

நடைமுறை உலக வாழ்வில் இந்நான்கு பண்புகளுமே சமுதாயத்துக்குப் பயன்படுபவை, சமுதாயத்துக்குத் தேவைப்படுபவை. அம்முறையிலே, அந்த அளவிலேயே அவை சமுதாயத்தில் இயங்க விடப்படுகின்றன. சமுதா யத்துக்குரிய கருவிகளாகவே வீரரும், அறிஞரும், இன்ப வாணரும், நல்லோரும் பயன்படுத்தப் படுகின்றனர். அம் முறையிலேயே, ஒருவருக் கொருவர் பயன்படும் அளவி லேயே, நால்வகையினரும் ஓரளவு ஒத்து வாழ முடி கிறது. ஆனால் அடிப்படையில், நால்வகையினரும் நால் வேறான நோக்கங்கள் உடையவர்கள். நால் வேறு இனங்

களுக்குரிய பண்புகளோ என்னும்படி வேறு வேருன பண்புகள் உடையவர்கள். சமுதாயக் கருவிகள் என்ற முறையில் சமுதாயத்திஞல் கட்டப்பட்டாலன்றி, அவர் களுக்குச் சமுதாயத்திலோ, ஒருவர் அருகில் ஒருவருக்கோ இடம் இருத்தலரிது. அவர்கள் ஓரினமாக ஒருங்கு வாழ் தல் அரிது.

இதுமட்டுமன்று. சமுதாயத்துக்குத் தேவைப்படும் இத்தளங்களன்றி, தேவைப்படாத, தீங்கிழைக்கிற, அழிவு செய்கிற தளங்களும் உண்டு. தன்னலம், தன் முனைப்பு, ஆதிக்கம், அழிவு ஆகிய இத்தளங்கள் மேற் கூறிய தளங்களுக்கும் கீழ்ப்பட்டவை. இவற்றுள் வீரத் துக்கு அடுத்த கீழ்ப்படியான தன்னலம் சமுதாயத்துக்குத் தேவைப்படாத, பயன்படாத தளம். தீமை பயக்கும் தளங்களுக்கு எல்லாம் மூலம் அதுவே. ஆனுல் சமுதா யம் இத்தளமே இயல்புடையதென்று இயங்க விடுகிறது. இதனடிப்படையிலேயே சமுதாயம் இயங்கவிடப் பட் டுள்ளது.

மனித உலகில் 100க்கு 99 பேர் சமுதாயத்துக்குத் தேவைப்படாத இந்த ஐந்தாம் தளமாகிய தன்னலத் தளத்துக்குரியவர்களே. குடும்ப எல்லை ஒன்று தவிர, சமுதாயத்தின் மற்ற எல்லா அமைப்புகளும்—கொள்கை கள், கோட்பாடுகள், ஒழுக்கம், ஆசாரம்; சமயவாழ்வு வாணிகம்; அரசியல் வாழ்வு, ஆட்சி, ஆகிய யாவும்—இந்த ஐந்தாம் தளத்தையே தமக்குரிய அடிப்படைத் தளமாகக் கொண்டவை. சமுதாய ஆட்சியாளர் இந்த ஐந்தாம் தளத்தின் பிரதிநிதியாக நின்று, வீரம், அறிவு, இன்பம், நலம் ஆகிய பண்புகளைத் தங்கள் தன்னலத் தேவைக் கேற்ற பகுதிகளாக மட்டுமே பயன்படுத்துகின்றனர்.

இந்த ஐந்து தளங்களிலும் இனநோக்கம் அளாவிய தளம் கடைசியான வீர முதலிய பண்புகளில் உச்ச

முதல் தளமான நலத்தளம் அதாவது அன்புத்தளம் ஒன்றே. ஆட்சி செய்யும் தளமோ கடைசித் தளமாகிய தன்னலத்தளம். உலகிலும் பேரினத்திலும் இனத்திலும் பெரும்பான்மையாக உள்ள தளமும் அதுவே. இந்நிலையில் உச்ச முதல் தளம் கடைசி தவிர மற்றத்தளத்துக் குரியவர்கள் யாவரும் இனத்துடனோ, தமக்குள்ளோ தற்காலப் பயனீடு தவிர, வேறு தொடர்பற்றவர்களாய், ஒரே இடத்தில் வாழும் பல இன உயிர்கள் போல வாழ்கின்றனர். குளிருக்கஞ்சி ஓரிடம் பதுங்கி ஒன்றன் வெது வெதுப்பில் ஒன்று தற்காலிகமாகச் செயலற்றிருக்கும் கரடி புலி, மான் மறி, யானை காண்டா மிருகம்போன்றதே அவர்கள் உடனுறை வாழ்க்கை.

உலகில் அறநூல்கள் எவையும் அறநூல்களாக எல்லா மக்களுக்கும் பயன்படாததற்கும், பயன்படும் நூல்கள் அறநூல்களாய் இயங்க முடியாததற்கும் காரணம் இதுவே. உண்மை அறநூலை உலகில் ஆயிரத்துக்கொருவராய் இருக்கிற அன்புத்தளத்து நல்லோர் தவிர வேறு எவரும் ஆர்வத்துடன் ஏற்கமுடியாது. உலகம் ஆர்வத்துடன் ஏற்க வேண்டுமானால், அவ்வேடு தன்னலத் தளத்தில் ஊன்றி, வீரம், அறிவு, அன்பு ஆகிய தளங்களைத் தன்னலத்துடன் தொடர்பற்ற தனித்தளங்களாக்கி வேறு வகை அறம் கூறி, இறுதியில் நான்குடனும் தொடர்பற்ற உச்ச தளத்துக்குத் தனிவகை அறம் வகுத்து, இத்தனை தனியேடுகளுக்கும் ஒரே அறநூலட்டை போடவேண்டும்.

உலக அறநூல்களின் தோல்வி தற்செயலானதன்று. இவ்வடிப்படைக் கோளாற்றின் பயனே யாகும். மனிதப் பேரின முழுவதிலும் இவ் வடிப்படைக் கோளாறு கண்டு அதை விலக்கிப் பொது அறம் காணும் முயற்சியில் வெற்றி பெற்ற ஒரே உலக அறநூல் முப்பால். அதன்

அருமையை இப் பின்னணியுடனிணைத்துக் கண்டாலன்றி உணர்தல் அரிது.

## 5. சேற்றில் எழுந்த செந்தாமரை

இனங்கள், பேரினங்கள் பண்படிப் படையாகவே மரபு வழி அமைந்தாலும், பண்பு அவற்றில் மிக நுண்ணிய அளவிலேயே பதிந்துள்ளன. பெயரளவிலேயே அவை பண்பின் அண்டங்களாக நிலவு கின்றன. பண்புக் கதிரவன், பண்புக் கோள்களாகப் பேரினத்தில் பண் புடைய இனங்களும், இனத்தில் பண்புடையாளர் களும் தம் பேரின, இனச் சூழலெங்கும் பண்பு பரப்பி, பண்பாட்டலைகளை எழுப்பி, பண்பும் இனமும் பேணி வளர்க்கின்றனர்.

இனங்கள், பேரினங்களின் உண்மை ஆட்சியாளர் பண்புடையோர், பண்புடைய இனங்களே. ஆயினும் பண்பில் கடைப்பட்ட ஐந்தாம் தளமே பெரும்பான்மை யாதலால், அவர்கள் அதன் பிரதிநிதிகளையே ஆளவிட்டு. அடுத்த மூன்று இடைத்தளத் தலைவர்களையும் அவர்கள் கருவிகளாக இயங்கவிட்டு, தாமே எல்லாரிடமும் ஒப்பா கப் பண்பு பரப்புவதன் மூலம் ஆட்சியுரிமை இன்றி இனம், பேரினம் இயக்குகின்றனர்.

இந்த உண்மைகளை யெல்லாம் கண்ட, கண்டு மாளா எழுத்தால் (பொருட்பாலில் ஒழிபியல் என்று இன்று குறிக்கப்படும் குடியியலில் குடிமை முதலாகப் பண் புடைமை ஈருக, 94 முதல் 100 வரை உள்ள ஏழு அதி காரங்களில்) எழுதிவைத்த உலகின் ஒரே அறிஞர் திரு வள்ளுவர். ஆனல் அந்த ஒரே ஒருவர் வழி நின்றுதான் தொல்காப்பியமும் சங்கத்தமிழிலக்கியமும் ஏனைத் தமிழிலக்கியமும்; மற்றக் கீழ்திசை, மேல்திசை இலக்கி யங்கள் யாவும் உலக வாழ்வும் இயங்குகின்றன. ஏனெ

னில் முப்பாலின் அடிப்படைக் காட்சி உலகில் பரவி யிராவிட்டால், அறநூல்கள் மட்டுமல்ல, இலக்கிய ஏடுகளே உலகில் நிலவியிருக்க முடியாது.

உலக இலக்கிய வளர்ச்சிப்படிகளில் ஒரு சிறிது கருத்துச் செலுத்துவோருக்கு இது தெளிவாகும்.

தளங்களை மேலிருந்து கீழாக எண்ணினால், ஐந்தாவது தளத்திலேயே உலகம் இன்னும் நிலவுகிறது. ஆனால் அவற்றுக்குக் கீழும் தன்முனைப்பு. ஆதிக்கம், அழிவு ஆகிய மூன்று தளங்கள் உள்ளன. உயிரினமும் மனித இனமும் இம் மூன்று தளங்களும் கடந்தே ஐந்தாம் தளம் எட்டியுள்ளன என்பது மறந்துவிடத் தக்கதன்று. மூன்று தளப் பண்புகளும் ஐந்தாம் தளத்த வரிடையே சிறப்பாக அதன் ஆட்சியாளர், ஆட்சி வகுப்பினரிடையே இன்னும் மறைந்து விடவில்லை.

இத்தளங்கள் ஒவ்வொன்றிலும் பலபடிகள் உண்டு.

சமுதாயத்துக்குத் தேவைப்படும் தளப்பண்புக்ள், தேவைப்படாத தளப்பண்புகள், தீங்கும் அழிவும் தரும் தளங்களிள் பண்புகள் யாவும் ஒவ்வோர் இனத்தின் தாழ்விலும் பேரின வாழ்விலும், உலக வாழ்விலும் இடம் பெற்றே உள்ளன. சில இடங்களில் (வாடைத் திசையில்) இவை வளர்ந்தே வருகின்றன. இவை பேரின வாழ்வின் ஒற்றுமையை மட்டுமல்ல, இன வாழ்வு, கிளையின வாழ்வு, சமுதாய வாழ்வு, ஊர், குடும்ப வாழ்வு எல்லை வரைகூட ஒற்றுமை கெடுப்பவையாய் உள்ளன; பேரின, இன வாழ்விலுள்ள இந்தக் குளறுபடிகள் இலக்கியத்திலும் சமயநூலிலும் அறநூலிலும்கூட இடம் பெறுதவையல்ல. உலகில் பல சமயங்கள், இலக்கியங்கள், அறங்கள்; சமய நூல்கள், இலக்கிய நூல்கள், அறநூல்கள் பேரின வாழ்விலன்றி, இன வாழ்விலேயே, குடும்ப வாழ்விலேயே

CONNEMARA PUBLIC LIBR
3 JUL

ஒற்றுமை யுணர்வு ஊட்டுபவையாயிராமல், சீர்குலேவூட்டு வதன் விளக்கம் இதுவே.

எடுத்துக்காட்டாக, கிரேக்க புராணங்களிலும் அவ் வழி இலக்கியத்திலும், அதுபோலவே இந்திய புராண இதிகாசங்களிலும், தேவர் (கிரேக்கம்: 'தெயோய்', கட வுளர்; சமஸ்கிருதம்: தேவா:) அசுரர் (கிரேக்கம்: 'தித்தளியாய்' கடவுட் பகைவர்: சமஸ்கிருதம்: அஸுரா:) ஆகியோரின் போராட்டம், தேவர் வெற்றி'தேவர் புகழ் கொண்டாடப் படுகிறது. கிரேக்கரது கடவுட் பகை வரே நடுநிலக் கடலக இனத்தவரின் கடவுள ரென்பதை யும்; அசுரர் என்பவரே பாரசகரின் கடவுளரென்ப தையும் கருத்தில்கொண்டால்; இப் புராணக் கதைகள் கிரேக்கர், இந்திய ஆரியருக்கு இனிமையும், நடுநிலக் கடல கத்தார்க்கும். பாரசிகருக்கும் கசப்புமே ஊட்டுவன என் பது தெளிவு. ஆனால் நடுநிலக்கடலக இனத்தவர் கசப்பை நுகர வாழவில்லை. அவர்களே அப்புராணமெழுதியவர் அழித்தே, அவ்வழிவுக் கல்லறை மீது புராணமெழுப்பினர். ஆனால் கிழக்கே தேவ அசுரப்போர் உண்மையிலேயே பார சிகர், இந்திய ஆரியர் போராட்டமாகி, பிந்திய இனத் தவர் இந்தியாவுக்குத் துரத்தப்பட்டனர். ஆனால் வென்ற சந்துஷ்டிரர் மரபினரான பாரசிகரும் பின்னாட்களில் இந்தியாவுக்கே துரத்தப்பட்டு, செல்வமிக்கவர்களாத லால் , தனிப் பீடுடன் வாழ்கின்றனர்.

இராமாயணக் கதையும் இது போன்றது. இலங்கை யில் பிறந்ததெல்லாம் இராக்கதக் கூட்டம், தென்னகத் தில் பிறந்ததெல்லாம் குரங்குகளின் கூட்டம் என்பது கங்கை நாட்டவர்க்கு இனிக்கலாம். தென்னவர்க்கோ இலங்கை வாணர்க்கோ இனிக்காது.

அரசியல் துறையில்கூட ஆங்கிலேயர் தோல்வி பாடும் பிரஞ்சு வீரகாவியம் பிரஞ்சுக்காரருக்கு இனிக்கும். ஆங்கிலேயர்க்குக் கசக்கும். பிறர்க்குத் துவர்க்கும்.

இனம் கடந்த வேறுபாடு ஊட்டும் இலக்கியம், அற நூல்களும் உண்டு. இனத்துக்குள்ளேயே வேறுபாடு ஊட்டும் இலக்கியம், அறநூல்கள் இல்லாமலில்லை.

'பெண் புத்தி பின் புத்தி'

'வீரமில்லாத ஆண் ஆணல்ல, பெண்'

பெண்கள் வாசிக்கும் காலம் வராது என்று எண்ணப் பட்ட காலத்து இலக்கிய உரைகள், பழமொழிகள் இவை.

'பெண் படிக்கக் கூடாது'

'பெண் புத்தி கேட்டு நடக்கக் கூடாது'

இவ்வாறு எழுதிய அறநூலுக்கு ஒரு பெண் உரை எழுதுவதானல் எப்படி இருக்கும்?

'செக்கு மாட்டுப் புத்தி'

'குயவன் புத்தி பிடரியிலே!'

'சாதிக்கேற்ற புத்தி'

அறிஞர் ஆர். கே. சண்முகம் போன்ருர் பள்ளியில் படிக்கவோ, ஆசிரியராகவோ நேராது என்ற 'தைரியம்' உள்ள காலத்திய பழமொழிகள் இவை. 'புத்தி' என்ற சொல் அவற்றின் காலத்தை வேறு காட்டுகிறது.

பண்டைத் தமிழிலக்கியம், மேலை இலக்கியத்தையும் கூட இத்தகைய நாகரிகமற்ற கால (இடைக்கால)க் கேடுகள் தீண்டாமலில்லை.

ஆங்கிலத்தில் இன்று கடுஞ்சீற்றத்தில் வெறுத்தும் இழித்தும் கூறுகின்ற ஒரு தொடர் (bloody fellow) ஒரு

காலத்தில் இயேசு பெருமானைக் குறித்துக் கவிஞர் புகழத் தக்க பாராட்டுச் சொல். 'உடல்நலம் வாய்ந்த நல்லுழவர்' குறித்த இத்தொடர், உழவர் பழிக்கப்பட்ட இடைக் காலத்தில் இப்படி இழிந்தது. பொது மக்கள் என்பதன் தமிழ் ஒருமை (பொது மகன், இழிந்த பிறப்பினன்; பொது மகள், ஒழுக்கங்கெட்டவள்), குடிமக்கள் ஒருமை (குடிமகன், அம்பட்டன்); வேளாளர் அல்லது வெள்ளாளரின் பெண்பால் (கம்பர் கால இலக்கிய வழக்கு கடைசியர், மக்கள் வழக்கு வெள்ளாட்டி—பொதுமகள், ஒழுக்கமற்றவள்); மலையாள மொழி அச்சன் (=தந்தை) என்ற சொல்லின் பெண்பால் (அச்சி—வைப்பாட்டி) ஆகியவை சமுதாய உயர்வு தாழ்வைப் புகுத்திய மொழி, கருத்து, இலக்கிய வழக்குகள் ஆகும்.

உலக இலக்கியங்கள், சமய வாழ்வுகள், அறநூல்கள் தொடக்க நிலையில் எத்தகைய சேற்றிலிருந்து பிறந்து இன்று செந்தாமரைகளாகியுள்ளன என்பதை இவை காட்டுவன ஆகும்.

இந்நிலையில் இன்றும் உலகில் எந்த இலக்கியமும், எந்தச் சமய ஏடும்—சிறப்பாக எந்த அறநூலும்—உலக மளாவியதாக, இன மளாவியதாகக்கூட அமையாததில் வியப்பில்லை. வியப்பு யாதெனில், இந்த அளவாவது எல்லாரும் நுகரத்தக்க, ஓரளவு ஒப்பிட்டுக் காணத்தக்க இணைவமைதி உலக வாழ்விலே, சமயத்துறையிலே, இலக்கிய ஏடுகளிலே, 'அறம்' பற்றிய கருத்துக்களிலே ஏற்பட்டுள்ளதே என்பதுதான்!

சேற்று மணம் முற்றிலும் படாத பல்வேறு வகைச் செய்ய தாமரை வாழ்வுகள் பெற்றுள்ள உலகின் பண்பட்ட இனங்கள் **யாவுமே** வேறுபாடின்றி நுகர இயலுகின்ற தூய்ய செந்தாமரை மணமாக முப்பால்

கமழ்கின்றது. யாராவது எந்த இனமாவது அதை நுகர் வதில் சிறிது குறைபட்டதானுல்கூட, அது அவ் இனத் தின் படி குறிப்பது, ஆளின் பண்பு குறிப்பது—முப்பாலின் இயல்பு குறிப்பதல்ல என்று கூறிவிட இடமுண்டு. ஏனெனில் இன்றுள்ள குறைபாடு காலத்தில் நீங்குவது உறுதி.

'முப்பால் உலகெங்கும் முக்காலத்துக்கும் ஏற்புடைய நூல் என்று கூறுவது உண்மையில் சரியன்று. ஏற் புடையதாக நாள்தோறும் ஆகி வருகிற நூல், அதன் ஏற்பிலேயே மனித இனப்பண்பு அடங்கியுள்ளது என்று கூறலாம். ஏனெனில் இயற்கையிலே, உயிரினத்திலே, மனிதப் பேரினத்திலே, சேறுயிருந்த இடமெல்லாம் செந் தாமரை மணமாக்கியுள்ளது முப்பால் ஏடு, முப்பால் மரபு.

அது தமிழர் மூலப்பழமறை ஆகியுள்ளதும், உலகப் பொதுமறை ஆகியுள்ளதும் தற்செயல் நிகழ்ச்சியல்ல. தமிழினத்தை ஆக்கியது அது; உலகப் பண்பை, நாகரி கத்தை ஊக்கியது அது; என்பதை உலக அறிஞர் காணும் நாள் உலகில் புது மலர்ச்சி தொடங்கும் நாளாக அமையத் தக்கது என்னலாம். ஏனெனில் முப்பால் உலகப் பொது மறை ஆகிவிட்ட ஏடல்ல, தமிழர் மூலப்பழமறை ஆகி யியங்கும் ஏடு மட்டுமல்ல—மேன்மேலும் அத்திசை நோக்கி வளர்ந்துவரத் தக்க ஏடு ஆகும்.

பண்பாட்டு உலகுக்குப் பண்புத்திசை காட்டும் வட மீன் திருவள்ளுவர்.

## 6. முப்பால் வகுப்பும் தமிழகமும்

பிறந்த இனம், மொழியகம் ஆகியவற்றில் மட்டு மன்றி. அணிமை சேய்மை மொழிகள், இனங்கள் ஆகிய வற்றிலும் உலக முழுவதிலும் முப்பால் எவ்வாறு இவ்

வொற்றுமைப் பண்பு பரப்பமுடிந்தது?சமயத் துறையிலே இலக்கியத் துறையிலேகூட முற்றிலும் காணமுடியாத ஒத்திசைவை அற நூலிலேயே அது எவ்வாறு ஏற்படுத்த முடிந்தது?

சேற்று மணத்தில் எவ்வாறு உரம் கண்டு வள்ளுவர் செந்தாமரைப் பண்பு வளர்த்தார்?

இஃது ஆராய்தற்குரியதே!

அழிவு, ஆதிக்கம், தன்முனைப்பு, தன்னலம், வீரம், அறிவு, இன்பம், அன்பு ஆகிய எட்டுத் தளங்கள் உயிரின வளர்ச்சிக்குரியன என்று மேலே குறித்துள்ளோம், எட்டின் கூறுகளுமே மனித இனத்தில் இன்றும் இருந்தாலும், அது உண்மையில் கடைசி மூன்று கடந்து ஐந்தாம் தளத்திலேயே நிற்கிறது என்னலாம்.

உயிரின் உணர்வுகள், மனித உணர்வுகள் ஒவ்வொரு தளத்திலும் மிகப்பல உண்டு. ஆனால் மனித இன மொழிகள் எவற்றிலும் முதல் மூன்று தளத்துக்குரிய உணர்வுகளுக்கு—பெரும்பாலானவற்றுக்கு—பெயர் கிடையாது. ஏனெனில் இவ்விலங்குப் படிகள் கடந்த பின்பே. மனித இனம் உருவாகி மனித இன மொழிகள் வளர்ச்சியடைந்தன. தன்னலப்படியில் நிற்கும் மனித இனம் அதற்குமேல் சிறிதளவே முன்னேறியுள்ளது· சொற்களும் தமிழிலன்றி மற்ற மொழிகளில் அந்தப்படியிலேயே மிகுதி.

நம் உலகில் இயல் நூல்களின் இயல்நூல் என்ற முறையில் இயல்நூல்களின் அடிப்படையாகக் கருதப்படுவது கணக்கியல் (Mathematics). அது தன்னல்ப்படிக்கே சிறப்பாய் உரிய இயல்துறை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் ஆட்சி கடந்து வளர்ந்த அறிவுத்துறைகள், கலைத் துறைகள், சொல் மரபுகள் உலகில் மிகச் சிலவே. ஆனால்

இது கடந்த சிந்தனைகளின் தடங்களைத் தமிழிலும் முப்பாலிலும் காணலாம்.

தளங்கள் ஒவ்வொன்றிலும் நாம் ஐந்து தளத்தின் வளர்ச்சி காணலாம். இவ்வாறு வீரம் என்ற பண்பு ஐந்தளத்திலும் வம்பு, வீம்பு, வீறு, வீறமைதி அல்லது பெருமிதம், இனநலம் ஆகவும்; அறிவு அதுபோல வஞ்சகம் அல்லது சூழ்ச்சி ஆண்மை, அறிவமைதி அல்லது திட்ட அறிவு, இனவளம், அருள் ஆகவும்; இன்பம் அதேவகையில் அடிமைத்தளம், பாசம், நேசம், நட்பு, காதல் ஆகவும்; அன்பு இம்முறையிலேயே ஆதரவு, வண்மை, தாய்மை. பண்பு, சால்பு ஆகவும் தன்னல விலங்குப்படியிலிருந்து அன்பின் தெய்விகப்படி நோக்கி உயர்வது காண்கிறோம்.

இச்சொற்களில் பல மனித இன மொழிகளில் காணப்படக் கூடியவை ஆகலாம். ஆனால் இப்படிமை வேறுபாட்டாராய்ச்சி தமிழர்க்குப் பொதுவாகவும், திருவள்ளுவர்க்கு சிறப்பாகவும் உரியது என்பதை அகப்புற வேறுபாடும் வள்ளுவர் பொருட்பாலின் குடியியலும் (ஒழிபியலும்) தெள்ளத் தெளியக் காட்டும்.

மனித உணர்ச்சிகளை இங்ஙனம் ஐந்து தளங்களாகப் பகுத்தவர் தமிழரே. விலங்குக்குரிய தன்னலப்படி கடந்து வீரத்திலும் தன்னலப்படி கடந்த வீம்பு வீரத்துடன் அவர்கள் அகப்புறப் பாகுபாடு தொடங்கினர். ஆனால் திருவள்ளுவர் முப்பால் பொருளிலடக்கி வீரப்படியின் உச்ச நிலைகளை மட்டும் விளக்கினார். அறிவு, இன்பம், அன்பு என்ற மூன்று படிகளையுமே அவர் ஏற்று, அதில் உச்சப்படியாகிய அன்பையே அவர் அறமாக்கினார். அன்பு அளாவிய அறிவு, அன்பு அளாவிய இன்பம் என மேலும் இரு தெய்வீகப்படிகள் வகுத்தார்.

வள்ளுவர் முப்பால் வகுப்பு முறையின் அருமை பெருமை, வெற்றியின் மறைதிறவு இதுவே.

'அறத்துக்கே அன்பு சார்பு என்ப அறியார்;
மறத்துக்கும் அஃதே துணை.'

மனித உணர்வின் உச்சத்தளமாகிய அன்புத்தளமே அறம் என்பதையும் ஈண்டுத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். அது போதாதென்று, பொருள், இன்பம் ஆகிய பின்வரும் இயல்களுக்கும் அதுவே அடிப்படை என்று காட்டுவதற்கு ஒரு வலியுறுத்து முறையாக, அவற்றுக்குரிய அறிவுத்தளத்துக்கும் இன்பத்தளத்துக்கும் கீழ்ப்பட்ட வீரத் தளத்துக்குக்கூட, அன்புதான் அடிப்படை என்று ஆணித்தரமாகத் தம் 'அன்பற' நூலுக்கு அரண் செய்கிறார்.

பல்வேறு உணர்வுகளிலும் ஒருமை காணுமல் பிளவுண்டு சீர்குலைவுற்ற மனித இனத்துக்கும் அதன் மைய இனமான தமிழினத்துக்கும் முப்பால் நெறியை முதல் முதல் வகுத்துக் காட்டியவர் தமிழரே—சிறப்பாகத் தமிழ்த் திருவள்ளுவரே. ஏனெனில் முப்பால் வகுப்பு முறையைத் தமிழகத்திலும் அதனையடுத்த வடதிசையிலும் மட்டுமே காண்கிறோம். அதன் முழுமையை, மூவொருமையை வள்ளுவர் ஒருவரிடமே காண்கிறோம்.

## 7. முப்பால் வகுப்பும் வள்ளுவரும்

அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பால் மரபும் தொகைப்படிவமும் கீழ்த்திசையில், அதுவும் தமிழினத்துக்கும் சமஸ்கிருதவாணருக்கும் மட்டுமே எட்டியுள்ளன. அதே சமயம் அதன் கருத்துப்படிவம் வடதிசையைவிட உயிர் மண்டலத்தின் திசையாகிய மேல்திசையிலேயே பெரிதளவு பரவியுள்ளது. பண்பாராய்ச்சியில் சிறந்தவரான ஆங்கில அறிஞர் மாத்யூ அர்னால்டு, 'பண்பாடும் முரண்பாடும்' (Culture & Anarchy) என்ற சீரிய ஏட்டில்

அழகுப்பண்பைக் கிரேக்கப் பண்பாகவும் (Hellenism), அறப்பண்பை நடு நிலக் கடலக யூதர் பண்பாகவும் (Hebraism) பொருட்பண்பைநடு நிலக் கடலகப் பினீஷியர் பண்பாகவும் (Philistinsms) வருணித்துள்ளார்.

ஆசிரியர் முதலதையே 'இன்னொளி' (Sweetness and Light) என்று போற்றியவர். மற்ற இரண்டையும் சமநிலை திரிந்த பண்புகளாகவே பழிபடக் குறித்தனர். ஆயினும் அவர் விளக்கம் மேலை நாகரிகத்தின் முப்பண்புகளின் உருவையும் வரையறுப்பதேயாகும்.

மேலையுலகின் அழகுப்பண்பு இனநலத்தை உட்கொண்டதேயாம். ஆனால் இனநலம் இன்பம் ஆகியவற்றையோ, இனம் இனநலம் ஆகியவற்றையோ, இனநலத்துடன் அறம்பொருளையோ, வள்ளுவர் இன்பத்தைப்போல அது சரிவர இணைக்கவில்லை. அது பண்பு நயமார்ந்த அழகுணர்வாகவே நின்றது. ஆனால் அறமும் பொருளும் மேலை வாழ்விலும் கருத்திலும் அர்னல்டு தீட்டியபடி இன நலம் சாராத வரண்ட தத்துவங்களாகவே நிலவுவன ஆகும்.

ஒழுக்கமுறை பற்றிய உயர்ந்த தத்துவத்தை—இன நல மல்லாவிட்டாலும் மனித நலமார்ந்த அடிப்படையில் கிறிஸ்தவசமயம் மேலை அறிவுலகுக்கு ஊட்டியுள்ளது. ஆனல் பொருட் பண்பு, அரசியல் சமுதாயப் பண்பு, அணிமைக் காலத்தில் குடியாட்சி, சமதருமம், பொதுவுடைமை ஆகியவற்றை அளாவும்வரை முழுதும் வரண்ட தன்னல அடிப்படையிலேயே கருத்துலகில் நிலவியிருந்தது.

அழகும் வாய்மையும் ஒன்று (Truth is Beauty; Beauty, isTruth) என்ற கீட்ஸின் கவிதை வேதாந்தம் வள்ளுவத்தை அணுகிய மரபு. இரண்டுடன் நலம் (Goodness) ஒன்று படுத்தி 'ரஸ்கின்' மரபு வள்ளுவமரபுக்கு இன்னும் அணித்

தாகியுள்ளது. ஆயினும் இது இலக்கு அளவிலேயே யன்றி, வள்ளுவரைப்போல வகுத்தமைத்த ஒரு முழு வாழ்க்கைத் திட்டமாக மேலையுலகில் இன்னும் மிளிர வில்லை.

மேலையுலகில் உலகப் பண்பாட்டு வளர்ச்சியுடன் வளர்ந்துள்ள இக்கருத்துத் தெளிவை நாம் வள்ளுவர் முப்பால் மரபை அப்படியே மேற்கொண்ட வடதிசையில் ஒரு சிறிதும் காண முடியாது. அறம் என்பதை ஒழுக்கம் (Ethics) என்று இன்று நாம் எளிதாகக் கூறுமாறு அவர்களால் கொள்ள இயலவில்லை. ஆசாரம், சாதிவழக்கு, கடமை, சமயநெறி, வைராக்கியம் (துறவிகள் வெறுப்பு வேதாந்தம், தமிழர் புறப்பொருளில் கண்ட நிலையாமை உணர்வு) ஆகிய பலவேறு கருத்துப்படிவம் வாய்ந்த சொற்களாக அதை மொழிபெயர்த்துக் குழப்ப மடைந்தனர். வடதிசைத் தாய் மொழிகளில் 'தர்மம்' என்பது 'சமயம்' என்ற பொருள் தரும் அளவிற்கு 'அறம்' என்பதற்குரிய சொல் இழிபுற்றது. பொருள் என்பதையும் இதுபோலச் சிலர் 'நீதி' என்றும், சிலர் 'அர்த்தம்' என்றும் மொழிபெயர்த்தனர். அரசியல் சூழ்ச்சி, அறிவார்ந்த சூழ்ச்சித்திறம் ஆகியவையே, சுரண்டல் ஆட்சிமுறைகளே தான் சமஸ்கிருதப் பொருட் பாகுபாட்டில் இடம் பெறு கிறது. இன்பத்துப்பால் 'காமம்' என்ற பழந்தமிழ்ச் சொல்லாலேயே வழங்கப்பட்டது. ஆனால் அச் சொல்லின் தற்கால இழி பொருளுக்குச் சமஸ்கிருத வழக்கே வழி வகுத்தது என்னலாம். ஏனெனில் அச் சொல்லும் அது சார்ந்த நூல்பிரிவும் நூல்துறைகளும் யாவுமே அம்மொழி யில் காதற் சார்பற்ற, உடலின்ப மொன்றே குறித்த, குடும்பத் தொடர்பற்ற கீழ்த்தர உணர்ச்சியாகவே சித்தி ரிக்கப்பெற்றன.

சமஸ்கிருதத்திலும் தலை சிறந்த முப்பாற் கவிஞன் பர்த்ரு ஹரி. அவனது முப்பாற் காவியம் முப்பால் மூக்

நூறு(த்ரிசதகம் அல்லது பர்த்ருஹரி சதகங்கள்)என்பது. அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலும் அதில் முறையே வைராக்கிய சதகம், நீதிசதகம், சிருங்கார சதகம் என்று குறிக்கப்படுகின்றன. ஆனால் இக் கவிஞன் கூட அறத்தைத் துறவறமாக்கி, துறவறத்தை வெறுப்புத் துற வறமாகக் கொண்டு, வாழ்க்கை மீது வெறுப்பூட்டும் வெறுப்பு வேதாந்தமாகவே அதைத் தீட்டுகிறான். அது போலப் பொருட்பகுதியாகிய நீதியை அரசியல் சார்ந்த தன்னலச் சூழ்ச்சிமுறையாகவும்,இன்பப்பகுதியாகிய சிருங் காரத்தைக் குடும்பத் தொடர்பற்ற கீழ்த்தரத் தன்னல உணர்ச்சியாகவுமே குறிக்கொள்கிறான். இவ்வாறு முப்பாலை யும் மூவேறுபட்ட ஒன்றுக் கொன்று ஒவ்வாப் பண்புக ளாக்கி, அவ்வேறுபாட்டை வலியுறுத்தும் முறையில் வாழ்க்கை முதல்வராகிய கடவுளையும் மூன்றுக்கும் உரிய மூன்று கடவுள்களாக்குகிறான். அறத்துக்குத் துறவுத்தெய் வமாகச் சிவ பெருமானையும், பொருளுக்குச் சூழ்ச்சித் தெய்வமாகத் திருமாலையும், இன்பத்துக்குக் காதல் தெய்வ மாக மன்மதனையும் ஏற்புடைக் கடவுளராகக்கொண்டு, முப்பாலுக்கும் அம் முக்கடவுளரையே அவன் சின்னங்க ளாகக் குறித்துள்ளான்.

முப்பாலையும் ஒரு பாலாக்கி, இறைவனை முப்பால் முதல்வனாகக் குறிக்கும் திருவள்ளுவரின் பண்பு உலகில் வேறு எவருக்கும் சென்றெட்டியதில்லை. ஆனால் அவரது முப்பாற் பாகுபாடு ஒருதிசையிலும், அதன் அடிப்படைக் கருத்துப்படிவம் ஒவ்வொரு திசையிலும் பரவி, வாழ்க்கை யின் இந்த ஒருமை நோக்கு உலகை ஈர்த்துள்ளது.

வள்ளுவர் குறிக்கொண்ட கடவுள் 'ஒரு கடவுள்' மட்டுமல்லர். ஓருலகில் ஓரின வாழ்க்கைக்குரிய ஒருமைச் சின்னமான 'ஒரு கடவு'ளாக அவர் அவ்வாற்றலைக் கற்பனை செய்தார். அவர் கடவுள் அறத்துக்கு அறம்,

LIBR
3 JUL
MADRAS-6




வள்ளுவர் முப்பாலமைவு

பொருளுக்குப் பொருள், இன்பத்தின் இன்பமாக, முப்பாவின் ஒருமைச் சின்னமான முப்பால் முதல்வராக விளங்குகிருர்.

## 8. முப்பால் ஏட்டின் முறைவைப்பு அழகு

முப்பால் பாகுபாட்டின் பொதுவரிசை முறையும் அகப்புறப் பாகுபாட்டின் வரிசை முறையும் மேலே உருவகப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன. ஆனல் திருவள்ளுவரின் முப்பால் ஏட்டின் முறைவைப்புத் தனிப்பட்டது. ஏட்டில் முப்பால் பகுத்துணர்த்தும் நூற்பகுதியை இடஞ்சுழித்துத் தொடங்கிய இடத்தில் முடியும் ஒரு வட்ட ஆழியாக நாம் குறிக்கலாம். ஆனல் நூலின் பாயிரம் நூல் தொடங்குமுன் இதற்கெதிராக வலஞ்சுழியாகச் சுழித்துச் செல்லும் சிறு வட்டமாகவும், அதனுள்ளும் கடவுள் வாழ்த்து பாயிரம் போலவே வலஞ்சுழித்துச் செல்லும் இன்னும் சிறிய சுழி வட்டமாகவும் அமைகின்றன.

திருவள்ளுவர் வாழ்க்கை முழுக் குறிக்கோளாக, முப்பால் முதலாகக் கடவுளைக் கருதிய படியால், முப்பாவின் ஒருமைச் சின்னமாகக் கடவுள் வாழ்த்து அதிகாரம் வகுத்தார். நூலின் 129 அதிகாரக் கருத்தையும் அது ஒரே அதிகாரமாக மணிச்சுருக்கமாக்கிக் காட்டுகிறது. நூற்பகுதி அறம், பொருள், இன்பம் என்ற வரிசையில் இதனையே அகல் விரிவாக எடுத்துரைக்கிறது. ஆனல் இடையே, பாயிரத்தின் மற்ற மூன்று அதிகாரங்கள் நூலின் மூன்று பால்களுக்கும் உரிய புனைந்துரைகளாக அமைகின்றன. ஆனல் இங்கே முறை அறம், பொருள், இன்பம் என அமையாமல், இன்பம், பொருள், அறம் என அமைகிறது. இன்பத்துக்கு வான்சிறப்பு முன்னுரையாகிறது. காதலின்பம் கூட்டுவிப்பாரின்றி, ஆட்டுவாரின்றி இயல்பாகவே பயனேக்காது பருவகாரணமாகச்

செயலாற்றி மனித வாழ்வுக்குரிய எல்லா வளங்களுக்கும் அடிப்படையா யமைவது. வான மழையும் இது போல எவராலும் இயக்கப்படாமல் பயனும் நோக்காது இயல்பாகப் பருவங்காரணமாகப் பெய்து, இயல்பாகவே உலகில் எல்லா வளங்களையும் உண்டு பண்ணுவது. வானம் இங்ஙனம் காதலின் சின்னம் ஆகிறது. வான வளத்தை உலகுக்குப் பயன்படுத்துவன ஆறுகள், ஏரிகள், அரசனுல் வெட்டப்படும் கால்வாய்கள், கட்டப்படும் கண்வாய்கள் முதலியன. இவை தாம் உலகுக்குப் பயன்படுவதன்றி வேறு தமக்குப் பயன்பெறுபவையல்ல. பயன்படுவதையே பயனுகக் கொண்டவை. இவை இதுபோலத் தம் பயன் நாடாமல் பிறர் பயனே நோக்கி உழைப்பவர், 'தமக்கென முயலா நோன்ருள், பிறர்க்கென முயலுவர்' (புறநானூறு) தன்னல மற்ற அருள்தொண்டின்மீதே உலகவாழ்வு நடைபெறுகிறது. இத்தகையோரின் சார்பிலேயே அரசன் நின்று நாட்டில் வளம் காண முடியும். நாட்டின் அரசியல் வாழ்வு ஒன்றுக்கு மட்டுமன்றி, அதை நடைமுறைப் படுத்துவதற்குரிய அடிப்படையான சமுதாய வாழ்வு, அதை ஒழுங்கு படுத்துவதற்குரிய அடிப்படையான இனவாழ்வு, அதாவது சமுதாய வாழ்வு ஆகியவற்றை இயக்குபவர்கள் அவர்களே. இம் மூன்று வாழ்க்கைப் பகுதிகளுமே பொருட்பாலுக்குரியவை. ஒழுக்கத்தோர் மனித உலகுக்கு, வாழ்வுக்கு, அதாவது பொருளியலுக்கு வானமழை போன்றவர்கள் ஆகுன்றனர். ஆகவேதான் ஒழுக்கத்து நீத்தார் பெருமை பொருட்பாலுக்கு முன்னுரையாய் அமைகிறது. வானமழை, ஆறு ஏரி வாய்க்கால் ஆகியவற்றின் வளத்தை மக்கட்குரிய உணவு வளமாக்க உழைப்பவர் உழவர். அது போல ஒழுக்கத்து நீத்தார் வழி நின்று வாழ்வு நடத்தி உலகு வாழத் தாம் வாழ்ந்து, தாம் வாழ உலகு வாழ்விப்பவர் இல்லறத்தார். அவர்கள் வாழ்வு அறம். அறன்

வலியுறுத்தல் இவ்வாருக அறத்துப்பாலுக்கு முன்னுரையாகிறது.

நூல் வரிசை முறையை இடஞ்சுழி வட்டமாகவும் பாயிரத்தின் முறையை வலஞ்சுழி வட்டமாகவும் நாம் மேலே குறிப்பிட்டதன் காரணம் இம்மாறுபட்ட வரிசை முறையே. ஆனல் இம் முறையே முப்பால் ஏட்டின் முழுமைக்கு ஓர் இடையருத் தொடர்ச்சி தருகிறது. நூல் பகுதியில் அறம்பொருள் இன்ப முடிந்த பின் இன்பம் மேற்சென்று அறத்தில் தொடங்குவதாகவே அமைந்துள்ளது. ஆனல் பாயிரமும் நூலின் இறுதியான இன்பப் பாலிலிருந்து தொடர்ந்து சென்று அறத்துப்பாலில் முடிவுற்று, நூலின் அறத்துப்பாலுக்குத் தொடக்கம் செய்வதாக அமைந்துள்ளது.

இரண்டு வட்டமும் சேர்ந்த வரிசையாகப் பார்த்தால் கூட, இன்பத்திலிருந்து பொருளும் அறமும் வரும் இயற்கை முறையைப் பாயிரமும், அறத்திலிருந்து பொருளும் இன்பமும் தொடரும் வாழ்க்கை முறையை நூற் பகுதியும் விளக்குவன ஆகும்.

முதற் சுழியாகிய பாயிரத்தின் முதல் அதிகாரம், கடவுள் வாழ்த்துப் பாயிரத்துக்கும் நூலுக்கும் உரிய ஒருமையை வலியுறுத்துகிறது.

வள்ளுவர் நூலின் அதிகாரங்களுக்குள்ளே இடம் பெறும் பத்துக் குறட்பாக்களின் எண்வரிசை முறையில் உரையாசிரியருக்கு உரையாசிரியர் மாறுபாடு காணப்படுகிறது. அதிகாரப் பெயரிலும் இதுபோல் சிறு மாறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் அதிகாரப் பெயர்கள் பரிமேலழகரால் அவர் குறிக்கொண்ட புராண சுமிருதி அடிப்படைக் கருத்துக்களுக் கேற்பவே மாற்றப்பட்டுள்ளன என்பதை அவர் உரையின் போக்குத் தெள்ளத்

தெளியக் காட்டுகிறது. முற்பட்ட உரையாசிரியர்கள் தலைப்புக்களையே இவ்வகையில் ஏற்புடையனவாகக் கிட்டத்தட்ட எல்லா ஆராய்ச்சியாளரும் புலவருமே ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதிகாரத்திலுள்ள குறட்பா வரிசை இது போன்ற உயிர் முக்கியத்துவமுடையதல்ல வாதலால், அதில் இது வரை யாரும் கருத்துச் செலுத்தவில்லை. ஆனால் இங்கும் தம் கருத்துப் பின்னணியை வலியுறுத்தும் பரிமேலழகர் நோக்கம் ஒன்றே மாறுபாட்டுக்குக் காரணமாய் இருக்க வேண்டுமென்றும், பழய உரையாசிரியர் வரிசை முறையே மூல ஏட்டின் வரிசை முறை என்றும் கொள்ளத்தக்கது ஆகலாம். ஆயினும் அதிகாரக் குறட்பா வரிசை முறையில் மாறுபாட்டைத் தளமாகக்கொண்டு மூல ஏட்டின் பால் வரிசை முறை, இயல் முறை, அதிகார முறை, நூலின் குறட்பாக்களுக்கும் அதிகாரத்துக்கும் உள்ள தொடர்பு, அதிகாரந்தோறும் பத்துக் குறட்பா என்ற ஒழுங்கு நிலை, குறட்பாக்களின் சொற்கள் ஆகிய எல்லாவற்றின்மீதும் ஐயவாதம், மாற்றுத் திருத்தவாதம் பின்பற்றுபவர் இன்று தமிழகத்தில் பலர். 'கடவுள் வாழ்த்தும் பாயிரமும் மூல ஏட்டிலிருந்திருக்குமா? அவற்றையும் வேறு யாராவது சேர்த்திருப்பரா?' என்று ஐயவாதத்தின் மீது கற்பனை ஐயவாதம், கற்பனைவாதம் எழுப்பவும் முயல்கின்றனர்.

இருப்பதைக் கண்மூடி ஏற்பவர் முறை தவறானால், அதனினும் பன்மடங்கு தவறுடையன ஐயவாதமும் கற்பனை வாதங்களும். ஏனெனில் பரிமேலழகர் செய்ததாக நாம் கருதும் செயல்களுக்கே அது காரணமாகி விடக்கூடும். ஐயம் உச்ச அளவில் ஐயமாக மட்டும் தெரிவிக்கப்படலாமே யன்றி, கற்பனைத் திருத்தத்துக்கு வழியாய்விடக்கூடாது. திருக்குறளில் ஒருவருக்குப் பிடிக்

காத பகுதியிருந்தால் பிடிக்காதது என்ற கண்டனமே போதியது. எந்நூலையும் தகுதியறிந்து போற்றவேண்டுமே தவிர, எல்லாரும் புகழ்ந்து தீரவேண்டும், ஏற்றுத் தீரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அப்படிக் கட்டாயம் இருந்திருந்தால், எத்தனையோ கற்பனைத் திருத்தங்கள் ஏற்பட்டு, இன்று அது பொது நூலாக மிளிரும் தகுதியை இழந்திருக்கும். ஐயம் திருத்தமாகு முன்பு, திருத்துபவர் கருத்துக்குத் தக்க ஆதாரம் கிடைத்தாகவேண்டும்.

வள்ளுவர் நூலின் பொது முறையைக் காண்பவர், நூல் உலகில் எவ்வளவு தனிச் சிறப்புடையதோ, அதற்கு ஒரு சிறிதும் குறையாத தனிச்சிறப்பு அம் முறைவைப்புக்கு உண்டு என்பதைக் காண்பர். பத்துப் பத்தாக அவர் வகுத்த அதிகார வகுப்புக்கும், அதிகார வரிசை முறைக்கும் இயல்வரிசை முறைக்கும் இது பேரளவு பொருந்தும். இவற்றுட் சில குறிப்பிடத்தக்கன.

பாயிரத்தின் முதலதிகாரம் இறை வாழ்த்து. இறுதி அதிகாரம் அறத்துப்பாலுக்கு வாயில் வகுக்கும் அறன் வலியுறுத்தல். அறத்துப்பாலின் முதலிரு அதிகாரங்கள் இல்வாழ்க்கை, வாழ்க்கைத்துணை, இல்வாழ்வான், வாழ்க்கைத்துணை என்றே அவற்றின் முதற் குறட்பாக்கள் அறத்தின் இறைவர்—அதாவது தலைவன் தலைவியரை அறிமுகம் செய்து வைக்கின்றன. இல்லறவியலின் கடைசி அதிகாரமாகிய 'புகழ்', துறவறவியலின் முதல் அதிகாரமான 'அருளுடைமை' ஆகியவை தனி அறத்திலிருந்து சமுதாய, இல்லறங்களுக்குச் செல்லும் வாயிலாகிய துறவறவியலுக்கு வழியும் முகப்பும் வகுக்கின்றன. துறவறவியலுக்கும் அறத்துப்பாலுக்கும் இறுதி அதிகாரமான 'ஊழ்' இயற்கை யமைதி, சமுதாய அரசியல் சமய மரபுகள், இன மரபாகிய பண்பு ஆகியவற்றை உட்

படுத்தும் சொல் என்ற முறையில் பொருட்பாலுக்கும் இன்பத்துப்பாலுக்கும் வாயிலாய் அமைகிறது.

ஊழ் முதல்வனுகிய இறை அல்லது கடவுளின் சமுதாயப் பதிப்பே இறைவன் அல்லது அரசன். அவன் வகுக்கும் 'ஊழ்' வலியின் அடிப்படை கல்வி. இறை மாட்சி, கல்வி என்ற பொருட்பாலின் இரு அதிகாரங் களும் இவ்வாறு அப்பாலின் முகப்புக்கள் ஆகின்றன. அரசியலுக்கு முகப்புக்களும் அவையே. நடைமுறை ஆட்சியில் அரசன் இடத்தவன் அமைச்சனே. அமைச் சியல் என்ற அங்கவியலின் முதலதிகாரம் அதன் முகப்பா கிறது. ஒழிபியல் என்று குறிக்கப்பட்டுள்ள குடியியல் குடிமையுடனே தொடங்கி இயல் முகப்பாகிறது. இவ் வியல் துறவற இயல்போன்று நின்று முன்னைய அறத்துப் பாலுடன் இணைப்பும், வருகிற இனப்பாலுக்கு வாயிலும் வகுப்பதாகும். அதன் கடைசி அதிகாரமும் பொருட் பாவின் கடைசி அதிகாரமும் கயமை. இனத்தில் பண்பு நிறைவும் இலக்கின் எல்லை கடவுள் தன்மையானுல், அதன் இன்மை நிலேயே கயமை. இனத்தின் சிற்றுறுப்பு மட்டுமன்றி நிறையுறுப்பாகிய குடும்பத்தில், பண்பைத் தொடங்கி வைக்கும் முதல்வியாகிய தகையணங்கின் இன்றி யமையாமையைச் சுட்டிக்காட்டி, அது இன்பப் பாலுக்கும் அறத்துப்பாலின் தொடக்கமாகிய இல்லறத் துக்கும் வாயிலாகிறது.

சமுதாய வாழ்வின் கூருகிய குடும்பத்தின் புற வாழ்வே இல்லறம், அதன் அகவாழ்வு, அல்லது இன வாழ்வே இன்பம். இன முதல்வனுகிய இறைவனின் உரு வாக, குடும்பப் புறவாழ்வான இல்லறத்தில் இல் வாழ்வா னும், சமுதாயத்தில் அரசனும் இறை ஆதல் போல, குடும் பத்தின் அகவாழ்வாகிய காதல் வாழ்வில் இறைவி தலைவியே. தகையணங்குறுத்தல் இவ்வாறு இன்பத்துப்

பாலுக்கு வாயில் முகப்பாகிறது. ஆயினும் களவியலில் அணங்கு என்ற சொல்லும் கருத்தும் ஆடவர் கூற்ருகவே அமைகிறது. கற்பியல் முகில் கிழித்துப் பாயும் மின்னலெனத் தலைவியின் 'கற்பெனும் திண்மை'யின் கூற்ருக,

'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்,
வல்வரவு வாழ்வார்க்கு உரை.'

என்ற பெண்மனத்தின் முழு ஆழப் படப்பிடிப்புடன் தொடங்குகிறது. ஊடலின் தோற்ற வளர்ச்சி ஒடுக்கம் காட்டும் ஒரு முழு ஊடல் நாடகமாக விளங்கும் கடைசி மூன்றதிகாரமும் கணவனை ஆட்டுவித்து இல்லறம் நடாத்தப்புறப்பட்ட ஆடலழகியின் தனியுரையை—இன்பத்திலிருந்து இன்பத்துக்கு, கூடலிலிருந்து ஊடற்கடல் கடந்து புதுக்கூடல் வாழ்வுக்குத் தாவும் இன்ப உரையை —முடிவிலா முடிவாகக் கொண்டு இஃலறத்தில் புதுச் சுவையுடன் நம் கருத்தை நுழைய விடுகிறது.

பொய்யாமொழியின் மெய்யான கருத்தாழம் காண்பவர் பலர். ஆனல் அவர் முறைவைப்பின் அழகு அவர்கள் கண்காணுக் காட்சி மட்டுமல்ல. உலகில் வேறு எங்கும் வேறு எந்த மொழியிலும் வேறு எந்த இலக்கியத்திலும் காணுக் கண்காட்சியே யாகும்.

திருக்குறள் ஒழுக்க நூல், அறநூல் மட்டுமல்ல; பொருள் நூல், அறிவு நூல், மட்டுமல்ல; இன்ப நூல், கலைமட்டுமல்ல; அது சங்க இலக்கியமும் தொல்காப்பியமும், முத்தமிழ்ச் செல்வச் சிலம்பும், தெய்வத் திருவார் மணிமேகலையும் கூடச் சென்றெட்டாத இலக்கிய வனப்புடையது. முறைவைப்பின் மூவா அழகு காணுதவர் அவ்வமைப்பில் செம்பாதி காணுதவர் ஆவர். அதனை அறநூலில் சிறந்த அறநூல், அறிவு நூலில் சிறந்த அறிவு நூல், இலக்கிய ஏட்டில் சிறந்த இலக்கிய ஏடாக்கு

வது இம்முறைவைப்பே என்று கூறுதல் கூடத் தவ றாகாது.

## 9. துறவற இயல்

வள்ளுவர் துறவறவியல் 'துறவு' அதிகாரத்துடன் தொடங்கவில்லை. மேலீடாகப் பார்ப்பவருக்கு இது அவர் முறைமையின் பொது இயல்புக்கு மாறுபட்டது என்று தோற்றுமலிராது. மற்றும் அருளுடைமை யுடனேயே அது தொடங்குகிறது. இந்த அதிகாரமும் 'தவம்', 'நிலையாமை' ஆகிய அதிகாரமும் துறவற வியலுக் குரியன என்பதில் ஐயமிருக்க முடியாது. 'வாய்மை'யைக் கூட இதில் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் இவை 'துறவு'க்கு முன் வருவதைவிடப் பின்தொடருவதே மற்ற இயல் முறைவைப்புக்களுடன் ஒத்திணைவதாக அமையும். அத்துடன் 'புலால் மறுத்தல்', 'கூடா வொழுக்கம்', 'கள்ளாமை', 'வெகுளாமை', 'இன்னா செய்யாமை' ஆகிய எதிர் மறைகள் துறவறவியலில் சேர்க்கப்பட்டிருப்பது பொருந்துவதன்று.

இக்காரணங்களைக் காட்டி யாராவது அதிகார முறை வைப்பு வள்ளுவருடையதன்று என்று கருதவோ அதை மாற்றியமைக்கவோ முனைந்திருப்பரேல், அவர்கள் முறை வைப்பில் கருத்துச் செலுத்தியதற்கு அது ஒரு சான்று ஆகலாம். ஆனால் இவ்வாறு யாரும் செய்யவில்லை. அதே சமயம் எதிர்மறைகளைத் துறவறவியலில் சேர்த்தது போலித் துறவிகளைக் கண்டிப்பதற்காக என்று சிலரும்; துறவறத்தையே அவர் 'பிறர்தம் மதமேற்கொண்டு களைத'லாக அரை மனதுடனேயே சித்திரித்தனரென்று சிலரும்; துறவறத்தையே அவர் மறைமுகமாகக் கண்டித்தாரென்று சிலரும் கொண்டு முறைவைப்பை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

முப்பால் ஏட்டில் மொத்தமாகக் கருத்தூன்றி அவர் பண்புணர்ந்து முறைவைப்பை ஆழ்ந்து நோக்கினுல், அவர் முறைவைப்பின் அழகு இங்கும் தனிச்சிறப்புடன் திகழ் கின்றது என்பது விளங்கும். எதிர்மறைப் பண்புகள் இதில் இடம் பெற்றதற்குரிய காரணமும் தெளிவாகும்.

வள்ளுவர் முப்பாலில் அறம் பொருளுக்கோ, பொருள் இன்பத்துக்கோ மாறுபட்ட எதிர் இலக்குகள் அல்லது பண்புகள் அல்ல. 'அன்பு' என்ற அடிப்படையில் அத் தனையும் இணைபவை. இதை ஓர்ந்துணர்ந்தால், 'இல்லறம், துறவறம்' எதிர் பண்புகளல்ல என்பது விளங்கும். அறம், பொருள், இன்பம் ஒரே இலக்கின் மூன்று கோணங்கள் மட்டுமல்ல, மூன்று படிகள். அதுபோலவே இல்லறம், துறவறம் ஆகியவை ஒரே அறத்தின் இரு கூறுகள்— அதுமட்டுமன்று, ஒரே அறத்தின் இரு படிகள். இல்லறம் பொது அறம், துறவறம் சிறப்பறம். ஒன்றின் பேரெல்லை யுட்பட்ட சிற்றெல்லையாக மற்றது சிறப்பிக்கப்பட்டது.

வாழ்க்கை துறப்பது துறவறம், இன்பம் துறப்பது துறவறம் என்று இன்று பலரால் கருதப்படுகிறது. துறவதிகாரத்தில் பற்றறுத்தல், துறத்தல் என்ற சொற் களுக்குக் கொள்ளப்படும் பொருளே இதற்குக் காரணம். இது தவறு என்பதைக் காட்டுதல் எளிது.

அறத்துக்கு மட்டுமன்று, மறத்துக்குக்கூட அன்பு சார்பு என்று கூறியவர் வள்ளுவர். அவர் அன்பு என்ற பொருளில் பற்றை ஒருபோதும் குறித்திருக்க முடியாது. துறப்பது அன்பையல்ல; அவாவை என்று கூறுபவர், அவற்றின் வேறுபாட்டில் கருத்துச் செலுத்துவதில்லை. ஏனெனில் பிறர் வாழ விரும்புவதும் அவாவே. அது துறக் கத்தக்கது என்று வெறுப்புத் 'துறவி'கள் கூடக் கூறத் துணியமாட்டார்கள்.

வள்ளுவர் துறவின் இயல்பைத் தெள்ளத் தெளியக் காட்டும் குறட்பாக்கள் துறவு அதிகாரத்தின் இறுதி, 'தவ' அதிகாரத்தின் தொடக்கம் ஆகிய குறட்பாக்களே.

**'பற்றுக பற்றற்ருன் பற்றினை, அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு'**

''ஒரு பற்று வேண்டும். அது 'பற்றற்றவ'னுகிய கடவுளின் பற்று. அதுவும் பற்று விடுவதற்குரிய ஒரு பற்றுக் கோடாகவே வேண்டும்.'' —பற்றற்றவனுகிய கடவுள் அன்பற்றவரல்ல. அன்பே வடிவானவர். அவர், பண்பிற் சிறந்ததாகக் கூறப்படும் 'கருணை' அனைத்துயிர் மீதும் பாசம், அனைத்துயிரும் துன்பநீங்கி இன்புறவேண்டு மென்னும் அவாவேயாகும். அவர் பற்றற்றவராவது தற் பற்றற்றவர் என்பதனுலேயே, 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்ற கருத்தும் இதுவே.

இறைவனைப் பற்றுவது தற்பற்றறுத்துப் பொதுநலம் பேணுவதற்காகவே. துறவு பற்றறுப்பதுதான். ஆனுல் வள்ளுவர் தற்பற்றையே 'பற்று' என்று குறித்தார் என் பதை இது காட்டுகிறது.

**'உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற் குரு'**

தவ அதிகாரத்தின் இம்முதற் குறட்பா கூறும் தவம் புராண இதிகாசங்கள் கூறும் மூக்கைப் பிடித்தல், ஒரு காலில் நிற்றல், வரம் பெறல், வாழ்த்துகிற, பழித்துரைக் கிற ஆற்றல் பெறல் ஆகியவை யல்ல. இவை பிறர்க்குப் பயனின்றித் தன்னைத் துன்புறுத்திக்கொள்ளல் மட்டுமே. பிறருக்குத் தீங்கு செய்யாமை, அதனுலோ, நலஞ்செய் தலிலோ தனக்குத் தீங்கு வருமானுல், ஏற்று அமைதலே வள்ளுவப் பொருளில் தவம். இன்றைய மொழியில் கூறுவ தானுல் தியாகம், உயிர்த்தியாகம், வாழ்க்கைத் தியாகமே

தவம். புத்தரும் இயேசுவும் காந்தியடிகளும் செய்த தியாகம் அது...புராண முனிவர்கள் செய்ததன்று!

அன்பு துறவாத துறவறம் இல்லறம் துறந்ததும் ஆகாது. துறவிகள் இல்லற ஒழுக்கத்தில் சிறந்து உச்ச நிலை யடைந்தவர்களே; இல்லறம் ஒரு மலையானுல், அதன் உயரம் மிக்க கொடுமுடி துறவறம். உயரம் அல்லது பண்பு மிகுதியால் அது இல்லறத்திலிருந்து மேலெழுந்து நின்ருலும், அது இவ்லறத்தில் அடங்கிய ஒரு பகுதியே யாகும்.

**'அர்ன் பட்டதே இல்வாழ்கை'**

**'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்**
**போஒய்ப் பெறுவ தெவன்?'**

என்று இல்லறத்தை முதன்மைபடச் சிறப்பித்த பின் அதே வள்ளுவர்,

**'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி, மறந்தார் கொல்**
**மற்றை யவர்கள் தவம்'**

என்று துறவறத்தை மேம்படுத்திக்கூறியதன் 'விளக்கம் இதுவே.

இல்லத்தான் தற்பற்றில் நின்றே இயல்பாகப் பொது நலத்தில் ஈடுபடுபவன். தானும் வாழ்ந்து பிறரையும் வாழ விடுபவன். இந்தப் படியிலிருந்து தானும் வாழ்ந்து பிறரை யும் வாழவைப்பவன்; பிறர் வாழத் தான் வாழ்பவன்; பிறர் வாழவே தான் வாழ்பவன்; பிறர் வாழத் தான் துன்பப்படு பவன், உயிர் அளிப்பவன், மாள்பவன் என உயரும் படிகளே துறவறப் படிகள்.

இதனைக் கருத்துட் கொண்டால், வள்ளுவர் துறவறவியலின் அதிகார முறைவைப்பில் புதுப்பொருளும், புதுச் சிறப்பும், புதுச் சுவையும், அழகும் தோன்றும்.

புலால் மறுத்தல் இன்று தென்னகப் பிராமணர்க்கும் சைவர்களுக்கும் சாதி உயர்வு பேணித் தருக்குவதற்கும், உயர்வு தாழ்வு நிலை நாட்டுவதற்கும் உரிய ஒரு வெறுப்புக் கோட்பாடு, சமணர்க்கு அது ஒரு சமய வெறி. இம்மூவர்க்கும் அது வாழ்க்கையின் அடிப்படை நெறியன்று. கொல்லாமை நெறியும் இத்தன்மையதே. உயிர்களை உண்ணுமை மட்டுமல்ல, கொல்லாமை; கொல்லாமை மட்டுமல்ல, ஓம்புதல்; ஓம்புதல் மட்டுமல்ல, தன் உணவைப் பகிர்ந்து கொடுத்து ஓம்புதல் சிறந்த அறம் என்ற கருத்தைக் 'கொல்லாமை'யில் இரண்டாம் குறட்பாவும், புலால் மறுத்தல் பத்தாம் குறட்பாவும் வலியுறுத்துகின்றன.

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'
'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.'

வள்ளுவரது புலால் மறுத்தலும் கொல்லாமையும் இன்றைய மேலையுலகினர் மரக்கறி உணவு முறையன்று. அவர் அன்பு நெறியின் பகுதியாகும் என்பதை இது காட்டுகிறது.

'நல்லா றெனப்படுவதி யாதெனின், யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி'

என்ற அவ்வதிகாரத்தின் நான்காம் குறட்பா இதை வலியுறுத்துகிறது.

'தன்உயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை.'

'தான் இறக்க நேர்ந்தால்கூட, இன்னோர் உயிரைக் கொல்லல் தகாது. நேரே கொல்லாமல், இன்னொருவரைக் கொல்ல வைத்து, அல்லது கொல்வதை மறைமுகமாகத் தூண்டி, அல்லது கொல்லாமல் சாகச் செய்யும் முறை

களைப் பின்பற்றுவது கூடத் தீய செயல். தன் உயிர் பாதுகாத்தற்கே இவை செய்வதானால்கூட, செய்யாது சாவது நல்லது!

துறவுக்குமுன், அருளுடைமையின் பின் புலால் மறுத்தலும் கொல்லாமையும் இடம் பெற்றதற் குரிய காரணங்களை இக்குறட்பா விளக்குகிறது. இல்லறத்தான் புலால் உண்ணுபவனாய் இருக்கலாம். உண்ணாதவனாகக் கூட இருக்கலாம். ஆனால் மருந்துக்குக் கூடப் புலால் உண்ணாமை, கடிக்கும் தேள், பாம்பைக் கூடக் கொல்லாமை, கொல்லுபவரைக் கூடக் கொல்லாமை ஆகியவை துறவற நோக்கிய வளர்ச்சிகளேயாகும். இந்தப் படிகள் கடந்தே இல்லறத்தான் துறவுநிலை அணுக முடியும். துறவுப் பயிற்சியாகிய துறவுக்கு முற்பட்ட இப்படிகளுக் குப் பின், துறவறவியலில் துறவு நடுவே வைக்கப்பட்டதன் மறைதிறவு இதுவே.

புலால் மறுத்தலைக் கூறி, கொல்லாமை கூறுதல் முதலது கொல்லாமையில் முதற்படி, அதே சமயம் இல் லறத்தான் பின்பற்றும் அன்புநெறிகள் (இக்காலத்தவர் புலால் மறுத்தல், கொல்லாமை உட்பட) யாவும் கடந்த நெறி என்பதனாலேயே.

இந்த இரு அதிகாரத்துக்கும் இடைப்பட்டவை தவம், கூடா வொழுக்கம், இன்னா செய்யாமை ஆகியவை. தவம் கொல்லாமைக் குரிய பயிற்சி. கூடாவொழுக்கம், கள் கொள்வது போன்ற மனமறிந்த வழிகளல்ல. வள்ளுவர் அன்பு நெறியைக் கருத்திற் கொள்பவர்களுக்கு, புலாலும் கொலையும் போன்ற பழிகள் அவற்றில் கிடையாது. ஆயினும் ஒன்று அகத்தீமை; போலித் துறவும் அதன் ஒரு பகுதி. மற்றது புறத்தீமை தூண்டுவது. உடல் கெடுப்பது. அக நலம் தடுப்பது. புலாலுண்ணுமைக்கும்

தவத்துக்கும் பின்னும், கொல்லாமைக்கு முன்னும் அவை இடம் பெற்றதன் நுட்பம் இதுவே.

வாய்மை கூடா வொழுக்கத்தின் எதிர்மறையான நற்பண்பு. வெகுளி தடுத்தற்கரியது. நீடித்த பயிற்சி வேண்டுவது, கூடா வொழுக்கம், கள் ஆகிய புறத்தீமைகளை விலக்குவதற்கான புற முயற்சிகளிலும் நீடித்த அகமுயற்சி தேவைப்படுவது. இன்னா செய்யாமை கொல்லாமையின் முதற்படி.

வெறுப்பு வேதாந்திகள் முழு ஏடு ஏடாகப் பசப்பியும், சமணர்கள் படலம் படலமாக, அதிகாரம் அதிகாரமாக முழக்கியும், உலக நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை என அடுக்குவர். ஒரே நிலையாமை அதிகாரத்துக்குள் அவர்கள் கூறுவது அத்தனையையும் அதற்கு மேலும் அழகுபடக் கூறியுள்ளார் வள்ளுவர். சமண ஏடாகிய நாலடியாரையும் சமணர் ஏடுகளென்று சமணர் வாதிடும் தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றையும் மற்றச் சமண, வெறுப்பு வேதாந்தப் பாடல்களின் பின்னணியில் வைத்து ஒப்பிடுவது பயனுடையதாகும். வெறுப்பு வேதாந்திகளைவிடச் சமணர், சமணரைவிடத் தமிழ்ச் சமணர், (நாலடி ஆசிரியர்), அவர்களைக் கடந்து தொல்காப்பியரும், எடுலாரையும் கடந்து திருவள்ளுவரும் காட்டும் மேம்பால் அப்போது புலனாகும். ஏனெனில் இவற்றில் தொடக்கத்தில் கூறப்பட்டவர்கள் 'நிலையாமை'யைச் சோகச் சுவையுடைய அழுகைப் பாடலாக்குவதையும், படிப்படியாக அது நிலையாதது காட்டி நிலைத்தது, நிலையாவடிவு கடந்த நிலைத்த உண்மை காட்டுவனவாக, சோகத்துக்கு மாறுபட்ட வீறுணர்வு ஊட்டுவனவாக வளர்வதையும் தெள்ளத் தெளியக் காணலாம்.

'புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு?

என்ற 'நிலையாமை' அதிகார இறுதிக்குறட்பா, 'உடல் தோறும் தூங்கி எழுந்தலையும் உயிருக்கு, நிலையாக ஓய்வு கொள்ளும் இடம் (நித்தியானந்தத் தளம்) இல்லையா?...' என்று கேட்கிறது.

இவ்வினவை 'இல்லையே' என்ற அவலச் சுவையாக உரையாசிரியர் கொள்கின்றனர். உயிரின் உலாவைப் பல பிறப்பு உலைவு என்றும் அவர் கொள்கின்றனர். வள்ளுவர் பிறப்புக்கு முன் வாழ்வு, இறப்புக்குப் பின் பிறப்புப் பற்றி எங்கும் கூறியது கிடையாது. 'தலை முறை தோறும் பயின்று முதிர்ந்து தேறி, பின்னும் பயிலத்தான் வேண்டுமா? நிலையான நீடித்த அனுபவம், கிடையாதா?' என்றுதான் கேட்கிறார் வள்ளுவர்.

'இருபதாண்டு படித்த பெரும்புலவன் பிள்ளை திரும்ப இருபதாண்டு தானும் படித்தன்றி அப்புலமை பெறுவ தில்லை. தந்தை வாழ்வு வீணா?'—உலகில் எவரும் என்றும் இது வரை கேட்டிராத கேள்வியைத்தான் இங்கு வள்ளுவர் கேட்கிறார். கேள்வியின் தொனி, இல்லையே என்ற ஏக்கத்தொனியன்று—'உண்டு, அடுத்த அதிகாரப் பார்' என்று வாயில் செய்து வைக்கும் தொனி ஆகும்.

கொல்லாமைக்கும் துறவுக்கும் இடைப்பட்ட அதி காரம்தான் நிலையாமை. அதன் முறை வைப்பின் அழகை யும் இதுவே காட்டும்.

மெய்யுணர்தல், அவாவறுத்தல், ஊழ் ஆகியவற் றுடன் துறவறவியல் முடிகிறது. மெய்யுணர்தல், அவா வறுத்தல் இரண்டும் 'துறவு' மூலம் தற்பற்றுத்துறந்தவர், பிறப்பு இறப்பு அறுவதற்காகப் பின்பற்றும் இருநெறிகள்.

பிறப்பு இறப்பு அறுதல் என்பதற்கு இனி மறுபடிப் பிறப்புக் கொள்ளா நெறி என்றே, பிறந்தநோடு சரி. இனி இறவாமல் பிறவாமல் உடலோடு என்றும் வாழ்தல் அல்லது கூண்டுடன் கைலை முதலிய படிகள் பெறுதல் என்றே முப்பால் வாசகரில் பலர் கருதக்கூடும். வாசகரின் சமய வேறுபாட்டுக் கியைய இம்மயக்கப் பொருளும் இயலும்.

பிறப்பு இறப்பு அறுதல் என்பது உடலோடு நாம் பிறக்கிறோம், அதனுடன் சாகிறோம் என்ற கருத்தில் தவறுணர்ந்து, இனவாழ்வு என்னும் கடலில் தலைமுறையிலிருந்து தலைமுறை யலைக்குச் செல்ல ஒரு புணையாக உடலிலமர்ந்து செல்லுகிறோம் என்ற அறிவு, அனுபவம் இன்பம் பெறுதலேயாகும். இனம் என்ற நிலை தெய்விக உடலைப்பற்றி இன வாழ்வே தம் வாழ்வாக வாழ்தல் என்பதே அதன் பொருள்.

நாம் பிறப்பதையும் நாம் காண்பதில்லை. உணர்வதில்லை. நாம் இறப்பதையும் காண்பதில்லை; உணர்வதில்லை. ஆனால் நம்மை ஈன்ற தாய்தந்தையரை உணர்கிறோம். அது நம் வாழ்வின், நம் தலைமுறையின் தொடக்கம். ஒரு மனைவியுடன் அல்லது கணவனுடன் இணைந்து வாழ்கிறோம். இது நம் தலைமுறையின் வாழ்வு. நம் பிள்ளைகள் தவழ்வதை, வாழ்வதைக் காண்கிறோம். இது அடுத்த தலைமுறைத் தொடக்கம். தாய்தந்தை திருமணத்துக்கும் பிள்ளைகள் திருமணத்துக்கும் இடையே, நம் திருமணத்தை உச்சமுகமாகக் கொண்ட அலையே நம் தலைமுறை வாழ்வு, அது நம் இனவாழ்வின் ஒரு கூறு மட்டுமே.

இவ்வுணர்வே, இதில் ஊன்றிய வாழ்வே, அதன் இன்பமே பிறப்பிறப் பில்லா வாழ்வு. இதன் இரண்டு படிகளே மெய்யுணர்தல், அவாவறுத்தல்.

**'பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு.'**

'கல்லைக் கடவுளாகக் கொள்வதுபோன்று நிலையற்ற வற்றை நிலையானவையாகக் கொள்ளும் மயக்கம் அல்லது போலி அறிவால் பிறப்பு அல்லது வாழ்க்கை மாணாதது அதாவது சிறப்பில்லாதது அல்லது இழிவானது ஆகி விடும்' என்பது இதன் பொருள். 'இழிவான இயல் புடைய பிறப்பு' என்று பொருள் கொண்டு பலர் வள்ளு வர், காந்தியடிகள், பெரியார்கள் வாழ்வுகள் உட்பட எல்லா வாழ்வையும் இழிவுடையதாகக் கருதுகின்றனர்.

துறவின் மூலம் இனவாழ்வில் பற்றுக் கொண்டவர், அறிவையும் தம் தற்பற்றின் சிற்றெல்லையிலிருந்து, அறிந்த அறிவின் கட்டுப்பாட்டிலிருந்து, ஆராயா நம்பிக் கைகளின் சூழலிலிருந்து விடுவித்துக் கொண்டு தற்சிந் தனை, காரண காரிய அறிவில் வளரவேண்டும்—மெய் யுணர்தல் அதிகாரம் வகுத்துரைக்கும் இன அறிவுப்படி இதுவே.

அறிவை வாழ்வுத் திட்டமாக, அவாவாக மாற்றுபவர் உண்டு. அறிவற்ற அவாவைவிட இது மேம்பட்டதே. ஆனால் அறிவும் அவாவும் தற்பற்றால் இயக்கப்பட்டால், அவை தன்னுடன் அழியும். அறிவை இன அறிவாக்கி, தற்பற்றவா அறுத்து இன அவா ஆக்கின், பிறப்பிறப் பற்ற இன வாழ்வுமட்டுமல்ல, பொங்குமாவளம் வாய்ந்த இனவாழ்வை அவர்கள் வளர்ப்பர்—அவாவறுத்தல் வகுத் துணர்த்தும் கருத்து இதுவே.

இந்நிலை அடைந்தவர் ஊழ் உணர்ந்து, அதாவது 'ஊழ் வழி நின்று, 'ஆகூழ்', ஊழ் கடக்கும் ஊழ்' காணவல்லவர் ஆவர். அத்தகையவர் இயங்குவதே சமுதாயம், உலகு.

துறவறவியல் இவ்வாறு இல்லறத்திலிருந்து படிப்படி யாக முதிர்வுற்று விளைந்து, குடும்ப எல்லையாளும் நிலையி

விருந்து சமுதாய இன ஆட்சிக்குரியவர்களை வளர்க்கிறது. துறவறவியலும் அதன் இறுதி அதிகாரங்களும் பொருட்பாலுக்கு வாயிலாவது இவ்வாறேயாகும்.

## 10. அறிவுலக அரசியல் வளம்

இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த கிரேக்கஅறிஞர் பிளேட்டோ.அப்பேரறிஞர் சாக்ரட்டீஸின் மாணவராகவும், பேரறிஞர் அரிஸ்டாட்டிலின் ஆசிரியராகவும் அமையும் புகழ்ப்பேறுபெற்றவர். இருவருக்கும் இல்லாத கலை, கற்பனை, சொல்லாட்சித் திறம், கவிதை இலக்கியப் பண்புகள் அவரிடமிருந்தன. உலக ஆட்சி எப்படி அமைய வேண்டு மென்பதை ஆராய்ந்து கனவு கண்டு, அவ்வறிவறிந்த கனவுத் திட்டத்தைக் 'குடியரசு' என்ற கலைப்படைப் பாக்கித் தந்துள்ளார், அவர்.

உழைப்பாளிகளாகிய பெரும்பான்மைப் பொது மக்கள், அவர்களைக் கட்டுப்படுத்தி அடக்கியாள உதவும் வீரர்கள், இருவரையும் அடக்கி ஒழுங்குபடுத்தி இருவர் நலமும் பேணவல்ல திறமையும் தகுதியும் வாய்ந்த ஆட்சியாளர்கள் ஆகிய இயல்பான, இன்றியமையாத கூறுகளை ஆட்சிக் கூறுகளாக அவர் கருதுகிறுர்.

உலக அறிஞர்களில் தலைசிறந்த ஓர் அறிஞக பிளேட்டோ. உலகக் கலைஞர்களில், கவிஞர்களில், தலைசிறந்த கலைஞர், செய்யுள் வடிவில் கவிதை எழுதாத ஒரு சிறந்த கவிஞர் ஆவர்,அவர். ஆனல் உலக ஆட்சி ஒழுங்கார் நடைபெற வேண்டுமானல், கொடுத்தவரைச் சுற்றும் கூத்தர், கவிஞர், இலக்கியவாணர் ஆட்சியில் மட்டும் இருந்தல்ல, உலக வாழ்விலிருந்தே ஒதுக்கி வைக்கப்பட வேண்டும் என்று பிளேட்டோ தம் கனவுநிலைக் குடியரசில் சட்டம் வகுத்தார்!

மற்ற மூவினங்களைப் பற்றிய பேரறிஞர் கருத்து விளக்கம் அறிவார்ந்தது, சுவையுமார்ந்தது.

பொது மக்கள் உழைத்தாலன்றி மூவினத்துக்கும் வாழ்வில்லை. ஆனால் அவர்கள் தாமாகத் தமக்கும் பிறருக்கும் உழைப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது, உழைக்கும்படியும், ஒருவருடன் ஒருவர் பூசல் விளைக்காத படியும் அவர்களை அடக்கி ஒடுக்க, வலிமையும் பயிற்சியும் கட்டுப்பாடும் நிறைந்த ஒரு வீரர் படை தேவை.

வீரர் படை தானே பயிற்சி மேற்கொள்ளாது; பயிற்றுவிக்கப்பட வேண்டும். பயிற்சி கடும் பயிற்சியாய் இருக்க வேண்டும். இன்ப வாழ்வில் அவர்கள் சறுக்க விரும்புவர். அதைத் தடுக்க வேண்டும். அவர்கள் வீரம் சில பல சமயம் மக்கள்மீதே, ஆட்சியினத்தின் மீதே பாயத் தக்கது. அவர்கள் ஆட்சி யெல்லைக்குப் புறம்பாகக் கட்டுப் படுத்திப் பிரித்து அடக்கி ஒடுக்கிவைக்கப்பட்டு, வேண்டும் போது ஆட்சியாளரால் மட்டும் பொதுமக்கள்மீது இயங்க விடப்பட வேண்டும்.

புலி ஆட்டைக் கடித்துவிடாமல் தடுக்க வேண்டிய அதே சமயம் தாமே ஆட்டுக் கூட்டத்தை அழிக்காமல் பாதுகாக்கப்பட வேண்டிய இனம், பயிற்றுவித்துக் கட்டுப் படுத்தப்பட்ட ஓநாய்கள் அல்லது வேட்டைநாய்களின் இனம் போன்றது இவ்வீர இனம்!

ஆட்சியாளர் திறமை, தகுதி பற்றிய அறிஞர் விளக்கம்தான் மற்ற இரண்டு விளக்கத்தினும் சுவைமிக்கது.

வீரர் வீரம், அறிஞர் அறிவு இரண்டும் சேர்ந்ததே ஆட்சியாளர் திறமை. இரண்டு இனத்திலும் தப்பிப் பிறந்த ஆயிர நூறாயிரத்திலொருவர்தான் இத்தகைய திறமை வாய்ந்தவராயிருப்பர். ஆனால் இத்தகையவர்கள் கூட வீர இனத்து ஓநாய்களையும், அறிஞர் இனத்துக்

குள்ள நரிகளையும்விட ஆபத்தானவர். ஏனென்றால் அவர்கள் வீரமும் அறிவும் சேர்ந்து ஒருங்கே பேரழிவு செய்வன. இத்தகைய அழிவுகாரரிடையே அவ்வழிவுத் திறத்துடன் தகுதியும் உடையவராகப் பார்த்துப் பொறுக்கினால் தான், தக்க ஆட்சியாளர் கிடைப்பர்.

தகுதி என்றால் என்ன?

உழைப்பவர் இயல்பாக உழைக்க விரும்பாததுபோல, வீரர் இயல்பாகப் பயிற்சியும் கடுமையும் மேற்கொள்ள விரும்பாததுபோல, **திறமையிருந்தும் அதை இயல்பாகப் பயன்படுத்த விரும்பாத, ஆளவிரும்பாத பண்பே தகுதி.**

திறமையும் தகுதியும் உடையவர்கள் நூறாயிரத்தில் ஒருவர் தேறுவதும் அரிது. தேறினாலும் அவர்கள் மற்றத் திறமை (வீரமும் அறிவும்) வாய்ந்தவர்களைப் போலத் தாமே ஆட்சிப் பீடத்துக்கு வந்துவிட மாட்டார்கள். வலுக் கட்டாயமாக, தண்டனைக்கஞ்சி அதனருகே துரத்தப் பட்டாலன்றி அதனருகே செல்லமாட்டார்கள். அதில் அமர்ந்த பின்னும் அதிலிருந்து தப்பி ஓடிவிடாமல் அச்சுறுத்தும் அம்புக் கோட்டையும் தண்டிக்கும் வேற்படை ஈட்டிப்படை ஆகியவற்றைக் கொண்டுதான் அவர்கள் ஆட்சிப் பீடத்திலிருக்கும்படி செய்தல் வேண்டும்!

அறிஞரையும் கலைஞரையும் அப்புறப்படுத்தி. வீரர்களைக் கட்டுப்படுத்தி ஆண்டு, பொதுமக்களை அவர்கள் மூலம் அடக்கி இயக்க வேண்டியவர்கள் இவ்வரும் பண்புகளையுடைய ஆட்சியாளர்களே. மக்களுலகம் எப்படியாவது அத்தகையவரைத் தேர்ந்து, எப்படியாவது 'ஆள்கிறாயா, மாள்கிறாயா?' என்று அச்சுறுத்திக் கட்டாயப் படுத்தி ஆட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டால், உலக ஆட்சி உயர் முறையில் ஒழுங்குடன் நடைபெறும்!

எலி தின்னாத பூனையைக் கண்டுபிடித்து, மற்றப் பூனைகளை அடக்கி ஒடுக்கிவைத்து, அந்தப் பூனையே எலிகளை ஆளும்படி செய்ய வேண்டும். அத்துடன் அந்த எலி தின்னாத பூனை எலிகளையும் பூனைகளையும் விட்டு ஓடிவிடாமல் காக்க வேண்டும். இதுதான் எலியுலக ஆட்சிக்கு அறிஞர் திட்டமிட்டுள்ள ஏற்பாடு. ஆனால் இத்தகைய மாயப்பூனையைக் கண்டு பிடிப்பது யார்? எப்படிக் கண்டுபிடிப்பது? அதை யார், எவ்வாறு அச் சுறுத்தி வலுக்கட்டாயப் படுத்துவது?

அறிஞர் இக்கேள்விகளுக்குத் தெளிவான விடைகூற வில்லை. இது தெய்வச் செயலால் நடைபெற வேண்டிய ஒன்று. நல்வினத்தில் நல்லகாலத்தில் நல்ல சூழலில் அவ் வாறு நடைபெற வேண்டும் என்று விட்டுவிடுகிறார்.

மேலீடாகப் பார்ப்பவருக்கு இக்கவிதை யுலகப் பேரறிஞர் கற்பனை ஆட்சித் திட்டம் ஒரு கேலிக்கூத்தாகத் தோற்றலாம். ஆனாலும் வள்ளுவருக்கு மிக அணித்தான அரசியல் திட்ட அறிஞர், அவருக்கடுத்தபடி உலகில் தலை சிறந்த அறிஞர் அவரே என்பதை, மற்றெல்லா உலக அறிஞர், தற்கால உலகின் அறிவார்ந்த திட்டங்கள், செயல்கள் கண்டு அவற்றுடன் ஒப்பிட்டால் தெளிவாகும்.

நல்லாட்சியிலும் ஆட்சி நலத்திலும் பிளேட்டோ காட்டிய அக்கரையையும் ஆர்வத்தையும் நாம் உலகில் வேறு எவரிடமும் காணமுடியாது. வள்ளுவரிடம் காணும் அக்கரையும் ஆர்வமும் கூட அதனளவு முனைப்பும் துடிப் பும் உடையவல்ல. ஏனெனில் அவை ஆழமும் அமைதி யும் உடையன,

பிளேட்டோவின் ஆசிரியரான சாக்ரட்டீசு உலகின் மெய்யறிவாராய்ச்சியின் தந்தையாகவும்; பிளேட்டோ கலையின் தந்தையாகவும்; பிளேட்டோவின் மாணவரான

அரிஸ்டாட்டில் அறிவுலகின் இயல்நூல் துறைகளின் தந்தையாகவும் மதிக்கப்படுகிருர். அவர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் அராபிய அறிஞர் பேணிக்காத்துப் பின்னுளைய உலகுக்களித்த ஒருசிலவே நமக்கு வந்து எட்டியுள்ளன. அவர் புகழ் வரவு இந்த எச்சமிச்சத்தின்மீதே கட்டமைந்துள்ளது. அந்நூல்களுள் ஒன்று 'அரசியல்' (Politics) என்பது.

அரிஸ்டாட்டில் குறிக்கொண்ட அரசியல் வல்லாட்சி (சர்வாதிகார ஆட்சி)யே. யார், எத்தகையவர் ஆள்வது, அவர்களை யார், எப்படித் தேர்வது என்பவற்றைப் பற்றியெல்லாம் அவர் பிளேட்டோவைப் போலச் சிந்திக்கவேயில்லை. எப்படி ஆள்வது, ஆட்சி முறை யாது என்பது பற்றி மட்டுமே அவர் 'அரசிய'லில் குறித்தார். எல்லா இயல்நூல் துறைகளுக்கும் தந்தை என்று அழைக்கப்படுவது போலவே, 'அரசிய'லுக்கும் தந்தை என்றே மதிக்கப்படுபவர் அவர் ஆயினும் அவர் வள்ளுவமரபு அரசியலுக்குப் புறம்பானவர். அரசியலின் சமுதாய அடிப்படை பற்றி அவர் சிந்திக்கவில்லை.

மக்கள் தேர்ந்தெடுப்பதே அரசியல்; அதை ஆக்கவும் அழிக்கவும் அவர்கட்கு உரிமை உண்டு என்று தற்கால மேலை ஐரோப்பாவில் ரூசோ கருதினர். திட்டமிட்ட கல்வி முறையின் அரசியல் பற்றி மட்டும் வால்ட்டேர் வலியுறுத்தினர். அறிவு தானுக ஆட்சி செலுத்திவிடும் என்றும் எண்ணினர்.

தற்காலக் குடியாட்சி அரசியல் பெரும்பான்மையிலும் பலகாலத் தேர்விலும் நம்பிக்கை காட்டுகிறது. ஆட்சியாளர்களும் அவர்களைத் தேர்ந்தெடுப்பவரும் மாறுவதிலேயும், ஆட்சிக்கருவிகள் அதாவது செயலாட்சியினரும் வீரப்படையும் (காவற்படை, Police, போர்ப்படை, Army, Navy etc) ஊதிய அமர்வாய் அமைவதிலேயும்

ஆட்சியாளர்க்குரிய கட்டுப்பாட்டை மக்களிடமே விடுகின்றனர்.

ஆனால் நல்லாட்சியாளர்களை யார், எப்படி, எம் முறையில் தேர்ந்தெடுப்பது, கட்டுப்படுத்துவது என்பது பிளேட்டோ கடந்து இன்றும் நெடுந்தொலை முன்னேறி விட்டதென்று கூறிவிட முடியாது. மக்கள் விருப்பம் மக்கள் தற்காலிக உணர்ச்சி, சூழல், அறிவு நிலை, பொருளியல் நிலை, பண்பாடு ஆகியவற்றைப் பொறுத்தது. தேர்வு முறையோ ஒற்றையா, இரட்டையா என்று சீட்டுப் போட்டுப் பார்க்கும் ஊகச்சோதனை முறையே யன்றி வேறன்று. தெய்விக நம்பிக்கையை அறிவார்ந்த தெய்வ நம்பிக்கை அல்லது குருட்டு யோக நம்பிக்கை யாக்கி யுள்ளனர் தற்கால அரசியல் வாதிகள்—அவ்வளவே.

நெருக்கடி நேரங்களில் குடியாட்சி திறமையான ஆட்சியன்று. பல சமயம் குடியாட்சிக் கட்சிகளே நெருக்கடியை உண்டுபண்ணவும், குழப்பம் ஊட்டவும் பயன்படுகின்றன.

குடியாட்சி இயந்திரத்தினது ஒரு குறைபாட்டை இந்நாளைய (1960-ம் ஆண்டு நிலை சார்ந்த) வல்லாளர் எழுச்சிகள் காட்டுகின்றன.

குடியாட்சியின் இன்னொரு குறை அது பழைய முதலாளித்துவங்களினும் ஆற்றலும் திட்டமும் வாய்ந்த அழிவுத்திறமுடைய புது முதலாளித்துவத்தை உண்டு பண்ணுகிறது என்பதே.

ஒப்பியல் நெறி (சமதருமம்), பொதுவுடைமை ஆகியவை இவற்றுக்கு மருந்தாகத் தற்கால உலகில் எழுந்துள்ளன.

இவை தனி முதலாளித்துவத்துக்குப் பதில் கூட்டு முதலாளித்துவம், தனியாதிக்கத்துக்குப் பதில் கூட்டு

நிலைய ஆதிக்கம், தனி மனிதன் வல்லாட்சிக்குப் பதில் அதனினும் பொல்லாத. அமைதியும் நல்லாட்சியும் மக்க ளுரிமையும் கெடுக்கிற போட்டி பூசலாதிக்கம் ஆகிய வற்றையே நாளடைவில் உண்டுபண்ணுகின்றன.

தனி மனிதன் உரிமை இந்த எல்லா முறைகளிலும் செல்வமுடையவன், திறமையுடையவன், வலிமையுடைய வன் ஆகியவர்கட்கு மட்டுமே பயன்படுகின்றது. இவை அற்றவர் வல்லாட்சியில் பெறும் வாய்ப்புக்கூட மற்ற ஆட்சிகளில் கிடையாது.

இவற்றை யெல்லாங் கண்ட டால்ஸ்டாய், காந்தி யடிகள் ஆகிய அரசியல் அற்றது வாழ்க்கை யீடுபாடு கொண்டிருந்த அருளாளர், 'கூடிய மட்டும் ஆளாத ஆட்சியே நல்லாட்சி' (That government is best which governs the least) என்று அரசியல் அதிர்வேட்டுப் போட்டனர். இவ்வழி கூக்குரலிடுபவரை 'இறையிலி' வாதிகள் (அராஜகவாதிகள்) என்று தனி முதலாளித்துவ, பொது வுடைமை சமதரும முதலாளித்துவ வாதிகள் குறை கூறுவ துண்டு. ஆனால் பிளேட்டோ கூறிய 'தகுதி' இதுவே என்பதை அவர்கள் மனம் கொள்வதில்லை.

உலக அரசியல் அறிஞர் பின்னணியின் இந்தச் சிக்கலை வள்ளுவர் எவ்வாறு விடுக்கிறார் என்று காண் போம்.

## 11. வள்ளுவர் வகுத்த அரசியல்

இயல்பாகத் தமிழரிடையே வளர்ந்த குடியாட்சி உலகெங்கும் பண்புடைய இனங்களில் இயல்பாக வளர்ந்த குடியாட்சி வகைகளில் ஒரு வகையே—ஆனால் அது அவற்றின் உயிர்க்கூறு, தாய்க்கூறு, முற்பட்ட 'தாய் வளர்ச்சி' ஆகும். உலகின் குடியாட்சி மரபுகள் அனைத் தின் இனமூலத்தை அதில் காணலாம்.

மேலையுலகின் கருத்துக்கள் தற்சிந்தனையிலும், அனுபவத்திலும் தோன்றியவை. அவற்றுக்குரிய தெளிவு அவற்றில் உண்டு. அவர்கள் அறிவு மரபு மேலையுலகில் தொடர்வது இத்தெளிவை மிகைபடுத்தியுள்ளது. ஆனால் மனித இனமூல வளர்ச்சியாகிய தமிழ்ப் பண்பின் தடத்தைப் பிளேட்டோவிடமும் தற்கால மேலையுலகப் புது மலர்ச்சிப் போக்கிலும் காணலாம். கீழையுலகில் தொல்பழம் பாரசிகரின் இனமுதல்வராகிய சரதுஷ்டிரர் முறையிலும், சீனரின் தொல்பழங்கால இனமுதல்வராகிய கன்பூஷியஸ், லயோட்சி முறைகளிலும் முப்பால் ஒரு பாலாகக் கொண்ட வள்ளுவர் மூலொருபால் முழுமைத் தடம் காணலாம். ஆனால் வள்ளுவர் முப்பால் வகை தொகை வகுப்பை அவர்களிடம் காண முடியாது.

சமஸ்கிருத வாணரின் அரசியல் கருத்துக்கள் இடத்தால் வள்ளுவருக்கு அணிமையாயிருந்தாலும், காலத்தாலும் மரபாலும் நெடுஞ்சேய்மையுடையவை. நிழலுருவான வள்ளுவர் கருத்துப் படிவங்கள் இடைக்கால மாசுபடிந்து தெளிவும் திட்டமும் இழந்து அம்மாசுடன் கலந்து உரு வேறுபட்டு இயல்கின்றன.

மனித இன மூலமாகிய தமிழ் மரபு மீது வள்ளுவர் கட்டமைத்த அரசியல் திட்டம் அவர் முழு வாழ்க்கைத் திட்டமாகிய முப்பால் வகுப்பில் ஓர் இன்றியமையா இடைக்கூறு ஆகும். அதில் உலக முழுமையின் அறிவுலகக் கருத்துக்களின் வேர் முதலைக் காணலாம்.

முதலாவது, குடியாட்சி மனித இனத்தில் குடி அல்லது குடும்பத்திலிருந்தே வந்தது; ஆனால் ஆரியர் தென்திசை வரும்போது அவர்களிடையே குடும்பமோ, குடும்பவாழ்வோ குடியிருப்புக்களோ இல்லை. நாடோடிக் குழுவான இனங்களே இருந்தன. குடியிருப்புக்கள் ஏற்பட்ட பின்னும் குடும்ப

அடிப்படையற்ற சமுதாயமே அமைந்தது. ஆரியர் தலையீடு நீங்கலாக, பண்புடைய உலகெங்கும் பொதுவாகவும் தமிழினத்தில் சிறப்பாகவும் இனம் குடியடிப்படையிலும்; குடியாட்சி இன அடிப்படையிலுமே அமைந்தன, ஆனால் மூத்த குடியாகிய தமிழினம் மூலமரபின் நேர் தொடர்புடையதாதலால், குடும்பத்தின் பண்பை விடாது சமுதாயத்தில், இனத்தில் பரப்பி, அகப்புறமரபிலும், குடியாட்சி என்ற பண்பின் பெயரிலும் பொருளிலும் அத்திறம் பேணிற்று.

தமிழர் குடியாட்சியின் முதல் சட்டம் இன்று மேலையுலகம் ஓரளவு கண்டுவருகிற சட்டமே. குடியாட்சி இனத் தளத்தில் மட்டுமே செயலாற்றவல்லது. தேசிய இனத்திற்குப் புறம்பாக அது செயலாற்றமாட்டாது.

இனத்தளத்திலும் குடியாட்சியின் வெற்றி இனத்தின் பண்பளவாகவும், பண்பு குடும்பப்பண்புத் தொடர்பும் செல்வாக்கும் நீடிக்கும் அளவாகவும் அமையும்.

இனம் என்பது குடும்பம்போல மரபொருமை, சரிசமக் கொடுக்கல் வாங்கல், கொள்ளல் ஏற்றல் தொடர்பு ஆகியவற்றையும் குடும்பம்போலவே போட்டி தன்னலம் கடந்து வலியவர் மெலியவர்க்கே சலுகைதரும் தியாகப் பண்பையும் உடைய நீடித்த பொதுப் பண்பில் பயின்ற குழுவுக்கு மட்டுமே அரசியல் முறையில் உரியதான பெயர் ஆகும்.

குடியாட்சியில் இன உறுப்பினர் ஆகுபவர் தனிமனிதராகிய ஆடவர் பெண்டிரல்லர். ஆடவரும் பெண்டிரும் இணை இணையாகச் சேர்ந்த குடும்பமே உறுப்பு ஆகும். மணமாகாதவர்க்கும் பிள்ளைகளுக்கும் மொழியுரிமை கிடையாது. வீட்டுக்கு ஒரு சீட்டு என்பதே பழமைவாய்ந்த இனமொழி யுரிமை முறை ஆகும்.

மணமாகாதவரும் விரும்பா மணத்தில் கட்டுண்டவரும் வேண்டா மணவாழ்வின் மூலம் வெறுப்பு வேதாந்தியானவரும் குடும்பக் காதலின் பண்பறியாதவருமே இன்று குடியாட்சியை மட்டுமன்றி, குடும்பம், கலை, இலக்கியம், இயல்நூல், வாணிகம், தொழில் ஆகிய எல்லாவற்றையும் ஆள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் நம் உலகு கெடுவதில் வியப்பில்லை, அது. இந்த அளவாவது உருப்பட்டிருப்பதுதான் வியப்பு—தமிழ்ப் பண்பு ஆரிய இடைக்கால அழிவுகளினாலும் இன்னும் முற்றிலும் சாகாமல் உலகு இன்னும் மாளாது வாழ்ந்திருப்பதன் மறை திறவு இதுவே ஆகும்.

இனமுதலான பழங்குடியாட்சியில் (தமிழ், கிரேக்க குடியாட்சிகளிலும், ஓரளவு பழஞ் செர்மானியர் குடியாட்சியிலும்) தேர்தல், மொழியுரிமை உண்டு. ஆனால் தேர்தல் இன்றைய செயற்குழு (Committee), சான்றோர் குழு (Jury) ஆகியவர்கள் வகையில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. பணியாளர்களை அமர்த்தும் வகையில் தேர்தல் பின்பற்றப்படாவிட்டாலும், ஆட்சி நெருக்கடியில் நீக்கல் மாற்றல், புதிது அமர்வித்தல் வகையில் அது கையாளப்பட்டது. ஆனால் பொதுமக்கள் வேறு. பொது அவை (House of Commons) வேறு என்ற பிரிவினையும், அதற்குரிய தேர்தல்முறைகளும் முன் காலங்களில் கிடையாது.

உச்சப்படியில் அமைச்சர் முதலாயினோர் மேலவையிலிருந்து அரசனால் பொறுக்கப்பட்டனர். ஆனால் ஊர், வட்ட, மாவட்டத் தளங்களில் தகுதியுடையவர் அனைவருமே முறை முறையாக ஆட்சியுரிமை செலுத்தினர். எல்லாருக்கும் உரிய ஆளும் உரிமையை, தகுதி பெற்றவராகக் கருதப்பட்டவர் எல்லாரும் எப்போதும் பெறலாம் —தம் முறை வரும்போது செயற்படுத்தவும் செய்யலாம்.

இது பெரும்பான்மை ஆட்சியின் தகாத் தளங்களைக் களைந்து சிறுபான்மையினருக்கும் மதிப்பளித்தது

தமிழர் 'நாடு', கிரேக்க உரோமர் 'நகர்-நாடு', பினீஷிய கார்தேஜீனியர் வணிக அரசுகள், வெனீஷியக் குடியாட்சி, ஜெனிவாக் குடியரசு ஆகியவற்றின் மூலமாக வந்த தற்காலக் குடியாட்சி மரபு வளர்ச்சிகளே ஆங்கில நாட்டு மேலை யுலகக் குடியாட்சி மரபுகள். ஆனால் இனமுதல் குடியாட்சி குடும்பத்தின் விரிவான இனக்குழு எல்லையில் நின்றது. பிற்கால முடியாட்சிகளும் பேரரசாட்சிகளும் தமிழகத்திலும் உலகிலும் அதன் பண்புகள் பல கெடுத்தன.

திருவள்ளுவர் குடியாட்சி மூவரசர் காலத்தையோ மூவரசர்க்கிடையே மறுகிய வேளிர் காலத்தையோ குறிப்பதாகத் தோற்றவில்லை. தொல்காப்பியத்தில் ஊன்றி விட்ட மரபாகவே காணப்படும் தமிழக மூவரச மரபின் தடத்தையே அதில் காணவில்லை. ஆகவே குடியரசுநிலை அதாவது நகர்—நாட்டு நிலை கடந்து அரசுகள் வளராத தொல்காப்பியத்துக்கு முற்பட்ட இனமுதலரசுக் காலத்துக்கே அவர் உரியவராதல் வேண்டும். கி. மு. 1000-ல் இத்தகைய அரசுகள் 'குலபதி'கள் என்ற பெயரால் ஆரியரிடை நிலவின. ஆனால் அதேகால திராவிட நடுவுலக அரசுகள் அந்நிலை கடந்து நெடுந்தொலை வளர்ந்து விட்டன. திருவள்ளுவர் கி. மு. 1000-க்குக் குறைந்த அளவு இரண்டாயிர மூவாயிர ஆண்டு முற்பட்டவராவர் என்றே வருங்கால ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தக் கூடும்.

வள்ளுவர் அரசியல் கோட்பாடு இந்த இனமுதல் அரசையே அடிப்படையாகக் கொண்டது.

வள்ளுவர் குடியாட்சி மரபின் தனிச் சிறப்புகளுள் முதலாவதாகக் குறிப்பிடத்தக்கது. ஆட்சி யுரிமை பொறுப்புக்கள், கடமைகள் பற்றியதே.

பெயரளவில் அரசன் கடவுள் போன்றவன்; எல்லா உரிமைகளும் அவனுக்குரியனவே. ஆனால் உண்மையில் அரசில் அவன் ஓர் அங்கம். பொறுப்புக்களும் கடமைகளும் மட்டுமே அவனுக்கு உண்டு. ஆட்சியின் கடைசிப்பொறுப்பு அவனதே. எனினும் அரசுக்குழுவில் அவன் சார்பில் அமைச்சனே செயற்படுத்துகிறான். அரசனுக்கும் அமைச்சனுக்கும் உள்ள நிலை வேறுபாடு ஒன்றே. அரசன் ஆட் பொறுப்பு உடையவன். அது மாறாப் பொறுப்பு. ஆனால், அமைச்சன் பதவிப் பொறுப்பு மட்டும் உடையவன். அஞ்சி நடத்தலும் இடித்துரைக்கும் உரிமையும் அரசனை இயக்கும் உரிமையும் பதவிக் காலத்தில் இதனால் அவனுக் குக் கிடைக்கிறது. அரசை நல்லரசாக்குபவன் அவனே. ஆனால் அரசன் மேற் சென்றால் அவன் விலகித் தனி மனிதனாய் விட முடியும். அரசன் அரசனாகவே இருப் பான்.

செயலாட்சியுரிமை அமைச்சர்களுக்கு உண்டு. ஆனால் செயலாட்சித் தலைவன் அரசனே. இங்கும் தலைமை என் பது ஆளுரிமை, இறுதிப் பொறுப்பு. செயலுரிமை என்பது பதவிப் பொறுப்பு.

இன்றைய பிரிட்டிஷ் குடியாட்சியின் அமைச்சவைப் பொறுப்பு இதில் அடங்கியுள்ளது. 'அரசியல்கள் போகலாம், வரலாம்; ஆனால் அரசு நிலைத்தது' (Governments may come and governments may go but Government continues), அரசியல்கள் பிழைக்கக் கூடும், ஆனால் அரசு பிழை செய்யாது (Goverment may go wrong, but Goverment is always in the right) என்ற பிரிட்டிஷ் குடியாட்சித் தத்துவங்களின் மூல முதல்கூறுகள் இந்த வள்ளுவர் குடியாட்சித் தத்துவங்களின் நிழல்களே.

கிரேக்க அறிஞர் பிளேட்டோ கருத்தின் முன்னோடி மரபை நாம் வள்ளுவர் அரசியல் முறையிலே காண்கி

றும். அதே சமயம் பிளேட்டோவுக்கு ஏற்பட்ட சிக்கல்கள், முட்டுப்பாடுகள், புதிர்கள் வள்ளுவர் மரபில் இயல்பாகத் தீர்ந்து விடுகின்றன.

ஆளும் திறமுடையவன், ஆளத் தெரிந்தவன், ஆனால் ஆள விரும்பாதவன்—இத்தகைய அருங்கலவைக் கூட்டுத் தகுதியையே பிளேட்டோ ஆட்சியாளர் வகையில் தேடினர். ஆனால் இத்தகையவர் இயல்பாக அமைய முடியுமா? அமையின் அவரைக் கண்டுபிடிப்பது யார்? கண்டுபிடிப்பதெப்படி? ஆட்சியாளராக அச்சுறுத்தி வலுக்கட்டாயப்படுத்தி ஆட்சியாளராக்குவது யார்?

பிளேட்டோ நாடிய தகுதி உடையவனை எளிதாக, இயல்பாக உருவாக்கி, இத்தனை கேள்விகளுக்கும் எளிய விடை கண்டுள்ளவர் வள்ளுவர்.

வள்ளுவர் அரசு முறையின்படி, அரசன் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் ஆளும் உரிமையை அவன் பயன்படுத்த முடியாது. ஏனெனில் பெயரளவிலன்றி உண்மையில் அவனுக்கு உரிமை எதுவும் கிடையாது. அதே சமயத்தில் திறமையில்லாதவனாக அவன் இருக்க முடியாது. பொறுப்பும் கடமையும் அவனுடையனவே. ஆளவிரும்பாதவன் என்ற பிளேட்டோ தகுதியை ஆட்சியுரிமையைப் பயன்படுத்த முடியாதவன் என்று மாற்றி வள்ளுவர் அதே தகுதியை, அருங் கூட்டுக் கலவையை எளிதாக்கியுள்ளார்.

இன்றைய பிரிட்டிஷ் ஆட்சியில் மன்னர் நிலையையே இது பெரிதும் ஒத்தது. ஆனால் பிரிட்டிஷ் மன்னருக்குப் பொறுப்பு இல்லை. வள்ளுவ மன்னருக்குப் பொறுப்பு உண்டு. பிரிட்டிஷ் மன்னருக்குத் திறமை தேவையில்லை, வள்ளுவ மன்னனுக்குத் திறமை மிகமிகத் தேவை. ஆனால் பிரிட்டிஷ் மன்னர் இன முதல்வரல்லரானாலும்

அவ்வாறு மதிக்கப்படுகிறார். வள்ளுவ மன்னன், இன முதல்வன்.

உரிமையில்லாத அரசன் எவ்வாறு பொறுப்பு வகிக்க முடியும்?

உரிமையில்லாமல் பொறுப்பும் கடமையும் மட்டுமே உடைய அரசனைப் போல, அங்கிலக் கெதிராக, கடமையும் பொறுப்பும் இல்லாமல், உரிமை மட்டும் உடையவர் இனத்தில் உண்டு. அவர்களே 'பெரியார்கள்.' அவர்களைத் துணைக் கொண்டுதான் அரசன் ஆளவேண்டும்—'பெரியாரைத் துணைக் கோடல்' அதிகாரம் இதை வற்புறுத்துகிறது. அவரைத் துணைக்கொள்ளாவிட்டால், அல்லது வேறு வகையாளர்களைத் துணைக் கொண்டால், அவன் வீழ்வான்—'சிற்றினம் சேராமை' என்ற அதிகாரம் இந்த எச்சரிக்கை தருகிறது.

யார் இந்தப் பெரியார்? எங்கிருந்து தோற்றியவர்? எப்படி அரசன் அவர்களைக் கண்டுபிடிப்பது? அரசனை அவர்கள் எப்படி இயக்குவது? உரிமை பயன்படுத்துவது?

பெரியார் அரசனுக்கு அறிவுரை கூறும் உரிமை பெற்றவர். ஆனால் பொறுப்பும் கடமையும் அற்றவர். அரசன் அவர்கள் அறிவுரையை ஏற்றுப் பயன்படுத்தலாம், ஏற்காதிருக்கலாம். ஆனால் அவர்களிலிருந்தே அவன் அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கிறான். அமைச்சர்களாகச் செயலாற்றும் பெரியார் பொறுப்புடையவர். இடித்தும் அறிவுரை கூறுபவர், அறிவுரையை அரசன் ஏற்றாக வேண்டும், அல்லது அமைச்சர் பொறுப்பிலிருந்து பெரியாரை விடுவித்துத் தானே பொறுப்பேற்று, வேறு அமைச்சரிடம் பொறுப்பில் பங்கு ஒப்படைக்க வேண்டும். பெரியாரும் பெரியார் குழுவும் உரிமையைப் பயன்படுத்தும் வகையும் அரசனை இயக்கும் வகையும் இதுவே.

மன்னன் அவ்வப்போது மக்கள் பேரவையின் கருத்தறிந்தும், அடிக்கடி பெரியார் அறிவுரை கேட்டும், எப்போதும் அமைச்சர் அறிவுரை கேட்டுமே ஆள்கிறான். உரிமை இவ்வாறு மக்களிடமே தங்கியுள்ளது. ஆனால் அதன் பொறுப்பு அவர்களுக்குக் கிடையாது. அரசனுக்கே உரியது. ஆனால் உரிமை அவர்களிடமிருந்து பெரியார், அமைச்சர் மூலம் அரசனுக்குக் கிட்டுகிறது. பொறுப்பில் அமைச்சர் மட்டும் பங்கேற்க, அரசன் முழுப் பொறுப்புடன் செயலாற்றுகிறான்.

பெரியார் குழுவிலிருந்து அமைச்சரைப் பொறுக்கியெடுப்பது போலவே, சான்றோர் குழுவிலிருந்து மன்னன் பெரியாரைத் தேர்ந்தெடுக்கிறான். அரசன் பொறுப்பில் இவ்வாறு அமைச்சர், பெரியார், சான்றோர் பங்கு கொள்கின்றனர். ஆனால் சான்றோர் அரசனால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. பெரியார் வரையுள்ள சமுதாயம் மேற்படிகளை நாம் இன்றைய பணிச்சார்புடைய உறுப்பினர் (Official Representatives) என்று கூறலாம். ஆனால் சான்றோர் மக்கள் மதிப்புக் குரியவர்கள். அரசனைச் சாராதவர்கள். அதே சமயம் பெரியார் குழுமூலம் அரசன்மீது செல்வாக்குடையவர்கள். அவர்கள் நிலை இன்றைய பணிச்சார்பற்ற உறுப்பினர் (Official Representatives) நிலை என்னலாம். முறை மன்றங்களில் இத்தகைய நடுநிலையாளர்களை-ஆட்சியாளர்க்கும் மக்களுக்கும் இடை நின்று சமநிலை பேணுபவர்களை—இன்றும் நாம் சான்றாளர்கள் (Jury) என்று கூறுகிறோம்.

> 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து,
> கோடாமை சான்றோர்க் கணி.' [ஒருபால்

சான்றோர் பண்பே சால்பு. அதன் செயல்திறமே சான்றாண்மை.

**'ஊழி பெயரினும் தாம் பெயரார், சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.'**

பெரியார் சான்றுளர்களி லிருந்தே தேர்ந்தெடுக்கப் படுபவர். தேர்ந்தெடுப்பது அரசனுனாலும், சான்றோர் களின் மதிப்பும் கருத்துரையும் இதில் பெரும் பங்குடை யது. ஆகவே பெரியார் யார், எங்கிருந்து தோற்றியவர், அரசன் எப்படி அவர்களைக் கண்டுபிடிப்பது என்ற கேள்விகளுக்கு விடை எளிது. அவர்கள் சான்றோர்கள். சான்றோர்களிடையிலிருந்து சான்றோர்கள் நடுநிலை கோடா மதிப்புரையினுதவி கொண்டே அவன் அவர்களைத் தேர்ந் தெடுக்கிறான்.

சான்றோர்கள் யார், எப்படி கண்டுபிடிப்பது என்ற கேள்வி எழுகிறது.

இனத்தைப் பண்புடையவர்களாக்கிய இனமுதல்வர் கள் பண்பாளர்கள். அவர்கள் பண்பின் தாய்மார்கள். குழந்தைகள் தாயறிவது போல, பண்புடைய இனம் அவர் களை அறிகிறது. உரிமையில்லாமல் முழுப்பொறுப்பும் கடமையும் ஏற்று மக்களை ஆளஉழைப்பவர்கள் அவர்கள். பிளேட்டோ 'ஆள விரும்பாத ஆட்சித் திறமையாளர்கள்' இவர்களே. அவர்களுக்கு உரிமை தேவையில்லை. ஆட்சிக் கருவிகள், துணைக்கலங்கள் தேவையில்லை, அன்பை இயக்கி, தம் துறவு அல்லது தியாகத்தை இயக்கி மக்களை இயல்பாக ஆள்பவர்கள் அவர்கள். அவர்கள் தாம் சான்றுளர் ஆவதைக் கூட விரும்புவதில்லை. ஏனெ னில் அவர்கள் வீறும் அறிவும் நடுநிலையும் உடையவர்கள், மக்களிடையே மதிப்பும் அன்பும் செல்வாக்கும் ஒருங்கே நாடுபவர்கள். பண்பாளர் இவையில்லாமலே காதலர் போல் மக்களை இயக்குபவர்கள். ஆனால் சான்றுளர், தங்களால் கூடப் பின்பற்றுதற்குரியவர்கள் என்று அவர்

கள் சான்றோர்களைத் தாம் மதித்துப் பூசித்து, அவர்களைத் தங்கள் சமுதாயத் தலைவர்கள் அல்லது செயல்தலைவர்கள் ஆக்குகிறார்கள்.

பண்புடையார் யார் என்ற கேள்வி உண்மையில் எழத் தேவையில்லை, காந்தியடிகள் போன்றார் மொழியுரிமையும் சட்டமும் உரிமைளும் இல்லாமலே, எவராலும் 'மகாத்மா' பட்டம் தரப்படாமலே, மக்களால் 'மகாத்மா' ஆக, தெய்வமாக மதிக்கப்பட்டவர்கள். கால் வெள்ளி ஆண்டுவரி செலுத்தாமலே, மாநிலப் பேரவையின் (All India National Congress) தலைமையை ஓர் ஆண்டுக்குமேல் ஏற்காமலே முப்பதாண்டு கட்சி கடந்த,நாடுகடந்த மக்கள் முடிசூடா மன்னராக இருந்தவர். மக்கள் அவர்களைத்தேர்ந் தெடுக்க, அவர்கள் மக்களிடையே பரப்பிய, அல்லது மக்களிடை இனஅடிப்படையாக நிலவுகிற பண்பே போதியது ஆகும்.

ஆனால் பண்டைத் தமிழர் இத்தேர்வைக்கூட முற்றிலும் மக்களிடம் விட்டுவிடவில்லை. ஏனென்றால் அரசனை விட இப்பண்பாளர்களே இனத்தின் உயிர்போன்றவர்கள். அவர்கள் இயல்பே ஒருபுறம் சமுதாயம், ஒருபுறம் அரசன், மற்றொருபுறம் இனத்தின் வருங்கால இயல்பாகிறது. மக்கள் மட்டுமே அவர்களைத் தேர்ந்தெடுப்பதானால், அது இனத் தேர்வு ஆகாது. அந்தத் தலை முறைக்குரிய தனிக் கோளாறுகள் தேர்வின் இன முக்கியத்துவத்துக்கு ஊறு தேடிவிடக்கூடும். ஆகவே பண்புடையவர், சான்றோர், பெரியார் மரபு காத்து, அம்மரபில் பெருமை கொண்ட குடிமையாகிய, அரணையும், அதன் மதிப்பு கெடாமல் காத்த மானம் என்ற அகழையும், அவற்றுக்கும் இனத்துக்கும் உரிய எல்லை காப்பாகக் 'கயமை' என்ற காட்டரண் வேலியும் வகுத்தனர்.

ஆட்சி மரபு பொதுமக்களைச் சுரண்டும்மரபாகவளரா மலிருக்கத் தமிழர் அமைத்த சமுதாய, சமய, அரசியல் கோட்டைகள் இவை. பிளேட்டோ வள்ளுவர் மரபின் ஒளி முழுவதும் கண்டிருந்தால், தெய்வச் செயலைக் கருதி யின்றிருக்கமாட்டார். அத்துடன் பிளேட்டோ கருதியபடி, ஒரு தனி வீரமரபு, உழைப்பாளர் மரபு, ஆட்சி மரபு ஆகியவற்றை வள்ளுவர் நாடவில்லை. உழையா மரபை வெறுத்தவர், அவர். ஆளப்படுபவர் ஆள்பவர் வேறுபாடும் வெறுத்தவர், ஆகவே அவருக்கு இன ஆட்சி இனமலர்ச்சி யில் வந்த மரபின் ஆட்சியே யாகும்.

## 12. ஊழும் பண்பும்

முப்பாலில் நடுவிடம் வகிப்பது பொருட்பால்; அதில் உயிர்மையாயமாவது நூறும் அதிகாரமாகிய பண்புடை மையே யாகும். ஏனெனில் அறத்துக்கு அன்பு எப்படி அடிப்படையோ, இன்பத்துக்குக் காதல் எப்படி அடிப் படையோ அப்படியே பொருட்பாலின் அடிப்படை பண்பு ஆகும்.

முப்பாலேட்டின் பாயிரத்தில் முதற்பால் இயற்கை முதல்வனும் இனமுதல்வனும் ஆன இறைவனுக்கும் இயற் கை, இனம் ஆகியவற்றுக்கும் உள்ள மூலதள,குறிக்கோள் தொடர்பு குறிப்பது. பாயிரத்தின் மற்ற மூன்று அதி காரங்கள் இயற்கை முதல், இனமுதல் ஆன இறைவனுக் கும் இயற்கைக்கும் இனத்துக்கும் சமுதாயத்துக்கும் உள்ள தொடர்புகள் குறிப்பன.

முப்பால் ஏட்டின் நூற்பகுதியே இனமுழு வாழ்வு குறித்தது. இனமுழு வாழ்வை நாம் மூன்று கோணங்களி லிருந்து காணலாம். ஒன்று தனி மனிதன் வாழ்வு, இரண் டாவது அவன் இடம் பெறும் சமுதாய வாழ்வு, மூன்றுவது

இரண்டுக்கும் அடிப்படையான இன வாழ்வு. இவற்றுள் தமிழர்—சிறப்பாக வள்ளுவர்—தனி வாழ்வைக் குடும்ப வாழ்வாகவே கணித்தார். ஏனெனில் குடும்ப வாழ்வன்றித் தனி மனிதனுக்கு வேறு வாழ்வு கிடையாது.

இயற்கை, இன முதல்வனாகிய இறைவனே ஊழ் வடிவினன், ஊழ் முதல்வனும் ஆகும். இனமுதலிலிருந்து இயற்கை, சமுதாயம், இனம் ஆகிய யாவும் ஊடுருவி இன வாழ்வின் முடிந்த குறிக்கோள் அளாவி நிற்கும் ஆற்றல் ஊழ். திருக்குறளிலேயே இதனைப் பால் என்றும், தெய்வம் என்றும் வள்ளுவர் குறித்துள்ளார். வளர்ச்சி தளர்ச்சி மாறுபாடுகள் யாவிலும் அடிப்படையாய் இயங்கும் மாறா அமைதி என்று இதனைக் குறிக்கலாம்.

ஊழ் மாறா முதல் ஆற்றலானாலும். அது ஊடுருவிச் செல்லும் தளங்களின் சூழலுக்கியைய, அது புதிய வகைச் செயலாற்றலாக வளர்கிறது. ஊழ் முதல்வனாகிய இறைவனின் தளத்தில் அதுவே இறையாற்றல். இயற்கைத் தளத்தில் அது இயற்கையமைதி அல்லது அதன் கூறுகளாக (Laws of Nature) இயங்குகிறது. ஆற்றல் மிக்க் ஆனால் மாறுபாடும் உயிர் வளர்ச்சியுமற்ற இவ்வூழ்க் கூறே 'தெய்வம், பால்' எனப்பட்டது. இது மீற இயலாதது, மீறப்படாதது. மீற முயல்பவர்களுக்கு மீள முயலும் கணத்திலேயே தோல்வியும் அழிவும் தருவது.

சமுதாயத் தளத்தில் அதுவே சமுதாய மரபுகள், (Laws of Society), சமய மரபுகள் (Laws of Rel gion or Church), அரசியல் சட்டங்கள் (Laws of State) என்ற வடிவுகளாகவும் இவை சார்ந்த அமைதிகள், அமைப்புகளாகவும் இயங்குகிறது. இவ்வமைதிகள் இயற்கை யமைதிக் கிசைய அமையும் துணையமைதிகள். இவை மீற இயலாதவையல்ல மீறப்படாதவையுமல்ல. ஆனால் மீறுதல் பலபடி இன்னல்

கள் தரும். அத்துடன் இயற்கையமைதி சார்ந்த அள விலேயே அவை நீடிப்பவை.

சமுதாய அமைதிகள் பின்பற்றப்படின் குடிமை யையும் மீறப்படின் மதிப்புக் கேட்டையும்; சமய அமை திகள் பின்பிற்றப்படின் பூசனையையும் மீறப்படின் புறக் கணிப்பையும்; அரசியல் சட்டங்கள் பின்பற்றப்படின் புறக்கணிப்பையும் மீறப்படின் தண்டனையையும் தரத் தக்கனவாக, படிப்படியாக ஊழ் ஆற்றலில் குறைவன. அத்துடன் அவை இயற்கை யாற்றலைப்பின்பற்றும் அளவி லேயே அவ்வமைதிகளுக்கே ஆற்றல் உண்டு. தவிர அவை இயற்கையைப் பின்பற்றும் அளவிலே சமுதாயம் வளரும் இனம் வளரும், மீறும் அளவிலே சமுதாயம் தாழும், இனம் அழிவு நோக்கிச் செல்லும். தமிழர் வற்புறுத்திய, திருவள்ளுவர் வகுத்த தமிழ்ப் பண்பின் தனி அருமை இதிலேயே அடங்கியுள்ளது. அது தமிழ்ச் சமுதாயத்தை மட்டுமன்று மனித இனத்தையே வாழ்விப்பது. வளர்ப்பது.

இத் தமிழ் பண்பு இன உயிர்ப் பண்பு, மனித இன மளாவிய பண்பு.

இன வாழ்வில் ஊழ் இந்த இனப்பண்பாய் இயங்கு கிறது.

இயற்கைப் பண்பிலிருந்து இனப்பண்பாக வளரும் இந்த வளர்ச்சியில் சமுதாயத்தில் இயங்கும் சமுதாய, தனி மனிதப்பண்பே திருவள்ளுவரால் பண்புடைமை அதிகாரத்தில் விரித்துரைக்கப்பட்டது.

இந்த ஊழமைதிகளில் தொடக்கமும் இயற்கை யமைதி முடிவும் இனப் பண்பு மட்டுமே மாறு நீடித்த அமைதி உடையவை. ஆனுல் முதலதன் ஆற்றல் பெரிது. எனினும் அது உயிராற்ற லன்று. பின்னது ஆற்றல்

குறைந்தது அது எனினும் உயிராற்றல், வளர்ச்சி யுடையது. முதல் ஆற்றலை அடிப்படையாகக் கொண்ட அளவிலும் இறுதியாற்றலுடன் இணைந்த அளவிலுமே மற்ற அமைதி ஆற்றல்கள் வலிமையும் வளமும் பெறுகின் றன. அப்போது அவை திருவள்ளுவரால் ஆகூழ் எனப்படு கின்றன. அவை இரண்டிலும் எதனுடனாவது முரண்பட் டால், அல்லது தொடர்பற்றால். அந்த அளவில் அவற் றுக்கு வலிமையும் வளமும் நீடித்த வாழ்வும் கிடையாது வள்ளுவரால் இவையே இழவூழ் எனப்படுகின்றன.

இவ் வேறுபாட்டை அறத்துப்பாலில் ஊழ்மேல் வைத்து வள்ளுவர் கூறினர். ஆனால் இவ் வேறுபாடு கரு தியே, பண்பைப் பொருட்பாலின் மையமாக்கினர். ஏனெ னில் அறத்துப்பால் இறுதியில் குறிப்பிட்ட இரண்டு ஊழ் களில், சமுதாய வாழ்வு ஆகூழ் அடிப்படையில் அமைந்தா லன்றி, சமுதாய அமைதிகள் நின்று நிலவமாட்டா, வளம் பெறமாட்டா.

அறம் இயற்கை யமைதியை அடிப்படையாகக் கொண்ட சமுதாய நலம். இதனைக் குறிக்கொண்ட தனி மனிதன் வாழ்வே ஒழுக்கம். இனப்பண்பாகிய காதல் தரும் பரிசு இது. அதனடிப்படையில் தனி மனிதன் குடும்ப வாழ்வு மூலம் சமுதாயத்துக்கு ஆற்றவேண்டும் கடமை இது. சமுதாய நோக்கிய தனிமனிதன் அல்லது குடும்ப வாழ்வுக் கூறே அறத்துப்பால் கூறும் செய்தி. இதன் அடிப்படை உணர்வு அன்பு.

சமுதாயம் தனிமனிதனுக்கு ஆற்றும் கடமைகள் கூறுவது பொருட்பால், சமுதாய வாழ்வு. இதன் அடிப் படை உணர்வு பண்பு. அதுவே சமுதாய மரபும் சமய மரபும் அரசியல் சட்ட மரபும் இவைசார்ந்த அமைப்பு மரபுகளும் சேர்ந்து தனிமனிதன் வாழ்வின் வளங்கருதி உண்டுபண்ணும் ஆகூழ்ச் சூழல்களின் தொகுதி.

இன்பம் இனவாழ்வு. இதன் அடிப்படை உணர்வு காதல். இதுவே இனப்பண்பு. அறவுணர்வாகிய அன்பையும்,அன்பறமாகிய இல்லறத்தையும், அதன் முழு விரிவாகிய அறத்தையும் வளர்ப்பது இதுவே.

பணம், சொல்குறித்த கருத்து, செய்தி, உருப்படி, பிழம்பு, மதிப்பு ஆகிய பல்வேறு கருத்துக்களைக் குறிக்கும் சொல்லாகப் பொருள் விளங்குகிறது. பொருட்பால் என்ற விடத்து, பொருளின் குறிப்பு பணம் என்று எண்ணுபவர் உண்டு. சமஸ்கிருதத்தில் அதை அர்த்த சாஸ்திரம் என்று கருதியவர்களின் போக்கு இதுவே. அது அரசியலுடன் தொடங்குவது கண்டு அதை நீதி (அரசியல்) நூல் என்றும், அரசியல்முறைகள், மரபுகள் திறங்கள் கூறுவது கண்டு அதை அறிவுரை (நல்லுரைக் கோவையாகவும்) என்றும் கருதியவர்கள் உண்டு. ஆனால்கல்வி, பண்புடைமை, வரைவின்மகளிர் முதலியன அரசியற்கூறாகக் கூறப் படினும் சமுதாயச் சார்பானவை. எனவே அரசியல், சமுதாய இயல் ஆகிய இரண்டையுமே வள்ளுவர் பொருட் பாலில் கூறினாராதல் வேண்டும். 'குடியியல்' சமுதாய இயலே.

சமுதாய வாழ்வின் எல்லாத் துறைகளிலும் அடிப் படைத்திறம் பண்பு. அது இயற்கைப்பண்பு,உயிர்ப்பண்பு, பேரினப்பண்பு, மனித இனப்பண்பு ஆகிய அத்தனை யையும் நிலமாகவும் வேராகவும் உரமாகவும் கொண்டது. சமுதாய வாழ்வின் புத்தனுபவங்கள் மூலம் அது தலை முறை தோறும் தனிமனிதரையும் சமுதாயத்தையும் இன நல நோக்கி உயர்த்திச் செல்வது ஆகும். சமுதாயத்தில் பண்பென்றும் தனிமனிதனிடத்தில் பண்புடைமை என்றும் நயத்தக்க நாகரிகம் என்றும் திருவள்ளுவர் குறித்தது இதனையே.

செயல், முயற்சி, உணர்ச்சி, அறிவு, உணர்வு ஆகியவை கடந்தது. பண்பு. ஏனெனில் இந்நான்கும் இனத் திறங்களிலும் சமுதாயத் தளத்திலும் தனிமனிதத் தளத்திலுமே பெரிதும் வளர்வன. ஆனால் பண்பு தனிமனிதன் வளர்ச்சியைச் சமுதாயத்திலும், சமுதாய வளர்ச்சியை இனத்திலும் கொண்டு இயைத்துப் படிப்படியாக இனத்திலேயே வளர்வது. அதற்குச் செயல் முயற்சி உணவு. உணர்ச்சி உணவு ஏற்றுச் செரிக்கவைக்கும் பசி. அறிவு செரிமானமான உணவுச் சாரம். உணர்வு குருதியின் உயிரணுக்கள். இறுதியில் அது பண்பாகிய உயிரோட்டமாகி, சூழல்மாற்றும் உயிர்ப்பாகி, உடல் தாதுக்கள் ஏழுபோன்ற இனத் தலைமுறைகள் ஏழையும் வளர்த்து இனம் பேணுகிறது.

'தொக்கு உதிரத்தோடு ஊன்மூளை நிணம் என்பு
சுக்கிலம் தாதுக்கள் ஏழு.'

(ஔவைக் குறள்)

## 13. ஊழும் உலக சமயங்களும்

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்'.

(குறள். 620: ஆள்வினை உடைமை)

'ஊழிற் பெருவலி யாஉள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.'

(குறள். 380: ஊழ்)

நம் காலத்தவர் வள்ளுவர் உள்ளத்தைத் தெள்ளிதிற் காண உதவுவன பொருள் முரண்பாடுடையன போலத் தோன்றும் குறட்பாக்களே. அவர் சொல்லாட்சி, கருத்தாட்சிகளை இவை சுட்டுகின்றன. ஊழ் பற்றிய மேற்கண்ட இரு குறட்பாக்கள் இத்தகையன.

ஆள்வினையுடைமை அதிகாரத்தின் குறட்பா, ஓயாது உழைக்கும் இயல்புடைய உரவோர் ஊழின் ஆற்றலைக் கூட வேறு திசையில் ஒதுக்கி வைத்துவிடுவர் என்று முயற்சியின் தன்மை சிறப்பிக்கின்றது. ஆனால் ஊழ் அதிகாரத்துக் குறட்பா எது ஊழுக்கு முந்தி வந்தாலும், ஊழே அவற்றைத் தாண்டி முன்சென்று நடக்கும் என்று முயற்சி முதலிய எதனையும் விட ஊழையே சிறப்பிக்கிறது.

இரண்டும் ஒவ்வுவது எவ்வாறு?

இல்லறம், துறவறம் ஆகிய இரண்டும் சிறப்பித்தது மற்றொரு முரண்பாடு. வள்ளுவர் அவை கருத்தில் ஒரே பொருளின் பொது, சிறப்பெல்லை என்ற விடையும் விளக்க ஒளியும் கண்டோம். அதுபோல இங்கே ஊழை முயற்சி வெல்லும் என்ற இடத்து, முயற்சி ஊழிலே ஆகூழ் உண்டுபண்ணி ஊழின் திசை மாற்றும் என்றும், ஊழே முந்துறும் என்பதற்கு, ஆகூழும் ஊழே, ஊழின் கால இட எல்லை குறைபட்ட உருவேயாதலால், ஆகூழ் வெற்றியும் ஊழின் வெற்றியே, இறுதி வெற்றியும் ஊழின் வெற்றியே என்றும் பொருள் கூறலாம்.

ஊழை இன்று விதி என்றும் கர்மம் (வினைப்பயன்) என்றும் கூறும் புத்த, சமண, சைவ, வைணவ சமய ஏடுகள் உண்டு. ஆனால் இவை மூன்றும் ஒன்றல்ல.

தமிழ்ச் சொல்லையும் சமஸ்கிருதச் சொற்களையும் உடனிணைத்து வழங்குவதால் ஏற்படும் குழப்பங்களுள் இது ஒன்று. ஏனெனில் ஊழ் என்பதற்குரிய சரியான சமஸ்கிருதச் சொல் கிடையாது. 'நியதி' என்று அதை ஒருவாறு மொழிபெயர்க்கலாம். ஆனால் ஊழ் என்பதை விதி என்று சமஸ்கிருதமாகவும், விதிக்குத் தனித்தமிழ் ஊழ் என்றும் பலர்—தனித்தமிழாளர் உட்படத்—தவருகக் கொண்டு

குழப்பம் விளைவிக்கின்றனர். ஆனால் இக்குழப்பத்தினும் புரளி செய்வது விதியும் கர்மமும் ஒன்று என்று கூறுவதே. விதி, கர்மம் ஆகிய சமஸ்கிருதச் சொற்கள் அல்லது சமஸ் கிருத வழக்குச் சொற்களுக்குத் தமிழ் ஆகூழ், வினை என்பனவே.

சமஸ்கிருத வாணர் கர்மம் என்ற சொல்லின் கருத்துப் படிவத்தை வினை என்று கொள்ளாமல், வினைப் பயன் என்றும் கொண்டனர். அதுமட்டுமோ? நாளடைவில் வினை என்ற பொருளையே மறந்து, மறக்கடித்து, அதை முற்றிலும் மறுக்கும் அளவுக்கு 'வினைப்பயனை'யே நிலை யான பொருளாக்கிவிட்டனர். இதன் மூலம் சமய அறிவுத்துறையில் சமஸ்கிருதவாணர் விளைத்த குழப்பம் சிறிதன்று. ஏனெனில் முதலில் வினையை (அதாவது பின் வினையை) ஊக்குவது முன் வினைப்பயன் என்றுகொண்டு நாளடைவில் வினைப்பயனே வினைக்கு முழுமுதற் காரணம் என்று கொண்டனர். இது எவ்வளவு தவறான தருக்க வாதம் என்பதனைக் கூட இடைக்கால, பிற்காலச் சமய வாணர் நெடுநாளாகக் கவனிக்கவில்லை. வினைப்பயனே வினைக்குக் காரணமானால் வினை பொருளற்றதாகி, வினைப் பயனும் பொருளற்றதாகிவிடுகிறது. அத்துடன் முதல் வினை காரணமற்றதென்றும் இறுதிவினை பயனற்றதென் றும் கொள்ள வேண்டியதாகிறது.

இக்குழப்பங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்பதை உலக சமயங்களின் ஒப்பீடு காட்டுகிறது.

ஊழுக்குத் தெய்வம், பால் என்ற மறு பெயர்களை முப்பாலேடு வழங்குகிறது. தெய்வம் உண்மையில் ஊழின் இயற்கையாற்றலே. இயற்கையாற்றல் கடவுளாற்றலின் கூறேயாதலால், அது சிறு தெய்வங்களின் பெயராகவும் சில சமயம் முழுமுதல் தெய்வமான கடவுளின் பெயராக

வும் வழங்குவதுண்டு, ஆனால் சமஸ்கிருதத்தில் தெய்வம் (தைவம்) என்ற சொல்லுக்கு ஊழ் அல்லது ஊழின் செயல் (தற்செயல் நிகழ்வு) என்ற ஒரு பொருளையே இன்றளவும் நூல் வழக்கிலும் அகர வரிசைகளிலும் கூடக் காணலாம். கடவுளுக்குரிய, தேவர்களுக்குரிய என்ற துணைப்பொருளும் உண்டு. தமிழிலோ ஊழ் என்ற பொருள் மரபு கிட்டத்தட்ட வழக்கிலிறந்து விட்டது, இயற்கையாற்றல்களின் தெய்விக வடிவங்களாகிய சிறுதெய்வங்கள், கடவுளாற்றல் என்ற பொருள்களே குறிக்கின்றன.

ஊழும் ஊழின் கூறுகளும் முற்றிலும் கடவுள். கடவுளாற்றலின் கூறுகளே. ஊழுக்குரிய இவ்விருபொருள்களும் (ஊழ், கடவுள் அல்லது கடவுளாற்றல் ஆகியவை) ஆகூழ் என்னும் பொருளே உடைய 'விதி' என்ற சமஸ்கிருதச் சொல்லில் கூட ஓரளவு நிழல் படிவித்துள்ளன. ஏனெனில் அது பின்னாளில் ஊழையும், ஊழ் வகுத்த புராணகாலத் தெய்வமான நான்முகனையும் ஒருங்கே குறிக்கும்.

மேலை மொழிகளில்கூட ஊழ் என்ற கருத்துப்படிவம் குறித்த சொற்கள் கடவுளையும் குறிக்கின்றன-(ஆங்கிலம்: Providence-ஊழ், கடவுள்.)

கடவுள் இருவினையற்றவர் என்பதை முப்பால் வலியுறுத்துகிறது.

'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்.'

'வேண்டுதல் வேண்டாமை இலான்.'

முப்பால் வழியிலே எல்லாச் சமயங்களும் கடவுளின் வினைசேரா உயர்வை ஏற்று வலியுறுத்துகின்றன. கடவுளின் ஆற்றல்வடிவு என்ற முறையில் ஊழும் வினை சாராத

ஒன்றேயாகும். இது யாரும் எளிதில் காணத்தக்கதே ஆனால் எப்படியோ ஊழ் என்பதும் வினைப்பயன் என்பதும் ஒன்று என்ற கருத்துச் சமயத்துறையில் இடைக்கால பிற்காலங்களில் பரவியுள்ளது. ஆனால் இக்கோளாறு இந்திய மாநிலத்தில் பிறந்த அல்லது வாழ்ந்த சமயங்களுக்கு அப்பால் செல்லவில்லை என்பதும், பழய ஊழ்க் கருத்து இந்தியாவிலும் உலகிலும் பரவிய பின்னரே இது புதிதாக மேற் புகுந்து இந்திய மாநிலத்துக்குள் மட்டும் பரவிற்று என்பதும் குறிப்பிடத்தக்கன.

ஊழே வினைப்பயன் என்ற கருத்து புத்தமத வழியாக வன்றி, சீனத்துக்கேயுரிய கன்பூசியஸ் நெறியில் இல்லை. மேலை இஸ்லாமிய, கிரித்தவ நெறிகளுக்குமில்லை. அவற்றுக்கு மூல காரணமான பழஞ்சமயம் என்று கூறத்தக்கது ஜரதுஷ்டிர நெறி. இதுவும் ஒருவேளை கன்பூசியஸ் நெறியும் இஸ்லாமிய, கிரிஸ்தவ சமயங்களுக்கு மட்டுமன்றி, புத்த சமண சமயங்களுக்கும் முற்பட்டவை யாகும். ஏனெனில் ஜரதுஷ்டிர நெறி ஆரியர் இந்தியா வருவதற்கே முற்பட்டது ஆகும்.

வள்ளுவர் ஊழை இருவினைகளின் பால்படுத்தவில்லை. இந்த வள்ளுவர் மரபே ஆரியர் இந்தியா வருவதற்குமுன் இந்தியாவிலும் உலகிலும் பரவிய மரபாயிருந்து வந்தது. ஆரியர் வந்த பின்னும் நிலைமை மாறவில்லை. ஏனெனில் பழமையான ஆரியருக்கு இந்தியா வந்தபின்கூட ஊழ் வினைக் குளறுபடிக் கொள்கை கிடையாது என்பதை உபநிடதங்கள் காட்டுகின்றன. அது மேற்கொள்ளப்பட்டது கி. மு. 5-ம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்தர் பெருமானின் புத்த சமயத்திலேயே. புத்த சமயம் இந்தியாவை விட்டு மறையுமுன் அது படிப்படியாக எல்லா இந்தியச் சமய வாழ்விலும் கலந்துவிட்டது.

இந்தியாவுக்கு வெளியேயுள்ள பழமை மிக்க நெறிகள் இரண்டனுள் சரதுஷ்டிரர் நெறி ஒரு கடவுட் கடவுள் கோட்பாட்டில் ஊன்றியது. மற்றது கம்பூசியஸ் நெறி. அது பெயரளவில் ஒரு கடவுளை ஏற்றாலும், அது வாழ்க்கைக்குப்புறம்பான(காட்சி மாத்திரமான) கடவுளே. முழு ஆத்திகம், கிட்டத்தட்ட நாத்திகமான இந்த இரண்டு சமயங்களிலும் வள்ளுவர் ஊழ்க் கொள்கை உண்டு. வினைப்பயன் கொள்கை கிடையாது. ஆனால் வள்ளுவர் குறளில் ஊழ்க் கொள்கைமட்டுமல்ல, வினைப்பயன் கொள்கையும் உண்டு. எனினும் வினைப்பயன் ஊழ் அல்ல, ஊழ் ஆவதுமல்ல ஊழும் வினைப்பயனும் வேறு வேறு ஆற்றல்கள். அதேசமயம் பெயரளவில் இரண்டுக்கும் ஒரு நொய்ய தொடர்பு உண்டு. வினை என்பது முயற்சி. அதன் பயன் செய்பவனுக்கு மட்டுமே. ஆனால் செயல் செய்பவன் பண்பு உயருந்தோறும், செயல் இனச் செயலாகிறது. பெரியார் செயற்கரிய செய்வர். இவற்றின் தொகை பண்பை வளர்த்து ஆகூழை வளர்க்கும். தவிர, ஊழி முதல்வராகிய முதல்தரப் பெரியார் (பகவர்) புதிய ஆகூழையே வகுத்து, புத்தூழியையும் உண்டு பண்ணுவர்.

எழுத்தை, வரிவடிவைக் கண்டு உலகுக்களித்தவன்; தீயை மனித உலகுக்கு முதலில் கண்டு உதவியவன்; வில்லை, இரும்பை, முத்தை, பவளத்தை, சங்கைக் கண்டு முதன் முதலில் பயன் விளைவித்துக் காட்டியவன்; யாழும் குழலும் வகுத்தவர் முதலாகக் கலமும் விசைப் பொறிகளும் வானூர்திகளும் கண்டவர் ஈறாக, இவர்கள் யாவரும் பல வேறுபடிகளில் புதிய ஆகூழ் வகுத்த ஊழி முதல்வர்களே.

ஊழ், ஊழி என்ற தமிழ்ச் சொல் தொடர்பு இதனால் வந்ததே. இரண்டும் வள்ளுவர் பயன்படுத்திய சொற்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வினை அல்லது செயல் அல்லது முயற்சி என்ற பொருளுடைய வடபுலச் சொல்லுக்கு (கர்மம்) வினைப்பயன் என்ற பொருளைத் தவருகக் கொடுத்து, பின் அதை வள்ளுவப் பொருளில் ஆகூழுக்கு வழங்காமல் ஊழுக்கு வழங்கி, கடவுளின் பேராற்றலாகிய ஊழை, தனி உயிரின் வினையினுல் விளையும் சிறுபயன் என்று முதல்முதல் கூறியவர் புத்தர் பெருமானே.

'உன் ஊழை வகுப்பவன் நீயே' என்று இன்றுகூட உலகின் எல்லா மொழியிலும் முற்போக்காளர் கூறுவது உண்டு.

'ஊழையும் உப்பக்கம் காண்பர், உலைவின்றித்
தாழா துஞற்று பவர்'
'தெய்வத்தா னுகா தெனினும் முயற்சிதன்
மெய் வருத்தக் கூலி தரும்.'

இக் குறட்பாக்களின் கருத்து மரபு பகுத்தறிவாளரிடையே (இங்கும் ஓரளவு தவருக) மிகைப்படுத்தப் பட்டே இவ்வுரு அடைந்துள்ளது. வள்ளுவர் பகுத்தறிவாளர்க்கும் ஆத்திகருக்கும் மூலமுதல்வர். நாத்திகர்கூட அவரையே முதல்வர் என்றுகூற இதனுல் இடம் ஏற்பட்டதுண்டு. புத்தர் பெருமானே பகுத்தறிவாளர் வழி வந்தவர். நாத்திகம் பேசாவிடினும், கன்பூசியஸைவிட முனைப்பாக நாத்திகத்தின் பக்கம் சாய்ந்தவர். ஏனெனில் கடவுட் பெயரே கூருமல் வாழ்க்கை நெறி, மெய்ந்நெறி வகுத்தவர் அவர். இக்காரணங்களால் அவர் கடவுளை ஒதுக்கிவைத்தது போலவே, கடவுளாற்றலாகிய ஊழையும் ஒதுக்கிவைத்து, அந்த இடத்தில் தனி உயிரின் வினையையே ஆகூழ் நிலைக்கு மட்டுமன்றி, ஊழ் நிலைக்கும் உயர்த்தினுர். நாத்திகருக்கு மட்டுமன்றிப் பகுத்தறிவு வாளர்க்கும், பகுத்தறிவாளர்க்கு மட்டுமன்றி அறிவுத் துறைகளில் பழகிய ஆத்திகருக்கும் இது இனிப்பான கருத்தாகத் தோற்றியதனுல், இது இந்தி

யாவிலுள்ள எல்லா நாத்திக ஆத்திக நெறிகளுக்கும் பரவிற்று. மேலையுலகின் கண்களில் இந்திய சமயம் பொதுவாகவும், அதன் அறிவுத்துறை ஏடுகள் சிறப்பாகவும் மேலையுலகக் கண்ணோட்டத்துடன் பார்ப்பவருக்கு நாத்திகமாகவே காட்சியளிப்பதன் காரணம் இதுவே.

ஒரு நாத்திகர் செய்த குளறுபடி இவ்வாறு பல இந்திய ஆத்திக சமயங்களின் அடிப்படை கோட்பாடாகியுள்ளது. ஆனால் இக்குளறுபடிக்கு இடந்தந்த சூழலை பெரியார் பெருஞ்சொற்பண்பின் உயிர் மரபு நாளடைவில் மறதியுட்பட்டு அறுபட்டு, சொல் மரபுமட்டுமே நீடித்த நிலையில் தான் காணவேண்டும். வினை, வினைப்பயன், ஆகூழ், ஊழ் என்ற கருத்துப் படிவங்களில் உள்ள தமிழ்ச் சொல் தொடர்பே இம் முப்பால் மரபின் தவறான திரிப்புக்கு வழி வகுத்தது என்று மேலே காட்டியுள்ளோம்.

புத்தர் குளறுபடிக்கு முப்பால் ஏட்டுமரபுமட்டுமன்றி வேறுவகையிலும் தமிழ் மரபு பெரிதும் உதவியிருத்தல் கூடும். ஏனெனில் தாங்குதல் என்ற சொற் பொருளும் (சமஸ்கிருதவேர்ச்சொல்: த்ரு Dhru தாங்கு) இயல்பு என்ற வழக்குப்பொருளும் உடைய தர்மம் என்ற சமஸ்கிருதச் சொல், தமிழ் வடிவில் அச்சொல்லின் பொருள்களுடன் (தருமம் = தருதல், 'தரு' மரம், மரத்தின் இயல்பாகிய கிளைத்தல், வளர்ச்சி) கலந்து கடமை, ஈகை, ஒழுக்கம், சமயம் ஆகிய துணைப்பொருள்களை சமஸ்கிருதத்திலும் வடபுல வழக்கிலும் மெல்லப் பரப்பியுள்ளதுபோலவே, செயல் செய்கை அல்லது வினை, முயற்சி என்ற சொற்பொருளுடைய (சமஸ்கிருத வேர்ச் சொல்: க்ரு = செய்) கர்மம் என்ற சமஸ்கிருதச் சொல் அதன் தமிழ்ப் பொருளுடன் (கருமம், வினை முதல், செயலின் கருத்துவடிவம், செயற்பண்பு, சொற்படிவம் அல்லது பயன்) கலந்து வினைப்பயன் என்றபொருளுக்கு வழிவகுத்திருத்தல் கூடும். இதுபோலவே ஊழ் முதல்வன்

என்ற கடவுள் பெயரும், ஊழி முதல்வன் என்ற ஆசூழ் முதல்வர் பெயரும் தமிழிலேயே இவ்வேறுபாடு ஊன்றிக் கவனிக்காதவர்களால் ஒன்றுபடுத்தபட்டுக் குழப்பம் உண்டுபண்ண வழி உண்டு.

பிற்காலப் புத்தரும் சமணரும் ஊழி முதல்வராகிய புத்தரையும் தீர்த்தங்கரரையும் அம்முறையில் 'பகவன், பகவான்' என்று முறையாகவே அழைத்து, நாளடைவில், பகவானே கடவுளின் பெயர் என்ற இயல்பான மயக்கத் துக்கு ஆளாயினர். கண்ண பகவான், வியாழ பகவான், வியாச பகவான் முதலிய வழக்குகள் சைவ, வைணவ, ஆரிய சமயங்களிலும் பரந்துள்ளன.

ஆரியர் வருகைக்கு நெடுநாளைக்கு முன் நிலவிய முப்பால் ஏட்டின் மரபே உலக சமயங்கள் அனைத்துக் கும் மூலமாய், அவற்றின் பல கால வேறுபாடுகளுக்கும் காரணமாய் இருந்து வந்துள்ளது என்பதை 'ஊழ்' என்ற இச்சொல் காட்டுகிறது.

## 14. ஆதிபகவன் யார் ?

'பகவான்' என்ற சொல் சமஸ்கிருதச் சொல்லாகத் தாய் மொழிகளில் வழங்கும்போது, பலர் அதைக் கடவுள் என்று பொருள் படுவதாக எண்ணுவதுண்டு, அவ்வாறு வழங்குவதும் உண்டு. ஆனால் இவ் வழக்குக்குப் பெரிதும் காரணமானவர் வைணவர், அதுவும் பிற்பட்ட கால வைணவரே. ஏனெனில் இச் சொல் திருமாலின் திருப் பிறவிகளில் முழுநிறை பிறவியாகக் கருதப்பட்ட கண்ண னுக்கு மட்டுமே வழங்கிற்று. கண்ணன் பற்றில் ஈடு பட்டவர் கண்ண பரமாத்மா என்று இன்று மூலமுதல் கடவுள் பெயருடன் அப் பெயரைச் சேர்த்துக் கொள் கின்றனர். இதே கருத்தில் கண்ணனுக்குரிய 'பகவான்

என்ற அடைப் பெயர் திருமாலுக்கும் முழுமுதல் கடவுளுக்கும் உரியதாகப் பொது மக்களால் கொள்ளப்பட்டது;

ஆனால் பகவான் என்ற சொல்லுக்குப் இன்றும் சமஸ்கிருத அகர வரிசைகளில் கடவுள் என்ற பொதுப் பொருள் தரப்பட்ட வில்லை. செல்வவளத்தின் முதல்வன், வாழ்க்கை முதல்வன், நிறை நலவாணன் என்ற தனிச் சிறப்புப் பொருள்களே தரப்படுகின்றன. தமிழிலும் சமயத்துறையிலும் 'பகவன்' அல்லது 'பகவான்' என்ற சொல்லுக்கு இது போல 'எண் குணத்தான்' என்ற தனிச் சிறப்புப் பொருளே தரப்படுகின்றன. 'எண்குணத்தானாகிய இறைவன் என்று துணிந்த ஈரொட்டுப் பண்புப் பெயர் பரிமேலழகர்க்கும் பின்வந்த உரையாசிரியர் விளக்கமே. ஆனால் பரிமேலழகர் ஆதிபகவனுக்குக் கடவுள் என்று பொருள் எழுதாவிட்டாலும் அப்பொருள் தோன்றப்• பொருள் வகுத்ததுடன், இடையிடையேயும் கடவுள் என்ற சொல் வருவித்து முடிக்கும்போதும் 'இப் பாட்டான் முதற் கடவுளது உண்மை கூறப்பட்டது.' என்று முடிக்கிறார்.

ஆதிபகவன் வள்ளுவர் தாய்தந்தையர் பெயர் என்று கூறும் சில பொறுப்பற்ற கதைக்குறும்பர் நீங்கலாக, மற்றவர்கள் யாவரும் ஆதிபகவனைக் கடவுள் என்றே பொருள்படுத்தினர்.

இன்றும் 'பகவான்' என்ற சொல் கடவுள் என்ற பொருளில் இலக்கிய வழக்கில் இல்லை என்னலாம். மக்கள் வழக்கிலும் அருகலான, அறியாதார் மயக்க வழக்கு மட்டுமே. இயல்பான மரபும் பரந்த வழக்கும் அதை 'மனித உருக்கொண்ட கடவுள்' அல்லது 'கடவுட் பண்புடைய மனிதன்' என்ற இரு பொருளில் தான் வழங்குகின்றன. கடவுள் மனித உருக் கொள்வாரா, மனிதன்

கடவுள் தன்மையுடையவனுயிருத்தல் கூடுமா, யார் யாரை இத்தகையவராகக் கொள்ளலாம் என்ற கேள்விகள் இச் சொல்லாராய்வுக்கு, வழக்காராய்வுக்கு, மரபாராய்வுக்குப் புறம்பானது. ஆனால் யார் யாரிடம் எவ்வெப் பண்புகளை எண்ணி இச் சொல் வழங்குகிறது, வழங்கிற்று என்று மட்டுமே நாம் காண்டல் தகும்.

நம் அணிமைக் காலத்திலோ பகவான் இராமகிருஷ்ணர், பகவன் இரமணர் என்ற இரு இக்காலப் பெரியார் பற்றிய வழக்கு நம் காதில் பட்டதுண்டு. ரமண ரிஷி என்ற பெயர் சூட்டப்பட்டதன் பின்னரே பகவான் பட்டம் ஏறிற்று என்பதும் மறக்கத்தக்க தன்று. ஏனெனில் மகரிஷி என்ற பட்டத்துக்குத் தனிச் சிறப்புரிமை பெற்ற தேவேந்திரநாத தாகூர் பகவான் பட்டம் பெறவில்லை. இன்றைய தாய்மொழி மக்கள் வழக்கிலும் உள்ளப் படிவத்திலும் கூட, இச்சொல் மகரிஷிக்கு மேற்பட்டபடி, கடவுளுக்கு அடுத்த கீழ்ப்படி உடையதாயுள்ளது என்று காணலாம்.

பழய வழக்கிலும் இதே போன்ற ஏதோ ஒரு தனிச் சிறப்பு இன உள்ளத்தில் மிதப்பது காண்கிருேம். திருமால் திருப்பிறவிகளிலே கண்ணனுக்கு மட்டும் பகவான் பட்டம் உண்டு. அவரடியார்களுக்கு மட்டும் 'பாகவதர்' பட்டம்உண்டு முற்பட்ட திருப்பிறவிகளுக்குக்கிடையாது, என்றும் கூறமுடியாது. இருடி வடிவான நரநாராயணரில் நாராயணருக்குப் பகவான் நாராயணர் என்ற வழக்குக் காணப்படுகிறது. சமஸ்கிருத ஆச்சாரியர்களுள் சங்கரர் இராமானுசர், மாத்துவர் மூவருமே முதன்மையுடையவரானாலும், லோககுரு என்ற பட்டம் உடையவரானாலும், சங்கரருக்கு மட்டுமே 'ப க வா ன்' அடைமொழியாகியுள்ளது. மூவருக்குப் பின்வந்து 'லோககுரு' ஆகாத் ச்சைதன்னியருக்குக்கூடப் பகவான் அடைமொழி உண்டு.

புத்தர்களில் கடைசிப் புத்தருக்கும், தீர்த்தங்கரரில் முதல் தீர்த்தங்கரருக்கும் மட்டும் பகவான் அடைமொழி உண்டு.

நாத்திக சமய முதல்வர் என்று கூறப்படும் பிருகஸ்பதிக்கும், அவர் பெயர் பெற்றதனுல் பீடுபெற்ற வியாழன் என்ற கோளுக்கும் (கிரகத்துக்கும்) கூடப் பகவான் பட்டம் உண்டு. பல ஆத்திக சமய முதல்வர்க்குக் கிட்டாத பட்டம் நாத்திக முதல்வருக்கும், எட்டுக் கிரகங்களுக்குக் கிட்டாத பட்டம் வியாழ கிரகத்துக்கு மட்டும் எப்படிக் கிட்டிற்று?

எப்படியோ **நாலாயிர ஆண்டுகளுக்கு** முன்னிருந்து **இன்றுவரை** இந்த உயிர்ச்சொல் புரட்சி செய்து உலகை மாற்றியுள்ளது. தமிழகத்தில் மட்டுமன்று. கீழ்திசையெங்கும், ஊழி முதல்வர்களைக் குறித்த சொல்லாக மட்டும் அது இயங்கி வந்துள்ளது என்று எளிதில் காணலாம்.

**இது மட்டுமன்று.**

மரபு வழக்கே சொல்லின் வரலாற்றையும் அதனைச் சூழ்ந்த உலக வரலாற்றையும் இன்னும் ஒரு படி முன் கொண்டு செல்ல உதவுகிறது.

புத்தருள் கடைசிப் புத்தருக்குப் பகவான் பட்டம்! தீர்த்தங்கரரில் **முதல்** தீர்த்தங்கரருக்குப் பகவான் பட்டம்!

பகவான் பட்டத்திலும் புத்தர் காலத்தில் ஏற்பட்ட ஓர் ஊழித் திருப்பத்தை இது காட்டுகிறது.

உலகின் முற்பட்ட தொடக்க காலச் சமயங்கள் இயல்பாகப் படிப்படியாக மலர்ச்சியடைந்து வளர்ந்தவை. இவற்றின் ஊழி முதல்வர்களில் ஒவ்வொருவரும் முற்

பட்டவர்க்கே முதன்மை யளித்தனர். ஆகவே இவற்றில் ஊழி முதல்வர்களில் முதல் ஊழிமுதல்வர் புகழ் வளர்ந்து அவரே கிட்டத்தட்டத் தெய்விகத்தன்மை பெற்ருர். பகவான் அல்லது பகவன் என்ற பெயர் அந்த 'ஆதி முதல்வர்' மட்டுமே வகிக்கும் பெயராய் இருந்து வந்தது.

மலர்ச்சிச் சமயங்களிலே புரட்சிகரமான சமயங்கள் உண்டு. அவற்றில் முற்பட்ட ஊழி முதல்வருக்குப் பெருமை உண்டு. பிற்பட்டவர்க்கும் பெருமை உண்டு. ஆனுல் இடைப்பட்ட புரட்சிக்கால முதல்வருக்கே முதன்மை நிலே ஏற்படும். சைவசமயத்தில் பழமையிலும் பெருமையிலும் முற்பட்ட மாணிக்கவாசகருக்குக் கிட்டாத முதன்மை புரட்சிக் காலத்திலேயே அதைத் தூண்டிய திருநாவுக்கரசருக்குக் கூடக் கிட்டாத முதன்மை, புரட்சி யடுத்த முதல் தலேவராகிய சம்பந்தருக்குக் கிட்டிற்று. வைணவ சமயத்தில் இராமனுஜரே போற்றிய நம்மாழ்வாருக்கில்லாத முதன்மை இராமானுஜருக்கும், அதே சமயம் முதல்வராகிய அந்த இராமானுஜருக்கோ அவர் வழி நின்ற மாத்துவருக்கோ இல்லாத சிறப்பு முதன்மை சைதன்னியருக்கும் மக்களால் தரப்பட்டுள்ளது. இது மட்டுமன்று; பகவான் பட்டத்தின் மரபினரான இவ்வெல்லா முதல்வர்களும் அப்பட்டத்தைத் தம் மூலமுதல்வரான வியாசருக்குத் தந்தும் அது மக்கள் வழக்கேறவில்லே.

மலர்ச்சி வழி வந்து புரட்சி மூலம் மலர்ச்சி மரபையே இழந்துவிட்டவை இன்றைய பல பெருஞ் சமயங்கள். அவற்றில் முதல்வருக்கு முற்பட்ட தலேவர்கள் இருந்தாலும், பிற்பட்ட அல்லது கடைசியில் வந்த தலேவரே மகுடமிட்ட முதல்வராகக் கருதப்பட்டுள்ளார். அவர்களுக்குப்பின் அம்மரபில் தலேவர் பதவி அற்றுவிட்டதாகக் கருதப்பட்டது. இது இன்றைய எல்லாச் சமயங்களுக்கும் பொது விதி; புத்த, கிறிஸ்தவ,

இஸ்லாமிய சமயங்களுக்குச் சிறப்பு விதி. இம் மூன்றிலும் தலைவர்கள் (நபிகள், தொலை நோக்காளர்கள் அல்லது தீர்க்க தரிசிகள் அல்லது புத்தர்கள்)வரிசையில் கடைசியில் வந்தவர்களே முதல்வர்கள் ஆவர்.

கிறிஸ்து பிறந்த சமயமாகிய யூத சமயத்தில் இன்றும் மூல முதல்வர் முதல் தலைவர்களான மோசேயும் அபிரகாமுமேயாவர் என்பது குறிப்பிடத்தக்கது. பல இனச் சமயங்களில் முதல்வர் யார் என்றே தெரிய முடியாத அளவுக்கு அவர் கடவுளாகக் கருதப்பட்டுவிட்டனர்.

உலகில் சமணநெறி, புத்தநெறி இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட காலமே இப்பெருமாறுதலுக்குரிய காலம் ஆகும். உலகச் சமயங்கள் அத்தனையும் உண்மையில் பல வேறு சமயங்களல்ல, ஒரே உலகச் சமயக் கடலின் பல வேறுபட்ட அலைகள் என்பதையும் இது காட்டும்.

இச்சமய அலைகள் எல்லாவற்றுக்கும் மூல முதல்வர் திருவள்ளுவர் என்ற பெயரால் நாம் இன்று அறியும் முப்பால் முதல்வரே. ஏனெனில் அவர் ஆரியர் வருகைக்கு முன், ஜாதுஷ்டிரருக்கு முன் வாழ்ந்தவர். அவர் காலத்துக்கு முன்னுள்ள ஊழி முதல்வர்கள், தலைவர்கள் பலர் மரபு அன்று உயிர் மரபாயிருந்திருக்க வேண்டும், அவருள் ஆதி முதல்வர் அல்லது ஆதிபகவனை இறைவணக்க அதிகாரத்தில் இறை வணக்கப்பாட்டாக, குரு வணக்கமாக வள்ளுவர் பாடினார்.

முதல்முதல் கடவுட் கருத்தை உருவாக்கியவர் அந்த ஆதிபகவர் என்று வள்ளுவர் கருதினாராதல் வேண்டும். அவர் வள்ளுவருக்கு நெடுங்காலமுன் இருந்தவர் என்பதை விட, அவர் வள்ளுவர் ஆசிரியரா யிருந்திருத்தல் வேண்டும் என்பதே பொருத்தமானது. ஏனெனில் நாம் அறிந்தவரை

ஒரு கடவுட் கோட்பாடு உலகில் பழமை வாய்ந்ததாயினும் மனித நாகரிகத் தொடக்கக் காலத்துக்குரியதன்று. அதனை முதலில் உலகுக்கு வகுத்தளித்தவர் வள்ளுவரே. ஆனால் உலகெல்லாம் புகழ் பரப்பிய விவேகானந்தர் அப்புகழைத் தம் ஆசிரியர் இராமகிருஷ்ணருக்கு உரிமையாக்கியது போல, வள்ளுவர் தம் ஆசிரியருக்கு, அவர் பெயர்கூடக் கூறாமல் உயர் மதிப்புடன், ஆதிபகவன் என்ற பட்டத்து வாயிலாக, முதற்குறட்பாவில் அப்புகழைத் தந்தனராதல் வேண்டும்.

சைவரால் சிவபெருமானாகவும், சமணரால் முதல் தீர்த்தங்கரராகிய விருஷபபகவானாகவும், ஆரிய நாத்திக ரால் நாத்திக முதல்வராகிய பிரகஸ்பதி பகவானாகவும், ஆரிய ஆத்திகரால் அசுர அரசனாகிய மாவலியின் அமைச் சராயிருந்த அசுரர்குரு சுக்கிராச்சாரியராகவும், சாங்கிய ரால் மூல சாங்கிய முதல்வராகிய பகவான் கபிலராகவும் முப்பால் இயற்றியவரைக் கருதிய அறிஞர் உண்டு. ஆராய்ச்சி வடிவில் இதை எழுதத்தயங்கியவரும், எழுதிய தன்பின் புறக்கணிக் கப்பட்டவரும் பலர். அவர் அரசரா யிருந்து அறம் உரைத்திருக்க வேண்டுமென்ற கருத்துடன் அவரே இன்றையதிரிக்கப்பட்ட ஆரிய மனுநீதிக்கு மூல முதலான முதனூலை அருளிய ஆதிமனு என்றும், அவ் வரசனே இராவணனாக, மாவலியாகப் பின்னாளில் பழிக் கப்பட்ட தமிழ்ப் பேரரசன் நிலந்தரு திருவிற்பாண்டியன் அல்லது சௌந்தர பாண்டியனென்றும் கருதுபவர் இல்லாமலில்லை.

இவையாவும் ஆராய்ச்சிக்குரியன. ஆனால் சங்ககாலம் வரை அது இலக்கிய ஏடாகக் கருதப்படாமல் மறை வானர். அரசர்களுக்கு மட்டும் உரிய மறைநூலாய், பெயர் குறிப்பிட்டுக் கூறப் படலாகாதென்ற புகழ்க்கட்டுப் பாட்டுக்குரிய அரசியல் நூலாய், அற நூலாய், இறுதியில்

அம்மரபு தட்டுக்கெட்ட காலத்திலேயே கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்ருயிற்று என்பதில் ஐயமில்லை. ஆதிபகவன் கடவுளோடொத்த 'குரு' 'உலககுரு', 'வள்ளுவர் குரு' என்பது மறக்கப்பட்டுக் கடவுளானதும் இதன் பின்னரே யாகும்.

இறை வாழ்த்து அதிகாரத்தில் முதற்குறட்பா நீங்கலாக மற்றவற்றில் பெரும்பாலும் இறைவன் 'தாள்' குறிக்கப்பட்டதன் காரணம், குருவழியாகவே இறைவன் திசையை, அடிச்சுவட்டை எவரும் உணரமுடியும் என்ற கருத்தினுலேயே யாகும்.

இன்றுவரை தமிழில் உயர்ந்தோரைக் குறிக்கும் 'அடிகள்' என்ற மரபிலும், சீன சப்பான் நாடுகளில் கடவுள், அரசர் அடிதவிர வேறு எதுவும் காணலாகாதென்ற வழக்கமரபிலும், முற்பட்ட புத்தநெறியினர் புத்த உருவம் செய்து வழிபடாது அவர் 'திருவடியே' போற்றியதிலும் (திரிகோணமலை மரபு, மணிமேகலை மரபு), நபிகள் நாயகம் கட்டளைப்படியே இஸ்லாமியர் அவர் உருச்சமைத்தலாகா தென்ற கட்டுப்பாடு பேணுவதிலும், வள்ளுவர் 'தாளி'ன் மரபுநிழல் காணலாம். சமஸ்கிருதவாணர் பெரியாருக்குப் பொதுவாக, முதலாளி (ஸ்வாமி) என்றே கூறினுலும் சங்கராச்சாரியார் மூலம் தமிழ் மரபை அதன் பன்மையுடன் சமஸ்கிருத மரபு மீறி மொழிபெயர்த்து இறையடிகள், அடிகள்: (பகவத் பாதா; பாதா) ஆக்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

வள்ளுவர் முப்பால் ஆழி (இன்பத்தில் தொடங்கி இன்பத்தில் முடிவது.) புத்த சமயத்தில் அறவாழியாகவும்; கீழ்த்திசை உலக அரசியல் மரபில் அரசன் ஆணையாழியாகவும்; எல்லாச் சமய மரபுகளிலும் உருளும் செபமாலையாகவும் பரவியுள்ளன.

ஆட்சி, கம்பு என்ற இரு பொருள்தரும் தமிழ்ச்சொல் (செங்கோல், கொடுங்கோல் மரபு) உலகெங்கும் 'கோல்' வடிவான செங்கோலாக வழங்குவதும், சேர சோழ பாண்டியர் தமிழகப் பேரரசு நிலைக்குரிய மும்முடியும். முக்குடையும் எழுமுடிமாலையும், எழுகுடையும் (மூவரசர் முதல்வர். ஏழு வேளிர் தலைவர்) உலகெங்கும் பேரரசர் மும்முடி, முக்குடை, எழுகுடையாகவும், பரவியுள்ள இயல்புகள் வள்ளுவர் மரபின் பரப்புக்குச் சான்றாக ஒப்பு நோக்கத் தக்கன.

## 15. வள்ளுவர் கண்ட பெண்மை

சொற்களுக்கு உவமை உருவக வகைகளால் அணி செய்துபோதலன்றிப் பொருள் விளக்கம் செய்துபோதல் கவிஞர் மரபன்று. அது அகர வரிசை மரபு. திருவள்ளுவரும் நிலமென்னும் நல்லாள், உரனென்னும் தோட்டி, குணமென்னும் குன்று எனப் பலவிடங்களில் அணியுருவகமும் அணியுருவக விளக்கமும் குறிக்கொண்டார். ஆயினும் அருளென்னும் அன்பீன் குழவி, சிறப்பென்னும் செம்பொருள் என்பன அரும்பொருள் விளக்கமாகவும், கற்பென்னும் திண்மை என்பது தன் தனிப் பொருட் சிறப்பு விளக்கமாகவும் அமைந்துள்ளன. கற்புப் பற்றிய தமிழர் கருத்தென்ன, அவர் தனிக் கருத்தென்ன என்று இது நம்மை அறியத் தூண்டுகிறது.

வள்ளுவர் காலத்ததாகவோ, அல்லது முற்பட்டதாகவோ நமக்கு எந்த ஏடும் பாடலும் மரபும் திட்டவட்டமாகக் கிடையாது. ஆயினும் களவியல், கற்பியல் என்ற வேறுபாடு வள்ளுவர் நூலில் மட்டு மன்றி இலக்கண நூலிலும் இடம் பெறுகிறது. களவியல் மறை காதல்; கற்பியல் பலரறிந்த காதல் என்று மட்டுமே இன்று விளக்கப்படுகிறது. ஆனால் கற்புடைய பெண் என்

பதற்கோ' வள்ளுவர், 'கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்' என்று அரும் பேருகக் கூறியதற்கோ இப் பொருள் எத்தகைய காரணமும் காட்டமுடியாது.

'பதிவிரதைத்தனம்' என்ற சமஸ்கிருதச் சோற்ருெடர்ப் படிவத்துடன் இன்று கற்பு என்ற சொல் ஒரு பொருள் படக் கொள்ளப்படுவதுண்டு. பதிவிரதைத்தனம் என்பது 'கணவன் சொற்படி நடத்தல்' என்று பின்னூல்களாலும், கணவனையன்றிப் பிறரை நாடாமை. மனங்கொள்ளாமை, மனம் புகாமை என்று முன்னூல்களாலும் குறிப்பிடப்படு கிறது. இத்தொடரின் பொருள் 'கற்பு' என்ற தமிழ்ச் சொல்லின் தொனிப் பொருள், தமிழர் மரபு, வள்ளுவர் மரபில் வந்த சொற்பொருள் ஆகியவற்றின் தடம் உடை யது என்பதில் ஐயம் இல்லை. ஏனெனில் இக்கருத்து ஆரியர் மரபுக்கு முற்றிலும் புதிதானது. ஆயினும் கருத் துப்படிவத்தில் ஆரியச் ஆரியச்சார்பினுல் ஏற்பட்ட ஒரு பெருமாறுதலைக் காண்கிறோம். ஆரியப் பதிவிரதைத்தனம் பற்றிய கருத்து பெண்ணடிமை மனப்பான்மையில் ஊறியது. அதன் மூல மரபான தமிழர் கற்பு பெண்ணுரி மையில் தோல்வியுற்றது.

தாய் தந்தையருக்கும் அண்ணன் தம்பியருக்கும் கண வனுக்கும் ஆண் மக்களுக்குமாக எங்காலும் பெண் அடிமை என்ற ஆரியக் கருத்துடன் (தந்தையுடன் தாய் சேர்க்க நேர்ந்ததுகூட இங்கே ஆரியரால் விலக்க முடியாத தமிழ்ப் பழய மரபு என்பது நோக்கத்தக்கது.) தமிழர் மரபும் வள்ளுவர் மரபும் முரண்பாடல்ல, உறுதொலை முரண் பாடுடையது. ஏனெனில்,

'தற்காத்து, தற்கொண்டாற் பேணி, தகைசான்ற
சொற்காத்து, சோர்விலாள்—பெண்'

என்ற குறட்பா மூலம் எல்லாரையும் நாட்டையும் பண்பையும் காக்கும் 'கண்ணகி' யாக வள்ளுவர் பெண்ணைக் குறிக்கிறார்.

வள்ளுவர் விளக்கிய திண்மைக் குறிப்பின் மூலவேரை அகப் பொருளிலக்கணத்தில் காணலாம்.

ஆண்மகன் மலர்தோறும் தனக்கினிய தேன் நாடும் தும்பி. பெண் அவ்வாறு எதுவும் நாடுவதில்லை. நாடுபவரையும் பெரும்பாலும் பொது நோக்காக நோக்கவோ, நகையாடவோ, பரிந்திரங்கவோ, பாராமுகமாயிருக்கவோ செய்பவள். ஆனால் அவள் ஒரு தடவை நோக்கினால், பின் காதல் நாடகம் தொடங்குகிறது. ஆண்மகன் தகுதியன்றி வேறு எதுவும் ஆர்வத்துக்குத் தடையிடாது. அதுவும் ஆற்றல் பெருக்குவதாக அமையுமேயன்றி அழிப்பதாக மாட்டாது. பெண் தடையோ முழுதும் நாடகக் காட்சிகளுக்குத் திரும்பு கட்டங்கள், வளர்ச்சிக் கட்டங்கள் நோக்கியே மொத்தத்தில் காதல் ஏற்பும் தொடர்பும், திருமண உறுதியும் யாவும் பெண் முடித்த முடிபே.

ஆண் விண்ணப்பம் போடலாம். ஏற்பு அவன் கையிலில்லை.

ஏற்பவள் கையிலேயே தமிழர் அதன் முழுப் பொறுப்பையும் ஒப்படைத்தனர். திருடர்களில் தேர்ந்தவனைவிடப் புலன் உசாவலுக்கும், கொள்ளையில் தேர்ந்தவனைவிடக் காவல் துறைக்கும் சிறந்த ஆள் இருக்க முடியாது. அம்முறையிலேயே தானாக ஏற்கும் திண்மை உடையவளிடம் காதல் மண உரிமை தந்து, அதில் ஊன்றி நிற்கும் உறுதியையும் எதிர் பார்த்தனர், தமிழர்—எதிர்பார்த்தே அதை இனத்தில் அகப் பண்பாக வளர்த்தனர்.

பண்புக்கு மறுபதம் பயிர்ப்பு. அது பெண்மைக்கு மட்டுமே உரிய குணம். ஆணினம் தலைமுறை தலை முறை

யாக வருந்திப் பெறுவதை, பண்பட்ட இனத்துப் பெண் தலைமுறை தலைமுறையாக இயல்பாகப் பெற்றுவிடுகிறாள்.

ஆணுக்கும் திண்மை உண்டு.

'எண்ணியார் எண்ணியாங்கு எய்துப, எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.'

பெறின் என்று முடியும் இதே குறட்பாவுடன்,

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள, கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்.'

என்று அதே வகையில் முடியும் குறட்பா ஒப்பு நோக்கத் தக்கது. முன்னது 'பெறலருமை' குறித்தது. பின்னது 'பெற்ற அருமை' குறித்தது. ஆடவரில் திண்ணியர் சிலர். அது பயிற்சியால், மரபால் வரவேண்டியதா யிருத்தல் இதன் காரணம். பெண்ணில் கற்புடையார்பண்பு கலந்து கெடாத (அந்நாளைய தமிழகத்தில்) மிகப் பலர். ஏனெனில் அது இனமரபாகப் பேணப்பட்ட பண்பின் நீடித்த பயிற்சியான பயிர்ப்பின் பயன்.

ஆடவரில் பெரியாருக்கு சான்றோருக்குமட்டுமே உரியது திண்மை. பெண்டிரில் கற்புடையவர் யாவர்க்கும் உரியது. பெண்டிரைத் தாய்மாராக, குடும்பச் சான்றோராக மதித்துத் தமிழர் அவர்களிடம்தம் தற்காப்பையும், கணவன் காப்பையும், 'தகைசான்ற சொல்' ஆகிய குடும்ப மதிப்பின் காப்பையும் வேறுகவலையின்றி ஒப்படைத்தனர்.

ஆடவரில் திண்மையுடையார் 'மழைபெய்' என்றால் 'பெய்ய'க் கூடும். கற்புடைப் பெண் சொன்னாலே கட்டாயம் பெய்யும்'

இதைச் சங்ககாலத் தமிழர் குறட்பா காரணமாகவோ தமிழ் மரபு காரணமாகவோ உறுதியாக நம்பினர்—

சொல்லணியாகவல்ல, மெய்யாகவே நம்பினர் என்று தோற்றுகிறது.

அது மட்டுமன்று.

கற்புடைய பெண்கள் கணவனைத் தவிர வேறு தெய்வம் தொழார் என்பதையும் சங்ககாலத் தமிழர் அப்படியே நம்பினர், பின்பற்றினர்.

பல கலித்தொகைப் பாடல்களும் பிற சங்கப் பாடல்களும் இந்த இரு கருத்துக்களையும் வலியுறுத்தி வற்புறுத்தியுள்ளன.

இக்கருத்துத் தொகுதி தமிழர் பொதுநிலை மரபல்ல, வள்ளுவமரபே என்று கூறத் தகும். ஏனென்றால் இரண்டையும் ஒருசேரக் கூறியவர் அவரே. கருத்து இணைவு இன்றுகூடப் பொதுநிலைக் கருத்தல்ல என்பதை அதை முதலில் கேட்பவர் அடையும் மலைப்பிலிருந்து காணலாம். சங்ககாலத்திலேயே தமிழர் மரபாக பண்பாக இது ஊன்றி விட்டதை நோக்க, இதன் பெரும் பழமையும் வள்ளுவ மரபின் நீடுபழமையும் வலியுறவு பெறும். வள்ளுவர் என்பதை வலியுறுத்தும்.

ஆனால் முற்போக்காளர், பகுத்தறிவாளர் வள்ளுவர் கூறினாலும் இதை நம்பத் தயங்குகிறார்கள். இது இயல்பே; ஏனெனில்,

'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்றும்,

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்றும் துணிந்து கூறியவர் அவரேயன்றோ?

வள்ளுவர்க்குத் தமிழகம் தந்துள்ள மதிப்பு அவர் கவிதைப் புனைவுரையைக்கூடச் சங்க காலங்களில் நேர் உரையாகக் கொள்ளும்படி செய்திருந்தது என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், இரு கருத்துக்களும் அணியுரைகளே என்பதை,

'உண்டா லம்ம இவ்வுலகம்...
பிறர்க்கென வாழுநர் உண்மை யானே!'

என்ற சங்ககாலப் பாடலும்,

'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை'

என்ற பிற்கால ஔவையார் பாடலும் நன்கு விளக்குகின்றன. அவை நேர் பொருளாகக் கொள்ளப்படவில்லை என்பது தெளிவு.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 'பெய்யெனப் பெய்யும் மழை' என்பதனை மழை போன்றவள் என உருவகமாகக் கொள்வர். ஆனால் அவர்கூட 'தெய்வம் தொழாஅள்' என்பதற்கு அத்தகைய முற்போக்கு விளக்கம் தரவில்லை.

கவிதை மரபு காணின் பிற விளக்கம் தேவையில்லை.

முதலாவது உயர்வு சிறப்பு இழிவு சிறப்புப்பற்றிய புனைந்துரைகள் அத்தொகுதிப் பொருள்கள் யாவும் அடக்கும். அரசனைவிட வீறுடையவன். இல்லாதவனைவிட ஏழை என்ற விடங்களில், வீறுடையார் அனைவரினும் வீறுடையான் ஏழ்மைப்பட்டவர் அனைவரினும் ஏழை என்பதும் தானே போதரும். அதுபோல,'தெய்வம் தொழாஅள்,

கொழுநன் தொழு தெழுவாள்' என்பதில் தெய்வம் பூசிக்க, மதிக்கத் தக்க பொருள்கள் வகையின் உயர்வு சிறப்பைக் குறிக்கும். மணமாகுமுன் இருந்த பூசிக்கத் தக்க எல்லா உறவையும் பொருளையும் விடக் கணவனைப் பூசிக்கத் தக்கவளாகக் கற்புடைக் காரிகை கொள்வாள் என்பது கருத்து.

'தெய்வம் தொழாஅள், கணவனை யன்றிப் பிற தெய்வம் தொழாஅள்' என்பது குறட்பாப் பொருளின் பிற்பட்ட கால மிகைபட்ட திரிபு. கணவனைத் தெய்வமாகக் கொள்பவள், கணவன் வணங்கும் தெய்வத்தையும் தெய்வமாகக் கொள்வதற்கு உரியவளே என்பது வெள்ளிடை மலை.

இதை இன்னொரு வகையாக இன்றைய வழக்கிலிருந்தே கூறலாம்.

பெண்களுக்குத் தாய் தந்தை, அண்ணன் தம்பி, தோழர் தோழியர் ஆகிய எல்லா வகை உறவுகளும் உண்டு. ஆண்களுக்கும் உண்டு. ஆண் உறவு அத்தனையும் பெண்ணுக்கு மாமன், மாமி, மைத்துனர் எனத் திரிவது போல, பெண் உறவு அத்தனையும் ஆணுக்கும் திரிகின்றன. ஆனால் மணமான பெண்டிர் மட்டுமல்ல, ஆடவரும் தம் உறவை மற்றவர் உறவாக உறவு முறை பெயர்த்தே பேசுவதை யாவரும் காணலாம். பிள்ளை பிறந்தபின் அடிக்கடி மற்ற உறவுகள் மட்டுமன்றிக் கணவன் மனைவி உறவே பிள்ளை உறவாக உறவு முறை பெயர்க்கப்பட்டுவிடுவதும் நாம் காணுதன்று.

இது இருவருக்கும் பொதுவானாலும், ஆணுக்கு இயல்பு, பெண்ணுக்குச் சிறப்பு. இம் முறையிலேயே கணவன் தெய்வம், கணவன் மூலமன்றித் தனக்கு நேரே தெய்வ மாகாததாகக் கற்புடைப் பெண் கருதுகிருள்.

பெண் கணவனைத் தெய்வமாகத் தொழுவதுபோல ஆண் தொழுவதாகக் கூறவில்லை. ஆண் பெண்ணிடம் கொண்ட பற்று தெய்வப் பற்றினும் ஆழ்ந்தது. அது அறநூல் கூறிப் பின்பற்றவேண்டிய ஒன்றன்று. பெண்ணுக்கும் இதே பற்று உண்டு. அறநூல் அதைக் கூறுவதில்லை. ஆனால் சமுதாயத்தில் பெண்ணின் பேராளாகிய ஆணுக்குப் பெண்ணின் பற்று மட்டும் போதாது. பெண் இயல்பாக அதை எப்போதும் காட்டுவதுமில்லை. அவள் விரும்பும் காதல் புதுமைக்கு அது ஒவ்வாது. ஆகவே அவள் தன் இயல்புமீறி அன்புக்குரிய பொருளைப் பூசனைக்குரியதாக மதிக்க வேண்டுமென்றே அறநூல்கள் கூறுகின்றன.

பெய்யெனப் பெய்யும் மழை என்பதும் உயர்வு சிறப்பே யாதலின் பயனிலையைப் பெய்யும் என்று கொண்டாலும், கவிஞர் பாரதிதாசனைப் போல, மழையே பயனிலை என்று கொண்டாலும் இவ் வகையில் வரும் கேடு எதுவுமில்லை. விரும்பியபோது பெய்யும் மழையை விட வளம் தருவது வேறு கிடையாது. இயற்கையில் அத்தகைய மழை தரும் வளத்தை, வாழ்வில் கற்புடைய பெண் காதல் தரும் என்பதே அணியுரையின் கருத்து. இது உவம உருவகமல்ல. பிறிது மொழிதல் அணி அல்லது குறிப்பணி. ஏனெனில் உவம உருவகத்தில் உவமையே எடுத்துக்காட்டும் உயர்வு சிறப்புடையது. இங்கே உவமை விளக்க உவமை மட்டுமே. விருப்பறிந்து பெய்யும் மழை தரும் வளம்கூட அத் தலைமுறை, அவ்வாண்டு வளத்துடன் நிற்கும். கற்புடை நங்கை கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் இனத்துக்கும் வழிவழி நலங்களும் புகழும் வழங்குபவள் ஆவாள்.

பெண்ணின் 'காதல்' எவ்வளவு ஆற்றல் வாய்ந்தது என்பதைப் பொதுவாக எவரும் அறிவர். அப் பெண்

மனைவியானல், காதலித்து மணந்த மனைவியானல், காதல் வழி கற்பு நிறுத்தும் வள்ளுவத் துணையானல் கணவனுக் கன்று, அப்பெண்ணின் உடன் பிறந்தார்க்கு, பெண்ணைப் பெற்ருர்க்கு, அவள் மடியில் உலவும் பேறுபெற்ற பிள்ளை கட்கு, அவளைக் குலமுதல்வியாகக் கொள்ளும் மரபுக்கு, இனத்துக்கு ஏற்படும் நலங்கள் அத்தகைய ஒரு குடும்பம், சமுதாயம் அமையப் பெற்றவர்கட்குத்தான் தெரிய முடியும். அதனை ஒரு சிறிது பெற்றவர்களுக்குக்கூட, வள்ளுவரின் இரு கருத்துக்களும் அணிந்துரைகளேயாயி னும், மிகையுரைகளல்ல, வாய்மையை உருக்கோடிட்டுச் சுட்டிய உரையே என்பது விளங்கும்.

நற்குணங் குறைகளுக்கு, வாழ்வுக்கால அளவுக்கு உடல் நலத்துக்கு, குண நலத்துக்கு, கலைக்கு, அறிவுக்கு, இன்ப வாழ்வுக்கு நம் முயற்சி பயன்படுவது ஒரு சிறிது கூறளவே—அதன் பெரும் பகுதி தாய்தந்தையர் வாழ்வு சார்ந்தது; தாயின் குடும்ப வாழ்வின் அமைதியும் இன்ப மும் மகிழ்வுமே சார்ந்தது. இன்றைய உலகின் பல கேடு களுக்கும், போர்களுக்கும், முதலாளித்துவச் சுரண்ட லுக்கும், அன்பில்லா வெறி யுணர்ச்சிகளுக்கும் அடிப் படைக் காரணம் தேடின், அது உலகில் காதலில்லாத் திருமணத்தில் சென்றே நிற்கும். தமிழர் காதற் கற்பு, கற்புக் காதல் உலகில் எப்பகுதியிலேனும் நிலவத் தொடங் கினல், அவ்வுலகப் பகுதி இன்றைய உலகினர் கனவையும் கடந்தது என்பதில் ஐயமில்லை.

வள்ளுவர் முப்பாலில் இன்பப்பால் விலக்கத்தக்க ஒன்று, பள்ளிக்கேனும் விலக்கத்தக்க ஒன்று என்று கருது பவர் உண்டு. இக் கருத்து அவர்கள் குறை, இன்பப்பாலின் குறையன்று. ஏனெனில், நல்ல குடும்பத்தில் தாய் தந்தை, பிள்ளைகள், உறவினர் இருந்து பார்த்து இன்பமும் பயனும், பக்திப் பாடல்களில் காணப்படுவதாகக் குறிக்கப்படும்

உயர் நலமும் ஒருங்கே பெறத்தக்க உயர் நாடகமாக அவர் இன்பப்பால் விளங்குகிறது.

## 16. வள்ளுவர் கண்ட உலகம்

தம் மொழியை, இனத்தை, தெய்வத்தைக் கன்னித் தாய் என்று தமிழர் பேணினர்.

'கன்னித்தாய்' என்ற சொல் மரபில் பண்டைத் தமிழரோ, மற்ற இனத்தவரோ கூட, இன்று கன்னி, தாய் என்ற சொற்களை வழங்கும் பொருளில் முழுதும் கொண்டுவிட வில்லை. கன்னி என்பது இன்று சிலரால் மணமாகா நிலை குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் அதன் பழம்பொருளும் மெய்ப்பொருளும் பருவம் குறித்த தன்றி நிலை குறித்ததல்ல. அது மணமாகாப் பருவம். மணமான பின்னும் அப்பருவம் நீடிக்கலாம். மணமாகுமுன் தொடங்குவதனாலேயே மணமாகாப் பருவம் என்ற விளக்க மரபு ஏற்பட்டது.

தாய்மை பிள்ளைப் பேற்றை இன்று குறிக்கிறது. ஆனால் அதுவே ஒரு பருவத்தையும் குறிக்கிறது. ஆனால் மூன்றாவது ஒரு பொருள் உண்டு. இதுதான் முதற் பொருள். இது ஒரு மனவள நிலையைக் குறிக்கிறது. தாய்மை உடையவள் உணர்வுடையவள் ஆகிறாள்; இயல்பான பொது நலமும், இயல்பான அன்பும், இயல்பான அறிவும் பேணும் பண்பு உடையவளாகிறாள். பெண்களைப் பற்றிய அளவில், பிள்ளை பெற்ற பின்தான் அவர்கள் இந்தப் பண்பைப் பெறுகிறார்கள் என்பதில்லை. அது பெண்பாலாருக்கு இயல்பானது. 'பெண்' என்ற தமிழ்ப் பெயர் ஒருபுறமும், 'ஆள்' என்ற பெண்பால் விகுதி மற்றொருபுறமும் இதை வலியுறுத்துகிறது. தம்பியைப் பேணும் தமக்கை, அண்ணனிடம் ஆதரவு காட்டும்

தங்கை, தந்தையிடம் பரிவுகாட்டும் புதல்வி ஆகியோரிடம் இந்தத் தாய்மை சுடர் வீசுகின்றது. உரோமக நகரத்து 'லயக்கூன்' சிலை வடித்த கலைஞன் இதைச் சற்று மட்டு மீறி முனைப்பாகக் காட்டிவிட்டான். ஆனால் அதன் அடிப் படை மெய்ம்மை தவறானதன்று.

மொழிக்கும் இனத்துக்கும் நாட்டுக்கும் 'கன்னித் தாய்மை' என்பது உவமை உருவகம் மட்டுமே. ஆகவே இத்தகைய விளக்கம் தேவையில்லை என்று சிலர் கருத லாம். ஆனால் தமிழர் உலகத்தவரிடம் இதைக் கூறும் போது—தமிழினத்தவரிடம் இதைக் கூறும்போதே,— இருசாராரும் அதைத் தவறாகப் புரிந்துகொண்டு உள்ளார முரண்பாடு கொள்ள இடமுண்டு. தமிழிலிருந்து தமிழின மொழிகள் வந்தன என்றால் இன்றைய தமிழிலிருந்து என்று, எப்படி, தமிழரும் தமிழினத்தவரும் கொள்கின்ற னரோ, அப்படியே தமிழிலிருந்து உலக மொழிகள் தோன்றின என்றால், இருசாராரும் இன்றைய தமிழன் இன்றைய தமிழுக்குத் தாய்மை கற்பிக்கிறான் என்றுதான் எண்ணுவர். ஆனால் உண்மைநிலை இதற்கு எவ்வளவோ மாறானது. தமிழின மொழிகளும் சரி, உலக மொழிகளும் சரி—உலகின் கடைப்பட்ட பண்படா மொழி உட்பட எல்லா மொழிகளுமே—நீடித்த பண்பாட்டளவிலும், ஒரே பெயருடனும் வடிவுடனும் நீடித்துப் பயிலும் அள விலும் வேறுபாடு உடையனவே யொழிய, மொழி என்ற வகையில் உலகின் எல்லா மொழிகளும் ஒரே பழமை உடை யவையே. இல்லை என்றால் தமிழ்ப் பழமைக்கு மட்டுமன்றி, பெருமைக்கும் சான்றாகக் கிரேக்கமும் ஆங்கிலமும், பின்னிய மொழியும் அமெரிக்கச் சிவப்பிந்தியர் மொழியும், சீன சப்பானிய மொழிகளும் நீகிரோ மொழிகளும் எடுத்துக் கூறுவதில் பயனில்லை. நீகிரோ தாழ்ந்தவன், வெள்ளையன் உயர்ந்தவன் என்ற மேலையுலக ஆணவமோ, ஆரியன் உயர்ந்தவன், ஆரியனிலும் பார்ப்பனன் உயர்ந்

தவன்; பிற இனத்தவர், பிறர் தாழ்ந்தவர் என்ற வடதிசை இறுமாப்போ தமிழனிடம் இன்றும் கிடையாது, என்றும் கிடையாது.

இவ்வுண்மை மொழித்துறைக்கு மட்டுமல்ல, பிறப் படிப்படையான இன சாதித்துறைக்கு மட்டுமல்ல—பண்பாட்டுக்குக்கூடப் பொருந்தும். ஏனெனில் 'பண் பட்டவர், பண்படாதவர்' என்ற பிரிவு,பண்பட்டவர்என்று தமக்குத் தாமே பெயர் சூட்டிக்கொள்பவர் பிரிவாகும். பண்பட்டவர் என்பவர் அவ்வாறு கூறுவதே ஆதிக்க வாதம். பண்படாதவர் என்பவர் அதை ஏற்பது அடிமை மனப்பான்மை. அரத்தை அரத்தால் அறுப்பதுபோல, வடதிசை யுலகிலும் மேலை யுலகிலும் அறிவுலகில் அடி படும் இச்சொற்களைத் தமிழன் அவற்றை அகற்று வதற்கே இன்று கையாளுகிறுன். தமிழ்ப்பண்பு—அதன் உச்ச உயர்முகடாகிய வள்ளுவப் பண்பு—உலகில் பரவும் நாட்களில் இவையும் அறிவுடையவர், அறிவில்லாதவர் பாகுபாடும் ஒருங்கே ஒழியும், ஒழியவேண்டும்.

செல்வர், ஏழை பாகுபாடு நீங்கவேண்டும் என்று மனமாரவோ, ஆசாரமாகவோ நம் முற்போக்குக் கட்சிகள் பாடத் தொடங்கிவிட்டன.

தமிழகத்தின் மறுமலர்ச்சி யியக்கம், திராவிடத் தேசிய இயக்கம் இந்நிலையைத் தமிழகத்திலும் தென்னகத் திலும் போக்கி, உலகில் போக்கத் தளமமைக்கத் திட்ட மிட்டு வருகிறது.

உலகின் உயர்வு தாழ்வுகள் பிறப்படிப்படையான உயர் தாழ்வுகளும் அல்ல, நிலைத்த உயர்வு தாழ்வுகளும் அல்ல—உண்மை உயர்வு தாழ்வுகளேயல்ல. ஏனெனில் உயர்வு தாழ்வுகள் என்ற தொடரே ஒரு திசைக்குறிக் கொண்ட வேறுபாட்டைக் குறிக்கும் மனித இன மொழி

யின் சொற்சின்னங்களே. அவை யாவும் மலர்ச்சியின் வேறு வேறு படிகள், ஒரு குறிப்பிட்ட காலநோக்கில் தோன்றும் படிகள் மட்டுமே. காலத்தின் ஆழமும் செறிவும் நிகழ்கால நோக்கில் உண்டு. முக்கால நோக்கில் கிடையாது. முக்கால நோக்குடையவர் உயர்வில் தளர்வையும், தளர்வில் காலச் சிக்கனத்தையும் காண்டல் கூடும்.

வள்ளுவர் ஒப்புரவு இவற்றை நோக்கிய ஒப்புரவு. ஆசார ஒப்புரவல்ல.

நன்மை, தீமை—மனித இனம் வகுத்துக்கொண்ட இன்னொரு வேறுபாடு இது. 'நல்லவர்' என்று தமக்குத் தாமே பட்டம் சூட்டிக்கொண்டவர் வேறுபாடு இது என்பது வெளிப்படை. தீயவர் இதே வேறுபாட்டைத் தலை மாற்றி எண்ண முடியும்—வெறும் வாதத்துக்கன்று, மனமார அவ்வாறு எண்ணமுடியும். எல்லாரையும் நல்லவராகக் கொண்டு, பகைவரையும் நண்பராகக் கொண்டு நடத்தலே உண்மை இனநன்மை நாடுபவன் செயல். இதுவே பண்பு, சால்புப் படிகள்.

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.'
'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.'

இவற்றை வெறும் ஒழுக்க உரையாக, அழகான புனைந்துரைகளாகக் கொள்பவர் 'வள்ளுவர் இயல்' என்ற அறிவியலின் அறிவியலை அணுகாதவர் ஆவர். பெரிய 'மகாத்மாக்கள்'கூட மனைவியிடமும், குழந்தைகளிடமும், வேலையாட்களிடமும் எரிந்து விழுபவர் என்று காண்பவர் வள்ளுவர் நுண்ணோக்கின் அருமை உணர்வர்.

ஒழுக்கம் என்பது தன்னலம், தற்சூழல், தன் இனம் கடந்து எந்த அளவு தொலைவிரிவுவரை செல்லுமோ, அந்த

அளவிலேயே வரண்ட தன்னல ஒழுக்கமும் திரண்ட பண்பு, பண்பு வளம், சால்பாக வளரும்.

குடியாட்சியும், பொதுவுடைமையும், சமதருமமும் பேசும் இனத்தவர் தம்நலம், தம்குழு நலம், இனநலம், நாட்டு நலம், ஆதிக்க நலம் குறுக்கிடும்போதும், எதிரிகள் என்று தோன்றியவர்கள் வகையிலும் கூறியதற்கெல்லாம் விளக்க மாகிய கோட்டம் (வளைவு) வகுத்துக் கொள்வதை அவ்வக் குழுவினர் உணராவிட்டாலும் குழுவுக்கு வெளியிலுள்ள வர் உணர்வர். பல சமயம் செல்வர் உணராதவற்றை ஏழை யர் உணர்ந்தும், ஒருவர்க்கொருவர்கூடக் கூறாது இரண்டக வாழ்வில் அழுந்துவர். இந்நிலை உலகில் என்றும் உள்ளது. இன்றும் இருக்கிறது. வள்ளுவர் பண்பு இன்று போல வாய் அளவில் அன்றி அறிவு அளவில் உணர்வு அளவில் பரவும் நாளிலன்றி இந்நிலை எளிதில் போக்கத்தக்கதும் அன்று.

நேர்மை, நேர்மைகேடு—உலகின் மற்றொரு குளறு படி இது. உண்மை நேர்மை, நேர்மைகேடு ஒன்று உண்டு. ஆனால் மனிதர் அதன் தன்னல, தற்சூழல், தன் அனுபவ நிழல்களையே காண்கின்றனர். இதனை நுணுகி உணர்ந் தவர் வள்ளுவர். 'கண்ணோட்டம்' என்ற அதிகாரம் இதனைக் குறித்தது. ஒருவன் தீயனவே செய்ததாகக் கருதி னாலும் அரசன்கூடத் திருத்துதற்கன்றி வேறெவ்வகையிலும் சட்டத்தைப் பயன்படுத்தித் தண்டித்தல்கூடாது. அரசியல் வேறுபாடு, கட்சி வேறுபாடு, சமய வேறுபாடு காரண மாகப் பூசலிடுவது, போரிலும் சூழ்ச்சியிலும் கொன்றழிப் பது மட்டுமன்று—வென்றபின் நீதி நேர்மையின் பேர் சொல்லி, தண்டனைச் சாக்கிட்டுக் கொல்லும் செயல்கள் மலிந்துள்ள நம் உலகிற்கு வள்ளுவர் விடுத்துள்ள ஒரு வேண்டுகோள்தான் 'கண்ணோட்ட' அதிகாரம்.

## 17. புத்தருவி

வள்ளுவர் புகழ் கூறுதற்கரியது, ஆனல் புகழ்பவரே தாம் அப்புகழ்க் க்தவடைப்பவரும் ஆவர். ஏனெனில் இகழ்தூண்டும் ஆர்வ ஆராய்ச்சியைக்கூடப் புகழ்—பசப் புப்புகழ்—தூண்டாது. காலங்கடந்தது, உலகங்கடந்தது எனக் கீழையுலகில் மட்டுமன்று, மேலையுலகிலும்கூடப் பலர் முப்பாலேட்டைப் போற்றக்கூடும். ஆனல், வேண்டுவது இதுவன்று. விழலுக் கிறைத்த நீராகச் சமய ஏடுகளுக்குச் செய்யப்பட்டு வந்துள்ள, வருகிற பிரசாரம், ஆராய்ச்சி—இன நலம் நாடாது ஆதாய நோக்கத்துடனும் ஆதிக்க நோக்குடனுமே வல்லரசுகளும் வணிகத் தொழில் முதல்வர்களும் ஊக்கும் 'இயற்கை' மட்டுமே சார்ந்த புற இயல் நூல் ஆராய்ச்சிகளுக்கு அளிக்கப்படும் ஆதரவு சலுகை, ஆக்கம்—இனநலத்தின் அறிவார்ந்த அடிப்படையாகிய தமிழ்ப் பண்பு, வள்ளுவர் பண்பின் திசையில் திருப்பப் படவேண்டும். இன ஆதாயம், மனித இனநலம் அத்திசையில்தான் உள்ளது.

வள்ளுவர் கால இடம், இனம், உலகம் கடந்தவர் மட்டுமல்லர். கடவுள் படைத்ததாகக் கூறப்படும் உலகையே மாற்றியமைக்க வல்லவர் ஆவர். அவர் கடவுட் கொள்கையை உலகம் உணர்ந்து பின்பற்றியிருந்தால், உலகம் இன்றிருப்பதைவிடப் பலகோடி மடங்கு மேம் பட்டதாகக் கட்டாயம் மிளிர்ந்திருக்கும். ஆனல் அவர் படைத்த கடவுட் கொள்கை, 'ஒரு கடவுட் கொள்கை'யாக உலகெங்கும் பரந்தாலும், அவர், அவரது 'ஒரு கடவுளாக' ஒருலகைப் படைத்தாக்கும் வள்ளுவ—ஒருகடவுளாக இன்னும் உணரப்படவில்லை. அதுமட்டுமன்று, வள்ளுவரையொத்த 'ஒருலக'ப் படைப்பாளரை, உலகுக்கு மூலப் பழமறை அளித்த முதல்வரையே மொழி முதல்வராகக் கொண்ட, இன முதல்வராகக் கொண்ட தமிழினம்

அரசியல், சமுதாய இயல், சமய வாழ்வு, கலை வாழ்வு, அறிவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் இன்னும் அடிமை நிலையில் அவதிப்பட்டுக் கிடக்கிறது.

மறுமலர்ச்சி யார்வம் இன்னும் வள்ளுவ மலர்ச்சி யார்வமாக வில்லை. ஆனால் இன மறுமலர்ச்சியில் மிதந்து மொழி மறுமலர்ச்சி, மொழி மறு மலர்ச்சியில் மிதந்து கலை மறு மலர்ச்சி, கலை மறு மலர்ச்சியில் மிதந்து அறிவு மலர்ச்சி, அறிவு மறு மலர்ச்சியில் மிதந்து வள்ளுவ மலர்ச்சி வாஞ்ஞெங்கித் தமிழர் வாழ்வின் உள்ளெல்லையிலிருந்து வீறிட்டெழும் ஆர்வம் மெல்லொலியாகக் கேட்கத் தொடங்கியுள்ளது.

பண்பார் பவளப் பொதிகைக் குன்றிலிருந்து வழிந் தோடும் தமிழோடை கலையிலக்கியப் பசும் பொழில் தடங் களிலே தங்கி, புத்தறிவு மணம் கமழும் சங்க வாழ்வுத் தென்றலிலே சிற்றலை யளாவி, தமிழர் இடைக்காலத் துயிலெனும் வளைவு நெளிவுகளிலே மெல்ல ஓசிந்தாடி அலைந்து, வள்ளுவ மென்னும் நீர்வீழ்ச்சி அணுகியதறிந்து தெள்ளு தமிழின் மறுமலர்ச்சி யென்னும் துள்ளு நடை போட்டு வளர்கின்றது. ஆற்றல் சான்ற அறிவுப் பாய்ச்ச லுடன், அருகருகே சுழித்தோடிப் படிப்படியாக ஒழுகி விழும் அருவிகளாகப் பரந்து அகலுலக வாழ்வென்னும் புது நிலத்தில் பாய்ந்து புது வளங்காண இருக்கின்றது. பழங்கதை வள்ளுவர் மரபினருக்காக, பைந்தமிழ்ச் சிலம்பு மேகலை வழிமரபிலே, புதுத் தமிழ் ஆக்கத் தமிழினம் விரைந்து கொண்டிருக்கிறது. சமதளத்தில் ஆற்றில் செல் வோர் பின்னோக்கி வீறுடன் பார்க்கும் அந் நீர்வீழ்ச்சிகள், அருவிகள், அவர்கள் கடல் நோக்கிச் செல்லும் முற்போக் கைத் தடுக்கமாட்டா. ஆனால் அப்போக்கில் நீர்வீழ்ச்சி, அருவிகளின் ஆற்றல், தேங்கிய வள ஆற்றலாக, வீழ்ச்சி வேகம் பொங்கு வேகமாக மாறுவது கண்டு பொங்கல்

புதுவாழ்வுக்கே விரைவர். தமிழகம் அந்நிலைக்கு விரைகிறது.

முப்பால்—வளரும் தமிழகத்துக்கு அன்னையின் பாலாகுக—மூத்த தமிழ் அன்னையூட்டும் முக்கனி யாகுக! தமிழ் உலகாக, உலகு தமிழாகப் புதுநலம் அளாவுக!

1. இலக்கியம்
2. இலக்கணவியல்
3. சமூகவியல்
4. தத்துவம்
5. மொழியியல்
6. வரலாறு
7. பொதுநிலை.

கா. த. திருநாவுக்கரசு
M.A. (தமிழ்) M.A. (...)
M. Litt. Dip. in Lingu.

... PUBLIC LIBRARY
3 JUL